# தமிழரசு

25A

# இலக்கிய மலர்



நல்வாழ்த்துகள்

**SKM அனிமல் ஃபீட்ஸ் அண்டு புட்ஸ் (இந்தியா) லிமிடெட்**

180, காந்திஜி ரோடு, ஈரோடு - 638 002. போன் : 217212 - 217216. தந்தி : பவுல்ட்ரி ஈரோடு டெலக்ஸ் : (0856 - 226) SKM IN. பேக்ஸ் : (0424) - 216

25 ரூ

# இலக்கிய மலர்

தமிழரசு அலுவலகம்
சென்னை - 2
- 5 FEB 1990
செய்தி-மக்கள் தொடர்புத்துறை

# இலக்கிய மலர்

தமிழரசு வெளியீடு

தமிழரசு
**இலக்கிய மலர்**

சிறப்பு வெளியீடு

விலை : **ரூ. 10**

முகப்போவியம் கே.எம்.ஆதிமூலம்

இரண்டாம் அட்டை 'சகுந்தலை'
ஓவியம்-ராஜாரவிவர்மா

மூன்றாம் அட்டை நடராஜர்
20-ஆம் நூற்றாண்டு பதிப்பு

நான்காம் அட்டை தீபம் ஏந்திய பெண்
நாயக்கர் கால சுவர் ஓவியம்

அச்சமைப்பு - இயக்குநா,
எழுதுபொருள் அச்சுத் துறை,
அரசு மைய அச்சகம்,
சென்னை - 600 079.

அச்சுக்கோர்ப்பு வடிவமைப்பு - ரிப்ளிகா

ஓவியங்கள் வடிவமைப்பு - மருது

விளம்பரங்கள் வடிவமைப்பு - கவிக்குமார்
இந்திரன்

**வ. முல்லைவேந்தன்**
செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009
தொலைபேசி
அலுவலகம் : 562631

நாள் : 12.4.1997

## நுழைவாயில்

'**நா**டு என்பது வெறும் பூகோளப் படம் அல்ல; அங்கு வாழும் மக்களின் உணர்ச்சித் தொகுப்பே அது; கிராமங்களுக்கு நாம் உலக அறிவை ஊட்டவில்லையென்றால், அது நாட்டை வாழ வைக்காது' - என்றார் அறிஞர் அண்ணா அவர்கள்.

அவர்களின் அடியொற்றி - இன்னும் மூன்றாண்டுக் காலத்திலே நம்மையெல்லாம் இருபத்தோறாம் நூற்றாண்டை நோக்கி அழைத்துச் செல்லுகின்ற பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார் தலைவர் கலைஞர் அவர்கள்.

''உன் இதயத்தை என்னிடத்தில் தந்திடண்ணா..'' என்ற அவர்தம் கோரிக்கை பலிதமானதை நாமெல்லாம் பல்வேறு சந்தர்ப்பங்களிலே கண்டிருக்கிறோம்; கண்டுவருகிறோம்; காணவிருக்கிறோம்.

அண்ணா அவர்களின் அந்த முதுமொழிக்கேற்ப, நாளொரு மேனி பொழுதொரு வண்ணம் மெருகேறி வருவதுதான் இதயம் கவரும் இந்தத் 'தமிழரசு.'

1970-ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் நாளன்று, சென்னை மாநகரிலுள்ள நேரு விளையாட்டரங்கிலேதான், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தம் திருக்கரங்களாலே இந்த ஏட்டினை வெளியிட்டார்.

இருபத்தேழாண்டுகள் ஆகின்றன முதல் இதழ் முகிழ்த்து! அரசின் அறிவிப்புகள் ஆக்கப்பணிகள் ஆகியவற்றை மட்டுமே தாங்கி அப்போதெல்லாம் 'அசல் அரசு' ஏடாக மட்டுமே வெளிவந்துகொண்டிருந்தது இந்த இதழ்.

நாளடைவில் - கலைஞர் அவர்களின் வழிகாட்டுதலின்படி எல்லாத்தரப்பினரும் இதயபூர்வமாகப் படித்தானந்திக்கும் பக்குவம் பெறலாயிற்று 'தமிழரசு'. வெறும் அரசு முரசாக மட்டுமின்றி - இலக்கியம், அறிவியல், மருத்துவம், கதை, கவிதை, பயன்மிகு கட்டுரைகள் எல்லாம் உடையதாக - படித்தவர்களுக்கு மட்டுமின்றிப் பாமர மக்களுக்கும் உலகானுபவத்தை, இலக்கிய இனிப்பை, அறிவியல் ஆக்கத்தை, அரசின் நோக்கத்தை, அன்னைத் தமிழ் வளர்ப்பில் அரசுக்குள்ள ஊக்கத்தைத் தெரிவிப்பதாக இவ்விதழின் பக்கங்கள் தோறும் பாங்குற உருவாக்கப்படலாயின.

நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்ப்பது அரிமா நோக்கு ஆகும்; அந்த வகையிலே, தொடக்க காலத் 'தமிழரசை'ப் பார்த்த நீங்கள், நடக்கும் காலத் 'தமிழரசை'ப் பாருங்கள். இந்த ஏடு பழையனவற்றைப் போற்றிப்

பாதுகாத்து வந்ததும், புதியனவற்றை வாழ்த்தி வரவேற்று வருவதையும் உங்களால் உணர முடியும்.

'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல' என்றாரே தொல்காப்பியர்...

'கிராமங்களுக்கும் உலக அறிவை ஊட்ட வேண்டும்' என்றாரே அறிஞர் அண்ணா...

'இளைய தலைமுறையே எழுவாய்! செயப்படுபொருள் பயனிலையேல் விழுவாய்! அறிவில் மூத்தோரைத் தொழுவாய்! அரிய பயன்காண ஆழ உழுவாய்!'...

- என்றாரே தலைவர் கலைஞர்!...

அவற்றையெல்லாம் மனதில் இருத்தித்தான் - இலக்கியமும், ஓவியமும், இன்ன பிறவும் அக்காலத்திலிருந்து இக்காலத்தில் எந்த அளவிற்கு மாறுபாடு அடைந்திருக்கிறது என்பதை நாட்டு மக்கள் நல்லிதயங்களில் பதிவு செய்திடும் நல்ல நோக்கத்தோடு உருவாக்கப்பட்டிருப்பதுதான் 'தமிழரசு' பூங்காவில் கவினுற மலர்ந்து மணம்வீசும் இந்த இலக்கிய மலர்!

இத்தகைய இலக்கியப்பயணம் 'கலை மலர்' என்றும், 'கல்வி மலர்' என்றும், 'மகளிர் மலர்' என்றும், 'தொழில் மலர்' என்றும், 'வேளாண்மை மலர்' என்றும் துவளாமல் தொடரும்; இத்தகைய பணி மூலம் கிராமாந்தர மக்களின் இதயங்களிலும் கூட தமிழுணர்வு படரும்!

செய்தி-மக்கள் தொடர்புத்துறை என்றாலே அரசுச் செய்திகளை மட்டுமே தருகிற துறைதான் என்றிருந்த நிலை, இந்த இலக்கியப்பணி மூலம் மட்டுப்படும் அல்லது மாற்றப்படும் என்கிற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.

இன்னும் ஒரு பதினைந்து இருபதாண்டுக் காலத்திற்குப் பின்னாலே, இப்போதுள்ள இலக்கிய உலகில் இன்னும் பல மாறுபாடுகள் வரலாம். அப்போது இன்றைய இலக்கிய உலகம் எப்படியிருந்தது என்பதை அந்நாளைய மக்கள் உணரலாம். அந்தச் சரித்திரச் சிறப்பை இந்த மலர் மூலம் உருவாக்கிய பெருமை மிக்க 'கலைஞர் அரசு' அன்றும் இன்றுபோல் கற்றறிவாளர்களால் மனப்பூர்வமாகப் புகழ்ந்து பேசப்படும்.

இந்த இலக்கிய மலரை இணையற்றதாக மலரச் செய்திட உதவிய ஓவியர்கள், கவிஞர்கள், கதாசிரியர்கள், கட்டுரையாளர்கள் மட்டுமல்ல; 'காலம் கண்போன்றது கடமை பொன்போன்றது' என்பதை உணர்ந்து, இந்தத் தமிழ்ப் புத்தாண்டில் இம்மலர் மிகச்சரியாக மலரும் வண்ணம் அச்சிட்டுத் தந்துதவிய அரசு எழுதுபொருள் அச்சகத்துறை இயக்குநர் அவர்களுக்கும் மற்றும் 'தமிழரசு' பணியாளர்கள் அனைவர்க்கும் எங்கள் இதய நன்றி இன்றும் - என்றும்.

அன்பன்,

12/4/97

வ. முல்லைவேந்தன்.

# பொருளடக்கம்

## கவிதைகள்...


'அன்புகொள்வோம்' - *கலைஞர் கவிதை* 1
விலக்கப்பட்ட கனி - *அப்துல் ரகுமான்* 12
கனிமொழி கவிதை 39
மிச்சமிருக்கும் ஓரிரு தளிர்கள் – *இன்குலாப்* 70
கி.மு. 2000 தமிழ் கி.பி. 0000 - *கே. அறிவுமதி* 85
திறப்பதற்கு இங்கே கத்தரியுங்கள் – *கலாப்ரியா* 121
அரிச்சந்திர நீதி – *பழமலய்* 149
பாலாஜிக்கு ஹரே ராம் – *ஞானக்கூத்தன்* 12
இந்த நகரத்தை தூங்க வைக்கவேண்டும் – *மனுஷ்யபுத்திரன்* 194
கல்யாண்ஜி கவிதை 209
முகங்களைத் தேடுகிறேன் – *ரவிசுப்பிரமணியன்* 233


## கட்டுரைகள்...


இந்திய தரிசனம் - *ஜெயகாந்தன்* 6
சிறுகதைக்கோர் புதுமைப்பித்தன் – *தொ.மு.சி. ரகுநாதன்* 23
வேர்கள் - *அசோகமித்திரன்* 42
தேவை: சீரிய தத்துவம்; சிறந்த படைப்புக்கள் – *தி.க. சிவசங்கரன்* 57
இதுவரை சிறுகதை – *மாலன்* 94
சூரியக் குழந்தைகள் – *இசைஞானி இளையராஜா* 140
தற்கால வெளிப்பாடு – தமிழ் அழகியல் – *இந்திரன்* 166
பொருளாதாரப் பின்னணியில் பெண் – *இரா. சீனிவாசன், க. பஞ்சாங்கம்* 174
'கத்தாளங் கருங்கப்' – *எஸ்.எஸ். போத்தையா* 211
இலக்கியப் பரிமாற்றத்துறையில் எனது அனுபவங்கள் – *சரஸ்வதி ராம்நாத்* 228
படைப்பின் தனிமை: புதுமைப்பித்தன் சிறுகதைகள் பற்றி சில குறிப்புகள் – *ரவிக்குமார்* 235


## சிறுகதைகள்...


மண்மகள் தேவை – *கி. ராஜநாராயணன்* 16
எதிர்முனை – *சா. கந்தசாமி* 30
அமானுடன் – *பிரபஞ்சன்* 48
சக்தித் தாண்டவம் – *பொன்னீலன்* 62
தியாகி – *இந்திரா பார்த்தசாரதி* 76
தனி மரம் – *ஏ. பாவண்ணன்* 88
மயானங்கள் – *தோப்பில் முஹம்மது மீரான்* 104
கழிவுகள் – *சோ. தர்மன்* 114
அப்பாவும் மகனும் – *ஜெயமோகன்* 124
ஆட்டம் – *சிவகாமி* 132
ஜேம்ஸ் டீனும் செண்பகராமன் புதூர்க்காரரும் – *மா. அரங்கநாதன்* 154
நிறைவு – *அ. அமராவதி* 162
கொடும்பாவி – *கண்மணி குணசேகரன்* 183
சூடு – *அபிமானி* 188
வெள்ளிப்பூண் – *சு. சமுத்திரம்* 197
இழந்தது – *செ. யோகநாதன்* 205
காத்திருந்த வேளையில் – *வாஸந்தி* 219
அந்த சின்ன பீப்பாய் – *மோபசான்* - தமிழில் : *ஜெயராஜ் தனியேல்* 241
சிநேகிதன் – *விழி.பா. இதயவேந்தன்* 247


## நேர்காணல்...


பேராசிரியர் அ.ச.ஞா-வுடன் ஒரு நேர்காணல் 253
ஓவியங்கள் – குறிப்புகள் 259

# அன்பு கொள்வோம்

## - முதல்வர் கலைஞர்



வணக்கம் -
கலாநிதி மாறன் அழைப்பையேற்று
கலைவாணர் அரங்கத்தின் இலக்கியத்
தடாகத்தில் தாமரை மலர்களாய்ப் பூத்திருக்கும்
தமிழ் மக்களே !
தரமான கவிதைகள் படைக்கவந்த
பெருமக்களே !
உயிரினும் மேலான உடன்பிறப்புக்களே !
உங்களில் ஒருவனின்
வணக்கமும் வாழ்த்தும் ஏற்றிடுவீர் !

இங்கிருக்கும் கவிஞர்களின் அரங்கிற்கு
நான் தலைவனாம் ! வேடிக்கை ! நல்ல வேடிக்கை !
இலக்கணமெனும் தாய்ப்பால் அருந்தாமல், பசி
எடுத்தபோதெல்லாம் புதுக்கவிதைப் புட்டிப்பால்
குடித்திடும் குழந்தை நான் !

எனை அழைத்து கவியரங்கத் தலைமை ஏற்கச்செய்வது
எதனாலே என்று யோசித்துப் பார்த்தபோது
புத்தாண்டுச் சித்திரைக்குப் புதுவாழ்த்துச் சொல்ல
வந்திருக்கும் நான்
'வைகாசி' என் கவிதைக்கெனக் கேட்கமாட்டேன், அதனாலே !
'வை காசி' என் கவிதைக்கெனக் கேட்கமாட்டேன் - அதனாலே !
கவியரங்கில் பங்கு நீ பெற்றந்த
சித்திரைப் பெண்ணுக்கு ஆசி கூறென்றார்.
கவியரங்கில் "பங்குனி" பெற்ற அந்த
சித்திரைப் பெண்ணுக்கு ஆசி கூறென்றார்.
புரட்டாசி கூறமாட்டேன் என்ற நம்பிக்கை !
புரட்டு ஆசி கூற மாட்டேன் என்ற நம்பிக்கை !
மார் கழியாத் தாவணியுடன்
மார்கழி...
மார் கழியாத் தாவணி
மார்பை விட்டகலாத் தாவணியுடன்
தாவணியுடன் ஆவணிப் பெண்ணாள்
மரபு வழிக் குடும்ப மங்கை
"ஆநீயா ?" என்று (ஆனி)
"ஆநீயா ?" என்று ஆடித்தீர்த்தாள்
தை தை என்று ! அவள்,
அனல்கொட்டும் விழிகாட்டி - தமிழ்
ஆண்டுப் பிறப்பு தை முதல் நாளே என்றாள் !
பாவையின் கூற்று உண்மைதான் எனினும் - அவள்
பதற்றம் தணிப்பதற்கு நான் சொன்னேன்,
தமிழர்க்கு ஓராண்டில் இரு புத்தாண்டு வருவதாலே
இரட்டிப்பு மகிழ்ச்சிதானே என்று !
தளிர்ப் பெண்ணின் குளிர்முகத்தில் நிலவு கண்டேன்
தழுவிக் கொண்டாள் - திகைக்காதீர்
மற்றொருத்தியா என்று !

மாதம்தான்
மாதல்ல !

தை முதல் நாளே
தமிழர்க்குப் புத்தாண்டாய் இருப்பதற்குத்
தகுதி என்ன ?

இந்தக் கேள்விக்கு என்னிடத்தில்
ஒரே ஒரு பதில்தான் உண்டு.

மான மங்கையர் மஞ்சள் முகத்தில்
குங்குமப் பொட்டு வைக்க
என்ன தகுதியோ
அந்தத் தகுதி
தைப் பொங்கலில்
தமிழ்ப் புத்தாண்டு கொண்டாட உண்டு.

தமிழனுக்குத் தாய்மொழியாய்த்
தமிழ் உண்டு.
தரம் உண்டு தமிழ் இலக்கியத்தில்.
தன்மான வரலாறுண்டு இவ்வுலகத்தில்.
ஆனால்
ஆண்டுமட்டும் அவனைவிட்டு
மாண்டது ஏனோ ?
கோட்டை கட்டி ஆண்ட தமிழ் மன்னர்கள்
தமிழ் ஆண்டை மட்டும் கோட்டை விட்டனர் - பிறமொழி
ஆண்டைகட்குத் தமிழர் அடிமையுமானோம்.
அதனால்தான் அறுபது வருடம் நம்
ஆண்டுக் கணக்காயிற்று -
அதற்கோர் கதையும்
அன்றே பிறந்தது !

இளமைப் பருவத்தில் ஒருநாள்
எம்மூரில் இருக்கின்ற
திரையரங்கில்
திரண்டது பெருங்கூட்டம் !
புராணப்படம் என்றதாலே
புற்றீசலாய்ப் புறப்பட்டது பக்தர் குழாம் !
"கிருஷ்ணநாரதி", படத்தின் பெயர்
கிறுகிறுக்க வைத்தது அனைவரையும்.
என்னையுந்தான் !
எப்படியிருக்குமென்று
எனக்குமோர் ஆவல் எழ
குதித்தோடி சினிமாக்
கொட்டகைக்குள் நுழைந்தேன்.

பாரதப் போர்க்களத்தில்
படைவீரர் ரத்தம் சிந்தியதுபோல் - முதல் காட்சியில்
படம் பார்த்தோர், துப்பிவைத்திருந்த
பாக்கு வெற்றிலை கலந்த மணலில்
பக்குவமாய்ப் பலர் அமர்ந்து
படம் பார்த்தார் அங்கே !
அதில் நானும் ஒருவன்.

பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப்
படம் தொடங்கியது.
வானவெளி விடுத்து மேகங்கள் பல தாண்டி
நாரதர் இறங்கினார் தம்புரா மீட்டிக்கொண்டு !

'நாராயண நமஹ
நாராயண நமஹ' எனப்
பாராயணம் செய்த பாடலுடன்
துவாரகாபுரிக்குள் நுழைந்தார்.

"வரவேண்டும் நாரத மா முனிவரே" என்று
விழிகளை மிக அகலமாய் விரித்து
வேணுகானக் கண்ணன் நின்றான்.

"பலநாள் கனவு ஒன்று
பலிக்குமா பரந்தாமா" என்று,
நெளிந்து வளைந்தார் நாரத முனிவர்.

"கனவென்ன நாரதரே; உடன்
கழறுக" என்றான் கண்ணன்.

"விபரீதமாக விளைந்த ஆசையை
விரைவில் சொல்லி விடுகின்றேன்.

நாரதனாக இருக்கின்ற நான்
நாரதியாகப் பெண்ணுடல் கொண்டு
நாள்முழுவதும் உனைக் கூடி
நாகமிரண்டு பிணைந்தது போல்
சுகம் காண வேண்டுமென்றார் - புதுச்
சுவை காண வேண்டுமென்றார்."

ஆண் பெண்ணாய் மாறுவதோ என
அய்யம் அணுவளவும் தெரிவிக்காமல்
"அப்படியே ஆகட்டுமென்றான்" கண்ணன்.
அம்ச தூளிகாமஞ்சம்
அக்கணமே தயார் ஆயிற்று.
பெண்ணுருக் கொண்ட நாரதரும்
விண்ணுருக் கொண்ட மாதவனும் - பக்தர்கள்
கண்ணுக்கு விருந்தாக
காதல்ரசம் பருகிக் களித்தனர்.

அதன் விளைவாக நாரதி
அன்றிரவே கருவுற்றாள் - அரசின்
குடும்பநலத் திட்டம்
அப்போது இல்லாத காரணத்தால்
அடுக்கடுக்காய்
அறுபது குழந்தைகளை ஈன்றெடுத்தாள்.
அக்குழந்தைகளே, பிரபவ, விபவ என
அறுபது வருடங்களாய் ஆயின என்று
அக்காலப் புராணங்கள் சொன்ன கதை
இக்காலத் தமிழர்களின் ஆண்டுக் கணக்காயிற்று!

பல்லுக்குப் பல் இருகாதம் - பகாசூரன்
பல்லிடுக்கு முக்காதமெனப்
பரட்டைத் தலைப் பூசாரி
பம்பை அடித்து முழக்கும்போது
காதம் என்றால் பத்துகல் தொலைவு ஆயிற்றே
முக்காதம் எனிலோ முப்பதுமைல் ஆயிற்றே
பல்லிடுக்கே பல காதமென்றால்
பகாசூரன் வாய் எத்தனை காதம் இருக்குமென்று
மூளைக்கு வேலைதராமல்
மௌடீகத்தின் உச்சிக்கே சென்று
'ஆமாம் ஆமாம்' என்று அலறுகின்ற
அந்தரங்கச் சீடன் இருக்கும்போது
அறுபதாண்டுப் பிள்ளைக் கதையை
அருமை எனச் சொல்வதில் என்ன ஆச்சரியம்?

**அஃதெப்படி ஆணும் ஆணும்**
**பால்மாறி உடலைப் பகிர்ந்துகொண்டனர் ?**
**இதைக் கேட்பதே பெரும்பாவம் - புராணக்கதை எனில்**
**ஏற்பதே நம் சுபாவம் !**

பிரபவ, விபவ, சுக்கில பிரமோதூத,
பிரஜோர்ப்பத்தி, ஆங்கிரீச, ஸ்ரீமுக, பவ, யுவ
இப்படி நாரதர் பெற்ற பிள்ளைகளில் ஒன்றே
நடந்து முடிந்த தாது வருடம் !

சூதும் வாதும் நிறைந்த கயவரை
சுட்டிக்காட்டி மக்கள் முன் நிறுத்திய
தாது வருடம் தானாய் மறைந்து,
ஈஸ்வர ஆண்டு இதோ வந்தது.
"ஈஸ்ரவ அல்லா தேரே நாம்"
- இந்தியில் மொழிந்த இந்த தத்துவம்
காந்தியடிகளின் கனவுச் சித்திரம்.
இனிய தமிழில் இதனைச் சொன்னால்
"ஒன்றேகுலம் ஒருவனே தேவன்"
அன்றே சொன்ன திருமூலர் வாக்கு !
என்றும் நின்று எங்கும் பரவிட
அண்ணா முழங்கினார் என்பதை அறிவோம்.
கண்ணாய்ப் போற்றும் அந்தக் கருத்தைப்
பண்ணாய்த் தொகுத்துப் பாடிடும் அரங்கில்
"அன்பு கொள்வோம்" எனும் தலைப்பில்
அய்வர் நாங்கள் படிக்க வந்துளோம்.

அன்பின் வழியது உயிர்நிலை என்பது
ஆதிமகன் வள்ளுவன் சொல்லாம் !

அன்று சிலுவை சுமந்தவர், நெஞ்சில்
அன்பைச் சுமந்தவரே !

போதி மரத்து நிழல்தானே
மேதினி எங்கும் அன்பாய் மேவியது !

நன்னெறி நாயகம்
நபிகள் நாயகம் அன்புக்கு நாயகமே !

அன்பே சிவம் - இது சைவத் திருமறை !
அன்பின் அடிப்படையே அக்கால வைணவமும் !

அன்புக்குப் பல வழிகாட்டிகள் உண்டெனினும், மத
வம்புக்கு நம்மிடையே பஞ்சமில்லை.

வன்முறைக்கு வாய்க்கால் வெட்டி
நித்த நித்தம் ரத்தத்தால் பாசனம் செய்கின்ற
பாழும் உள்ளங்கள் பக்குவப்படுவதற்கே
"அன்பு கொள்வோம்" எனும் தலைப்பில்
அணை கட்டுகின்றோம்.

அன்புபற்றி அயலார்க்கு அறிவுரை கூறிவிட்டு
அதற்கெதிராய் நடக்கின்ற
ஈன்பு தோல் போர்த்த மனிதர்கள் சிலருண்டு-
அவரையெல்லாம் அடையாளம் கண்டு,
அவனிக்குச் சொல்லிவைத்தல் பெரும் தொண்டு.

ல்லதையும் கெட்டதையும் நன்றாக ஆய்ந்தறிந்து
ாட்டுமக்கள் தெளிவடைந்துள்ள காலமிது - எனினும்

விழித்துக் கொண்ட மக்களையும் - மீண்டும்
வீழ்த்துதற்கு வேடதாரிகள் புறப்படுவர் இன்று! அந்த
மாரீச மான் குட்டிகளை முதலிலேயே மடக்கிப் போடல் நன்று!

நவரத்தின வைக்கோல்போராய்
நகைக் குவியல் வைத்திருப்பார்
இவை ஏதென்றால்
இது தெரியாதா உமக்கு
மைசூர் பட்டத்து ராஜா
எம் பாட்டனுக்குத் தந்ததென்பார் -
ஒருநாள் ராஜா கொடுப்பார் -
மறுநாள் அதே நகையைத் தொண்டன் கொடுப்பான்
அண்டப்புளுகு - ஆகாசப்புளுகு; அடடா என்ன சொல்வேன் இதை!

வளர்ப்பு மகன் என்பார்
ஆறு கண்டமறிய
நூறு கோடியில் திருமணமென்பார் - பின்னர்
வளர்ப்பல்ல அவன் - எல்லாம் தன் வாயளப்பு என்பார்!
வளம் கொழிக்க நாடாள வருமாறு சொன்னால் -
நாட்டையே தன் வீட்டுக்குள்
வளைத்துப்போட முயற்சிப்பார் -
இனியும் மக்கள் ஏமாந்தால்,
கட்டிவெல்லப் பேச்சு
வெட்டும் விழி வீச்சு
சுட்டு விரல் காட்டி
சுவைபலவும் நீட்டி
கட்டு உடல்
தொட்டவுடன்
மொட்டு அவிழ்
பட்டு மெத்தை
இட்டழைத்த
பாவையிடம்
பலியாகும்
வீரனைப் போல்
பைந்தமிழர்
வசமிழப்பர்
வலிவிழப்பர் - முடிவில்
வாழ்விழப்பர்
- என்றுரைத்துக் கவிஞர்களை அழைக்கின்றேன்.

அன்பு <u>கொள்வோம்</u> என்பதையே
சிலபேர் தெரியாமல்
அன்பு <u>கொல்வோம்</u> என்கின்றனர்.
தெரிந்து<u>கொல்வோரும்</u> உண்டு!

தவறு எனத் தட்டிக் கேட்டாலோ
அதுவும் இடையினம்தானே "யரலவழள"
எனப் பதில் உரைப்பர்.

குறிப்பாகத் தொலைக்காட்சிப் பெட்டிகளில்
இந்தத் தமிழ்க்கொலை நிற்பதற்கு
இன்றே முடிவுசெய்வீர்!

இல்லையேல்
அன்பைக் <u>கொள்வதற்குப்</u> பதிலாக
அன்பைக் <u>கொல்ல</u> இன்னும் ஆயிரம் பேர் பிறந்திடுவர்.

அவரிடமிருந்து அன்பையும்
அன்னைத் தமிழையும் காப்போம்!

புத்தாண்டுக் கவியரங்கத்திற்குத்
தலைமை தாங்கி பாடிய கவிதை
நன்றி: 'சன் டி.வி.'

# இந்திய தரிசனம்

ஜெயகாந்தன்



நாமறிந்தவரை பண்டைய உலக நாகரிகம் என்பது தமிழ்நாட்டையும், கிரேக்கத்தையும் ஆதாரமாகக் கொண்டு திகழ்கிறது.

பண்டைய கிரேக்க நாகரிகம் ஐரோப்பிய நாகரிகத்தின் தோற்றுவாய் என்று கருதப்படுகிறது. அதேபோல தமிழ்நாடடை ஆசிய நாகரிகத்தின் தோற்றுவாய் எனக் கருதலாம்.

ஒரு பழந் தமிழ்க் கவி 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்று முழங்கினான். இது நெடிய பாரம்பரியமுடைய தமிழ்ப் பண்பாட்டின் கொள்கையாகவும் நோக்கமாகவும் இருந்தது. இந்தக் கூற்றின் பின்னணியில் உள்ள செய்தி என்ன? இந்த இலட்சியத்தை உலகெங்கும் பரப்புவதும், இந்த இலட்சியத்தின் அடிப்படையில் உலகமாந்தரை உருவாக்குவதும் இந்தியப் பண்பாட்டின் அடிநாதம் என்பதே.

நமது கலாச்சார வரலாறு

வேதகாலம் தொட்டுத் தொடங்குகிறது என்றாலும், புத்தரின் காலத்திலிருந்துதான் இந்திய அரசியல் கலாசாரம், உலகு தழுவிய ஒரு தேசிய கலாசாரமாக உருப்பெறுகிறது.

சில நாடுகள் மிகவும் தனித்துவமான அவற்றின் எல்லைக்கு உட்பட்டவையேயான கொள்கைகளையும் நெறிகளையும் கொண்டிருக்கலாம். ஆனால், இந்திய தேசியமானது உலகத்தை - ஏன், பிரபஞ்சத்தையே தழுவி நிற்கிறது; மனிதகுலம் முழுமையையும் நேசிக்கிறது. உலகமாந்தர் அனைவரின் தன்மையையும் வேண்டிநிற்கிறது. மற்ற தேசிய வாதங்கள் போல் இந்திய தேசியம் தன்னலம் பேணும் குறுகிய தேசிய வாதமாகச் சுருங்கி விடவில்லை. மாறாக உலகுதழுவிய, மானுட சகோதரத்துவத்துக்காகத் தனது குரலை உயர்த்தி நிற்கிறது.

''ஸர்வே ஜனா; ஸுகினோ பவந்து'' என்பது பாரதத்தின் தேசிய கோஷம். ஆம், ஒன்றோடொன்று மோதுகிற, மதங்கள், இனங்கள், வர்க்கங்கள் என்று பாகுபட்டு நிற்கிற உலகத்தில் இந்திய தேசியம் எது சத்தியமோ அதுவே ஜெயிக்கட்டும் என்று முழங்கி, 'சத்யமேவ ஜயதே' என்ற தனது பதாகையை உயர்த்திப் பிடிக்கிறது.

இந்திய நாகரிகம் எல்லாவற்றிலும் சத்தியத்தையே தேடுகிறது. உண்மைக்காகவே உயிர் கொடுக்கவும் தயாராய் நிற்கிறது. ஒரு நாட்டுக்கும் நாகரிகத்துக்கும் இதைக் காட்டிலும் ஓர் உன்னதமான குறிக்கோள் இருக்க முடியாது.

பஞ்ச சீலம் என்பது ஏதோ இக்காலத்தில் சுதந்திர இந்தியாவும், புதிய சீனாவும் கையெழுத்திட்டுப் பிரகடனம் செய்த ஒரு புதிய ஒப்பந்தம் மட்டுமன்று. அது உலக அரசியல் கலாச்சாரத்துக்கு அசோகச் சக்கரவர்த்தி அளித்த மகத்தான அருட்கொடையாகும்.

இந்தியா ஒரு பரந்ததேசம்; ஒரு துணைக் கண்டம். இந்தியாவின் தொலை தூரப்பிரதேசங்கள், தேசத்தின் பிரிக்க முடியாத பகுதிகளாகும். ஒவ்வொரு பகுதியும் அதற்கேயுரிய தனித்தன்மையுடன் விளங்குகின்றன. இந்தத் தனிச்சிறப்புகள் இந்திய தேசத்தின் ஒருமையை அடிப்படையாகக் கொண்டு திகழ்கிறன. ஒவ்வொரு பகுதியிலிருந்தும் வருகிற சிறப்பானவற்றையெல்லாம் ஏற்றுக் கொள்வதும் தன்வயப்படுத்திக் கொள்வதும் இந்திய தேசிய கலாசாரத்தின் பொதுவான அடிப்படைகளாகும்.

இந்தியாவின் வடபகுதியில் வாழ்ந்தோர் தம்மீது படையெடுத்து வந்தோரை எதிர்த்துப் போர் புரியவும், அவர்களைப் புறங்காணச் செய்யவும் வீரமுடையவர்களாய் இருந்தனர். மாறாக, தென் பகுதியோ மூன்று புறத்தும் கடலால் சூழப்பட்டிருந்ததால் ஒருபோதும் அந்நியர் படையெடுப்புக்கு இலக்கானதே இல்லை. உண்மையில் தென்பகுதியில் ஒரு வலுவான கடல் அரணும் கடற்படையும் நமக்கு இருந்தது. அவை தமிழகத்தின் துறைமுகங்களிலிருந்து சரக்குகளையும் கைவினைப் பொருள்களையும், திரவியங்களையும் மட்டும் ஏற்றிச் செல்லவில்லை. அவை உலகின் தொலைதூரப் பிரதேசங்களில் வாழும் சகோதர மானுட குலத்தினருக்கு ஆன்மீக அறிவையும், ஞானத்தையும், நட்புணர்வையும் ஏற்றிச் சென்றன.

> ஒரு பழந் தமிழ்க் கவி 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்று முழங்கினான். இது நெடிய பாரம்பரியமுடைய தமிழ்ப் பண்பாட்டின் கொள்கையாகவும் நோக்கமாகவும் இருந்தது.

ஐரோப்பியர்கள் கூட கடல் வழியே நமது நாட்டை ஆக்கிரமிப்பவர்களாகப் படைகொண்டு வரவில்லை. நல்லெண்ணத் தூதுவர் களாகவும், அறிஞர் களாகவும், பயணிகளாகவுமே வந்தனர்.

வேதங்கள், உபநிஷதங்கள், மகாபாரதம், இராமாயணம் இவையெல்லாம் இந்தியாவின் எந்தவொரு பகுதிக்கும் சொந்தமானவை அல்ல.

சமஸ்கிருதம் எந்த ஒரு பகுதிக்கும் உரியதனிமொழியோ, வட்டார மொழியோ அல்ல. சமஸ்கிருதம் இந்தியாவின் புராதன தேசிய மொழி. தேசத்தின் பல்வேறு மொழிகளைச் சார்ந்த அறிஞர்கள் தத்தமது கருத்துக்களை அனைவரோடும் பரிமாறிக் கொள்ளவே அம்மொழி உதவிபுரிந்தது. நமது மொழிகள், வேதங்கள், காவியங்கள், புராணங்கள் ஆகியவை இப்பரந்த தேசத்தின் பல்வேறு பகுதி மக்களையும் ஒருங்கிணைப்பதில் மிக முக்கிய பங்காற்றின.

தனிமனிதர்கள் ஒருங்கிணைந்து ஒரு சமுதாயத்தை உருவாக்குவதாகப் பலர் தவறாக எண்ணுகிறார்கள்.

மலர்களைப்போல், தேனீக்களைப் போல், பறவைகள் போல் சமுதாயமும் இயற்கையாகவே கொத்துக் கொத்துக்களாக, கூட்டம் கூட்டங்களாகப் பூமியின் பரப்பெங்கும் தோன்றியுள்ளன. தனிமனிதர்கள் என்போர் சமுதாயத்தின் அங்கங்களாகவே சமுதாயத்தன்மை கொண்டவர்களாகவே உருவாகி இருக்கிறார்கள்.

ஒருமலர் என்பது பல இதழ்களைக் கொண்டதாக இருக்கிறது என்பதால் பல இதழ்களை ஒன்று சேர்ப்பதின் மூலம் ஒரு மலரை உருவாக்க முடியாது. வேண்டுமானால் செயற்கையாக இத்தகைய ஒரு

மலரை உருவாக்கலாம். உதாரணத்துக்கு ஐரோப்பாவில் உருவாக்கப்பட்ட, செயற்கையாக ஓர் ஒப்பந்தத்தின் மூலம் சேர்த்து இணைக்கப்பட்ட சோவியத் யூனியனை கூறலாம்.

இந்திய தேசமென்பது செயற்கையாக உருவாக்கப்பட்ட அத்தகைய கூட்டமைப்பு அல்ல. எந்த ஒரு மகா சக்கரவர்த்தியும் ஒரு குடைக்குக் கீழே இந்த தேசத்தைக் கொண்டுவரவில்லை. மாறாக இமயம் முதல் குமரிவரை வாழ்கிற இந்திய மக்களின் வாழ்க்கை நெறியினால் உணர்வுபூர்வமாக, கலாசாரரீதியாக, மரபுரீதியாக இந்தியா ஒரு தேசமாக உருவாகி இருந்ததால்தான் அது ஒன்றாகவே அடிமைப்பட்டது; ஒன்றாகவே விடுதலையும் பெற்றது. இந்தியா வெறும் அரசியல் ரீதியாக உருவாக்கப்பட்ட செயற்கையான கூட்டமைப்பு அல்லவே அல்ல.

பன்னெடுங்காலமாக இந்தியாவில் சமஸ்கிருதமும் தமிழும் மிகவும் சிறப்புற வளர்ச்சியுற்ற இலக்கியப் பொக்கிஷங்களைப் பெற்ற இருபெரும் மொழிகளாக விளங்குகின்றன. தமிழ் நாட்டைச் சேர்ந்த ஓர் அறிஞனோ, கலைஞனோ தமிழிலும் சமஸ்கிருதத்திலும் கற்றுத்தேர்ந்தவனாக விளங்கினான். தேசத்தின் ஒரு மூலையில் உதிக்கின்ற ஒரு கருத்து, சமஸ்கிருத மொழியைத் தனது வாகனமாகக் கொள்வதன் மூலம் இந்தியா முழுவதும் திக்விஜயம் செய்ய முடிந்தது.

தெற்கே எங்கோ ஒரு மூலையில் தோன்றிய ஆதிசங்கரர் பாரதத்தின் எட்டுத்திக்குகளையும் வென்று இமயச்சிகரத்தின் முகட்டில் தமது ஜயக்கொடியை நாட்டினார் எனில், தமிழ் சமஸ்கிருதத்தைத் தனது வாகனமாய்க் கொண்டு திக்விஜயம் செய்ததனால்தான் சாத்தியமாயிற்று.

அதேபோல் இமயத்தின் அடிவாரத்தில் தோன்றிய பௌத்தம், தமிழகம் உள்ளிட்ட பாரதத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பரவியது. இந்த வரலாற்று உண்மைகளிலிருந்து, தேசத்தின் பல்வேறு பகுதிகள் ஒன்றோடு ஒன்று நெருக்கமான உறவுகளை வளர்த்துக் கொண்டிருந்தன என்றும் இதற்கு வடமொழி பெருந்துணையாய் நின்று உதவிய தென்பதையும் நாம் அறிய முடிகிறது.

உண்மையும் அன்பும் நமது சமயக்கொள்கைகள் மட்டுமல்ல. அதுவே நமது சமூகக் கலாசாரத்துக்கும் அரசியலுக்கும் அடிப்படையாகும்.

> தனிமனிதர்கள் என்போர் சமுதாயத்தின் அங்கங்களாகவே சமுதாயத்தன்மை கொண்டவர்களாகவே உருவாகி இருக்கிறார்கள்.

ஏதேச்சாதிகாரம், அடிமைத்தனம், அடக்குமுறை, கொடுங்கோல் ஆகியவற்றை நமது கலாசாரம் எல்லாக்காலங்களிலும் எதிர்த்தே நின்றிருக்கிறது. நம்மை அடிமை கொள்ளவும், அடக்கவும் முயன்றவர்கள் காலப்போக்கில் தோற்றுப்போயினர்; தோற்றுப்போவர்.

நாம் அன்பினாலும் அறத்தாலும் அவர்களை வெல்லுவோம்.

இந்தியமக்களின் உண்மையான தேசிய குணாம்சத்தை நம் காலத்தில் உலகறிய எடுத்துக்காட்டியவர் மகாத்மா காந்தி. இந்தியர்களுக்கு எதிராக கொடுமையான சக்திகள் பயன்படுத்தப்பட்டபோது நாமதனை அறவழியில் அகிம்சைமுறையில் எதிர்கொண்டு வெற்றிபெற்றோம். அகிம்சை என்பது வன்முறைச் செயல்களைத் தவிர்ப்பது மட்டுமன்று. வன்முறை எண்ணங்களை தீய சிந்தனைகளையும், வெறுப்பையும், பகைமையையும் மனித சித்தத்திலிருந்தே அகற்றுவதாகும்.

இந்திய வரலாற்றுக்கே பெருமை சேர்க்கும் மாமனிதராம் ஜவகர்லால் நேருவின், 'இந்திய தரிசனம்' என்னும் நூலிலிருந்து சில வாசகங்களுடன் இக்கட்டுரையை முடிக்க எண்ணுகிறேன்.

''மற்ற கலாசாரங்களை வரவேற்று ஏற்றுக்கொள்வது இந்தியாவின் வழிமுறையாக எப்போதும் இருந்துவந்துள்ளது. அது, இன்றைக்கு மிகவும் அவசியமாகிறது. ஏனெனில் நாம், மனித குலத்தின் சர்வதேசக் கலாசாரத்தோடு நமது தேசிய கலாசாரம் பின்னிப் பிணையப் போகிற நாளைய ஓர் உலகம் என்ற இலக்கை நோக்கி நடைபோடுகிறோம். ஞானம், அறிவு, நட்பு, தோழமை இவை எல்லாம் எங்கெங்கு கிடைக்கின்றனவோ, அங்கங்கெல்லாம் அவற்றைப்பெற்று பொதுவான உலக க்ஷேமத்துக்காக, மற்ற தேசங்களோடு ஒத்துழைத்து நாம் நிற்போம். ஆனால் மற்றவர்களின் இரக்கத்துக்காகவும், ஆதரவுக்காகவும் நாம் யாரிடமும் கையேந்தி யாசகம் கேட்டு நிற்கமாட்டோம். இவ்வாறாக நாம் உண்மையான இந்தியர்களாக, சிறப்பான ஆசியக்காரர்களாகத் திகழ்வோம். அதே நேரத்தில் நாம் சிறந்த சர்வதேசிய வாதிகளாகவும் உலகப் பிரஜைகளாகவும் உயர்வோம்''

**சத்யமேவ ஜயதே!**

★★★



1. ஏ.பி. சந்தான ராஜ

*Best Compliments*

**RAM AUTO**

(Bajai Dealers)

New Agraharam, Palani Road, Dindigul.

நல்வாழ்த்துகள்

**ஏலகிரி மலை வளர்ச்சி மற்றும் சுற்றுலா மேம்பாட்டு சங்கம்**

திருப்பத்தூர், வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம்

| | | |
|---|---|---|
| *க.பெ. சேஷையா பி.ஏ.* | *மு.ஜின்னாபாய் பி.எஸ்.சி.* | *ப.வி.ச. டேவிதார் இ.ஆ.ப.* |
| பொருளாளர் | செயலாளர் | தலைவர் |

2. சி.ஜே. அந்தோணி தாஸ்



நல்வாழ்த்துகள்

***நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட்,***
தலைமையகம், உதகமண்டலம்.

**வி.மணி**
செயலர்

**கே. ராஜப்பன்**
தனி அலுவலர்.

3. டி.ஆர்.பி. மூக்கையா



# விலக்கப்பட்ட கனி



ஆதியிலே இறைவன் அறிவைப்
படைத்தான்

இறைவன் அறிவை நோக்கி, 'என்
வல்லமையின் மீது ஆணை. உன்னைப்
பார்க்கிலும் என்னிடம் மெத்தவும் உவப்
பானதை நான் படைக்கவில்லை' என்றான்.

பின்பு இறைவன் அதை நோக்கி,
'முன்னோக்கி நட' என்றான்.

அறிவு முன்னோக்கி நடந்தது. அதில்
அது கர்வம் கொண்டது.

எனவே இறைவன் அதை நோக்கி,
'பின்னடைந்து போ!' என்றான். அது
பின்னடைந்தது.

இறைவன் அறிவை நோக்கிச்
சொன்னான்:

எரிவதும் எரிப்பதும் உன் வேலையா
யிருக்கும்.

உன்னால் வெளிச்சமும் விபத்தும்
உண்டாகும்

நீ என் ரகசியத்தின் கையாக இருப்பாய்.
நான் உன்னைக்கொண்டு கொடுப்பேன்.
உன்னைக்கொண்டு பிடிப்பேன்.

சந்தேகம் உனக்குக் கண்ணாகவும்
இருக்கும்; இமையாகவும் இருக்கும்.

உன் பார்வை முகங்களை மட்டுமே
பார்க்கும்.
கேள்விகள் உனக்குச் சிறகுகளாக
இருக்கும்.

நீ பயங்கரமான உயரங்களை அடைவாய்.

காலமும் இடமும் நீ கூடு கட்டும்
கிளைகளாக இருக்கும்.

உண்ண உண்ண உன் பசி அதிகரிக்கும்.

கிச்சுக் கிச்சு தாம்பாலத்தில் நான்
ஒளித்து வைத்திருப்பதை நீ
கண்டுபிடிப்பாய்.

நான் சமுத்திரமாக இருக்கிறேன். நீ
வலையாக இருக்கிறாய்.



உனக்குள் என் மீன்கள் அகப்படும்.
நான் அகப்பட மாட்டேன்.

ஏதேன் தோட்டத்தில் நான் உன்னைக்
கனியாக்குவேன்.

அங்கே நீ மனிதனுக்கு வெகுமதி
யாகவும் தண்டனையாகவும்
ஆவாய்.

என்னால் ஒளி கொடுக்கப்பட்டவர்கள்
மட்டுமே அதன் ரகசியத்தை அறிவார்கள்.

## அப்துல் ரகுமான்

ஓவியம்: ஆர். ஜானகி இராமன்

*Best Compliments*



4. டி.ஆர்.பி. மூக்கையா

**P. SONAI I.A.S.**
Chairman
***The Nilgiris District Co-operative Milk Producers Union Ltd.,***
Coonoor Road, Uthagamandalam.

*Best Compliments*



5. ஜாக்வெல் லிப்சிட்ஸ்

**SALEM STEEL PLANT**

Salem – 636 013. Tamil Nadu. Telephone : 483 021, 29 Cable : Stainless

# மணமகள் தேவை

ஓவியம்: **ஆதிமூலம்**



எனக்குக் கலியாணமாகி பேரம்பேத்தியெல்லாம் எடுத்தாச்சி. ஆனாலும், 'மணமகள் தேவை' காலத்தைப் பத்திரிகையில் ஒருபார்வை பார்க்கிற வழக்கம் இருக்கிறது!

ஒரு நாள் இப்படிப் பார்த்துக் கொண்டிருந்த போது "சம்பிரதாய வித்தை தெரிந்த ஒரு பொண்ணுக்கு, சம்பிரதாய வித்தைகள் அறிந்த ஒரு மணமகன் தேவை" என்றிருந்தது.

"என்னத்தப் படிச்சி மண்ணள்ளிப் போட்டாலும் நமக்குத் தெரியாத வார்த்தைகள், விசயங்கள்

**கி. ராஜநாராயணன்**

இருக்கத்தான் செய்யுது; என்ன எளவு கொண்டாட" என்று வருத்தத்தோடு முகம் திருப்பியபோது, கழனியூரன் வந்து கொண்டிருப்பது தெரிந்தது வாசல்பக்கம்.

வாங்க வாங்க என்று உபசரித்து உட்கார வைத்துப் பேசிக் கொண் டிருந்த போது, பத்திரிகையை அவர்பக்க நீட்டி "இது என்னென்னு பாருங்கன்னு காட்டினேன். நாலு திக்கும் போயி வந்தவர். நாலா தண்ணியும் குடிச்சவர். இவருக்குத் தெரியாமல் இருக்காது'' என்று நினைத்துக் கொண்டிருந்தபோது, "தெரியலையே" என்று பதில் வந்தது என்றாலும் 'இது பற்றி ஒரு கதையிருக்கு' என்றார்.

"அதெச் சொல்லும் முதல்லெ என்று கேட்டேன். ஒரு ஊர்ல ஒரு கலியாணம் ஆகாத ராசா இருந் தாராம்", என்று ஆரம்பித்தார்.

'சரி' என்று ஆட்டினேன் தலையை. "ஒரு நா ராசா, மந்திரியக் கூப்பிட்டனுப்பி, வேய் எனக்குக் கலியாண ஆசெ வந்துட்டது. ஒரு நல்...ல பொண்ணாப் பாரும்ன்னார்."

''எப்படியான பொண்ணு இருக்கணும்"ன்னு கேட்டார் மந்திரி.

"சம்பிரதாய வித்தை தெரிஞ்ச பொண்ணா இருக்கணும்''ன்னார் ராசா.

சம்பிரதாய வித்தைன்னா என் னென்னு கேக்க மந்திரிக்கு பயம்.

ராசா எது சொன்னாலும் முதல்ல யாருஞ் சொல்லவேண்டியது

"சரி"

மந்திரியும் அதைத்தாம் சொன் னார்.

நே...ரெ வீட்டுக்கு வந்தார். பொண்டாட்டியக் கூப்பிட்டு, ''அடியே... ஒனக்கு சம்பிரதாய வித்தைன்னா என்னதுன்னு தெரியுமா"ன்னு கேட்டார்.

"யாரு கண்டா அந்தக் கருமாந் திரத்தயெல்லாம்; முதல்ல காலுகை யெக் களுவிட்டுவாங்க; சோத்த போடுதம்"ன்னா. மந்திரிக்கு வெறுத்துப் போச்சி. தட்டத்துல சோத்தைப் போட்டு வச்சிருக்கு. மந்திரி முகட்டை வெறிச்சிப் பாத்துக்கிட்டிருக்காரு.

மந்திரி மகன் வந்தாம். 'அப்பா சாப்பிடாம இப்படி இருக்கதப் பாத்துட்டு, "என்னப்பா சங்கதி"ன்னு விசாரிச்சாம். இன்னதுன்னு மந்திரி சொன்னார்.

"இம்புட்டுத்தானா; இதுக்குத்தாம் இந்தக் கவலையா. நீங்க பேசாம வீட்டுக்குள்ளெயே இருங்க. நாம் போயி அப்படியான அந்தப் பொண் ணெப் பாத்துட்டு வாரே"ன்னான்.

மந்திரி மகன் அந்தப் பொண்ணெத் தேடி தேசாந்திரம் புறப்பட்டுப் போனான். காடுவனம் வனாந்திரப் பாதை வழியா இப்படிப் போறப்போ, வழித்துணைக்கு ஒருத்தர் கிடைச்சார். அவரோட பேசிக்கிட்டே ரெண்டு பேரும் நடந்து போயிக்கிட்டிருக்காங்க. அப்பொ, இவங்களுக்கு எதரெ ஒருத்தன் வந்தான். கூட வந்தவர், தம்பி யாரோ வர்ற மாதிரி தெரியிதென்னார்.

அந்தக் காலத்துல திருட்டுப்பயம், கொள்ளைக்காரங்க பயம் அதிகம்.

மந்திரி மகன் சொன்னான், "இவனா; இவன் வேறயாருமில்ல பிணம்"ன்னான்.

அவருக்கு இது விளங்கல; இருந்தாலும் சரி இருக்கட்டும்னு மனசுக்குள்ள நினைச்சுக்கிட்டார்.

கொஞ்சதூரம் போனாங்க.

எதுக்கெ ரெண்டு பேர் வந்தாங்க.

''தம்பி, இவங்க யாருன்னு தெரியலையே"ன்னு கேட்டார்.

"இவங்களா; இவங்க ரெண்டு பேரும், ஒன்னு பிணம்; மத்தவன் பிணங்காத்தாம்"ன்னார்!

இதும் அவருக்கு விளங்கல., சரி, இருக்கட்டும்ன்னு நினைச்சிக்கிட்டார்.

இன்னுங்கொஞ்சதூரம் நடந்து போனாங்க.

கொஞ்ச தூரத்துல எதுக்க மூணு பேரு வந்தாங்க.

"தம்பி, மூணு பேர் வர்றாங்களே இவங்க யாராயிருக்கும்"ன்னு கேட் டார்.

''ஊரெழுப்பி''ன்னு பதில் சொன்னாம் மந்திரி மகன்.

இதும் அவருக்கு விளங்கல.

சரி; இருக்கட்டும்ன்னு நினைச்சிக் கிட்டே நடந்து போயிக்கிட்டிருக்கும் போது, நாலு பேரு வந்தாங்க. இவங்க யாருன்னு கேட்டாரு இவர்.

"ராஜா"ன்னு பதில் வந்தது!

இதுக்குள்ள அந்த வழித்துணைக் காரரோட ஊர் வந்துட்டது. நுழையிற பாதையில சத்திரம் இருந்தது. மந்திரி மகன் அதுக்குள்ளெ போயிட்டாம். இவரு ஊருக்குள்ளெ போயிட்டார்.

வீட்டுக்கு வந்த அந்த வழித்துணைக்காரருக்கு ஒரே அதிசயம், வேடிக்கை, இதெ யாரிட்டயாவது சொல்லித் தீர்க்கணும்.

தன்னோட மகளெக் கூப்பிட் டார். யம்மா இங்க வா. கேளு இந்த வேடிக்கையன்னு, நடந்ததெ அப்பிடீச் சொன்னார்.

அவரோட மக மகா புத்திசாலி, சம்பிரதாய வித்தைகள்ளாம் தெரிஞ் சவ. அறிவிலேயும் அழகுலயும் ரொம்பக் கூடுனவ.

எல்லாத்தையும் கேட்டுட்டு, ''அப்பா அவரு சொன்ன ஒவ் வொண்ணுக்கும் ஒரு அர்த்தம் இருக்கு. விவரமாச் சொல்றேம், கேட்டுக் குங்க"ன்னு சொல்லி,

முதல்ல வந்தவனெப் பிணம்ன்னு ஏஞ்சொன்னார்ன்னா, அந்த அத்துவானக்காட்டுல தனிய ஒருத்தன் போனா, எது நேர்ந்தாலும் அது அவனோட முடிஞ்சி போயிரும்; வெளியே தெரியாது. அப்பிடிப் போறவனெ ஒரு பாம்பு கடிச்சாலுஞ் சாவவேண்டியதுதாம். பிணமாத்தாங் கிடக்கணும். அதாம் அப்படிச் சொன்னது"ன்னா.

சரிதான்னுபட்டது அவருக்கு.

ரெண்டு பேர் வந்தபோது, "பிணங்காத்தான்னு சொன்னாரெ?"

ரெண்டு பேர் வந்தாலும் பயனில்லெங்கிறதுதான்! பிணமாக் கிடக்கிறவனெக் காத்துக்கிட்டுத்தான் கிடக்கணும் அவனும். அத்துவானக் காட்டுல அந்தப் பிணத்தை விட் டுட்டுப் போனா காட்டுநாய்க நரிக வந்து தின்னுட்டுப் போயிரும். அதனாதாம் ரெண்டாமவனெ 'பிணங்காத்தான்'ன்னு சொன்னது.

அதுசரி; மூணு பேரு வந்தாங் களே அதெ, ஊரெழுப்பின்னு சொன்னது எப்படி?

முதலாமவன் பிணம், ரெண்டா மவன் காத்தான், மூணாமவன்தான் ஊருக்குள்ளெபோயி ஆட்களெ எழுப்பிக்கொண்டாராணும். அதனால தான் ஊரெழுப்பி" 'ஒஹொ;' சங்கதி அப்படியா. செரி செரி நாலமவன் வந்தப்பொ (நாலுபேரும் சேர்ந்து) 'ராஜா'ன்னு சொன்னானே?

அதுக்கு மகள் சொன்னா; நாலாவது ஆள் ராசாயில்லெ; பிணமா இருந்தவன் ராசா!

எப்படி அது?!

நாலு பேராயிருந்தா, செத்துப் பிணமாக்கிடக்கிறவனெ தலைமாட்டுல ஒருத்தம் கால்மாட்டுல

ஒருத்தம் நடுவுல ஒருத்தம்ன்னு மூணுபேரும் சேர்ந்து தூக்கிட்டுப் போயிருவாங்க. பிணமாக்கிடந்து நாறவேண்டாம். செத்தாலும் அவன் ராசாதானெ!

அந்த மகளெப் பெத்த அப்பனுக்கு தன்னோட மக சாமர்த்தியத்தெப் பார்த்து பிரமிச்சிப் போயிட்டார்.

பிறகு, மக கேட்டா, உங்ககூட வந்த அந்த ஆளு எங்கெ?

நம்ம ஊரு சத்திரத்துல தங்கியிருக்காம்ன்னார் அப்பா. சரீன்னு சொல்லி மக அவரிட்டெ ஒரு ★துட்டெக் கொடுத்து கடையில போயி முன்நக்கி பின்நக்கி வாங்கிட்டு வாங்கன்னா. அவருக்கு அது விளங்கலெ. என்ன சொல்றான்னு முளிச்சார். நீங்க போயி கேளுங்கப்பா; தருவாங்கன்னா. சரீன்னு புறப்பட்டுப் போனார்.

ஒவ்வொரு கடையாகப் போயி, "ஒரு துட்டுக்கு முன்நக்கி பின்நக்கி கொடுங்க"ன்னு கேட்டார். கடைக்காரங்களுக்கும் அது எனனதுன்னு தெரியல. ஆனாலும் கெத்துவிடாம, நாளைக்கிவாங்க கிடைக்கும்ன்னாங்க (எதும், இல்லேன்னு சொல்லமாட்டாங்க; சொன்னா அப்படியே இல்லாதவங்களா ஆயிருவோம்ன்னு நம்பிக்கை)

இந்தப் பேருலதாம் ஏதோ கோளாறு இருக்கு. அது என்னதுன்னு மகளும் சொல்லமாட்டேங்கா; நமக்குஞ் தெரியல. ஒருவேளை அந்த சத்திரத்துல இருக்க இளவட்டத்துக்குத் தெரிஞ்சிருக்கும் போயிக் கேப்போம்ன்னு போனார். அதே படியா அவனும் இருந்தாம். கொஞ்சநேரம் உக்காந்து பேசிக்கிட்டிருந்தாங்க. அவஞ் சொன்ன வார்த்தைகளுக்கெல்லாம் தன்னோட மகள் சொன்ன அர்த்தத்தை அவங்கிட்டெச் சொன்னார். அப்பதாம் தெரிஞ்சது அவனுக்கு; நாம தேடிவந்த 'சம்பிரதாயவித்தை' தெரிஞ்ச பொண்ணு இவதாம்ன்னுட்டு.

அவரிட்டெ அந்த மந்திரிமகன் சொன்னாம். என்னோட கடைக்கு வாங்க, நா அந்த பின்நக்கி முன்நக்கிய வாங்கித் தர்ரேன்னு கூட்டிட்டுப் போயிதேன் வாங்கி அவரு கையைப் பிடிக்கச் சொல் ஊத்தினாம். தொன்னையில வாங்கின தேனை அவரோட இடது கையில கொடுத்து வீட்டுக்கு அனுப்பிவச்சாம். இடது கையில இருந்த தென்னையில உள்ள தேன் அப்பிடியே இருந்தது. வலது கையில் ஊத்துன தேன் புறங்கை வழியா வழிய ஆரம்பிச்சதும், வம்பாக் கீழெபோகுதேன்னுட்டு நக்க ஆரம்பிச்சப்பொ, முன்கைத் தேனும் வழி ஆரம்பிச்சது. ஆக ரெண்டு பக்கமும் நக்கி சுத்தப்படுத்தினார். இப்பொ விளங்கிப் போச்சி; இது முன் நக்கி பின் நக்கி தாம்ன்னுட்டு! சரிப்புத்தாங்கல அவருக்கு.



மகள் சொன்னா, அப்பா அவரெ நம்ம வீட்டுக்கு சாப்பிடக் கூப்பிடுங்க.

போயி, அப்பா அவனெக் கூட்டீட்டு வந்தார். வாசலுக்கு வந்து மகள் அவனை வாங்கன்னு சொன்னா அவளைப் பார்த்து மந்திரிமகன், இது வந்த வாசலா வராத வாசலான்னு விசாரிச்சாம். இது வராதவாசல்தான்ன்னு பதில் சொன்னாள்.

கால் கை கழுவ சொம்பில் தண்ணீர் கொண்டுவந்து வைத்தாள்.

இது தொட்ட சொம்பா தொடாத சொம்பான்னு கேட்டாம். தொடாத சொம்புன்னு பதில்வந்தது.

பாய்தந்து விரித்து உட்காரச் சொன்னாள். விரிச்ச பாயா விரிக்காத பாயான்னு கேட்டாம்.

விரிக்காத பாய்ன்னு பதில்ச் சொன்னா.

★ துட்டு – ஒரு துட்டு என்பது ஒரு பணத்தில் பத்தில் ஒரு பங்கு. நாலு சல்லி அல்லது நாலு தம்பிடி கொண்டது ஒரு துட்டு. பத்துத்துட்டு கொண்டது ஒரு பணம். (பணம் என்பதிலிருந்துதான் 'பணக்காரன்' வந்தது)

பாயில உக்காந்தவனுக்கு விருந்து படைச்சா திருப்தியா சாப்புட்டு முடிச்சாம். தாம்பூலம் கொடுக்கும் போது, யாரும் தரியாத தாம்பலம்ன்னு தந்தா.

எல்லாரும் கொஞ்சநேரம் உக்காந்து பேசிக்கிட்டிருந்தபோது, மந்திரி குமாரனைப் பாத்து அவ, நீங்க நாடுவிட்டு நாடு வந்த விசயம் என்னன்னு கேட்டா. அவன் நடந்த கதைய எல்லாம் விவரமாச் சொன்னாம். சரி; அப்பிடின்னா வாங்க உங்க நாட்டுக்குப் போவம் போயி, உங்க ராசாவுக்கு நம்ம சம்பிரதாயவித்தையக் காட்டுவோம்னா அவ.

ஊருவந்து சேந்தாக. ஊர் வாசல்ல இருக்கிற அம்மன் கோயிலுக்குப் பக்கத்துல இருக்கிற கால்வாய்க் கரையோரம் ராவோட ராவா ஒரு விஸ்தாரமான குடிசையைக் கட்டி அதுல அவமட்டும் தனியா இருந்துக்கிட்டா மறுநா காலையில முதஆளா ஊர்த்தலையாரி வந்தாம். யாரு இங்க குடிசை போட்டு இருக்காதுன்னு விசாரிச்சாம் வேறயாருமில்லை. தனியா ஒரு பொண்ணு அழகுப்பதுமையா இருக்கதை பார்த்தாம். ஓம்மேல ஆசைப்பட்டு வந்தேம்ன்னான்.. அப்பா இது பகலு; ராத்திரிக்குப் பாக்கலாம்ன்னா. அதுவரைக்கும் என்ன செய்வோம்ன்னு கேட்டாம். புறவாசப் பக்கம் ஒரு மூட்டைக் கேப்பையும் திரிகையும் இருக்கு; திரிச்சிக்கிட்டு இருன்னாள். சரின்னு போயி திரிக்க உக்காந்துட்டாம். அந்த குடிசை வீட்டுக்குப் பக்கத்துலேயே மந்திரி குமாரன் மற்றவர் கண்ணுக்குத் தெரியாம மறைஞ்சிருந்து காவல் காத்துக் கொண்டிருந்தாம்.

இளம் மத்தியான நேரத்துல அந்த ஊரு கர்ணம் வந்தார். யாரு இங்கெ தனியா குடியிருக்கதுன்னு விசாரிச்சார். அவளெப் பார்த்தாரோ யில்லியோ சொக்கிப் போயிட்டார். யேத்தா நீ இப்பிடி ஒரு பொண்ணு இருக்காது இத்தினிநா தெரியாமப் போச்சேன்னு வருத்தப்பட்டார். சரி; எப்பொ வச்சிக்கிடுவன்னு கேட்டார். ராத்திரிக்கு வாங்கன்னா இவ. அதுவரைக்கும் என்ன செய்யன்னு கேட்டார்.

வீட்டுக்குப் பெறத்தால புழுங்க நெல்லு ஒரு மூடை கிடக்கு. பக்கத்துலயே குந்தாணியும் உலக்கையும் இருக்கு. எடுத்துப்போட்டு குத்தி அரிசி ஆக்குங்க. ராத்திரிச் சாப்பாட்டுக்கு அந்த அரிசிதாம்ன்னா.

கர்ணம் போயி நெல்லுக் குத்த ஆரம்பிச்சிட்டார்.

சாயந்திரம் அரண்மனை வைத்தியர் வந்தார். அவரும் முன்னா சொன்னவங்க போலவேதாம் சொன்னார். ராசா வர்ற நேரமாப்பாத்து வந்திருக்கீரெவே; அவரு வந்துட்டுப் போகட்டும்ன்னா இவ.

அதுவரைக்கும் நா என்ன செய்யன்னு கேட்டார் வைத்தியரு.

இப்பிடி இந்த மூலையில உக்காரும்ன்னு சொல்லி அவரு தலையில சாணி உருண்டைய வச்சி, அது மேலெ உலைமூடி திபத்தைப் பொருத்தி வச்சிட்டா. அசையாம பொம்மைபோல் இருந்துக்கிட்டார் வைத்தியர் ராசாவும் வந்துட்டார்.

அவரும் முன்னால சொன்னவங்க போலதாம் அவளெப் பாத்துச் சொன்னார்.

இப்பவே இருக்கனுமன்னார்.

மகராசா இப்பிடி அவசரப்பட்டா எப்பிடி? நடுச்சாமத்துக்கு மேலதாம் எல்லாம்ன்னுட்டா: அப்பொ பொழுதெ எப்பிடிப் போக்கன்னு கேட்டார் ராசா.

ஒரு கதை சொல்லுங்கன்னு கேட்டா இவ. அய்யோ எனக்குக் கதை தெரியாதேன்னார். நீ வேனா ஒரு கதைசொல்லேம்ன்னு கேட்டார்.

சொல்லலாம்; அதுக்கு நாங் கேக்கத நீங்க தரணும். சம்மதமான ஒரு அருமையான கெட்டவார்த்தெக் கதை இருக்கு சொல்லுதேம்ன்னா.

சொல்லு சொல்லு அது எனக்கு ரொம்ப...ப் பிடிக்கும்ன்னார் ராசா. ரொம்ப ஆசையா.

அப்பா நாங் கேக்கதை தாரும்ன்னா

என்ன கேட்டாலும் தர்ரேன்னார்.

ஒங்க மீசை வேணும்ன்னா இவ.

ஒனக்கென்னதுக்கு மீசெ?

அதெப்பத்தி ஒங்களெக்கென்ன; சொன்னபடி தரமுடியுமா முடியாதா?

ராசா ரோசிச்சார். மீசைதானெ; போனாப் போகுது. திரும்பவும் மூளைச்சிருந்தானென்னு நினைச்சி, சரி எடுத்துக்கொன்னார்.

ராசா இடுப்புல கட்டியிருந்த வாளை உருவினா. ரெண்டு பக்கத்து மீசையவும் கொத்தா இறுக்கிப் படிச்சா கரகரன்னு அறுக்கும்போது கொஞ்சம் உதடும் சேந்து வந்துட்டது! அய்யோ அய்யோன்னு கூப்பாடு போட்டார். அவகையில வாள் இருக்கதும் அவ பார்வையும் ராசவுக்கு சரியாப்படல. இனி இங்க நிக்கப்படாதுன்னு ஓடப் பார்த்தார். அதுக்குள்ளெ தலைவாசக் கதவை மாறுவேசத்துலயிருந்த மந்திரிமகன் அடைச்சி வெளித்தாப்பா போட்டுட்டாம்.

பிறவாசக் கதவு வழியா ஓட்டம் பிடிச்சார். மீசை இல்லாம ரத்தம் வழியா ஓடுற ராசாவப் பாத்து சிரிச்சாங்க. தலையாரியும் கர்ணமும் உள்ளெவிளக்கு எரிஞ்சதே தவிர அரமனை வைத்தியரைக் காணம்! ராத்ரியே போயி அரண்மனையில அவள் ராசாவைப் பார்த்து சம்பிரதாயவித்தை தெரிஞ்ச பொண்ணு வேணும்ன்னு சொன்னீங்களாமே; வந்திருக்கேம்ன்னு ராசாவுக்கு எதுக்கெபோயி நின்னா. வேண்டாந் தாயி; எனக்கு வேண்டவே வேண்டாம்ன்னு ரெண்டு கையவும் தலைக்கு மேல ஒசத்திக்கும்புடு போட்டாராம் அவளெப் பாத்து.

மே உதட்டுப் புண்ணெல்லாம் ஆறி, கிழிஞ்ச உதட்டை மறைக்க மீசையெல்லாம் வளர்ந்தபிறகு ஒருநா மந்திரியக் கூப்பிட்டனுப்பினாரு ராசா.

மந்திரிக்கானா பயம்! ராசா சொல்லி எம்புட்டு நாளாகுது. சம்பிரதாய வித்தை தெரிஞ்ச பொண்ணு வேணும்ன்னு கேட்டு. என்ன ஆக்கினை வரப்போகுதோன்னு போயிநின்னார் மந்திரி.

''யப்பா, நமக்கு இந்த சம்பிரதாயவித்தை தெரிஞ்ச பொண்ணெல்லாம் வேணாம். சாதாப்பொண்ணே போதும்''ன்னுடார். அதேபோல, பக்கத்து ஊர் ராசவோட பொண்ணெப்பாத்து நிச்சயம் செய்தாங்க.

அதே முகூர்த்தத்துல, சம்பிரதாய வித்தெ தெரிஞ்ச மந்திரிமகனுக்கும் சம்பிரதாயவித்தை தெரிஞ்ச அந்தப் பொண்ணுக்கும் கலியாணம நடந்து இப்பவும் சவுகரியமா இருக்காளாம்'' என்று முடித்தார் கழனியூரன்.

❑❑❑

நல்வாழ்த்துகள்

**நாமக்கல் கூட்டுறவு நகர வங்கி லிமிடெட்**

எண் 19, தலைமை அலுவலகம், 22, 23, ரங்கர் சன்னதி தெரு, நாமக்கல், இராஜாஜி மாவட்டம் – 637 001.
தொலைபேசி எண் : 20157, 33511

தலைவர் : காந்திசெல்வன்
செயலாளர் : பழனியப்பன்

திரு. இசக்கிமுத்து
நிர்வாக இயக்குநர்

6. பூசின்





7. அனிபால் கராசி

*Best Compliments*

**STANDARD FIRE WORKS LTD.**

Sivakasi - 626 123.



நல்வாழ்த்துகள்

8. எட்வர்ட் மன்ச்சின்


## தியேட்டர் குரு

பைபாஸ் ரோடு, மதுரை - 625 016. போன் 601 638.

*எஸ். ஓ. ஆர். இராமசாமி*

நகர்மன்றத் தலைவர்,

உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.

# சிறுகதைக்கோர் புதுமைப்பித்தன்



தொ.மு.சி. ரகுநாதன்

இருபதாம் நூற்றாண்டின் தமிழ்க் கவிதைக்கு மகாகவி பாரதி *(1882-1921)* எவ்வாறு தன்னிகரில்லாத தலைமகனாகத் திகழ்ந்தாரோ, அவ்வாறே தமிழ்ச் சிறுகதைக்குத் தன்னிகரில்லாத் தலைமகனாகத் திகழ்ந்தவர் புதுமைப் பித்தன் *(1906-1948)*. பாரதி அமரராகி முக்கால் நூற்றாண்டுக் காலத்துக்கு மேலாகியும், தமிழில் எளிமையும், புதுமையும், வலிமையும் மிக்க நல்ல கவிதைகளை எழுதுவோருக்கும், எழுத விரும்புவோருக்கும் இன்றும் அவரது கவிதைகள் எவ்வாறு பால பாடமாகவும் மூல பாடமாகவும் விளங்கி வருகின்றனவோ, அவ்வாறே புதுமைப்பித்தன் புகழுடல் எய்திக் கிட்டத்தட்ட அரைநூற்றாண்டுக் காலம் கடந்தும் இன்றும் தமிழில் புதுமையும், வலிமையும், சமூக உணர்வும் மிக்க நல்ல சிறுகதைகளை எழுதுவோருக்கும், எழுத விரும்புவோருக்கும், புதுமைப் பித்தனின் கதைகள் பால பாடமாகவும், மூல பாடங்களாகவும் விளங்கி வருகின்றன. ஆம், கவிதை உலகில் தமது தனித்த முத்திரையைப் பதித்த பாரதியைப் போல், சிறுகதை உலகில் தமது தனித்த முத்திரையைப் பதித்துவிட்டுச்சென்ற சிறுகதை ஆசிரியர் புதுமைப்பித்தன்.

சொல்லப்போனால், பாரதி காலத்தில் ஏனைய புலவர்கள் உலாவென்றும், மடலென்றும், ஒருதுறைக் கோவையென்றும் பாடித் தமது புலமையைப் புலைப்பொருளாய்

---

ஓவியம்: **ஆதிமூலம்**

வீணடித்துக் கொண்டிருந்த அதே சமயம், பாரதி, நிலைகெட்ட மனிதரை நினைத்து எவ்வாறு நெஞ்சு பொறுக்காமல் பாடினாரோ, அதேபோல் புதுமைப் பித்தனின் சமகாலத் தமிழ்ச் சிறுகதை ஆசிரியர்கள் பலரும், காதல் கத்திரிக்காய் என்று கதை பண்ணிக்கொண்டு, அம்மாமி – அத்திம்பேர் – அத்தங்கார் கதைகளையும், அப்பளக் கச்சேரிக் கதைகளையும் எழுதிக் குவித்து வந்த காலத்தில், புதுமைப்பித்தன் ஒருவரே வாழ்க்கையில் பிறர் கண்ணெடுத்துப் பார்ப்பதற்குக் கூசிய சமுதாயச் சீர்கேடுகளையும், அவலங்களையும், சமூக முரண்பாடுகளையும் கீறிப் பிளந்து காட்டிச் சீறியெழும்பும் கேள்விக் குறிகளை எழுப்பிய கதைகள் பலவற்றையும் எழுதி வந்தார்.

அவரது கதைகளில் உருவம், உள்ளடக்கம், உத்தி, நடை எல்லாமே அவர் புனைந்து கொண்ட பெயருக்குப் பொருத்தமாகப் புதுமை வேட்கையில் பிறந்தவையாக விளங்கின. உண்மையில் அவர் தமது கதைகளுக்குத் தேர்ந்தெடுத்துக் கொண்ட உள்ளடக்கமே அவற்றின் உருவம், நடை, உத்தி யாவற்றையும் தீர்மானித்தது எனலாம். அவரே தமது சிறுகதைத் தொகுதியொன்றின் முன்னுரையில், "கருத்தின் வேகத்தையே பிரதானமாகக் கொண்டு, வார்த்தைகளை வெறும் தொடர்புச் சாதனமாக வைத்துத் தாவிச் செல்லும் நடை ஒன்றை அமைத்துக் கொண்டேன். இது நானாக எனக்கு வகுத்துக் கொண்ட பாதை. தமிழ்ப்பண்புக்கு முற்றிலும் புதிது" என்று எழுதியிருக்கிறார். அவரே குறிப்பிட்ட இந்தத் தாவித் தாவிச் செல்லும் தவளைப் பாய்ச்சல் நடை, அவரது ஆரம்பக் காலக் கதைகள் பலவற்றுக்கும் அநாயாசமாகக் கைகொடுத்து உதவியது.

ஓரிரு வார்த்தைகளைப் பிரயோகித்து, உள்ளத்தில் ஊசி குத்துகிற மாதிரி சில உண்மைகளை உணர்த்திவிடுவது புதுமைப்பித்தனுக்குக் கைவந்த கலையாக இருந்தது.

உதாரணமாக, வயிற்றுக் கொடுமையால் வாலிப உடலை விற்றுப் பிழைப்பவருக்கும்கூட, மானஉணர்ச்சி உண்டு என்ற கருத்தை வலியுறுத்தித் தாம் எழுதியுள்ள 'கவந்தனும் காமனும்' என்ற கதையில், தெருமுனையில் அவள் நின்ற நிலையை, "அலங்கோலமான ஸ்திதியில் ஒரு பெண். பதினாறு பதினேழு வயது இருக்கும். காலணா அகலக் குங்குமப் பொட்டு, மல்லிகைப் பூ, இன்னும் விளம்பரத்துக்குரிய சரக்குகள்" என்று வருணிக்கிற புதுமைப்பித்தன், "நீங்கள் போட்டிருக்கிறீர்களே பாப்ளின் ஷர்ட், உங்கள் ஷெல் பிரேம் கண்ணாடி! எல்லாம் அவர்கள் வயிற்றில் இருக்க வேண்டியதைத் திருடியதுதான். ரொம்ப ஜம்பமாக, நாசூக்காகக் கண்ணை மூட வேண்டாம். எல்லாம் அந்த வயிற்றுக்காகத்தான்" என்று அந்தப் பெண்ணின் இத்தகைய அவல நிலைக்குக் காரணமான சமுதாயச் சுரண்டலை நறுக்குத் தெறித்தாற்போல் சாடி விடுகிறார். இதேபோல், காய்ச்சலில் கிடக்கும் தன் கணவனுக்குக் கஞ்சி காய்ச்சி ஊற்றுவதற்காகத் தன் கற்பை முக்கால் ரூபாய்க்கு விற்க நேர்ந்த அம்மாளுவின் நிலையைக் கூறும் 'பொன்னகரம்' என்ற சேரி மக்களைப் பற்றிய கதையில், அங்குள்ளோர் "எல்லோரும் ஏகதேசக் குடியர்கள்தான். 'டல் சீச'னில் பசியை மறக்க வேறு வழி? பசி ஐயா பசி! 'பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்' என்று ஒய்யாரமாக, உடம்பில் பிடிக்காமல் பாடுகிறீரே, அங்கு நீர் ஒருநாள் இருந்தால், உமக்கு அடி வயிற்றிலிருந்து வரும் அதன் அர்த்தம்!" என்று உல்லாசபுரியாருக்கு நெஞ்சில் உறைக்கிற மாதிரிச் சாட்டையடி கொடுத்துவிட்டுக் கதையைத் தொடர்கிறார்.

இவ்வாறு ஓரிரு வார்த்தைகளைப் பிரயோகித்து, உள்ளத்தில் ஊசி குத்துகிற மாதிரி சில உண்மைகளை உணர்த்தி விடுவது புதுமைப் பித்தனுக்குக் கைவந்த கலையாக இருந்தது. உதாரணமாக, பாலிய மணத்தின் கொடுமையைக் கருவாகக் கொண்ட 'ஆண்சிங்கம்' என்ற கதையை, "சீனிவாசனுக்குக் கலியாணமானது நினைவில் இல்லை. ஏனெனில் அது பெப்பர்மின்ட் கலியாணம்" என்று நெஞ்சில் தைக்கிற மாதிரிக் கூறிவிட்டுத்தான் கதையை மேலும் தொடர்கிறார். இதேபோல், இலங்கைத் தேயிலைத் தோட்டத்தில் வெள்ளைக்கார முதலாளிகளின் சுரண்டலுக்கு ஆளாவதோடு, அவர்களிடம் தமது, கற்பையும் பறிகொடுக்க நேர்ந்த அபலைப் பெண்களின் வாழ்க்கையைப் பற்றிக் கூறும் 'துன்பக்கேணி' என்ற கதையில், வெள்ளை முதலாளிகளுக்குத் தேயிலைத் தோட்டக்கூலி பெண்களை 'ஏற்பாடு' செய்து கொடுக்கும் ஸ்டோர் மானேஜரைப் பற்றிக் கூற வரும்போது, அவர் "கண்ணப்ப நாயனார் ரகத்தைச் சேர்ந்த பேர்வழி. தனது இஷ்ட தெய்வத்துக்குத் தான் ருசித்துப் பார்த்துத்தான் சமர்ப்பிப்பார்" என்று உவமித்துக்கூறி, அந்தப் பெண்களின் கற்பு பலராலும் சூறையாடப் படுவதைப் புதுமைப்பித்தன் உணர்த்தி விடுகிறார். இதுபோலவே 'ஒரு நாள் கழிந்தது' என்ற கதையில், "சென்னையில் ஒட்டுக் குடித்தனம் என்பது ஒரு ரசமான விஷயம். வீட்டுச் சொந்தக்காரன் குடியிருக்க வருகிறவர்கள் எல்லோரும் திருக்கழுக்குன்றத்துக் கழுகு என்று நினைத்துக் கொள்வானோ என்னவோ?" என்று எழுதுகிறார் புதுமைப்பித்தன். எங்கிருந்து வந்தது, பிறகு எங்கே சென்றது என்ற சுவடே தெரியாமல், உணவு நேரத்துக்கு மட்டும் வந்து தலைகாட்டி விட்டு மறையும் திருக்கழுக்குன்றத்துக் கழுகை அறிந்தவர்கள், இந்த உவமானத்தின் மூலம், புதுமைப்பித்தன் ஒட்டுக் குடித்தனத்தில் அடங்கியுள்ள உபத்திரவங்களையெல்லாம் ஒரே வரியில் எவ்வாறு உணர்த்தி விடுகிறார் என்பதைச் சுலபமாக உணரலாம்.

புதுமைப்பித்தன் கதைகள் எல்லாமே இத்தகைய தவளைப் பாய்ச்சல் நடையிலேயே இருந்தன என்று சொல்ல முடியாது. கவிதையின் உள்ளடக்கத்துக்கும் உணர்ச்சிக்கும் ஏற்ப எவ்வாறு தாள லயமும் சொல்லாட்சியும் மாறுகின்றனவோ, அதேபோல் புதுமைப்பித்தன் கதைகளிலும், கதையின் கருப் பொருளுக்கும் காலத்துக்கும் களத்துக்கு ஏற்ப நடையும் மாறும். சிலர் சமூகக் கதை எழுதினாலும், சரித்திரக் கதை எழுதினாலும், தம்புராவைப் போல ஒரே சுருதியில் ஒரே மாதிரியான நடையில் எழுதிச்செல்வர். ஆனால் புதுமைப்பித்தன் கதைகளில் அவரது வசன நடை ஒரே சுருதியில் பேசிக் கொண்டிராது. கதையின் கரு, காலம், பாத்திரம், களம் ஆகியவற்றுக்கேற்ப அவரது நடையும் சுதியும் கதியும் மாறிப்பேசும். எடுத்துக்காட்டாக,

திருநெல்வேலி வட்டார வாழ்க்கை பற்றிய கதையான 'நினைவுப்பாதை' என்ற கதையில், 'மேலச்சேவல் வைரவன் பிள்ளை' என்ற பாலசுப்பிரமணியப் பிள்ளையின் மனைவி வள்ளியம்மை ஆச்சி நேற்றுத்தான் இறந்துபோனாள்... இன்று காடேற்று, நீண்ட நாள் வியாதி ஒன்றும் இல்லை. போன சனிக்கிழமை புழக்கடையில் கால் வழுக்கி விழுந்தாள். இடுப்பிலும் விலாவிலும் ஊமையடி அதில் படுத்தவள்தான், எழுந்திருக்கவே இல்லை" என்று தான் கதையே தொடங்கும். தொடர்ந்து, "போன மாசமே சுப்புப்பிள்ளை அண்ணாச்சி சொல்லலே.. ஆச்சிக்கு ஒரு கண்டமிருக்குன்னு. நானும் அன்னைக்கு விளையைப் பாத்துட்டு வரப்போ பேசிக்கிட்டுத் தானே வந்தேன். வெள்ளிக்கிழமை கழிஞ்சாத்தான்னார். காலன் வாரதுக்குக் கணக்கின்னும் நேரமின்னும் உண்டுமா?" என்று சுந்தரம் பிள்ளை வட்டார வழக்கில் பேசுவதும் நமக்குக் கேட்கும்.

இதேபோல் அவர் இருபதாம் நூற்றாண்டின் வட்டார வாழ்க்கையை விட்டுவிட்டு, மாணிக்கவாசகர் காலத்துக்குச் சென்று, பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படி வாங்கிய பித்தனைப் பற்றிய 'அன்றிரவு' என்ற கதையை எழுத முனையும்போதோ, அவரது நடை காவிய கம்பீரத்தையும் கனத்தையும் பெற்று விடுகிறது. உதாரணமாக, சொக்கேசனின் வருகையை எதிர்பார்த்து, அங்கயற் கண்ணி ஊஞ்சாலாடிய காட்சியைப் புதுமைப்பித்தன் பின்வருமாறு வருணிக்கத் தொடங்கிவிடுகிறார். ''விளக்கமற்ற வெளிச்சத்திலே, புலன்விளக்கு எட்டாத ஒளிப் பிரவாகத்திலே, மணியூசல் விசை யோடு ஆடியது. அளகச்சுருள், புலன் உணர்வு நுகரும் இருட்டுடன் இருட்டாகப் புரள, கால் விசைத்து, உந்திச்சுழி குழிந்து, அலைபோல் உகள, கொங்கை பூரித்து விம்மிக் குலுங்க, அன்னை மணியூசல் ஆடினாள். ஆலவாய் ஈசன் அழகன் சொக்கன் வருகை நோக்கி மணியூசல் ஆடினாள். அங்கயற்கண்ணியின் அதரத்திலே கீற்றோடிய புன்சிரிப்பு; மருங்கிலே துவட்சி, கண்களிலே விளையாட்டு; நெஞ்சிலே நிறைவு. செல்வி மணியூசல் ஆடினாள். அண்ட பகிரண்டங்களையும் சகல சராசர பேதங்களையும் தன்னுள் அடக்கும் ஆலிலை வரிவிட்டுப் புரண்டு விளையாடியது''

> **உத்திகள் என்று பார்த்தால் அவை அவர் எடுத்துக்கொண்ட கதைப் பொருளுக்கும் வலியுறுத்த விரும்பும் கருத்துக்கும் ஏற்பவே வடிவெடுத்தன.**

இதேபோல் புதுமைப்பித்தன் கையாள்கின்ற உவமையும் உருவகமும்கூடப் புதிய அனுபவத்தை வழங்குபவையாக விளங்கும். 'மனித எந்திரமாக' வாழும் வர்த்தகக் குமாஸ்தா மீனாட்சி சுந்தரம் பிள்ளையை அவர், "பொறுப்பு, ஏமாற்று, சுயமரியாதை, நம்பிக்கை என்று நியதியற்றுச் சுழலும் ஒரு கிரக மண்டலத்தையே தூக்கிச் சுமக்கும் பிறவி'யாக இனம் காட்டுவார். "தமிழ்க் கவிஞர்களின் கனவுகள் எல்லாம் திரண்டு வடிவெடுத்தது போன்றது அவள் தேக அமைப்பு'' என்று அழகியொருத்தியை அவர் அடையாளம் காட்டுவார் "எங்கெங்கோ வாரியிறைத்த பிரமதேவனின் நம்பிக்கைகள் போல, வாழ்க்கை எரியிட்ட கனல்கள் போன்ற" என்று நட்சத்திரங்களை அவர் வருணிப்பார். அந்திமாலையின் செக்கர் மயக்கத்தை, "அந்தித் தேவனின் சோக நாடகம், அந்தச் சாயங்காலம் சீதையின் சோகத்தையும் கதேயின் பாஸ்டையுமே நினைவுக்குக் கொண்டு வரும்" என்று புதுமையாகக் குறிப்பிடுவார்.

உத்திகள் என்று பார்த்தால் புதுமைப்பித்தன் தமது கதைகளில் கையாண்ட உத்திகள் பலப்பல. அவை அவர் எடுத்துக்கொண்ட கதைப்பொருளுக்கும் வலியுறுத்த விரும்பும் கருத்துக்கும் ஏற்பவே வடிவெடுத்தன. கதையை, இப்படித்தான் தொடங்க வேண்டும், இப்படித்தான் முடிக்க வேண்டும் என்ற எந்த சம்பிரதாயமான தடத்தையும் அவர் பின்பற்றியதில்லை. யானை போனால் அது போன வழிதான் அதற்குத்தடம் என்பதுபோலவே அவரது உத்தியும் இருந்தது. அவரே தமது கட்டுரையொன்றில், "சிறுகதைக்கும், தனிப்பாட்டு என்ற 'லிரிக்'குக்கும் உள்ள வித்தியாசம் ஒன்றுதான். வரிக்கு ரூபம் அவசியம். சிறுகதையில் ரூபம் கதை எழுதுவோனின் மனோதர்மத்தைப் பொறுத்தது'' என்று கூறுகிறார். எடுத்துக்காட்டாக, ஒரு மரணத்தைக் கருப்பொருளாகக் கொள்ளும் கதாசிரியர்கள் பலரும், அந்த மரணம் நிகழ்வதையே முத்தாய்ப்பாக்கி, அதனைக் கதையின் இறுதியில்தான் கூறுவார்கள். ஆனால் புதுமைப்பித்தன் தமது 'செல்லம்மாள்' என்ற கதையைக் கூறும்போது, 'செல்லம்மாளின் மூச்சும் அடங்கிற்று'' என்றுதான் கதையைத் தொடங்குகிறார். கதையின் முடிவிலோ இறந்துபோன செல்லம்மாளை நமது இதயத்தில் வாழவைத்து விடுகிறார்.

1943இல் திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் 'புதுமைப்பித்தன் கதைகள்' என்ற தலைப்பிலேயே அவர் உரையாற்றியபோது, அவரே இவ்வாறு குறிப்பிட்டார்: "இவ்வாறுதான் கதை எழுதவேண்டும் என்று சிலர் சொல்கிறார்கள். அவ்வாறு பாத்தி கட்டிக் கொண்டு கதை எழுத என்னால் முடியாது. சில எழுத்தாளர்களுக்கு நிலவும் தென்றலும் வராவிட்டால் கதையே வராது. ஆனால் எனது செண்பகராமன் பிள்ளை இருட்டிலேதான் புறப்பட்டுப் போனார். இருட்டிலேயே திரும்பி வந்தார். "சம்சார பந்தத்தில் சலிப்பேற்பட்டு சன்னியாசியாகப் புறப்பட்டுச்சென்ற செண்பகராமன் பிள்ளை மீண்டும் சம்சாரபந்தத்துக்கே திரும்பி வர நேர்ந்ததை விவரிக்கும் 'சித்தி' என்ற தமது கதையைக் கருத்தில் கொண்டே புதுமைப்பித்தன் இவ்வாறு கூறினார்.

பாரதியைப்போல புதுமைப்பித்தனும் அற்பாயுசில் மறைந்தவர்தான். அவரது இலக்கிய வாழ்க்கைக்காலமும் இருபது ஆண்டுகளுக்குக் குறைந்ததுதான். இந்தக் குறுகிய காலத்துக்குள் அவர் மொத்தத்தில் ஏறத்தாழ நூறு கதைகளே எழுதியிருக்கிறார். எனினும் அவற்றில் பலவும் நூறாண்டுகாலம் மங்காது வாழும் தெம்பும் திறனும் படைத்தவை. ஆம் தமிழ்ச் சிறுகதை வரலாற்றிலும் வளர்ச்சியிலும் புதுமைப்பித்தன் ஒரு மைல்கல், ஒரு திருப்புமுனை; ஒரு சகாப்தம், அதில் சந்தேகமில்லை.

□□□



நல்வாழ்த்துகள்

9. வெர்மீர்

பிரிண்ட் சர்வ்

சேலம் மாவட்ட அச்சக சேவை தொழிற் கூட்டுறவு சங்கம்

20, வரதப்பன் தெரு, கோட்டை, சேலம் - 1.



10. ஆன்ட்ரி டைனாய்ன்


நல்வாழ்த்துகள்

**வி.எஸ். குமரகுரு,** பி.எல்.,

தேவஸ்தான மேலாளர்,

சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம்,

சிவகங்கை - 630 561.

பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம்



11. எ. அல்போன்சா அருள்தாஸ்


நல்வாழ்த்துகள்

**நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் லிமிடெட் நெ - 708**

செயிலிங் ஹவுஸ், உதகமண்டலம் - 643 001. போன்: 42339, 43975. 43028

| | | |
|---|---|---|
| *என்.எஸ். ஆண்டி* | *கே.ட்டி. ராஜன்* | *பி.ஜோதி* |
| செயலர் | தலைவர் | மேலாண்மை இயக்குநர் |

**B.M. SILKS**
KANCHIPURAM SILK SAREES MANUFACTURES
249, Gandhi Road, Kanchipuram - 631 501. Phone : 22970, 23953

12. ஜி. ராமன்



# எதிர்முனை



ஓவியம்: **மருது**

> “அப்பா பணத்தில வாழற அற்பன் இல்ல நான். எனக்கு ரெண்டு கை, காலு இருக்கு...”

கணியூர் உயர்நிலைப் பள்ளியின் உடற்பயிற்சி ஆசிரியர் வாசுதேவன். சுமார் நாற்பத்தைந்து வயது. ஆனால் தலையின் முன் மயிரெல்லாம் கொட்டி வழுக்கை விழுந்துவிட்டது. பின் மயிரை இழுத்து சீவி வழுக்கையை மறைத்துக் கொண்டு இருந்தார். திருகிவிட்ட மீசை. அப்புறம் சிகப்பேறிய கண்கள். எப்பொழுதும் கோபத்தில் இருப்பது மாதிரியே சிடுசிடுவென்று இருப்பார். பேச்சிலும் அந்த சிடுசிடுப்புத் தெரியும். இருந்தாலும் திறமையான ஆசிரியர். மாணவர்களுக்கு அவரைப் பிடித்தது. அவர் வந்த பிறகுதான் கணியூர் உயர்நிலைப் பள்ளி வாலிபால், உயரத்தாண்டுதல், இருநூறு மீட்டர் ஓட்டம் ஆகியவற்றில் மாவட்டத்திலேயே முதலாவதாக வந்து மூன்று தங்கப்பதக்கத்தைப் பெற்றது.

பரிசு கொடுக்க வந்த மாவட்ட ஆட்சியாளர் மூன்று தங்கப் பதக்கங்களை கொத்தாக வென்ற கணியூர் உயர் நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பொன். தனசேகரனை மேடைக்கு அழைத்து வெகுவாகப் பாராட்டினார். அவர் பேச்சினூடே இக்காலத்தில் படிப்பு என்பது வெறும் புத்தகப் படிப்பு மட்டுமல்ல, விளையாட்டும் ஒரு படிப்புதான். அதனை நன்கு புரிந்துகொண்டு கணியூர் பள்ளி செயல்படுவது நமக்கெல்லாம் பெருமை தரக்கூடியது. இன்று'

## சா. கந்தசாமி

மாவட்ட அளவில் முதன்மை பெற்றுள்ள பள்ளி நாளை மாநில அளவிலும் அடுத்த நாள் இந்திய அளவிலும், பின்னர் ஒலிம்பிக் அளவிலும் போட்டியிட்டு தங்கப் பதக்கம் பெறவேண்டும் என்று வாழ்த்தினார்.

மாவட்ட ஆட்சியாளர் பேச்சு தலைமை-யாசிரியருக்கு அவ்வளவாக மகிழ்ச்சியளிக்க-வில்லை. விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்கள் கலந்துகொண்டு தங்கப் பதக்கம் பெற்றதில் அவர் பங்கு ஒன்றுமில்லை. இன்னும் சொல்லப்போனால் விளையாட்டுக்கு அவர் நேர் எதிர். படிப்பு என்றால் புத்தகங்களைப் படித்து நிறைய மதிப்பெண் பெறவேண்டும் என்ற கொள்கை கொண்டவர். விளையாட்டிற்கான நேரத்தை எல்லாம் சிறப்பு வகுப்புக்கென்று நிறைய பிடுங்கிக் கொண்டிருந்தார். அதற்காகத் தலைமையாசிரியர் அறைக்குள் வந்த வாசுதேவன் கத்தினார். கத்தினார் என்றால் நிஜமாகவே கத்தினார். அவர் போட்ட கூச்சல் பள்ளிக்கூடம் முழுவதும் கேட்டது. ஆசிரியர்-களும் மாணவர்களும் வகுப்பைவிட்டு வெளியில் வந்து நின்று வேடிக்கைப் பார்த்தார்கள். தலைமையாசிரியர் அறையில் இப்படியொரு காட்சியைப் பார்ப்பது இதுதான் முதன்முறை. எனவே என்ன செய்வது என்று தெரியாமல் ஒவ்வொருவரும் திகைத்துப் போய் நின்று கொண்டிருந்தார்கள். கோபத்திலும் வருத்தத்-திலும் தலைமை ஆசிரியருக்கு பேச்சே வரவில்லை.

தமிழ் ஆசிரியர் பாரிவள்ளல் அவசர அவசரமாக தலைமையாசிரியர் அறைக்குள் நுழைந்தார். அவரைப் பார்த்ததும் ஓரடி முன்னே எடுத்து வைத்து, "பாருங்க சார், இவர் தலைமையாசிரியர்ன்னா மாணவர்களின் விளையாட்டு நேரத்தைத் திருட ஒன்னும் உரிமை இல்ல சார்" என்று கத்தினார்.

"என்ன சார் இப்படியெல்லாம் பேசுறீங்க..." என்று பாரிவள்ளல் அவர் கையைப் பிடித்தார்.

"ரொம்ப நாளா இப்படித்தான் சார் இவர் திருடிக்கிட்டே இருக்கார். இதை நான் விடப்போறது இல்ல. முதலமைச்சர் வரைக்கும் கொண்டுக்கிட்டுப் போய் ரெண்டுல ஒண்ணு பார்த்துடப்போறேன்."

"எல்லாம் பார்க்கலாம். நீங்க வாங்க சார்" என்று பாரிவள்ளல் அவர் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வெளியில் வந்தார்.

"எதுக்கு சார், வீணா சண்டை" என்றார் கணக்கு ஆசிரியர் சிவானந்தம்.

"நீங்க வாய மூடிக்கிட்டு சும்மா இருங்க. என் நேரத்தைத் திருடினா. என்னால சும்மா இருக்க முடியாது" என்று பெரிதாகக் கத்தினார். விளையாட்டுக்கான நேரத்தில் பெரும்பாலும் கணக்குதான் நடந்தது. அதனால் கணக்கு ஆசிரியர் மேல் அவருக்கு கோபம். கோபத்தோடு திருட்டு என்ற வார்த்தையை சார் பயன்படுத்தியது தலைமை யாசிரியரை மட்டுமல்ல. தமிழ் ஆசிரியர் பாரிவள்ளலைக் கூட அதிர்ச்சியடைய வைத்தது. ஆனால் அவரை என்ன செய்வது என்று ஒருவருக்கும் தெரிய-வில்லை. யாருக்கும் அவர் கட்டுப்படுவதில்லை. எந்தப் பள்ளிக்கூடத்துக்கு போட்டாலும் சண்டை. இரண்டு வருஷம்கூட சேர்ந்தாற் போல அவர் ஒரு பள்ளியிலும் இருந்ததில்லை.

மாவட்ட கல்வி அதிகாரி வாசுதேவனை தன் அலுவலகத்துக்கு வரவழைத்து, 'மூன்று வருடத்திற்கு கணியூர் பள்ளியில் சண்டை போட்டுக் கொள்ளாது இருக்கவேண்டும். தலைமையாசிரியர் ரொம்ப நல்ல மனிதர்' என்று சொன்னார்.

"நான் என்ன சண்டைக்காரனா? எல்லா வகுப்பு மாதிரியும் விளையாட்டும் ஒரு வகுப்பு-தான். அதைப் புடுங்கினா எப்படி சார் விடுறது? என் வகுப்பைப் புடுங்கினா நான் சும்மா இருக்க மாட்டேன் சார்."

அவர் பதிலொன்றும் சொல்லவில்லை. ஆனால் உலகம் தெரியாத ஆளாகவும், வாழத் தெரியாத மனிதராகவும் இருக்கிறாரே என்று நினைத்துக் கொண்டார். பள்ளிக்கூடத்தில் படிப்பு என்றால் மார்க்குதான். மார்க்கு இல்லாத பாடமெல்லாம் மதிப்பு இல்லாததுதான். மதிப்பு இல்லாத வேலையில் இருந்துகொண்டு மதிப்பு வேண்டுமென்றால் முடியுமா?

வாசுதேவனுக்கு இதையெல்லாம் புரியவைக்க முடியல. அவருக்குப் படவில்லை. அதோடு அவருக்கு வேறு வேலைகளும் இருந்தன. எனவே சிரித்தபடி வெளியில் அனுப்பி வைத்தார். பள்ளிக்கூடத்தில் மட்டுந்தான் அவர் அப்படி என்பது இல்லை. வீட்டில் அதற்கு மேல். தம்பிக்கும் அவருக்கும் பெரிய சண்டை. பேச்சு வார்த்தை இல்லை. அப்பா செத்துப்-போன பிறகு சொத்தைப் பிரிப்பதில் சண்டை வந்தது. சொத்துப்பிரிவினை நடந்து கொண்டி-ருந்தபோது, ரொக்கப் பணத்திற்கு சரியாகக் கணக்குக் காட்டவில்லை என்று கத்தினார். தம்பி இதுதான் என்று கறாராகச் சொன்னான். அப்படி என்றால் எல்லா சொத்தையும் நீயே வைத்துக்கொள் என்று எழுந்து வந்துவிட்டார்.

நான்கு மாதங்கள் கழித்து தம்பி ஆள்விட்டு அனுப்பினான். அவர் போகவில்லை. பெரிய மாமா நேரில் வந்தார். நண்டு, சுறும்பு மீன் விருந்து சாப்பிட்டுவிட்டு கையைத் துடைத்துக்கொண்டு பெரிய மாமா, "தம்பி என்னமோ டில்லியில வீடு வாங்கப் போறானாம். அதுக்குப் பணம் குறையுதாம். பங்கப் பிரிச்சிக்கிட்டீங்கன்னா, அவனுக்கு வசதியா இருக்கும்" என்றார்.

"பெரிய மாமா, நீங்களா இருக்கறதால நான் கொஞ்சம் தனிஞ்சு பேசுறேன். எப்ப என்ன ஏமாத்தப் பார்த்தானோ, அப்ப அவன் எனக்கு தம்பி இல்ல; நான் அவனுக்கு அண்ணன் இல்ல. எல்லாத்தையும் அவனே எடுத்துக்கிட்டு டில்லியில வீடு வாங்கிக்கிட்டு ராஜா மாதிரி இருக்கட்டும்"

"இது எல்லாம் சரியா?"

"ஏன் சரி இல்ல. என்ன ஏமாத்தப் பார்த்தவன், எல்லாத்தையும் எடுத்துக்கிட்டுப் போய் நல்லா இருக்கட்டும்"

"இப்படி வயித்து எரிச்சலோட பேசக் கூடாது"

"எவனுக்கு வயித்து எரிச்ச" என்று பெரிய மாமா கன்னத்தில் பளார் என்று அறைந்தார். மாமா கன்னத்தைத் தடவி விட்டுக் கொண்டு திரும்பிப் பார்த்தார். சப்தம் கேட்டு அவர் மனைவி ராணி உள்ளே இருந்து ஓடிவந்தாள்.



"உனக்கு ரெண்டு காசு கிடைச்சி, நீ நல்லா இருக்கணுமென்னு ஓடியாந்தேன் பாரு, அதுக்கு கைநீட்டி என்ன அடிக்கற இல்ல; அந்தக் கை விளங்காம போயிடும்" என்றபடி வீட்டு வாசல்படி இறங்கினார்.

"என்ன சொன்ன" முன்னே பாய்ந்தார்.

ராணி அவர் கையைப் பிடித்து பின்னால் இழுத்தாள். அவளை உதறிவிட்டுவிட்டு சோபாவில் உட்கார்ந்து கால்மேல் கால் போட்டுக் கொண்டு வெளியில் போகும் பெரிய மாமாவையே பார்த்தபடி இருந்தார்.

"எல்லாரும் ஒன்னா கூட்டுச் சேர்ந்துக் கிட்டு என்ன ஏமாத்தப் பார்க்கிறானுவோ... பணம் என்னடா பணம்... பெரிய இது... நீங்களே எடுத்துக்கிட்டு பெரிசா இருங்கடா" என்று கத்தினார்.

ராணி அவரையே பார்த்தபடி நின்று கொண்டு இருந்தாள். அவர் தலை நிமிர்ந்து பார்த்தார்.

"அது உங்க பணம்தான். எதுக்கு நீங்க வேணாமின்னு சொல்லுறீங்க?"

அவர் தலையசைத்தார்.

"அந்த பணம் வந்தா கஷ்டமெல்லாம் விடியும் இல்ல, சின்னதா ஒரு வீடு கட்டலாம்; பையனுக்கு ஒரு சைக்கிள் வாங்கிக் கொடுக்கலாம்."

"அடி செருப்பால" வாசுதேவன் சோபாவில் இருந்து துள்ளியெழுந்தார். "அந்தப் பணத்துக்கு பெரிய திட்டம் எல்லாம் போட்டு வச்சி இருக்கிறீயா? எப்ப என்ன ஏமாத்தப் பார்த்தானோ, அப்பவே அவன் என் தம்பி இல்ல. அப்பா பணத்தில வாழற அற்பன் இல்ல நான். எனக்கு ரெண்டு கை, காலு இருக்கு... ஜம்முன்னு உழைச்சி சம்பாரிச்சி மாளிகை காட்டுவேன்... பையனுக்கு சைக்கிள் என்ன மோட்டார் சைக்கிளே வாங்கிக் கொடுப்பேன்... இன்ன அந்த பணத்தப் பத்தி பேசின உள்ள ரெண்டா வெட்டிப் போட்டுடுவேன்..."

ராணி தலைநிமிர்ந்து ஒரு பார்வை பார்த்துவிட்டு உள்ளே சென்றாள்.

ஒருநாள் மாலைப்பொழுது வாசுதேவன் நாற்காலியில் உட்கார்ந்து கால்களை ஆட்டிக் கொண்டிருந்தார். சாதாரணமாக அவர் மாலைப்பொழுதில் வீட்டிற்கு வந்து உட்கார்கிற ஆள் இல்லை. பள்ளிக்கூடம் விட்டால் விளை-யாட்டு மைதானம். அப்புறம் சிநேகிதர்கள். எட்டரை ஒன்பது மணிக்குத்தான் மோட்டார் சைக்கிளை வாசலில் கொண்டு வந்து நிறுத்து வார். எதற்கு இந்த நேரத்தில் வந்திருக்கிறார் என்பதைத் தீர்மானிக்க முடியாதவளாக ராணி தேனீரை முன்னே நீட்டினாள். மேசை மீது வைக்கும்படி தலையை ஆட்டினார். மேசை மீது கப்பை வைத்துவிட்டு உள்ளே சென்றாள். அவர் வாசலைப் பார்த்தபடி தேனீரை எடுத்துக் குடிக்க ஆரம்பித்தார்.

அவர் பையன் சுந்தரராசன் ஒன்பதாவது படிக்கிறவன் வீட்டுக்குள் நுழைந்தான். அப்பா-வைப் பார்த்ததும் கொஞ்சம் பயந்துபோனான். நின்று லேசாகத் தலையை நிமிர்த்தி அப்பாவை ஒரு பார்வை பார்த்தான்.

"இப்பதான் பள்ளிக்கூடம் விட்டு வர்றீயா?"

"கணக்கு சார் கிளாஸ் எடுத்தார் அப்பா"

"பைய வச்சிட்டு சீக்கிரம் வா"

அவன் அவசர அவசரமாக உள்ளே சென்றான். போன வாரம் அவன் இலுப்பைத் தோப்பில் சைக்கிள் கற்றுக் கொண்டிருந்தபோது அந்தப் பக்கமாக வந்தவர் மோட்டார் சைக்கிளை அரச மரத்தடியில் நிறுத்திக்கொண்டு ஒரு பார்வை பார்த்தார். அப்பாவைப் பார்த்ததும் பயத்தில் இடுப்பை நெளித்து நெளித்துக்

கொண்டு சைக்கிள் ஓட்டிக் கொண்டுபோனான். அவர் அவனையே பார்த்தபடி நின்று கொண்டி-ருந்தார். இரண்டாவது சுற்றுச் சுற்றிக்கொண்டு அரச மரம் பக்கமாக வந்தவன் அப்பாவைப் பார்த்துவிட்டு அவசர அவசரமாகக் கீழே இறங்கினான்.

“இங்க வா” என்று கையைக் காட்டி கூப்பிட்டார். பயத்தோடு முன்னே சென்றான்.

“எதுக்குப் பயப்படுற. பயம் இல்லாம ஓட்டு”

அவன் தயங்கியபடியே நின்று கொண்டி-ருந்தான். அவர், சைக்கிளை இடது கையால் பிடித்துக் கொண்டார். மேலே ஏறி உட்கார்ந்-தான். சைக்கிளைத் தள்ளிவிட்டார். உடம்பை நெளித்து நெளித்து பெடலை மிதித்தான். முன்னே ஓடிப்போய் இடுப்பில் ஒரு அடி கொடுத்தார். அடி என்றால் லேசான அடியில்லை. உயிர் இருக்கும் வரையில் நினைவில் இருக்கும் அடி. அவன் கொஞ்சம் தடுமாறினாலும் சமாளித்துக் கொண்டு சைக்கிளை நேராக ஓட்டிக் கொண்டு சென்றான். மோட்டார் சைக்கிளில் சாய்ந்தபடி அவன் மரங்களுக்கு இடையில் சைக்கிளில் புகுந்து புகுந்து போவதையே பார்த்தபடி இருந்தார்.

உள்ளே சென்ற சுந்தரராசன் புத்தகப் பையை ஆணியில் மாட்டிவிட்டு கொல்லைப் பக்கம் சென்றான். அம்மா அரிசி புடைத்துக்கொண்டு இருந்தாள்.

“அம்மா. அப்பா கூப்பிடுறாங்க. வெளியில் போயிட்டு வர்றேன்” என்றான்.

சாதாரணமாக வாசுதேவன் பையனையோ மனைவியையோ மோட்டார் சைக்கிளில் கூட்டிக் கொண்டு போற ஆள் இல்லை. பையனுக்கும் அப்பாவுக்கும் ஒரே பள்ளிக்கூடம் என்றாலும், மூன்று கிலோ மீட்டர் தினமும் நடந்துதான் போகிறான். அது மட்டுமல்ல, வெளியில் போனாலும் சொல்லிக்கொண்டு போகிற ஆள் கூடயில்லை.

“கல்யாணமாகி வந்த புதிதில் ராணி, “நீங்க வெளியில போறத ஏங்கிட்ட சொல்லிட்டுப் போனாதானே யாராவது வந்து கேட்டால் சொல்ல முடியும்” என்றாள்.

“இன்னமே நான் போற ஒவ்வொரு இடத்தையும் உங்கிட்ட சொல்லி பர்மிஷன் வாங்கிக்கிட்டுப் போறேன்..” என்றார்.

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. தலை நிமிர்ந்து பார்த்தாள்.

“இதோ பார். நான் ஆம்பள. இஷ்டத்துக்குப் போவேன். இஷ்டத்துக்கு வருவேன். அங்க போறது இங்க போறது எல்லாத்தையும் உங்கிட்ட சொல்லிக்கிட்டுப் போகணுமென்னு ஆசைப்பட்டுக்கிட்டு பல்ல இளிச்சிக்கிட்டு பின்னால வந்து நிக்காத”

அதில் இருந்து ராணி அவர் போவதைப் பற்றியோ வருவதைப் பற்றியோ ஒன்றும் கேட்பதில்லை. அவரைத் தேடிக்கொண்டு யாராவது வந்தால், ‘பள்ளிக்கூடம் போயிருக்கிறாங்க’ என்று மட்டும் சொல்லிக் கொண்டிருந்தாள்.

வாசுதேவன் வாசலில் நின்ற தன் மோட்டார் சைக்கிளை உதைத்துக் கிளப்பினார். முதல் உதையிலேயே வண்டி கிளம்பிவிட்டது. ஆக்ஸிலேட்டரை ஒருமுறை திருகி உட்கார்ந்தார். இவன் அப்பாவையே பார்த்தபடி இருந்தான். பின்னால் ஏறிக்கொள் என்பது மாதிரி தலையசைத்தார். ஏறி உட்கார்ந்து கொண்டு திரும்பிப் பார்த்தான். அம்மா வாசல் பூவரசு மரத்தடியில் வந்து நின்று கொண்டிருந்தாள்.

மோட்டார் சைக்கிள் புறப்பட்டு காவேரி ஆற்றுப் பாலத்தைத் தாண்டி இலுப்பைத் தோப்புக்குள் புகுந்து பெரிய முனி ஒற்றையடி





பாதையிலேயே போய் அன்புச்செல்வம் மதிவண்டி நிலையத்தின் முன்னே நின்றது. கடையில் உட்கார்ந்திருந்த அன்புச்செல்வம் அவர் மாணவன்தான். இவரைப் பார்த்ததும் நாற்காலியில் இருந்து எழுந்து, "வாங்க சார்.. வாங்க.." என்று வரவேற்றான்.

சுந்தரராசன் மோட்டார் சைக்கிளில் இருந்து இறங்கி கடையின் முன்னே இருக்கும் விதவிதமான சைக்கிள்களைப் பார்த்தபடி இருந்தான்.

வாசுதேவன் தலையசைத்துக் கொண்டு முன்னே சென்று நாற்காலியில் உட்கார்ந்து, "வியாபாரம் எப்படி... நீதான் சரியா ஓட மாட்டேன்னுட்ட... சைக்கிள் ஓடுதா..." என்று கேட்டார்.

"பரவாயில்ல சார்..."

"ஒரு நல்ல சைக்கிள் கொடு"

"யாருக்கு சார். தம்பிக்கா..." என்று கேட்டான் சுந்தரராசனைப் பார்த்தபடி.

அவர் தலையசைத்தார்.

"போன வருஷமே வாங்கிக் கொடுத்து இருக்கணும் சார். பாவம் தம்பி... தினம் ஆறு கிலோமீட்டர் நடக்குது..."

"எங்க பணம் வருது. இன்னிக்கி பிராவிடண்ட் பண்ட்ல லோன் வந்துச்சி... உடனே ஓடியாந்துட்டேன். நல்ல சைக்கிளா பார்த்துக்கொடு..."

"இப்ப எல்லாம் ஹீரோதான் சார்... பையன்களுக்கு எல்லாம் அதான் பிடிக்கும். டி.வி.யில கூட நிறைய விளம்பரம் வருது சார்..."

"சரி... அதையே கொடு... என்ன விலை?"

"ஆயிரத்து முன்னூறு ரூபா சார். உங்களுக்காக நூறு ரூபா குறைச்சிக்கறேன் சார். நீங்க ஆயிரத்து இருநூறு கொடுங்க..."

"அதெல்லாம் வேணாம். நல்ல சாமானாப் போட்டு ரெடி பண்ணிகொடு... நூறு ரூபா குறைக்கறேன்னு மட்டமான சைக்கிளை தலையில் கட்டிட போற..."

"அப்படி எல்லாம் இல்ல சார்..." என்ற அன்புச்செல்வம் ஒரு ஆளைக் கூப்பிட்டு ஜாடை காட்டினான். அவன் கைகளைத் துடைத்துபடி வெளியில் சென்றான்.

சுந்தரராசன் தயராகும் பச்சை சைக்கிள் பக்கத்தில் நின்று கொண்டிருந்தான். ஒரு ஆள் ஒரு தட்டில் மூன்று காபி கொண்டு வந்தான். ஒரு காபி டம்ளரை எடுத்து அன்புச்செல்வம் அவர் பக்கம் நீட்டினான். காபியை வாங்கி ஒரு மிடறு குடித்தார்.

"சார் வரும் சுதந்திர தினத்துக்கு இருபது கிலோ மீட்டர் சைக்கிள் போட்டி ஒன்று நடத்தலாமென்று இருக்கிறோம் சார். அதை நீங்கதான் வந்து துவக்கி வைக்கணும். நம்ம மாவட்ட எஸ்.பி.கூட வரேன்னு சொல்லிட்டாங்க..."

"உன் கடைக்கு வந்ததுந்தான், நான் நினைவுக்கு வருதா?"

"அப்படி எல்லாம் இல்ல சார். நானே நேர்ல வந்து கூப்பிடனுமென்னு இருந்தேன். ஆனா கடைய விட்டுட்டு வர முடியல..."

"உனக்கெல்லாம் போட்டி எதுக்கு? நீ கடையையே பார்த்துக்கிட்டு இரு..."

"என்ன சார் இப்படி சொல்லுறீங்க..."

"பின்ன கண்ட இடத்தில கேட்டா அப்படித்தான்" என்றபடி சைக்கிளைப் பார்த்தார். சுந்தரராசன் ஸ்டூலில் உட்கார்ந்து சைக்கிளை பார்த்தபடியே இருந்தான்.

பதினைந்து நிமிடத்துக்குப் பிறகு சைக்கிள் தயாரானது. பில்லை அவர் பக்கம் நீட்டினான். பணத்தைக் கொடுத்துவிட்டு, பில்லை மடித்து பையில் வைத்துக்

கொண்டு சைக்கிள் சீட்டில் ஒரு தட்டுத் தட்டினார். பெல்லை அடித்தார். அது கணகணவென்று ஒலித்தது. அப்புறம் பெடலை நிமிர்த்தி, சக்கரத்தைச் சுற்றி பிரேக்கைப் பிடித்தார். எல்லாம் சரியாக இருப்பது மாதிரி இருந்தது.

அன்புச் செல்வம் கடையில இருந்து சைக்கிளை வெளியே தள்ளிக்கொண்டு வந்து சுந்தரராசனிடம் கொடுத்தான். அவன் சைக்கிள் ஹாண்டில்பாரைப் பிடித்தபடி அப்பாவை தலை நிமிர்ந்து பார்த்தான்.

"உன் சைக்கிள்தான். எடுத்துக்கிட்டு வீட்டுக்குபோ..."

சுந்தரராசன் சந்தோஷத்தோடு தலையசைத்தான். கொஞ்சகாலம் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு போய் பூவரசு மரத்தடியில் சைக்கிளில் ஏறி உட்கார்ந்து மிதித்தான். மண் சாலை. சக்கரம் மணலில் சிக்கி தடுமாறியது. ஹாண்டில்பாரை அப்படியும் இப்படியும் நெளித்து சரிப் படுத்திக்கொண்டு வேகமாக மிதிக்க ஆரம்பித்தான். சைக்கிள் பறப்பது மாதிரி இருந்தது. அவன் இன்னும் இன்னும் என்று வேகமாக மிதித்தான்.

"தம்பி நல்லாதான் சைக்கிள் ஓட்டுது" என்றான் அன்புச்செல்வம்.

அவர் பதிலொன்றும் சொல்லாமல் மோட்டார் சைக்கிளில் ஏறி உட்கார்ந்தார்.

❑❑❑

சுந்தரராசன் வீட்டின் முன்னே சைக்கிளில் இருந்து இறங்கி மணி அடித்தான். உள்ளே இருந்து வந்து அம்மா, "ஏது சைக்கிள்" என்று கேட்டாள்.

அவன் அப்பா வாங்கிக் கொடுத்தது என்றான். ஆச்சரியப்பட்டுப் போன அவள் அவசரஅவசரமாக உள்ளே போய் திருநீறு, சூடம் எல்லாம் கொண்டுவந்து சைக்கிளுக்கு பூசை போட்டாள். அவன் நெற்றியிலும் சைக்கிள் ஹாண்டில்பாரிலும் திருநீறு பூசி குங்குமப் பொட்டு வைத்தாள்.

"ரொம்ப விலையா இருக்கும். ஜாக்கிரதையா வைச்சிக்க" என்றாள்.

சுந்தரராசன் சைக்கிளை பத்திரமாக வைத்துக்கொண்டான். சாலையில் மேடு பள்ளமென்றால் ஓரமாக சைக்கிளை விட்டான். அடிக்கடி டயரில் காற்று இருக்கிறதா என்று அழுத்திப் பார்த்துக்கொண்டான். காலையில் பள்ளிக்கூடம் புறப்படுவதற்கு முன்னால் தேங்காய் எண்ணை போட்டு வெள்ளைத் துணியால் துடைத்தான். பச்சை வர்ணம் பளபளவென்று மின்னியது. பின் சக்கரத்து பூட்டு காணாது என்று முன் சக்கரத்திற்கும் ஒரு பூட்டு போட்டுக்கொண்டான். அப்பா அவன் சைக்கிள் துடைப்பதை ஒருநாள் நின்று பார்த்துவிட்டுப் போனார்.

ஞாயிற்றுக்கிழமை. மத்தியானம் சாப்பிட்டுவிட்டு அப்பா மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு போய்விட்டார். நான்கு மணி இருக்கும். கணக்குப் போட்டுப் பார்த்துக் கொண்டிருந்த இவனுக்குத் திடீரென்று ஒரு கணக்கில் சந்தேகம். மண்ணூர் நாராயணந்தான் வகுப்பிலேயே கணக்கில் புலி. சொல்லியும் கொடுப்பான். அம்மாவிடம் மண்ணூர் நாராயணன் வீட்டுக்குப் போவதாகவும், திரும்பி ஆறு மணிக்கெல்லாம் வந்துவிடுவதாகவும் சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

"சீக்கிரம், ஆறு மணிக்கெல்லாம், அப்பா வர்றதுக்கு முன்னால வந்துடு" என்று அம்மா வாசல் வரையில் வந்து வழியனுப்பி வைத்தாள்.

அம்மா அடிக்கடி கடிகாரத்தையே பார்த்தபடி இருந்தாள். மணி ஏழு அடித்தது. சுந்தரராசன் வரவில்லை. அம்மா வாசல் பக்கம் வந்து நின்றாள். ஏழரை மணிக்கு மோட்டார் சைக்கிளில் வாசுதேவன் வந்து இறங்கினார். ராணியை வாசலில் பார்த்ததும் கோபம் வந்துவிட்டது.

"எதுக்கு இந்த நேரத்தில வாசல்ல நின்னுக்கிட்டிருக்க..." என்று அதட்டினார்.

"சுந்தர் ஆறு மணிக்கெல்லாம் வரன்னு போனான். இன்னும் வர்ல"

"சைக்கிள் இருக்கில்ல. ஊர் சுத்திக்கிட்டு இருப்பார். வரட்டும். நாலு வச்சா சரியா போயிடும்" அப்பா உள்ளே போனார். அம்மாவும் கூடவே சென்றாள்.

வாசுதேவன் பேண்டை அவிழ்த்துப் போட்டுவிட்டு வேட்டியை எடுத்துக்கட்டிக் கொண்டு டி.வியை போட்டுவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தார். அம்மா உள்ளுக்கும் வாசலுக்குமாக நடந்தபடி இருந்தாள். டி.வி.யில் செய்தி வாசிக்க ஆரம்பித்தார்கள்.

"அவன் இன்னும் வர்ல"

"இல்லீங்க" என்று சொல்லிவிட்டு அம்மா அவசர அவசரமாக வாசல் பக்கம் வந்தாள். அவன் தலைகுனிந்தபடி வந்து கொண்டிருந்தான். அவள் சுற்றும் முற்றும் பார்த்தாள். சைக்கிளைக் காணோம்.

"சுந்தர்... சுந்தர்" என்று அம்மா அவன் பின்னாலேயே வந்தாள். அப்பாவைப் பார்த்ததும் பயந்துபோய் அப்படியே நின்றுவிட்டான்.

"சைக்கிள் எங்க சுந்தர்" என்று அம்மா அவன் பக்கமாக வந்தாள்.

"மண்ணூர் நாராயணன் வீட்டு வாசல்ல பூட்டி வச்சிட்டு படிச்சிக்கிட்டு இருந்தேம்மா. அரை மணி நேரம் கழித்து பார்த்தா சைக்கிள் காணோம் அம்மா. அதுல இருந்து எல்லா இடத்திலேயும் தேடிபார்த்துட்டோம்" அவன் கண்களை கசக்கிக் கொண்டு தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான்.

அப்பா நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிக்கொண்டு எழுந்தார்.

"நிஜந்தாப்பா. சைக்கிள் பூட்டி வச்சிட்டுத் தான் அப்பா படிச்சிக்கிட்டு இருந்தோம். சாவிகூட இருக்குப்பா..." சாவியை முன்னே நீட்டினான்.

அப்பா எட்டி அவன் கையைப் பிடித்து, "சைக்கிள் காணாம போனா என்ன? அதுக்குப் போய் எதுக்கு அழற"

அவன் இன்னும் விசும்பி விசும்பி அழ ஆரம்பித்தான்.

அப்பா அவனை இழுத்து அணைத்துக் கொண்டார். அம்மா திகைத்துப்போய் அப்படியே நின்று கொண்டிருந்தாள்.

❑❑❑



13. எம்.கே. முத்துசாமி

நல்வாழ்த்துகள்

**ஜெ. ஜெயந்தி ஜெகநாதன்**

ஒன்றிய குழுத் தலைவர்,

அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியம்

திருச்சிராப்பள்ளி பெரும் பிடுகு முத்தரையர் மாவட்டம்

நல்வாழ்த்துகள்

## கல்வி கேந்திரா

விழுப்புரம்

14. என். ராகவன்



நல்வாழ்த்துகள்

**ஆர். ஈ. குமரன்,** தனி அலுவலர்

**அறிஞர் அண்ணா பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் லிட்** நெ.கே.எச் 1

498-499, காந்திரோடு, காஞ்சிபுரம் - 631 501. தொலைபேசி : 22148

15. ஜி. சந்ரு



முந்தின நாள் மாலை
அழைத்துப்போவாள்
அம்மா கடைவீதிக்கு.

தொட்டால் சில்லென்று
ஈரமாய் மண்வாசனையாய்
விதவிதமான பிள்ளையார்.

பேரம் பேசி
கண்ணுக்கு குன்றுமணியை
மறக்காது வாங்கிக்கொண்டு
பிள்ளையார் குடையோடு
எனக்கும் ஒன்றுக்காக
கெஞ்சி சாதித்து

சீக்கிரமாய் எழுந்திருக்க
சீக்கிரமாய் தூங்கி
பாட்டியை நச்சரித்து
இராத்திரியே எடுத்துவைத்த
நகையையும் துணியையும்
நினைத்துக்கொண்டே விழித்து

அலங்கார அழகை பீற்றிக்கொள்ள
அவரை அடுத்தவீட்டுக்கு
எடுத்துப்போகையில்
வாங்கிய அடியை
பூஜை அறையில் சுருண்டு
அழுது புகார் பண்ணி

ஐந்து நாள் கழித்து
கிணற்றில் போடும்போது
லீவுக்கு வந்த
சேது ஊருக்குப்போகும்
சோகம் அப்பும்.

அடுக்குமாடியில்
பிள்ளையார் கரைக்க இடமற்று
கடலுக்கு ஓடும்போது
பூதாகாரமாய் வாளேந்திய
பிள்ளையார்கள் பயமுறுத்துகிறார்கள்
என் மகனை.



## கனிமொழி

ஓவியம் : மருது

நல்வாழ்த்துகள்

**க. கந்தசாமி** *எம்.ஏ. பில். எம்.பி.ஏ. எச்.டி.சி.*
தலைவர் மற்றும்
மேலாண்மை இயக்குநர்

***சி. ராமகிருஷ்ணன்*** *பி.காம். எச்.டி.சி.*
செயலாளர்.

## விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி

வரையறுக்கப்பட்டது ஏப்.பி. 101
விழுப்புரம் - 605 602.

**16. ராஜேந்திரன்**





17. டி. விஜயவேலு

*Best Compliments*

**Rtn. PHF. G. SUNDARARAJAN**

21, Mounspuram, 5th Lane, Dindigul - 1. Ph.: 31289 (O), 26323 (R)

ஓவியம்: ஏ.சி. ராஜசேகரன்

# வேர்கள்

வேர்கள் என்ற சொல் சில ஆண்டுகளாக மிகுந்த செல்வாக்கு பெற்றிருக்கிறது. நாட்டியக் கலைஞர்கள், நாடகக் கலைஞர்கள், இசைக் கலைஞர்கள் (குறிப்பாக வாத்தியம் இசைப்பவர்கள்), ஓவியக் கலைஞர்கள், எழுத்தாளர்கள், சமூகத் தலைவர்கள், சீர்திருத்தவாதிகள் எனப் பல பிரிவினர் நம் வேர்களை முக்கிய கவனம் செலுத்தி அறிய வேண்டும் என்று பல தருணங்களிலும், சூழ் நிலைகளிலும் கூறி வருகிறார்கள். வேர்களைத் தேடாதவன் சமகாலத்தை உணராதவன் என்பது போன்ற எண்ணம் சமுதாய மாற்றத்தின் இயக்கங்களில் அக்கறை கொண்டவர்கள் நடுவில் நிலவுகிறது.

இன்றைய மாற்றங்கள் பலவும் ஏற்படாத காலத்தில், இந்திய சுதந்திரத்திற்கு முந்தைய காலத்தில் வேர்களை அறிய வேண்டும் என்ற தாகம் இருந்ததாகத் தெரியவில்லை. இன்றைவிட அன்று கிராமங்கள் கிராமங்களாகவே இருந்தன. பல நகரங்களில் வாழ்க்கை கிராமப் புறத்தைவிட அதிகம் மாறுபட்டிருந்த தாக்க கூறமுடியாது. நகரத்திலேயே பல இடங்களில் விடிய விடியக் கூத்து நடக்கும். பெட்ரோடமாக்ஸ் விளக்கை வைத்துக் கொண்டு சந்தனக்குடம், புலிவேஷம் சகிதமாக நள்ளிரவில் ஊர்வலம் வரும். இப்படி வெளிப்படையான நிகழ்ச்சிகளைத் தவிர அன்றாட வாழ்க்கையில் எல்லா அம்சங்களிலும் பல நூற்றாண்டுகளை நினைவில் கொள்ளக்கூடிய பழக்க வழக்கங்கள் வெகு சகஜமாக கடைப் பிடிக்கப்பட்டு வந்தன. மகிழ்ச்சியையும் வளர்ச்சியையும் குறிக்கும் திருமணச் சடங்கிலிருந்து ஒருவரின் இறுதிச் சடங்கு வரை அந்தந்தப் பிரிவினரின் வசதிக்கேற்பவும் செல்வாக்குக்கேற்பவும் கிரியைகள் நிறைவேற்றப்பட்டன. இவை நீண்ட தொடர்ச்சியுடையவை என்ற உணர்வு கூட அன்று தோன்றியிருக்க நியாயமில்லை. எப்போதோ ஒரு முறை வன்முறை தோன்றினாலும் பொதுவாக ஒருமதத்தினர் தங்களுடைய பகிரங்க மதச் சடங்குகளை நிறைவேற்றும்போது இன்னொரு மதத்தினர் வழிபாட்டு நம்பிக்கைகளை அலட்சியப்படுத்தாத முறையில் நடந்து கொண்டார்கள்.

மதுராவிலும், காசியிலும் மட்டும் கோயிலும், மசூதியும் அடுத்தடுத்து இருப்பதாக அமையவில்லை. மாநிலங்கள் பலவற்றில் இப்படிப் பல இடங்கள் நெடுங்காலமாக இருக்கின்றன. என் இளம்பிராயத்தைக் கழித்த அன்றைய நிஜாம் ராஜ்யத்தில் ஆடி மாதம் முழுக்க மாங்காளம்மா ஜாத்ரா (மகாளியம்மன் யாத்திரை) எனக் கடைப்படிக்கப்படும். நானிருந்த ஊரில் மட்டும் தினம் ஏழெட்டு ஊர்வலங்கள், கரகம் சகிதம் இரட்டை அல்லது நான்கு பறை வாத்தியத்துடன் நடைபெறும். அந்தக் கடும் வெயிலில் கரகம் சுமந்து ஆடி வருபவர் பரவச நிலையில் இருப்பர். ஆனால், மசூதி உள்ள தெருவில் நுழைந்தால், மேளம் நிறுத்தப்பட்டு, ஊர்வலம் மசூதியைக் கடந்த பிறகுதான் மீண்டும் ஒலிக்கத் தொடங்கும். பரவச நிலைக் கரகக்காரரும் இந்தக் கட்டுப்பாட்டுக்கு இணங்கித்தான் நடப்பார். இதெல்லாமே வெகு இயல்பாக நிகழும். யாரும் இதைத் தவறாகவோ, இகழ்சியாகவோ நினைத்தது கிடையாது. இந்த ஜாத்ராவின் ஒரு பகுதியாகப் புலிவேஷமும் நிகழ்த்தப்படும். புலிவேஷக் கலைஞர்கள் அநேகமாக முஸ்லீம் சஸ்தான். இதே கலைஞர்கள் மொகரம் வரும்போது மீண்டும் புலி வேஷம் அணிவார்கள். ஒரு பிள்ளையார் கோயிலை அடுத்தும் அனுமார் கோயிலை அடுத்தும் மசூதிகள் இருந்தன. வெள்ளிக்கிழமை பிள்ளையார் கோயிலுக்கு முக்கியமான நாள். அன்று குடம் ஏற்றி ஆரத்தி காட்டுவதோடு நிறுத்தாமல் பிரசாதமாகச் சுண்டலும் தருவார்கள். சரியாக எட்டு மணிக்கு முடிந்துவிடும்.. இதையும் யாரும் பாரபட்சமான ஏற்பாடாக நினைக்கவில்லை.

''அன்று உங்கள் அனைவருக்கும் பெரியண்ணனாக வெள்ளைக்காரன் உட்கார்ந்திருக்கிறான். அதனால்தான் இந்த நல்ல பிள்ளைத்தனம்'' என்று இன்று சிலர் கூறக்கூடும். இதில் உண்மை சிறிதும் கிடையாது என்று கூறிவிடமுடியாது. ஆனால், முழு உண்மையும் இதுவே எனவும் கூறிவிட முடியாது.

இரண்டாம் உலக யுத்தம் 1945-ம் ஆண்டு முடிந்தபோது, மனித இனத்தின் பல நம்பிக்கைகள் தகர்க்கப்பட்டிருந்தன. பொதுவுடமையை வாழ்க்கை நெறி என்று ஆட்சி மூலம் மக்களை ஏற்கச் செய்த ஓர் அரசு, ஒரு நெருக்கடியின்போது மணல் வீடு போலச் சரிந்து விடும் என எதிர்பார்த்த மேலைய சிந்தனையாளர்களை நிலைகுலைய வைப்பது போலச் சோவியத் ரஷ்யா, ஜெர்மனியைப் போரில் தோற்கடித்தது. ஆனால், மிகப் பெரிய விரக்தியை ஏற்படுத்தியது. மேலயச் சிந்தனை வளம், தத்துவம், தாராளக் கல்வி, நுண்ணிய கலை உணர்வு, ஜனநாயகம் இவற்றுக்கெல்லாம் இதர நாடுகளோடு உரிமை கொண்டாடிய ஜெர்மனி பெரும் திரளமான மக்களைத் திட்டமிட்டுப் படுகொலை செய்தது. மனிதன் தோன்றியதிலிருந்து எவ்வளவோ போர்களுக்குப் பிறகு படுகொலைகள் நிகழ்ந்திருக்கின்றன. ஆயிரக்கணக்கான மக்கள் அடிமைகளாகக் கடத்தப்பட்டிருக்கிறார்கள். பெண்களை எல்லா அக்கிரமங்களுக்கும் உட்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் ஜெர்மனியில் நிகழ்த்திய யூத இன ஒழிப்பு பேய்த்தனமானது. 'முழு யூத இன ஒழிப்பு பேய்த்தனமானது. 'முழு யுத்தம்' என்ற பெயரில் பல நூற்றாண்டுகள் பல ஆயிரம் மக்கள் முயற்சியில் உருவான அழகிய நகரங்கள் சில நூறு குண்டுகளால் தரைமட்டமாகி இருக்கின்றன. குழந்தைகள், பெரியவர்கள், ஆண், பெண், முதியோர், நோயுற்றோர் என்ற பேதமில்லாமல் உடல் சிதறி இறந்திருக்கிறார்கள். இடிபாடுகள் நடுவில், அனாதையாகத் திரியும் குழந்தைகளும், கிழவர்களும் ஒருவாய் உணவுக்குக் குப்பைத் தொட்டிகளைக் கிளறியிருக்கிறார்கள். ராணுவ முகாம்களில் அருகாமையில் பிச்சை கேட்டு

அசோகமித்திரன்

நின்றிருக்கிறார்கள். இச் சூழ்நிலையில் வேர்கள் என எந்த மேலைநாட்டினரும் தேடிப் போகக் கூடிய மனநிலையில் இருந்திருக்க நியாயமில்லை. மாறாக மேலைய வெள்ளையர் ஆதிக்கத்தில் பல நூற்றாண்டுகளைக் கழித்துவிட்ட கறுப்பு இன மக்களும் கீழைய நாட்டினரும் வேர்களை நாடிச் செல்லத் தொடங்கினர்.

வேர்கள் பண்டையக் கலாச்சாரம், பழக்க வழக்கங்களை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வருவதோடு முடிந்து விடுவதாக எண்ணப் படவில்லை. பகுத்தறிவாதம் நிலை கொண்ட இந்த இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் பழைய மத நம்பிக்கைகளையும் இந்த வேர்கள் மீட்டுக் கொணர்ந்தது. ஐக்கிய அமெரிக்காவில் கறுப்பு இனத்தவரிடையே ஒரு பிரிவினர் அவர்கள் ஆப்பிரிக்கக் கண்டத்தின் முஸ்லீம் குழுவினரிடமிருந்து கடத்திக் கொணர்ந்தவர் என அறிவித்துக் கொண்டார்கள். கரும் சிறுத்தைகள், ''கறுப்பு முஸ்லீம்கள்'' என்ற அந்த இயக்கங்கள் அறுபதுகளிலும், எழுபதுகள் தொடக்கத்திலும் அமெரிக்கர்களிடையே சிறிது பயமும் பீதியும் கூட ஏற்படுத்தியது. இவர்களின் தலைவர் எலிஜா முகம்மது என்பவர் பண்டைய மதக்குழுவினரிடையே இருக்கக்கூடிய ஒரு பரிபூரண சரணாகதியைத்தான் எதிர்பார்த்திருக்கக்கூடும். ஆனால், அவருடைய முக்கியச் சீடரான மால்கம் எக்ஸ் என்பவர் எலிஜா முகம்மதுவிடமிருந்து பிரிந்து சென்று தனித் தலைவரானார். இருவருமே அரங்கப் பேச்சாற்றலால் கேட்போரை எதையும் செய்யத்தூண்டும் அபார சக்தி பெற்றவர்கள். இவர்களுடைய கோட்பாடு களும், வேட்கைகளும் பழங்குடிமக்கள் காலத்துக்கும், சூழ்நிலைக்கும் பொருத்தமாக இருந்திருக்கக்கூடும். ஆனால், ஜனநாயகம், சமத்துவம் முதலிய சிந்தனைகளும் உலவக்கூடிய நாட்களில் இந்த இயக்கங்கள் போன்றவை நீடித்த மாற்றங்கள் நிலையாகக் கொண்டுவருவது கடினம். இந்த இயக்கங்களின் விளைவாக காஸியல் கிளே என்பவர் முகம்மது அலி என அன்று பெயர் மாற்றம் செய்து கொண்டதோடு அல்லாமல், அரசின் கட்டாய ராணுவ சேவை ஆணைக்குட்படாமல் உலக, வீரர் பட்டத்தைத் துறந்து சிறைவாசமும் மேற்கொண்டார். நடந்து முடிந்த 1996 அட்லாண்டா ஒலிம்பிக் போட்டியின் துவக்க நாளன்று அவர் ஒலிம்பிக் ஜோதியை ஏற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலக்கியத்தில் வேர்களைத் தேடல் சில சந்தர்ப்பங்களில் வெற்றியை ஈட்டித் தந்திருக்கிறது. எஸ்ரா பவுண்டு எனும் அமெரிக்கக் கவிஞர் மத்திய கால பிரான்ஸ் நாட்டுக் கவிதைகளை ஆராய்ந்ததில் அவருடைய சொந்தப் படைப்பில் சிறப்பான பரிமாணங்கள் தோன்றின. (அமெரிக்க வெள்ளையர்களுக்கு அவர்களுடைய மண்ணிலேயே மிகப் புராதனமான வேர்கள் கிடைப்பது அசாத்தியம். ஐரோப்பிய வேர்களை ஏற்றுக் கொள்வதில் தயக்கம் இருப்பதைப் புரிந்து கொள்ள முடியும்.)

வேதநாயகம் பிள்ளையின் 'பிரதாப முதலியார் சரித்திரம்'' ஆங்கில நாவல் இலக்கியத்தின் பாதிப்பால் தமிழில் தோன்றிய முதல்



முழுநீள புனைகதைப் படைப்பானாலும் அதில் இந்திய வேர்களை எளிதில் உணர்ந்து கொள்ளமுடியும். வேதநாயகம் பிள்ளை அவர்கள் நாவலின் இறுதியில் 'பலசுருதி'யும் எழுதியிருக்கிறார். எல்லாமே இயல்பாக இருக்கும், இயல்பாக இருக்கம் என்று கூறுவதை விட, 'பிரதாப முதலியார் சரித்திர'மும் அதைத் தொடர்ந்து வந்த பல நவீனப் படைப்புகளும் அவற்றின் உந்துதல் எங்கிருந்து வந்தாலும் தமிழ் வெளிப்பாட்டில் இம்மக்களுக்குரிய ஆதார சுருதியை உட்பொதிந்தே இருந்து வந்திருக்கின்றன. மிக அந்நியமான சம்பவச் சேர்கை கொண்டிருந்த துப்பறியும் நவீனங்களில் கூடக் கதை மாற்றல் நெருக்கடியின்போது வெளிப்படுத்தும் உரையாடலோ எண்ணமோ இந்திய வேர்களுக்குரியதாகவே இருக்கும்.

ஓவியம் : **விஸ்வம்**



படைப்பாளியின் இயல்பான தன்மையின் வெளிப்பாடாக இருக்கும்போதுதான் கலை ஒருங்கிணைந்த படைப்பாக உருவாகிறது. வலுக்கட்டாயமாக எந்த ஒரு போக்கையும் படைப்பில் இருத்தும்போது அது தனித்து நிற்பதோடு படைப்பின் மொத்த உருவ அமைதியையும் பாதித்துவிடுகிறது. மேலும் நாம் நம்முடைய வேர்கள் உள் உண்ணுவதும் ஒரு வகையில் கால நிர்ணயிப்புக்கு உட்பட்டதுதான். நம் அன்றாட வாழ்க்கையில் கணக்கில்லாத அம்சங்களில் வேர்களிலிருந்து விலகிப் போயிருக்கிறோம். விலகிப் போயிருக்கிறோம் என்பதைவிட நாம் சமுதாய வியல் பரிணாமத்துக்கு உட்பட்டிருக்கிறோம் என்று கூறுவது பொருத்தமானது. நாம் வசிக்கும் இல்லங்கள், பயன்படுத்தும் எரிபொருள், உண்ணும் உணவு, உடுக்கும் உடை, தொழில், பொழுது போக்கு, திருமணம், குழந்தை வளர்ப்பு, கல்வி புகட்டல் எனப் பல அடிப்படைக் கூறு களில் கடந்த நூறு இருநூறு ஆண்டுகளிலேயே ஏராளமான மாற்றங்களை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அரசு என்பதே இந்த நூறு ஆண்டுகளில் அமைப்பிலும் பணிகளிலும் எவ்வளவு மாறியிருக்கிறது?

நீண்ட தொடர்ச்சியுடைய கலாச்சாரம் மிக நுண்ணிய வகையில் அதன் வேர்களை உயிர்ப்பித்துக் கொண்டே இருக்கும். பரிணாமகதிக்கு மாறாக வேர்களைச் செயற்கையாக வற்புறுத்தும் முயற்சிகள் இன்றைய வாழ்க்கைக்கு அந்நியமாகவே இயங்கும். யதார்த்தத்திற்கு விலகியிருக்கும் எந்த இயக்கமும் மனித முன்னேற்றத்துக்கு வழி கோலாது.

oOo

Best Compliments

**SAVOURIT**

India's Favourit Vermicelli

377/2, S.N. Street, Tollgate, Chennai - 600 081.

18. கார்த்திக்





19. எம். சூரியமூர்த்தி

*Best Compliments*

**M/s. KHADER SPINNERS LTD.,**
M.M. Koviloor, Dindigul.

நல்வாழ்த்துகள

ட்டி. ராஜி, தனி அலுவலர்

**ஸ்ரீ வரதராஜ சுவாமி பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கம் லிமிடெட்**

நெ.என்.ஜி. 2105 437, காந்திரோடு, காஞ்சிபுரம் - 631 501. தொலைபேசி : 2267

20. எம். சூரியமூர்த்தி



தாழி... காலைலேந்து காலை மரிச்சு மரிச்சுக்கிட்டு வந்து நிக்கிறான். என்னன்னும் சொல்லித் தொலைய மாட்டேங்கறான். ரொம்ப குசும்பனாயிட்டான் அவன்..." என்று தனக்குள் சொல்லிக் கொண்டார் முத்துப்பாண்டி.

நேர்வகிடு மாதிரி இருந்தது வரப்பு. வரப்பு வழி அவர் களத்து மேட்டில் ஏறி, தெற்குப் புளிய மரத்துப் பக்கமாக வந்து நின்றார். அவர், மாலைக் கடன்கழிக்க, குளக்கரைக்கு வந்தவர் அவர். அப்படியே, குளத்தில் ஒரு முங்கல். துவட்டிக்கொண்டு நீண்டு வளர்ந்திருந்த தலைமுடியை உலர வைத்துக் கொண்டு நின்றவர்க்கு, வயிறு கிள்ளியது. பேச்சி கடைக்குப் போய் ரெண்டு வடைகளைப் பிட்டுப் போட்டுக்கொண்டு, ஒரு டீயைக் குடித்தால் தேவலை என்று இருந்தது. துவைத்த வேஷ்டியை அகல விரித்து முதுகுப்புறமாகப் பிடித்துக்கொண்டு, கோவணத்துடன் நடந்து களத்து மேட்டுவழி தெருவுக்கு வந்தார். பகல் நேரத்திலும்கூட, இருண்டு கிடக்கும் புளியஞ்சாலை. தெற்கு மரத்தண்டை அவர் வந்த போது, திடுமென உடம்பு மயிர்க்கூச்செறிந்தது. லேசான மயக்கம்கூட வந்துவிட்டது அவருக்கு. கால் பின்னிக்கொண்டு தடுமாறியது. ஆவேசம் வந்துவிட்டது என்பது அவருக்குப் புரிந்தது.

''த்தூ... சமயா சமயம் தெரியாமே, இப்படிக் காலைச் சுத்திக்கொண்டு நின்னா, எப்படிடா, பெரிய கருப்பா?'' என்று மர உச்சியைப் பார்த்துக்கொண்டு சொன்னார், முத்துப்பாண்டி. அந்த இடத்தில்தான் அவன் குடி இருக்கிறான் என்பதை நிச்சயமாக அறிந்தவர் அவர். அந்த இடத்திலேயே நின்று, அரைஞாண் கயிற்றில் கட்டித் தொங்கிவிட்ட விபூதிப் பையிலிருந்து ஒரு சிட்டிகை திருநீறை எடுத்து நெற்றியில் 'சம்போ மகாதேவா' என்றபடி பூசிக்கொண்டார்.

"காத்து மாத்து அண்டாமே, காடன் மாடன் அணுகாமே காத்து ரட்சியும், கருப்பசாமி... காட்டுக் கரம்பு வேல்சாமி..." என்று முணுமுணுத்துக் கொண்டார். ஆவேசம் நீங்கியது மாதிரி இருந்தது. தன் இடப்பக்கமாக பார்த்தார். அவன் நின்று கொண்டிருந்தான். ஒரு பனைமரம் உயரத்துக்கு. அப்புறம் குள்ளக் கத்திரிக்காய் உருவம் எடுத்துக் கொண்டான் அவன்.

"தாழி... வரியா... வா... பேச்சிப் பய கடைக்குத்தான் போறேன். வா பேசிட்டே போவோம்... நீயும்தான் என்ன செய்வே..." என்றபடி மறுபடியும், தோளில் போட்ட வேஷ்டியைப் பிரித்து காயப் போட்ட படி நடந்தார். அவருடன் அவன் பேரக் குழந்தை, தாத்தாவோடு நடப்பது மாதிரி நடந்துவந்தான்.

மண், குளிர்ந்திருந்தது. இருட்டத் தொடங்கி இருந்தது. தெருவின் இருபுறமும் ஆங்காங்கே தென்னை ஓலை வேய்ந்த ஓடுகள். உரலில் கட்டின ஆடுகள், இவர்களைப் பார்த்ததும், ஆவேசமாகக் கத்தின. கயிறை அறுத்துக்கொண்டு போக முயல்வன மாதிரியாக அலைந்தன.

"பார்த்தியா... ஆட்டுக் கண்களுக்கு உன்னைத் தெரியுதுடா கருப்பா..." என்றார்.

"ம்ங்..." என்று அவர் சொன்னதை ஒப்புக்கொண்டான். கருப்பு தொடர்ந்து அவனே சொன்னான்.

"பாம்பும் ஆட்டுக் கிடாவும், நாயும் அறியும்; மனுசங்கதான் என்னை அறியமாட்டாங்க..."

"அட சரி! தாழிகத்துக்கு ஊளக் கண்ணுதானே..!"

என்று அவன் சொன்னதை ஒப்புக்கொண்டார் அவர்.

திடுமென, ஆள் அரவமற்ற அந்த இடத்தில் சுருட்டு வாசம் வீசியது. இடப்பக்கம் பார்த்தார். அவன், ஒரு அடி நீளத்துக்கு ஒரு சுருட்டை புகைத்துக்கொண்டு வருவது தெரிந்தது. கருப்பு சுருட்டுப் பிடிப்பான். கூடவே, சாராயமும் குடிப்பான். அது அவன் வழக்கம். கொடை நடக்கிறது என்றால், சாராயம், தெருவை நனைக்குமே. தண்ணீர்பட்ட பாடாய் ஓடும். அது ஒரு காலம். தாழிகள் இப்போதெல்லாம் எவன் கொடை கொடுக்கிறான்? பூசை



**பிரபஞ்சன்**

# அமானுடன்..

வைக்கிறான்? எல்லாம் கலி காலம். சாமியாவது பூதமாவது என்று பேசத் தொடங்கிட்டார்கள். நகரத்துக்குப் போய் படித்துவிட்டு வருகிற தாழிகள் ஒருத்தருக்கும் கருப்பு, சின்னக் கருப்பு, மாடன், தலையன், மம்பட்டியான் என்று கொஞ்சமாவது பயம் இருந் தால்தானே? மசுருப் படிப்பு படிக்கிறாங்கனுங்க...

"அது சரிதான். எல்லாம் குறைஞ்சு போச்சு" என்றான் கருப்பன். அவர் நினைப்பதைப் புரிந்து கொண்டவனாக.

"அதுல பாரு கருப்பா... ஊர்க்கவுண்டர் வீட்டுல பொண்ணுக்கு, கல்யாணம் குதிர்ந்துச்சுதே... அவர் எப்படியாக் கொத்த மனுஷர். அவர் கொடை போடுவார். ஒரு ஆடாவது அடிப்பார்னு இருந்தேன். என் வாயிலே மண்ணைத்தான் போட்டார்..."

"ஆமா... நான் கூட எதிர்ப் பார்த்துகிட்டுதான் இருந்தேன். ஆசாமி ஏமாத்திபூட்டார்."

"கவுண்டர் நல்ல மாதிரிதான். சாமி, பூதம்னா பயந்துக்குவார்.. அவர் மகன் இருக்கானே, பிரசெண்டு, அந்தத் தாழிதான் வேண்டாம்னுட்டார். சிலை தெய்வம்லாம் வேணாமாம். என் முன்னாலேயே சொன்னான்னா பாரேன். எவ்ளோ கொழுப்பு இருக்குன்னு... தி... தாழி... கொஞ்சமும் உன் 'பவரை' காட்டினாத்தானே? ராத்திரியில, இந்தப் பக்கமாதானே வீடு திரும்பறான். பயலை, ஒரு அறை அறையேன். வழிக்கு வந்துருவானே... காலம் மாறிப்போச்சு, கருப்பா... உயிரோடதான் இருக்கோம்னு அடிக்கடி தாழிகளுக்கு நிரூபிச்சுக் கிட்டே இருக்கணும். தூங்குற போதுகூட கால்விரலை ஆட்டிக் கிட்டே இருக்கனும்... இல்லேன்னா, செத்துட்டாம்னு கொண்டு போயி புதைச்சுப்போடுவாங்கோ... நீ, என்னடான்னா... அநியாயத்துக்கு அடங்கி போயிட்டியே கருப்பா... கிழவன் கைத்தடி மாதிரி. கொஞ்சம் விருட்டும் முரட்டும் வேணுமப்பா. நீயே ஒரு காலத்துல எப்படி இருந்தே... இந்த ஏரியாவிலே மனுஷன் நடக்க முடியுமா. நடக்க விட்டியா. உறுமை வேளையிலே நடந்தான்னு புள்ளத் தாச்சியை அறைஞ்சி, தாய் வேறயா, புள்ளை வேறயா ஆக்கினேயே... எத்தனைப் பயல்களை அறஞ்சி ஒழுங்கு பண்ணி இருக்கே... எனக்கே கூட, எத்தினி பயம் உன் மேலே. என்னயே அலமந்து பண்ணிட்டயே... அப்படியாக் கொண்ட உனக்கு என்ன வந்துச்சு? இப்படி, வாலாட்டுற நாய் ஆயிட்டயே. இப்பம், ஒன்னும் ஆயிடலை. ரெண்டு வாட்டி, உன் விசுவரூபத்தை எடுத்து நில்லு. நாலு பேரை ரத்தம் கக்க வையி... கொஞ்சம் பேரை, வயிறு நோக வையி... அப்போதான் தாழிங்க மனசுல கொஞ்சமாவது பயம் வைக்குமப்பா... இல்லேன்னா சோத்துக்கு பறக்கிற நாய்கள்கூட, குண்டிக்குத் தண்ணி கொண்டு வரச் சொல்லுவாங்க... உன்னியே.... என்னமோ போ..."

ஓவியம்: **விஸ்வம்**

மிகக் கவனமாக அவர் சொல்றதைக் கேட்டுக்கொண்டு நடந்து வந்தான் கருப்பன். 'ஆமாம்', 'அவர் சொல்வதெல்லாம் உண்மை' என்கிறாற்போல, தலையை அசைத்துக் கொண்டான் அடிக்கடி.

டீக்கடை பெட்ரோமாக்ஸ் வெளிச்சம் தெரிந்தது.

"நான் டீக்குடிக்கப் போறேன். உனக்கும் ஒரு சிறட்டையில, வாங்கித் தரவா? கடைக்குப் பின்னாலே வர்றியா!"

"வேணாம்."

முத்துப்பாண்டி யோசித்துக் கொண்டு நின்றார். அப்புறம் சொன்னார்.

"ஒரு கில்லாடித்தனம் பண்ணு வோமா? நீ சரின்னா. நம்ம ரெண்டு பேருக்கும் நல்லது."

"சொல்லுமே"

"டீக்கடைக்காரன் இருக்கானே, அதான் பேச்சிப்பய. கொஞ்சம் 'சல்லு புல்லுன்னு' நாலு காசு பண்ணி இருக்கான். ஆள், நம் வளைப்புக்கு வளைவான். அவன் மக ஒருத்தி இருக்கா... விடை குட்டி. நீ அவளைப் பிடியேன். பள்ளிக்கூடம் விட்டு, இந்த வழியாத்தானே வருவா... பக்குன்னு பிடி. சேஷ்டை பண்ணு... ஆள் பேயோட்ட என்கிட்டதானே வரனும்..."

"ஆனா, இங்க நான் பிடிச்சுடு வேன். ஆனா, அந்த இடம் மாட சாமிக்கு அதிகாரம் உள்ள இடம். அங்கனே வந்து, நான் தின்கவோ, குடிக்கவோ முடியாதே..."

"அப்படியும் வேற இருக்கா..."

"ஆமாம்... சிவனார் எங்களுக்கு அதிகார எல்லை பிரிச்சுக் கொடுத் திருக்கார்."

"எனக்கு வேண்டியது காசு. உனக்குக் கோழியும் சாராயமும். இப்படி பண்ணினா என்ன:"

"சொல்லும்..."

"பூசை முடிச்சு கோழியையும் சாராயத்தையும் இங்க கொண்டு வந்துடறேன்"

"ரொம்ப சரி..."

"எப்படி நம்ம டுபாக்கூர் வேலை?"

"ஆங்... என்ன வேலை?"

"டுபாக்கூர் வேலை. அப்படின்னா, பேத்து மாத்து வேலை. என்ன கருப்பா, தமிழே தெரியலயே உனக்கு? சரி பசிக்குது. நான் கிளம்பறேன்... நாளைக்கே பிடிச்சுக் கிடனும், பேச்சி மவளை, சரியா?"

"சரி நான் புறப்படறேன்"

"சரி புறப்படு. எங்கனே இப்போ..."

"மரத்துக்குத்தான்" என்று களைப்புடன் சொன்னான் கருப்பன்.

"சரி நானும் மேலும் நாலு இடத்துல முயற்சி பண்ணறேன். நாலு கொடை, ரெண்டு கடா வெட்டு, ரெண்டு பேய் விரட்டுன்னு நடந்தா தானே. நமக்கும் நல்லது. ஊருக்கும் நல்லது..."

"டீக்கடை, கூத்து முடிந்த மைதானம் மாதிரி வெறுமையாகக் கிடந்தது.

பேச்சி, தன் மனைவியுடன், சாவகாச மாகப் பேசிக் கொண்டிருந்தான். ஆம்பிளையைக் கண்டதும் பேச்சியின் மனைவி எழுந்து, சாக்குப் படுதாவை விலக்கி, அந்தப்புரத்துக்குப் போனாள். வந்தவர், கோமணத்துடன் வேறு இருந்தாரே?

''வாங்க, மந்திரக்காரரே. குளியல் ஆச்சாக்கும்...''

"ஸ்நானம் ஆச்சி..." என்றார் முத்துப்பாண்டி. அப்படிச் சொல்வதில், ஒரு மரியாதை, மேலான பண்பு மிளிர்வதை அவர் உணர்ந்து இருந்தார். வேஷ்டியை உதறி, இடுப்பில் சுற்றிக்கொண்டார். மூதாட்டிகள் மார்பு மாதிரி நீண்டு தொங்கின விபூதிப்பையிலிருந்து, திருநீற்றை எடுத்துப் பூசிக்கொண்டார். அவர் நின்ற இடம், கல்லாவுக்கு எதிரே. அங்குதான் முருகன் தன் மனைவிமார்களுடன் காட்சியளித்துக் கொண்டிருந்தார். கண்ணை மூடிக் கொண்டு சில நிமிஷங்கள், மந்திரம் போல சில வார்த்தைகளை முணு முணுத்தார்.

பேச்சி அவரைப் பார்த்துக் கொண்டிருந்தவன், அவனையும் அறியாமல் எழுந்து நின்றான். இயல்பாகவே தன் கைகளைக் கட்டிக் கொண்டான்.

''முட்டு வினையெல்லாம் தீர்த்துவிடு முருகா...
ஏவல் பில்லி சூனியம் எடுத்துவிடு கருப்பா...
கண்ணேறு, கருப்பு, கழித்துவிடு பெரிய கருப்பா...
பெண்ணைவிட்டுப் போயிடு வாய் பிள்ளை மேல் வாராதே...
கண்ணைப்போல பாதுகாரு பச்சைமரக் கருப்பு தேவா..." என்று சொல்லிக் கொண்டே வந்தவர், பல்லை 'நறநற'வெனக் கடித்துக் கொண்டு, 'ம்' ...'சே...' 'தாழி' என்று ஒலிக் குறிப்புகளை எழுப்பிக்கொண்டு நின்றார். பேச்சிக்குப் பயம் பிடித்துக் கொண்டது.

''மந்திரக்காரரே... மந்திரக் காரரே...'' என்றார் இரண்டு முறை பேச்சி.

முத்துப்பாண்டி கண்விழித்தார். தன் சுற்றுச்சூழலை ஆச்சர்யமுடன் ஏதோ அயல் கிரகத்தில் இருந்து வந்தவர் போன்று ஒரு முறை பார்த்துக்கொண்டார். உடம்பை உதறிக் கொண்டார்.

"ம்! அப்படியா சங்கதி" என்று கூரையைப் பார்த்துச் சொன்னார். விசுப்பலகையில் அமர்ந்தார்.

''என்ன, மந்திரக்காரரே!'' என்றார் பேச்சி...

"என்னவோ மாதிரி, உடம்பை முறிச்சுப் போடறாம்பா... அவன்"

"யாரு?"

"வேற யாரு,... கருப்பன்தான். பெரியவன்"

"யார் யாரு சொன்னிய?"

"பெரிய கருப்பு. எத்தனை வாட்டி சொல்றது? அவன்தானே என் கிட்டே ஒண்டிக்கிட்டு என் வாக்குல வர்றது! நான் சொல்றது எல்லாம் பலிக்குன்னா, சங்கதி அதுவாம் இல்லை? பய, என் கைப்பிடியில அடக்கம்வா?"

"என்ன சாப்பிடறிய..." என்றபடி ஒரு காய்ந்த வாழை இலைத் துண்டை எடுத்து, அழுக்கு வேஷ்டியில் துடைத்து, அதில் இரண்டு வடையை வைத்து அவர் முன் வைத்தான் பேச்சி.

"எதுக்கு இந்த இழவு!"

"தின்னுங்க..." என்று வேண்டினான் பேச்சி.

வேண்டா வெறுப்பாக வடையைப் பிட்டு வாயில் போட்டுக் கொண்டார் அவர். இஞ்சி, தட்டுப்பட வடை நன்றாகவே இருந்தது. பேச்சி, டீ போட்டுக் கொண்டு கேட்டார்.

''கூரையைப் பார்த்துட்டு என்னவோ சொன்னிய, என்னன்னு விளங்கலையே''

''அவன்தான் என்னமோ சொன்னான்... ஏதோ சொன்னதைச் செய்யாத சொங்கிப்பயன்னு, உன்னைத்தான் என்னமாவது வேண்டுதலை செய்துக்கிட்டு, அதை நிறைவேற்றலையோ? வீட்டுல யாருக்காச்சும் சுகவீனமோ, எல்லாம் கருப்பன் வேலை''

டீயை ஆற்றிக்கொண்டு இருந்தவன் கை படக்கென்று நின்றது.

"ஆமாங்க... இந்தப் பொம்பளை உடம்பு சுகவீனமா இருந்தப்போ கோழி போடறேன்னு சொன்னேன். எங்கே பண்றது? சனி, சம்சாரத்தோடு வந்த மாதிரி, வந்து போனா ஒரு வில்லங்கம். என்ன பண்றச் சொல்றிய... அதை ஞாபகத்துல வச்சுக்கிட்டு கேக்குதாக்கும்?"

"பொல்லாத பயன்னா அவன்? ஒரு வார்த்தையை விட்டுட்டா, பிடிச்சுக்குவானே. இங்கனே சுத்திச் சுத்தித் திரிவான். வீட்டுல, யாருக்காச்சும் உடம்பு சுகவீனமா இருக்கனுமே."

''சரியாச் சொன்னிய... பொட்டைக் குட்டிக்கு நேத்திலேந்து சாயங்காலம் ஆனா அனல் காயுது. உடம்பு சுடுது! என்னடான்னு பார்த்தேன். இதுதான் சங்கதியா?"

"பின்னே வேற! நான் வர்றச்சே பார்த்தேனே. அந்த தண்ணி அண்டாவுக்கு பக்கத்துல, குந்திக்கிட்டு இருந்தான்..."

"அதா?"

"ஆமாம். வேற யாரு தாழி அவன்தான்."

பேச்சியின் முகம் வெளிறிப் போயிற்று. பித்தளை அண்டாவையே, பார்த்துக் கொண்டு இருந்தான். அண்டாவுக்குப் பக்கத்தில் இடம் இருந்தது.

''மந்திரக்காரரே... பூசை போட்டுடுவம். என்ன ஆகும்?"

டீயைக் குடித்துக்கொண்டு முத்துப்பாண்டி சொன்னார்.

"பொண்ணு, அந்தி நேரத்துல, யாரோ அறுத்துப் போட்ட கோழிக் காலை மிதிச்சு இருக்கா..."

''தாழி மவ செய்தாலும் செய்திருப்பா... என்ன பண்றது. மந்திரக்காரரே..."

"பரிகாரம்தான். பயலுக்குப் பூசை போட்டுடுவம். ஒரு இருநூறு ரூபாயாவது வேணும். இப்படியே விட்டா, பொண்ணுக்கு வயிறு வீங்கி, வயித்தாலே போயி, அப்புறம்..."

"வேணாம். உங்க வாயாலே அதைச் சொல்ல வேணாம்..."

"பின்னே? தாழி, கோழி கெட்ட கேடு, என்ன விலை விக்குது. யோசிச்சு பார்க்கனும். இதையே, ஐம்பது ரூபாயிலும் பண்ணலாம். ஆனா, எதுக்குப் பண்ணறோம். கருப்பு, சந்தோஷப்பட வேணாமா? ஏதோ பண்ணோம்னு பண்ணா, என்ன பிரயோசனம். எனக்கென்ன போச்சு? ஒத்தை ரூவா கொடு பண்ணி வைக்கிறேன்"

''வேணாம். வேணாம். மந்திரக்காரரே. சாமிக்குப் பண்றதுலே, குறை வைக்கப்படாது. நூத்து அம்பது கொடுத்துடறேன். நிறைவா பண்ணி வையுங்க. வயசுப் பொண்ணு. சுருண்டு படுத்துக்கிட்டா மனசு கேக்கவா செய்யுது..?"

கல்லாவைத் திறந்து, பத்து



இருபது, அஞ்சு, இரண்டு, அழுக்கு ஒற்றை ரூபாய் நோட்டுகளையெல்லாம் சேர்த்து, ஒரு வழியாக நூற்று ஐம்பதைத் தயார் செய்து, அவரிடம் தந்தார் பேச்சி.

"அப்ப சரி... நாளை வெள்ளி, ராத்திரிக்கு பூசை வச்சுக்குவோம். வடை, டீக்கு என்ன காசு?"

"சும்மா இருக்கட்டும். போங்க... இதெல்லாம் ஒரு சங்கதியாட்டும்?"

கையில் சில்லறை புழங்கியது. வேலையும் ஒன்று வந்திருக்கிறது. மிகுந்த உற்சாகம் கொண்டவராக ஆனார் முத்துப்பாண்டி... தென்னஞ் சோலை சாராயக் கடைக்கு போய் குடித்தார். சாராயம் கூட இனிப்பாக இருப்பது மாதிரி தென்பட்டது. அவருக்கு

''வியஞ்சனம் என்ன வேணும்யா? ஊறுகாய் தரட்டுமா!" என்றான் கடைக்காரன்.

"தாழி... ஊறுகாயா? என்ன இருக்கு உன் கடையில!"

''கறி இருக்கு. தலைக்கறி. நண்டுப் பொறியல், எறா எல்லா மும்தான் இருக்கு. உனக்கு என்னையா வேணும்..."

"உனக்கு எதுக்கடா இந்தச் சங்கதியெல்லாம்" என்கிற தொனி. அவன் வார்த்தையில் இருக்கிறதை அவர் உணர்ந்தார். சொன்னார்.

"நண்டும், எறாவும் கொண்டா..."

கடைக்காரன் அவரை ஆச்சர் யமுடன் பார்த்துச் சொன்னான்.

"உக்காருங்க அண்ணாச்சி..."

முத்துப்பாண்டி தனக்குள் சொல்லிக் கொண்டார்.

''காசில்லா ஆம்பிளையக் கட்டியவள் வேண்டாள்"

"வேசியும் விரும்பாள் உறவு களும் விலகிடுமே..."

நிறையவே குடிக்க முடிந்தது அவரால். ஆனாலும் நிலை தடு மாறுவது என்பது அவர் அளவில் இல்லை. அவிழ்ந்து தோளில் புரளும் கூந்தலை அள்ளிக் கொண்டையாக முடிந்து கொண்டார். வேஷ்டியை இறுக்கிக் கட்டிக்கொண்டு தோப்புக்கு அந்தப்புறமாக இருந்த வெள்ளச்சி வீட்டுப்பக்கம் நடந்தார். ஒரு கையில் பாட்டிலில், அவரின் பிரியமான வளான வெள்ளச்சி குடிக்க என்று சாராயம் வாங்கி இருந்தார். கடை திருப்பத்தில், வெற்றிலை பாக்குக் கடையில், நல்ல கைச் சுருட்டாக நாலு வாங்கி முடித்துகொண்டார். வெள்ளச்சிக்குச் சுருட்டு பிடிக்கும். தோப்புக்கு வடக்காக, வடகரை போகிற ரஸ்தாவில் அரைமைல் நடந்தால், வடக்கு வாசல் விழும். அங்குதான், சவுக்குத் தோப்புக்குள் குடிசை போட்டுக் குடி இருந்தாள் வெள்ளச்சி.

வெள்ளச்சியோடு அவருக்கு அண்மைக் காலத்துப் பழக்கம்தான். சுமார் நாலைஞ்சு வருஷத்து உறவு. வெள்ளச்சியின் பட்டியலில் அடிக்கடி சில பேர் ஏறும். சில பெயர்கள் வீழும். சமீப காலங்களில், மேலத்தெரு பால்கார பத்பநாபன், அவளைக் கொண்டிருந்தார். என்றாலும், முத்துபாண்டியையும் அவள் கைவிட விரும்பவில்லை. 'தாய்க்கு நாலு குழந்தைகள் இருந்தால், நாலையுமே அவள் விரும்புவது இல்லையா' என்று கேட்பார். யாருக்குத்தான் தத்துவம், மெய்ஞானம் லயிக்காது?

தோப்புக்கு வெளியே நின்று, ஜாக்கிரதையாக பால்காரன் வில் வண்டி நிற்கிறதா என்று கண்காணித் தார். இல்லை. ஆக அவர் தைரியமாகக் கதவைத் தட்டலாம். தட்டினார்.

"யாரு?" உள்ளிருந்த குரல் கேட்டது.

"நான்தான் முத்துப்பாண்டி"

கொஞ்சம் அமைதி. எண்ணெய் காணாத கதவு, நரநரவென்று சப்தத்துடன் திறந்துகொண்டது.

வெள்ளச்சி, கசங்கிய புடவை யுடனும், கலைந்த கூந்தலுடனும் நின்றிருந்தாள்.

"இப்பத்தான் வழி தெரிஞ்ச தாக்கும்!" என்றாள் வெள்ளச்சி. கலைந்த கூந்தலை முடிந்து கொண்டாள். "என்ன பண்றது வெள்ளை. தாழி நம்ம பிழைப்பு நாறிப் போச்சே... இந்தா..."

"என்னது!"

"உனக்குப் பிடிச்சதுதான்..''

பாயில் அமர்ந்தார்கள் இருவரும். நகர்ந்து சுவரில் சாய்ந்து அமர்ந்து கொண்டார் அவர். இரண்டு அலுமினிய டம்ளர்களை எடுத்தாள் வெள்ளை.

"எனக்கு வேணாம்..."

"நிறைய போட்டுக்கினியோ! பதார்த்தம் ஒன்னும் வாங்கியா ரல்லையா?"



7a

"மறந்துட்டேன்."

அவள் சாராயத்தில் தண்ணீர் கலந்து ஒரே 'தம்'மில் குடித்தாள்.

"எங்க ஊருலதானே இருக்கீரு?"

"ஊருலேதான் எங்க போறது. வேறே? மனுஷங்க, தாழி, தெய்வபயம் அத்துப் போயிட்டாங்க. தாழி ஊருல ஒருத்தனும் விளங்கப் போறது இல்லை..."

அவள் சிரித்தாள்.

"என்ன சிரிப்பு?"

அவள், ஊறுகாய் மட்டை தேடி எடுத்து வந்தாள். உட்கார்ந்து, மீதியையும் குடித்து முடித்தாள். ஊறுகாயை வழித்து நாக்கில் தடவிக் கொண்டாள்.

"வயிற்றாலே விடுற சாபம் எல்லாம் பலிக்குமா?"

"வயிற்றாலேயா!"

"பின்ன என்ன? நீரு, கொடை, பலின்னு ஊரை ஏமாத்திக்கிட்டு இருப்பீரு. ஜனங்க, ஏமாந்தா அவங்க நல்லவங்க. ஏமாறலைன்னா, நீரு சாபம் கொடுப்பீரு. என்னையா, நியாயம் பேசறீரு! வயிறு காஞ்சி சாபம் விட்டா அது பலிக்குமா!"

"நான் ஊரை ஏமாத்தறதா சொல்றே? கருப்புகூட பட்டினி கிடக்கிறான். அவனைத் திருப்திப் படுத்தினா, நாலு நல்லது நடக்குமா, நடக்காதா? நீயே சொல்லு"

"யார் பட்டினி கிடக்கிறான்னு சொன்னே?"

"நம்ம பெரிய கருப்புதான்..."

வெற்றிலையைத் துப்பிவிட்டுச் சிரித்தாள் வெள்ளச்சி.

"இந்தக் 'கப்சா'ல்லாம் என் கிட்டே வேணாம். பேய்கிட்டே நீ பேசினியாக்கும்... ஆச்சு. எனக்கும் நாற்பத்தி ஏழு. இதுவரைக்கும் ஒரு மூதி கூட என் கண்முன்னாலே வரல்லையே..."

"தூஷணை பேசாதே... வெள்ளை, நேத்திக்குச் சாயங்காலம் கூட, கருப்பு என்கூட நடந்து வந்தான். பாவம், மெலிஞ்சு போய்க்கிடக்கான். சவரட்ண இல்லை. அந்தக் காலத்துல, ஆடு, கோழின்னு நிறைய கிடைச்சுது. இப்ப, தாழி, எல்லாப் பயலும் இங்கிலீஷ் படிச்சுட்டு சாமி பூதம் இல்லைங்கறான். அவனுக்காகவே நான் ஒரு ஏற்பாடு பண்ணி இருக்கேன்..."

"ஊரை ஏச்சுப் பிழைக்கிற பொழைப்பு எதுக்கு பண்ணீரு? ஒழுங்கா ஏதானும் வேலையைப் பாரும்யா. வேணும்னா சொல்லு. பால்காரர் கிட்டே சொல்லி உனக்கு ஒரு வேலை போட்டுத் தரச் சொல்றேன். என்ன சொல்றீரு?"

"அவன் கிட்டயா!"

"ஏன்?"

அவள் பாயை உதறிப் போட்டு, போர்வையை அதன் மேல விரிந்தாள்.

"இந்தா சுருட்டு?"

❑❑

**ஜனங்க, ஏமாந்தா அவங்க நல்லவங்க. ஏமாறலைன்னா, நீரு சாபம் கொடுப்பீரு. என்னையா, நியாயம் பேசறீரு!**

❑❑

வெள்ளச்சி, சுருட்டைப் பற்ற வைத்து, புகையை விட்டாள். பெண் சுருட்டு பிடிப்பதை அதன் அழகை ரசித்தார் முத்துப்பாண்டி.

"ஏன் அவர்கிட்டே வேலை பார்க்கக் கூடாது?"

"அவன் பிரியாணிப் பொட்டலம் வாங்கி என்கிட்டயே உனக்குக் கொடுத்து அனுப்புவான். இது நமக்குத் தேவையா? நம்மாலே மாமா வேலை பார்க்க முடியாது. மந்திரவாதியா, மாமாவா? நீயே சொல்லு"

"உன் இஷ்டம்"

அவள் காறி எச்சிலை உமிழ்ந்தாள்.

"பணம் ஏதாச்சும் இருக்கா?"

"பேச்சி, தூது கொடுத்தான். கொடை போடனும் கோழி வாங்கனும்."

"ஏழு எட்டு ரூபாயை விட்டெறிஞ்சா. கோழி கிடைக்குது. நூறு ரூபாய் என்னத்துக்கு? அம்பது கொடுத்துட்டுப் போம். விடிஞ்சா செலவு இருக்கு."

"அம்பது போதுமா?" என்றபடி அதைக் கொடுத்தார்.

"பாவம் உமக்கும் வேணுமே! வச்சிக்கிடும்..."

**வி**நாயகா டாக்கிஸ், விளக்கும் அணைந்து கிடந்தது. மணி, இரண்டுக்கும் மேலே என்று புரிந்தது. முத்துப்பாண்டிக்கு ஜனங்கள் ஒருத்தரும் நடைபாதையில் இல்லை. போதை சுத்தமாகப் போய் விட்டிருந்தது. அவருக்கு. 'வெள்ளச்சி... வெள்ளச்சிதான்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டார். பேரன் பேத்தி எடுத்த இந்த வயசிலும், எப்படி ஒரு குதிரைத் தெம்பு? இதுகள்ளாம் ஒருவள வார்ப்பு! இது மாதிரி தொழில் பண்ணி வாழறதுக்கு, அதுக்குத் தக்க உடம்பு வேண்டும்தானே, இல்லையென்றால் பால்காரன் என்னத்துக்கு அவள்மேல், அள்ளிக் கொட்டுகிறான். எல்லாம் சுழிதான். அண்டமா முனிவர் எல்லாம் அடங்கும் இடம் அல்லவா? அடக்க ஸ்தலம். ஜனன வாயில். என்ன முரண்?

ஓடை சலசலத்தது. இறங்கிக் கால் கை முகம் கழுவிக் கொண்டார். முகத்தில் இருந்த வெற்றிலை எச்சிலைத் துடைத்துக் கழுவினார். புளியஞ் சாலையை கடந்து தெற்குப் புளிய மரத்தண்டை வந்து சேர்ந்தார்.

உடம்பு நெட்டி முறித்தது. மயிர் குத்திட்டது. உடம்பு ஆவேசம் வந்ததுபோல் ஆயிற்று. சுருட்டு வாசனை கம்மென்று கமழ்ந்தது.

கருப்பு, அவர் எதிரில் நின்றான்.

"வா... கருப்பா. உனக்கு நூறு வயசு. இப்பத்தான் உன்னை நினைச்சேன்"

"நூறா. நான் இந்த இடத்துக்கு வந்து ஐநூறு வருஷமாட்டு" என்றான் கருப்பு,

"ம்... மனுஷனுக்குச் சொல்றதை உனக்குச் சொல்லிட்டேன்." ஒரு விஷயமில்லாமல் அவர்கள் களத்து மேட்டுப் பக்கம் நடந்தார்கள்.

"பேச்சிப் பயலை அமுக்கிட்டேன். பய, பணம் கறந்திருக்கான். நாளை ராத்திரி பலி. ஷோக்கான கோழி. எல்லாம் உனக்காகத்தான் ராசா. பாவம். நீயும் தான் எத்தனை

நாள் பசியா கிடப்பே. நீயும் வேலையைக் கச்சிதமாய் பண்ணி இருக்கியே...

முத்துப்பாண்டி கருப்பன் முகத்தைப் பார்த்தார். அது சந்தோஷத்தில் இருந்ததாக அவருக்குப் பட்டது.

"எங்கேந்து வர்றீரு. கவிச்சை வாசனை வீசுதே"

''சரியான துர்வாசனைக் காரம்பா நீயி. வெள்ளச்சி வீட்டுல இருந்துதான். அதுக்கு உன் மேல நம்பிக்கையே இல்லைப்பா..."

''பயந்துக்கிறவனுக்குத்தான் நாங்க எல்லாம். அப்படித்தான் சிவனார் எங்களுக்கு வரம் கொடுத் திருக்கார். அவளே ஒரு பேய், நான் என்ன பண்ண முடியும், நீரே சொல்லும்.''

"அது சரி. நம்பினவருக்குதானே நாராயணன். நாளை ராத்திரிக்கு சரியா இரண்டு மூன்று மணிக்குள்ளாற வந்துடறேன். கோழி ரத்தமும், சாராயமும், அவ்ளோதானே?"

"அவ்ளோதான்."

"சுருட்டு?"

கருப்பன், திடுமென புகை விட்டது. எத்தனை பெரிய சுருட்டு.

"இது மாதிரி எவன் இப்போல் லாம் பண்றான்? எல்லாம் விரல் நீளம்" கருப்பன் சிரித்தார்.

களத்து மேடு வந்தது.

"இதுக்கு மேலே நான் வர முடியாது. அது மாடசாமி தங்கி இருக்கிற இடம். இப்படியே நின்னுக் கிறேன்"

"நல்லது. நாளைக்கு வர்றேன்"

"சரி. மறக்க மாட்டீரே.."

கொஞ்சம் தூரம் போய், திரும்பிப் பார்த்தார் முத்துப்பாண்டி. தென்னை மரத்துக்கும் மேலே உயரமாக நின்றான். கருப்பன்.

**பே**ச்சியின் மகள் மிரள மிரள விழித்தாள் 'ஹி... ஹி...' என்று குதிரை கனைப்பது மாதிரி சிரித்தாள். அப்புறம், ''எங்கேடா கோழி?'' என்றாள். முத்துப் பாண்டியைப் பார்த்து, "வாடா, என் மவனே, பேமானி" என்றாள் அவள்.

பெற்றோர்கள் மட்டுமல்ல. முத்துப்பாண்டியே கொஞ்சம் அதிரத் தான் செய்தார்.

"தாழி கருப்பன்தான். ரொம்ப 'ஸ்டாங்கா' பிடிச்சிருக்கான். தாழி... இன்னிக்கு அவனா, நானான்னு பார்க்கலைன்னா, நான் முத்துசாமி மகன் இல்லேப்பா."

"புடுங்கக்கூட முடியாது"

அம்மாக்காரியும் பேச்சியும் திடுக்கிட்டார்கள்.

"வண்டி வண்டியா பேசுது பாருங்க, இம்மாம் பொண்ணு."

"இவளா பேசறாள்? அந்தத் தாழில்லே பேசறான். இன்னும் அரை 'அவர்லே' பாரு..'

முத்துப்பாண்டி கோலமாவு வாங்கி, சக்கரம் வரைந்தார். பதினாறு மூலை கொண்ட சக்கரம். அதன் மேல் மந்திர எழுத்துக்கள் எழுதினார். அதன் மேல் பலகை போட்டு, பெண்ணை அமர வைத்தார்கள். பெண், தலையை விரித்துப் போட்டுக் கொண்டு பயங்கரியாக அமர்ந்திருந்தாள்.

வேப்பிலைக் கொத்தை எடுத்துக்கொண்டு, முத்துப்பாண்டி கேட்டார்.

"கோழி ரெடியா!"

"ரெடி சாமி"

"சாராயம்?"

"ரெடி"

"சுருட்டு?"

"வைக்கப்பட்டிருக்கு"

"என்ன சமையல்?"

"நீங்க சொன்ன மாதிரிதான். கோழிக் குழம்பு, மீன் குழம்பு, கரு வாட்டுக் குழம்பு."

"போட்டுப் பிசந்திட வேணாம். தனித்தனியாவே இருக்கட்டும்.'' அவருக்குத் தனித்தனியாகச் சாப்பிடத் தான் பிடிக்கும்.

"நான் சொன்ன மாதிரி மண் கலயங்கள் தயாரா?"

"ஆகா"

முத்துப் பாண்டி, வர்ணிக்க ஆரம்பித்தார்.

"வாடா கருப்பா.. வானத்தில் வாழ்வோனே...

தேடுவார்க்கு தெம்பூட்டும் தென்னை மரக் கருப்பா.

கண்ணுக்குத் தெரியாமல் விசுவருகில் வாழ்வோனே...

மனசுக்குத் தெரியாமல் மண் மேலே வாழ்வோனே...

கோழி ரத்தம் குடிச்சுவிட்டு குலமகளைக் காத்திடுடா...

சாராயம் குடிச்சுப்போட்டு சரவிளக்கைக் காத்திடுடா...

சுருட்டைக் குடிச்சுக்கிட்டு சுந்தரியைக் காத்திடுடா...

இறைச்சிக்கறி தின்னு இளமகளைக் காத்திடுடா...

பூசைகளை ஏற்று புத்திரியைக் காத்திடுடா...

கொடையை ஏற்றி கொழுகொம்பைக் காத்திடுடா...

ஒரு வழியாக நள்ளிரவு தாண்டி கருப்பன் போகச் சம்மதித்தான்.

"போறியா?"

"போறேன்"

"எந்த வழியா போறே!"

"வந்த வழியே போறேன்"

"திரும்பி வருவியா?"

"திரும்பி வரமாட்டேன்"

"மீண்டும் வருவியா?"

"எல்லை தாண்டி வரமாட் டேன்."

"சிவன் மேலே சத்தியமா?"

"சிவனார் மேலே சத்தியமா?"

"சரி... போ..."

"போறேன்..."

முத்துப்பாண்டி சொன்ன படியே, கலயங்களில் சோறு, கறி, குழம்பு என்று வைத்துக் கொடுத்ததை எடுத்துக்கொண்டார். பையில் சாராயமும், தோளில் கால் கட்டிய கோழி பாதி உயிரை வைத்துக் கொண்டு 'கீகீ' என்று குரல் எழுப்ப, முத்துப்பாண்டி, தட்சணைப்பணம் அம்பது ரூபாயுடன் நடந்தார். மனம், உற்சாகத்தில் குதி போட்டது. கருப்பன் காத்திருப்பான்.

புளியஞ் சாலைப் பக்கமாகத் திரும்ப இருந்தவர், ஒரு கணம் யோசித்தார். சவுக்குத் தோப்பு வழியாகத் திரும்பி நடந்தார். இன்றைக்கும் பால்காரன் வந்திருக்கக் கூடாது என்று கடவுளை வணங்கிக் கொண்டார். அவர் எதிர்பார்த்தபடி தான் நடந்தது. வெள்ளச்சி கதவைத் திறந்தாள்.

முத்துப்பாண்டிக்கு கருப்பன் நினைவு வரவே இல்லை. விடியும்வரை கருப்பன் மனிதனுக்காகக் காத் திருந்தது. ●

*Best Compliments*

**PAMBAN OIL MILLS LTD.**
**PAMBAN AGRO FOODS (P) LTD.**

No. 72 & 73 Usman Road, T. Nagar, Chennai - 600 017.
Phone : 434 3030, 434 1777

21. ஏ. கருப்பையா



நல்வாழ்த்துகள்

**எஸ். ஹசீனா,** தனி அலுவலர்

**செந்தமிழ் செல்வர் அண்ணாமலை பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனை சங்கம் லிமிடெட்**

நெ.கே.எச். 52 446, காந்திரோடு, காஞ்சிபுரம் - 631 501. தொலைபேசி : 22174

22. எம். சேனாதிபதி





23. எம். வேலாயுதம்

*Best Compliments*

**LONDON RUBBER COMPANY (INDIA) LTD.,**

TTK Group of Companies

6, Cathedral Road, Chennai - 600 086.

# தேவை :
# சீரிய தத்துவம்;
# சிறந்த படைப்புக்கள்

"வங்க எழுத்தாளர் மகாஸ்வேதா தேவிக்கு ஞானபீட விருது: நெல்சன் மண்டேலா வழங்கினார்'' என்னும் செய்தியைப் படித்தேன். அதையொட்டிச் சில சிந்தனைகள் எழுந்தன.

எதற்காக மகாஸ்வேதாவுக்கு இப்பரிசு?

ஏன் அகிலனுக்குப் பிறகு - 20-25 ஆண்டுகளுக்குப்பிறகு - தமிழனுக்கு இப்பரிசு இன்னும் கிடைக்கவில்லை?

சற்று சுயவிமர்சன ரீதியில் சிந்திப்போம்; ஆம், நமது ஆணவம், மேட்டிமைத்தனம், குறுங்குழுவாதம் இவற்றை ஒதுக்கிதள்ளிவிட்டுச் சிறிது யோசிப்போம்.

மகாஸ்வேதா தேவிக்கு இப்போது வயது 72; அவர் பாட்டாளி வர்க்கக் குடும்பத்தில் பிறந்தவரல்லர்; மத்தியதர வர்க்க, வங்கக் குடும்பத்தில் பிறந்தவர்; இன்னும் சொல்லப்போனால், எழுத்தாளர் குடும்பத்தில் உதித்தவர்; உயர்கல்வி பயின்றவர். சிறிதுகாலம் கல்வி நிலையங்களில் (பேராசிரியராகப்) பணியாற்றிவிட்டு, இலக்கியத்திற்காகத் தம் வாழ்வை அர்ப்பணித்தவர்.

இவரது 25க்கும் அதிகமான படைப்புக்கள், பல்வேறு இந்திய மொழிகளிலும், ஜப்பான், இத்தாலி மற்றும் பிரெஞ்சு மொழிகளிலும், மொழிபெயர்க்கப் பெற்றுள்ளன.

இத்தகைய சாதனைகள் இன்றைய தமிழ் எழுத் தாளர்களுக்கும் உண்டு; ஆனால், இவர்களில் எத்தனை பேர் மகாஸ்வேதாவைப்போல், இலக்கியப்படைப்பிலும், சொந்த வாழ்விலும் ஒளி விளக்காகத் திகழ்பவர்கள்? தன்னலம் துறந்து, மக்கள் நலனுக்காக, அர்ப்பண உணர்வுடன் இயங்கிக் கொண்டிருப்பவர்கள்? தமது எழுத்தை ஓர் இலக்கிய வேள்வியாக மாற்றிக் கொண்டிருப்பவர்கள்? நாம் ஒவ்வொருவரும் சுய விமர்சனம் செய்துகொள்ள வேண்டும்....

மகாஸ்வேதாவின் படைப்புக்கள், உலகப் புகழ் பெற்றுள்ளன என்றால், அதற்குத் தகுந்த காரணம் உண்டு.

முதலாவதாக, மகாஸ்வேதாவின் சீரிய இலக்கியத் தத்துவம்; வாழ்க்கைத் தத்துவம். இது உலகு தழுவிய மனித நேயத்தையும், மனித விடுதலையையும் ஆதாரமாகக் கொண்டது.

சுரண்டல், அடக்குமுறை ஒடுக்குமுறை, ஏற்றத்தாழ்வுகள் இன்றி, மனித குலம் விடுதலை பெற்றுக் கவுரவத்துடன், கம்பீரமாக, வளத்துடன், வாழ்வாங்கு வாழவேண்டும்; மனித உரிமைகளுக்கான விடுதலைப் போராட்டத்தை எழுத்தாளன் உறுதியாக ஆதரிக்க வேண்டும்; இதுவே மகாஸ்வேதா தேவியின் இலக்கியக் கோட்பாடு; அவர் அயராது பின்பற்றும் வாழ்க்கை நெறி.

இந்தியாவை எடுத்துக் கொண்டால், தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடியினர் இவர்களின் விடுதலைக்காகவும், பெண் விடுதலைக்காகவும், இவரது பேனா சொற்சித்திரங்களைத் தீட்டுகிறது; கலைப்படைப்புகளை வழங்குகிறது.

இரண்டாவதாக, இலக்கியத்தில் உயர்ந்த இலட்சி யங்களைப் பேசுவதுடன் நின்றுவிடாமல், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், மகளிர்ஆகியோரின்விடுதலைப் போராட்ட இயக்கங்களுக்குத் தோள்கொடுக்கும் வீராங்கனை யாகவும் இவர் விளங்குகிறார்; தமது

**தி.க. சிவசங்கரன்**

ஞானபீடப் பரிசுப் பணத்தை, இந்த இயக்கங்களின் வளர்ச்சிக்குக் காணிக்கையாகவும் வழங்கிவிட்டார்.

எனவேதான், 1996-ஆம் ஆண்டுக்கான ஞானபீடப் பரிசு இவருக்கு. அதுவும், தென் ஆப்பிரிக்காவின் தேச விடுதலைக்காக சுமார் 27 ஆண்டுகள் தனிமைச் சிறையில் உறுதியுடன் போராடியவரும், மாவீரர், என்னும் சொல்லுக்கு இலக்கணமாகத் திகழ்பவருமான நெல்சன் மண்டேலாவின் திருக்கரங்களால் - நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களுடன் வழங்கப் பெற்ற விருது இது.

ஒரு தமிழ் எழுத்தாளனுக்கு, வருங்காலத்தில் ஞானபீட விருது கிடைக்க வேண்டும் என்பதே என் விருப்பம். ஆனால், அவன் மகாஸ்வேதா தேவியைப் போல் இலட் சியத்திலும், படைப்பாற்றலிலும், மிக உயர்ந்தவனாக, மிகச் சிறந்தவனாக இருத்தல் வேண்டும்; அத்தகைய எழுத்தாளன் நம்மிடையே உருவாகிக் கொண்டிருக்கிறான் என்றே நான் நம்புகிறேன்; முழுவீச்சுடன் அவன் வெளிப்படுவதற்கு இன்னும் பத் தாண்டுகளோ, பதினைந்து ஆண்டுகளோ ஆகலாம். இது காலத்தின் தீர்ப்புக்கு உரிய விஷயம்; எனினும் அந்தத் தனிப்பட்ட எழுத்தாளனின் தத்துவப்பார்வை, தலை சிறந்த படைப்புக்கள், அவை இந்திய மொழிகளிலும், உலக மொழிகளிலும் அங்கீகாரம் பெறுதல், மற்றும் நம் நாட்டின் அரசியல், பொருளாதார, சமுதாய, கலாசாரச் சூழ்நிலைகள், வரலாற்றுப் போக்குகள் முதலிய அம்சங்களும் முக்கியமானவை; அடிப்படையானவை.

வேறு ஒரு கோணத்தில் பார்த்தால், மகாஸ்வேதா தேவியின் வாழ்வும் படைப்புக்களும், நமது மகாகவி பாரதியின் இலட்சியங்களை அடிப் படையாகக் கொண்டவை என்றும் கூறலாம்.

சுதந்திரம், சமத்துவம், சகோதரத் துவம் என்னும் குறிக்கோள்களைச் சமூகநீதி, சமுதாயவிடுதலை இவற்றுக்கான போராட்டத்துடன் இணைத்தவன், நமது மகாகவி பாரதி. அவற்றை உயிர் மூச்சாகக் கொண்டு காலத்தால் அழியாத படைப்புக்களைக் கவிதையிலும், உரை நடையிலும் தந்தவன் பாரதி.

ஆகவே, மகாஸ்வேதாவை, மகாகவி பாரதியின் உலகுதழுவிய இலக்கிய வாரிசு என்று நாம் பாராட்டலாம்!

என்னைப் பொறுத்தவரையில், எனது 50 ஆண்டு இலக்கிய வாழ்க்கைக் கண்ணோட்டத்தில், என்னால் ஒன்று கூற முடியும் :

வருங்காலத்தமிழ் இலக்கி யத்தின் வளர்ச்சியும், எழுத்தாளனின் மேம்பாடும் பாரதி, பாரதிதாசன், வ.ரா. புதுமைப்பித்தன் ஆகியோரின் மரபை, வரலாற்றுக் கண்ணோட்டத் துடன், இயக்க இயல் பார்வையுடன் நாம் பின் பற்றுவதிலும், இந்த மரபை மேன் மேலும் செழுமைப்படுத்து வதிலும் அடங்கியுள்ளன.

இந்தப் பாதையில் செல்லும் எழுத்தாளன் ஞானபீடப் பரிசைப் பெறலாம். பெறாமலும் போகலாம்; அது முக்கிய விஷயமல்ல.

---

**இன்றைய (தமிழ்) எழுத்தாளன் மகாஸ்வேதா தேவியின் நிலைக்கு உயர வேண்டுமானால், என்ன செய்ய வேண்டும்? கலை இலக்கியத் துறையில், கொள்கை அளவிலும், நடைமுறையிலும், அவன் ஒரு பஞ்சசீலக் கோட்பாட்டைக் கடைப் பிடிக்க வேண்டும். அவை வருமாறு.**

1. **தலித்தியம்**
2. **பெண்ணியம்**
3. **சுற்றுச் சூழலியம்**
4. **தமிழியம் (இதைத் தாய்மொழி இயம் என்றும் கூறலாம்)**
5. **மார்க்சியம்**

---

சொல்லப்போனால், அவன் பாரதியைப்போல், எண்ணற்ற துன்பங்களை அனுபவிக்கக்கூடும், நெல்சன் மண்டேலாவைப்போல், நீண்ட நெடுங்காலம், கொடிய சிறைவாசத்தைத் தாங்க நேரிடலாம்; சிலி நாட்டுப் பெருங்கவிஞன் பாப்லோ நெரூதாவைப்போல், ஏகாதி பத்தியவாதிகளின் துப்பாக்கிகளுக்கு இரையாகலாம்; எனினும், தமது மக்களுக்கு மட்டுமின்றி, உலக மக்களின் விடுதலைக்காகத் தமது படைப்பாற்றலை அர்ப்பணிக்கும் கலைஞனுக்கு அழிவேயில்லை.

இன்றைய (தமிழ்) எழுத்தாளன் மகாஸ்வேதா தேவியின் நிலைக்கு உயர வேண்டுமானால், என்ன செய்ய வேண்டும்? கலை இலக்கியத் துறையில், கொள்கை அளவிலும், நடைமுறையிலும், அவன் ஒரு பஞ்சசீலக் கோட்பாட்டைக் கடைப் பிடிக்க வேண்டும். அவை வருமாறு.

1. தலித்தியம்
2. பெண்ணியம்
3. சுற்றுச் சூழலியம்
4. தமிழியம் (இதைத் தாய்மொழி இயம் என்றும் கூறலாம்)
5. மார்க்சியம்

இவை வறட்டுக் கோட்பாடு களல்ல; அடிப்படை உரிமைகளை வலியுறுத்துகின்ற, ஆழமான தத்துவக் கோட்பாடுகள்; ஒவ்வொரு படைப்பாளிக்கும் கலைஞனுக்கும் இன்று தேவையான கோட்பாடுகள்.

இன்றைய வணிக இலக்கியச் சூழலிலும், நுகர்வுக் கலாசார மோகம் திட்டமிட்டு வளர்க்கப்படும் சூழலிலும், இந்தப் பஞ்சசீலக் கோட்பாடுகளை ஒரு படைப் பாளியால் பின்பற்ற முடியுமா?

முடியும், நிச்சயம் முடியும்! (மனம் இருப்பின், மார்க்கம் உண்டு.) ஆனால், அவன் ஒரு மகாஸ்வேதாவாக இருக்க வேண்டும்; அவரைப் போன்ற விழுமிய ஆளுமையைப் பெற்றிருக்க வேண்டும்; விட்டுக்கொடுக்காத மன உறுதியையும், தெள்ளத் தெளிந்த வாழ்க்கைத் தத்துவத்தையும், தீரம் மிக்க போர்க்குணத்தையும், தன்னலம் கருதாத பண்பட்ட உள்ளத்தையும், புரட்சிகரமான இயக்கச் சார்பையும் பெற்றிருக்க வேண்டும்.

இந்திய சுதந்திரத்தின் 50-ஆம் ஆண்டு விழா, வருகிற ஆகஸ்டு 15-ல் வருகிறது; கி.பி. இரண்டாயிரம், இன்னும் இரண்டரை ஆண்டுகளில் நம்மை எதிர் நோக்குகிறது.

வருங்கால இந்தியாவின் வர லாற்றை உருவாக்குவதில் தமிழ்ப் படைப்பாளிகளுக்கும் ஒரு மகத்தான பங்கு உண்டு; இதை நாம் தட்டிக் கழிக்க முடியாது.

வங்கம் எப்போதும் போல, இப்போதும் நமக்கு வழிகாட்டுகிறது; இந்திய இலக்கியத்தின் திசைவழியை நிர்ணயிக்கும் சக்தியாக அது மிளிர் கிறது; அதற்கு ஓர் எடுத்துக்காட்டு, மகாஸ்வேதா தேவி!

அவர் ஒரு மக்கள் கலைஞர். அவரது சீரிய தத்துவமும், சிறந்த படைப்புக்களும், போற்றத்தக்கன; இன்றைய கால கட்டத்தில், அவை நமக்கு மிகவும் தேவை. ●



24. கே. முரளிதரன்

Best Compliments
**TAMILNADU INSTITUTE OF TECHNOLOGY**
151, Bhavani Main Road, Asokapuram, Erode - 4.



25. வல்சன் கொலெரி

*Best Compliments*

**NAGALAKSHMI FLOUR MILLS LTD.,**

Dindigul.



26. கே.ஜி. நரேந்திர பாபு

*நல்வாழ்த்துகள்*

**எஸ். செல்வராஜ்,** எம்.காம்.எச்.டி.சி., செயலாளர்

**அ. ஆரோக்கியசாமி,** எம்.ஏ., எச்.டி.சி., தனி அலுவலர்.

# தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தருமபுரி

# சக்தித் தாண்டவம்

பொன்னீலன்

''**அ**தோ வந்துவிட்டார் அன்னை'' மகிழ்ச்சி தாங்காமல் நந்திதேவர் போட்ட கூச்சல் பக்கத்துப் பனிச் சிகரங்களிலெல்லாம் எதிரொலித்தது. ''ஆம் இறைவா, அதோ பாருங்கள். எருது விழிகளில் ஆனந்தம் தாண்டவமாட அய்யனுக்கு மலையடி வாரத்தைச் சுட்டிக்காட்டினார் அந்த மாட்டுத்தலையர்.

நந்தி தேவரின் மகழ்ச்சிக்குக் காரணம் இருந்தது. தேவியைத்தேடி இரவு முழுவதும் கால்கடுக்கக் காடு நாடெல்லாம் அலைந்து சிரமப்பட்டவர் அவர்தானே. பாவம் அய்யன். இரவு ஒரு பொருட்டு நேரம் கூடக் கண் மூடவில்லை. சாயங்காலமே காணாமல்போய்விட்ட அன்னை எங்கே போனாளோ, என்ன ஆனாளோ என்கிற கவலை ஒரு பக்கம், கணவன் நான் குத்துக்கல்லாய் இங்கே இருக்க, சொல்லாமல் கொள்ளாமல் அவள் பாட்டுக்குக் கிளம்பிப் போய்விட்டாளே என்கிற ஆத்திரம் மறுபக்கம்: என்ன பாடுபட்டுப்போனார்.

''ஸ்ஸ்ஸ்! இரையாதே!'' தீச்சுடர் போன்ற தன் ஆட்காட்டி விரலை உதட்டில் அழுத்தியபடி நந்தியைக் கடுமையாகப் பார்த்தார் முக்கண் மூர்த்தி. திருக்கயிலாய மலை உச்சியில் ஒரு பனிப்புற்றின் பின்னால் மறைந்து நின்றுகொண்டிருந்தார் அவர். அவர் பின்னால் கயிலாய மலையின் பனிக்குகை மாளிகை... ஆணும் பெண்ணுமான சிவலோக வாசிகள்... காலை வெயிலில் பனி மூட்டங்கள் விலகி புலவாகிக் கொண்டிருந்தன.

''பார், எவ்வளவு உல்லாசமாக வந்து கொண்டிருக்கிறாள் அந்தப்பெண்'' கோபத்தில் சிவனின் முறுக்கு மீசை துடித்தது. கணவனிடம் அனுமதிபெறாமல் போய்விட்டோமே என்கிற குற்ற உணர்வு துளியாவது இருக்கிறதா அவள் முகத்தில்?''

உண்மைதான். அன்னை தடம் பார்த்து வழி நடக்கும் மரபுக்குரிய பெண்ணாக வரவில்லை. குதூகலம் நிறைந்த சிறுமிபோல அவர் துள்ளிக்குதிக்கிறார். பாறைக்குப்பாறை அலட்சியமாய் தாவுகிறார். பூக்களைப் பறித்து ஆசையோடு நுகருகிறார். வண்ணத்துப் பூச்சிக்களைத் துரத்திக் கொண்டு ஓடுகிறார்.

''பெண்ணா இவள் ஓ மாயப்பிசாசு! இவளால் இந்தப் பெண்ணினமே கெட்டுக்குட்டிச்சுவராய்ப் போகப் போகிறது'' சிவனின் உதடுகள் இகழ்ச்சியாய் மடிந்தன.

'சிவ சிவ' அதிர்ச்சியில் தன் காளைச் செவிகளைப்



ஓவியம் : மனோகர்

பொத்திக் கொண்டார் நந்திதேவர்..

''தேவா, அவர் பிரபஞ்சத்தையே பெற்று வளர்க்கும் அன்னை! சக்தியின் ஊற்று! அவளையா இப்படிச் சொல்லுகிறீர்கள்?''

''நந்தீ!'' விஷக்கறை படிந்த கருப்புப் பற்களைக் கடித்தார் அய்யன். கணவனிடம் கூட சொல்லிக் கொள்ளாமல் இப்படி ஓடிப்போகும் இவளா உலகத்தின் அன்னை? இவளைப்பின்பற்றினால் உலகம் என்ன ஆகும்?'' தலையை அவர் மறுத்துக் குலுக்கிய வேகத்தில் கங்கை தாறுமாறாய்ப் பாய்ந்தது. நல்ல பாம்பு சடையைப் பல்லால் கவ்விக் கொண்டு புடலங்காய்போல் தொங்கிற்று.

அய்யன் சொன்னது உண்மை தான். அம்மைக்குக் குதூகலம் அதிகம் தான். கயிலாயமலையின் அடிவாரத்தில், கங்கையின் கரையோரம் தங்கமாய்த் தகதகக்கும் கூழாங் கற்களின் மீது உல்லாசமாகத் தாவித்தாவி மேலே வந்து கொண்டிருந்தார் அவர். நதியின் இரண்டு பக்கமும் ஓங்கி வளர்ந்த தேவதாரு மரக்காடு காற்றில் பாடுகிறது. அந்தப் பாடலுக்கு நடனம் ஆடுவதுபோல இருக்கிறது அன்னையின் அசைவுகள். கருப்புப் புறாக்களாகப் பாதங்கள் பாறைக்குப் பாறை தாவுவதும் தள்ளாடும் உடலை சமனப்படுத்திக் கொள்வதற்காக இறக்கைகள் போல் கைகள் விரிவதும் மடிவதும்... நூல் இடைநெறிவதும், குழைவதும், காற்றில் கருங்கேசம் மிதப்பதும் அமிழ்வதும்...

அன்னையை இவ்வளவு அழகாக அவர்கண்டு எத்தனை யுகங்கள் ஆகிவிட்டன.. நந்திதேவர் நினைவு பின்னோக்கி நகர்ந்தது... அந்தக் கொடியநாள்! அன்றுதானே அண்ணல் ஊர்த்துவ தாண்டவம் ஆடினார். நாணத்தால் காலைத்தூக்கி ஆடத் தயங்கிய அன்னையை அன்றுதானே அவர் அடிமைப்படுத்தினார். அன்று முதல் தானே உலகெங்கும் பெண்மை ஆண்மைக்கு அடிமைப்பட்டது. காதல் காமமானது. காதல் கடவுள் எரிந்தே சாம்பலானான்... ஓ.. அந்த நாசமாய்ப் போன அன்றைய நாணத் துக்காக எத்தனை இரவுகள் ஏங்கி ஏங்கிக் கண்ணீர் வடித்திருப்பார் அன்னை!...

அதன்பின் இன்றுதான் நிஜமான புன்னகை மலர்ந்திருக்கிறது அன்னையின் திருமுகத்தில்! நிலைக்குமா இது? வெப்பப் பெருமூச்சுவிட்டார், அவர். அய்யனின் கோபத்தையோ நந்தியின் சோகத்தையோ சிறிதும் அறியாமல் துள்ளிக்குதித்து வந்து கொண்டிருந்தார் அன்னை. அன்னையின் சிங்க வாகனமோ அதற்கு ஒருபடிமேலே! பாறைக்குப்பாறை தாவி அது குட்டிக்கரணம் போடுகிறது.. ஆ! இது என்ன, சிங்கம் கருப்பாயிருக்கிறதே? அன்னையின் சிங்கம் தங்க நிறமல்லவா? அது எங்கே போயிற்று? எங்கிருந்து பிடித்து வருகிறார் இந்தக் கரும்பூதத்தை'' முணுமுணுத்தார் நந்தி.

கயிலாயமலையின் அடிவாரப் படியை அன்னை நெருங்க நெருங்க அய்யன் கோபம் கொழுந்து விட்டெரிகிறது. அன்னையின் சுதந்திரத் தோற்றம்.. கண்களின் சுதந்திரச் சுடர்... பாம்புக்குப் பதிலாக அவர் கழுத்திலே தொங்கும் பல வண்ண அல்லிமலர் மாலைகள், திரிசூலம், ஏந்திய கையில் ஒரு சூலமாக ஒற்றைக் காஷ்மீர் ரோஜா யாருக்காக அந்தமலரை ஏந்துகிறாள்? காதல் மயக்கத்தில் என்ன பாடலைப் பாடுகின்றார்? என் மயக்கத்தில் மயங்கி என் முயக்கத்தில் உருக வேண்டியவள்.. தானாக மயங்கி என் தகுதியைத் குலைக்கிறாளே ரத்தமாய் சிவந்து விட்டன அய்யனின் கண்கள். ஆத்திரத்தில் அவர் உடம்பு நடுகியது.

''தேவா, அவர் பிரபஞ்சத்தையே பெற்று வளர்க்கும் அன்னை! சக்தியின் ஊற்று! அவளையா இப்படிச் சொல்லுகிறீர்கள்?''

''நில் அங்கே, யாரைத் தேடிக் கொண்டு வருகிறாய்?'' அய்யனின் இடிக்குரலில்-நடுங்கிய வெண்புறாக் கள் தங்கள் குகைக் கூடுகளை விட்டுப் பறந்தன.

அந்தச் சத்தம் காதில் விழுந்த தாகக்கூட காட்டிக் கொள்ளவில்லை அன்னை. அதே குழந்தைத்தனம், அதே உல்லாசம், கருஞ்சிங்கத்தின் முதுகில் பாய்ந்து பிடரியைப்பிடித்துக்கொள்ள, அது இரண்டு இரண்டு படிகளாக மேல் தாவிக்கொண்டிருந்தது.

''நில், பதில் சொல்லிவிட்டு மேலே வா. இரவெல்லாம் எங்கே போயிருந்தாய்?''

''மறந்துவிட்டாயா?'' சிங்கத் தின் கரும்பிடரியைப் பாசத் தோடு வருடிக்கொடுத்தார் அன்னை. நம் வேலன் வள்ளிக்குத் திருமணநாள் அல்லவா இன்று''

"வேலன்! நரநரவென்று பல்லைக் கடித்தார் சிவன். குறத்தியைக்கட்டி என் குலப்பெருமையைக் கெடுத்த மூடன்! அவன் வீட்டுக்கு யாரைக் கேட்டு விட்டுப் போனாய்?

அன்னையின் கருநீலவட்ட முகம் நந்திதேவன் பக்கம் திரும்பிற்று.

''ஏன் நந்திதேவா, சொல்லவில்லையா நீ? ஈசனிடம் சொல்லச் சொல்லிவிட்டுத்தானே போனேன்?''

நந்திதேவர் விழித்தார். எப்படிச் சொல்ல முடியும் அவரால்? மானசரோவர் ஏரியில் தேவமகளிருடன் அய்யன் மாலை முழுவதும் நீராடிக் கொண்டிருந்தார். அதனால் சொல்ல இயலவில்லை என எப்படிப் பதில் சொல்லுவது?

பொய் சொல்லுகிறாய்! வலது பாதத்தை அய்யன் தரையில் ஓங்கி மிதித்தபோது கைலாயமே நடுங்கிக் குலுங்கியது. பனிச்சிகரங்கள் நொறுங்கிச் சரிந்தன. ''ஒரு இரவு இல்லை. இரு இரவு இல்லை, பல இரவுகளாகவே நீ போய்க் கொண்டுதான் இருக்கிறாய்! சொல் எங்கே போகிறாய்?''

பூவைப்போன்ற தன் வலது பாதத்தைப் படியில் நாட்டிய பாவனையில் லேசாகத் தட்டினாள் தேவி. கலிர் என்ற சதங்கையொலி எழுந்தது `இதற்குத்தான்' முறுவல் பூத்தார் அவர்.

கோபம் தலைக்கு ஏறியது. சிவனுக்கு கணவனின் அனுமதி பெறாமல் பெண் வெளியே செல்லக் கூடாது. சொல் நீ சென்றது நாட்டியம் கற்கவா... அல்லது வேறு...?

''அனுசுயாவிடம் நீங்கள் பிச்சைகேட்கப் போனீர்களே அது போலப் போகவில்லை நான்!'' கலீரென்று அன்னை சிரித்தார். புதிய கலையைக் கற்றுக்கொள்ளப் போனேன். மனிதருக்கு விடுதலை அருளுகின்ற புதிய கலை அது''

அய்யனின் ஆண்மைச் செருக்கு தீப்பற்றிக்கொண்டது. எரிந்தார் அவர்.

நான் ஆடவன். எங்கும் போவேன்! அது என் இஷ்டம்! நீ பெண், கணவனின் அனுமதி பெற்றுத்தான் வெளியே போக வேண்டும். நாட்டியம் பயில்வதற்கென்றாலும் அதுதான் விதி! அதுமட்டுமல்ல, உன் ஆடை மாறியிருக்கிறது! அலங்காரம் மாறியிருக்கிறது! நம் பண்பாட்டை அழிக்கிறாய் நீ!

''பண்பாட்டை அழிக்கிறேனா? அன்னையின் முகத்தில் ஒரே கணம் காளி தோன்றினாள். ஆடை என்பது என்ன? முழுமறைப்பும் முழு சுதந்திரமும், முழு அழகும் தரும் புறப்புனைவு தானே அது? இந்தப் புனைவில் என்ன குறைகண்டீர்கள்.

'சக்தீ' தீ எரிந்தது சிவனின் சொற்களில். ''கோபத்தை மூட்டி என்னைக் கொடியவனாக்காதே. அன்று பட்ட பாட்டை அதற்குள் மறந்து விட்டாயா?''

''எப்படி மறப்பேன்!'' புளிப்பாக முறுவலித்தாள் அன்னை. அதை மறக்க முடியாததனால் தானே இத்தனையும்!

அவ்வளவுக்குப் போய் விட்டாயா? ஆத்திரத்தில் அய்யனின் நீலமணி விம்மிப்புடைத்தது. ''நீ பூலோகத்துப் போக புது நாட்டியம் கற்றுக் கொள்ளத்தான் என்பது எனக்கு ஏற்கனவே தெரியும்! கணவனை வெற்றி கொள்வதில் மனைவிக்கு அத்தனை ஆர்வமா? என்ன கற்றுக் கொண்டாலும் உன்னால் என்னை வெல்ல முடியாது. தோல்வி உன் பிறவியிலிருக்கிறது பெண்ணே!''

சட்டென்று கூம்பிவிட்டது அன்னை முகம். தன் கையிலிருந்த வெள்ளை ரோஜாவைப் பார்த்தார். எத்தனை ஆசையோடு இந்த ரோஜாவைக் கொண்டு வந்தார் அவர். அய்யனிடம் இதைக் கொடுக்க வேண்டும் ''நேசா, பல்லாயிரம் ஆண்டுகள் அடிமைத்தனத்துக்குப்பின் மீண்டும் உலகில் சமத்துவமும் காதலும் மலரத் தொடங்கிவிட்ட அதைப் பார்த்த பரவசத்தில் இதோ உன்னைத்தேடி நானும் வந்து கொண்டிருக்கிறேன்! ஆயிரக்கணக்கான ஆண்டு அடிமைத் தனத்துக்குப்பின் மீண்டும் நாம் காதலிக்கத் தொடங்குவோம். ஆம், எங்கே சமத்துவம் மலருகிறதோ, அங்கே தான் காதலும் மலரும்... அந்த அற்புத உணர்வின் சின்னமாக அல்லவா இந்த மலரைக் கொண்டு வந்தேன். அது வாடுகிறதே! உலகம் முழுவதும் மீண்டும் காதலும் பெண்மையும் வாடிப்போகுமே? இன்றும் உன் 'நான் கரைந்து நாம்' ஆகவில்லையா? அன்பே, அதோ கிழக்கே மிதக்கும் புதிய சூரியன் பேசுவது கேட்கவில்லையா? தூய பனிச்சிகரங்களில் தவழும் காற்று பாடுவதைக் கேட்கவில்லையா.

சவுக்குக்குப் பதிலாக மலர்ச் செண்டுகள்...

புதியபோர் முறையைப் பழகிக் கொள்!

வா

இருவரும் ஆடுவோம்

ஒருவராக!

பழுக்கக் காய்ச்சிய இரும்பாய்ச் சிவந்துவிட்டது அய்யன் முகம். இமைகளை முட்டிக்கொண்டு நடு நெற்றியில் புடைத்தது மூன்றாவது கண்.

அன்னையோ தன் மூன்றாவது கண்ணைச் செல்லமாய் சிமிட்டினார் வா, ஆடவா!

''நந்திதேவா!'' கூச்சலிட்டார் அய்யன் ''தட்டடா மேளத்தை இவள் இன்னும் ஒருமுறை என்னிடம் பாடம் கற்றுக்கொள்ளட்டும்.''

நந்திதேவர் மத்தளத்தை எடுக்க ஓடினார். சிவலோகப் பாடகர்கள் கின்னரங்களையும் மற்றும் கருவிகளையும் தூசுதட்டி தயார்செய்தனர். மற்றுமுள்ளவர்கள் ஆடலுக்கு இடம் விட்டு, முற்றத்தில் வட்டமாய்ச் சூழ்ந்தார்கள்.

தத்தித்தோம்
தகதிமிதோம்
தகதிமி தகதமி தோதம்...

மத்தளம் முழங்க, கின்னரங்கள் இசைபாட

தன் பொற்பாதத் திருக்கழல் கலிரென்று ஒலிக்கத் தரையைத்தட்டி அபய முத்திரை காட்டிப் போட்டியைத் தொடங்கினார் அய்யன்.

தத்தித் தோதம்
தகதிமி தோம்
தகதிமி தகதிமி தோம்.
நானே உலகம்
நானே உயிர்கள்
நானே விண்ணும் வெளியும்
நானே யாவும்
என உணர்வீரே
என்னில் எல்லாம் கரைவீரே!

ஒன்றினில் அனைத்துமே ஒடுங்கிடும் இறுக்கத்தில் தீப்பிழம்பாகச் சுழன்றது அய்யன் உடல்.

திடுமெனக் கருமின்னல் ஒன்று அய்யன் முன்னே துள்ளிக் குதிக்க, அதன் நீலவிழியில் கருணை சுரக்க

தத்தித்தோம்
தகமிதோம்
தோம்தரிகிடதிமிதோம்

மயில் போலத் துள்ளித்துள்ளி நடந்தார் அன்னை.

உலகமும் நானே,
உயிர்களும் நானே
விண்ணும் வெளியுமே நானே
யாவுமே நானே
எனை உணர்ந்தேனே
யாவுமாய் நான் கரைந்தேனே!

அதனால்

சமத்துவம் எழுக,
சவுக்குகள் ஒழிக,
மலர்களைத் தூதராய் விடுக
காதல் மாளிகையின்
கதவுகள் திறக்கக்
கனிந்திடும் பாடலே வருக!

அனைத்திலும் ஒன்றென உணர்ந்திடும் விரிவில் அன்பெனும் மேகமே பொழிக!

கருணைப் புனல்கண்டு சீறிற்று வெம்மை அனல் 'என்னை அணைக்கப் பார்க்கிறாயா? காட்டுத்தீயாய்ச் சுழன்றார் அய்யன்.

அவர் பாதங்கள் பறவைகளாயின. நெடிய கைகளோ எரியும் ஆன்மாவின் இறக்கைகளாயின. கணந்தோறும் மாறும் கதிரவனின் சாயல்கள்போல் ஆற்றலின் ஆயிரத்தெட்டுச் சாயல்களும் அய்யனின் முகத்தில் மாறிமாறிக் கொப்புளித்தன.

தீம்தரிகிடதீம்தரிகட
தத்தீம்தரிகிட ததிங்கிட

அய்யன் சுழன்றார். நெருப்புச் சடைமூடி எட்டுதிக்கிலும் பக்கத்துக்கு ஏழாய் பரவிச்சுழன்றது. சுழற்சி வேகத்தில் இளம்பிறை முழுநிலவாய் உருண்டது. தலை சுற்றித் தடுமாறி கங்கை அன்னை கண்ணை மூடிக்கொண்டாள். வாலால் அய்யனின் நீல மணி மிடற்றை இறுக்கியபடி பாம்பும் சுழன்றது.

தீம்திம் என உடுக்கை ஒலிக்க ஒ ஒவென நெருப்பு சிரிக்க யானைத்தோல் சுழன்று விரிய அய்யன் ஆடிய பொழுது, சிகரங்கள் பொடியாயின. நட்சத்திரங்கள் உதிர்ந்து சிதறின. சுடுகாட்டுப் பேய்களெல்லாம் கயிலாயத்தில் குவிந்து கூக்கூவெனச் கூவிக் கூத்தாடின.. அந்தக் கூச்சலின் நடுவே அண்ணலின் வலதுகால் செங்குத்தாக மேல் உயர்ந்தது. கால் விரல்கள் செவிக்குண்டலத்தைச் சுழற்றித் திரும்பவும் பொருத்தின.

ஆடு! அல்லது அடிமைத்

தனத்தை ஒப்புக்கொண்டு அய்யன்முன் முழங்கால் போடு! ஆடவர் கூட்டம் விண்ணதிரக் கை கொட்டியது. ஆண்மை வென்றது ஆண்மை வென்றது அனைத்திலும் தலையாய் நின்றது?

பெண்களோ மருண்டனர், ஆயிரம் ஆயிரம் ஆண்டுத் துன்பங்கள் கொடுமைகள் ஏக்கங்கள். அவர்கள் முகங்களில் கொந்தளித்தன. படிப்படியாக இப்போதுதான் மூச்சுவிடவாவது சலுகை கிடைத்திருக்கிறது. இதையும் இழந்து மீண்டும் பழைய அடிமை நிலையில் அழிவதா? வேண்டவே வேண்டாம். அன்னையே போட்டியிலிருந்து விலகிவிடு! அய்யனிடம் மன்னிப்புக் கோரிவிடு. இன்னும் ஒருமுறை தோற்று நாம் அடிமைப்பட்டால் அதை நம்மால் தாங்க இயலாது! கிடைத்திருப்பதில் திருப்திபடு. போராட்டத்தை விட்டுவிடு.

அன்னையின் கருப்பு நிலா முகத்தில் குறுநகை அரும்புகிறது. பூப்போலச் சொல்லுகிறார்.

புல்லடிமைத்தனம் புதைந்து போகப்புதுயுகம் பிறந்துவிட்டது...

பெண்களே அஞ்சாதீர்?

''கொட்டுங்கள்'' கலைஞர் களைப் பார்த்து அவர் கைகள் உயர்ந்தன.

அய்யன் ஆடிய அதே ஆட்டம். ஆனால் நீ ஆடியதற்குப் பதில் இந்தப் பூ ஆடுகிறது. நயத்துடன் இசையுங்கள். நிறைந்த கனிவுடன் தட்டுங்கள்.

முன்னும் பின்னுமாக நடந்து, பக்கவாட்டிலே நகர்ந்து, திடுக்கென பாதங்களைத் தரையில் தட்டி, பந்துபோல உயர்ந்து அன்னை ஆடியபோது அவருடைய இடதுபாதம் ஆகாயத்தில் உயர்ந்தது. பாதத்தின் விரல்களில் ரோஜா மலர். விரல்கள் மலரைக் கூந்தலில் சூடிக் குஞ்சத்தை திருத்தின. காலை இறக்காமல் கால் பெருவிரலை ஊன்றியபடி அன்னை பம்பரமாய்ச் சுழன்றபோது அண்ட சராசரங்கள் சுழன்றன. மங்கையரின் ஆர்ப்பாட்டத்தில் புதிய சிகரங்கள் முளைத்தன. விண்ணிலே புது நட்சத்திரங்கள் பூத்தன. நின்ற கோலத்திலேயே அய்யனைக் கனிந்து நோக்கினாள் அன்னை;

போட்டி நல்லது, அடிமைப் படுத்துதல்தான் அருவருப்பானது வா, மீண்டும் நாம் சங்கமிப்போம் உன்னில் பாதியாக அல்ல. நீயும் நானுமான இரு முழுமைகளாக'' அதிர்ந்துபோன சிவன் அன்னையைப் பார்த்தார். அன்னையின் ஆடையைப் பார்த்தார். கால்களில் சேலை சுற்றி இடுப்பிலே செருகியிருக்கவில்லை. அவர் இது என்ன ஆடை?

''சுரிதார்'' வானத்தில் எழுந்தது புதிய அசரீரி. பெண்மைக்குச் சுதந்திரம் அளிக்கும் சுதந்திர ஆடை. இனி பெண்மை எந்த ஆட்டமும் ஆடும் யாரும் வெல்ல முடியாது.

''பெண்ணையும் ஆணையும் சமமாக்கிகிடும் பேய் ஆடை! கிழியுங்கள் அதை!''

கூச்சலிட்டார் அய்யன். பத்து விரல்களையும் விரித்துக்கொண்டு அன்னை மீது பாயத்தயாரானார்.

நில்!

இடிமுழக்கம் போல் ஒரு சத்தம். பாய்ந்து வந்த கருஞ்சிங்கம் அய்யனை முறைத்துக்கொண்டு வாலைச்சுழற்றித் தரையில் அடித்தது.

''அன்னையோடு பூமியில் புது விடுதலை பெற்றவன் நான்.

அடிமைத்தனம்-

அது எந்த வடிவில் வந்தாலும் அழித்தொழிப்பேன்! '' அது கர்ஜித்தது

என் வாகனம் காளை எங்கே? அதன் கூரிய கொம்பு எங்கே? குத்தடா இந்தக் கருப்பனை கூச்சலிட்டார் அய்யன். கருப்புச் சிங்கத்தின் கர்ச்சனையில் அரண்டு, அது கயிலாயமலைக் காட்டுக்குள்ளே எங்கோ ஓடிக்கொண்டிருந்தது என்பதை அறியாமல்.

தோழனே சொல் நீ செய்யும் எந்தக் காரியம் என்னால் செய்ய இயலாதது? சமத்துவம் தர இன்னும் ஏன் தயக்கம்? கொஞ்சினார் அன்னை

என்ன பதில் சொல்லுவது யோசனையில் ஆழ்ந்தார் சிவன்.





9



27. ஆர்.பி. பாஸ்கரன்


நல்வாழ்த்துகள்

சேலம் நகர கூட்டுறவு வங்கி லிட் நெ.25

முதல் அக்ரஹாரம், சேலம் -1.

தொலைபேசி 413264, 419566, 413499, 412264, 413284



நல்வாழ்த்துகள் | 28. பி. பெருமாள்

ஜே.பி.கே. ராமசாமி
ஜவுளி தொழிலதிபர், விழுப்புரம்.



29. நிரேஷ் போதார்

நல்வாழ்த்துகள்

ஸ்ரீராஜேஸ்வரி ஓட்டுநர் பயிற்சிபள்ளி, திருச்சிமெயின் ரோடு, சேலம் 6 ● பாலமுருகன் ஓட்டுநர் பயிற்சிபள்ளி, பழைய பஸ் நிலையம், சேலம் 1 ● ஸ்டார் ஓட்டுநர் பயிற்சிபள்ளி, கோட்டை, சேலம் ● சேலம் மோட்டார் ஓட்டுநர் பயிற்சிபள்ளி, 4-ரோடு, சேலம் ● பர்கத் ஓட்டுநர் பயிற்சிபள்ளி, 5 - ரோடு, சேலம் ● கண்ணன் ஓட்டுநர் பயிற்சிபள்ளி , 5 - ரோடு, சேலம் ● ராஜேஷ் ஓட்டுநர் பயிற்சிபள்ளி, சூரமங்கலம், சேலம் ● குமார் டிரைவிங் செண்டர் (ஹெவி), அன்னதானப்பட்டி, சேலம் 2 ● முத்து ஓட்டுநர் பயிற்சிபள்ளி, இளம்பிள்ளை, சேலம் ● விநாயகா மிஷன்ஸ் ஐ.டி.ஐ ஓட்டுநர் பயிற்சிபள்ளி, பெரியசீரகாபாடி, சங்ககிரி மெயின்ரோடு, சேலம்.




30. ஃபிரான்சிஸ் பிகாடியா

*நல்வாழ்த்துகள்*

குடமுருட்டி சேகர்

**முத்தரச நல்லூர் தொடக்க வேளாண்மை**

**கூட்டுறவு வங்கி**

திருச்சிராப்பள்ளி பெரும் பிடுகு மாவட்டம்



# மிச்சமிருக்கும் ஓரிரு தளிர்கள்

இன்குலாப்

எழுத உட்கார்ந்தேன்
வனங்கள் குறித்து.

நினைவுச் சருகுகளில்
பசிய மரங்கள்.

முழங்கும் அருவியைக்
கிளைகளால் மூடும்
நெடிய மரங்கள்...

மழைபெய்த மறுநாள்
சிலிர்த்த புல்வெளிகள்

பசுமைத் தோழமை
பாராட்டி நின்ற
இளமையில் என்னுடன்
பழகிய மரங்கள்...

கிளிகளுக்கும்
எனக்கும்
விழுது ஊஞ்சல்களுடன்
பந்தல் விரித்த
ஆலமரங்கள்...

ஊருக்கு வெளியே
உட்கார்ந்து படிக்கக்
கிளைகளைத் தாழ்த்திய
இளைய வேம்புகள்...

முள்வேலியில் மட்டும்
நிழல்களை முடக்காது
சாலையிலும் பரப்பும்
பூவரச மரங்கள்...

தந்தையின் சமாதித்
தனிமையில் பேசச்
சருகுகள் உதிர்க்கும்
அரச மரங்கள்...

முடிவறியாத மனவெளி நிறைய
கிளைகள் விரித்து
இலைகள் அசைத்து
ஊர்வலம் வந்தன
தோழமை மரங்கள்...

அசோக இலைகளை
அசைத்த காற்று
மேசையில் இருந்த
தாளையும் அசைத்தது.

சுவரில் பூத்திருந்தது
மரச் சிற்பம் ஒன்று -
ஏதோ ஒரு பூவைப்
பூக்கக் கருதிய
ஏதோ ஒருமரத்தின்
ஏதோ ஒருகிளை.

எந்த மரத்தின்
எலும்புக் கூடு
இந்த மேசையும்
நாற்காலியும்?

சூரியக் கோல்கள்
வெயிலைத் தீட்டும்
இலைகள்...
இங்குத்
தாள்களால் அசையுமோ?

காணாமல் போகும் காடுகள்
எனது
கதவாய் மேசையாய்க்
கொஞ்சம் பதுங்கும்.

மாளிகையில்
உத்தரங்களாகவும்
விரிந்து நீளும்
விருந்து மேசைகளாகவும்
பெரிய இடங்களில்
இன்னும் பதுங்கும்.

பொய்மை விரிக்கும்
செய்தித் தாள்களால்
ஆபாசம் மினுங்கும்
சுவரொட்டிகளாக
அரைக்கப்பட்ட காடுகள்
அலையும்
உலகெங்கும்.

சுள்ளி முறிக்கும்
சன்ன ஒலியையும்
எப்போதும் கேட்கும்
அதிகார வர்க்கம்...

கூட்டுப் பறவைகளின்
கூக்குரலோடு
வீழும் கானகத்தின்
மரண ஓலம்
மலைகளில் முட்டும்
வானம் எட்டும்
காதுக்குக் கேட்காது
கடைசிமட்டும்.

பக்கத்து வீட்டுச் சுவரில் முட்டியதால்
கிளைகளை இழந்த அசோகமரத்தின்
இளந்தளிர் ஒன்று
என் சன்னலில் உரசும்.

காகங்களோடும்
கிளிகளோடும்
இலைகள் பேசுவதை
என் செவி கேட்கும் :

''இளைய மானுடம்
தொட்டிலில் ஆடியது
நேற்றைய சகாராவின்
நெடுங்கிளை ஒன்றில்தான்.

பசிய காடுகள்
இயற்கையின் படைப்பு...
பாலைவனங்கள்
மனிதரின் படைப்பு....

புதைந்து போன
நதிகளுக்குப் பிறகும்...
கருகிப் போன
சோலைகளுக்குப் பின்பும்
மிச்சமிருக்கும்
ஓரிரு தளிர்களைக்
கோடரி வெறியிலிருந்து
காப்பாற்றுங்கள்.

முதலா முடிவா
எதுவாய் இருந்தாலும்
நட்பா பகையா
யாராய் இருந்தாலும்
உயிர்த்திருப்பது
உறுதிப்படுவது
காற்றினால்...''
என்று
கடைசியாய்க் கேட்டது.



31. கே.வி. ஹரிதாசன்


நல்வாழ்த்துகள்

ஆர். மோகன்குமார், தனி அலுவலர்

டாக்டர் கலைஞர் கருணாநிதி பட்டு கைத்தறி நெசவாளர்

கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் லிட் நெ. கே. 4.

88-89, காந்திரோடு, காஞ்சிபுரம் - 631 501. தொலைபேசி : 22951

32. ஆனந்த குமார் அகர்வால்



நல்வாழ்த்துகள்

# காவேரி கூட்டுறவு சிறப்பங்காடி

2964/1, தெற்கலங்கம், தஞ்சாவூர்

நல்வாழ்த்துகள்

**பரிமள விலாஸ் எஸ். சித்தனாதன்**
**ஜவ்வாது வாசனை விபூதி & ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்.**
உரிமை : **எஸ். சித்தனாதன் சன்ஸ்**
அடிவாரம், பழனி- 624 601. போன் : கடை 2405 வீடு & ஸ்டோர் : 2406

33. ஆர். சுந்தர்ராஜீ





34. அற்புத ராணி சென் குப்தா

*Best Compliments*

**SAKTHI ENTERPRISES**

Turmeric Merchants

39, Kovalan Street, Erode - 1.

## இந்திரா பார்த்தசாரதி



# தியாகி

அது ஓர் அரசாங்க மருத்துவமனை. இப்படிச் சொல்வதால் அதைப் பற்றி விவரித்துச் சொல்ல வேண்டியதில்லை. நிர்வாகம், சுற்றுப்புறச் சுகாதாரம், ஜனநெருக்கம் ஆகியவற்றை பற்றிய எல்லாச் செய்திகளும் இதற்குள் அடக்கம்.

அதன் வாசலில் ஓர் அரசமரம் இருந்துதான் ஆச்சர்யம். எப்படி விட்டு வைத்தார்கள் என்பது தெரியவில்லை. 'தெரியவில்லை' என்று சொல்லக்கூடாது. தெரிந்ததுதான். பிள்ளையார் காப்பாற்றினார்; நிஜமாகவே பிள்ளையார்தான் காப்பாற்றினார். மரத்தடியில் திடீரென்று பிரசன்னமான அவரை அப்புறப்படுத்தினால்தான் அரசமரத்தையும் மருத்துவமனை கட்ட முற்பட்டபோது, அப்புறப்படுத்தியிருக்க முடியும். அவ்வாறு செய்ய யாருக்கும் துணிவில்லை. அரசமரம், பிள்ளையாருக்கு நன்றி கூறியது.

ஓவியம்: **மருது**



அரசமரம் மட்டும் நன்றி கூறவில்லை; மருத்துவமனைக்கு வந்த நோயாளிகள், அவர்கள் நண்பர்கள் உறவினர்கள் எல்லாரும் பிள்ளை யாருக்கு நன்றி கூறினார்கள். அந்த மரத்தைச் சுற்றி வட்டமாக எழுப்பப் பட்டிருந்த மேடைதான் அங்கு வந்து ஏழை நோயாளிகளுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் வரவேற்பறை, ஓய்வறை எல்லாம் ஆங்கிலத்தில் சொல்லப்போனால், 'லௌன்ஜ்'

தொடர்ந்து மூன்றாவது நாளாக அந்த மருத்துவமனைக்கு வந்தான் செல்வம். வெறும் அந்தப் பெயரை மட்டும் வைத்துக்கொண்டு அவனால் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற முடியாததால் இந்த அரசாங்க ஆஸ்பத்திரிக்கு அவன் வர நேர்ந்தது. மூன்று நாளாக அலைச்சல் தான் மிச்சம். டாக்டரைப் பார்க்க முடியவில்லை. இந்த அலைச்சலிலேயே குணமாகி வருவதுபோல் அவனுக்கு ஒரு பிரமை.

அரச மரத்தடியில் இரண்டாவது நாளாக அந்த ஆளைச் செல்வம் பார்த்தான்; அவன் நேற்றும் இதே நிலையில்தான் படுத்திருந்தான். சிறிதும் மாற்றமில்லை. கண்கள் மூடியிருந்தன. 'நோயாளி, காக்க வைத்திருப்பார்கள். அசதியில் தூங்குகிறான் என்று நேற்று நினைத்தான் செல்வம். ஆனால் இன்றும் அதே நிலை. இன்னுமா யாரும் அவனைக் கவனிக்கவில்லை?

வேறு ஆளாக இருக்கக் கூடுமோ? இல்லை, அவன்தான். அவன் வலக் கையில் பச்சைக் குத்தியிருந்ததை நேற்றுப் பார்த்தது செல்வத்தின் நினைவுக்கு வந்தது.

சட்டைப் போடாத உடம்பை ஓர் அழுக்குக் காசித் துண்டு அரை குறையாகப் போர்த்தியிருந்தது. கழுத்தில் பழுப்பேறிய ஒரு மணி மாலை. வயதை நிர்ணயிக்க முடியவில்லை. முப்பதுமிருக்கலாம். அறுபதுமிருக்கலாம். வயிறு முதுகோடு ஒட்டி, முன்புறமிருப்பதால் 'வயிறு' என்று சொல்லும்படியாக இருந்தது.

செல்வம் அவனருகில் சென்று, கையைத் தொட்டான். 'ஜில்'லென் றிருந்தது. திடுக்கிட்ட நிலையில் அவன் நாடியைப் பார்த்தான். உறுதியாயிற்று.

செல்வம் மேடையினின்றும் இறங்கி, என்ன செய்வதென்று புரியாமல், பொக்கை வாயில் புகை யிலையைப் போட்டுக் கொள்வதற்காக அதை இடது உள்ளங்கையில் வைத்து அழுத்தித் தேய்த்துக் கொண்டிருந்த ஒரு கிழவரிடம்,

"அந்த ஆளு போயிட்டாரு..." என்றான்.

அவர் பதிலொன்றும் கூறாமல், புன்னகை செய்தார்.

அவருக்குக் காது கேட்காது என்பதை உணர்ந்த செல்வம் மருத்துவமனை வாசலை நோக்கி விரைந்தான்.

இரண்டு நர்ஸ்கள் எதைப் பற்றியோ தீவிரமாக விவாதித்துக் கொண்டு சென்றனர்.

"ஸிஸ்டர் ஒருநிமிஷம்" என்றான் செல்வம். இருவம் ஒன்றும் புரியாமல் கூப்பிட்டவன் அவன்தானா என்ற சந்தேகம் வினாக்குறியாக முகத்தில் தெரிய நின்றனர்.

அவன் அவர்களுக்கு மரத்திசையைச் சுட்டிக் காட்டியவாறு சொன்னான், "அந்த ஆளு போயிட்ட மாதிரி தெரியுது." ஒருத்தி யோசிக்காமல் தன்னிச்சையாய் உடனே கேட்டாள் "எங்கே?"

"அது எனக்குத் தெரியாது" என்றான் செல்வம் புன்னகையுடன். உடனே இப்படிப் பதில் சொல்லியிருக்கக் கூடாதென்று மனத்தை ஒரு கணம் உறுத்தியது. இன்னொருத்தி கேட்டாள்..

"போயிட்டார்னு உங்களுக்கு எப்படி தெரியும்?"

"தொட்டுப் பார்த்தேன். 'ஜில்'னுருக்குது. அவரு யாருன்னு எனக்குத் தெரியாது. நேத்தியிலிருந்து அந்த மரத்தடியிலே கிடக்கிறாரு."

"நேத்தியிலிருந்தா?" என்றாள். "போயிட்டார்னு உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டவள். அவர் பெயர் ரெஜினா. அவள் அணிந்திருந்த வில்லை அதை அறிவித்தது. இன்னொருத்தி, நிர்மலா. அவள் நெற்றியில் விபூதிக் கீறு.

"ஆமாம்... நேத்திக்கும் அவரு இப்போ மாதிரியே கிடந்தாரு. அசதி, தூங்கிறாருன்னு நான் போயிட்டேன். நான் மூணு நாளா வந்துகிட்டிருக்கேன். டாக்டரைப் பார்க்க முடியலே..."

"நாங்க என்ன செய்யனுங்கறீங்க?" என்றாள் நிர்மலா.

"நான் டாக்டரில்லே. அவர் போயிட்டார்னு நான் தப்பா சொல்லக்கூடும்... நீங்க 'நர்ஸ்' அவர் நாடியைப் பார்த்து..."

"அப்படித் தொட்டுப் பார்த்து முடிவு பண்ண எங்களுக்கு அதிகாரமில்லே... டாக்டர்தான் சொல்லனும். இது போலீஸ் கேஸா இருந்தா.. அதுதான் சிக்கல்.." என்றாள் ரெஜினா.

"வைத்தியத்துக்கு வந்தவரு... போயிருக்கலாமில்லையா" என்றான் செல்வம்.

"இது உங்க யூகம். போலீஸை முதல்லே கூப்பிடுங்க..." என்றாள் நிர்மலா.

"நான் கூப்பிடனுமா?"

"நீங்கதானே முதல்லே பாத்தீங்க... கையை வேறு தொட்டுப் பாத்திருக்கீங்க..." என்று கூறிக் கொண்டே ரெஜினா போய்விட்டாள். நிர்மலாவும் ஒரு கண நேரத் தயக்கத்துக்குப் பிறகு அவளைப் பின் தொடர்ந்தாள்.

இதற்குள் மரத்தடியில் ஒரு சிறுகூட்டம் கூடிவிட்டது.

செல்வம் அக்கூட்டத்தை நோக்கிச் சென்றான்.

"உங்க சொந்தக்காரரா?" என்று கேட்டார் ஒருவர்.

"அவர் மனுஷன்னு தெரியுது, நாம எல்லாருக்குமே சொந்தக்காரரு..." என்றான் செல்வம்.

"இந்த ஆஸ்பத்திரி ஆரம்பிச்ச நாள்லே வைத்தியத்துக்கு வந்திருப்பாரு. காத்து காத்தே போயிருக்கலாம்..." என்றான் ஓர் இளைஞன் புன்முறுவலுடன்.

"நீ சொல்லறதும் சரி... கவர்மென்ட் ஆஸ்பத்திரின்னா இப்படித்தான்..." என்று ஆமோதித்தார் இன்னொருவர்.

"அவர் போயிட்டார்னு நிச்சயமா தெரியுமா?" என்று கேட்டார் வழுக்கைத் தலையாயிருந்த ஒருவர்.

அப்பொழுது ஒரு டாக்டர் அவர்களை நோக்கி வந்தார்.

"என்ன பிரச்னை?" என்றார் அவர்.

டாக்டர் 43 வயதுக்காரர். அவருடைய மீசை அவர் முகத்துக்குப் பொருத்தமில்லாமல் இருந்ததுபோல் செல்வத்துக்குத் தோன்றிற்று. குழந்தை முகத்துக்கு எதற்கு ஆக்ரோஷமான மீசை?

**செல்வம் வெறும் அந்தப் பெயரை மட்டும் வைத்துக்கொண்டு அவனால் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற முடியாததால் இந்த அரசாங்க ஆஸ்பத்திரிக்கு அவன் வர நேர்ந்தது.**

"இவரைக் கேளுங்க..." என்று யாரோ டாக்டரிடம் சொன்னார். சொன்னவர் யாரென்று தெரியவில்லை. கூட்டம் அதிகரித்துவிட்டது.

டாக்டர் செல்வத்தின் முகத்தை ஏறிட்டு நோக்கினார்.

"நான் மூணு நாளா ஆஸ்பத்திரிக்கு வந்துகிட்டிருக்கேன். 'ஸ்பான்டி லைஸிஸ்'னு நினைக்கிறேன். டாக்டர் ரவியைப் பார்க்கச் சொன்னாங்க, அவரைத்தான் பார்க்க முடியலே..."

"உங்க கதை இருக்கட்டும். இந்த ஆளு யாரு, இவருக்கென்ன ஆச்சு?" என்றார் டாக்டர், சற்றுப் பொறுமையை இழந்த குரலில்.

"நேத்துலேந்து இப்படியே இங்கே கிடக்கிறாரு... நான்தான் இதைக் கவனிச்சேங்கிறதுதான் எனக்கும் இவருக்குமுள்ள சம்மந்தம்..." என்றான் செல்வம்.

"சரி... இது போலீஸ் கேஸாருக்கலாம். முதல்லே போலீஸ் வரட்டும். நான் அவங்களுக்கு போன் செய்யறேன்..." என்று கூறிக்கொண்டே டாக்டர் உள்ளே போக முற்பட்டார்.

"அவர் போயிட்டாரா இல்லையான்னு பார்க்க வேண்டாமா, டாக்டர்... அப்படி போகலேன்னா சிகிச்சை..." என்று செல்வம் சொல்லி முடிப்பதற்குள் டாக்டர் குறுக்கிட்டார்... "பார்த்தா தெரியலே? அது 'பாடி'ய்யா. போலீஸ் கேஸா இருந்தா, நாம கை வச்சதே குத்தம்னு, கையாலாகாத போலீஸ் நம்மை துளைச்சு எடுத்துருவாங்க... முதல்லே அவங்க வரட்டும்... அவங்களைச் சாட்சியா வச்சுகிட்டு பாக்கிறதுதான் முறை..."

டாக்டர் போய்விட்டார்.

அப்பொழுது இரண்டு டாக்டர்கள், இளைஞர்கள், வந்தார்கள். செல்வம் அவர்கள் அணிந் திருந்த வில்லைகளில் பெயர்களைப் படித்தான். சுரேஷ், குமார்.

குமார் கேட்டான்: "என்ன 'ப்ராப்ளம்'?"

"ப்ராப்ளம் சால்வ் ஆயிடிச்சு... அதோ அந்த ஆளு நிம்மதியா போயிட்டாரு" என்றான் செல்வம்.

"யார் நீங்க?" என்றான் சுரேஷ்.

"அவர் போயிட்டார்ங்கிறதைப் பார்த்த முதல் ஆளு... நர்ஸ், டாக்டர் எல்லார்கிட்டேயும் சொல்லியாச்சு... போலீஸ் கேஸா இருக்கலாம். கிட்டே வரமாட்டாங்கிறாங்க... அவர் போயிட்டார்னு நான் நினைக்கிறேன், அது தப்பாகவுமிருக்கலாம். இந்த ஆஸ்பத்திரியிலே டாக்டர் உதவியில்லாமெ யாரும் சாக முடியாதுங்கிறதும் எனக்குத் தெரியும்..."

சுரேஷ் செல்வத்தை இடைமறித்தான். "ஆர் யு எ ஸினிக்?"

"ஸினிக் இல்லே... மனுஷன்... தயவு செய்து அவர் போயிட்டாரா இருக்காரான்னு முதல்லே பாருங்க..." என்றான் செல்வம்.

இரண்டு டாக்டர்களும் 'அது'வா, 'அவனா' அங்கு அருகில் சென்றார்கள்...

சுரேஷ் நாடியைப் பிடித்துப் பார்த்தான். குமார் நெற்றியைத் தொட்டுப் பார்த்தான்.

"அப்போ போனாரே டாக்டர், பார்க்க முடியாதுன்னுட்டாரா?"

என்று கேட்டான் சுரேஷ்.

"ஆமாம்... 'போலீஸ் கேஸ்'னு முடிவு பண்ணிட்டாரு..."

சுரேஷும் குமாரும் ஒருவரை யொருவர் பார்த்துப் புன்னகை செய்தனர். அந்த டாக்டரை இருவருக்கும் பிடிக்காது போலிருக்கிறது என்று செல்வம் நினைத்துக் கொண்டான்.

"அவர் பார்க்க முடியாதுன்னு போயிட்டார்னு நீங்க 'மெடிக்கல் சூப்பிரண்டென்ட்'டே ஒரு ரிப்போர்ட் கொடுக்க விரும்பினா கொடுக்கலாம்..." என்றான் சுரேஷ்.

"நோ யூஸ்... யு நோ வாட் வில் ஹாப்பென்..." என்றான் குமார். சுரேஷிடம்.

"நோ... லெட் இட் பி ரெக்கார்டட்..." என்றான் சுரேஷ்.

இருவரும் மேடையை விட்டுக் கீழே இறங்கி வந்தார்கள்.

"என்ன செய்யப் போறீங்க?" என்று கேட்டான் செல்வம்.

"அவர் போயிட்டாரு... இட் ஈஸ் எ பாடி... போலீஸ் வரட்டும்..." என்றான் குமார்.

"நீங்க பாக்கிறப்போ அவர் உயிரோடு இருந்திருக்கலாம். அந்த டாக்டர்கிட்ட சொல்லியிருக்கீங்க, அவர் கேக்கலே. கிரிமினல் நெக்ளிஜென்ஸ்... வயலேஷன் ஆஃப் கோட் ஆஃப் கான் டெக்ட்... மெடிகல் கவுன்ஸிலுக்குப் போக வேண்டிய விஷயம் இது..." என்றான் சுரேஷ்.

"அவர் பெயரு முத்துக் கிருஷ்ணன். ஸீனியர் டாக்டர் 'கம்ப்ளெய்ன்ட்' கொடுக்க தயங் காதீங்க... ஜனங்ககிட்டே ஒரு விழிப்புணர்ச்சிருக்குன்னு 'பப்ளிக் சர்வீஸ்'லேருக்கிறவங்களுக்குத் தெரியணுமில்லே...?" என்றான் குமார்.

"ஓ.கே. லெட் அஸ் கோ..." என்று கூறியவாறு புறப்பட்டார் சுரேஷ். அவனைத் தொடர்ந்தான் குமார். செல்வத்தினால், அவனுடைய இரத்த அழுத்தம் அதிகமாகிக் கொண்டு வருவதை உணர முடிந்தது. 'மெடிகல் சூப்பிரடென்ட்' டைப் போய்ப் பார்ப்பது என்று முடிவு செய்தான்...

"நான் பெரிய டாக்டரைப் பார்த்து ஆஸ்பத்திரி எவ்வளவு அழகா நடக்குதுன்னு சொல்லலாம். இங்கே ஒருத்தர் அனாதையா செத்துக்கிடக் கிறாரு... யாரும் இதைப் பத்திக் கவலைப்படறதா தெரியலே... நீங்க யாரானும் வர்றீங்களா, என் கூட...?" என்றான் செல்வம். இறந்தவருக்கு இறுதி மரியாதை செலுத்துவதுபோல், அங்கு சில விநாடிகள் அமைதி நிலவியது.

"நீங்க போய் சொல்லுங்க... முதல்லே பாத்தவரு நீங்க... கூட்டம் போட்டுகிட்டுப் போய் சொன்னாலும் நல்லாருக்காது", என்றார் நடுத்தர வயதுக்காரர் ஒருவர். சிறிதுநேரம் கழித்து அவர் கையில் காய்கறிப்பை. ஆஸ்பத்திரிக்குக் காய்கறிப் பையுடன் எதற்கு வந்திருக்கிறாரென்று செல்வம் ஒருகணம் யோசித்தான்.

"அனாதைப் பொணத்தைத் தகனம் செய்யறதுக்காக ஒரு சங்கமே இருக்கு. நான் அதற்கு 'டொனேஷன்' கொடுத்திருக்கேன்... வருமான வரி விலக்குகூட இதுக்கு உண்டு. ஆனா டெலிஃபோன் நம்பர் தெரியலே... வீட்லேருக்கு" என்றார். தூய வெள்ளை ஆடை தரித்த ஒருவர்.

செல்வம் மருத்துவமனைக்குள் நுழைந்தான். முதல் மாடியில் 'மெடிகல் சூப்ரென்டென்ட்' அலுவலகம் இருக் கிறது என்று அவனுக்குத் தெரியும்.

அவன் அவருடைய அலுவலகத் துக்குள் நுழைந்தபோது, நாலைந்துபேர் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அவனுக்குத் தெரிந்தது.

"நான் 'எம்.எஸ்'ஸை உடனே பாக்கணும்" என்றான் செல்வம், அவருடைய செயலரிடம். செயலர், ஓர் அழகான பெண். கன்னத்தில் குழிவு தோன்ற ஒரு வசீகரமான புன்னகையுடன் அவள் சொன்னாள்... "'அப்பாய்ன்ட்மென்ட்' இல்லாமெ அவரைப் பாக்க முடியாது"

"ஆஸ்பத்திரி வாசல்லே ஒரு பொணம்..." என்றான் செல்வம்.

அகிலா பில்லை அறிவித்த அச்செயலரின் பெயர். திடுக்கிட்டாள். அழகான குழிவு மறைந்து கண்களில் அதிர்ச்சி தெரிந்தது.

"என்ன சொல்றீங்க..?"

"இத பத்திதான் அவர்கிட்டே பேசணும்... ஆஸ்பத்திரிக்குப் பிரச்னை வரக்கூடாதில்லே...?"

அகிலா உள்ளே சென்றாள். செல்வம் உள்ளே அழைக்கப்பட்டான்.

'மெடிக்கல் சூப்பிரடென்டின்' பெயர் ஹரிஹரன். நெற்றியில் சின்ன வட்டவடிவில் குங்குமம். இரண்டு புருவங்களுக்கிடையே ஒரு மயிர் பாலமிருந்தது. சரீரம் முழுவதும் கறுப்பும் வெள்ளையும் அடர்த்தியான மயிர்.

"யார் நீங்க என்ன சொல்றீங்க, பொணமா, வாசல்லியா, வாட் டு யு மீன்...?"

ஒரே மூச்சில் எல்லாக் கேள்வி களும் பல சுருதிகளில் செல்வத்தை வந்து தாக்கின. வளமான குரல்.

"என் பேர் செல்வம். மூணு நாளா டாக்டர் ரவியைப் பார்க்க இங்கே ஆஸ்பத்திரிக்கு வந்துகிட்டிருக்கேன். அவரைப் பார்க்க முடியலே. எனக்கு 'ஸ்பான்டிலைஸிஸ்'. 'ஸ்பான்டி லைஸிஸ்' இல்லாமலுமிருக்கலாம். நேத்து வந்தப்போ அந்த ஆளு ஆஸ்பத்திரி அரச மரத்தடியிலே, பிள்ளையார் பக்கத்திலே கிடந்தாரு... நேத்துருந்த மாதிரியே இப்பவும் கிடக்கிறாரு... முந்தா நாளும் இருந்திருக்கலாம்... ஆனா நான் முந்தா நா பாக்கலே... நான் பாக்காதினாலே, அவரில்லேன்னு என்னாலே உறுதியா சொல்லமுடியாது. இருந்திருக்கலாம். ஆனா..."

ஹரிஹரன் சீறி விழுந்தார்...' என்னய்யா, வாசல்லே பொணம்னு சொல்லிட்டு, ரப்பர் மாதிரி ஏதோதோ இழுத்துண்டு 'போறே...? வீண் கதை பேசாம விஷயத்தைச் சொல்லு..."

"அந்த ஆளுதான் பொணம். ரெண்டு நாளா கிடக்குது... உங்க நர்ஸ்கிட்டே சொன்னேன். டாக்டர்கள்கிட்டே சொன்னேன். யாரும் எந்த 'ஆக்ஷனும் எடுக்கிறதா தெரியலே... உங்க ஆஸ்பத்திரிக்கு 'பேஷண்டா' வந்து, வாசல்லே அரச மரத்தடியிலே படுத்துகிட்டிருக்கப்போ, மண்டையைப் போட்டிருக்கலாம். இல்லாட்டா, அந்தப் பையன் சொன்ன மாதிரி, டாக்டரைப் பார்க்க நாள் கணக்கா காத்திருந்திட்டு, 'வெய்ட்' பண்ணி, 'வெய்ட்' பண்ணியே உசிரை விட்டிருக்கலாம்... இல்லாட்டா..."

"போறும்... எங்கேருக்கு அந்த பொணம்...? கூட வந்து காமியுங்கோ..." என்று கூறிக் கொண்டே டாக்டர் ஹரிஹரன் கிளம்பினார்.

அவர்கள் வாசலுக்கு வந்து அரசமரத்தடியை நோக்கிச் சென் றார்கள்.

அரசமரம் இருந்தது.

பிள்ளையார் இருந்தார்.



ஆனால் அந்தப் பிணத்தைக் காணவில்லை! செல் வத்துக்குத் தூக்கி வாரிப் போட்டது. எங்கே போயிற்று அந்தப் பிணம்?

“எங்கே இருக்கு அந்த பாடி?” என்று கேட்டார் ஹரிஹரன்.

‘இங்கேதான் இருந்தது. எனக்கு ஒண்ணும் புரியலே...” என்றான் செல்வம்.

அவன் சுற்று முற்றும் பார்த்தான். சிறிது நேரத்துக்கு முன்னால் அவன் பார்த்த யாருமே அங்கில்லை.

‘‘இந்த மரத்தடியிலே ஒருத்தரு படுத்துக் கிடந்தாரில்லே...?” என்று பலகீனமான குரலில் கேட்டான். அனைவரையும் பார்த்து ஒரு பொதுக் கேள்வியாக.

“தெரியாதே...”

ஹரிஹரன் கோபமாகச் சொன்னார்... “நாங்க டாக்டர்ஸ்... எங்க ‘டைம்’ ரொம்ப ‘ப்ரீஷியஸ்’ ஏன் இப்படி ‘வேஸ்ட்’ பண்றீங்க..?”

“நான் சத்தியமா சொல்றேன் டாக்டர்... இங்கே ஒருத்தர் கிடந்தாரு... செத்துப் போனவர்தான். நீங்க டாக்டர் சுரேஷ், டாக்டர் குமார் ரெண்டு பேரையும் வேணும்னா கேட்டுப் பாருங்க. டாக்டர் சுரேஷ்தான் நாடியைப் பிடிச்சுப் பார்த்தாரு...”

“இங்கேருக்கிற யாருக்குமே இது தெரியாமலா போகும்?” என்றார் ஹரிஹரன்.

“அதான் எனக்குப் புரியலே... நான் அப்போ பார்த்தவங்கள்லே யாருமே இப்போ இங்கே இல்லே. பிள்ளையாரைத் தவிர...” என்றான் செல்வம்.

“பிள்ளையாரைச் சாட்சிக் கூண்டிலே நிறுத்த முடியாது...” என்றான் ஓர் இளைஞன் சிரித்துக் கொண்டே.

“அப்படிப் பிள்ளையார் சாட்சி சொல்ல வந்தா நம்ம கிரிமினல் சட்டத்திலே அதற்கு இடமில்லே, இல்லையா டாக்டர்?” என்றான் செல்வம்.

டாக்டர் ஹரிஹரன் மிகக் கோபமாக அவனைப் பார்த்துவிட்டு, பதிலொன்றும் கூறாமல், மருத்துவமனையை நோக்கி விரைந்து சென்றார்.

செல்வம் மறுபடியும் சுற்று முற்றும் பார்த்தான்.

அப்பொழுது பார்த்தவர்களில் எப்படி ஒருவர்கூட இல்லாமல் போக முடியும்...?

டாக்டர் சுரேஷ், டாக்டர் குமார் ஆகிய இருவரையும் பார்ப்பதென்று தீர்மானித்து அவன் மீண்டும் மருத்துவமனைக்குள் நுழைந்தான்.

டாக்டர் குமார் இரண்டாவது மாடியிலிருந்தான். டாக்டர் சுரேஷ் மூன்றாவது மாடி. செல்வம் குமார் அறையை நோக்கிச் செல்லும்போது, எதிரே சுரேஷ் வந்தான்...

"டாக்டர் சுரேஷ்... ஒரு நிமிஷம்..." என்றான் செல்வம்.

சுரேஷ், அவனை யாரென்று தெரியாமல் பார்ப்பது போல் செல்வத்துக்குப் பட்டது.

"என் பேர் செல்வம்... வாசல்லே அந்த பாடி..."

"எஸ்...எஸ்... எம்.எஸ்.கிட்டே, டாக்டர் முத்துக் கிருஷ்ணனைப் பத்தி 'கம்ப்ளெய்ன்ட்' கொடுத்தீங்களா?"

"அங்கே அந்த பாடியை இப்போ காணலே... டாக்டர் ஹரிஹரனைக் கூட்டிகிட்டுப் போனேன்... அங்கே... அந்தப் பொணத்தைக் காணோம்..."

"அது எப்படி காணாமல் போகும்...?" என்று அதிர்ச்சியுடன் கேட்டான் சுரேஷ்.

"அதான் எனக்கும் தெரியலே. நீங்க தயவு செய்து டாக்டர் ஹரிஹரன்கிட்டே வந்து நடந்ததைச் சொன்னா போதும்... நான் பொய் சொன்னேன்னு அவர் நினைச்சுகிட்டிருக்காரு..."

**"பிள்ளையார் சாட்சி சொல்ல வந்தா நம்ம கிரிமினல் சட்டத்திலே அதற்கு இடமில்லே. இல்லையா டாக்டர்?"**

அவர்கள் டாக்டர் ஹரிஹரன் அறைக்குள் சென்றபோது, அங்கு டாக்டர் முத்துக்கிருஷ்ணன் இருந்தார்.

"என்ன சுரேஷ்... இந்த ஆளை எங்கே பிடிச்சே? ஒண்ணு இவர் பைத்தியம். இல்லாட்டா பொய் சொல்றார்... நல்லவேளை, இவர் பேச்சைக் கேட்டுண்டு, முத்துக்கிருஷ்ணன் போலீஸுக்கு ஃபோன் செய்யலே..." என்றார் ஹரிஹரன்.

"டாக்டர், மரத்தடியிலே கிடந்த அந்த ஆளை நான் உங்களுக்கு காமிக்கலியா..." என்றான் செல்வம் முத்துக்கிருஷ்ணனிடம் இறைஞ்சும் குரலில்.

"நீங்க அப்படியொரு ஆள் கிடக்கிறதா சொன்னீங்க. நான் பாக்கலே..." என்றார் முத்துக்கிருஷ்ணன்.

"நல்லவேளை நீங்க போலீஸுக்கு ஃபோன் பண்ணலே. அவங்க வேறு வந்து, 'பாடி' கீடின்னு ஒரே வம்பாய் போய், ஆஸ்பத்திரிக்குக் கெட்ட பேர் வந்திருக்கும். அந்த ஆளு செத்தும் போகலே, ஒண்ணும் போகலே... தூங்கிண்டிருந்திருப்பான். தூக்கம் கலைஞ்சதும் எழுந்து போயிருப்பான்... தட்ஸ் ஆல்... இந்த ஆளு அதுக்குள்ள 'பொணம்' 'கிணம்'னு சொல்லி... மை காட்... வாட் எ நியுஸென்ஸ்..." என்றார் ஹரிஹரன்.

"டாக்டர் சுரேஷ், நீங்க சொல்லுங்க, நீங்க 'பாடி'யைப் பார்க்கலே?" என்று கேட்டான் செல்வம்.

சுரேஷ் பேசாமலிருந்தான்.

"டாக்டர் சுரேஷ், ப்ளீஸ்..."

"உங்களுக்கு 'ஸ்பான்டிலைஸிஸ்' இல்லே... வேணும்னா டாக்டர் ருத்ரன்கிட்டே 'அப்பாய்ன்ட் மென்ட்' ஃபிக்ஸ் பண்ணிக்கோங்கோ... அவர் எங்க சைகாடிரிஸ்ட்" என்றார் ஹரிஹரன் புன்னகையுடன்.

செல்வம் அவ்வறையை விட்டு வெளியே வந்தான்.

டாக்டர் சுரேஷின் மௌனந்தான் அவனுக்கு மிகுந்த எரிச்சலைத் தந்தது. டாக்டர் குமாரைக் கூப்பிட்டிருந் தாலும், டாக்டர் ஹரிஹரன் முன்னால் அவனால் ஒன்றும் பேசியிருக்க முடியாது. டாக்டர் ஹரிஹரனுக்கு அவன் சொன்னது உண்மை என்று தோன்றியிருந்தாலும், பிணம் ஆஸ்பத்திரிவாசலில் இல்லை என்பது ஆறுதலைத் தந்திருக்கும்...

பிணம் எங்கே போயிருக்க முடியும்? இது எப்படி சாத்தியம்?

ஒருவேளை, நடந்தவையாவும் அவன் மனப்பிரமையா? அவன் டாக்டர் ருத்ரனைக் கலந்தாலோசிக்க வேண்டியது அவசியந்தானா?

செல்வம் 'ஸ்கூட்டரை' எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

கடை வீதியில் ஒரே கூட்டம். ஏதோ ஒரு கண்டன ஊர்வலம் வருவதாகச் சொன்னார்கள்.

கூட்டத்தைச் சமாளித்துக் கொண்டு அவன் ஸ்கூட்டரில் சென்றான்.

எதிர்த்தாற்போல் ஒரு பெரிய ஊர்வலம். 'ஸ்கூட்டரை' நிறுத்தி, அவன் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த ஒருவரைக் கேட்டான். "என்ன ஊர்வலம் இது?"

"சவ ஊர்வலம்..."

"சவ ஊர்வலமா?"

"ஆமாம்... அரசாங்கத்தின் அடக்குமுறையை எதிர்த்து ஒரு தொண்டர் உண்ணாவிரதமிருந்தாராம். அவர் செத்துட்டாரு. அவரைக் கொன்னது அரசாங்கம்னு கோஷம் போட்டுகிட்டு வராங்க..."

"யார் அவரு, தொண்டர்?"

"அவர் உண்ணாவிரதம் இருந்ததே யாருக்கும் தெரியாது. திடீர்ப் பிள்ளையார் மாதிரி திடீர்த் தியாகி... அதோ அந்த 'வான்'லே பாடியை எடுத்துகிட்டு வராங்க பாருங்க..."

செல்வம் 'வானை' நோக்கிச் சென்றான். திறந்த வண்டியிலிருந்த அந்த உடல் முழுவதும் மலர்க்குவியல். செல்வத்துக்கு அந்தத் தியாகியின் முகம் தெரிய வில்லை.

❑❑❑



35. எஸ் பவானி சங்கர்


நல்வாழ்த்துகள்

# பயோனியர் மருத்துவமனை

68, மதுரை சாலை, இராமநாதபுரம்



36. வீரசந்தானம்

நல்வாழ்த்துகள்

**மகேந்திர ஓட்டுநர் பயிற்சிபள்ளி,** டவுன் இரயில்வே ஸ்டேசன் எதிரில், சேலம் 1 ● **விஜய் ஓட்டுநர் பயிற்சிபள்ளி,** மணல் மார்க்கெட், சேலம் 1 ● **ஜே.பி. ஓட்டுநர் பயிற்சிபள்ளி,** பொன்னம்மாபேட்டை, சேலம் ● **வேலன் மோட்டார் ஓட்டுநர் பயிற்சிபள்ளி** , அம்மாபேட்டை, சேலம் 3 ● **ராமவிலாஸ் ஓட்டுநர் பயிற்சிபள்ளி,** பொன்னம்மாபேட்டை, சேலம் 3 ● **குமார் ஓட்டுநர் பயிற்சிபள்ளி** , திருச்சி மெயின் ரோடு, சேலம் ● **பாலாஜி ஓட்டுநர் பயிற்சிபள்ளி,** திருச்சி மெயின்ரோடு, சேலம் 6 ● **மணிகண்டன் ஓட்டுநர் பயிற்சிபள்ளி,** திருச்சி மெயின்ரோடு, சேலம் 6 ● **ஸ்ரீகணேஷ் ஓட்டுநர் பயிற்சிபள்ளி,** களரம்பட்டி ரோடு, சேலம் ● **ஸ்ரீ மணிகண்டன் ஓட்டுநர் பயிற்சிபள்ளி,** திருச்சி மெயின்ரோடு, சேலம் 6



*Best Compliments* 37. ஜார்ஜ்ஸ்டப்ஸ்

**HOTEL SULOCHNA PALACE**

No. 96, West Perumal Maistry Street, Madurai - 625 001.
Phone : 41071, 741072 Fax : 0452-740627

**HOTEL PARK PLAZA**

(3 Star Govt. Approved)

114-115, West Perumal Maistry Street, Madurai - 625 001.
Phone : 742112 (10 Lines), Fax : 0452 743654
Cable : PARK - IN MADURAI

# கி.மு. 2000
# தமிழ்
# கி.பி. 0000

## அறிவுமதி

கே. தமிழ்க்குடிமகன்ங்கிற உங்க பெயரிலேயே நீங்க இந்தியக் குடிமகன் இல்லைங்கிறது மாதிரியிருக்கு.
ப. அது தவறு. நாங்கதான் ஏற்கெனவே சொல்லிட்டோமே. மொழியால் தமிழன், இனத்தால் திராவிடன், நாட்டால் இந்தியன்.


தம்பி — தமிழ்நாடு வாழ்க என்றெழுது.
தமிழ்நாட்டில் நோய்கள் தீர்க என்றெழுது.
தமிழ்நாட்டில் வீதிதோறும் தமிழ்ப்பள்ளிக்
கூடங்கள் பல்க என்றெழுது.
அந்தத் தமிழ்ப் பள்ளிக் கூடங்களிலே [illegible]
எல்லாம் பயிற்சி பெற்று வளர்க என்றெழுது
தமிழ்நாட்டில் ஒரே ஜாதி தான் உண்டு. அதன்
பெயர் தமிழ்ஜாதி அது ஆர்யஜாதி என்ற
குடும்பத்திலே தலைக்குழந்தை என்றெழுது.

சி. சுப்பிரமணிய பாரதி

மலைமேய்ச்சலுக்குப் போகும்
கிழக்குச் சீமை
மாடுகளின்
கழுத்து மணியோசைகள்
மறந்த சாலைகள்
மிரள மிரள அதிரும்
நகரப் பேருந்தில்
முஸ்தபா முஸ்தபா

கொக்குகள் சுமந்து எருமைகள்
மேய்ந்த
குளத்தில் முளைத்த
கட்டிடத்தில்
கேட்கும்
ரெயின் ரெயின்
கோ எவே

கும்மி தெம்மாங்கு நடவுப்பாட்டு
தாலாட்டு ஒப்பாரிகளுடன்
மொத்தமாய்
செத்த
பாட்டிக்கு ஆறுதலாய்
விடிய விடிய விடிய
ஓடுவான் சின்னத்திரையில்
ஜென்டில்மேன் இந்தியன்

தமிழ்க் குடிமகன்ங்கிற
பெயரிலேயே
இந்தியக் குடிமகன்
இல்லைங்கறது மாதிரி
இருக்கே
என்கிற கேள்விக்கு
மிரளுவான்
என் சின்னமகன்
தமிழ்த்தம்பி

வாழிய செந்தமிழ் என்றதற்காக
பாரதி
தமிழுக்கும் அமுதென்று பேர்
என்றதற்காக
பாரதிதாசன்
இவர்களுக்கும்
தரப்படுமோ
துரோகிகள் என்கிற
தேசியப்
பட்டம்

மண் தொட்டிக்குள்
குரோட்டன்சுகளாய்
கண்ணாடித்
தொட்டிக்குள்
மீன்களாய்
பார்த்து
ஆறுதல் அடைய நம்
பேரப்பிள்ளைகளுக்கு
மிச்சமிருக்குமோ
இரண்டாயிரத்தில்
தமிழ்!



38. பால்ரூபன்ஸ்

நல்வாழ்த்துகள்


திரு. எம். அசோகன் எம்.எஸ்.சி.
ஆணையாளர்

திருமதி. ஆர். பிரேமலதா
நகர மன்றத் தலைவர்

குன்னூர் நகராட்சி



. 39. ஜாக்விஸ் லூயிஸ் டேவிட்


**SRIDHAR CAFE**

75, Gandhi Road, Kanchipuram - 631 501. Ph.: 23888, Res.: 23666

Best Compliments

# பாவண்ணன்

ஒரு வகையில் குடும்பத்துக்கு அது பெருமை. இன்னொரு வகையில் வீண்வேலை. ஊரோடு இருக்கிற ஆசையில் ராணுவத்தில் ரிட்டயர் மென்ட் வாங்கிக் கொண்டு திரும்பி வந்த கோபாலசாமி கையோடு ரத்தனையும் அழைத்து வந்தார். பங்களாதேஷ் யுத்தம் முடிந்திருந்த நேரம் அது. ரத்தனுக்கு முட்டிக்குக் கீழே ஒருகால் இல்லை. குண்டு பாய்ந்ததில் எடுத்து விட்டார்கள். ராணுவ ஆஸ்பத்திரியில் படுத்த படுக்கையாய் இருந்த சமயத்தில் பீகாருக்குள் புகுந்த கங்கை வெள்ளம் அவர் கிராமத்தையே அடித்துக் கொண்டு போய்விட்டது. பலியான எழுநூறு சொச்ச உயிர்களில் அவர் அம்மா, அப்பா, மனைவி, மகள் எல்லாரும் அடக்கம். மூணு மாசத்துக்குப் பின் ரிட்டயர்மென்ட் வாங்கிக்கொண்டு முடமான காலோடு போய்ச் சேர்ந்தபோது பார்த்துப் பேசக்கூட யாரும் இல்லை. சிதைக்கப்பட்ட பிரதேசம் போலக் கிடந்தது கிராமம். சொல்லி அழுவதற்காவது துணை வேண்டுமேயென்று முகாமுக்குத் திரும்பிய ரத்தனுக்கு ஆறுதல் சொல்லி அழைத்துவந்து குடும்பத்தோடு வைத்துக்கொண்டார் கோபாலசாமி.

ராணுவத்தில் கிடைத்த பணம் நாற்பதாயிரத்துச் சில்லறையைக் கோபாலசாமியிடமே கொடுத்துவிட்டார் ரத்தன். அவருக்குச் சொந்தமான கோழிப் பண்ணை ரத்தனின் பணத்தில் மேலும் கொஞ்சம் விருத்தியானது. கூடமாட முடிந்தவரைக்கும் எல்லாக் காரியங்களிலும் ஒத்தாசையாய் இருந்தார் ரத்தன்., அவரைச் சொந்தத்தம்பி போலப் பார்த்துக் கொண்டார் கோபாலசாமி. இருபது வருஷ காலத்துக்கு எந்தப் பிரச்னையும் இல்லை. கோபாலசாமியும் அவர் மனைவியும் அடுத்தடுத்து இறந்துபோனார்கள். அதற்கப்புறம் பிரச்னை தொடங்கியது.

ஆண் வாரிசு இல்லாத வீட்டுக்குக் கண்டமங்கலத்தில் இருந்து குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள மூத்த மருமகன் என்கிற அந்தஸ்தோடு வந்து சேர்ந்தான் வீரப்பன். ஒரு டெம்போவில் கட்டில், அலமாரி, தட்டுமுட்டுச் சாமான்களோடு வந்தவன் குடும்பத்துக்கும் பண்ணைக்கும் உபகாரமாக இருப்பான் என்றுதான் ரத்தன் நம்பினார். பெரிய பொறுப்பை எடுத்துக் கொள்ளப் போகிற பிள்ளை என்று உபசரிக்கவும் செய்தார். ஆனால் பண்ணைக்குள் நுழைந்து கோழி எத்தனை, முட்டை எத்தனை, வரவு எவ்வளவு, செலவு எவ்வளவு, என்று கணக்குப் பிள்ளையைக் கேட்கிற மாதிரி அதட்டலாய்க் கேட்டபோது மனம் நொந்து போனார் அவர்.

துறுதுறுப்பான பையன்தான். கையும் காலும் ஒரு நிமிடம் கூட சும்மா இல்லை கட்டி ஆளும் வெறி அவன் ரத்தத்தில் ஓடிக் கொண்டிருந்தது. கொஞ் சம் கறுப்பு. ரேவதிக்கு அவ்வளவாகப் பொருந்தாத ஜோடி. கழுத்தில் இருக்கும் தங்கச் சங்கிலியை மெனக்கிட்டு பல்லிடுக்கில் கடித்துக் கொண்டிருந்தான். தர்ம சங்கடமான சூழலுக்குள் விதி தன்னைத் தள்ளிவிட்டதை நினைத்தபடி கண்களை மூடிக் கொண்டு தூணோரம் உட்கார்ந்தார் ரத்தன்.

மறுநாள் ரத்தன் பண்ணைக்குள் நுழையும்போது வீரப்பன் வேலைக்காரச் சிறுவனின் துணையோடு முட்டைகளை எண்ணி எண்ணிக் கூடையில் போட்டுக் கொண்டிருந்தான். ரத்தனுக்கு தூக்கிவாரிப் போட்டது. இதை எதிர்பார்க்கவில்லை அவர். வழக்கம்போல முந்நூறு முட்டைகளைச் சலீம்பாய் கடைக்கு அனுப்பச் சீட்டு எழுதப்போனார். வீரப்பன் அவரைத் தடுத்தான். அப்துல் கறீம் கடையில் இருந்து ஆள்வரும் என்றும், கொடுத்தனுப்பினால் போதும் என்றும் சொன்னான். "இரு இரு" என்று சொன்னபடி முன்னால் வந்தார் ரத்தன். ஆண்டாண்டு காலமாய்ச் சலீம்பாய்க்குக் கொடுத்து வரும் வழக்கத்தைச் சொன்னார். "அவனுக்காக நீங்க ஏன் வக்காலத்து வாங்குறீங்க? கமிஷன் ஏதாச்சிம் கெடைக்குதா ஒங்களுக்கு?" என்று சட்டென்று துடுக்காய்க் கேட்டான் வீரப்பன். ஆடிப்போய் விட்டார் ரத்தன். அரைநிமிடம் வார்த்தையே வரவில்லை. மார்பு படபடக்கத் தான் வலியுறுத்துவதற்கான காரணத்தைச் சொன்னார். கோபாலசாமிக்கும் சலீம்பாய்க்கும் இருந்த நெருக்கத்தைப் பற்றிச் சொன்னார்.

# தனிமரம்



"எங்க மாமா ஒரு அப்பாவி மனுஷன். வெளுத்ததெல்லாம் பாலுன்னு நெனைக்கற ஆளு. அதான் அவர் தலையில எல்லாரும் மொளகா அரச்சாங்க. அந்த சலீம்பாயும் அதுல ஒருத்தன்"

ஓரக்கண்ணால் அவரைப் பார்த்தபடி சொல்லிக் கொண்டே வெளியேறினான் வீரப்பன். அவனுடன் தொடர்ந்து வாதிப்பதா வேண்டாமா என்று குழம்பினார் ரத்தன். படபடப்போடு அக்குள் கட்டையை ஓரமாய்ச் சாய்த்து வைத்துவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தார். ஏதோ பறவைகள் கூரையை உதறிக்கொண்டு பறந்தன. காலை வெளிச்சம் மெல்ல மெல்ல அதிகரித்துக்கொண்டே இருந்தது.

வீரப்பன் குரலைப் பெரிதாக்கிக் கொண்டு நின்றபோது அவர் நினைவு கலைந்தது.

"என்ன உக்காந்துட்டே தூங்கறீங்களா?"

ரத்தன் அசட்டுச்சிரிப்போடு எழுந்திருக்கக் கட்டைக்காகக் கைகளை நீட்டினார்.

"வேற யார் யாருக்கு எவ்வெவ்வளவு அனுப்பணும்னு எழுதி வச்சிருக்கேன். பாத்து அனுப்பிருங்க..."

"சரி..."

"ஊரெல்லாம் ஒன்னேகால் ரூபாய்க்கு முட்ட விக்குது. இன்னும் பழைய முக்கால் ரூபாய்க்கே சலீம்பாய்க்கு நாம ஏன் போடணும்? நஷ்டப்படறதுக்காக வியாபாரம் செய்யறம்?"

"அது சரி"

"இன்னம் யாராவது புது பார்ட்டிங்க கெடைக்கறாங்களான்னு

---

ஓவியம்: **மனோகர்**

பாக்கறன்''

''சரி''

''வியாபாரத்த இன்னம் கொஞ்சம் விஸ்தரிக்கலாம்ன்னு நெனைக்கறன். நீங்கதான் ஒத்தாசையா இருக்கணும்''

''சரி''

''பெங்களூருக்குக் கறிக் கோழிங்க அனுப்பலாம்ன்னு ஒரு திட்டம் வச்சிருக்கேன். பின்னால இன்னம் கொஞ்சம் பெரிசா கொட்டா போட்டு அதுக்கும் ஏற்பாடு செய்யலாம்ன்னு நெனைக்கறேன்''

''சரி''

ரத்தனின் பதில் ''சரி'' என்கிற அளவோடு சுருங்கிக் கொண்டது. தன்னை மீறி அப்படி நிகழ்ந்து விட்டதை அவரே உணர்ந்தார். வீட்டிலும் அவர் உட்கார்ந்த இடத்துக்குச் சாப்பாடு வந்தது. தண்ணீர் வந்தது. வேளா வேளைக்கு டீ வந்தது. ஆனால் மனசு ஓவென்று இருந்தது. கூட உட்கார்ந்து பேச ஆள் இல்லாதது பெரிய மனக்குறை. கதை கேட்கிற கடைசிப்பெண் கூட அருகில் வருவதை நிறுத்திக்கொண்டது வருத்தமாய் இருந்தது. நடுப்பெண்ணும் மூத்த பெண்ணும் ஆளைப் பார்த்தால் சிரிப்பது என்கிற அளவோடு நிறுத்திக் கொண்டார்கள். ஏறத்தாழ இருபது வருஷம் தான் இருந்த வீடா இது என்று அவருக்கே ஆச்சரியமாக இருந்தது.

நாளடைவில் பண்ணையின் முகம் மாறியது. கோழிகள் பெருகின. புதுப்புதுத் தாங்கிகள் செய்யப்பட்டன. அவற்றிற்குத் தேவையான தீனிப் பொருள்களைச் சேமித்து வைக்கச் சின்னக் கிடங்கு கட்டப்பட்டது. பெருக்கவும் குப்பைகளைக் கொண்டு போய்க் கொட்டவும் தனித்தனியே இரண்டு பெண்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டார்கள். கால்களில் சக்கரம் கட்டிக்கொண்ட மாதிரி சுற்றிக்கொண்டே இருந்தான் வீரப்பன். ஒத்தாசை வேண்டும் என்று அவன் சொன்னது வெறும் சம்பிரதாயமான வார்த்தையாக நின்று போனதை எண்ணி வருத்தினார் ரத்தன்.

ரத்தன் அநேகமாக ஒரம் கட்டப்பட்ட மனிதரைப் போல இருந்தார். உடல் மெலியத் தொடங்கியது. பக்கத்திலேயே இருந்தாலும்கூட யாரும் எதுவும் கலந்து பேசுவதில்லை. வேலைக்காரர்களும் அவரை உதாசீனப்படுத்தத் தொடங்கினர். இனி இவருக்குப் பழைய மரியாதை இல்லை என்பது அவர்களுக்குக் கூடத் தெரிந்துவிட்டது. இவரால் தம் வேலைக்கு எந்தக் குந்தகமும் ஏற்படாது என்று புரிந்து கொண்டார்கள். இந்தக் கிழவனை இவ்வளவு தூரம் யார் நொண்டிக் கொண்டு வரச்சொன்னார்கள் என்று குத்திக் காட்டினார்கள். இது தவிரச் சமயம் கிடைக்கும் போதெல்லாம் ரத்தனைச் சீண்டிப் பார்த்துச் சந்தோஷம் கொண்டார்கள். அவரைக் கோபப்படுத்திவிடவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு வந்தது போலப் பேசினார்கள். ஆனால் ரத்தனின் வாயிலிருந்து ஒரு வார்த்தை கூட சீற்றத்துடன் வரவில்லை., ஒரு அசட்டுச் சிரிப்பு. ''அப்படியா'' என்று தலையாட்டல். அட, சும்மா இருங்கய்யா என்று அலுப்பு அவ்வளவுதான் அவர் எதிர்வினை. வீரப்பனும் இந்தக் கும்பலுடன் சேர்ந்து கொண்டான் என்பதுதான் அவருக்குச் சங்கடமாய் இருந்தது.

''ஆத்தோட ஒருத்தி போய்ட்டாங்கறதுக்காக ஆயுசுபூரா சும்மா இருந்துடணுமா? அந்த ஊர்லியே தகுதியானவளா பாத்து கட்டிக்கறத உட்டுட்டு இங்க வந்து ஏன் அல்லாடணும்?''

''அவருதான் ஏதோ மொறைக்கிக் கூப்பிட்டார்ன்னா இவரு எதுக்கு பொட்டிய தூக்கிட்டு ஓடி வரணும்? நானா இருந்தா கோடி ரூபா கொட்டிக் கொடுத்தாலும் பொறந்த ஊர விட்டு ஒரு அடிக்கூட எடுத்து வைக்க மாட்டேன்''

''கெழத்துக்குத் தலையெழுத்தப் பாரு எங்கயோ பொறந்து, எங்கயோ வளந்து எங்கயோ குப்ப கொட்டுது...''

''எல்லாவற்றிற்கும் தலை யசைத்தபடி உட்கார்ந்திருந்தார் ரத்தன். அவருடைய சிரிப்பும் மௌனமும் ஒற்றை வார்த்தைப் பதிலுமே வீரப்பனுக்கு வெறியை அதிகப்படுத்தியது.

''ஒரு வடநாட்டுக்காரன் தைரியமா வந்து இங்க வாழ்ந்துட்ட... இதே எங்க ஆளுங்க அங்க வந்தா இருக்க உடுவீங்களா... எல்லாம் நாங்க கொடுக்கற தாராளம்... அத நெனச்சிக்குங்க''

அதற்கும் ஒரு சிரிப்புதான் அவர் பதில். மேற்கொண்டு என்ன பேசுவது என்று தெரியாமல் உட்கார்ந்திருந்தான் வீரப்பன். ஏதாவது சுடுசொல்லை அவர் மீது உடனடியாய்க் கொட்டித் தன் ஸ்தானத்தை உறுதிப்படுத்தி விடவேண்டும் என்று தவித்தான். பதற்றம் புத்திசாலித் தனமல்ல என அவன் உள்மனம் சொன்னது. பல்லைச் கடித்தபடி எழுந்து போனான்.

ரத்தனுக்கு இரவில் தூக்கம் வரவே இல்லை. ஏதேதோ கெட்ட கெட்ட கனவுகள். பெரிய பாழுங் கிணறு. கையையும் காலையும் கட்டி விட்டுத் தொபீர் என்று தள்ளி விடுகிறார்கள். அது ஒரு கனவு. இன்னொரு கனவில் சுற்றிலும் அலையடிக்கும் சமுத்திரம் கப்பல் நொறுங்கிப் போக ஒரு மரக்கட்டையைப் பிடித்தபடி நீந்துகிறார் ரத்தன். வேகமாக எழுந்த அலையில் தடுமாறிக் கட்டையில் மீது இருந்த பிடிமானம் நழுவி விடுகிறது. சமுத்திரம் அவரைத் தம் வயிற்றின் ஆழத்திற்கு இழுத்துக்கொண்டே செல்கிறது. மரணம் என்கிற சொல் அடிக்கடி காதுக்குள் ஒலித்தது. வாழ்க்கை மீதும் மனிதர்கள மீதும் முதன்முதலாக வெறுப்பு ஏற்பட்டது.

விடிந்ததும் விடியாததுமாகப் பண்ணையில் வேலை செய்த சிறுவன் ஓடிவந்து அவரை அழைத்தான். எழுந்து உட்கார்ந்தவரிடம் ''ஐயா கூப்படறாங்க'' என்றான். மௌனமாக எழுந்து கட்டையை ஊன்றிக் கொண்டு சென்றார் ரத்தன்.

இறைச்சிக் கோழிகளின் கொட்டகைக்குள் நின்றிருந்தான் வீரப்பன். குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டிருந்தான். முற்றிலுமாக இன்னும் இருள் பிரிந்திருக்கவில்லை. ரத்தனைப் பார்த்ததுமே ''பத்து கறிக் கோழிங்க செத்துக் கெடக்குது'' என்றான். ரத்தனுக்குப் பகீர் என்றது. அக்குள் கட்டை நழுவும்போல இருந்தது. ''என்ன... என்ன சொல்ற நீ..?'' என்று பதறினார். வீரப்பன் தன் சிவந்த கண்களை உருட்டி ''பத்துக் கோழிங்க செத்துக் கெடக்குது'' என்றான் மீண்டும்.

ரத்தன் படலை விலக்கிக் கொண்டு உள்ளே போய்ப் பார்த்தார். தனியே ஒரமாய் துணிக்கூளம் போலப் பத்துக் கோழிகள் கிடந்தன. குனிந்து தொட்டுப் பார்த்தார். உடல் சில்லிட்டிருந்தது. சின்னக் கண்ணாடிக் குண்டு போல மின்னும் கண்கள் குத்திட்டிருந்தன.

கைக்கட்டையைச் சுவரோரம் சரித்துவிட்டு அப்படியே உட்கார்ந்தார் ரத்தன். ஒரு கணம் என்ன செய்வது என்று புரியவில்லை. மீண்டும் மீண்டும் அவர் பார்வை செத்துப்போன கோழிகள் மீது பதிந்தது. 'கடவுளே' என்று வாய்விட்டுச் சொன்னார். "எப்படி ஆச்சு?" எனத் தவிப்போடு வீரப்பன் பக்கம் திரும்பிப் பார்த்தார்.

"அதான் நானும் கேக்கறன். எப்படி ஆச்சு?" என்று குரலை உயர்த்திக் கேட்டான் வீரப்பன். அடிபட்டது போல உடல் நடுங்கியது ரத்தனுக்கு. கண்களில் திகைப்பு தேங்கியது.

"என்ன முழிக்கறிங்க? எப்படி ஆச்சின்னு நீங்கதான் சொல்லணும்" என்று கத்தினான் வீரப்பன்.

"நீ சொல்லியனுப்பனப்பறம் தான் நான் வந்தன். எனக்கு எப்படிப்பா தெரியும்?" எனறார் ரத்தன்.

"அந்தக் கதையெல்லாம் வேணாம். நேத்து ராத்திரி கோழிங் களுக்குத் தீனி வச்சது நீங்க! தண்ணி ஊத்தனது நீங்க! உங்களுக்குத் தெரியலன்னா எப்படி...?"

"சாமி சத்தியமா எனக்குத் தெரியாது" என்று தன் நெஞ்சைத் தொட்டுச் சொன்னார் ரத்தன். தடுமாறி எழுந்து நிற்க முயன்றார்.

"உண்மைய சொல்லிட்டா ஒங்களுக்கும் நல்லது. எங்களுக்கும் நல்லது. சும்மா வீண் பிரச்சன வேணாம்"

"அபாண்டமா இப்படிப் பேசாத தம்பி. இது எப்படி நடந்த துன்னே எனக்குப் புரியல"

ரத்தனின் குரல் அடங்கி வரவர, வீரப்பன் குரலை உயர்த்தத் தொடங்கினான். இறுதியில் "என்னைக்கா இருந்தாலும் உண்மை வந்துதான் ஆவணும் அதுமட்டும் ஞாபகத்துல இருக்கட்டும்" என்று சொல்லிவிட்டு துண்டை உதறிக் கொண்டு போனான் வீரப்பன். போகும்போது குப்பை கூட்டும் பெண்ணிடம் கோழிகளை அப்புறப் படுத்தச் சொன்னான்.

ரத்தன் தனித்து விடப்பட்டார். அவரால் யாரையும் நிமிர்ந்து பார்க்க இயலவில்லை. எல்லாருடைய கண்களி லும் சந்தேகக்கோடு. வீட்டுப் பெண் களின் பார்வையில் கொஞ்சமும் ஒட்டுதல் இல்லை. அன்று முழுக்க அவர் சாப்பிடவில்லை. திண்ணைக்கு வந்த சாப்பாடு அப்படியே மூடி இருந்தது. மதியத்திற்குப் பிறகு கொஞ்சம் தண்ணீர் மட்டும் குடித்தார். மனம் பாரமாக இருந்தது. வெயில் என்று கூடப் பார்க்காமல் ஏரிக்கரைப் பக்கம் சென்றார். சுழன்று அடிக்கும் காற்றில் ஆலமரத்தடியில் பாறை மீது உட்கார்ந்தார். பக்கத்தில் பட்டுப் போன மரமொன்றிருந்தது. கிளை எதுவுமில்லாத வெறும் கட்டை. அதன் பட்டையை இரண்டு காகங்கள் கொத்திக் கொண்டிருந்தன. பார்த்துக் கொண்டிருந்த ரத்தன் கசப்பான சிரிப்பொன்றை உதிர்த்தார்.

இரண்டு நாள் கழித்து மீண்டும் வீரப்பன் வந்து அவரை அழைத்தான். காலை வேளை. அவருக்குப் பகீர் என்றது. எதுவும் பேசாமல் கூடவே அழைத்துப்போய் பண்ணைச்சுவர் அருகே காட்டினான். ஏழெட்டுக் கோழிகள் இறந்து கிடந்தன. ஓரடி சட்டென்று பின் வாங்கினார் ரத்தன். "இதுக்கு என்ன சொல்றீங்க?" என்று கேட்டான் வீரப்பன். குழப்பத்திலும் திகைப்பிலும் மூழ்கிய ரத்தனின் பதிலுக்குக்கூடக் காத்திருக்காமல் போய்விட்டான்.

யோசனையில் ஆழ்ந்தபடி திண்ணைக்குத் திரும்பினார் ரத்தன். இது எப்படி நடக்கிறது என்று அவருக்குப் புரியவே இல்லை. அவர் முதல் சந்தேகம் வீரப்பன் மீதுதான். தொடர்ந்து பண்ணைக்குப் புதுசாக வந்த எல்லார் மீதும் சந்தேகம் படர்ந்தது. ஆனால் வீரப்பனோ ரத்தன்தான் இந்த வேலையை ரகசியமாய்ச் செய்கிறார் என்றும் தனக்கும் அவருக்கும் இருக்கிற பகையைக் கோழி மீது காட்டுகிறார் என்றும் வதந்தி பரப்பினான். குடும்பத்துக்குள்ளும் பண்ணைக்குள்ளும் அவர் தனிமைப் படுத்தப்பட்டார். தன்னை நோக்கிச் சுட்டும் விரல்களை அவரால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. அன்றும் அவர் பட்டினி கிடந்தார்.

மறுநாள் இரவு தூங்கவே இல்லை அவர். விடியும் நேரம் நெருங்க நெருங்க வீரப்பன் கொண்டு வரப் போகும் கோழிகளின் சாவுச் செய்திக்காக நடுக்கத்தோடு காத்திருந்தார். தனியே எழுந்து போகப் பயமாக இருநதது. பண்ணைக்குள் ஓர் இரவைக் கழித்தால் கண்டு பிடித்துவிட முடியும் என்கிற நம்பிக்கையைச் செயல்படுத்த முடியாத நிலையில் இருந்தார் அவர். விடியும்போது வீரப்பன் செய்தி அனுப்பி இருந்தான். குப்பை கூட்டும் பெண் வந்து சொன்னாள். அவர் அருகே எட்டுக் கோழிகள் செத்துக் கிடந்தன. அன்று திண்ணையை விட்டு எழுந்திருக்கவே இல்லை அவர் மனசில் வெறுமை.

அடுத்தநாள் மேலும் ஆறுகோழிகள் இறந்து கிடப்பதாய்ப் பையன் வந்து சொன்னான். ரத்தனின் கண்களில் கண்ணீர் வழிந்தது.

"இப்படி தெனமும் கொஞ்சம் கொஞ்சமா கொல்றதுக்குப் பதிலா எல்லாத்தயும் ஒரே நாள்ல கொன்னுருய்யா. கூண்டோட போய்ச் சேந்துரும். அப்படியே எங்களுக்கும் கொஞ்சம் வெஷத்தக் குடுத்துரு. நாங்களும் போயிடுவம். இத்தன வருஷமா ஒன்ன வச்சி காப்பாத்தன குடும்பத்துக்கு ரொம்ப பெரிய உபகாரம் செஞ்சிட்ட..."

வீரப்பன் திண்ணைக்கு வந்து சத்தம் போட்டான். அவரால் ஒரு வார்த்தை பேச முடியவில்லை. அழுதபடி உட்கார்ந்து விட்டார். பகல்முழுக்க அழுகைதான். சாயங்காலமாக அக்குள் சட்டையோடு ஊரைத்தாண்டி நடந்தார்.

இரவு சாப்பாட்டு வேளையின்போது திண்ணையில் ரத்தன் இல்லை என்கிற சங்கதியை வீரப்பனிடம் வந்து சொன்னாள் வேலைக்காரப் பெண். "எங்க போகும் கெழம்... எங்கனா கோயில் கொளம்ன்னு உக்காந்துட்டு திரும்பி வரும் போ..." என்றான் அவன். கோழி செத்துப் போகத் தொடங்கிய நாளில் இருந்தே அவர் சாப்பிடுவதை விட்டுவிட்டார் என்கிற சங்கதி தெரிந்த பெண்கள் அவ்வளவாய் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

மறுநாள் வாசல் பெருக்கப் போன பெண் வந்து ரத்தன் வீட்டில் இல்லை என்கிற சங்கதியை வீரப்பனிடம் சொன்னாள். தற்கொலையோ என்கிற எண்ணம் சட்டென எழுந்து அவனை உறையவைத்தது. அன்று முழுக்க ஏதாவது செய்தி வரும என்று பதட்டத்தோடேயே இருந்தான். எதுவும் இல்லை. அவர் ஊரைவிட்டுப் போய்விட்டார் என்கிற விஷயத்தை அவனால் நம்பவும் முடியவில்லை. நம்பாமல், இருக்கவும் முடியவில்லை. இதுதான் எதிர்பார்த்த முடிவா என்று குழப்பமாக இருந்தது.

இரண்டுநாள் கழித்து முட்டைகளை எண்ண அதிகாலையில் பண்ணைக்குச் சென்ற வீரப்பனின் பார்வையில் சுவர் ஓரம் ஐந்தாறு கோழிகள் சுருண்டு கிடப்பதைக் கண்டான். பையனிடம் "ஏண்டா அப்படிக் கெடக்குது?" என்றான். தானே நெருங்கித் தூக்கினான். கோழிகள் இறந்திருந்தன. ●



40. ஜாக்விஸ் லூயிஸ் டேவிட்

*Best Compliments*

**TVS SUZUKI**

**M/s. PREMIER MOTORS**

Thiruvalluvar Salai, Dindigul.



41. அனிபால் கராசி


நல்வாழ்த்துகள்

பெரியார் மாவட்ட ஆவின் பால்பண்ணை

தலைவர்: அபூர்வ வர்மா இ.ஆ.ப.,

மாவட்ட ஆட்சியர், ஈரோடு.

# இதுவரை சிறுகதை

**மாலன்**



தமிழ்ச் சிறுகதைக்கு என்ன வயதிருக்கும் என்று நினைக் கிறீர்கள்?

வாய்மொழியாகக் கதை சொல்லப்பட்ட காலத்தைத் துல்லிய மாகக் கணக்கிட்டு சொல்லப் போது மான ஆதாரங்கள் இல்லை. கதை சொல்வதைப் பற்றித் தொல் காப்பியத்தில் ஒரு வரி வருகிறது. "பாட்டிடை வைத்த குறிப்பினானும்" என்று துவங்குகிற சூத்திரத்தில் "பொருள் மரபில்லா பொய்மொழி யானும்" என்று ஒரு வரி வருகிறது.

பொய்மொழி என்ற இந்த வார்த்தையை "உண்மையில்லாத பொய்க்கதை" என்று உரையாசிரியர் கள் விளக்குகிறார்கள். பொய்மொழி என்ற சொல் *'FICTION'* என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான ஒரு சொல்லாக இருப்பது. மொழியின் பற்பல ஆச்சரியங்களில் ஒன்று. கதை என்பதே பொய் என்பது ஒரு பரவலான நம்பிக்கை. கதை விடுதல், கதை அளத்தல் என்ற பேச்சு வழக்கிற்குப் பொய் சொல்வது என்றே பொருள். இந்தப் பேச்சு வழக்கை பாரதியார், கவிதைக்குள்ளும் எடுத்துச் சென்று அதற்கு ஒரு சிரஞ்சீவித் தன்மையைக் கொடுத்து விடுகிறார். ('அட, பிள்ளைக் கதைகள் விரிக்கிறாய்' – பாஞ்சாலி சபதம் (109)

கதைக்கு எத்தனை வயதிருக்கும் என்று 'கதை விடுவதில்லை' என்னுடைய நோக்கம். தமிழ்ச் சிறுகதையின், எழுத்து வடிவில் இன்று நமக்குப் படிக்கக் கிடைக்கிற தமிழ்ச் சிறுகதையில், வயதை அல்ல. வரலாற்றை ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

கதை என்னும் பொய்மை, அச்சு மையைச் சந்தித்தது குத்து மதிப்பாகச் சொன்னால் 175 வருடங்களுக்கு முன்னால். 1822ல் சென்னைக் கல்விச் சங்கத்தார் என்ற அமைப்பினர், வீரமாமுனிவரின் "பரமார்த்த குரு" கதைகளை அச்சிட்டு வெளியிட்டார்கள்.

வாய்மொழியாகப் பேச்சு வழக்கில் இருந்த கதைகளின் தொகுப்புதான் இது என்ற ஒரு கருத்து உண்டு. அதே சமயம்

தமிழில் முதலில் அச்சேறிய இந்தக் கதைகள் குறித்து சுவாரஸ்யமான சர்ச்சையும் ஒன்று உண்டு. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாவில்லா ராமஸ்வாமி சாஸ்திரி அண்ட் சன்ஸ் பிரசுரித்துள்ள பரமார்த்த குரு கதையின் முன்னுரை. அந்தக் கதைகள் சுப்ரதீபக் கவிராயரால் இயற்றப்பட்டு அவருக்குப் பொருளுதவி செய்து வந்த வீரமாமுனிவரால் அச்சிடப்பட்டது என்றும், தேம்பாவணியும் இந்தக் கவிராயராலேயே எழுதப்பட்டது என்றும் குறிப்பிடுகிறது. இந்தத் தகவல் உண்மை என்றால் தமிழில் அச்சான முதல் கதைத் தொகுப்பிலேயே *GHOST WRITING!*

பரமார்த்த குரு கதைகளை அடுத்து வந்த பல தொகுப்புகளும் வாய்மொழியாக வழங்கிவந்த கதைகளின் தொகுப்பாகவோ அல்லது மொழிபெயர்ப்புகளின் தொகுப்புகளாகவோ இருக்க காண்கிறோம். சில உதாரணங்கள்:

1826 பஞ்சதந்திரக் கதைகள் (மூலம்: மராத்தி)

1826 கதாமஞ்சரி (மூலம்: வடமொழி)

1853 ஈசாப்பின் நீதிக் கதைகள் (மூலம்: ஆங்கிலம்)

1855 மதனகாமராஜன் கதை (வாய்மொழி)

1868 மயில் ராவணன் கதை (வாய்மொழி)

1869 முப்பத்திரண்டு பதுமை கதை (வாய்மொழி)

1869 தமிழறியும் பெருமாள் கதை (வாய்மொழி)

வாய்மொழி வழக்கில் இருந்த கதைகளும், மொழிபெயர்ப்புகளும் புத்தகங்களாக வெளிவந்து கொண்டிருந்த காலத்தில், சுயமாக எழுதப்பட்ட கதை களைக் கொண்ட ஒரு தொகுப்பு 1869ல் வெளியாயிற்று. அதை எழுதியவர் ஒரு இலங்கைத் தமிழர். 1841லிருந்து யாழ்ப்பாணத்தில் 'உதயதாரகை' என்ற ஒரு பத்திரிகை வெளியாகி வந்தது. 1857ல் அதன் ஆசிரியராகப் பொறுப் பேற்றவர் அ. சதாசிவம்பிள்ளை. வட்டுக்கோட்டை அமெரிக்கன் மெஷின் செமினரியில் படித்து வரும்போதே, இந்த அருணாசலம் சதாசிவம்பிள்ளை மதம் மாறி ஜே.ஆர். ஆர்னால்ட் என்ற பெயரைச் சூடிக் கொண்டார். தனது பத்திரிகையில் தான் எழுதிவந்த கதைகளில் நாற்பது கதைகளைத் தொகுத்து 1869ல் ஒரு நூலாக வெளியிட்டார். அதன்பெயர் "நன்னெறி கதாசங்கிரகம்" இதுதான் தமிழில் முதன்முதலில் வெளியான சுயமான கதைகளின் தொகுப்பு.

நல்ல நெறிகளை – அருணாசலம் பிள்ளையின் வார்த்தைகளில் சொன்னால், "சன்மார்க்க சாதனைக்கும், போதனைக்கும் உரிய" விஷயங்களைப் போதிப்பதுதான் இந்தத் தொகுப்பின் நோக்கம். இதை ஒட்டி இதே போன்று போதனை நோக்கத்தோடு பல தொகுப்புகள் வரத் துவங்கின. அவற்றையெல்லாம் பற்றி விரிவாகப் பேச இங்கு இடமில்லை.

தமிழ்ச் சிறுகதை வரலாற்றை ஆராய்ந்த சிட்டியும், சிவபாதசுந்தரமும் அதை நான்கு கட்டங்களாகப் பிரிக்கிறார்கள். நன்னெறி கதாசங்கிரகம் தோன்றிய 1869 முதல் வ.வே.சு. ஐயர் மரணமடைந்த 1925 வரை உள்ள ஆண்டுகள் முதல் கட்டம். 1926 முதல் புதுமைப்பித்தன் இறப்பதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முந்தைய 1945 வரை இரண்டாவது கட்டம். 1946 முதல் '60 வரை மூன்றாவது கட்டம். அறுபதுக்குப் பிந்தைய ஆண்டுகள் நான்காவது கட்டம். நானும் இந்தப் பாகுபாடுகளைப் பின்பற்றி ஒவ்வொரு காலகட்டத்திற்கும் இரண்டு கதாசிரியர்கள் என்று எடுத்துக்கொண்டு சிறுகதை இலக்கியத்தின் போக்கைச் சொல்ல முற்படுகிறேன்.

புராணப் பாடல்களும், காதல் பிரபந்தங்களும், தனிமனிதப் புகழ்ச்சிகளும், சித்திரக்கவிகளும் தமிழ்க் கவிதை உலகில் மண்டிக் கிடந்த காலத்தில் கவிதையை மீட்டெடுத்ததைப் போலவே பாரதி, காமக் களியாட்டங் களும் ஒழுக்க உபதேசங்களும் சிறுகதை உலகை ஆக்ரமித்திருந்த காலத்தில் தமிழ்ச் சிறுகதை உலகில் ஒரு புதிய மரபை உருவாக்கினார். சிறுகதை என்பது ஒரு ஐரோப்பியக் கலைவடிவம் என்று கருதப்பட்ட காலத்தில் அதை மறுதலிப்பதுபோல் பாரதி, முற்றிலும் புதியதொரு வடிவத்தை உருவாக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. பாரதி உருவாக்கிய இந்த வடிவம் மரபு சார்ந்தது. அதே நேரம் நவீனமானது. முன்னே குறிப்பிட்ட தொல்காப்பிய சூத்திரத்தின் "பொருள் மரபில்லா பொய்மொழியானும்" என்ற வரிக்கு விளக்கம் எழுதிய உரையாசிரியர்கள் 'யானையும் குருவியும் தம்முள் நட்பாடிப் பேசிக்கொள்வது போல' என்று விளக்கம் தருகிறார்கள். அதே சூத்திரத்தின் அடுத்த அடி 'பொருளொடு புணர்ந்த நகைமொழியானும்' என்று அமைந்திருக்கிறது. அதாவது உண்மை கலந்த வேடிக்கைப் பேச்சு.

கதை சொல்லும் தமிழ் மரபின் இந்த இரண்டு அம்சங்களையும் பின்பற்றி தனது சிறுகதை வடிவத்தை உருவாக்கினார் பாரதி. அவருடைய காக்காய் பார்லி மெண்ட், இலக்கணம் படித்த காக்கை போன்ற கதைகளில் இவற்றைப் பார்க்க முடியும். அந்தக் கதைகளில் காகங்கள் பேசிக் கொள்கின்றன. அதே சமயம் அவை 'உண்மை கலந்த வேடிக்கைப் பேச்சு' பேசுகின்றன.

ஐரோப்பியக் கலை வடிவத்தை நிராகரித்து, தனக்கென, தமிழுக்கென ஒரு புது வடிவை உருவாக்கிக் கொண்ட பாரதி, சிறுகதையின் பயன் குறித்தும் ஒரு இந்தியப் பார்வையே கொண்டிருந்தார். கதை என்பது இன்பம் பயக்கும் ஒரு கலை வடிவம் மட்டுமல்ல. செய்தி சொல்வதற்கான ஒரு ஊடகமும் கூட என்பதுதான் அந்தப் பார்வை. சமூக சீர்திருத்தக் கருத்துக்களையும் அரசியல் நடப்புகளையும் சொல்வதற்குப் பத்திரிகையைப் போல சிறுகதையையும் ஒரு ஊடகமாக அவர் வரித்துக் கொண் டார். அவரது 'துளஸிபாய்' பெண்கள் உடன்கட்டை ஏற நிர்ப்பந்திக்கப்படும் வழக்கத்தைச் சாடுகிறது. பூலோக ரம்பை பொட்டுக் கட்டும் வழக்கத்தின் கொடுமைகளைச் சித்திரிக்கிறது. காந்தாமணி, பெண்கள் ருதுவாவதற்கு முன்பே அவர்களைத் திருமணம் செய்து கொடுக்கும் வழக்கத்தை இகழ்ந்து அதற்கு மாற்றாக கலப்புத் திருமணத்தைக் கோடி காட்டுகிறது. சுவர்ணகுமாரி அரசியலிலும் மதத்திலும் மிதவாதத்தைப் பின்பற்றுவதை நையாண்டி செய்து திலகரின் தீவிரவாதத்தையும், பிரம்ம சமாஜத்தையும் உயர்த்திப் பிடிக்கிறது.

தமிழின் முதல் நவீன சிறுகதை என்று கருதத் தக்க – 1911ல் எழுதப்பட்ட – அவருடைய ஆறில் ஒரு பங்கிற்கு எழுதப்பட்ட முகவுரையில் அவருடைய சமூக நோக்கம் அப்பட்டமாக வெளிப்படுகிறது.

"ஒரு சாதி ஒருயிர்: பாரத நாட்டிலுள்ள 30 கோடி ஜனங்களும் ஒரு ஜாதி. வகுப்புகள் இருக்கலாம். பிரிவுகள் இருக்கலாகாது. வெவ்வேறு தொழில் புரியலாம். பிறவி மாத்திரத்தாலே உயர்வு தாழ்வு என்ற எண்ணம் கூடாது. மதபேதங்கள் இருக்கலாம். மதவிரோதங்கள் இருக்க லாகாது.

இவ்வுணர்வே நமக்கு ஸ்வதந்திரமும் அமரத் தன்மையும் கொடுக்கும். வேறு வழியில்லை. இநநூலைப் பாரத நாட்டில் உழவுத் தொழில் புரிந்த நமக்கெல்லாம் உணவு கொடுத்து இரட்சிப்போர்களாகிய பள்ளர், பறையர் முதலிய பரிசுத்த தன்மை வாய்ந்த வைசிய சகோதர்களுக்கு அர்ப்பணம் செய்கிறேன்."

ஓவியம்: **விஸ்வம்**



தமிழின் இந்த முதல் நவீன சிறுகதை அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டது. இந்தியாவிலேயே முதல்முதல் தடை செய்யப்பட்ட கதை தமிழின் முதல் சிறுகதைதான். இந்தத் தடைவிதிப்பை பத்திரிகை களும், அறிஞர்களும் எதிர்க்க வேண்டும் என்று கோரி 8.10.1912 தேதியிட்ட இந்து நாளிதழின் ஆசிரியருக்கு கடிதம் பகுதிக்கு சி. சுப்ரமண்யபாரதி என்ற பாரதியார் கடிதம் எழுதினார். அரசாங்கத் தடையை எதிர்க்கும் விஷயத்தில் இன்று நடப்பதே அன்றும் நடந்தது. ஆம். தடையை எதிர்க்க யாரும் முன் வரவில்லை.

பாரதியாரின் சமகாலத்தவ ரான வ.வே.சு. ஐயர் ஐரோப்பிய சிறுகதை வடிவத்தைப் பின்பற்றி எழுதமுற்பட்டவர். 'ரஸோபாவோபேத மாய்' இருக்கவேண்டும் என்பதுதான் அவருடைய சிறுகதைக் கொள்கை. சிறுகதையைச் சமூக விழிப்புணர் விற்குப் பயன்படுத்துவது குறித்து அவர் தீர்மானமான லட்சியங்கள் கொண்டிருந்தார் என்பதற்குப் போதிய சான்றுகள் இல்லை. குழந்தை மணத்தையும் வரதட்சணைக் கொடுமையையும் பற்றிப் பேசும், இன்றுவரை தமிழின் முதல் சிறுகதை என்று நம்பப்படும் குளத்தங்கரை, அரசமரம், தாகூர் எழுதிய காட்டேர் கதா என்ற வங்கக் கதையின் தழுவல். இந்தக் கதையின் ஆங்கில மொழி பெயர்ப்பு மாடர்ன் ரிவ்யூ பத்திரிகை யில் 1914ம் ஆண்டு தி ஸ்டோரி ஆஃப் த ரிவர் ஸ்டேர் என்ற தலைப்பில் வெளியாயிற்று. வ.வே.சு ஐயரின் கதை 1915ல் விவேகபோதினி பத்திரிகையில் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் அவரது மனைவியின் பெயரான பாக்யலக்ஷ்மி அம்மாள் என்ற பெயரில் வெளியாயிற்று. தாகூரின் கதையில் ஆற்றங்கரை படித்துறை ஒன்று கதை சொல்கிறது. ஐயரின் கதையில் குளத்தங்கரை அரசமரம் கதை சொல்கிறது. எட்டு வயதில் விதவை யான ஒரு சிறுமி, யுவதியாக ஆன பின்பு ஒரு பால சந்நியாசியிடம் மனதைப் பறிகொடுத்து அந்த சந்நியாசியிடம் எந்தவித சலனமும் ஏற்படாததால் ஆற்றில் குதித்துத் தற்கொலை செய்து கொள்வதைச் சொல்கிறது தாகூரின் கதை. சிறு வயதில் மணமுடிக்கப்பட்ட ருக்மணி வயது வந்து பிறகும் வரதட்சணைக் கொடுமை காரணமாகக் கணவன் வீடு செல்லமுடியாத சூழ்நிலையில் கணவன் விளையாட்டாகச் சொன்ன வார்த்தைகளைப் புரிந்துகொள்ள முடியாமல் குளத்தில் குதித்துத் தற்கொலை செய்து கொள்வதைச் சொல்வது ஐயரின் அரசமரம்.

தமிழின் முதல் நவீன சிறுகதை என்று வகுப்பறைகளில் போதிக்கப் படும் கதை ஒரு தழுவல் கதை. அதில் காணப்படும் சமூக நோக்கம் தற்செயலானது.

பாரதியாரைப் போல சமூகப் பிரசினைகளை விவாதிப்பதற்குரிய ஒரு சாதனமாக அவர் சிறுகதையைக் கருதியிருக்கவில்லை. மாறாக, தமிழனுக்கு அவனுடைய சரித்திரத்தை எடுத்துச் சொல்லி அதன் மூலம் அவர்களிடத்தில் பெருமையுணர்வை ஏற்படுத்துவதற்குச் சிறுகதைகளைப் பயன்படுத்தவேண்டும் என்பதுவே அவருடைய லட்சியமாக இருந்தது. அவர் காலமாவதற்கு சில நாட்களுக்கு முன்பு காசியில் உள்ள தனது நண்பர் ஆதிமூர்த்தி என்பவருக்கு எழுதிய கடிதம் ஐயரின் மரணச் செய்தியைத் தாங்கிவந்த பாலபாரதி இதழில் வெளியிடப்பட்டிருக்கிறது. அந்தக் கடிதத்தில் அவர் எழுதுகிறார்:

"தூமாஸ் பிரெஞ்சு சரித்திரம் அனைத்தையுமே கற்பனைக் கதை களைச் சரிபண்ணி ஒவ்வொரு பிரெஞ்சுக்காரனையும் தன் தேச சரித்திரத்தினைக் கற்றவனாயும், உற்சாகி யாயும் ஆக்கிவிட்டதைப் போல தமிழ்நாட்டு சரித்திரமனைத்தையும் கற்பனைக் கதைகளாகச் செய்ய வேண்டுமென்றிருக்கிறேன். பாரியும் நன்னனும் கபிலரும், நக்கீரரும் கரிகாலனும் செங்குட்டுவனும், நாகராஜனும் ராஜேந்திரனும், விஜயபாலனும் சுந்தரமூர்த்தி நாயனார் முதலிய சைவ நாயன்மார்களும், குலசேகரன், ராமானுஜன், தேசிகர்

முதலிய வைஷ்ணவ ஆச்சார்ய மகான்களும் நமது கதைத் தொடரில் நாயகர்களாக விளங்கி, காம்பீர்யம் முதலிய பௌருஷமான ரசங்களுக்கு நிலையமாக நின்றால், அடுத்த தலைமுறை முதல் தமிழ் இலக்கியத்தையும் தமிழ்ச் சரித்திரத்தையும் யார் அவமதிப்பார்? அது சாத்தியமானால், இப்பேர்ப்பட்ட வீரதீரர் பிறந்து வளர்ந்து இறந்த நாட்டில் நாம் பிறக்கச் செய்த புண்ணியமே புண்ணியமென்றும் நாம் அவர்களுக்கேற்ற சந்ததியாகக் கடவோம் என்றும் எண்ணங்கள் தமிழருள் தோன்றி மற்ற மாகாணங்களில் பிறந்து கொண்டிருக்கும் தீரயுகம் இங்கும் பிறக்க வழி காட்டியாக நாம் அமைந்து விடுவோம். இந்த நோக்கத்துடனேயே "மங்கையர்க்கரசியின் காதல்" முதலிய கதைகளை எழுதியதோடு, லைலா மஜ்னுன், அனார்க்கலி முதலிய கதைகளும் கைப்பழக்கத்துக்காக எழுதி வருகிறேன். நாளாவட்டத்தில் பெரிய சரித்திரத்தை எழுதும் நிலைமைக்கு வரும் என்று நினைத்தே சிறுகதைகளை எழுதி வருகிறேன்."

ஐயரின் மங்கையர்கரசியின் காதல் குலோத்துங்க சோழனுடைய தளபதியான கருணாகரத் தொண்டைமானுடைய மகளைப் பற்றியது என்றாலும், அது எழுதப்பட்ட காலத்தில் ஐரோப்பாவில் பின்பற்றப்பட்டு வந்த சிறுகதை இலக்கணங்களைப் பின்பற்றி எழுதப்பட்டது. சிறுகதை என்பது "ஒரே மூச்சில் படித்து முடிக்கக் கூடியதாக இருக்கவேண்டும். அது ஏற்படுத்தும் தாக்கம் ஒரே ஒரு உணர்வினதாக இருக்க வேண்டும்" என்று எட்கர் அலன்போ 1841 தனது SINGLE EFFECT சித்தாந்தத்தை வெளியிட்டார். அவருக்குப் பின்வந்த கதாசிரியர்கள் சிறுகதை என்பது ஒரு தனிச் சம்பவத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று தீர்மானித்தார்கள். ஐரோப்பியச் சிறுகதைகளுக்கும் இந்தியக் கதை மரபிற்கும் உள்ள வித்தியாசங்களை "அவர்கள் நட்ட நடுவில் கதையைத் தொடங்குகிறார்கள்" என்று சின்னசங்கரன் கதை முன்னுரையில் பாரதியார் குறிப்பிடுகிறார். இந்த எல்லா லட்சணங்களையும் வ.வே.சு ஐயரில் மங்கையர்க்கரசியின் காதல் என்ற கதையில் பார்க்க முடியும்.

பாரதியாரை விட சிறுகதையின் நவீன வடிவத்தைச் சிறப்பாகக் கையாண்டவர் ஐயர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஐயரிடம் *Craft* இருந்த அளவிற்கு *Vision* இருந்ததா என்பது கேள்விக்குரிய விஷயம். ஐயருக்கும் பாரதிக்கும் உள்ள ஆளுமையின் வித்தியாசத்தை அவர்கள் உருவாக்கிய துளஸிபாயிக்கும், மங்கையர்க்கரசிக்கும் இடையே காணமுடியும். வலுக்கட்டாயமாக உடன்கட்டை ஏற்றப்பட்ட ராஜ குடும்பத்து துளஸிபாய் அதிலிருந்து தப்பி இஸ்லாமியரான அப்ஸல்கானை மணந்துகொண்டு மகிழ்ச்சியோடு வாழ்வதாக முடிகிறது பாரதியின் கதை. காதலனின் சடலத்தைக் கண்டு,

"நீ போனபிறகு எவ்விதம் நான் நின்றுகொண்டும், பேசிக்கொண்டும் இருக்கிறேன்? என் நாதா, உன் உதடு அசைகிறதுபோல் இருக்கிறதே, என்னை அழைக்கிறாயோடா? வந்தேன், வந்தேன்" என்று 'பிரலாபித்துக் கொண்டு' தன்னையும் குத்திக் கொண்டு மடியும் மங்கையர்க்கரசியை முன் வைக்கிறார் ஐயர்.

ஐயர் ஐ.சி.எஸ். படித்தவர். பாரதியார் பட்டதாரியா என்பது உறுதியாகத் தெரியவில்லை. ஐயர் ஐரோப்பிய கலாச்சாரத்தின் தலைநகரான இங்கிலாந்தில் வாழ்ந்தவர். ஆனால் ஐயர் சநாதன நம்பிக்கைகளும் வருணாசிரமத்தில் பிடிப்பும் கொண்டவராக வாழ்ந்தார். பாரதி சநாதன கலாசாரத்தைத் தாங்கிப் பிடிக்கும் காசியில் வாழ்ந்தவர். ஜாதிமத பேதங்களை நிராகரிக்கிற முற்போக்காளராக வாழ்ந்தார் பாரதி. நிஜவாழ்வில் பழமை மீது பிடிப்புகொண்ட ஐயர் சிறுகதையைப் பொறுத்தவரை நவீன ஐரோப்பிய வடிவை வரித்துக் கொண்டதும், முற்போக்கான நவீன எண்ணங்களை வாழ்க்கையில் கொண்டிருந்த பாரதி இந்திய இலக்கிய மரபைச் சார்ந்து தனக்கென ஒரு வடிவத்தை உருவாக்கிக் கொண்டதும் இலக்கிய வரலாற்றின் விசித்திரங்கள்.

இதே போன்ற முரண்பாடுகளை வரலாற்றின் அடுத்த கட்டத்தில் கல்கியிடமும், புலமைப்பித்தனிடமும் பார்க்கிறோம். கல்கி புதுமைப்பித்தனுக்கு ஏழு வருடங்களுக்கு முன்பு பிறந்து அவருக்கு ஏழு வருடங்களுக்குப் பின்பு காலமானார் என்ற போதிலும், இருவரும் ஏறத்தாழ ஒரே சமயத்தில் எழுத ஆரம்பித்தவர்கள். கல்கியின் கதைகள் பல பாரதியாரின் கதைகளைப் போல சமூக நோக்கு கொண்டவை. கல்கியினுடைய முதல் தொகுப்பான சாரதையின் தந்திரத்தில் காணப்படும் கதைகள் தீண்டாமை, பால்ய விவாகக் கொடுமை, விதவை மணம், கதர் இயக்கம், புலால் மறுத்தல் ஆகிய விஷயங்களை அடிப்படையாகக் கொண்டவை. அவரது மற்றொரு தொகுப்பான பேங்க்கர் விநாயக்ராவில் காணப்படும் கதைகள் அனைத்தும் மதுவிலக்கை அடிப்படையாகக் கொண்டவை. கல்கி பின்னாளில் எழுதிய கதைகளில் இத்தகைய சமூக நோக்கைக் காண இயலாது. அவை கதை சொல்வதையும், ஜனரஞ்சகத்தையும் முதன்மையாகக் கொண்டவை.

இந்த மாற்றத்திற்கு திரு.வி.க-வின் கீழ் வெ. சாமிநாத சர்மாவுடன் துவங்கி பின்னர் ராஜாஜியின் கீழ் விமோசனம் பத்திரிகையில் பணி புரிந்த கல்கி, வர்த்தக நோக்கம் கொண்ட பத்திரிகையான ஆனந்த விகடனில் சேர்ந்துகொண்டது காரணமாக இருக்கலாம். கல்கி தனது பெயரில் சொந்தப் பத்திரிகை துவங்கியபோது படிப்படியாகச் சிறுகதைகள் எழுதுவதைக் குறைத்துக்கொண்டு நாவல்களின் பக்கம், குறிப்பாக சரித்திர நாவல்களின் பக்கம் கவனம் செலுத்தியதையும் பார்க்கும்போது பாரதியாரைப் போல் துவங்கிய கல்கி வ.வே.சு. ஐயரில் வந்து முடிந்தார் என்று சொல்லத் தோன்றுகிறது.

சிறுகதை ஒரு தனி சம்பவத்தைப் பற்றியதாக இருக்கவேண்டும் என்ற பிராண்டர் மாத்யூவின் இலக்கணத்தை உதறித் தள்ளிவிட்டு பத்துப் பதினைந்து ஆண்டுக்கால வாழ்க்கை வரலாற்றை சிறுகதையாக விரித்துச் சென்ற பாரதியாரைப் போலவே கல்கியும் தனது கதைகளை எழுதினார். பாரதியாருடைய ஆறில் ஒரு பங்கு, ஸ்வர்ணகுமாரி போன்ற கதைகளில் முன்னுரை, முடிவுரை போன்ற அமைப்புகளைக் காண முடியும். அதைப்போலவே கல்கியினுடைய பல கதைகளில் (உம்: கேதாரியின் தாயார்) இந்த அமைப்பைப் பார்க்க முடியும்.

கல்கி பாரதியின் நடையைப் பின்பற்றவும் முயன்றார். ஆனால் அதில் அவர் பெரிய வெற்றி பெறவில்லை. கலைமகளுடைய முதல் இதழில் (1932 ஜனவரி) அதன் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த எம். லெக்ஷ்மி அம்மாள் ஸ்ரீ என்ற புனைபெயரில் உரையாடல் பாணியில், தமிழ் வசனநடை குறித்து ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதில் ஒரு பகுதி இது:

"நான் படித்ததில் பாரதி வசனம் ஒன்றுதான் நன்றாய் இருக்கிறது."

"பாரதி வசன நடையைப் பின்பற்றுவது கஷ்டம்"

"கஷ்டமில்லை. அனர்த்தம்"

"நீ கல்கியின் வியாசங்களை அன்று கொடுத்தாயே? அவை சார

மாய் இருக்கின்றன. ஆனால் சில கட்டுரைகள் பாரதியின் நடையைப் பின்பற்றித் தொத்தப் பார்த்து சுயலக்ஷணம் இல்லாமல் இருக்கின்றன."

பாரதியார் ஒருசில வரிகளில், போகிறபோக்கில் செய்துவிட்டுப் போகிற நையாண்டியை ஆரம்பகாலத்தில் பின்பற்றி வந்த கல்கி நாளடைவில் கதைகளை முழுக்க முழுக்க நகைச்சுவை ததும்புகிற படைப்புகளாக எழுத ஆரம்பித்தார். சில படைப்புகள் வெறும் கேலிச்சித்திரங்களாக மாறி அவர் எதைச் சொல்ல வந்தாரோ, அதற்கு நேர் எதிரான விளைவை ஏற்படுத்தின.

சிறுகதைகளைப் பற்றிப் பேசும் போதுகூட இந்த நையாண்டியைக் கல்கி கைவிடவில்லை. சிறுகதையைப் பற்றி அவர் நிகழ்த்திய ஒரு உரையில்,

"சிறுகதை என்றவுடனேயே அதில் ஒரு கதை இருக்கவேண்டும். அது சின்னதாயும் இருக்கவேண்டும் என்று ஏற்படுகிறதல்லவா? இதற்கு ஒரு உதாரணம் பார்ப்போம்.

ஒருநாள் காஞ்சிபுரம் உபய வேதாந்த தாத்தையங்கார் ஸ்வாமிகள் அவருடைய வேலைக்காரன் குப்பனைக் கூப்பிட்டு, அடேய் குப்பா! நீ உடனே ஸ்ரீ பெரும்புதூர் திருவேங்கடாச்சார் ஸ்வாமி வீட்டிற்கு ஓடிப் போய் திருக்குடந்தை திருநாராயண ஐயங்கார் ஸ்வாமி திருக்கோவில் ஆராதனைக்குத் திருத்துளாய் எடுத்துவிட்டுத் திருக்குளத்திற்குப் போனபோது திருப்பாசி வழுக்கவே திருவடி தவறி வீழ்ந்தார் என்று சொல்லு என்று சொல்லிவிட்டு சமாசாரம் புரிந்ததா என்று கேட்டார். அதற்கு வேலைக்காரக் குப்பன், "தெரியாதா சாமி? கும்பகோணத்துப் பாப்பான் குட்டையிலே விழுந்தார் என்று சொல்கிறேன் என்று சொன்னானாம்" என்று கிண்டலடிக்கிறார்.

கல்கியின் சமகாலத்தவரான புதுமைப்பித்தனிடம் இந்தக் கிண்டல் உண்டு. வ.ரா.வின் வார்த்தைகளில் சொல்வதானால் "இவர் எழுத்தில் இடக்கு ரொம்ப ஜாஸ்தியாக இருக்கிறது" ஆனால் கேலியையும் மீறி அதில் வாழ்க்கை பற்றிய ஒரு நோக்கு இருப்பதைப் பார்க்க முடியும். கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் இதற்கு ஒரு சிறந்த உதாரணம். ஆனால் புதுமைப்பித்தன்... 'உலகை உய்விக்கும் நோக்கமோ, கலைக்கு எருவிட்டு உயிர்க்கச் செய்யும் நோக்கமோ, எனக்கோ என் கதைகளுக்கோ சற்றும் கிடையாது" என்று சொல்கிறார்.

தன்னை எந்தவொரு வட்டத் திற்குள்ளும் அடைத்துக்கொள்ள விரும்பாத புதுமைப்பித்தனின் மனப் பான்மையைத்தான் இந்த வார்த்தைகள் காட்டுகின்றனவே அன்றி, அவருடைய படைப்பின் நோக்கங்களை அல்ல. 19.7.41ல் சிவபாத சுந்தரத்திற்குப் புதுமைப்பித்தன் எழுதிய கடிதத்தில் "நான் இதுவரை என்னைப் பற்றி ஒரு 'அப்னார்மல்' மனிதன் என்றே நினைத்துக் கொண்டிருந்தேன்" என்று குறிப்பிட்டு என்னைக் காலத்தின் சின்னமா மாற்றிவிட்டீர்களே என்று குறைபட்டுக் கொள்கிறார்.

கல்கியைப் போல நேரடியாக சமூகப் பிரச்னைகளைப் பற்றிப் புதுமைப்பித்தன் எழுதியதில்லை – என்றாலும் வறுமை நிறைந்த வாழ்க்கையில் துயரங்களை அனுபவிக்கும் ஏழை மக்களைப் பல கோணங்களில் எழுதி இருப்பவர் புதுமைப்பித்தன். கணவனுக்கு மருந்து வாங்குவதற்காகக் 'கற்பை' விற்கும் பொன்னகரத்து சேரிப் பெண்ணில் இருந்து, இன்றைய பொழுதைக் கழிக்கக் கடன்வாங்கி துயரங்களைத் தற்காலிகமாக ஒரு நாளைக்குத் தள்ளிப்போடும் 'ஒருநாள் கழிந்தது' முருகதாசர் வரை வாழ்க்கையின் பல்வேறு கோணங்களை அவரது படைப்புகளில் பார்க்க முடியும்.

**நிஜவாழ்வில் பழமை மீது பிடிப்புகொண்ட ஐயர் சிறுகதையைப் பொறுத்தவரை நவீன ஐரோப்பிய வடிவை வரித்துக் கொண்டதும், முற்போக்கான நவீன எண்ணங்களை வாழ்க்கையில் கொண்டிருந்த பாரதி இந்திய இலக்கிய மரபைச் சார்ந்து தனக்கென ஒரு வடிவத்தை உருவாக்கிக் கொண்டதும் இலக்கிய வரலாற்றின் விசித்திரங்கள்.**

கதைப் பொருளில் மட்டுமல்ல, கதையின் வடிவத்தில் பல்வேறு முயற்சிகளைச் செய்து பார்த்தவர் புதுமைப்பித்தன். ஐயரைப் போல ரீதி புதிது என்று இவர் பிரகடனம் செய்யவில்லை. ஆனால், "அவர் நூறு கதைகள் எழுதினார் என்றால் நூறும் நூறு வகை". (தமிழ்ச் சிறுகதைகள் வரலாறும் வளர்ச்சியும், சிட்டி, சிவபாதசுந்தரம்)

ஒரு காலகட்டத்தின் இருவேறு போக்குகளைக் கல்கியும் புதுமைப் பித்தனும் பிரதிபலித்தனர் என்றாலும் அவர்களுக்குள் கடுமையான கருத்து மோதல்கள் நிகழ்ந்ததுண்டு. மணிக்கொடி நின்றுபோன பிறகு தினமணியில் கட்டுரைகள் எழுதிய புதுமைப் பித்தன் கல்கியின் சில கதைகள் வேறுசில ஐரோப்பிய எழுத்தாளர்களின் படைப்புகளைத் தழுவியவை என்பதை ஆதாரங்களோடு சுட்டிக் காட்டினார். கல்கி அந்தக் கண்ணாடிச் சட்டங்களை மாத்திரம் பயன்படுத்திக் கொண்டாரே அன்றி சித்திரங்கள் அவருடையவை என்று கல்கியின் சார்பாக ரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார் கணையாழியின் கனவு தொகுதியின் முன்னுரையில் வாதிடுகிறார்.

கல்கி மீது எத்தகைய குற்றத்தைப் புதுமைப்பித்தன் சுமத்தினாரோ, அதே பழிக்குத் தனது மறைவிற்குப் பின் புதுமைப்பித்தன் உள்ளானார் என்பது வரலாற்றின் மற்றுமொரு விசித்திரம்.

தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் புதுமைப்பித்தன் அளவிற்குப் பேசப்படும் இன்னொரு எழுத்தாளர் ஜெயகாந்தன். புதுமைப்பித்தனைப் போலவே அடித்தள மக்களின் துயரங்கள், நடுத்தர மக்களின் மன விசித்திரங்கள் இவற்றைப் பற்றி எழுதுபவர். ஆனால் புதுமைப்பித்தன் கதைகளில் அடிப்படை நம்பிக்கை வறட்சி. ("என் கதைகளின் பொதுத் தன்மை நம்பிக்கை வறட்சி" – முதுமைப்பித்தன் கலைமகள் 1947). ஆனால் ஜெயகாந்தனுடைய பாத்திரங்கள் மிகச் சிக்கலான நேரத்திலும் வாழ்வின் மீதான நம்பிக்கையையும் காதலையும் கைவிட்டுவிடாதவர்கள். இதற்குப் புதுமைப்பித்தனுக்கு இல்லாத சித்தாந்த பலம் ஜெயகாந்தனுக்கு இருந்தது ஒரு காரணம். இளமைப் பருவத்தில் கம்யூனிஸ்ட் கட்சியோடு தன்னைப் பிணைத்துக் கொண்டு தன் வாழ்க்கையைத் துவக்கிய ஜெயகாந்தன் மார்க்சிய சித்தாந்தங்களில் பயிற்சியும் நம்பிக்கையும் கொண்டிருந்தவர். கல்கியைப் போல சிறுபத்திரிகைகளில் எழுதத் துவங்கி, ஆனந்தவிகடனுக்கு வந்தவர். கல்கியைப் பாதித்ததைப் போலவே ஜெயகாந்தனையும் இந்த மாற்றம் பாதித்தது. ஆனால் கல்கியைப் போல ஜனரஞ்சகமாக எழுதுபவராக மாறிவிடாமல் ஆனந்த விகடனை வாசிக்கும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு சமூகத்தினரின் *Identify Crisis* ஐ தர்க்கரீதியாக ஆராயத் தனது

கதைகளை ஜெயகாந்தன் பயன் படுத்திக் கொண்டார். தனது இலக்கிய வாழ்வின் நான்காவது கட்டம் என்று ஜெயகாந்தன் குறிப்பிடும் இந்தக் காலகட்டத்தில் அவர் சிறு பத்திரிகை யில் எழுதிவந்த இலக்கிய வடிவத்தை விட்டுவிட்டு வேறொரு புதிய வடிவத்தைக் கைக்கொள்ளத் துவங் கினார்.

"அர்த்தமே வடிவத்தை வள மாக்குகிறது. ஆகையினால் இவற்றைப் பிடித்துக்கொண்டு. வீண் அவஸ்தைக்கு உள்ளாகிற பிறரையும் நமது அறியாமையால் அவஸ்தைக்கு உட்படுத்தாமல் சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே நான் எழுது கிறேன். கலைப்பணி என்றாலே அதனுள் சமூகப்பார்வை அடக்கம்" என்று தனது சிறுகதை வடிவம் குறித்து வாதிடுகிறார் ஜெயகாந்தன்.

ஜெயகாந்தன் ஆரம்ப நாட் களில் மார்க்சியப் பார்வையோடு எழுதி வந்ததாகவும், பின் பெரிய பத்திரிகைகளுக்கு போய் 'கெட்டுப் போய்' விட்டதாகவும் குற்றம் சாட்டு கிறவர்கள் உண்டு. ஆனால் அவரது ஆரம்ப காலத்திலேயே, கம்யூனிஸ் டான விஜயபாஸ்கரன் நடத்தி வந்த சரஸ்வதி இதழிலேயே ப்ராய்டிச அடிப்படையில் தாம்பத்யம், பௌருஷம், திரஸ்காரம், பால்பேதம் ஆகிய நான்கு கதைகளை ஜெய காந்தன் எழுதியதுண்டு. இந்தக் கதை களை எழுதிய போது "சிற்றின்பத்தைத் தூண்டிவிடும்" கதைகளை எழுதுகிறார் ஜெயகாந்தன் என்ற குற்றச்சாட்டிற்கு உள்ளானார். பெரியாழ்வார் திருமொழி, பாரதியார், ச.து.சு.யோகி ஆகியோரை மேற்கோள் காட்டி ஆபாசம் வார்த்தையிலா இருக்கிறது என்று எதிர்வழக்காடினார் ஜெய காந்தன். ஆனால் பாலுணர்வு பற்றி உளவியல் ரீதியில் கு.ப.ராவும், நடப் பியல் ரீதியில் புதுமைப்பித்தனும், தத்துவ நோக்கில் பிச்சமூர்த்தியும் எழுதினார்கள் என்றால், இந்த மூன்று நிலைகளையும் தாண்டிப் பகிரங்க மான சொல்லாட்சியுடன் ஜெய காந்தன் எழுதினார் என்பதை மறுப்பதற்கில்லை.

செக்ஸ் கதைகளை எழுது வதாக குற்றச்சாட்டிற்கு உள்ளான இன்னொரு எழுத்தாளர் தி. ஜானகி ராமன். 1960ல் புதுப்பிக்கப்பட்ட மணிக்கொடியில் எழுதத் துவங்கியவர். பாலுறவுச் சிக்கல்களை கு.ப.ராவின் பாணியைப் பின்பற்றி அவரையும் விட நுட்பமாக எழுதியவர் ஜானகி ராமன் என்றபோதிலும் அவர் பரவலாகக் குற்றம் சாட்டப்பட்டதைப் போல வெறும் செக்ஸ் கதைகளை மாத்திரம் எழுதியவரல்ல. இசைக் கலைஞர்களைப் பற்றி, அநாதரவான சிறுவர்களைப் பற்றி, ஆசிரியர்களைப் பற்றி, வெற்றிபெறும்போதும் தோல்வி காணும் போதும் வக்கிரமடைந்து விடுகிற மனிதர்களைப் பற்றி ஏன், டவுன் பஸ்ஸில் பீக் அவரில் கும்பல் நடுவில் மாட்டிக்கொண்டு ஈவ் டீசிங்கிற்கு உள்ளாகும் பெண்ணைப் பற்றிக்கூட எழுதியவர். இவருடைய கதையில் ஜெயகாந்தனைப் போல தர்க்கரீதியான அணுகுமுறை இராது. ஆனால் புதுமைப்பித்தனைப் போல வாழ்க்கை பற்றி ஒரு நோக்கு உண்டு. கல்கியினுடைய நகைச்சுவை ஆங்காங்கே இழையோடுவதைப் பார்க்க முடியும். ஆனால் ஜனரஞ் சகத்தை நோக்கமாகக் கொண்டிருக் காது. ஜெயகாந்தனின் பலம் அவருடைய வார்த்தைகள் என்றால், ஜானகிராமனுடைய பலம் அவர் உரையாடலின் இடையே விடும் மௌனம்.

பாரதியார், புதுமைப்பித்தன், மௌனி, கு.ப.ரா. பிச்சமூர்த்தி போன்ற முன்னோடிகள் கையாண்ட கருப் பொருட்களை அவர்களை விட அதிக செழுமையுடன் கையாண்டவர் ஜானகிராமன். அந்த முன்னோடிகள் எடுத்துக் கொள்ளாத விஷயங்களை எடுத்துக்கொண்டு, அவற்றை அவர் களைவிட ஒரு பெரிய வேகத்துடனும் திறமையுடனும் கையாண்டவர் ஜெயகாந்தன்.

தமிழ் மரபிற்கு முற்றிலும் வெளியே பயின்று, தமிழில் சிறுகதை எழுதி அதில் சிறப்பான இடத்தைப் பெற்றவர் அசோகமித்திரன். மணிக் கொடி காலத்தில் ஐரோப்பிய சிறுகதை களில் குறிப்பாக மாப்பசான், செக்காவ், கோகேல் ஆகியோருடைய சிறுகதைகள் தமிழ்ச் சிறுகதைகளின் வடிவத்தையும் உள்ளடக்கத்தையும் தீர்மானிப்பதில் பெரும்பங்கு வகித்தன என்றால் 35 ஆண்டுகளுக்குப் பிறகு எழுபதுகளின் துவக்கத்தில் கணை யாழி எழுத்தாளர்களிடையே அமெரிக்க சிறுகதை எழுத்தாளர்களின் தாக்கம், குறிப்பாக ஜான் அப்டைக், ஜே.டி. சாலிங்கர், நார்மன் மெய்லர், ஏன் எர்னஸ்ட் ஹெமிங்வே கூடத் தான், ஏற்படக் காரணமாக இருந்தவர் அசோகமித்திரன். இவருடைய கதைகள் ஒருவகையில் மிகைப்படுத்தப் பட்ட புதுமைப்பித்தனின் கதைகள். வாழ்க்கை பற்றிய ஒரு நோக்கம் நம்பிக்கையும் வறட்சியும் கொண் டவைகள். புதுமைப்பித்தனின் கேலியோ எள்ளலோ அதில் கிடை யாது. ஆனால் மெல்லிய, மிக மெல் லிய நகைச்சுவை இதில் இழையோடும்.

நெடிய தமிழ்ச் சிறுகதை மரபைத் தன்னுடைய கண்ணுக்குத் தெரியாத ஆணிவேராகவும் ஐரோப்பிய, அமெரிக்க வடிவ, வாக்கிய அமைப்புகளைத் தன்னுடைய கிளைகளாகவும் கொண்டவர் சுஜாதா. பாரதியாரில் இருந்து அசோகமித்திரன் வரை எல்லாருடைய சாயலையும் இவர் எழுத்தில் ஏதேனும் ஒரு இடத்தில் பார்க்க முடியும். அசோகமித்திரன் வாழ்க்கைய மிகத் தீவிரமாக எடுத்துக் கொள்வரென்றால் அதை, மிகச் சுலபமாக எடுத்துக் கொள்பவர் சுஜாதா. அசோகமித்திரன் கதைகளில் இழையோடும் நகைச்சுவையை அடையாளம் கண்டுகொள்ளத் தவறி நாம் சிரிக்காமல் இருந்துவிடக்கூடும். ஆனால் அவை முன்வைக்கும் விஷயங்கள் குறித்து நாம் சிந்திக்காமல் இருந்துவிட முடியாது. ஆனால் சுஜாதாவின் கதைகளில் மறைமுகமாக உணர்த்தப்படும் விஷயங்களைப் புரிந்துகொண்டு சிந்திக்கத் தவறுகிறவர் கள்கூட சிரிக்கத் தவறுவதில்லை. அசோகமித்திரன் புதுமைப்பித்தனின் மிகைப்படுத்தப்பட்ட வடிவம் (ENLARGED VERSION) என்றால் கல்கி யின் . மிகைப்படுத்தப்பட்ட வடிவம் சுஜாதா.

என்றோ எங்கோ ஒரு ஊற்றாகத் துவங்கிய தமிழ்ச் சிறுகதை என்ற மகாநதி சளைக்காமல் ஓடிக் கொண்டிருக்கிறது. சில நேரம் பாறைகளைப் புரட்டியபடி; சிலநேரம் பாறை நடுவே விரிந்த ஒரு நூல் கயிறாய் மெலிந்து சோர்ந்து நகர்ந்தபடி; நிற்காமல் சளசளக்கும் அருவியாய்; வீட்டு மண்பானையில் இளைப்பாறப் பிடித்து வைத்த நீராய்; ஒளிதரும் மின்சாரத்தை உற்பத்தி செய்வதாய்; அழுக்கு போக குளிப்பாட்டுவதாய், கரையோரத்து கழிவுகளை வாங்கிச் சுமக்கும் தாதி யாய்; கழனிக்குள் புகுந்து பசுமை விளைவிக்கும் தாயாய், தமிழ்ச் சிறுகதை என்னும் ஜீவநதி நூற்றாண்டு களுக்கும் மேலாய் ஓடிக் கொண்டிருக் கிறது. நகரத்து மனிதர்களாகிய நமக்கு அதைக் கண்டு வியந்து நிற்க மன முண்டு. ஆனால் மூங்கிக் குளிக்க நேர மில்லை. வெறுமனே கால் நனைத்து கையில் அள்ளி ஒரு வாய் பருகித் திருப்தி காணவே பிறந்தவர்கள் நாம். இந்தக் கட்டுரையும் அப்படித்தான். மலர்களைவிட மலர்களைப் பற்றிய கவிதை சில சமயங்களில் நன்றாக அமைந்து விடுவதுண்டு. ஆனாலும் அவை மலர்களாக முடியாது. இந்தக் கட்டுரையும் அப்படித்தான். ●



42. பெர்னினி

நல்வாழ்த்துகள்

**அங்கு விலாஸ் எம்.வி. முத்தையா பிள்ளை (பர்ம்)**

வாசனை புகையிலை,

திண்டுக்கல்



43. அக்செலி கேலன் கல்லெலா


*Best Compliments*

**NEELAMALAI AGRO INDUSTRIES LIMITED**

QUALITY TEA MANUFACTURERS

Katary Post, The Nilgiris - 643 213.

நல்வாழ்த்துகள்

**M.V.S. லாரி சர்வீஸ்**

**உடைகல், ஜல்லி ஆகியவை குறித்த நேரத்தில் சப்ளை செய்யப்படும்**

48, சிவகங்கை ரோடு, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை - 625 020. தொலைபேசி : 534259

44. எட்வர்ட் மன்ச் சிம்பலிஸம்



45. மோடி கிளியானி



*நல்வாழ்த்துகள்*

**டாக்டர் டி. அரவிந்தராஜ்,** எம்.பி.பி.எஸ்., எம்.டி.,

**டாக்டர் மதுரம் அரவிந்தராஜ்,** எம்.பி.பி.எஸ்., டி.ஜி.ஓ.,

இராமநாதபுரம்

# மயானங்கள்

## தோப்பில் முஹம்மது மீரான்

ஓவியம் : ஆர். வீரபாண்டியன்

நான்காவது வீட்டிலுள்ள பெரியவருடைய சடலம் மருத்துவமனையிலிருந்து காலையில் அவர் வீட்டிற்கு எடுத்து வந்ததாக பொன்னம்மாள் பாட்டி சொன்னாள். இறந்தவர் யார் என்று தெரியாவிட்டாலும் வாசித்துக் கொண்டிருந்த நாவல் வரிகளிலிருந்து கண்களை உருவாமலேயே அவருக்கு என்னவென்று பாட்டியிடம் விசாரித்தேன். உடம்புக்கு முடியாமையா ரொம்ப நாளாகப் படுத்திருந்தாகச் சொன்னாள்.

எச்சிப் பாத்திரங்களைப் பின்வளாகத்திற்கு எடுத்துச் செல்லுகையில், ''மனுசன் கவனிப்பார் இல்லாம, ரொம்ப கஷ்டப்பட்டார். இன்னும் கிடந்து கஷ்டப்படாம போனது அவர் செய்த புண்ணியம் என்று தானாகப் புலம்பி கொண்டாள்.

கூரிய அலகால் நெஞ்சுக் கூட்டிற்குள்ளிருந்த பருப்பைக் கொத்தி எடுத்துவிட்டு மரணம் உமிழ்ந்து போட்ட அவர் பொக்கை உடம்பு கிடக்கும் சந்தோஷ் நகர் தெருவை, நாவலை மூடிக்கொண்டு எட்டிப்பார்த்தேன். சிறகடித்து வந்திறங்கிப் பலவந்தமாகப் பருப்பை கொத்தி எடுப்பதற்கிடையில் கைகலப்பு நடந்திருந்த தெரு மணலில் கிளறல் அடையாளங்கள் எதையும் காணவில்லை. வழக்கமான மௌனம் தான் அப்பவும் காணப்பட்டது, தெருவில் - பெரிய ஒரு பன்றியின் பின்னால், நாலைந்து குட்டிகள் பந்துபோல் உருண்டோடிப்போன மௌன ஊர்வலம் மட்டும் தெரிந்தது.

மதியம் ஆனபோதிலும் பாதங்களின் மிதிவாங்காமல் கிடந்த சந்தோஷ் நகரின் மூணாவது மெயினில், பதினாறாவது குறுக்குத் தெருவில் என்னுடைய நாற்பத்தி மூன்றாவது எண், வாடகை வீட்டிலிருந்து நான்காவது வீட்டின் முன்பக்கம் சட்டை போடாத இருவர் உட்கார்ந்து பச்சைத் தென்னை ஓலையை முடைந்து கொண் டிருந்தனர், பாடைகட்ட.

முன்பு வாடகைக்குத் தங்கியிருந்த தெற்குத்தெருவானால் இந்நேரம் ஜனத் திரளாகவே இருக்கும். ஜனங்களின் பரபரப்பைக் கண்டால் மலக்குல் மௌத்-எமனைத் துரத்தி அதன் கையிலிருந்து உயிரை திருப்பிப் பறிக்கத் தெரு மக்கள் ஒளிப்போர் செய்யப் போவதாகத் தோன்றும். தெருவின் மேல்வெளி, ஒப்பாரி அலைகளின் ஆர்ப்பரிப்பில் மூழ்கிவிடும். தோளில் துண்டைப்போட்டுக் கொண்டு நான்காவது வீட்டிற்குத் துக்கம் விசாரிக்கப்போனது அந்தத் தெருவில் நான் ஒருவனாகத்தான் இருப்பேன். சடலத்தைச் சுற்றி உட்கார்ந்து கொண்டிருந்த ஓர் சில பெண்கள் கசிவு தட்டாமல் அழுது புலம்பினர். கவுடுக்கிடையில் கையை கொடுத்து உட்கார்ந்திருந்தவர், போன என்னை ஏறிட்டுக் கூட பார்க்காததில் வருத்தப்படுவதற்கு இல்லை. அஞ்சலி செலுத்துவது போல் சில கணங்கள் நின்றுவிட்டுத் திரும்புகையில் மரணத்தின் அலகு உள்ளே நுழைந்துவிடாமல் இருக்க வாசலும் ஜன்னல்களும் மூடப்பட்ட எதிர் வீட்டிற்குள்ளிருந்து காதலன் பாட்டு ஒலித்தது. மரணம் நிகழ்ந்தது எதிர் வீட்டிலானதால், 'முக்காபுலா'வில் அந்த வீட்டில் உள்ளவர்கள் குசி கண்டனர்.

மனைவியின் பிடிவாதம் தாங்காமல் சந்தோஷ் நகரில் குடிவந்தபிறகு இந்தத் தெருவில் பல மரணங்கள் நிகழ்ந்தன. மரண வீட்டிலிருந்து திரும்பி என் வீட்டுவாசலை அடைந்தேன். அதுவரை முகம் பார்த்துப் பேச வாய்ப்புக் கிடைக்காத பக்கத்து வீட்டுக்காரர், அவர் வீட்டுவாசலில் நிற்பதை முதல்முறையாக அன்றுதான் பார்க்க நேர்ந்தது. குடிசென்ற இரண்டு ஆண்டுகளுக்குப்பிறகு, வெளியே செல்ல இறங்கி நின்றவர், நான் எதிர்ப்பட்ட சகுனப்பிழையை எண்ணித் தலைகுனிந்து நின்றார். அண்டை வீட்டாராச்சே, தாமாகப் பேச்சுக் கொடுப்போமே என்ற எண்ணம் உள்ளிருந்து என்னை உசுப்பியது.

''துட்டிக்குப் போனீங்களா?'' முகமலர்ச்சியோடு கேட்டேன்,

''யாரென்று தெரியாது.'' வெடுக்கென்று எரிச்சல்பட்டபோது எலி மூஞ்சி யாகவே இருந்தது அவருடையது. மறு பேச்சு கொடுத்துவிடுவேனோ என்று பயந்தபடி வீட்டுக்குள்ளே அவர் போன வேக தாக்குதல், என் முகத்தை சாகடித்தது. அந்த அதிர்ச்சியிலிருந்து விடுபட பிளாஸ்டிக் வயர்பின்னிய நாற்காலியில் உட்கார்ந்து

கொண்டு மீண்டும் எழில் வண்ணனின் நாவலை நிப்பாட்டிய இடத்திலிருந்து வாசிக்கத் துவங்கினேன். முன்பு இருமுறை வாசித்த நாவலாக இருந்தாலும், வாசிக்க வாசிக்கப் புதுப்புது ஊற்றுக்கள் திறந்து கொண்டிருந்த வியப்பில் ஆழ்ந்தேன்.

மக்கள் அதிகமாகத் திணறி வாழும் ஒரு தெருவின் உயிர்த் துடிப்பையும், மக்களிடையே காணப்படும் பிணைப்புகளையும் பிளவுகளையும் மனவோட்டங் களையும் காட்டும் நாவல் அவருடையது. பின்னப்பட்ட கலைநுட்பம் என்னை அந்தத் தெருவுக்கே இழுத்துச் செல்கிறது. நாவலை எடுத்தாலே என்னை அது முன்பு வாடகைக்குக் குடியிருந்த தெற்குத்தெருவில் மீண்டும் வாழவைக்கிறது. பேனா முனையாலே உருவாக்கிய ஓர் அதிசய உலகில் என்னைக் குடியேற்றுகின்ற அந்த மாயாஜாலக்காரனின் விரல் முனையை முத்தமிட விரல்கள் கிடைக்காத ஏமாற்றம் எனக்கு. அவர் எங்கிருக்கிறார் என்று பலமுறை எனக்குள் ளேயே தேடல்கள் எழுந்து ஓய்ந்தன.

முன்பு வாடகைக்கு குடியிருந்த தெற்குத் தெருவைப் பார்த்துத் தான் அந்த நாவலைப் படைத்தாரோ என்று தோன்றும், அதிலுள்ள வரிகளை மனம் ஒற்றும்போது. அவருடைய நாவலில் சித்தரித்து இருப்பது போல் தெருவில் கண்டமத்தியில் தான் தண்ணீர்க் குழாய். காலையிலும் மாலையிலும் அதிலிருந்து நூல் தொங்கிகொண்டிருக்கும். அதைஒட்டி குப்பைத் தொட்டி இரண்டும் ஒரு வீட்டிற்கு முன்பக்கம் அது என் வீடு! காலையிலும் மாலையிலும் குடிதண்ணீர்க் குழாய்க்கு மூச்சு வருவதே குடங்கள் மோதும் ஓசை கேட்டு. தெரு உணர்ந்து உறங்கும்வரை அதன் மேல்பகுதி நீலவார்த்தைகளால் நிரம்பிக் காணப்படும். அதுபோன்ற சில வார்த்தைகளை விரசம் இல்லாமல் எழுதியிருக்கிறார் மனுசன் அவருடைய நாவலில்.

தெற்குத்தெரு வீட்டுத் தலைவாசல் திறந்தால், பளிச்சென்று தெரிவது தண்ணீர்க் குழாயும் குப்பைத் தொட்டியும். தெருப்பக்கம் உள்ள ஜன்னலைத் திறந்தால்





எதிர் வீட்டிலுள்ள அசைவுகள் தெரியும். அங்கு பெண்கள் நடமாட்டம் இருப்பதால், அவ்வப்போது இவள் ஜன்னல் கொண்டியை எச்சரிக்கையாகப் போட்டு விடுவாள். அதனால் ஜன்னல் வழியாக வீட்டிற்குள் நுழையும் வயல்காற்று உள்ளே வராததால் ஒரே வேக்காடு.

''நமக்கு இந்த கூதற தெரு வேண்டாம். சந்தோஷ் நகரிலே ஒரு வீடு பார்த்துப் போவோம்.'' இவள் எப்பவும் நச்சரிப்பாள்.

இவள் பெரிய ஒசுவாசுக் (சுத்தம்) காரி. குடிவந்த நாள் முதல் தெற்குத்தெரு பிடிக்கவில்லை. எட்டுவருடங்கள் அந்தத்தெருவின் மீது பறந்துபோனது எப்படி என்று தெரியவில்லை. எட்டுவருடங்கள் எண்பது வருடங்களாக இருந்தன எனக்கு. அப்படி பாடாய்ப்படுத்தி விட்டாள் சந்தோஷ் நகரில் ஒரு வீடு பார்த்துக் குடிபோக.

வீட்டுக்கு முன்னால் சாக்கடை. பகல் வேளைகளில் குழந்தைகளுக்கும் இரவு விடியும் வரை பெண்களுக்கும், அதுதான் கழிப்பிடம். மாயாண்டி நீளமான அகப்பை யால் சாக்கடையை அள்ளி வீட்டிற்கு முன் கூட்டி வைப்பான். வீட்டிற்குள்ளிருந்தாலே மூச்சு முட்டி போகும், அப்படி வீச்சம்.

''தூ மனுச குடியிருப்பானா இந்த ஜனங்களுக்கிடையிலே'' என்று சொல்லி காறித் துப்பி மூக்கைப் பொத்தாத நாளே இல்லை.

வீட்டிற்கு ஒரே வாசல் தான் உண்டு. அதுவழியாகத்தான் வாளியுடன் முனியம்மாள் வருவதும் போவதும். முனியம்மாள் போனதும், ''இந்தத் தெருச் சனங்களை கண்டாலே இரணம் கிட்டாது'' என்று ஓடிப்போய் தலைவாசலை அடைத்துத் தாழ்ப்பாள் போடுவாள். தெருவாசல் எப்பவும் சாத்தப்பட்டிருப்பதால், தெருச்சனங்கள் ஊராப்பட்ட அசிங்கங்களைக் கொட்டி தொட்டியை நிரப்பி விடுவார்கள்.

சந்தோஷ் நகரில் சாக்கடைகள் இல்லையென்றும், குப்பைத் தொட்டிகள் இல்லையென்றும் இவள் தெரிந்து வைத்திருந்தாள். அதனால்தான் சந்தோஷ் நகரில் உள்ள உயர் மக்களோடு பழக்கம் ஏற்படுத்தி, அங்கேயே ஆயுசு அளவு வாழவேண்டுமென்ற ஆசை இவளுக்கு. வீட்டுத்தரகர் நமச்சிவாயம் பிள்ளையின் நாடியைத் தாங்கி, கெஞ்சிக் கேட்டு எப்படியோ சந்தோஷ் நகரில் ஒரு வீடு அமைந்து விட்டது.

வீட்டுச்சாவி கிடைத்த நேரம் முகடு முட்டத்துள்ளிக் குதித்தாள்.

தெற்குத்தெருபோல் இங்கு குப்பைவண்டிகள் வருவதில்லை. காலையில் நீள அகப்பையுடன் மாயாண்டி வருவதில்லை. வாளியுடன் முனியம்மாள் வருவதில்லை. தெற்குதெருவில் இருக்கும்போது, காலைநேரம் குப்பைவண்டி வருகையில் குப்பைத் தொட்டியின் மேல்பகுதியில் உள்ளவற்றைமட்டும் பரசி எடுக்காமல் தூர்வரை அள்ளிச் செல்ல, செல்லையாவுக்கு மாமூல் வேறு. இரண்டு பெருநாட்களுக்கும், தீபாவளி, பொங்கல், கிறிஸ்மஸ், தேரோட்டம், திருச்செந்தூர் கந்த ஷஷ்டி, மாதப்பிறப்புகள், இப்படி எல்லாம் நல்ல நாட்களுக்கும் துட்டு வேறு. அவன் எடுத்து வரும் அலுமினியப் பாத்திரத்தையும் நிரப்பி விட வேண்டும். கொடுப்பதில் ஏதாவது குறைகள் ஏற்பட்டால் தெற்குதெருவுக்குள் குப்பைவண்டி நுழையாது. மேலத்தெரு கீழத் தெருவில் உள்ள குப்பைகளை அள்ளிக்கொண்டு வண்டி ஜில் என்று கிழக்கு மாறிப்போகும். இப்படியான சவால்கள் இங்கு இல்லை. அகல மான அழகான தெரு. வீட்டுவாசல் களில் பல வண்ணக் கோலங்கள். தெருவின் இருமங்கிலும் சோலை மரங்கள். அதட்டல்கள் இங்கு இல்லை.

தெற்குத்தெரு ஜனங்களுக்கு முனியம்மாள் ஒரு பயக்கனவு. ஒரு முறை தெருவையே ஒரு அசத்து அசத்திவிட்டாள். எவளோ ஒருத்தி வேண்டாதவோ முனியம்மாவைத் தகாத வார்த்தையைச் சொல்லி ஏசி விட்டாள். மானக்காரி முனியம் மாவுக்கு எங்குமில்லாத ஆத்திரம். அதே வார்த்தையால் அவளால் திருப்பி ஏச முடியுமா? கோபமோ உச்சந்தலையைக் குடைந்தது. ஒரு வழியும் தெரியவில்லை அவளுக்கு. தண்ணீர் ஓடிக் கொண்டிருந்த தெருச் சாக்கடையில் கையிலிருந்த வாளியை அப்படியே கவிழ்த்திவிட்டு, விறு விறென்று வெற்று வாளியுடன் மேலத் தெருவுக்குள் நுழைந்து விட்டாள். தெற்குத்தெரு ஜனம் குஞ்சும் குறுமாலும் எல்லாம் மூக்கைப்பொத்திக் கொண்டு ஓட்ட மெண்ணா, தலைதெறிக்க ஓட்டம்.

மறுநாள் முனியம்மாள் தெற் குத்தெருப் பக்கமே வரவில்லை. வாளிச் சின்னத்திற்கு ஓட்டுப்போட்டு வெற்றிபெறச் செய்த ஜனங்கள், தொகுதி உறுப்பினர் வீட்டை முற்று கையிட்டனர். தெரு உறுப்பினர் நாலு நல்ல வார்த்தைகள் சொல்லி கேட்டுக்கொண்டபிறகுதான் தெற்குத் தெருவுக்குள் வீரநாயகியாக நுழைந் தாள். இதெல்லாம் எட்டாண்டு களுக்கு முன்பு நடந்தாலும், இப் பவும் முனியம்மாவைக் கண்டால்

ஜனங்கள் பேசிக்கொள்வதுண்டு. ''வாறாடேய்''

எதிர் வீட்டில் இரண்டு பால் மாடுகள், கீழ் வீட்டில் அஞ்சாறு ஆடுகள், கொஞ்சம் நாட்டுக் கோழிகள். கொசுத் தொல்லை. தெரு முனையில் உள்ள பெண்பிள்ளை கடையில் எப்பவும் காசாம்பிசாவும், பேரம்பேசலும் தானக்கேடும், வட்டிச் சண்டையும், பிள்ளைச் சோற்றுக்காக, இரண்டு பரல் உப்புக்காக, சில தட்டுமுட்டுக்காக, ஒவ்வொருத்தியும் வந்து கதவை உடைப் பாள். கொடுத்துத் தாங்காது. இவளுக் கானால் எங்குமில்லாத வேகாரி.

''கதவு துறந்து அடைச்சே மனு சனுக்கு உயிர் போவுது''

வாசலில் சைக்கிள் மணி யோசை கேட்கும் போதெல்லாம் நமச்சிவாயம் பிள்ளை வந்துவிட்டா ரென்று ஓடிப் போய் கதவைத் திறப்பாள். எப்பவும் ஏமாற்றந்தான். வருவதாகச் சொல்லி அனுப்புவார்; வரமாட்டார்.

''நேற்றுதான் காலியாச்சு. உடனே சாவி வாங்கிட்டேன்.''

நமச்சிவாயம்பிள்ளை சாவி கைப்பற்றியதைக் கேள்விபட்ட பிறகு தான், பலமாத எதிர்பார்ப்புக்கு பிறகு இவளுக்கு மூச்சு வெளியானது. அல்லா, தப்பினேன்.

''ரொம்ப ராசியான வீடு. அதில் வாடகைக்குக் குடியிருந்தவர் புதுவீடு கட்டிப்போனார் என்று பிள்ளைவாள் சொன்னபோதே இவளுக்கும் புது வீடு கட்டிய குதூகலம். சந்தோஷ் நகரில், அதுவும் ஒரு ராசியான ஒரு வீடு கிடைத்துவிட்ட மகிழ்ச்சிப் பெருக்கில், தன்னை மறந்து தெற்குத் தெரு ஜனம் அத்தனையும் கச்சடா வென்ற முடிவுக்கு வந்துவிட்டாள்.

அக்கம்பக்கம் டீசண்டான மக்கள் வாழ்கின்ற பகுதியில் குடி போவதால் கேட்டபடி அட்வான்ஸ், மறு பேச்சு இல்லாமல், சொன்ன வாடகை. வீட்டைச்சுற்றி விதவித மான பூ மரங்கள். மொட்டை மாடிக்கு ஏறிச்செல்ல படிகள். அங்கு நின்று பார்த்தால், 6.10க்கு மும்பைக்கு சேனைத்தண்டன் பாம்பு சீறிப்பாய்வது தெரியும்.

சுத்தமான, அகலமான, அழகான தெரு. ''ஆயத்தளவு இங்கேயே தான் தங்கனும்'' குடிபோன அன்று காதில் குசுகுசுத்தாள்.

தெருவின் அமைதி ரொம்பவும் பிடித்திருந்தது. மாநகராட்சி குடிதண் ணீர்க்குழாய் தெருவோரங்களில் இல்லா ததால் குடங்கள் மோதி எழும் கணீர் ஓசைகளில் காது அடைப்பதில்லை. மீன் குடலும், கோழித் தலையும், ஆட்டு எலும்புகளும் கொண்டு ததும்பும் குப்பைத் தொட்டிகள் இல்லை.

வெளி மதில் சுவரிலுள்ள கிரில் கேட்டில் பெருங்காயப் பை தொங்கவிட் டிருப்பதில், பால்காரன் மாடசாமி நெல்லை மில்க் பாக்கெட்டைப் போட் டுவிட்டு, அவன் பாட்டுக்குப் போய்க் கிட்டே இருப்பான். தெற்குத்தெருவில் பை தொங்கவிடமுடியுமா? ஆளையே தூக்கிட்டுபோற கழிசடைகள்.

சைக்கிளில் உட்கார்ந்தபடி வீசப்படும் செய்தித்தாள், சுவருக்குள் சிமிண்டு முற்றத்தில் விழுந்து கிடக்கும். கிரில் கேட்டில் மாட்டப்பட்ட சிவந்த பெட்டிக்குள் தபால்களை போட்டு விட்டுப் பேசாமல் போய்விடுவான் தபால்க்காரன். இப்படியெல்லாம் ஒரு உலகம் தெற்குத்தெருவுக்கு வெளியே உள்ளது தெரியாமல்தான் எட்டாண்டுகளை கடத்திவிட்ட நரக துயரங்கள்.

சந்தோஷ் நகரில் குடிவந்த ஆரம்ப நாட்களில் இந்த புது உலகைப்பற்றி முன்பு சொல்லாததால், குற்றவாளிக்கூண்டில் என்னை நிப்பாட்டி வாங்கு வாங்கென்று வாங்கிவிட்டாள். நகர்ந்து விட்ட இரண்டு வருடங்களை எட்டிய இப்போதைய நாட்களில், பழைய களிப்பு இவள் முகத்தில் இல்லை. ஏதோ தீவில் தனிமைப்பட்டுபோன மூச்சுத் திணறலும், பதற்றமும்.

எதிர் வீட்டு மாடியில் குடியிருப்பவர்கள், சீவி மினுக்கி வெளிவாசலில் வந்து நின்ற இவளைக் கண்டதாகக் காட்டிக்கொள்ளவில்லை.

''நான் சிரிச்சேன். அந்த லெவிண்டி முகத்தைத் திருப்பியிட்டு போயிட்டா''. வாசலில் கால் வைக்கும்போதெல்லாம் இப்படியான வரவேற பாக இருக்கும். எதிர் பார்த்ததினால், அவை மனசில் உறைக்கவில்லை.

''பெருமைக்காரிபோல் தெரியது'' 'இப்போது எதிர்வீட்டு மாடியை ஏறிட்டுப் பார்ப்பதில்லை 'கத்திரிக்காய்' என்ற கூப்பிடுதல் கேட்டால், காலை மணி 10 ஆகிவிட்டிருக்கும். கீழ்வீட்டுக்காரியின் சிறைவாசல் திறப்பது அந்நேரம்தான்.

வெண்டைக்காய் விலைகேட்டு முனைஒடித்து சோதனை செய்கையில், கீழ்வீட்டுக்காரியிடம் நட்பு ஏற்படுத்திக் கொள்ள மெல்லப் பேச்சுக் கொடுத்தாள். இவள் முகத்தையே அவள் பார்க்கவில்லை. இவள் முகம் அப்படியே தொட்டால் சிணுங்கியாகக் குறாவி விட்டது.

காய்கறித் தாத்தா சொன்னார்



''நானும் பத்து இருபது வருஷமாய் பார்க்கத்தான் செய்யறம்மா; மனுசன் குடியிருக்கிற இடமாத் தெரியலை.''

இரவு என் காதில் ஒலித்தது ''அந்த கீழ்வீட்டுக்காரி திமிரு பிடிச்ச வளாக்கும்.''

நாலாவது வீட்டுப்பெரியவரை ஆபத்தான நிலையில் பெரிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றதும், பாட்டி சொல்லித்தான்தெரியும். நாலாவது வீட்டில் குடியிருப்பவர்கள் யாரென்று தெரிந்து கொள்வதற்கான நெருக்கங்கள் ஏற்படாததால், அதைப் பொருட்படுத்தவில்லை. எதிரில் செல்லும் என் முகம் பார்வையில் படாதபடி விலகி நடக்கும் அக்கம் பக்கத்தோடு எப்படித் தொடர்பு ஏற்படுத்தி கொள்வதென்று வழி தெரியாத தவிப்பு உள்ளுக்குள்.

தெற்குத்தெருவில் கால் வைத்தாலே ஏகப்பட்ட விசாரிப்புகள். சுகமாயிருக்கிளா? இளைய செறுக்கனுக்கு திடிரென டைபாய்டு காய்ச்சல் வந்தது அங்கு தங்கி கொண்டிருக்கும்போது தான். நான் ஊரில் இல்லை. இவளுக்குக் கைகால் ஓடவில்லை. தெருச் சனங்கள் வந்து கூடி விட்டார்கள். குற்றவாளிப் பட்டியலில் நிரந்தரமாக இடம் பெற்றுள்ள பாட்டில் மஸ்தான் ஓடிச் சென்றான் ஆட்டோ பிடிக்க. அவனே முன்நின்று அந்தக் கணமே பெரிய ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றதால், செறுக்கன் பிழைத்து விட்டான். இப்போது துபையில் நிற்பவன், அவனேதான்.

ஆட்டோவிற்குச் செலவான காசை கொடுத்தபோது, பாட்டில் மஸ்தான் வாங்க மறுத்துவிட்டது மல்ல, அவனுடைய கேள்விக்குரல் இப்பவும் காதில் ரீங்கரிக்கின்றது ''மனுசனுக்கு மனுசன் உதவாமல் இருந்தால், மனுசனா பிறந்து என்ன பயன்?'' அந்நேரம் நினைவுக்கு வந்தது, எழில் வண்ணனின் வரிகள் - துப்புரவுக்கேடான தெருவில் வாழ்ந்தாலும், அங்கு வாழும் மக்களின் மனங்கள் குளிரருவிகள்!

விடுமுறை நாட்களில் தெற்குத் தெருவைப்போல் சந்தோஷ் நகரில் பொழுது போகாது. குயிலோசை மட்டும் இனிமையாக இருக்கும். நல்ல நாவல்கள் தேடிஎடுத்து வாசிப்பதில், மிகுதியான ஆர்வம். எழில்வண்ணனின் நாவல்களில் வரும் தெருவில் மனம் ஓடிக் கொண்டிருக்கும்போதுதான், நாலாவது வீட்டில் பெரியவருடைய சடலத்தை கொண்டு வந்த செய்தி பொன்னம்மா பாட்டி சொன்னது. ஒரு மனிதனை மரணம் நாஞ்சி எடுத்துவிட்ட பரபரப்பு தெருவில் காணப்படவில்லை. மரண வீடுகளுக்குப் படை எடுக்கும் தெற்குத்தெரு ஜனங்களை இங்கு காண முடியவில்லை. எப்போதும் உள்ள மவுனம் தான் அப்போதும்.

சங்கு ஊத்து கேட்டபோது, நாவல் வரிகளில் மனத்தை ஓட்ட முடியவில்லை. தெருவில் எட்டிப் பார்த்த கண்களுக்குப் பாடையைத் தூக்குவது தெரிந்தது. முன் இரு மூங்கில் கால்களையும், இருவருடைய தோள்கள் தாங்கி இருந்தன. பின் இரு மூங்கில் கால்களையும் இருகைகளால் தாங்கி கொண்டிருந்தவர், கவுடுக்கிடையில் கைகளை கொடுத்துக் கொண்டிருந்தவர்.

சளைக்காமல் எவ்வளவு தூரம் கைமாற்றவும், தோள்மாற்றவும் ஆளில்லாமல் இம்மூவரால் மயானம் வரை சுமந்து செல்ல முடியும் என்ற கேள்வி எனக்குள். மயானம் ரயில்வே கிராஸிங்குக்கு அப்பால் ஒரு கிலோ மீட்டர் தொலைவில். இடுக்கான பழுதடைந்த பாலம் ஒன்றையும் கடந்து செல்ல வேண்டும். பாலத்திற்கு நுழையும் இடத்தில் அபாயம் என்று போர்டு நாட்டப் பட்டிருக்கிறது.

வாசல்கள் அடைக்கப்பட்ட தெருவின் மயானத் தோற்றத்தைக் கண்டபோது, ஆபத்தான பாலத்தைத் தாண்டி ஏன் அவ்வளவு தூரம் பிணத்தை தூக்கிச் செல்லவேண்டும்? இந்த மயானத்தில் ஏதாவது ஒரு இடத்தில் சிதைகூட்டி எரியூட்டக் கூடாதா என்று மனசு உரக்கக் கத்தியது. எழில்வண்ணனுடைய நாவலில் இப்படி ஒரு நிகழ்ச்சி வருணிப்பையும், கேள்வியையும் வாசித்த நினைவு என்னை அலட்டிக் கொண்டிருந்தது.

''இஞ்செ பாருங்கோ.'' கூப்பிட்டாள்.

''நமச்சிவாயம் பிள்ளைங்கிட்ட சொல்லுங்க தெக்குதெருவிலே வீடு பார்க்க''

''எதுக்கு?''

நம்மவீட்டுல மையம் விழுந்தாலோ?'' நாலாவது வீட்டில் மையம் விழுந்ததை நினைத்துப் பார்த்திருப்பாள்.

இவள் கேள்வி நெஞ்சை உறுத்தியது. இந்த நகரில் இந்த வீட்டில் ஒரு மையம் விழுந்தாலோ? 100 மைல்களுக்கு அப்பால் ஒரு கிராமத்தில் வசிக்கின்ற உறவினர்கள் வரவேண்டும், கருமாதிகள் செய்ய, அவர்களுக்காகச் சடலத்தை போட்டிருக்க வேண்டும். போட்டிருந்தாலும், அவர்கள் வரவேண்டு மென்றில்லை. முடிச்சுகள் தானாக அவிழ்ந்து தளாவடைகின்ற காலச்சூழலில் உறவினர்களை எதிர்பார்த்திருப்பதில் அர்த்தமில்லை.

தெரு மவுனத்தை முறிக்கும் காய்கறித் தாத்தாவின் 'கத்திரிக்காய்' என்று கூப்பிடுதல் ஒலிக்காததால், நாலாவது வீட்டிலிருந்து சடலத்தை எடுக்கும் முன், மார்க்கெட் போய் வர எண்ணினேன். சைக்கிளில் பையைத் தொங்கப்போட்டுக் கொண்டு, சைக்கிளை மிதித்தேன். சுவர்கள் எம்பாடும் கருப்பு மையில் கண்ணீர் அஞ்சலிகள். சைக்கிளில் ரோட்டைக் கடக்க முடியவில்லை. போக்குவரத்து, தடைபட்டிருந்தது. கருப்புக்கொடிகள் கட்டிய கார்கள் அங்குமிங்கும் ஓடின. மூடப்பட்டிருந்த கடைகளின் முன் கருப்புக் கொடிகள். மக்கள் திரள் வெயிலுக்கு ஒதுங்கி நிழல்களைத் தேடிக் கொண்டிருந்தனர்.

என்னவென்று ஒருவரிடம் கேட்டதற்கு கிடைத்த பதில், முகத்தில் அறைந்தாற்போலிருந்தது.

''இந்த ஊரிலதானே இருக்கிறோம்? நடிகச்சுடர் ரசிகர் மன்றக்கிளை உபதலைவர் இறந்தது தெரியாதா? பத்திரிக்கையிலே பார்க்கலையா?''

கண்மணி ஒயின்ஷாப் திறப்பு விழா முடித்துவிட்டு, புல்லட்டில் போய்க்கொண்டிருந்தார் உப தலைவர். எதிரில் வந்த லாரியில் மோதி விபத்துக்குள்ளாகி மாண்டு விட்டார்.

தலைவரின் மரணத்தை ஒட்டி மார்க்கெட்டுக்கு விடுமுறை விட்டதாலும் சைக்கிளில் ரோட்டைக் கடக்க முடியாததாலும், வீட்டிற்குள் முடங்கினேன். நாலாவது வீட்டிலிருந்து மூன்று பேர் சடலத்தை

தூக்கிச் சென்ற பிறகு எழில் வண்ணனின் நாவலை எடுத்து நிப் பாட்டிய இடத்திலிருந்து தொடர்ந்தேன். முன்வாசல் திறந்து கிடந்ததால், நல்ல காற்றோட்டமாக இருந்தது. அத்தியா யங்கள் புரண்டு போனதே தெரிய வில்லை. தோளில் பை தொங்கப் போட்டிருந்த ஒருவர் வாசல் பக்கம் நின்றுகொண்டிருக்கும் நிழல், நாவல் வரிகளில் ஓடிய கண்களுக்குத் தெரிந்தது. நிழலை பார்க்க திரும்பு முன் வீட்டிற் குள்ளிருந்து சொன்னாள் ''நமச்சிவாயம் பிள்ளையைப் பாருங்கோ.''

தெருவாசலை எட்டிப்பார்த் தேன். முன்பின் தெரியாத அவர் ஏதோ சொல்லத் தயங்குவது போல் தெரிந்தது. அப்பவும் வீட்டிற் குள்ளிருந்த மீண்டும் குரல் கேட்டது ''தெக்குத்தெருவிலே வீடு கிடக்கிதா எண்ணு பார்க்கச் சொல்லுங்க''

''பேசாம இருப்பியா'' கோபம் அடக்க முடியவில்லை.

''என்னையா?'' தெருவாசலைப் பார்த்துப் புன்னகைத்தேன். உள்ளே வர தயங்கி நின்றார்.

''வாங்க''

ஒரு துண்டுக்காகிதத்தைத் தந்து விட்டு கேட்டார்'' இந்த முகவரி?''

கண்ணை ஓட்டினேன்.

எழில்வண்ணன்,
47, 16வது குறுக்குத்தெரு,
3-வது மெயின், சந்தோஷ் நகர்.

''புரோக்கரா?'' - கேட்டாள்.

அதிர்ந்து போன நான், இவள் குரல் எட்டாத தொலைவிலிருந்து தனித்துச் சுடுகாட்டை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்தேன். நாலாவது வீட்டிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட பாடையின் பின்னங் காலில் ஒன்றை, என் தோள் தாங்கி கொண்டிருக்கிறது இப்பவும்.



*மகிழ்ச்சி ஊட்டுவது, புதிய எண்ணங் களைத் தூவுவது, பழைய கருத்துக்களை மாற்றுவது, பண்பு தருவது, செயல் புரியும் திறன் அளிப்பது என்பன போன்ற பயன்களைப் பெறுவதற்கே படிக்கிறோம். ஒவ்வொரு வகைப் புத்தகமும் ஒவ்வொரு பயனை ஒவ்வோர் அளவுக்குத் தருவதுடன் நமது மனத்தை உருவாக்க உதவுகின்றன. மகிழ்ச்சியூட்டும் புத்தகம் செயலாற்றும் திறனைத் தந்தே தீருமென்றோ-புதிய எண்ணத்தைத் தூவும் ஏடு மகிழ்ச்சி ஊட்டக் கூடிய நடை அழகுடன் இருந்தே தீருமென்றோ கூறமுடியாது.*

*அபட் எழுதிய நெப்போலியன் வரலாறு, கிப்பன் எழுதிய* ***ரோம் சாம்ராஜ்யத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும்*** *- எனும் இரு ஏடுகள் என் மனதைப் பெரிதும் கவர்ந்தன.*

*அறிவுத்துறையின் முனைகள் இப்போது ஒன்று பலவாகப் பெருகியபடி இருக்கிறது. பல்வேறு துறைகளிலே உள்ள பிரச்சினைகளிலே, தெளிவும் பண்பாட்டுக்கு ஓர் விளக்கமும் சமுதாய அமைப்பு முறை, அரசு அமைப்பு முறை, அறநெறி ஆகியவை பற்றிய கருத்துரையும் ஒருங்கே கொண்டதாய் மக்களை, அறிவும் ஆற்றலும் அறமும் கொண்டவர்களாக்க வல்லதாய் அமைந்துள்ள பெருநூல் இன்று நமக்கிருப்பது திருக்குறள். நமது உள்ளத்தைக் கவருவதுமட்டுமல்ல. திருத்தவும் உதவுவது. எனினும் அறிவு ஒரு தொடர் கதை. அதற்கு ஆசிரியர்கள், தொடர்ந்து தோன்றிய படி இருக்கிறார்கள். இனியும் தோன்றுவார்கள். உள்ளங்கவர் புத்தகங்கள் மேலும் மேலும் பலப்பல வெளிவந்த படிதான் இருக்கும்.*

***அறிஞர் அண்ணா***

46. பி. அர்ஜுன் குமார் பி. கஜ்ஜான்



நல்வாழ்த்துகள்

பெரியார் மாவட்ட
பேருந்து உரிமையாளர்கள் சங்கம்
ஈரோடு.

நல்வாழ்த்துகள்



47. பி.பி. சுரேந்திரநாத்


ஜனாப். ஏ. மொஹைஹதீன்

இயக்குநர்

**கே.ஏ.ஆர். லெதர்ஸ் (பி) லிமிடெட்**

திண்டுக்கல் - 624 002. தொலைபேசி 300 98 பேக்ஸ் 31502

*Best Compliments*



48. குகன் மாணிக்கம்

**Sree Amman Arts & Science College**

Chithode (Via) Erode - 638 102. Phone 533 986, 533 987, 534023

*Correpondent and Secretary :* **T. JAYALAKSHMI**



– ஆ. ஈஸ்டர் ராஜ

நல்வாழ்த்துகள்

**சேலம் மத்திய கயிறு விற்பனை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்.,**

**இண்ட எண் - 648**

சூரமங்கலம், சேலம் - 636 005.



விஞ்ஞானி நாயக்கர் என்றவுடன் ஏதோ கல்பாக்கம் அணுமின் நிலையத்திலோ, தும்பா ராக்கெட் நிலையத்திலோ பாபா அணுசக்தி நிலையத்திலோ வேலை பார்க்கிற பெரிய விஞ்ஞானி என்று யாரும் நினைத்துக் கொள்ள வேண்டாம். தார்ப்பாச்சலும் தலப்பாகையுமாய் கையில் தூரோடு பிடுங்கிய அஞ்சாறு நெல்பயிர்களுடன் வரப்பில் கால்மேல் கால்வைத்து, அதோ அய்யங்கோயில் புளிய மரத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிற குருசாமி நாயக்கர் என்ற கரிசக்காட்டு சம்சாரியின் பட்டப்பெயர் தான் விஞ்ஞானி நாயக்கர்.

கண்மாய்க் கரை அய்யன் கோயில் புளிய மரத்தடியில் அஞ்சாறு பேர் உட்கார்ந்திருந்தார்கள். ஏழெட்டு தொட்டில்களும் தொங்கின வரிசைப் பனைகளின் நிழல்கள் கிழக்காமல் நீண்டு நிறை கண்மாயின் தண்ணீருக்குள் பாம்பு நெளிவாய் அலையோடு விளையாடி படங்காட்டின. கலைத்துப் போட்ட சீட்டுக் கட்டுகளாய் பரந்து கிடக்கும் வயல்வெளி.

கரை வாகரையில் வந்து நின்றவர் மேற்காமல் நீண்டு செல்லும் வாய்க்காலில் சகதிகளைக் கழுவிவிட்டுக் கரையேறினார். உட்கார்ந்திருந்த ஒவ்வொருவரையும் உற்றுப் பார்த்தார். ரெங்கசாமி நாயக்கர் யாரையும் கேலி பண்ணுவதில் பெரிய கில்லாடி. ஆனால் அவருடைய பாச்சா பலிக்காமல் தோற்றுப் போவதெல்லாம் விஞ்ஞானி நாயக்கரிடம் தான். யார் என்ன சொன்னாலும் தன் சிறிய கண்களை வைத்து உற்றுப் பார்த்து உதட்டைக் கூப்புவாரே ஒழிய சாமானியமாக வாய் திறக்கமாட்டார். அபூர்வமாய் சிலநேரம் தலையாட்டிக் கொண்டே புளிச்சி நார் தாடியையும் கம்பரக் கத்தி மீசையையும் தடவிக் கொள்வதோடு சரி.

"என்ன மாமோவ் ஆராய்ச்சியில் என்னத்தக் கண்டுபிடிச்சீரு?" அவர் கையில் வைத்திருந்த தூரோடு பிடுங்கிய நெல் பயிர்களை பொத்தென்று அவர்கள் முன்னால் விட்டெறிந்தார். வேருடன் பிடுங்கிய அப்பயிர்களை ஆளுக்கொன்றாய் எடுத்துப் பார்த்தனர்.

"சுத்திச் சுத்திப் பாத்தாப்பல நமக்கு என்ன தெரியுது?"

விஞ்ஞானி நாயக்கர் தரையையே உற்றுப் பார்த்தார். அவர் உட்கார இடம் தேடுகிறார் என்று யூகித்துக்கொண்ட கிட்ணசாமி கரைச்சரிவிலிருந்து ஒரு பெரிய கல்லைத் தூக்கிக்கொண்டு வந்து போட்டான். "இந்தப் பயித்துல எதுலயாவது புதுசா வெள்ளவேர் போட்டிருக்கா பாத்திகளா, தண்டு இருக்கிற லச்சணத்தப் பாத்திகளா? இப்பவே வெளஞ்ச பயிர் மாதிரி பழுப்புத் தட்டிப்போயி, வளர்ற பயிரு எப்படி இருக்கனும். அப்பிடியே தூரும் துளுரும் பச்சப்பசேல்னு இருக்கவேணாமா"

"இந்த நாலு வருசமாத்தான் இப்பிடி வாயில மண்ணப்போடுது, இதுக்கு

# கழிவுகள்

முந்தி இப்படி இல்லயே, அடிக்காத மருந்தெல்லாம் அடிச்சாச்சு, போடாத ஒரமெல்லாம் போட்டாச்சு. பயிரு ஒரு மொழத்துக்கு அங்கிட்டு எழும்பவே மாட்டங்கு, அதுலயும் பொட்டல் பொட்டலா கருகுது, இங்கபாரு வயக்காட்டப் பார்த்தது மாதிரியா இருக்கு. சுடுகாட்டப் பார்த்தது மாதிரி இருக்கு. அருள் கெட்டுப் போயி''

ரெங்கசாமி நாயக்கர் துப்பிய வெற்றிலை எச்சில் தண்ணீரில் விழுந்து சிவப்பாகியது. "இப்ப கீழக்கடேசியிலிருந்து சுத்தி மேலக் கடேசிவரைக்கு வந்திருக்கன் மருந்துக்கு ஒரு தவள, ஒரு மீன் குஞ்சி, ஒரு நண்டு, ஒரு கொக்கு, ஒரு குருவி, எந்த உசுப்பிராணியாவது கண்ணுல பட்டுமே, ஒரு ஈங்குஞ்சியக் காணும், பெரிய அருசுவமால்ல இருக்கு''

"கூட்டங்கூட்டமா திரியுமே உள்ளானும், சிறகியும், கொக்கும், நாரையும். இப்ப ரெண்டு வருசமா நம்ம ஊரையே மறந்திருச்சே''

"எங்கயாவது நெற கண்மாயில கொக்கு வராம இருக்குமா''

"மீனு இருந்தாத்தான கொக்கு இருக்கும்."

"அதச் சொல்லும், ஒத்த அயிரயக்கூட காணுமே, பெறகு கொக்குக்கு இங்க என்ன வேல''

"தண்ணிக்கு மேல 'தானாப்'பூச்சி கொஞ்சமா வெளையாடும். அதக்கூட கண்ணுல காணுமே''

"வெள்ளிக்குருத்தா மின்னுமே கம்மாத் தண்ணி, நெறத்தப்பாரு. கடல் தண்ணி கெனக்கா இருக்கா? கம்மாத்த தண்ணி கெனக்கா இருக்கா''

கண்மாய் பெருகி மறுகால் போய்விட்டால் போதும், நெல் வீட்டுக்கு வந்தது மாதிரிதான். களத்தில் உப்பாய் குமிந்துவிடும். அப்பேர்ப்பட்ட கண்மாயில் இரண்டு வருடங்களாக கண்மாய் நிறைந்து மறுகால் ஓடியும் ஒரு நெல் விளைவிக்க முடியவில்லை. பயிர்கள் வளராமலேயே நின்று கருகிப் போனால் என்னதான் செய்யமுடியும். இன்ன நோய்தான் இன்ன காரணம் தான் என்று நிதானிக்க முடியவில்லை. விஞ்ஞானி நாயக்கர் கண்மாயையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"ஆயிரத்தச் சொல்லுங்க இது மில்லுக்காரன் வேலதான். என்ன கழுதையவோ கலந்து விடுறான். அது சனியன் இன்னதுன்னு நமக்கு அடைபடல''

"ஓம் பேச்சுப்படியே வச்சிக்கிருவம். மில்லு இந்த ரெண்டு வருசமாத்தானா இருக்கு. அம்பது வருசமா இங்கதான் இருக்கு, அப்ப கலக்காத மருந்தையா இப்பக் கலக்கப் போறான்''.

"தண்ணிய ஆடு மாடுகூட மோந்து பாத்திட்டு போகுதுன்னா, என்ன அர்த்தம், தண்ணி பூராவும் வெஷமா இருக்னுதான அர்த்தம்''

ஓவியம்: **மனோகர்**



**நிறை சூலியாய் நிற்கும் இந்த அருள்கெட்டுப்போன கண்மாயில் முந்தி எத்தனை விதமான உசுப்பிராணிகள் விளையாடித் திரியும்... பழைய கண்மாயின் லச்சணமே மாறி மூளிக்காதியாய், தண்ணீரே சுமையாய் வெறும் தண்ணீர் மட்டும்தான் கண்மாயா?**

விஞ்ஞானி நாயக்கர் தான் கொண்டு வந்திருந்த நெல்பயிர் தூர்களை ஒன்றாய்ச் சேர்த்துக் கட்டினார்.

''என்ன மாமா எங்க ஆராச்சிக்குப் போகுது.''

"நேத்து கோயில்பட்டி போயி வெவசாய ஆராச்சிப் பண்ணையில ஒரு பாட்டல் தண்ணிய குடுத்திட்டு வந்தன், அவர்தான் அஞ்சாறு பயித்தையும் பிடுங்கி கொண்டாரும்னான். கொண்டட்டு போறன், அதயும் பாப்பம்"

அவர் கரை நெடுக உற்றுப் பார்த்படி நடந்தார். விஞ்ஞானி நாயக்கரின் ஆராய்ச்சி ஊரிலும் சுற்றூர்களிலும் ரொம்பவும் பிரசித்தம். யூரியா மூட்டைகளையும், பூச்சி கொல்லி மருந்துகளையும் தொடாத ஒரு சம்சாரி உண்டென்றால் அது விஞ்ஞானி நாயக்கரைத் தவிர்த்து யாரும் இருக்கமுடியாது. ஊரெல்லாம் டிராக்டர் வந்தவுடன் மாடுகளை விற்றபோது இவர் மட்டும் கூடுதலாக இன்னும் இரண்டு ஜோடி மாடுகளை வாங்கிக் கட்டினார். மாட்டுச் சாணத்தை தண்ணீரில் கரைத்துவிட்டு நீர் பாய்ச்சுவார். ஒரு சொட்டு மாட்டு மூத்திரம்கூட வீணாகாமல் தொழுவத்தில் பெரிய அண்டாவில் சேர்த்து பயிர் முழுக்க தினம் தெளிப்பார். எரிசாம்பலை பெட்டி பெட்டியாய் கொண்டுபோய் பயிர்களின் மேல் தூவுவார். மெனக்கிட்டு வேப்பமுத்து சேர்த்து இடித்து தூளாக்கி தூர்களில் வைப்பார். வேப்பிலைகளை நிறையப் பிடுங்கி வந்து ஆட்டு உரலில் ஆட்டி சாறு பிழிந்து ஊற்றுவார். நோயே அண்டாத படிக்கு செடிகள் வளருவதைப் பார்த்து எத்தனையோ தரம் ஆபிசர்களே ஜீப்பில் வந்து விஞ்ஞானி நாயக்கரைச் சந்தித்துப் பேசிவிட்டுப் போயிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்டவராலேயே இன்ன காரணமென்று கண்டுபிடிக்க இயலவில்லை. கரை நெடுக ஓலைகள் எல்லாம் காய்ந்து பட்டுப் போய் நிற்கும் வரிசைப் பனைகளை அண்ணாந்து பார்த்தார். பனையின் தூரோரம் நின்று மேற்காமல் பார்த்து நீண்ட பெருமூச்சு விட்டார்.

கண்ணுக்கெட்டிய தூரம்வரை கடலெனத் தண்ணீர். கழுத்தளவு தண்ணீருக்குள்ளும் இலையுதிர்த்து மாராய் நிற்கும் கருவேலமரங்கள். கரையெல்லாம் புதர்மண்டிய நீர்க்கருவை சங்கஞ் செடிகளும், கள்ளிக் கூட்டமும். உள் வாகரையில் சம்பும் நீர்க்கோரையும்; சம்புக் கோரையிலிருந்து பறக்கும் விளைந்த கதிர்களின் பஞ்சுக்கூட்டம். அவர் பழைய கண்மாயை நினைத்துப் பார்த்தார். அடிக்கொரு தரம் கோயில் பட்டி போகிற டவுண் பஸ் வருகிறதா என்று தார்ரோட்டையும் ஏறிட்டுப் பார்த்துக் கொண்டார்.

நிறை சூலியாய் நிற்கும் இந்த அருள்கெட்டுப்போன கண்மாயில் முந்தி எத்தனை விதமான உசுப்பிராணிகள் விளையாடித் திரியும். கண்மாய் பெருகி மறுகால் ஓடி ஆற்றைத் தொட்டுவிட்டாலே போதுமே. விதவிதமாய் ஆரா, உளுவை, கெண்டை, பாம்புக் கெண்டை, கூனக்கெண்டை, பல்க் கெண்டை, அயிரை, கெளுரு, கொரவை, விலாங்கு, ஊளி, வட்டக்கெண்டை, சிலேப்பிக் கெண்டை, இவைகளோடு தண்ணீர்ப்பாம்பு, ஆமைக்குட்டி, நீர்க்கோழி, உள்ளான், சிறகி, மீன்கொத்தி, கொக்கு, நாரை, குளக்கடா, முக்குளிப்பான், வட்டமிடும் பருந்துக்கூட்டம், நண்டு, தவளை, அரட்டவளை, தானாப்பூச்சி இவையெல்லாம் இந்த இரண்டு வருடங்களாய் எங்கே போய் ஒளிந்து கொண்டன! என்ன மாயம்! பழைய கண்மாயின் லச்சணமே மாறி மூளிக்காதியாய், தண்ணீரே சுமையாய் வெறும் தண்ணீர் மட்டும்தான் கண்மாயா? பெருமூச்சு விட்டார். பனையில் நன்றாகச் சாய்ந்து கொண்டார்.

நிறை பெருக்காய் கெத்கெத் தென்று தத்தளிக்கும் தண்ணீர். மறுகால் ஓடி கலுங்கில் பாசம் பிடித்து ஓடையில் உருளும் தண்ணீர். வெள்ளியை உருக்கிய பாகாய் புதுத் தண்ணீர். கரையெங்கும் கழுவிப் போட்ட மேகங்களெனக் காயும் வெளுத்த துணிகள். வரிசை வரிசையாய் உட்கார்ந்து கரை நிறைந்து தூண்டில் போடுபவர்கள். ஆனந்தமாய் கறுப்பு உருண்டைகளெனத் தலை நீட்டி எட்டிப் பார்த்துவிட்டு முங்கிக்கொள்ளும் நீர்க்கோழிகள். கரை முழுக்க அரைத்த மஞ்சளாய்ப் பூத்துக்குலுங்கி மணம் பரப்பும் ஆவாரஞ்செடிக் கூட்டம். கரைப் பனை வரிசையில் குலை குலையாய் தொங்கும் பனங்காய்களும் கல் கலயங்களும், உள் வாகரையில் நடைபயிலும் நண்டுக்கூட்டம். நண்டுகள் பிடித்துத் திரியும் சிறுசுகள், சிறுசுகளின் பின்னால் தூக்கிவாளியும் கையுமாய் இளைப்பு நோயாளிகள். கரைமேல் பந்தலெனப் படர்ந்து தண்ணீரின் மேல் விழுதுகள் தொங்க நிற்கும் ஆலமரம். ஆலமரத்தில் சத்தம் எழுப்பி சலசலக்கும் பலவித பறவைக் கூட்டங்கள். ஒற்றைக்காலில் தவமிருந்து ஒதுங்கும் மீன்களைக் கொத்தி விழுங்கும் கொக்குக் கூட்டங்கள். பனை ஓலையில் காத்திருந்து எறிகல்லாய் தண்ணீருக்குள் பொத்தென்று பாய்ந்து மீனைக்கவ்விக் கொண்டு மேலெழும்பிச் சிறகடித்து நீர் உதறிப்பறக்கும் மீன் கொத்திகள். தூக்கிவாளிகளும் தொட்டில்களும் ஊஞ்சலாய் தொங்கும் அய்யன் கோயில் புளியமரம். நடவு முடிந்ததற்கு அடையாளமாய் ஓயாமல் கேட்கும் குலவைச் சத்தம். வெற்றிலைக் கொடிக்கால்களில் வேலை செய்யும் வண்டு கட்டிய பெண்களின் விடுபாட்டு. மடைத்தண்ணீரின் கும்மென்ற இறைச்சல். பனை நிழல் நீண்டு நெளிந்து நெளிந்து அலையோடு விளையாடும் கண்ணாம் மூச்சி விளையாட்டு. மேலெல்லாம் சகதியும் சேறுமாய் கோமாளியாய் வந்து முங்கியவுடன் புது மனுசனாய் வரும் சம்சாரிகள். புதுத் தண்ணீரில் தான் பயறு, பருப்பு நன்றாக வேகுமென்று குடத்துடன் வரும் குமரிகளின் பின்னால் கூட்டமாய்ப் பெண்கள், அருமையான குளிர் காற்று, கரையெங்கும் கள்ளிப்பழம், கள்ளிகளின் மேல் படர்ந்து ரத்தினக்கல்லாய் சிவந்த கோவைப் பழங்கள், கறுத்த பாறைத்திட்டுகளாய் தண்ணீருக்குள் இருந்துகொண்டு வெளியேற மனமின்றி சுகங்காணும் எருமைக் கூட்டங்கள்.

நாயக்கர் பொங்கி வந்த கண்ணீரை அடக்கிக் கொண்டு முக்கு ரோட்டுக்கு ஓடினார். டவுன் பஸ் கிட்டத்தில் வந்துவிட்டது. ஓடிப்போய் ஏறி உட்கார்ந்தார். அவர் கைகளில் வைத்திருந்த தூரோடு பிடுங்கிய நெல்பயிர்களை எல்லோரும்

ஆச்சரியமாய்ப் பார்த்தார்கள்.

விவசாய ஆராய்ச்சிப் பண்ணைக்கு போன உடனேயே ஐந்தாறு அதிகாரிகள் அவரைக் கூட்டிக் கொண்டு போனார்கள். பெரிய விசாலமான ஒரு அறையில் ஒருவர் மட்டுமே உட்கார்ந்திருந்தார். அவர் முன்னால் பத்துப் பதினைந்து நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. நாயக்கரை உட்காரச் சொல்லி கை நீட்டினார். கூடவந்தவர்கள் உட்காரத் தயங்கியதிலிருந்தே இவர்தான் எல்லோருக்கும் பெரிய அதிகாரி என்பதை நாயக்கர் யூகித்துக் கொண்டார். மேஜையின் மேல் அம்பாரமாய் அடுக்கி வைக்கப் பட்டிருந்த பைல்களிலிருந்து தேடி ஒன்றைக் கையில் எடுத்தார்.

"எந்த ஊர் சொன்னீக."

"உருளகுடி"

"மில் வாகரையில் இருக்கே அந்த ஊர்தான"

"ம்... ம்... ம்..."

"ஒங்க ஊரு இப்படியான பாதிப்புக்கு வரும்னு அஞ்சு வருசத்துக்கு முன்னாடியே நாங்க அரசாங்கத்துக்கு ரிப்போர்ட் அனுப்பியாச்சு, யாரும் கண்டுக்கிறல."

"கொஞ்சம் வெவரமாச் சொல்லுங்கய்யா."

"இத்தன சீரழிவுக்கும் இந்த மில்தான் காரணம்."

"மில்லு அம்பது வருசமா இருக்கே சார், இந்த ரெண்டு வருசமாத்தான் இந்தக் கூத்து. போன மூனா வருசம் வரைக்கி ஒரு பிரச்னையும் இல்லியே? அதிகாரி நாயக்கரைப் பார்த்து இலேசாய்ச் சிரித்துக் கொண்டார்.

"கவனமாக் கேளும் நாக்கரே, ஒங்களப் பத்தி இங்க ஏற்கனவே எல்லாருக்கும் தெரியும். நீருமட்டும் நாலெழுத்து படிச்சிருந்தா நீரு உட்கார வேண்டிய எடம் நான் உட்காந்திருக்கிற சீட். அம்பது வருசத்துக்கு முன்னாடி பருத்திலிருந்து நூல் மட்டுமே தயார் பண்ற ஸ்பின்னிங் மில்லா இது இருந்துச்சு. பத்து வருசத்துக்கு முன்னாடி நூலிலிருந்து துணிகள் தயாரிக்கிற வீவிங் யூனிட் பக்கத்துல உருவாச்சு. கச்சைத்துணிய நெய்து அப்படியே அனுப்பி விக்கிறது. இப்ப அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி பக்கத்துல ஒரு யூனிட் ஆரம்பிச்சு, அதுல இவங்க உற்பத்தி பன்ற துணிகள இங்கேயே பிளீச்சிங் பண்ணி ப்ராசஸ் செஞ்சு சாயம் முக்கி, டிசைன் பிரிண்ட் பண்ணி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி பண்றாங்க. அந்தச் சாயக் கழிவு எல்லாமே நேரடியா ஒங்க கண்மாயில கலக்குது. அவ்வளவும் பயங்கரமான கெமிக்கல்ஸ். பச்சையா சொல்றதா இருந்தா எல்லாமே பாய்ஸன், விஷம்."

பஸ்சை விட்டு இறங்கிய நாயக்கர் இளவட்டமாய் மாறிப் போனார். அவருடைய நடையின் வேகம் அப்படி. அவர் யுரேகா யுரேகா சொல்லாதது தான் குறை. அவ்வளவு வேகம். முதலில் மொட்டைமில்லாய் இருந்தது, பின்னர் புகைக்கும் வானளாவிய குழாய் கட்டியதையும், பின்னர் நல்ல தண்ணீர் தேடி ஊருக்குள் அதிகாரிகள், மில் முதலாளி வந்ததையும் எதற்கென்று இப்போது புரிந்து கொண்டார்.

ஊர் மடத்தில் ஜனம் பூராவும் கூடியிருந்தார்கள். விஞ்ஞானி நாயக்கர் சொல்லச் சொல்ல எல்லோருடைய நரம்புகளும் முறுக்கேறின. பெண்கள் மண்ணைவாரித் தூற்றினார்கள்.

"நாளைக்கே கோயில்பட்டி போயி கட்சி ஆபிஸ்ல சொல்லி ரெண்டுல ஒன்னப் பாத்துருவம்."

பால்ப்பண்ணை ராமசுப்பு நாயக்கர் சிவப்புத்துண்டை இழுத்துப் போர்த்திக் கொண்டு கோபமாகக் கத்தினார்.

"ஆளுக்கொரு மம்பட்டியும் கையுமாப் போயி தண்ணிய மில்ல விட்டே வெளியேற விடாம அடச்சிட்டாப் போச்சு"

"இதெதுக்கு வழவழான்னு பேசிக்கிட்டு மொதலாளி இந்த ரோட்டு வழிதான் மில்லுக்குப் போகனும், கார மறிச்சிட்டாப் போச்சு."

"காரமறிச்சு வெளிய இழுத்துப்போட்டு கந்து கந்தா வெட்டல"

நாயக்கர் கவனமாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டே இருந்தார். கூட்டத்தைச் சுற்றி ஒரு நோட்டம் விட்டார். "என்ன.... எல்லாம் பேசி முடிச்சாச்சா... இன்னியும் இருக்கா."

"......................................"

"இப்ப நாஞ் சொல்றதக் கவனமா கேளுங்க, ஒங்களுக்குத் தக்கன எதுவும் பேசாதிக, பணம் பாதாளம் வரைக்கும் பாய்கிற காலமிது. இந்தப் பிரச்னையில கட்சிகாரங்கள நொழைய விட்டுட்டா, பெறவு அவம் பின்னாலதான் ஊரோட நம்ம அலயனும். கடேசில காரு வாங்கிக் குடுப்பான், பங்களா கெட்டிக் குடுப்பான். காணாக் கொறைக்கு கட்சிக்கு ஆபிசும் கெட்டிக் குடுப்பான் மொதலாளி, இத்தனையவும் வாங்கிக்கிட்டு வெவகாரத்த கோர்ட்ல போட்ருக்கு, சட்டப்படி தான் நம்ம போகனும் பான் கட்சிக்காரன், மொதலாளி சுப்ரீம் கோர்ட் வரைக்கு அப்பீல் பண்ணுவான். கேஸ் முடிய எட்டு வருசமோ பத்து வருசமோ ஆகும். அதுக்குள்ள நம்ம எல்லாருமே திருவோட்ட ஏந்திட்டு காவிவேட்டிய உடுத்திட்டு பண்டாரமாப் போக வேண்டியதான்"

"சரி, பெறகு இதுக்கு என்ன தான் வழி"

"நம்ம கொஞ்சம் கோளாறாக வும், பொறுமையாகவும் தான் போயாகனும், இல்ல காரியங் கெட்டுப் போகும். நம்ம ஊர்ச் சார்பா கலெக்டருக்கு ஒரு மனு, மில் மொதலாளிக்கு ஒரு மனு குடுப்பம். மூனு மாசத்துக்குள்ள பதில் இல்லன்னா ஊரோட தெரண்டு ஆம்பள, பொம்பள, கெழடு, கெட்ட, குஞ்சு, குருமான் எல்லோரும் மில்லு கேட்ல படுத்துருவம், கொஞ்சங் கொஞ்சமா இங்ஙன சாகிறது ஒரேயடியா அங்ஙன செத்துருவம்"

"பக்கத்து ஊரு சம்சாரி களையும் கூப்பிட்டுப் பாப்பமே..."

"ஒரு பய வரமாட்டான், என்னைக்குமே வெள்ளம் குண்டிக் குள்ள வந்தப் பெறவுதான் அனப் போடுவான் சம்சாரி."

நாயக்கர் சொன்னது எல்லோருக்கும் சரியென்று பட்டிருக்க வேண்டும். எல்லாரும் மௌனமாகத் தலையாட்டினார்கள். ஒரு படித்த பையனை மனு எழுதுவதற்காகத் தேடினார்கள். படித்த பையனைக் காண வில்லை. ஆனால் ஊர் முழுவதும் அங்கேதான் கூடியிருந்தார்கள். நாயக்கர் கூட்டத்தை உற்றுப்பார்த்தப்படி உட்கார்ந்திருந்தார். ●



'50. கே. கோவிந்தன்

நல்வாழ்த்துகள்

கே.கே.எம். தங்கராசு, தலைவர்

**திருச்சிராப்பள்ளி பிரதம கூட்டுறவு**
**நிலவள வங்கி லிட்., ஆர் 440**

2, கலெக்டர் ஆபீஸ் ரோடு, திருச்சிராப்பள்ளி. போன் : 461223



51. எம்.ஜி.ர°°பீக் அகமது


நல்வாழ்த்துகள்

**கே.சி. பழனிசாமி,** நிர்வாக இயக்குனர்

**கரூர் கே.சி.பி. பேக்கேஜிங்ஸ் லிமிடேட்**

***(கரூர் கே.சி.பி. - தரமான சிமெண்ட் பைகளுக்கு பெயர் பெற்ற நிறுவனம்)***

*330/1, சின்ன ஆண்டான்கோவில் தெரு, கரூர் - 639 001. போன் : 04324 - 60363, 64363*



52. கே. பாலசுப்பிரமணியம்

நல்வாழ்த்துகள்

| | |
|---|---|
| **மு. இராஜசேகர்** | **க. இராமையா** |
| தனி அலுவலர் | செயலாளர் |

# புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்.,

புதுக்கோட்டை

## கலாப்ரியா

# திறப்பதற்கு இங்கே கத்தரியுங்கள்.....

கள்ளன் போலீஸ்
விளையாட்டில் - யாரும்
கண்டு பிடிக்க முடியாத
இடமொன்று
கண்டறிந்து
ஒளிந்திருந்தான்
அந்த விளையாட்டு முடிந்து
எல்லோரும் வட்டமாயமர்ந்து
சினிமாப்போர் போட்டு
விளையாடப் போனது
தெரியாமல்....

வகுப்பில் பேனாவில்
யாருக்கு பசி தீர்ந்தாலும்
அவனிடம் கேட்டால் மட்டுமே
கிடைக்கும்
சார்வாளுக்குத் தெரியாமல்
தரவும்
அவனுக்கு மட்டுமே முடியும்.

எங்கிருந்து
கொண்டு வருவானென்று
தெரியாது
யார் வீட்டு வாசலில்
மார்கழிக் கோலத்தில்
பூசணிப்பூ இருந்தாலும்
அவன் தந்ததாய்த்
தானிருக்கும்.

அத்தை முறைவேண்டும்
(வே)வம்பக்கா
அவள் வீட்டுக்கு
விலக்கானால்
கருவேப்பிலைச் செடியைக்
காரணம் காட்டி
தோட்டம் பூராவுக்கும்
தண்ணீரிறைக்க
வைத்துவிடுவாள்.
(தன் மகளை வேலு
யாருக்கோதான்
தாரை வார்த்திருக்கிறாளாம்)

படர்குழிக்கு நட்டுவைத்தால்
நன்றாய்க் கொடிவளரும்
என்று
கார்த்திகைச் சொக்கப்பானையின்
கொஞ்சம் எரிந்த மூங்கில்களை
முண்டியடித்துப் பொறுக்கி
அள்ளிவருவான்.
தெருவின் முதல் வீடு
தொடங்கி
ஆளுக்கொன்றாய் வாங்கிக் கொள்ள
வெறுங்கையோடு
வீடு வந்து
ஆடைக்கரிக்கும்
மீசைக்கரிக்குமாய்
அப்பாவிடம்
வாங்கிக் கட்டுவான்.

யார் கேட்டாலும்
இல்லையென்று சொல்லாமல்
''எழுதிக்கிட்ருக்காங்க
நாளைக்கு வரும்''.... என்று
இங்கிதமாய்ச் சொல்லும்
தபால்காரன் உத்தியோகம்
எப்படியோ கிடைத்தது.

எனினும்
இப்போதும்
அவன் பீட்டில் இல்லை
அவனது வீடும்
அவன் சாமியாடும்
கோயிலும்.



53. எஸ். விஜய சுந்தரம்


நல்வாழ்த்துகள்

# அபிராமி ஹோட்டல்

*71ஏ, சாலைத் தெரு, இராமநாதபுரம் போன் : 20147*

# ஹோட்டல் சூர்யா /ஏ.சி.

*75, சாலைத் தெரு, இராமநாதபுரம் போன்: 22352*



54. பொன் ரகுநாதன்


நல்வாழ்த்துகள்

## திருச்சி டிஸ்டிலரீஸ் அண்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட்

*தலைமை அலுவலகம் :* *''மஹாலக்ஷ்மி மேன்ஷன்'', முதல் மாடி, 14, முதல் மெயின் ரோடு, காந்திநகர், அடையாறு, சென்னை - 600 020. போன் : 417791 / 92 / 93 பேக்ஸ் : 91-44-4917796*

*தொழிற்சாலை :* *செந்தண்ணீர்புரம், திருச்சி - 620 020 போன் : 465261 / 465562 / 465063 பேக்ஸ் : 0431-465558*

# அப்பாவும் மகனும்

**ஜெயமோகன்**

ஓவியம்: **ஆதிமூலம்**



அம்மா என்று எளிதாகச் சொல்லிவிட்டாள். மதியம் தாயும் மகனும் கொஞ்சுவதைக் கேட்டபோது திடீர் ஆச்சரியத்துடன், "என்னது. அம்மாங்குது?" என்றேன்.

"பின்னே? அப்பவே சொல்ல ஆரம்பிச்சாச்சே. என் ராஜாக்குட்டி சொல்லுங்க பாக்கலாம் -

அம்மா"

பயல் கண்கள் மகிழ்ச்சியால் மின்னின. மோவாயைச் சற்று ஏந்தி சிவந்த உதடுகளைக் கவனமாகப் பிதுக்கி "ம்மா" என்றான்.

அவளுக்கு ஒரே பரவசம். "என் தங்க பிஸ்கெட்டே, குட்டி பிஸ்கெட்டே, குட்டிச் சக்கரையே" என்று அவன் கன்னத்தைப் பற்றி முத்தத்தைப் பிய்த்து தன் உதடுகளில் ஒற்றிக் கொண்டாள்.

பயல் மேற்கொண்டு பாராட்டு பெறும் உத்தேசத்துடன் இடது கையை ஊன்றி, வலது முழங்காலால் உந்தி, தவழ்ந்து வந்தான். என் பாதங்களைப் பற்றி சிரமப்பட்டு ஏறினான். எச்சில் கம்பிபோல மார்பில் வழிந்தது. கொழகொழவென்ற உதடுகளுக்குள் இரு வெண்பாசிப் பற்கள் தெரிய சிரித்தபடி "ஊங்ரி" என்றான். அதற்கு தேவபாஷையில் எண்ணற்ற அர்த்தங்கள் உண்டு.

"நேத்தைக்கு ராத்திரி மேல ஏறி உலுக்கி எழுப்பறான். கண்ணைத் திறந்தா சிரிச்சுக்கிட்டே அம்மான்னு கூப்பிடறான். கிளிக் குஞ்சு மாதிரி வாய வச்சுகிட்டு. எனக்கு அப்படியே புல்லரிச்சுப் போச்சு தெரியுமா? நெஜம்மா" என்றாள்.

பயலைத் தூக்கிக் கொண்டேன். பொதபொதவென்ற தொடையும் தொப்பையும் என் மார்பில் அழுந்தின. எச்சில் சில்லென்று தோள்மீது வழிந்தது. அவன் கைகளை நீட்டி என் மீசையைப் பற்ற முயன்றான். "ஊங்ரி?" என்றான்.

"எதுக்கு அப்பான்னு சொல்ல மாட்டேங்கிறான்? நீ ஆபீஸ் போயிடறே. பகல் முழுக்க நான்தானே இவனை கவனிச்சுக்கிறேன்?"

"அம்மாவைத்தான் எல்லாக் குழந்தைகளும் முதல்லே கூப்பிடும்.

"அதான் எதுக்கு? ஆயி வந்தா மட்டும் எனகிட்டே கரெக்டா வந்துடறானே?"

"அம்மாதான் முன்னறி தெய்வம்"

"நீ சொல்லிக் குடுத்திருப்பே. நாலு தடவை சொல்லிக் காமிச்சா கூப்பிட்டுட்டுப் போறான். ஆ... விடுடா ராஜா. அப்பாக்கு வலிக்குதுடா... ஆ மீசை!"

அவள் சமையலறைக்குப் போய் குழாயைத் திருப்பினாள். "காட்டிலே கொண்டு விட்டாலும் அம்மான்னுதான் முதல்லே சொல்லும்"

பயல் வாழைக்குலை போல தலைகீழாகச் சரிந்து, தொங்கி, கைகளை நீட்டி "ஊங்ரி ஊங்ரி!" என்று சிணுங்கினான். "தா. தா. தா." என்றான். கீழே விட்டேன். தரையில் ஈரத்துளிகள் உதிர்த்தன. அவற்றைத் தேய்த்தபடி கட்டிலுக்கு அடியில் சென்றான்.

கட்டில்மீது அமர்ந்தேன். "குழாயை திறந்து விட்டுட்டு கழுவாதேன்னு எத்தனை தடவை சொல்றது?"

"இதான் எங்களுக்கு வழக்கம். நாங்க காவேரித்தணியில் புழங்கறவங்க."

"கன்னியாகுமரி மாவட்டம்லாம் பாலைவனம்ல? அதான் சின்னவயசிலேயே தண்ணின்னாலே எங்களுக்கு பயம்"

டமார் என்று கட்டில் அதிர்ந்தது. "ஆங்" என்று கீழே அழுகை தொடங்கியது.

"என்னாச்சு?" என்றாள் பதறியடி.

"ஒண்ணுமில்லை கட்டில்ல முட்டிக்கிட்டிருக்கான்" குனிந்து கீழே பார்த்தேன். பயல் குப்புறப்படுத்தபடி வீரிட்டுக் கொண்டிருந்தான். மார்பெல்லாம் கண்ணீர். அண்ணாக்கு தெரிந்தது.

"வாடா, வெளிய வந்துடு"

பயல எழ முயன்றான். கட்டில் முட்டியது. மீண்டும் கதறினான்.

"அவனை இழுங்களேன். தலை வலிக்கப் போகுது..."

"எந்திரிச்சா முட்டும்னு அவனுக்குத் தெரியுதா. பார்ப்பமே"

மறுபடியும் கட்டில் தடால் என்றது. அழுகை வெறியுடன் ஒலித்தது.

"பிடியுங்க அவனை" என்றபடி அவள் முந்தானையை செருகியபடி வந்தாள்.

"தொடாதே. அவனே வரானா பாப்போம்"

அழுகையின் வேகம் அதிகரித்தது. குனிந்து "வாடா. அப்பிடியே வந்துரு" என்றேன்.

"என்னால தாங்க முடியலை" என்றபடி அவள் குனிந்தாள்.

"தொடாதேன்னு சொன்னேன்ல?"

"உங்க பரிசோதனையெல்லாம் குழந்தைகிட்டே வேணாம்." என்றபடி நிமிர்ந்தாள்.

"அவனே கத்துக்கணும். நாமே எல்லாத்துக்கும் போய்க்கிட்டிருக்கக்கூடாது"

"பெரிய தத்துவம்! இத்துனூண்டு குழந்தைக்குப் போய்..."

அதற்குள் பயல் தவழ்ந்து வெளிவந்துவிட்டான். வாய் ஒலியெழுப்பியபடியே இருந்தது. அம்மாவை நோக்கி கை நீட்டினான்.

"வாங்க என் செல்லமே. அழாதீங்க. அடாடா... வாணாம். வாணாம்" என்றபடி தூக்கிக் கொண்டாள். விசும்பல் பெருமூச்சு ஆகியவை முடிந்தபிறகு என்னை புருவத்தைத் தூக்கி உதட்டைப் பிதுக்கியபடி பார்த்தான்.

"இப்ப தெரியுதா, ஏன் அம்மா பேர சொல்லுதுன்னு?"

"அப்பான்னு சொல்லிக் குடுத்தா சொல்லிட்டுப் போறான்"

"எங்க சொல்லிக்குடுங்க பார்க்கலாம்"

"சவாலா? சாயந்தரத்துக்குள்ள சொல்ல வைச்சா என்ன பண்ணுவே?"

"பத்து தோப்புக்கரணம், போதுமா?"

"குடுடீ" என்றபடி அவனை வாங்கப் போனேன். பயல் சந்தேகத்துடன் திரும்பிக் கொண்டான். பிறகு மெல்ல கை நீட்டினான். தூக்கிக்கொண்டு ஹாலுக்குப் போனேன். மேஜை மீது அமர வைத்தேன். மைப்புட்டியை எடுத்து தள்ளி வைத்தேன். அதற்குள் பேனாவை எடுத்துக் கொண்டான். பிடுங்கினேன். கைநீட்டியபடி, "ஊங்ரீ ஊங்ரீ" என்றான். பேனாவைத் திரும்பத் தர வேண்டியதாயிற்று. அதை இரண்டு கைகளாலும் பற்றி மொழுக் மொழுக் என்று கடித்தபிறகு சப்புக் கொட்டினான்.

"அப்பா – சொல்லு"

அவன் காதில் அது விழவேயில்லை.

"சொல்லுடாக் கண்ணு, அப்பா"

பயல் பேனாவை கீழே வீசிவிட்டு டைரியை எடுக்க முனைந்தான்.

அவனைத் தூக்கி மடிமீது வைத்தேன். நெற்றிமீது பரவியிருந்த மெல்லிய மயிர்க்கற்றைகளை ஒதுக்கினேன். இரண்டு கைகளையும் நீட்டி என் லுங்கியின் மடியைப் பற்றி இழுத்தான். அவனுடைய இரு குட்டிக் கரங்களையும் சேர்த்துப் பிடித்துக் கொண்டேன். மணிக்கட்டின் சதைமடிப்பு மெத்தென அழுந்தியது. புஜங்களின் மடிப்பில் வியர்வை பளபளத்தது. "சொல்லு கண்ணா, அப்பா! சொல்லு"

பயல் திரும்புவதில் குறியாக இருந்தான். அவனுக்கு கழுத்தே கிடையாது. தோள் மீது மண்டை அமர்ந்திருக்கும்.

"பூபூபூ! இங்க பார், பூபூபூ!"

பயல் திராட்சைக் கண்களை உருட்டிச் சிரித்தான். எச்சில் கொட்டியது. கால்களை உதறினான். தொப்பை நெளிய வளைந்தான்.

என் இடது கையை மார்பில் வைத்தபடி சொன்னேன். "அப்பா"

பயல் சிணுங்க ஆரம்பித்தான். கைகளை விடுவித்தேன். என் குரலில் மெலிதாக கோபம் பரவியது. "அப்பா – சொல்லும்"

பயல் "அம்மா" என்று கைநீட்டினான்.

அவள் நடையில் ஒருக்களித்துச் சாய்ந்து நின்றபடி "என்ன முடிஞ்சாச்சா?" என்றாள். கன்னத்தில் விழுந்த மயிரை வாரி பின்னலில் செருகிக் கொண்டாள்.

"நீ உன் வேலையைப் பார்"

"தோப்புக்கரணம் காத்திருக்கு"

"உதைச்சேன்னா பார்" என் கோபம் எனக்கே சற்று வியப்பாக இருந்தது" நீ உள்ளே போ முதல்லே" என்றேன்.

"ஏன் இங்கே நின்னா என்னவாம்?" என்றபடி சிரிக்கும் கண்களுடன் ஒரு காலை ஊஞ்சல் போல ஆட்டினாள்.

என்னை மெதுவாக சமாதானப்படுத்திக் கொண்டேன். "வாடா உனக்கு அப்பா காக்கா காமிக்கிறேன்"

"அவன் பால் சாப்பிடற நேரம்"

"போறியா இல்லியா?"

மொட்டை மாடியில் இளவெயில் ஓரமாக வேப்பமரம் கவிழ்ந்து நின்றிருந்ததன் நீல நிழல். கீழே

வீட்டுக்காரர் மணல்கொண்டு வந்து கொட்டியிருந்தார். இரவுமழையில் அது நனைந்து குளிர்ந்து கிடந்தது. பயலை மணல்மீது விட்டேன். கால்களை வேகமாக உதைத்தான். இரு கைகளாலும் மணலை அள்ளி இருபக்கமும் இறைத்தான். சரியாக மடங்காத பொதுங்கன் கையில் அரை டீஸ்பூன் மணல்தான் வந்தது.



"அப்பா - சொல்லுடா" என்றேன்.

பயல் மணலை இறைக்கும் உற்சாகத்தில் இருந்தான். வாய் திறந்த சிப்பிபோல இருந்தது. எனக்கு ஒன்று தோன்றியது அவன் கவனிக்கிறானோ இல்லையோ அப்பா என்று அவனிடம் சொல்லியபடியே இருப்பது ஒரு சந்தர்ப்பத்தில் அவனையறியாமலேயே அவன் மனதில் அச்சொல் பதிவாகிவிடும்.

மணலில் குழிபறித்தேன். பயல் ஊடேபுகுந்து குழிக்குள் தன் இரு கைகளையும் போட்டான். அதற்குள் தலையும் உடலும் முழுக்க மண் பரவியிருந்தது. அவனை உட்கார வைத்து கால்களை மணலில் புதைய வைத்தேன். குனிந்து பார்த்தவன் பீதியுடன் என்னை நோக்கிப் பாய்ந்தான். மணலில் அவனை அமர வைத்து காலைப் பற்றி இழுத்தேன். கைகளை வீசியபடி சத்தம் போட்டு சிரித்தான். ஊடே அப்பா என்ற சொல்லை அவனிடம் சொன்னபடியே இருந்தேன்.

பயல் ஒரு வேப்பங்காயை எடுத்து வாயில் போட்டான். மூக்கு அசைந்தது. கன்னங்கள் நெளிபட்டன.

"துப்பு.. ஆய்... கசப்பு... துப்புடா தூ... தூ... துப்பு..."

பயலுக்கு துப்பத் தெரியவில்லை வாய்க்குள் கையை விட்டு எடுத்து வெளியே போட்டேன். "ஆய்... தூதூ... சீச்சி... வாணாம்" என்றேன். உடனே அவனும் "தூத்தூ சீச்சி" என்றான்.

எனக்கு சற்று நம்பிக்கை ஏற்பட்டது. "அப்பா" என்றேன்.

உதடுகள் குவிந்தன. கண்களில் ஒரு புதுச்சொல் பிறக்கும் இம்சையும் எதிர்பார்ப்பும் தெரிந்தன. உடனே மனதை மாற்றிக்கொண்டு "தூத்தூ மாணாம்" என்றான்.

சலிப்புடன் மணலில் அவனை இறக்கிவிட்டேன். தவழ்ந்து போக முடியாமல் அவன் மணலைத் துழாவுவதைப் பார்த்தபடி எழுந்து நின்றேன். பயல் அமர்ந்து கொண்டு ஒரு வேப்பங்காயை எடுத்து "தூத்தூ மாணாம்" என்று சொல்லிக் கொண்டான்.

வானம் தெளிவான கண்ணாடி போல இருந்தது. விரிந்த நிலப்பரப்பில் அசைவேயற்ற தொலைதூர மரங்களுக்கு கீழே அசைவேயின்றி சில பசுமாடுகள் மேய்ந்தன. குளிரான காற்று வந்தது.

பயல் உதடுகளை மூடியபடி மர்மமான முகபாவத்துடன் அமர்ந்திருந்தான். நான் அவன் முகத்தைப் பிடித்து "வாய்காமி ஆ.. ஆ..காமி" என்றேன். இரு கைகளாலும் வாயை மூடிக்கொண்டான். "வாயைத்திறடா மடையா" என்று கைளை விலக்கினேன். தலையை அசைத்தான். வாய்க்குள் கைவிட்டேன். எதுவும் தட்டுப்படவில்லை. அகட்டிப் பார்த்தேன். உள்ளே சாம்பல் நிறத்தில் ஏதோ மாவுபோல் இருந்தது. கரியா? "துப்புடா கழுதை. துப்பு... தூதூ..."

லுங்கியின் நுனியை விரல்களால் சுற்றி வாய்க்குள் விட்டு துடைத்து எடுத்தேன். சாணியா? இங்கே எப்படி சாணி வந்தது? ஏதாவது பறவை எச்சமா? கர்மம். அதைப் பலமுறை துடைத்தேன்.

பயல் "தூத்தூ மாணாம்" என்றான்.

"அதைமட்டும் சொல்லு. சனியனே. கையும் வாயும் சும்மாருக்கா பார்" என்று வைதபடி படியிறங்கினேன். குற்றவுணர்வுடன் பேசாமல் அமர்ந்திருந்தான்.

"டியூஷன் முடிஞ்சாச்சா?"

பயல் கைநீட்டியபடி அழ ஆரம்பித்தான்.

"என்னத்தையோ எடுத்து வாயிலப் போட்டுட்டான். என்னமோ எச்சம்போல..."

"அய்யோ... நீங்க பாத்துட்டா இருந்தீங்க?"

"இல்லை நான்தான் எடுத்து வாயில போட்டுக்கிட்டேன்."

"கழுதை வாயிங்கே..." என்று அவனை ஒற்றைக் கையால் தூக்கி இழுத்துச் சென்றாள். குழாய்நீரை வாயில் கையால அள்ளிவிட்டு கழுவினாள். "துப்பு துப்பு" என்றாள். சமர்த்தாக குனிந்து துப்பும் பயலைப் பார்த்தேன். அவன் மனதில் அந்தச் சொல் ஏறியிருக்குமா?

துடைத்துக் கொண்டிருந்தபோது பயல் "அசகு" என்றான்.

"அவ்வளவுதான். ஈரமணல்லயா விளையாடவிட்டீங்க?"

"பொத்தி பொத்தியெல்லாம் வளர்க்கக்கூடாது"

"ஜலதோஷம் வந்தா தெரியும்"

"உன் வாயை வச்சுகிட்டு சும்மா இரு முதல்லே..."

பயல் கையில் பிஸ்கட்டுடன் தவழ்ந்து வந்தான். என்னைப் பார்த்து சிரித்து. "தூத்தூ மாணாம்" என்றான்.

அவனை அள்ளி கட்டில்மீது அமர வைத்தேன். "அபபா - சொல்லு" என்றேன்.

பயல் 'இருக்கட்டும் நமக்குள் என்ன? என்பது போல சிரித்துவிட்டு பிஸ்கெட்டைத் தின்ன ஆரம்பித்தான்.

அவள் எட்டிப்பார்த்து. "தோப்புக்கரணத்தை எப்ப வச்சுக்கலாம்?" என்றாள்.

அவளைப் புறக்கணித்து, "அப்பா - சொல்லு" என்றேன்.

பயல் "தூத்தூ மாணாம்" என்றான் பிஸ்கெட்டை மென்றபடி.

பிஸ்கெட்டை பிடுங்கிவிட்டு "அப்பா" என்றேன்.

பயல் கைநீட்டியபடி வீரிட்டு கால்களை உதைக்க ஆரம்பித்தான்.

"அப்பான்னு சொல்லு" என்குரல் அதிர்ந்தது.

"என்னங்க இது விளையாட்டுக்கு ஏதோ சொன்னா.."

"அப்பான்னு சொல்லுடா"

"விடுங்க"

"தள்ளிப்போ" என்று கத்தினேன். "சொல்லுடா அப்பா அப்பா..."

பயல் கால்களை உதைத்தபடி வீரிட்டு அழுதான்.

"உங்களுக்கு என்ன பைத்தியமா படிச்சிருக்கு?"

பயலை முரட்டுத்தனமாகக் குலுக்கியபடி "அப்பா! அப்பா!" என்றேன்.

அவள் ஓடிவந்து பயலை அள்ளி அணைத்துக் கொண்டாள். அழுகை வெறியில் அவன் திமிறினான்.

ஒருகணம் பேசாமல அமர்ந்திருந்தேன். எழுந்து சட்டையைப் போட்டுக் கொண்டு வெளியேறினேன்.

பஸாருக்குப் போய் ஒரு டீ சாப்பிட்டேன். நூலகம் சென்று இதழ்களைப் புரட்டினேன். இது என்ன அசட்டுத்தனம் என்று தோன்றியது. மனதின் ஒரு மூலை ஏனோ புகைந்துக் கொண்டிருந்தது.

மாலையில் வீடுதிரும்பியபோது மனம் அடங்கிவிட்டிருந்தது. வீட்டுக்குள் சத்தம் இல்லை. ஹாலில் விளக்கு மட்டும் எரிந்தது. செருப்பைக் கழட்டும் ஒலி கேட்டு உள்ளிருந்து ஓடிவந்தாள். "எங்கே போயிட்டீங்க? எங்கெல்லாம் தேடறது?"

"ஏன் என்ன ஆச்சு?"

"குட்டிக்கு உடம்பு சரியில்லை. ரெண்டு தடவை வாந்தி எடுத்தான் உடம்பு நல்லா கொதிக்குது."

என் மனம் பகீரிட்டது. உள்ளே ஓடிப்போய் பார்த்தேன். கட்டிலில் கண்மூடிப் படுத்திருந்தான். சின்னஞ்சிறு முஷ்டிக்குள் ஒரு தீப்பெட்டி இருந்தது. முகம் கன்றிப் போயிருந்தது. தொட்டுப் பார்த்தேன். சூடாக இருந்தது.

"சிரப் கொடுக்கவேண்டியது தானே?"

"அப்பவே கொடுத்தேன். அதையும் வாந்தி எடுத்துட்டான். ராமசாமி டாக்டர் வேற இன்னிக்கு இருக்க மாட்டார்"

"அந்த எச்சத்தை முழுங்கி வச்சிருப்பானோ?"

"யாராவது ஈர மணல்லே குழந்தையை விளையாட விடுவாங்களா?"

"சரிசரி சொல்லிக் காட்டாதே"

பயலின் உடல் அசைந்தது கண்களைத் திறக்காமலேயே, "ஊங்கரி ம்மா" என்றான் குபுக்கென்று வாந்தி எடுத்தான். செரிக்காத பாலும் பிஸ்கட்டும்.

வெளியேயிருந்து எதிர்விட்டு லட்சுமி ஓடிவந்தாள். "அக்கா ராமசாமி டாக்டர் போறார்"

"கூப்பிடு அவரை. நிக்கச் சொல்லு" என்றபடி வெளியே ஓடினேன்.

கையில் பையுடன் டாக்டரும் மனைவியும் சென்று கொண்டிருந்தனர்.

நான் மூச்சிரைத்தேன். "டாக்டர் ஒரு நிமிஷம் பிளீஸ்" என்றேன்.

"என்ன ஆச்சு? குட்டி பொறுக்கி எதை முழுங்கினான்?" என்றார் டாக்டர். அவர் மனைவி அலுப்பு தெரியும் முகத்துடன் பையை வாங்கிக் கொண்டாள்.

"வாந்தி எடுக்கிறான் டாக்டர்"

"அப்பமென்னா ரொம்ப நல்லது. வேலையே இல்லை."

"காய்ச்சலும் அடிக்குது."

"சிஸ்டம் ரொம்ப ஸ்ட்ராங். ரொம்ப ரொம்ப நல்லது"

தொளதொளப்பான காற்சட்டை அலைபாய டாக்டர் மெதுவாக வந்தார். "உருளைக்கிழங்கு பொடிமாஸா பண்ணீங்க? வாசனை கப்புன்னு இருக்கே? அது யாரது பெண்குட்டி? உசிலம்பட்டி பெண்குட்டி முத்துப்பேச்சி..?"

"அது லட்சுமி"

"யார் ராமகிருஷ்ணன் மகளா?"

"ஆமாம்... வாங்க டாக்டர்"

"என்ன படிக்கிறே?"

"டாக்டர் இந்தப் பக்கமா வாங்க" என்றேன்.

"வந்தாப் போச்சு"

அவள் உள்ளிருந்த வந்தாள். கண்ணீருடன், "மத்தியான்னம்கூட நன்றாக விளையாடினான் டாக்டர்" என்றாள்.

"இப்பகூட விளையாடறான். போக்ரி ராஜா... டுக்ரி ராஜா" என்றபடி படுக்கையை அணுகி பயலைத் தொட்டுப் பார்த்தார். வயிற்றை அழுக்கினார். வாயைத் திறந்து நாக்கைப் பார்த்தார். "பேப்பர் பார்த்திங்களா? உஃபில டெல்பியால ஒரு ஒநாயை மனுஷன் கடிச்சு கொன்னிருக்கான். காலம் மாறிப்போச்சு, கதயும் மாறிப்போச்சு. ஓகோகோ தரன்னானா..." வாயைக் குனிந்து முகர்ந்துவிட்டு "ஒண்ணுமேயில்லை சரியாப் போயிடும்" என்றார்.

"காய்ச்சல் இப்டி அடிக்குதே?"

"பி ஒன் டிவன்டிபைவ், டெட்டடோய்ங்!" என்றபடி டாக்டர் காலண்டர் தாளைப் பிய்த்து எழுதினார். "யப்பாடி" என்று எழுந்தார். "காபி கிபி கிடையாதா? சரி இன்னொருமுறை வரேன்"

அவர் பின்னால் சென்றபடி "பீஸ்?" என்றேன்.

"அடுத்தமுறை எதையாவது பெரிசா முழுங்கறப்ப வாங்கினாப் போச்சு. டிவன்டிஃபைவ் ருபீஸ் ஃபார் எ முழுங்கல். அதான் என்ரேட்"

டாக்டரைப் பார்த்ததும் அவர் மனைவி கொங்கணிமொழியில் திட்ட ஆரம்பித்தாள். டாக்டர் கைக்கடிகாரத்தைக் காட்டி பணிவாக பதில் கூறினார். நான் மாத்திரை வாங்கப் போனேன்.

பாலில் மாத்திரையை கரைத்துப் புகட்டியதும் பயல் முகத்தைச் சுளித்தபடி "தூத்தா மாணாம்" என்றான். "படு படு" என்று மெல்லத் தட்டினாள். அப்படியே விழுந்து தூங்க ஆரம்பித்தான். 'கேட்க ஆசைப்படுகிறேன்' எனும் அரசியல் மேடைப்பாணியில் சுட்டுவிரலை தூக்கியிருந்தான்.

நான் களைப்புடன் கூடை நாற்காலியில் அமர்ந்தேன்.

"டீ போடவா?"

"வேணாம்"

"எங்க போனீங்க?"

"லைப்ரரிக்கு"

"அப்படி என்ன கோபம்?"

"என்னால் பதில்பேச முடியவில்லை."

"தானாக் கனியனும். தடியால அடிக்கக்கூடாது"

"நீ கொஞ்சம் பேசாம இரு"

இரவு மௌனமாகக் கனத்தபடியே வந்தது. இரண்டுமுறை தொட்டுப் பார்த்தேன். காய்ச்சல் இறங்கவில்லை.

"சாப்டறீங்களா?"

"வேணாம்"

"சாப்பிடாம இருந்தா என்ன அர்த்தம்?"

"தொந்தரவு பண்ணாம போறியா இல்லையா?"

"இப்ப நான் என்ன பண்ணேன்னு இப்படிக் கத்தறீங்க?"

"எல்லாம் உன்னாலதான். வாயை நீட்டாதே"

"எழுந்துபோய் கட்டிலில் படுத்துக்கொண்டேன். கடிகாரம் மட்டும் ஒலித்துக் கொண்டிருந்தது.

அவள் விளக்கை அணைத்துவிட்டு வந்தாள். பக்கத்தில் படுத்தாள். வெங்காய வாசனை வந்தது.

"கோபமா?"

நான் தலையைத் திருப்பவில்லை.

"சரி, எல்லாம் என் தப்புதான்"

நான் தளர்ந்தேன். "காய்ச்சல் இறங்கவே இல்லியே?" என்றேன்.

"சரியாப்போயிடும்னு டாக்டர் சொன்னாரே?"

"நான் ரொம்ப முரட்டுத்தனமா குழந்தையைப் போட்டு உலுக்கிட்டேன் இல்லை?"

"அதெல்லாமில்லை?"

"எங்கப்பாவுக்கும் எனக்கும் சின்ன வயசிலேருந்து கொஞ்சம்கூட ராசியில்லை. அம்மாவுக்குத்தான் நான செல்லப்பிள்ளை. சின்னக்குழந்தையா இருக்கிறப்பவே அப்பா செத்துப்போகனும்னு வேண்டிக்குவேன்"

அவள் தன் கைகளை என்மீது போட்டாள். "நம்ம குழந்தை அப்படில்லாம் ஆகாது. அவனுக்கு நீங்கன்னா உயிரு"

"நிஜம்மாவா?"

"உங்களுக்குத் தெரியாது. உங்களைப் பார்த்தா அவன் துடிக்கிற துடிப்பு இருக்கே... சோடாக்காரர் வீட்டு மாமிகூட கேட்டாங்க, என்ன அப்பாவும் பிள்ளையும் அப்படி ஒரேயடியா இழையராங்கன்னு..."

நான் பெருமூச்சு விட்டேன்.

"குழந்தைகிட்டே எல்லாரும் அம்மா வைப்பத்தித்தான் பேசறாங்க. அதான் முதல்லேயே வாயில வந்துடுது."

"இல்லை அம்மாதான் தொடக்கம். ஆண்டவனோட விதி அது. மனுஷங்க அதை மாத்த ஆசைப்படக்கூடாது. அவன் பேசறப்ப பேசட்டும். அது செடியில பூ மலர்ர மாதிரி..."

"எதுக்கு இப்ப உங்க அப்பா ஞாபகம்?"

"ஒண்ணுமில்லை; நான் அவர் இருக்கிற வரைக்கும் ஒரு வார்த்தைகூட அன்பா பேசினதில்லை..."

"அவர்கூடத்தான் பேசினதில்லை"

"இருந்தாலும் நான் அவரோட ரத்தம்தானா?"

"அது ஏன் அவருக்குத் தெரியலை?"

"அதுதான் எனக்குப் புரியலை. எப்படி அந்த அளவுக்கு ஒரு வெறுப்பு வந்தது? அப்பனா ரத்த உறவுன்னு ஏதும் இல்லையா?"

"சரி விடுங்க. இப்ப அதைப்பத்தி பேசி என்ன பிரயோஜனம்?"

"நான் அதை யோசிக்காத நாள் இல்லை. அவர் இறந்தபோதுகூட நான் அழலை. அந்த வெறுப்பு எங்கேயிருந்து வந்தது?"

"தூங்குங்க பேசாம"

"தூக்கம் வரலை"

"பசிக்குதா? சாப்டறீங்களா?"

"சரி"

எழுந்து விளக்கைப் போட்டேன். இருவரும் சமையலறைக்குப்போய் சாப்பிட்டோம்.

"நீ படுத்துக்க. நாளைக்கு ஆபீஸ் இருக்குல்ல?"

"நீங்களும் விடுங்க. வீணா உடம்பை அலட்டிக்க வேணாம்"

"கொஞ்சநேரம ஏதாவது படிக்கிறேன. மனம் அடங்கும். நீ தூங்கு."

விளக்கை அணைத்துவிட்டு மேஜை விளக்கைப் போட்டேன். படுத்ததும் அவள் தூங்க ஆரம்பித்துவிட்டாள். கடிகாரமும் நானும் மட்டும் விழித்திருந்தோம். என் நிழல் எதிர்ச்சுவரில் அசையாமல் அமர்ந்திருந்தது. பயலைத் தொட்டுப் பார்த்தேன். சூடு தணியவில்லை.

கையில் அகப்பட்ட புத்தகத்தை எடுத்தேன். முறைப்பெண், அசோகமித்திரன் கதைகள். சற்று மனம் இலகுவாயிற்று. 'லான்சர் பாரக்' கதையொன்றை படிக்க ஆரம்பித்தேன். பிரகாசமான அந்த உலகம் என் பதற்றங்களை எப்போதும் தணிய வைத்துவிடும். அசோகமித்திரனுக்குத்தான் அவர் அப்பாவிடம் எத்தனை அருமையான உறவு இருந்திருக்கிறது!

தூக்கம் வந்தது. எழுந்து சோம்பல் முறித்தேன். லுங்கியை சரிவர உடுத்தியபிறகு குழந்தையைப் பார்த்தேன். ஒட்டப் பந்தயப் போஸில் படுத்திருந்தான். தொட்டுப் பார்த்தேன். குளிர்ந்திருந்தது. நெற்றி ஈரமாக இருந்தது. ஜட்டியின் இறுக்கம் வயிற்றை அழுத்தும் என்று பட்டது. மல்லாக்கப் போட்டு அதை கழட்டினேன். தற்செயலாக அவன் உதடுகளைக் கவனித்தேன். பிரக்ஞை ஒரு கணம் நின்றது. பின்பு ஓடியது.

ஓசையின்றி பயல் 'அப்பா' என்று சொன்னான். அவன் உதடுகளையே பார்த்தேன்.

பிரமையா? இல்லை நான் பார்த்தது உண்மைதான. அந்தச் சின்னஞ்சிறு குமிழ் உதடுகளையே பார்த்தபடி அமர்ந்திருந்தேன். எவ்வளவு நேரம் சொற்களேயின்றி என் மனம் மன்றாடியபடி இருந்தது. வெண்ணிறச் சுவர்கள் அப்படியே கவனித்தப்படி என்னைச் சூழ்ந்திருந்தன.

பயல் ஒருக்களித்தான். முனகினான். எச்சிலின் மிச்சம் எழுந்தது. புன்னகை புரிந்தான் உதடுகள் விரிய "அப்பா" என்று சொன்னான் சுவர்கள் நெளிந்து விலகி, அறை மொட்டைமாடிபோல நாற்புறமும் வானமாகத் திறந்துகொண்டது போலிருந்தது.

முழந்தாளிட்டு, கட்டில் விளிம்பில் முகம் வைத்து அமர்ந்தேன். என கண்களிலிருந்து மௌனமாகக் கண்ணீர் உதிர்ந்தது. "அப்பா அப்பா" என்று சொல்லிக் கொண்டேன்.

நல்வாழ்த்துகள்

**தேவன் ரெடிமேட்ஸ், தேவன் மஹால்,** 351, மெயின் ரோடு, இராமநாதபுரம்

**தீபம் டிரஸ்லாண்ட்,** 7, மெயின் ரோடு, இராமநாதபுரம்

**தீபம் ரெடிமேட்ஸ்,** பரமக்குடி

**விவேக் ஏஜென்ஸி,** மதுரை

**பாரதி எண்டர்பிரைஸ்,** தூத்துக்குடி

சென்னை - 2

55. கே. முருகேசன்



56. விக்டர்



*நல்வாழ்த்துகள்*

**டாக்டர் எம். மீனாட்சிசுந்தரம்,** *எம்.எஸ்.எப்.ஐ.சி.எஸ்*

*சிறப்பு அறுவை சிகிச்சை நிபுணர் மற்றும் லேப்ராஸ் கோபிக் சர்ஜன்*

**சத்யா கிளினிக்** மற்றும் **பாலாஜி லேப்ராஸ்கோபிக்**

*சர்ஜரி செண்டர், 106, அக்ரஹாரம் சாலை, இராமநாதபுரம். போன் : 20287, 20627*

*நல்வாழ்த்துகள்*
**மன்னர் மேல்நிலைப் பள்ளி (1856) அலீஸ் மில்லர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி**
**அலீஸ் மில்லர் பெண்கள் தொடக்கப் பள்ளி (1894) மன்னர் நடுநிலைப் பள்ளி**
**கார்த்திகேயராஜா மழலையர் பள்ளி**
**மன்னர் கல்வி நிறுவனங்கள்** சிவகங்கை

57. தியோவேன் ரைசல்பர்க்





முதலில் இரண்டு கைகளையும் இடுப்பில் கொடுத்து தலையை மட்டும் இடதும் வலதுமாக திரும்பி ஒன்டு, ஒன்டு... கழுத்து சுருக்கிக் கொள்ளா வண்ணம் லாவகமாக, தாள லயத்ததுடன் பொருந்துவதாக; முகபாவனை குறுஞ்சிரிப்புடன்.. மொட்டு மலர்வதாக; ஆட்ட சுதாரிப்பில் உதடுகள் குவிந்து விடவோ பிளந்துவிடவோ கூடாது. மழலைக் குழந்தை, தாளக் கணக்குகளை மட்டும் மனதில் கொண்டு கைகால்களை அசைத்தபோது நடன ஆசிரியை பாட்டு, பாவத்துடன் பொருந்துமாறு திருத்திக்கொண்டிருக்கிறாள்.

அவள் அசைவற்ற இவற்றைக் கவனிக்கும்போது தன்னுள் மெல்லிய சலனம்பரவி விரல் நுனி தரையில் சத்தமிடாது தொடர்ந்து மோதுவதையும், இதயத்துடிப்பு பரிமளத்துடன் இசைப்பதையும், மென்னகை கண்களில் பரவுவதையும்.....

குழந்தைகளின் அசைவுகள், வாத்தியக் கருவிகளின் மீது காற்று மோதும் முன்னேற்பாடில்லாத அதிர்வுகளாக ரூபஸ் கொண்டிருந்த போது முதியோர்இல்லத்தில் முதியவர்கள் மேல்நாட்டு உடை தரித்து, முகத்தில் ரோஜாச் சாந்தைக் குழைத்து, பீறிடும் சிவப்பு வண்ணத்தில் உதடுகளைப் பாடலுக்காக முணுமுணுத்து, கையில் ஒரு மலர் மலர்வதுபோல பாவனை செய்கையில் வயலினில் ரம்பம் அழுத்தமாக இழைந்தது. அந்த பாவனையில் மலர்களை அவர்கள் வலிமையுடன் பறித்தெடுப்பதான தோற்றத்தில் உணர்வுக்கும் செயலுக்குமாக இடைவெளி விரிந்தது.

தனது அம்மாவையும் ஆடவைக்கவேண்டும் என்ற நாடகம் சங்கோஜத்துடன் நெளிந்தது.

ஏ...................ஒத்தப்பூ பறிக்கையிலே ஏலேலோ

ஏ....................கொண்டையிலே வச்சேனிலே ஏலேலோ

ஏ....................மாமன் வந்து பார்க்கையிலே ஏலேலோ

அம்மா ஏலேலோ கும்மிகளில் ராகம் போட்டுப் பாடி முன்னணியில் முனைப்புடன் ஆடியவளாகத்தான் தெரிகிறாள். காலும் கையும் துறுதுறுவென, மாவிளக்கை எடுத்து ஏரிக்கரையில் வைத்துவிட்டு, கூட்டத்துடன், பிறரின் கைகளைப் பிரித்து, இடைக் கன்னியாகத் தன்னைச் சேர்த்துக் கொண்டு, குனிந்து நிமிர்ந்து, கால்களைக் கோணலான குறிப்பிட்ட கோணத்தில் பதித்து, பின்னர் சுழன்று வலதை இடதாக மாற்றி ஆடி, ஆவாடை பூவாடையைக் கொண்டாடியவள் தான். அம்மா வாழ்ந்த காலம் வேறு.

ஓவியம் : சந்ரு

# ஆட்டம்

> அவள் நெற்பயிர்களைப்
> பசிய அலைகளைக்
> காற்று கிளர்த்தும்போது
> அந்தப் பயிர்களுக்கு
> மேலாக கால் பதிக்காது
> சுழன்று சுழன்று
> ஆடினாள்.

களைவெட்டுக் காட்டில், தலையில் வெயிலுக்காக போட்ட முக்காட்டில் கசிந்து வேர்வை ஒரு புறம் ஒழுக, கண்ணீரைப் பெருக்கி ராகமாய் ஒப்பாரி வைத்தாள். ''அம்மா தயவு செஞ்சி ஒப்பாரி மட்டும் வக்காத'' என்று இழுத்துக் கொண்டு வந்த மகன் மூக்கில் விரல் வைக்கும் படியாக கண்ணீரின்றி, கணீரென்ற குரலில் இறந்தவருக்கும் தனக்குமான உறவைச் சொல்லி அழுதபோது கூடிய கூட்டம் கலங்கியது. திடீரென்று ஏன் நிறுத்திவிட்டாள் என்றும் சிலர் கேட்டார்கள். அம்மாவின் மகளோ, குரலின்றி, உடம்பின்றி, மூளை நரம்புகள் மட்டும் ஜிவுஜிவுக்க, தனக்குள்ளே புதைந்து போய்க் கொண்டிருந்தாள்.

அவளுக்குப் பள்ளியிலும், கல்லூரியிலும் ஆண் வேடமே கொடுத்தார்கள். ஒட்டுத்தாடியுடன் 'உள்ளம் என்பது ஆமை' என்ற பாட்டுக்கு ஆடாமல் அழச்சொன்னார்கள். குரூப் நடனங்களில் பின் வரிசையில் கூட லாயக்கற்றவள் என ஒதுக்கித்தள்ளப்பட்டாள். ஒரு முறை துணிவாகப் பாட முயற்சி செய்தபோது 'மூக்கால் பாடுகிறாய்' 'நிறுத்து' என்று சொல்லிவிட்டார் சதா கரும்பலகையும் சாக்பீஸுமாக இருந்த நெட்டை வாத்தியார். ''உன்னைவிட பானு நல்லா பாடுது, கொஞ்சம் நிறுத்து, பானு பாடுவதைக் கேட்போம்'' என்று விட்டார்கள். வளர்ந்த குழந்தைகள் ''அம்மா ப்ளீஸ்மா'' என்று தடுக்கிறார்கள். அவளுக்கு குரல் அந்நியமாகிவிட்டது. அசைவற்ற கைகால்கள் எப்போதாவது முயற்சி செய்யும்போது அவளது உரத்த சிரிப்பே அவள் காதை அடைக்கிறது.

அவள் நெற்பயிர்களைப் பசிய அலைகளைக்காற்று கிளர்த்தும்போது அந்தப் பயிர்களுக்கு மேலாக கால் பதிக்காது சுழன்று சுழன்று ஆடினாள். அவள் இன்னும் பார்த்திராத ரஷ்ய மசூர்க்கா நடனம் என்று வகைப் படுத்தினார்கள் அதை. அவள் அப்போது காற்றின் சுழற்சியில் குறிப்பிட்ட உருவமற்ற, பிசிறுகளுடன் கூடியதான வந்தது போல தோற்றமளித்தாள். தூரத்திலிருக்கும் தென்னை மரத்தில் ஆழப்பாய்ந் திருக்கும் நீர் நிறைந்த தண்ணீர்ப் பிரதேசத்தில் மோதி, காயம், சலசலப் படையவேண்டிய பயம் ஏதுமின்றி ஆடினாள். ஊதைக்காற்று வெற்றிடங் களில், திடக்காரணிகளில் பாய்ந்து வேண்டுமான இசையைத் தகுந்தவாறு வழங்கி ஆடச் செய்தது. தலைமயிர் கன்னக்கதுப்புகளில் மோதி அவ்வப் போது அரிப்புண்டாக்கியது தவிர; சிறப்பாக ஆடினாள்.

பிறிதொரு முறை, துரிதமற்ற மெல்லிசையில் இழைந்து இழைந்து, தன் கைவிரல்கள் விருப்பமுற வளைந்து முகம் மீது சார்ந்து நளினமாய் ஒய்வெடுக்க கருத்து உயர்ந்து வானத்து நட்சத்திரங்களை எக்கமுடன் பார்க்க, ஒருகால் இன்னொரு காலின் மீது தொட்டு நிற்க ........... இந்நடனத்துக்கு பனிச்சறுக்கு நடனமெனப் பெயரிட்டாள். அந்தப் பாவனை நாளைக்குக் கேற்றவாறு கலைந்து இன்னொரு எக்ஸோடிக் பாவனைக்கு மிகந்து செல்லும் தள்ளாட்டம் எதுவுமின்றி.

வெட்டி வெட்டியிழுக்க, உதறி உதறி வலிக்க, சொடுக்கி சொடுக்கி, துவண்டு துவண்டு, ஓடாசிப் போனது வயிறு. மெதுவாகிப் போன முதுத்தண்டு ரசம் சகல அங்கங்களிலும் பாய்ந்து இளக்கி, வளைந்து வளைந்து, கால் தலையாகவும், அதைக் கைகள் கொய்து பந்து போல் கால்களுக் கூடாகக் கொடுத்துத் தூக்கிப் போட்டுப் பழக்க, உதறிகள் தெரிந்து விண்ணில் பறக்க, அதை விரல்நுனி ஏந்தி துப்பாக்கி ரவை போல் சுழன்று. அய்யோடி! அந்தப் பெண்ணுக்குக்கால் ஆடுவதுபோல் எத்தனைக் கனவுகள். பாச்சலூர்ப் பெண்கள் கோவிலில் கும்மியடிக்கும்போது அவளை அழைக் கார்கள். வஸ்திரங்களின் சுமையைக் தாங்க முடியாது. நழுவும் சேலையை பற்றிப்பிடித்து, சுகி சேர்த்து ஒருகட்டு வைப்பதற்குள் கோமாளியாகிச் சென

சிவகாமி

ஒளிர்ந்ததும் கூசிப்போய் அட்டையாகத் தன்னை முடக்கிக்கொண்டாள்.

கண்ணாடி முன் கைகளையும் கால்களையும் அசைத்தபோது ஒரு அசைவிலிருந்து மற்றொரு அசைவிற்குத் தாவிச் செல்ல முடியாத, பாடலைத் தப்பவிட்டு, சோர்ந்து போய் தன்னையே முறைத்து ஆராய்ந்த வண்ணம் நின்றிருந்தாள். முறையாக நடனம் பயின்றால் நல்லதோ? ஆனால் சபாக்காரர்களைத் தேடி ஓடிக்கொண்டிருப்பது ஒருபுறம், பயிற்சியும் திறமையும் பலர்கூடியிருக்கும் சபையில் அரங்கேறி வித்தையாக வேண்டுமோ, அது தன்னை எவ்விதம் குஷிப்படுத்தும், முறைத்தவாறே தன்னைக் குடைந்தாள்.

சுலபமாகக் கைநீட்டி, தோள்குலுக்கி, ஓடி, குதித்து........முன்னொரு பிறவியில் அவள் அப்படியிருந்தாள்.

அர்ச்சனா தன் கல்யாணப் புடவையை ஓசி கொடுத்தாள். எல்லாம் கூட்டத்தில் கரைந்து போவதற்கான வேஷம், பட்டுப்புடவைக் கூட்டம். அவசரமாகக் கூப்பிட்டபோது ஓடினாள். ''புடவையைக் கட்டிக் கொண்டு யாரேனும் ஓடுவார்களா?'' அர்ச்சனாதான் சொன்னது.

ஆரஞ்சு விளையும் வெப்பப் பிரதேசத்தில் அவரும் நிஷியும் காலையிலேயே பயிற்சி வகுப்புக்குக் கிளம்பி விடுவார்கள். நிஷி மந்தகமதி. எல்லோரைப் பற்றியும் நல்லக் கருத்துக் களையே கொண்டிருந்தாள். 'ஹெஹ்ஹெ' என்றுதான் சிரிப்பு. ஆனால் அவள், எதிராளி பேசத்துவங்கு முன் தன் மின் அலையை முதலில் பரப்பி அவர்களின் நரம்புகளின் ஊடாகப் பாய்ந்து சிறுசிறு அசைவுகளையும் பதிவு செய்து அதைப் பின் சோதனையிடுவாள். குறைசொல்வதற்கு ஏராளமான விஷயங்கள் இருந்தன அவளுக்கு. எப்போதும், இருவரும் பேசிக் கொண்டே நடப்பார்கள். அர்ச்சனா ரிக்ஷா சவாரி செய்தாள். ஆனால் மாலையில் இரண்டு குதிரை வால்களுடன், பூப்பந்து மட்டையைப் பிடித்துக் கொண்டு இறங்கிவிடுவாள் களத்தில்.

''நீ கூட எங்களுடன் நடக்கலாமே?''

''வெய்யிலில் சிரமப்படுவானேன். மாலையில் விளையாடி எனர்ஜியை செலவழித்தால் போயிற்று''

அவளுக்கு அர்ச்சனா பந்தயக்குதிரை என்று பெயர் வைத்தாள். அடிக்கடி நடைபழகவும், ஓடிக்கொண்டுமிருந்தால் முரட்டுப் பெண்குதிரை. அப்புறம் பெண்மை?

போட்டி வேண்டாம். அழகுற ஆட வேண்டும்.

நண்பன் தன் காலை மிதித்துவிடக்கூடாது. தானும் அவனுடையதை. தாளகதியென்பது ஒருவருக்கொருவர் துன்பம் விளைவிக்காத நடைமுறை . அடிக்கடி அவர்கள் இணைந்து முத்தமிட்டுக் கொண்டிருந்தார்கள்.

> ''நமக்குச் சொந்தமானதெல்லாம். அவமானகரமாகி, இறக்குமதிகளின் பின்னால் சென்று நிழலைக் காப்பியடிப்பதில் வியர்த்து பெருமை கொள்வது. மேல்மட்ட வேலையற்றவர்களின் நளின வெளிப்பாடுகள், முழுநேர வேலைகள்.''

என்ன இது என்ற பூச்சி அவனை மெல்ல அரித்துக்கொண்டிருந்தது. அவளையும் தொத்திக் கொண்டது. இருவரும் ஆட்டத்தை நிறுத்தி சிரித்துக் கொண்டார்கள். சிறு பிள்ளைத்தனமான விளையாட்டாக;

பாம்பு மெல்ல மெல்ல படம் விரித்து ஆடியபோது, ரகசியக் கதுப்புகளின் மெல்லசைவில் கிளர்ச்சியுற்று பெண் பாம்பு மெல்ல தன் ஆட்டத்தைத் துவங்கியது. பதுங்கி, மேல் விழுந்த கனத்தின் சுமையில் அழுந்தி, நினைவையெல்லாம் லயத்தின் மேல் நிறுத்துவதற்கு பதிலாக, பெண்பாம்பு தன் துடிப்பைத்தான் லயமாக மாற்றி எம்பி ஈடுகொடுத்தபோது ஆண்பாம்பு ஆட்டத்தை வாபஸ் வாங்கிக் கொண்டது. விஷம் தன் உடம்பில் பரவுவதை கவனித்தவாறு பெண்பாம்பு ஒடுங்கியது.

இரவு பேய்களின் ஆட்டம் துவங்கியது. பெரும்பாலும் பேய்கள் பெண்கள். பெண்கள் பேய்கள். தலைவிரி கோலமான, அழுத்தம் பெற்ற நரம்புகள் வெடித்துச் சிதறும் பேயாட்டங்கள். சாமியாட்டங்களும்! வேப்பிலைக் கொண்டு அடிக்க வேண்டும். அதிர்வுற்ற நரம்புகளை இழுத்துக் கட்டுமாறு ரத்த விளாறாக்க வேண்டும். பற்கள் நெறுநெறுக்க, ஏய் பொன்னுசாமி! கதறிக் கொண்டு விழுந்தாள். சாமியாடி குல தெய்வம் பெண் பக்தியால் பூரித்துப்போக......

திருமணப் பந்தலின் கீழ் சிறுவர்களின் குதியாட்டம் ''டேய் பார்ரா, என்னமா ஆடறான்'' சினிமா நடிகனின் பெயரைச் சொல்லி அவனைப் போல என்ற வகைப் படுத்தல்.

''இவ நல்லா ஆடுவா, இவள ஆடச் சொல்லுங்க'', ஆடவிருப்பங் கொண்ட பெண் இன்னொருத்தியை நோக்கி கைநீட்டினாள்.

''நா இல்ல, இந்தப் புள்ளதான் ஆடும்'' இன்னொரு சிறுமியும் பிகு செய்தாள்.

''ஏய், ரெண்டு பேரும் ஆடுங்க''

''ரோமியோ ஆட்டம் போட்டா. சுத்தும் பூமி சுத்தாதே அந்தப் பாட்டுக்குத்தான் ஆடத்தெரியும். அந்தப் பாட்டப் போடுறீங்களா''!

ரெக்கார்ட் செட்காரன் உற்சாகமுற்று இசைத்தட்டை மாற்ற, ரெண்டு குட்டிகளும் நெளித்துக் கொண்டு களத்தில் இறங்கி இடத்தை தவதாக்கி அசத்தினார்கள்.

அவளுக்குள் வருத்தம் பாய்ந்தது. ஏனிந்த சினிமாக்கள். கின்னரங்களின் ஒலிக்கொப்ப சகதிஜன்களை இணைத்து ஆடும் ஆதிவாசி நடனங்களைத் தொலைத்துவிட்டோமென்று; ரம்மியமானதைப் போக்கிவிட்டு புதிதாக நடனமேடைகளை பயிற்சி பெற்றவர் மட்டும் ஆடுவதற்கான அரங்குகளைத் தயார்

செய்து..... ''நமக்குச் சொந்தமானதெல்லாம். அவமானகரமாகி, இறக்குமதிகளின் பின்னால் சென்று நிழலைக் காப்பியடிப்பதில் வியர்த்து பெருமை கொள்வது......... மேல்மட்ட வேலையற்றவர்களின் நளின வெளிப்பாடுகள்,.......... முழுநேர வேலைகள்.''

''அத்தை, நீங்களும் மாமாவும் ஆடுங்க''

அவளது கணவன் தயாராகிக்கொண்டு அவளைக் கைப்பிடித்திழுத்தான். அவன் சுழன்று சுழன்று குதித்தபோது அவள் கைகால்களை அசைக்காமல் காலை மட்டும் நொடித்து இயக்கமுற்றாள். சிரிப்பில் அவளின் அக்காவுக்குக் கண்ணீர் வந்தது. ''இந்தக் கூத்தப் பாத்தியா, சீ கருமம்'' சொல்லிக் கொண்டே கூட்டம் சிரித்துப் புண்ணாகியது. அவள் அவன் முதுகைத் தட்டி ''சீ நிறுத்துங்க, எல்லாம் சிரிக்கிறாங்க'' எனவும் அவனும் நிறுத்தாது கொழுந்தியாள்களிடம் போய் ஆடவும்,..... ''எட்டிபிய பாத்தியாடி, உங்க வீட்டுக்காரரை''ன்னு சொல்லிச் சிரிக்கவும் இரண்டு கொழுந்தியாமார்கள் ஓடிப்போய் ஒளிந்து கொள்ளவும்.........ரகளையாகிப் போனது ஆட்டம்.

அவள் கனவுகளில் ஆடிக்கொண்டிருந்தாள். தன்னைத்தானே சுற்றும் சுழற்சி, கைகள் இரண்டும் காற்றை விசிறி அளைந்து, கால்கள் பூமியை உதைத்து எம்பி விண்ணில் பறந்து, கிரகங்களுக்குள் பாய்ந்து மோதி விழுந்து பின் எழுந்து நிறுத்தாது ஆடி.......

ஊ......ஊ........ ஊளையைத் தொடர்ந்து விழாக் கூட்டத்தினர் மினி ஸ்கர்ட் பறக்க, வலிப்பின் இழுபறியாக கைகால்கள் வெட்டிக் கொள்ள, துண்டு துண்டாக ஆடியதை ஒட்ட வைத்த திரைப்பட நடனம் திரையில் ஓடிக்கொண்டிருந்த போது, சுடிதார் அணிந்த பெண்கள் முதலில் விசிலடித்தார்கள். எழுந்து நின்று திரையரங்கில் ஆடத்துவங் கினார்கள், பின்.

''அய்யய்யோ''...... பதறி னாள் அவள்.

இதுவெல்லாம் நம்மை யெங்கு அழைத்துச் செல்லுமோ வென பாட்டிப்புலம்பல். வெளிக் கிளம்புமுன்னே, அவர்கள் தங்கள் கைகால்கள் மேல் சுதந்திரம் கொண்டிருக்கிறார்கள் என்ற விவேகம் வெளிப்பட, எனினும் இவர்கள் நுகர்வுக் கலாச்சார அடிமைகள் என்ற ஞானவெளி வியாபித்து, தன் கைகால்களைக் கட்டிப்போட்டவர்களை சபித்து........ நான் பார்வையாளர் மட்டுமேவா .......... கேட்டு .......... செயலற்ற பார்வையாளர் என்ற அடைமொழியுடன் வெளிவந்தபோது கைகால்கள் பெயர்ந்து தனித்தனியான நடனத்தை அவள் முன்னால் நிகழ்த்தி வேடிக்கைக் காட்டி ஒருவித அயர்ச்சியுடன் உடம்பில் பொருந்திக் கொண்டன.

அவள் கனவில் தன் ஆட்டத்தை முழு உன்னதத்துடன், பூரண உணர்வுடன் நிகழ்த்த வேண்டும் என்று கூறிக்கொண்ட கனம், தன் உடம்பின்மேல் சுதந்திரம் வந்ததாக....

□□

கலைப்படைப்பு என்பது மனிதன் தன்னைத்தான் நன்கு புரிந்து கொள்வதற்கு வேண்டிய, புறநிலைப் பொருளாக அமைந்துள்ள 'படைப்பு' ஆகும். அது மனிதனைப்பற்றியது. அதேவேளையில் மனிதன் தனக்குப் புறம்பே வைத்து நோக்கத்தக்க ஒரு பிண்டப் பொருளாக அமைவது, மனிதனிடத்திலிருந்து 'படைக்க'ப் படுவது (ஆக்கம் மாத்திரம் படைப்பு ஆகாது. 'படைப்பு-' எனும் பொழுது ஆக்கமும் அளிப்பும் இணைகின்றன) எனவே கலைப்படைப்பு என்பது மனிதனூடாக வந்து மனித நிலையைக் காட்டுவது.

– பேரா. சிவத்தம்பி.

ஒன்று எனக்குத் தோன்றுகிறது. அதுவும் ஒரு பிடில் வித்வான் தன் பிள்ளைக்குச் சொன்ன சில வார்த்தைகள். சபையில் சரிகை குல்லாய் அங்கவஸ்திரத்தை முதல் வரிசை யில் பார்த்து அவர்கள் தலையாட்டத்தை நம்பி மோசம் போகாதே. நாம் என்னவோ ரொம்ப நன்றாக வாசிக்கிறோம் என்று சௌக்யமாக அவர்களைப் பார்த்து நாம் சிரிக்க வேண்டியதுதான். சுற்றிப் பார்த்தால் சபையிலே ஒருவனாவது இல்லாமல் போக மாட்டான், அவன் மெய்மறந்து ரசிப்பதை நன்றாகப் புரிந்து கொள்ளலாம் அவனுக் காக, அவன் ரசிப்புக்காக வாசிக்கறதுதான் உன்னுடைய உயர்ந்த வாசிப்பாக இருக்க முடியும். அவர் சொன்ன மாதிரிதான் அவ்வளவு ஆசிரியர்களும் எழுதினார்கள் என்று கொள்ளலாம்.

– மௌனி

நல்வாழ்த்துகள்

**திரு மோகன்பியாரே,** இ.ஆ.ப., தலைவர்

**டாக்டர் அ. சுப்பிரமணியம்** நிர்வாக இயக்குநர்.

**தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்**

கனகமுட்லு, தபால் பெட்டி எண் : 13 சேலம் மெயின் ரோடு, கிருட்டிணகிரி



58. வின்சென்ட் வேன்கோ



59. ஹென்கி மான்குவின்

நல்வாழ்த்துகள்

**சாரதா பேக்கேஜஸ்**
*112/30*, ஆறாவது வீதி,
ஸ்ரீராம் நகர்,
மதுரை - *625 016.*

**விக்னேஷ்வர் எண்டர்பிரைசஸ்,**
எண் : 14, இரண்டாவது கிராஸ்,
துரைசாமி நகர்,
மதுரை - 625 016.



60. பிகாசோ

நல்வாழ்த்துகள்

**IRCDS**

*78-ஈ, மதுரை ரோடு, ஆர்.சி. சர்ச் எதிரில், சிவகங்கை - 630 561,*

*பசும்பொன் மாவட்டம். போன் : (04575) 2605*



61. பிகாசோ

*நல்வாழ்த்துகள்*

**ரவி பாலா திரையரங்கம்**

**ரவி பாலா எக்ஸ்போர்ட்ஸ்**

*சிவகங்கை*

*Best Compliments*

SAKTHI SUGARS LIMITED

*COIMBATORE*

# ‘சூரியக் குழந்தைகள்’

இந்த உலகின் ஏதோ ஓர் மூலையில்
இருந்த அந்த அமைதியான தனிமைப்
பிரதேசத்தில், அமைதியைக் கிழித்துக்
கொண்டு, அப்போதுதான் பிறக்கின்ற
குழந்தை ஒன்றின் அழுகுரல் சத்தம்
கேட்டது.

பிறந்தது ஆண் என்றார்கள்!
பிரசவம் பார்த்தவர்களின்
கவனிப்புகள்!
பெற்றவளின் ஓய்ந்து போன
முனகல்கள்!
சுற்றத்தாரின் சந்தோஷ
உரையாடல்கள்!
அப்பாவைப் போல ஜாடை.
அந்தக் குழந்தை என்னவாக
வரப்போகிறது?
இப்போது அது என்ன? .........!
என்னவாக இருக்கட்டும்!
அது ஓர் குழந்தை, ஒருமாதத்தில்,

முகம் பார்த்துச் சிரித்தது!
நாலைந்து மாதத்தில் தவழ்ந்தது!
ஆறாவது மாதத்தில் பல்
முளைத்தது!
ஏழாவது மாதத்தில் எழுந்து நடக்க
முயற்சித்தது! ஒரு வருடத்தில் படு
சுட்டிக்குழந்தை எனப்
பேரெடுத்துவிட்டது!
பெயர் வைக்கப்பட்டது!
பெயர் சொல்லி அழைத்தால்
சிரிக்கிறது! அப்பா, அம்மா,
தாத்தாவென மழலை உதிர்க்கிறது!
வருடங்கள் சென்றன. குழந்தையைப்
பள்ளிக்கு அனுப்பினார்கள்.
பள்ளியில் புதிய அறிமுகங்கள்...
ஆசிரியர்கள்
நண்பர்கள்
அ...... ஆ..... A. B. C.... ... ...
பாடல்கள். பாடங்கள்,
எல்லாவற்றிலும் உற்சாகம், கற்பதில்
கவனம். வெளி உலகைப் புரிந்து
கொள்வதிலும் ஆர்வம்! வகுப்புகள்
மாறி மாறி - ப்பாஸ் ஆகியது.
பக்கத்து வீடுகளில் நடந்த மரணம்

பிறப்பு இறப்பைப் பற்றி யோசிக்க வைத்தது.
மாலை நேரங்களின் இனிமையில் தனியாக இருக்க விரும்பியது.
கற்றவைகளின் விஷயங்களை அசைபோட்டு அசைபோட்டு கவிதை எழுதும்
(ஆர்வம் - திறன்) தன்னாலேயே வந்தது. அந்தக்குழந்தையின் எந்தக்
கற்பனையும் கவிதையாகவே வந்தது-
இருப்பினும் எந்த ஒரு நிகழ்விலும் அது குழந்தையாகவே இருந்து வருவதை
உணர்ந்தது.

தவழ்ந்து தவழ்ந்து நகர்ந்து சென்ற நேரத்தில்
எழுந்து நடக்க - நடை வண்டியைப் பெற்றோர் குழந்தைகள் வாங்கி வந்த
நேரத்தில் அது கண்டு அது சிரித்த சிரிப்புக்கும்
இப்போது இதன் கவிதையைப் பாராட்டும் - இதன் குழந்தை நண்பர்களின்
பாராட்டு மொழிகளைக் கேட்டு அது சிரிக்கின்ற சிரிப்புக்கும்
அதனிடம் எந்த வித்தியாசத்தையும்
அது உணரவே இல்லை!

இசைஞானி
இளையராஜா



ஓவியம் : ஏ.சி. ராஜசேகரன்

அதேபோல் - ஒவ்வொரு
பள்ளித் தேர்விலும்
வெற்றிபெறும் போதும்
விளையாட்டுப் போட்டிகளில்
முன்னில் வரும்போதும்
கவிதைபாடும் கவியரங்கங்கள்
அதிர்ந்து போகும் போதும்
குழந்தைத்தனமாகவே அதை
ஏற்றுக் கொண்டது.

அந்தக் குழந்தை
முதல் முதலாக
நடைவண்டியின் உதவி இல்லாது
நான்கு எட்டு வைத்தபோது
அதற்காக கைதட்டிக் கூச்சல்
போட்டு ஆரவாரம் செய்த அதன்
பெற்றோர் சுற்றத்தார்களின்
பாராட்டுதல்களைப்
பெற்று - கைதட்டி அவர்களின்
மகிழ்ச்சியைப்
பிரதிபலிப்பதைப் போலத்தான்
இதையும் எடுத்துக் கொண்டது.

ஒரு விதத்தில் அந்தக் குழந்தை
பைத்தியக்காரனைப் போல்
இவர்கள் ஏன் நடந்து
கொள்கிறார்கள்! என
அதிசயித்தது!
என்னிடம் என்ன விசேஷத்தை
இவர்கள் காண்கிறார்கள்
என்று கேள்விக்குறிகளை எழுப்பி -
பதில் தெரியாது தவித்தது.
ஒரு குருவி குருவியாகவும்
அருவி அருவியாகவும்
இருப்பதில் என்ன விசேஷத்தை
இவர்கள் உணர்கிறார்கள்?
ஒரு குழந்தை குழந்தைத்தனமாக
இருப்பதில் இவர்களுக்கென்ன
ஆச்சர்யம்?

இதன் கவிதைகள் ஒரு காதலியைக்
கொண்டு வந்தது!
அதுவும் என்னைப் போல
குழந்தைதானே? குழந்தைக்குக்
குழந்தை நண்பர்கள்தானே!
அந்தக் காதலிக் குழந்தைக்கு இதன்
கவிதைகளின் மேல் அத்தனை
மோகம்.

இவன் ஒரு பெரிய வரகவி என்பது
அதன் கணிப்பு.
கவிக்குழந்தைக்கு இருக்கும் அறிவு -
தனக்கு இல்லையென்று
அதன் அடி மனதில் ஒரு தாழ்வு
மனப்பான்மை!

அறிவுபூர்வமாக கவிக்குழந்தை
எழுதுவதையெல்லாம் புரிந்து
கொண்டு
ஆச்சர்யப்பட்டுப் போகும்
காதலிக் குழந்தை - அதன் அறிவை
அதிசயித்துத் தன்னை அதனுடன்
ஒப்பிட்டுக் கூனிக் குறுகிப்
போவது அடிக்கடி நிகழ்வதுண்டு.
அப்போதெல்லாம் கவிக் குழந்தை
இதற்கிருக்கும் அறிவு அங்கே
இல்லை என்ற தேவையற்ற
கற்பனை ஏன்?

அறியாமை அறிவை அடையாளம்
கண்டு கொள்ளும்
அறிவும் அறியாமையை அறியும்.
அறிவைச் சுட்டிக்காட்டும்
அறியாமையும்
அறியாமையைச் சுட்டிக காட்டும்
அறிவும் ஒன்றுதானே!
அறிவை
அறிவென்று கண்டு கொள்ளும்
ஒன்று,
எப்படி அறியாமையாக இருக்க
முடியும்?

இப்படியெல்லாம் - பேசுவதற்கு -
இந்தக் குழந்தையால் எப்படி
முடிகிறது? என்று - அது யோசித்தது.

யோசனையின் ஆழத்தில் அமைதி!
ஏன் அமைதியாகிவிட்டாய் என்ற
காதலிக் குழந்தையின் வினாவுக்கு,
- பேசுகின்ற தவறுக்கு
மௌனமாயிருத்தலே அபராதம்
என்றது! - அந்தக் குழந்தைகளை
மௌனம் கவ்விக் கொண்டது!

காலம் கடந்தது.

மாலை நேர வானில் - மேகங்கள்
வேகமாய் காற்று வீசிய திசையில்
நகர்ந்தன.
ஒரு கணம்
காதலிக் குழந்தையின் மௌனம்
கலைந்து மனதில் கேள்விகள் சத்தம்





போட்டன!

இந்த மேகம் அப்படி எங்கே
போகிறது?
மனதுக்குள் ஒலித்த கேள்விச்
சத்தத்திற்குக்
கவிக் குழந்தை - இந்த மனிதக்
குழந்தைகள் எங்கே
போகின்றன? எதைத் தேடிப்
போகின்றன?

பதில் தெரியாததால் - பதிலைக்
கண்டு பிடிக்க முயன்றதால் ஆழ்ந்து
போன மனம் - முகத்தில் கேள்வி
அடையாளம் போட்டது!

எதையெதையோ நினைப்பதுவும்,
ஒய்ந்து போவதுமாக மாறி மாறித்
தொடர்ந்து நிகழ்ந்து சலிப்படைந்த -
மனம் -

நினைப்பதும் - மனம்
ஓய்ந்து போவதும் - மனம்
சலிப்படைவதும் - மனம்

அடேயப்பா - இந்த மனம் தன்னையே
வேடிக்கைப் பார்க்கிறதே!

பார்க்க அதனால் முடிகிறதே! எனச்
சிந்தித்தது.

சிந்தனையில் - கேள்விகள் -

கேள்வி - பதிலைத் தேட
ஆரவாரம் - அமைதியைத் தேட
அமைதி அன்பைத் தேட
அன்பு அறிவைத்தேட
அறிவு - அறியாமையைத் தேட -
அடேயப்பா!

தேடிய - எதற்கும் - எதுவும்
கிடைக்கவில்லை!
கவிக்குழந்தை -

நீ என்னிடம் தேடியது
உன்னையல்லவா?
தன்னைத் தானே தேடுவது
விந்தையல்லவா? என்றது!

காதலிக் குழந்தை - ஒத்துக்
கொண்டது
என்னைத்தேடி நானலைந்த
நாட்கள்
உண்மைதான்
தொலைந்து போன நாட்கள்!

தொலைந்து போன நாட்கள்
திரும்ப மீண்டும் வருமா?
கலைந்து போன கனவைக்
கையில் கொண்டு தருமா?

தூரத்தில் - சுடுகாட்டில் - பிணம்
ஒன்று எரிந்து கொண்டிருந்தது.
அதனருகில் ஒரு வெட்டியான் -
தடிகொண்டு - சரி செய்து
கொண்டிருந்தான்.

வாழ்வின் வெறுமையை
உணர்ந்த கவிக் குழந்தை
தாங்க முடியாத மனச் சுமையைப்

''பிணஞ்சுடு தடியே - என்
மனஞ்சுடுவாயா?'' என்ற முனகலில்
இறக்கி வைத்தது.
வாழ்வின் முடிவைக் கண்ட
குழந்தைகள்

தொடக்கத்தை எண்ணிப் பார்த்தன!

தளிருது
துளிருது
மிளிருது
வளருது
ஒளிருது
உதிருது!

எல்லாப் பொருள்களுமே மாறிக்
கொண்டே இருப்பதுதான்
இயற்கையின் நியதி!
நீயும்
நானும்
மாறுவோமா?
நீ - நான் - என்றாயே - அது என்ன
பொருள்?

இந்த உடலா?
ஏனிந்த வேண்டாத கேள்விகள்?

கவிக் குழந்தை தொடர்ந்தது.

நீ இதனிடம் உள்ள கவித்திறனால்
ஈர்க்கப்பட்டு வந்தாயா? அல்லது
இந்த உடலின் வனப்பினால்
வளைக்கப்பட்டு வந்தாயா?

கவித்திறனால் என்றால்

இதைவிட அற்புதமாகக்
கவிபாடுபவர்கள் எத்தனையோ பேர்
இருக்கிறார்கள்!

வனப்பினால் என்றால் இதைவிட
இன்னும் அழகான தோற்றம்
கொண்ட எத்தனையோ பேர்
இங்கிருக்கிறார்கள்!

ஏன்

ஏன் - இது இதை விரும்பியது!

தெரியாது!
இதைத் தவிர ஓர் உண்மையான
காரணம் இருக்க முடியுமா?
இருந்தால் அது பதிலில்லை - வெறும்
சமாதானமே.

இரண்டு குழந்தைகளும்
ஒன்றையொன்று மனப்பூர்வமாக
விரும்பின -

அவைகளைப் பொருத்தவரையில்
அது குழந்தைப் பருவ விளையாட்டில்
- காட்டிய ஆர்வம் போலத்தான்
இதுவும்.

சேர்ந்து விளையாடினோம்.
- சேர்ந்து படித்தோம்
- சேர்ந்து நடந்தோம்
- சேர்ந்து புரிந்து கொண்டோம்.
சேர்ந்தே வாழ்வோம்! - திருமணச்
சடங்கு நடக்க வேண்டுமா என்ன?

கவிக் குழந்தை நாடு போற்றும் -
தத்துவக் கவி - என அடையாளம்
காட்டப்பட்டது.

எழுதும் கருத்துகளை விவாதிக்க -
மேடைகள் -
ஏற்றுக் கொள்ளும் - இளைஞர்
கூட்டம்
மறுக்கும் - அறிவு ஜீவிகள் -
பத்திரிகைகள் - நூல்வெளியிடும்
பிரசுரங்கள் -
உலகம் தோன்றி - மனித குலம்
தோன்றிய நாள் முதலாக - சொல்லி
வந்து
எழுதி வந்து
புரிந்து கொண்டு
தொடர்ந்து....

வருகின்ற கருத்துகளுக்கும் -
பழக்கங்களுக்கும்
நம்பிக்கைகளுக்கும் - ஓர் அளவே
இல்லை -

அப்படியென்ன - இது புதிதாகச்
சொல்லப்பட்ட விஷயம்?
எனக் கவிக்குழந்தை -
அங்கலாய்த்தது!

பிறப்பு
இளமை
அழகு
அறிவு - இவைகளையெல்லாம்
தந்தது காலம் என்றால் அதை அந்தக்
காலமே எடுத்துக் கொள்ளும்.

மலைபோல் நிலைத்திருக்கும் என
நினைத்திருந்தவையெல்லாம்
அலைபோல் கலைந்து செல்பவை
என
இவர்கள் உணரவில்லையே!
கலையும் கனவுபோல்
இளமை குலையும் எதுவும் நிலை
இல்லாது

அலையும், தொலையும் எனும்
உண்மை
உலகின் நிலையாமையை
இவர்களுக்கு உணர்த்தவில்லையா?

இந்த அண்டத்தின் எல்லையற்ற
விரிந்த தன்மையை உணர்ந்த ஓர்
உள்ளத்தால் அடைந்து கிடக்கும்
அறைக்குள் எப்படி இருக்க முடியும்?
இந்த உலகில் அடைத்து
வைக்கப்பட்ட அறைக்குள் இருக்கும்
ஒருவன் போல் இருக்கும்
இம்மனிதர்கள் - (அகண்ட
வெளியொன்று இருப்பதை உணராது)
அந்த அறையையே
- அண்டம் என நினைத்து மகிழ்வதை
ஏற்றுக் கொள்ள இயலவில்லையே!
துணைவிக் குழந்தை ஆறுதல்
சொன்னது -
(பக்கத்தில் - இருவருக்கும் பிறந்த
மூன்று குழந்தைகள் -)

இருள் சூழ்ந்த இடத்தில் தோன்றிய
சூரியன் போல் இவர்களுக்கு நீங்கள்
- உங்களால் அந்தக் குழந்தைகளுக்கு
வெளிச்சம் வரட்டும்! நான் சூரியன்
என்றால் அவர்களும்
சூரியன்தானே? இல்லை - தான்
சூரியன் என அறியாத சூரியர்கள்!

அப்படியா? - இந்தச் சூரியன் மட்டும்
தன்னைச் சூரியன் என்று
உணரும்படியும் மற்ற சூரியன்கள் -
வேறு ஏதோ ஒன்று என
உணரும்படியும் செய்து வைத்தது
யார்?

இதைச் சூரியன் எனச் சுட்டிக்
காட்டுவது எது? கவிக்குழந்தை
பித்துப் பிடித்தது போல் ஓடியது
வெளியே.
ஓடிய அந்த ஓட்டத்தில் - மண்
பின்னால் ஓடியது - காலம் முன்னால்
ஓடியது. கவிக்குழந்தையோ ஒரே
இடத்தில்
ஓடிக்கொண்டிருப்பவனைப்போல
உணர்ந்தது.
கவிக் குழந்தைக்கும் - அதன்
துணைக்கும் - பேரக் குழந்தைகள்
தோன்றும் அளவு - மாற்றங்கள்
நடந்துபோயின.

இந்தக் கவி - பித்துப் பிடித்தது போல்
சுற்றியது. போன இடமெல்லாம் -
அவனைத் தெய்வமாகப் பார்த்தது
இந்த உலகம். அந்தக் குழந்தையோ -
மனதால் எந்த மாற்றமும் இல்லாமல்
தோற்றத்தில் மட்டும் மாற்றம்
கொண்டு - குழந்தைச் சேட்டைகளை
விடாமல் செய்து தொடர்ந்து
ஆனந்தத்தில் மிதந்தது.

அதைத் தொட்டால் புண்ணியம்
அதன் பார்வை பட்டால் பாவம்

தொலையும் -
அதற்குப் பணிவிடை செய்தால் -
பிறவிப் பயன் கிட்டும்
என்ற நம்பிக்கை மக்களிடையே -

இவர்களுக்காக வருந்தி -
பரிதாபப்பட்டுப் பழகிபோய் -
அதையும் நிறுத்திவிட்டது - எதையும்
லட்சியம் செய்யாது இருந்து வந்தது.
அப்போது ஸ்வாமியின் காதலிக்
குழந்தை-
பேரக்குழந்தை சகிதமாக
அவரை அழைத்துப்போகும்
எண்ணத்தோடு அங்கே வந்தது.
திரும்பிப்பார்த்தச்
சூரியக்குழந்தையின் பார்வையில்
எந்த மாறுதலும் இல்லை.

வாருங்கள் போகலாம்!
எங்கே?
வீட்டுக்கு.
இது என்னவாம்! இதுவும் வீடுதான்
என்று
உடம்பைத் தொட்டுக்காட்டிச்
சிரித்தது!
அருகில் நின்றிருந்த
பேரக்குழந்தைகள் சிரித்தன-
தாத்தா தாத்தா எனச் சுற்றி வந்தன.
தன்னைச் சுற்றும் பூமிபோல நீ
உன்னைச் சுற்று.
கண்மணி... எல்லா இடமும் இதோட
உடமைதான்.
இங்கே இது தனியா
இருக்குன்னுதானே நெனைக்கிறே-
இது எல்லா இடத்திலும்
வியாபிச்சிருக்கு.
குடத்துக்குள்ளே இருக்கும் ஆகாசம்
குடத்துக்குள்ளே கட்டுப்பட்டதா?
இல்ல - குடம் ஆகாசத்துக்குக்
கட்டுப்பட்டதா?
இது எங்கேயும் வாாது - எங்கேயும்
போகாது.
இங்கே - அங்கே என்ற பேச்சே
இங்கே இல்லை என நெஞ்சைத்
தொட்டுக் காட்டியது-
குழந்தையின் குடும்பம்
வருந்திச்செல்வதைக் கூட்டம்
கவனித்தது.

ஸ்வாமி - நீங்கள் ஓர் சூரியன்!
அப்படியா? - இல்லையே! - யார்
சொன்னா?
- நாங்கதான் ஸ்வாமி -
நான் சூரியனா இருந்தா - நீங்க எரிஞ்சு
போயிருக்கணுமே? ஏன் எரிஞ்சு
போகல?.......
தெரியாது ஸ்வாமி.
நீங்களும் சூரியன்தான் -
அதனாலதான் எரிஞ்சு போகல!
புரியுதா?
அது இரவு நேரம்.
- ராத்திரியிலே சூரியன் எங்கிருக்கும்?

சந்திரன்தான் வரும்.
மேலே பார்.
அங்கே முழுமதி - பட்டப் பகலாய் -
இரவைக் காட்ட கவிக் குழந்தை
பாடியது - கூட்டம் கூடியது.
கூடியதில் நிறையக் கல்லூரி மாணவக்
குழந்தைகள், பாட்டு ஒலித்தது.

சூரியன் ஏற்றி வைத்த சந்திர விளக்கே
சூரியனை ஏற்றி வைத்த சூரியன் யார்?
காரியம் நடத்தி வைக்கும் காரணமே
காரணம் கடந்து நிற்கும் பூரணன்
யார்?
அங்கே தவித்துக் கிடந்த இள,
நெஞ்சங்களில் ''குபீர் குபீர்'' என
ஞானத் தீ பரவியது. எதனால் -
எதற்காக? - இந்தக் காரிய
காரணங்களுக்கங்கே இடமே இல்லை
- ஞானத் தீ பற்றியதென்றால்
பற்றியதுதான்!

தாகம் கொண்டு தவித்துக் கிடந்த
உள்ளங்களுக்கு - ஞான ஊற்றுப்
பீறிட்டு - தாகத்தைத் தணித்தது.

குழந்தைச் சூரியன் கேட்டது
தீப்பிடித்ததா?
தாகம் தணிந்ததா? - தீ அணைந்ததா?
சுற்றி நின்ற இளங்குழந்தைகள் -
எதனாலோ பிணைக்கப்பட்டது
போலானார்கள்.
அந்தப் பிணைப்பு - பிணைப்பாக
இல்லாமல் - விடுதலையாக
இருந்ததுதான் அதன் விசேஷம்.
இனி என்ன செய்யப் போகிறீர்கள்?
எங்களால் என்ன செய்ய முடியும்?
என்ன செய்ய முடியாது?
ஏதாவது சொல்லுங்கள்
இதுவரை என்ன செய்தீர்கள்?
வழிகாட்ட யாரும் இன்றி
மனம்போன போக்கில்
பாடங்கள்
பாடல்கள்
ஆடல்கள்
தேடல்கள் - சூறாவளியில் சிக்கியச்
சருகுபோல் சினிமா - டிவி - யில்
மூழ்கி
நாயக - நாயகியரின் மோகத்தில் -
சுற்றிச் சுற்றித்
தொலைந்த நாட்கள் -
கல்லூரி வாசல்களில் - கதைத்த
கதைகளில் - நகைச்சுவைத்
துணுக்குகளில் தொலைந்த நேரங்கள்-
அனுபவம் என்ற பெயரில் - எதை
எதையோ
தேடி மனதைப் புதைத்துத் திரும்ப
எடுக்க முடியாமல் தொய்ந்து போன
தோல்விகள் - இதுதான் நாங்கள்.
சாதித்தது - என்று ஒத்துக் கொண்ட
இளைஞர்
கூட்டத்தை - அன்போடு பார்த்து -
நெஞ்சம் நெகிழ்ந்ததோ -
இல்லையோ - அன்பு கனிந்தது.

கவிக்குழந்தை -

கண்ணீர் மல்க வானத்தைப் பார்த்தது -
மேகமே இல்லாது - வெண்மதி
விளையாடிக் கொண்டிருந்த
வானத்தில்
திடீரென்று மேகங்கள் தோன்றி -

மழை பொழிய ஆரம்பித்த
இளங் குழந்தைகள்
இது எதனால் நிகழ்கிறது?
அன்பாலா? இவருக்கிருக்கும்
வல்லமையாலா?

அன்பால் என்றால் மழையை ஸ்வாமி
வேண்டவே இல்லை.
வல்லமையால் என்றால் - அதை
வரவழைக்க வேண்டிய
அவசியம் இப்போது ஸ்வாமிக்கு
இல்லை.

பின் எதனால் இது நிகழ்கிறது?

எனப் பலவாறு புத்தியால் அலசி
ஆராய்ந்து கொண்டிருந்தது.
புத்தியவுடு மடையா - என்று
கத்திவிட்டு- மௌனமாகி அடுத்த
கணம் பொழிகின்ற மழை
அத்தனையையும் - குழந்தைச்
சூரியனே வாங்கிக் கொள்வது போல்
- அது வானத்தைப் பார்த்தபடி
முகத்தை மேலே தூக்கி - கண்களை
மூடி அமைதியாக நின்றிருந்து.

ஸ்வாமி ஏதாவது சொல்லுங்கள்!
சொல்வேன்! -
பிறக்காதீர்கள்!
பிறந்தால் இறக்காதீர்கள்!

பிறக்கத்தான் வேண்டுமென்றால்
ஒவ்வொரு கணமும் பிறவுங்கள் -

பின் எங்கே இறக்கப் போகிறீர்கள்?
குழந்தைச் சூரியனுக்கு இன்னும்
கண்கள் மூடியவாறுதான் இருந்தன!

இந்த உடல்

உங்கள் ஸ்வாமி அல்ல! -
இது போகும் வரும்.
இதற்குள் இருப்பதோ - போவதும்
இல்லை
வருவதும் இல்லை!

உனக்குள்
எனக்குள்
இருப்பதுதான்
எங்கும் இருப்பது.
அது -

அது- இதுவென இடைவெளி
இல்லாதது
உனக்குள் இருந்து கேட்டுக்
கொள்வதும்
இதற்குள் இருந்து சொல்லிக்
கொள்வதும் அதுவே -

அதற்கும் - இதற்கும் - இடைவெளி
இல்லை. அமைதியாக ஆழ்ந்து
நோக்குங்கள் என்றவுடன் -
அனைவரின் மனமும்
அவரவர்களுக்குள் மூழ்கியது.

இந்த மனம் எதனால் இப்படி
அதமைதியில் மூழ்கியது என்பதும்
அவர்களுக்கு விளங்கவில்லை.
மௌனத்தில் ஆழ்ந்த மனங்கள் -
அங்கே - நிரம்பி வழிய-
அனைவரின் கண்களும் - தாமாக
மூடின - நேரம் கடந்தது.

அங்கே ஓர் அதிசயம் நிகழ்ந்தது!
அனைவரின் கண்களும் ஒரே
நேரத்தில் திறந்தன
சூரியக் குழந்தை சிரித்தது!
அதன் முகத்தின் - சூரியப்
பிரகாசத்தின் - ஒளி
பொலிவு
அமைதி
சாந்தம்
கருணை
அம்மம்மா?
சத்தம் போட்டுச் சிரித்தது!....

மேலே இருந்து மழையைக் கொட்டிக்
கொண்டிருந்த சூரியக் குழந்தையின்
உடல் - நீர்த்துளிகளாக மாறி - மேலே
கிளம்பியது.

இளைஞர் கூட்டம் - என்ன நடக்கிறது
என்று உணர்வதற்குள் - அந்த உருவம்
மேல் நோக்கிப் பறந்து மழைத்
துளிகளாகி அரூபமாகி - வானோடு
வானாக... விரிந்து படர்ந்தது!!!

கீழே நின்ற குழந்தைகள்
ஒவ்வொன்றும்
ஒரு சூரியக் குழந்தையாகத் தன்னை
உணர்ந்தன!

இளைஞர்களைக் காணாத பெற்றோர்
கூட்டம் அங்கே தேடி வந்தது.
மழையில் சொட்டச் சொட்ட
நனைந்திருந்தவர்களைப் பார்த்து
ஒன்றும் புரியாது
திகைத்தது.

என்ன இங்கே மட்டும் ஒரே
தண்ணீராக இருக்கிறதே எல்லோரும்
நனைந்திருக்கிறீர்களே? என்று -
கேள்விகள்!

பல கேள்விகள் ! கேள்வி மேல்
கேள்விகள்!!!

ஊஹூம் ஒன்றுக்கும் பதிலில்லை!
''இயற்கையைக் கேள்வி கேட்க
யாருக்கும் அதிகாரம் இல்லை.
நாங்கள் இயற்கை!'' என்பது
போலிருந்தது அவர்களின்
மௌனம்.



62. பிகாசோ


நல்வாழ்த்துகள்

அ.லோ. பொன்னுசாமி, *தலைமை நிர்வாகி*

**அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை**

(தமிழ்நாடு சர்க்கரை கழகத்தின் ஓர் அலகு)

குருங்குளம், தஞ்சாவூர்.



63. பிகாசோ


*Best compliments*

**HOTEL RAJAM**

*Star Comforts*

M.S. Road, Vadasery, Nagarkoil - 1
Phone : 32581 (10 lines) Telex : 436-204 Rajam In Fax No : 32589



64. பிகாசோ


*Best compliments*

CHITHARANJAN DAS AGENCIES

Kottar, Nagarkoil - 629 002. Phone : 32751.
Branch : CSI Complex , Marthandam, Phone : 70211.



65. ஜ்வான் கிரீஸ்


*Best compliments*

M. MOHAMED ISMAIL

**MOHAMED YOOSUF & CO.**

(Stationery & Plastics)

Cape Road, Nagarkoil - 629 002. Phone : 24244 Res : 25244



ஓவியம் : **விஸ்வம்**

# அரிச்சந்திர நீதி

இந்தச் சாலையில்
எத்துணை நெரிசல் உண்டாகிவிட்டது!
இந்த ஊருக்கு இதுதான் 'தலைவாசல்'
என்று கூடச் சொல்லிவிடலாம்.

நுழைந்து கொண்டே இருக்கிறார்கள்.
இருட்டுவதற்கு முன்பு
இறுதி ஊர்வலங்கள் வெளியேறுகின்றன.

வழிநெடுகப் பூக்களைச் சிதறியிருக்கிறார்கள்.
பூக்களை மிதித்துக் கொண்டு நடப்பது-
அதுவும் செருப்புக் கால்களோடு
உயர்திணைக்கு உகந்தது ஆகாது.

பொறி, எள்-என்றும்
வீசியிருக்கிறார்கள்.
பொறுக்கித் தின்று கொண்டே வந்தால்
வீடு வருவதற்குள் விடிந்துவிடுமாம்!
இருந்தாலும் முன்னோர் ஆவிகளை
இப்படி பொறுக்கித் தின்ன விடக் கூடாது நாம்.
திருடர்களைப் போலவே பேய்களும்
வெளிச்சத்தில் வீடுகள் நுழையா போலும்.

கன்னியர்குளம் சாலையில்-
குளக்கரையில் கன்னியர்கள் மற்றும் காடு.
எரிப்பது ஆர்ப்பாட்டம்.
புகை சூழ்வதும், பற்றி எரிவதும்
நாற்றம் வெளியை வளைப்பதும்.

அவுரங்கசீப்-
பெட்டி ஆடம்பரத்தை மறுத்துத் தன்னை
மண்ணில் இட்டே புதைக்கச் சொன்னானாம்.
பெட்டியில் இட்டுப் புதைத்தால் மட்டும்
விட்டு விடுகிறதா என்ன மண்.

இடுகாடுகளாகவே இருந்திருந்தால்
வேலை இருந்திருக்காது அரிச்சந்திரனுக்கு.
சுடுவதற்காகத்தான்
கோல் கைக் கொண்டு வாழ்கிறான்.
செங்கோல்களோ கொடுங்கோல்களோ
நிமிர்த்தி எரிப்பது இவன் கால்தான்.

சாலை ஓரத்தில் நிற்கிறான்.

போடுகிற கோட்டிற்கு முன்னால்
பாடை திருப்புகையில்
கால்பணம், முழத் துண்டு கொடுக்கிறார்கள்.

இந்த வேடிக்கைகளைப் போலவே
எல்லா வேடிக்கைகளையும் பார்க்கிறான்.

வாய்மை வெல்லுமா-
இரண்டாம் அரிச்சந்திரன் காந்திமகானும்
இப்படி நம்பி ஏமாந்து போனவரா?
இவர்களின் கோல்களுக்கு இவர்களின் அரசியலில்
ஏதாவது அர்த்தம் இருந்திருக்கிறதா?
தங்கள் கோல்களைச் சுமப்பனவாகவே நினைக்கிறார்கள்
குரங்காட்டிகள்.

நீதி மன்றங்களில்தான் நீதி என்றான பிறகு
கைத்தடிகள் சம்மட்டிகள் ஆகலாம்.
சம்மட்டிகளும் கூடச் சிலுவைகள் ஆகிவிடலாம்.
அப்போதைக்கு மரித்தாலும்
உயிர்த்தெழுகிறவர்கள் நீதியின் காவலர்கள்.

சாலை ஓரம் அவன் நிற்கட்டும்.
அவனைப் பார்த்தும் பார்க்காமலும் கடப்பவர்களை
அவன் பார்க்கட்டும்.
காது கொடுப்பவர்கள் இதய ஒலியைக் கேட்கலாம்.
நெடும்பயணங்களின் முடிவில்தான் நீதி.
அது கால் நடைப்பயணம்.
சொகுசுப் பேருந்துப் பயணம் அல்ல.

பழமலய்

*Best compliments*

**Dr. A. Goldwin Fernandez**
**Director Administration**

SHYRAS TRAVELS

Shivaraj Building, Tower Junction P.B. No. 20, Nagarkoil - 629 001. K.K. District.
Phone : 30727, 31828. Res : 33594. 32858 Fax : 04652 - 32858



66. பெர்னார்ட் லாகர்

67. பிகாசோ



*Best compliments*

**GREATEST BAKERY**
(Quality Bakery Items)

Court Road, Nagarkoil, Phone : 24503




68. எட்வர்ட் மானே

நல்வாழ்த்துகள்

**சேகோ சர்வ்**

முகமது நசிமுதீன் இ.ஆ.ப.
நிர்வாக இயக்குநர்
சேலம்



69. பெர்த் மாரிசோட்

*Best compliments*

**A.D.S. TEXTILES**

NAGARKOIL

# ஜேம்ஸ் டீனும்

## செண்பகராமன்புதூர்க்காரரும்

தமிழ்ப் படங்கள் பிரபலமாகி வந்த காலத்தில் அங்கே செண்பகராமன் புதூரில் அஞ்சலகம், பள்ளிக்கூடம் எதுவும் இருக்கவில்லை. படம் பார்க்க ஏழெட்டு மைல் நடக்கவேண்டும். மோட்டார் வண்டி ஓடும் சாலையை அடையவே நாலைந்து மைல். ஏறக்குறைய ஒருநாள் முழுவதும் ஆயத்தம் செய்யப்படும். இரண்டு மூன்று குடும்பங்கள் சேர்ந்தாற்போல் கிளம்புவதுதான் வழக்கம். காலையிலேயே சிறுவர்கள் துணி துவைத்துக் காயப்போட்டு விடுவார்கள். அன்று மாலை செல்லப்போகிற மகோன்னத இடம் பற்றிய விவரங்களை மற்றவருக்கு பறைசாற்றுவதில் நேரம் போகும். பெரும்பாலும் அது அறுவடை முடிந்த மாதமாகவிருக்கும். இரவில் அங்கு சாதாரணமாக சோறு பொங்குவது கிடையாது. தண்ணீர் ஊற்றிய மதியச்சோறு தான். பெண்டுகள் வேறு வேலைகளைக் கவனித்து விட்டுக் கிளம்பு வார்கள். கிழவிகள் வருவதில்லை. அப்படி அவர்கள் வருவதாக விருந்தாலோ, புதுமணமக்கள் யாராவதிருந்தாலோ, வில்வண்டி அமர்த்தப்படும். சிறுவர்கள் ராஜநடை போட்டு முன்னால் நடக்க, பெண்கள் பேசிக் கொண்டே தொடர்வார்கள். செண்பகராமன்புதூர் நாச்சியாரம்மாளின் மூத்த மகளை கோட்டாறு மயிலேறும்பெருமாள் பிள்ளையின் மகனுக்குத்தான் கொடுத்திருக்கிறது. அவன்தான் டிக்கெட் கொடுப்பது. அங்கே நின்று பேசி விசாரித்து, "அத்தைட்ட ஏதாம் சொல்லணுமா" என்று கேட்டுவிட்டுத்தான் உள்ளே செல்வார்கள். படம் ஆரம்பித்திருக்கும். சிறுவர்கள் பெரும்பாலும் நின்றுகொண்டே தான் படம் பார்ப்பது. வண்டியில் சென்றால், வண்டிக்காரருக்கும் டிக்கெட் வாங்கிக் கொடுப்பார்கள். அவர் உள்ளே போனதுமே துண்டைத் தரையில் விரித்துவிடுவார்கள். பெண்களுக்கும் தரைதான். ஆனால் தனியிடம். சாமிகள் தோன்றும் போதும் தீபாராதனை காட்டப்பெறும் போதும் திரை அவர்களால் கும்பிடப்படுவதுண்டு. அப்போது அரங்கில் நிசப்தம் நிலவும். மற்ற காட்சிகளில், தாங்கள் விட்டுப்போன ஊர் சங்கதிகளைப் பேசுவார்கள். அசுவத்தாமாவும், பாகவதரும் பின்னர் கண்ணாம்பாவும் பேசப்பட்டனர். இளைஞர் சிலர் சின்னப்பா, பாலையா பற்றித் தெரிந்து வைத்திருந்தனர்.

சுதந்திரம் வந்த பின்னரும் நிலைமை மாறிவிடவில்லை. ஓர் அஞ்சலகம் ஏற்பட்டது. சிறுவர்கள் படிக்க ஆரம்பித்திருந்தனர். சிலர் உயர் படிப்பிற்கு பக்கத்து டவுண் சென்றனர். அந்த ஊரை விட்டுப் போனவர்களும் அங்கு திரும்பி வராமலிருந்தவர்களும் உண்டு.

**மா. அரங்கநாதன்**

ஓவியம்: **மருது**



கடிதம் ஆங்கிலத்தில் தானிருக்கும். நாலுபேர் முன்பு பார்த்தால், இசகு பிசகான கேள்விகளைத் தவிர்க்க முடியாது. ஆங்கிலத்தில் பெயர்ச் சொற்களைத் தவிர மற்றவை சிரமத்தைக் கொடுக்கின்றன.



அதிசயம் அந்த ஊரிலும் விவசாய நாகரீகம் மாறிவிட்டது பாருங்கள்

□□□

ஆண்டிப்பிள்ளை சினிமா பார்த்தது கிடையாது. செண்பகராமன் புதூரிலுள்ள சிறு கோவிலை கவனித்துக் கொண்டார். நேராக கைலாசத்திலிருந்து இறங்கி வந்தது போலப் பேசுவதுண்டு.

சில திருமணங்களை நடத்தி வைத்துள்ளார். காசு எதுவும் வாங்குவதில்லை. சாப்பாட்டுக்கு நெல்வந்தது. பையன் வயலையும் தோப்பையும் கவனித்துக் கொள்கிறான். இனி சும்மாயிருப்பதே சுகம் என்று சொல்லிக் கொண்டிருந்தவருக்கு கிராமத்து அஞ்சலக அதிகாரி பொறுப்பு வந்தது. வீட்டிலிருந்து கொண்டே அதைக் கவனித்துக் கொள்ளலாம். அவர் வீடுதான் அஞ்சலகம். விட்டுவிட மனதில்லை. நேரமும் நன்றாகப் போகும். நாலு காசும் உண்டாக்கலாம். இந்த வயதில் வேறு என்ன கிடைக்கும். ஏற்றுக் கொண்டார். ஊருக்கு வரும் ஏழெட்டுக் கடிதங்களை அவர் வீட்டுக்கு வந்துதான் பெற்றுக் கொண்டார்கள். மணியார்டர், எப்போதாவது அஞ்சலட்டை விற்பதோடு எழுதியும் தர வேண்டியது அவசியம். படித்துக் காட்ட வேண்டியது இன்றியமையாத காரியம். செண்பகராமன்புதூர் இசக்கி முத்துப் பிள்ளையும் வெள்ளமடத்திலிருக்கும் அவர் மைத்துனரும் அஞ்சலட்டை மூலம் நடத்திக் கொண்ட சண்டையில் ஆண்டிப் பிள்ளையின் பங்கு சிறிதுதான். ஆனால் பெரிதுபடுத்தப்பட்டது. சமாதானம் பண்ணிவைக்கப் பார்த்தார். நடக்கவில்லை. வெள்ளமடத்துக்காரர் செண்பகராமன் புதூர் வந்து தெருவில் நின்று, ஒரு குறிப்பிட்ட விலங்கின் பெயர் சொல்லி, அதற்குப் பிறந்தவனே என்று நாலு பேர் அறிய கேட்டபின் எதுவும் ஏலாது போயிற்று. ஆண்டிப்பிள்ளை இனியாருக்கும் கடிதம் எழுதித் தரமாட்டேன் என்று முடிவெடுத்தார்.

ஐம்பதுகளின் மத்தியில் அவர் பெயரைத் தட்டச்சு செய்து வந்தது ஒரு கடிதம். செண்பகராமன்புதூரைப் பொறுத்தவரை அது அசாதாரணம். அது அமெரிக்க நாட்டிலிருந்து வந்திருப்பது இன்னொரு விசேடம். மிகவும் பதவிசாக ஊர்ப்பெயர் போட்டு, தென் இந்தியா என்றும் குறிப்பிடப்பட்ட அந்த முகவரி ஆண்டிப்பிள்ளைக்குத்தான்.

கடிதத்தைப் பிரிக்காது நெடுநேரம் அதைப் பார்த்துக் கொண்டிருந்தார் பிள்ளை. தட்டச்சில் அவரது பெயர் பளபளத்தது. பிரிப்பதற்கு முன்னரே நாலைந்து பேரிடம் காட்டியாயிற்று. பிரிப்பதிலும் ஒரு தயக்கம் உண்டு. எப்படியும் கடிதம் ஆங்கிலத்தில் தானிருக்கும். நாலுபேர் முன்பு பார்த்தால், இசகு பிசகான கேள்விகளைத் தவிர்க்க முடியாது. ஆங்கிலத்தில் பெயர்ச் சொற்களைத் தவிர மற்றவை சிரமத்தைக் கொடுக்கின்றன. மாலையில் டவுண் போகப் போகிறோமே அப்போது பார்த்துக் கொள்ளலாம் என்றிருந்துவிட்டார்.

அந்தக் கடிதம் ''அன்புள்ள ஐயா'' என விளித்து மிக அழகாக தட்டச்சில் பொறிக்கப்பெற்று விளங்கியது. டவுன் நண்பர் முழுமையாகப் படித்துக் காட்டினார்.

ஆறேழு பக்கங்கள் கொண்ட அக்கடிதம் சற்றேறக்குறைய பின் வருமாறு மொழிபெயர்க்கப்படலாம்.

''எனது பெயர் ஹாப்மன். இங்கே கலிபோர்னிய மாநிலத்து ஓஜாய் பள்ளத்தாக்குப் பகுதியைச் சார்ந்தவன். முகவரியை மேலே காண்பீர்கள். வார்னர் பிரதர்ஸ் படத் தயாரிப்பு நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். எங்கள் ஊரான ஓஜாய் கிராமத்துக்கு வாரந்தோறும் செல்வதுண்டு. அங்கே உங்கள் பகுதியைச் சார்ந்த ஸென்புத்த சமயத் துறவி ஒருவர் (அவரை அப்படித்தான் நான் கருதுகிறேன்) தங்கி பிரசங்கங்கள் புரிவார். அதைக் கேட்க அமெரிக்கர்களோடு உங்கள் நாட்டைச் சார்ந்த பலரும் கூடுவார்கள். அந்த இடத்தில் அப்படி வந்தவர்களில் ஒருவரை நான் சந்தித்திருக்காவிட்டால் இந்தக் கடிதத்தைத் தங்களுக்கு எழுதியிருக்க முடியாது.,

அவர் பெயர் சிவசங்கரன்

முத்துக்கறுப்பன். தங்களது ஊரைச் சேர்ந்தவர். செண்பகராமன் புதூரின் இயற்கை அமைப்பு பற்றியும் குணாதியங்கள் பற்றியும் நிறையவே கூறியிருக்கிறார் (தங்களது ஊரின் பெயரைச் சரியாக உச்சரிக்கக் கூட நான் தகுதியற்றவன். பம்பாய், ஆக்ரா டில்லி போன்ற பெயர்கள் போன்றதல்ல அது)

மலையும் வயலும் சார்ந்த உங்கள் பிரதேசத்தில் விவசாய அறிவுத் திறன் கொண்டோர் மிக அதிகம் என்றாலும், எழுதப் படிக்கத் தெரிந்தவராக தங்களைப் போன்ற இரண்டொருவர்தாம் உண்டு என்றும் கூறியுள்ளார். அப்படிப்பட்ட ஊரில் இருந்து வந்த திரு. முத்துக்கறுப்பன் தான் எனக்கு பிரஞ்சுமொழி கற்பித்தார். என் பிள்ளைகளுக்கு அவர்தாம் ஆசிரியர். அவ்வாறு பலருக்கும் அவர் ஆசிரியராக ஆனபோது, எனது வீட்டின் அறையொன்றை ஏற்பாடு செய்து கொடுத்தேன்.

முத்துக்கறுப்பன் செண்பகராமன்புதூரிலிருந்து பாண்டிச்சேரி என்ற பிரஞ்சுப் பகுதிக்கு வந்து அங்கே தனது இளமைக் காலத்தை கல்வியில் கழித்ததாகத் தெரிகிறது. பிரஞ்சு மொழியை மிகவும் சரளமாக கையாளுபவர். அங்கிருந்து பாரிஸ் செல்ல அவருக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்த இரண்டு வருடங்கள் அங்கே தங்கி பின்னர் இங்கே வந்திருக்கிறார். தங்களுக்கு இது தெரிய நியாயமில்லை என்று கருதுகிறேன்.

உங்கள் நாட்டைச் சார்ந்த ஸென் துறவியைப் பற்றிக் குறிப்பிட்டேன் அல்லவா. அவரது பிரசங்கங்களிடையே சந்தித்தபோது, முத்துக்கறுப்பன் அந்தத் துறவியிடம் கேட்ட கேள்விகளையும், பதில்களை உள்ளடக்கிக் கொண்ட எதிர்கேள்விகளையும் குறித்து நெடுநாள் பேசிக் கொண்டிருந்திருக்கிறேன். பின்னாளில் அந்தப் பிரசங்கட்குச் செல்வதை முத்துக்கறுப்பன் நிறுத்திவிட்டாலும், என்னுடன் பேசுவதை தவிர்க்கவில்லை. சனி-ஞாயிறு நாள்களில் தவறாது ஓஜாய் செல்வது வழக்கம்.

நான் பணியாற்றி வந்த நிறுவனம் தயாரித்த படமொன்றில் நடித்தவர் ஜேம்ஸ் டீன். அந்த நடிகரைப் பற்றி நீங்கள் அறிந்து கொண்டிருக்கிறீர்களா என்று தெரியாது. இந்த நூற்றாண்டின் சிறந்த நடிகர் என்று சிலர் கூறுகிறார்கள். இரண்டுநாள் முன்பு அவர் - ஜேம்ஸ் டீன் காலமாகிவிட்டார். ஒரு கார் விபத்தில்.

நான் ஜேம்ஸ் டீன் பற்றி தங்களுக்கு எழுதுவது குறித்து வியப்படையக் கூடும். அதற்கு ஒரு காரணம் உண்டு. இந்த ஜேம்ஸ் டீன் போலவே முத்துக் கறுப்பன் அவர்களும் இரண்டு நாள் முன்பு ஒரு விபத்தில் காலமாகி விட்டார்.

ஐயா - முத்துக்கறுப்பன் தமது டைரியில் குறிப்பிட்டுள்ளபடி தங்களது முகவரியைக் கண்டு, அவர் தங்களைப் பற்றி கடைசி நாளில் என்னிடம் சொன்னபடி இதை எழுதுகிறேன்.

"ஈடனின் கிழக்கு" என்ற ஜேம்ஸ் டீனின் படத்தைப் பார்த்து

> “வானவெளியில் கலத்தல், நட்சத்திரங்களைப் பார்த்தல் எல்லாம் எனது அளவிற்கு அப்பாற்பட்ட விஷயம் என்று சொல்லவேண்டும்.”

விட்டு முத்துக்கறுப்பன் "இந்தப் படத்துக்குப் பிறகு இந்த டீன் சினிமாவில் நடிக்கக்கூடாது" என்று சொன்னது எனக்கு ஒருவகையில் வியப்பைத் தரவில்லை. இவ்வாறு அவர் சொன்னதைப் போல் இப்படி பகிரங்கமாகக் கூறமுடியாவிட்டாலுங்கூட, காரணமில்லாமலேயே எனக்கும் அதே அபிப்ராயம் இருந்தது. வேறொன்றும் அவர் கூறியது உண்டு. "இந்த ஜேம்ஸ் டீன் நட்சதிரங்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் ஆள்" என்பதுதான் அது. எனக்கு மிகுந்த வியப்பை அளித்த வாசகம். ஏனெனில் இதே போன்று ஸ்டியோவில் ஒருநாள் ஜேம்ஸ் டீனும் இதைக் கூறியிருக்கிறார். ஒரு பிரம்மிப்பான நிலையில் எனக்கு இந்த இருவரையும் அறிமுகம் செய்துவைப்பது நல்லதெனத் தோன்றியது. அவ்வாறு நடந்து ஒருமணி நேரம் அவர்கள் முத்துக்கறுப்பனும் ஜேம்ஸ் டீனும் - சுமார் ஒரு மணிநேரம் தனியாகப் பேசிக் கொண்டிருந்தனர். அதன் பிறகு கடைசிவரை இருவரும் பேசிக் கொள்ளவோ பார்த்துக் கொள்ளவோ இல்லை. ஜேம்ஸ் டீன் விபத்தில் உயிர் துறந்தபோது, 'அசுரன்' என்ற படத்தில் நடித்துக் கொண்டிருந்தார். அந்தப் படம் இன்னும் வெளிவரவில்லை.

ஓஜாய் கிராமத்தில் இருக்கும் போது, வேறு சிலவற்றையும் முத்துக்கறுப்பன் கூறியிருக்கிறார். அவை நான் கேட்ட சில கேள்விகளுக்குப் பதிலாக அமைந்தன. ஆனாலும் ஜேம்ஸ் டீனிடம் என்ன பேசினார் என்கிற விவரம் தெரியவில்லை.

இந்த ஜேம்ஸ் டீன் வானவெளியில் மிதந்து கொண்டிருக்கிற மனிதன் -இனி நடிக்க வேண்டியது கிடையாது.

வானவெளியில் கலத்தல், நட்சத்திரங்களைப் பார்த்தல் எல்லாம் எனது அளவிற்கு அப்பாற்பட்ட விஷயம் என்று சொல்லவேண்டும். அதைப் பற்றியும் சிறிது சொன்னார்.

"இதையெல்லாம் புரிந்து கொண்டுதான் ஆகவேண்டும் என்பது கிடையாது. அப்படிப்பட்ட விஷயங்களாக சில இருந்து கொண்டுதானிருக்கும். நூறு ஆண்டுகளுக்கு முன்னர் எங்கள் பிரதேசத்தில் ஒரு ஞானியால் இது பற்றித் தெளிவாகச் சொல்ல முடிந்திருக்கிறது. சமீபத்தில் ருஷ்யக் கவிஞன் ஒருவனும் இதுபற்றி கொஞ்சம் பாடிவிட்டுச் செத்துப் போனான். எப்போதாவது யாராவது எங்கோ அவ்வாறு ஆகிக் கொண்டுதான் இருக்கின்றனர். இதற்கொல்லாம் அந்த நாடு - இந்தப் பிரதேசம் என்று கிடையாது அல்லவா"

மேற்படி விவரங்கள் எனக்கு மட்டுமே தெரியும். ஆனால் அலெக் கின்னஸ் என்ற பிரிட்டிஷ் நடிகர் "இந்தக் காரில் பயணம் செய்யாதீர்கள்" என்று ஜேம்ஸ் டீனிடம் சொன்னது மட்டும் பத்திரிகை மூலமாகப் பலருக்குத் தெரிந்திருக்கிறது.

கார் விபத்தில் ஜேம்ஸ் டீன் காலமாகிவிட்டார். இதை முத்துக்கறுப்பனிடம் தெரிவித்தபோது, அவர் என்னிடம் சொன்னதுதான் நான் இந்தக் கடிதத்தைத் தங்களுக்கு எழுத மூல காரணம். அவர் கூறியது.

"நான் எங்க ஊர் ஆண்டிப் பிள்ளையிடம் ஆறு ரூபாய் கடன் வாங்கிக்கொண்டு பாண்டிச்சேரி

புறப்பட்டுச்சென்றேன். இதுநாள் வரை அதைப் பற்றிய நினைவு இல்லாமலேயே இருந்துவிட்டேன். என்ன காரணமென்று தெரியவில்லை. இப்போது ஜேம்ஸ் டீன் பற்றி நீங்கள் சொன்னது அதை நினைவூட்டுகிறது. நான் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டும். அதற்குரிய நாள் இது" என்று கூறி அவரது டைரியை என்னிடம் தந்து "நான் வெளியே போகிறேன்" என்று சொல்லிவிட்டுச் சென்றவர்தாம். விபத்தில் காலமானது பின்னர் தெரிந்தது.

ஐயா - முத்துக்கறுப்பன் அவர்கள் தமது டைரியில் குறிப்பிட்ட முகவரிக்கு இதை நான் எழுதுகிறேன். இக்கடிதம் கிடைத்தவுடன் பதில் எழுதுங்கள். இங்கே ஒரு ஜோடி ஆடை உள்ளது. தவிர வேட்டி என்று முத்துக்கறுப்பன் அவர்களால் அழைக்கப்பட்ட இரு ஆடைகளும் உள்ளன. அந்த வேட்டியை இடுப்பில் சுற்றிக் கொண்டு ஒஜாய் கிராமத்தில் நடந்து வந்ததை என்பிள்ளைகள் முதலில் அதிசயத்துடன் பார்த்து பின்னர் பழகிவிட்டனர். அவற்றை எல்லாம் தங்களுக்கு அனுப்பிவிடலாமா என்பதை அருள்கூர்ந்து தெரிவியுங்கள்.

வேறு எதையும் எழுத எனக்குத் தெரியவில்லை."

□□□

"அட நம்ம சிவசங்கர அண்ணாச்சி மகனா" என்று ஒருகண நினைவில் ஆழ்ந்தார் ஆண்டிப் பிள்ளை. கடிதத்தில் கூறப்பட்ட பழையகால விஷயங்கள் ஞாபகத்தில் இல்லாது போகவும், ஒரு கணம் கடுங்கோபம் ஏற்பட்டது. இருந்திருந்து எழவெடுப்பான் கிழிஞ்ச வேட்டியைத் தானா இங்க அனுப்பணும். பூசை செய்யவா"

முனகிக் கொண்டபோது, "என்ன அண்ணாச்சி - கடிதத்துக்கு பதில் அனுப்பனுமில்லையா" என்று நண்பர் விசாரித்தார். ஆனால் அதற்கான அஞ்சல் தலையின் விலையைக் கணக்கிட்டுப் பார்த்தால் கதி கலங்கிற்று.

எனவே கடிதத்தைச் சுருட்டி மடக்கியவாறே நண்பரிடம் விடை பெற்று செண்பகராமன்புதூர் சாலையில் மெதுவாக நடக்க ஆரம்பித்தார். கிட்டத்தட்ட ஊர் எல்லையில் அதைக் கிழித்து வீசி எறிந்தார்.

●

# படைப்பாளி... படிப்பாளி... விமர்சகன்...



எழுத்தாளர்களிடம் உள்ள மிக முக்கிய குறைபாடு, நிறையப் பேர் படிப்பதில்லை. படிப்பதால் சுயதன்மை பாதிக்கும் என்று இருப்பவர்களும் இருக்கிறார்கள். படிக்காமல் இருப்பதே ஒரு தகுதி என்றும் சொல்கிறார்கள். அது தவறு. மற்றவர்கள் எழுத்தைப் படிப்பதில்லை. படிப்பவர்கள் அவர்களின் நல்ல அம்சங்களைப் பாராட்டுவதில்லை.

குழு மனப்பான்மை அதிகமாகியதால் இலக்கியம் பரவலாக வளரவில்லை. இதனால் தமிழ்நாட்டுக்குள்ளேயே நல்ல விஷயங்கள் தெரியாமல் போய்விட்டது. ஆங்கிலம் தெரிந்த எழுத்தாளர்கள் இன்னும் நல்ல முறையில் மொழிபெயர்ப்பு செய்திருக்கலாம். விமரிசனம் ஒரு மொழியினுடைய வளர்ச்சிக்கு அவசியம். வாசகர்களுக்கு எது சிறந்ததென்பதை சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. பத்திரிகைகளும் 'இஸங்கள்' பற்றி நல்ல முறையில் அறிமுகம் செய்திருக்கலாம். கேரளாவில் அறிமுகம் செய்த மாதிரி. எழுத்தாளர்களுக்குப் புரியும்படி இஸங்களை அறிமுகப்படுத்த வேண்டும். பிறகு தனிநபர் தாக்குதல்கள் பத்திரிகைகளில் அதிகமாக இருக்கிறது. அவர்கள் நிரூபிப்பதற்கு எழுதிக் காட்டினால் நன்றாக இருக்கும். இன்னும் சிந்தனைபூர்வமான கட்டுரைகள் எழுதவேண்டும்.

**- வல்லிக்கண்ணன்**



70. மாரிகாஸசெட்


*Best Compliments*

**SUSHRUSHAH HOSPITALS**

Dr. R. Mohandhas M.B.B.S. D. Ortho
Orthopaedic Surgeon

Dr. Geetha Mohandhas M.B.B.S. D.G.O.
Obstetrician & Gynecologist

Kalliancaud Junction, Nagarkoil - 629 003. Phone : 32346.



நல்வாழ்த்துகள்

71. பியர் அகஸ்டின் ரெனுவா


சேகர் ஓட்டுநர் பயிற்சிபள்ளி, டாக்டர். சுப்பராயன் ரோடு, சேலம் 1 ● ஜானி ஓட்டுநர் பயிற்சிபள்ளி, கோட்டை, சேலம் 1 ● ஜெயம் ஓட்டுநர் பயிற்சிபள்ளி, 4 - ரோடு, சேலம் 5 ● வி.வி. ஓட்டுநர் பயிற்சிபள்ளி , அஸ்தம்பட்டி, சேலம் 7 ● பூபதி ஓட்டுநர் பயிற்சிபள்ளி, குமாரசாமிப்பட்டி, சேலம் 7 ● சுப்பராயபிள்ளை ஓட்டுநர் பயிற்சிபள்ளி , காந்திரோடு, சேலம் 7 ● வேல் ஓட்டுநர் பயிற்சிபள்ளி, குமாரசாமிப்பட்டி, சேலம் 7 ● தங்கம் ஓட்டுநர் ப்யிற்சிபள்ளி, குமாராசாமிப்பட்டி, சேலம் 7 ● கிரி ஓட்டுநர் பயிற்சிபள்ளி, சீரங்கபாளையம் ரோடு, சேலம் 7 ● ஜெயபிரகாசம் ஓட்டுநர் பயிற்சிபள்ளி, செரிரோடு, சேலம் 6 ● சாமுண்டி ஓட்டுநர் பயிற்சிபள்ளி, முள்ளுவாடி, சேலம் 6

*Best compliments*

# MERCURY FISHNET

8/50, F. Ramapuram West, Maniketti Pottal Post, Kanniakumari - 629 501.
Phone : Off : 50272, 50424, Res : 32925, 33342.

72. ப்ரோபிர் குப்தா



சித்திரை முதல் நாள் திருவிழாவிற்கு எப்படியாவது குழந்தைகளுக்கு மட்டுமாவது புதுத்துணிமணிக எடுத்தாகணும். அதற்கு என்னவழி? என்று புரியாமல் யோசித்துக் கொண்டிருந்தாள் மாடத்தி. திடீரென நேற்று லெட்சுமித்தாய் ரூபத்தில் வழிபிறந்ததை நினைத்து நினைத்து மனசுக்குள் சந்தோச சிரிப்பாணி பொத்துக்கொண்டு வந்தது. நேற்றுவரை யோசித்து யோசித்து வழிதெரியாமல், கடைசியில் வாரவட்டிக்காரனிடமாவது வட்டிக்கு வாங்கி துணிக எடுக்கணும் என்று முடிவெடுத்திருந்தாள் மாடத்தி. ஒண்ணுக்கு பத்தாய் வட்டிக்கு வாங்குவது மனசுக்கு கஷ்டமாகத்தானிருந்தது என்றாலும் வேறுவழியும் புலப்படவில்லை. போனவருச சித்திரைத் தீர்த்தத்திற்கு இருந்ததிலேயே நல்லதுணி மணிகளை எடுத்துப்போட்டுக்கொண்டு கிராமத்திலிருந்து கோவில்பட்டிக்கு வந்திருந்தார்கள். பெரிவளுக்கு பிளாஸ்டிக் வளையல், கம்மல், பையனுக்கு துப்பாக்கி, இரப்பர் பந்து, சின்னவளுக்கு ஆப்பிள் பலூன், சடுகுடு என்று இஷ்டப்பட்டதை வாங்கிக்கொண்டு ஆளுக்கொரு 'ஜில்விலாஸ்' கலர் குடித்துவிட்டு அதற்கு ஓசியாக தந்த விசிறியை கையில் பிடித்துக்கொண்டு கடைசி பஸ்ஸை பிடித்து ஊர் போய் சேர்ந்தார்கள்.

"இனிமே வருசாவருசம் சித்திரைத் தீர்த்தத்திற்கு கோவில்பட்டியை பார்க்க கிளம்பிரவேண்டியதுதான். சவத்த போம்போது என்னத்த கொண்டு போகப்போறோம். இருக்கிற வரைக்கும் பாடுபடவேண்டியது. எல்லாத்தையும் அனுபவிச்சிட்டுப் போகவேண்டியது. திருழாக்கூட்டத்தை பாக்க குடுத்து வெச்சிருக்கணும். ஒண்ணு வாங்காட்டியும்கூட கூட்டத்தமட்டும் கண் குளிர பார்த்தா போதாதா எனச் சொல்லிசொல்லி வியந்தாள் மாடத்தி.

ஆனா, மழையுமில்லாம தண்ணியுமில்லாம கிராமத்தைவிட்டு



# அமராவதி

ஓவியம்: **மனோகர்**

கோவில்பட்டிக்கே வரவேண்டியதாப் போச்சு. வந்த புதுசுலே டவுனு பழக்கவழக்கம் எல்லோருக்குமே சங்கடமாகத்தானிருந்தது என்றாலும், இரண்டு மாசத்திலேயே எல்லாமே பழகிப்போச்சு. ஆனா, லெட்சுமித்தாய் மட்டும் மாடத்தியோடு வந்த புதியவர்களைக் கண்டதும் அசைபோடுவதை நிறுத்திவிட்டு "ம்மா" என்றபடி எழுந்துநின்று விழித்துப் பார்த்தது. லெட்சுமித்தாய் எழுந்திருக்க வேண்டுமே என்பதற்காகவே காத்திருந்ததுபோல் வாலைத் தூக்கி 'சொத் சொத்' என்று சாணிபோட்டுவிட்டு சர்ரென மூத்திரம் விட்டுவிட்டு வாலை மடக்கிக் கொண்டது. தேங்கிக்கிடந்த மூத்திரத் தண்ணீரில் சாணி விழுந்து கரைந்து சாணிக்கரைசல் சிவப்பாக கொஞ்சதூரம் ஓடிநின்றது. கிராமத்திலிருக்கும்போது பச்சைப் புல்லை தின்னு பச்சைப்பசேல்னு இருக்கும் சாணி. மாடத்தியக்காக்கு மட்டும் எங்கிட்டுயிருந்ததுதான் புல்லு கிடைக்குமோ தாயி? தண்ணியா புல்ல அரிச்சிட்டு வந்திருதானு சொல்லி, சாணி பூமியில விழறதுக்குள்ள அள்ளிகிட்டு போயிருவாக. இப்ப வெலைக்கு வாங்கற நாத்துக் கூளத்த திண்ணுதிண்ணு சாணிகூட அருக்கெட்டுப் போச்சு.

வந்தவர் கொஞ்சம் யோசித்தபடி நின்றிருந்தார். '

'என்னங்கய்யா, எதுக்கு எங்க லெட்சுமித்தாயை பாக்க வந்திக?" குழப்பமாய்க் கேட்டாள் மாடத்தி.

"பசுவுக்கு பேரெல்லாம்கூட வெச்சிருக்கீகளா?"

"ஆமா, நீங்க பணக்காரவுக. வீட்டுக்குள்ளேயே மெதுமெதுனு வெள்ளையா நாய் வளர்ப்பீக. அதுக்கு என்னென்னமோ பேரெல்லாம் வெப்பீக. நாங்க ஏழைக்குத் தக்கன எள்ளுருண்டைங்கற மாதிரி லெட்சுமித்தாய்னு பேரு வெச்சிருக்கோம்.

"வந்தவருக்கு லெட்சுமித்தாய் என்றபெயர் பிடித்திருக்கவேண்டும். பேரெல்லாம் நல்லாத்தானிருக்கு. மாடுதான் சாணியும் சகதியுமா..."

"என்னங்கய்யா செய்யறது? ஊர்ல இருக்கும்போது ஒரு அழுக்குப்படாம தெனந்தெனம் குளத்துல குளிப்பாட்டுவோம். மழைதண்ணி இல்லாம அதுக்கு வழியில்லாமப்போச்சு. இங்க ரூபாய்க்கு ரெண்டு குடம் தண்ணி விலைக்கு வாங்கி ரெண்டு நாளைக்கு ஒருதடவை குளிக்க விட்றோம். அடுத்த மாசம் இதுக்கும் வழியில்லாம போயிரும் போல" விரக்தியோடு பேசினாள் மாடத்தி.

"அடுத்த வாரம் புதன்கிழமை எங்கவீடு கிரகப்பிரவேசம். அதுக்காக ஒங்க பசுவை ஒருமணி நேரம் தந்து உதவணும்..."

பால் காய்ச்சறதுக்கு பால்தான் வேணும். பசு எதுக்கு? என்று குழம்பிப் போனாள். அவளின் குழப்பத்தை பார்த்தவர் மீண்டும் பேசினார்.

"நீங்க சும்மா தர வேண்டாம்மா... ஆயிரம் ரூபா தருவோம். இப்ப அட்வான்சா இந்த நூறு ரூபாயை வெச்சுக்கங்க என்றவர். பாக்கட்டிலிருந்து பர்சை எடுத்து அலட்சியமாக நூறு ரூபாயை எடுத்து தந்தார்.

"ஐயோ, அதுக்கில்லீங்க. எங்க வீட்டாரு வெளிய போயிருக்கு. பெறகுதான். வருவாக. அவுககிட்டதான் கேக்கணும்.

"சரிங்கம்மா, அவரு வந்தவுடனே என்னை பார்க்க வரச் சொல்லுங்க. பயப்படாதீங்க. ஒங்க லெட்சுமித்தாயை ஒண்ணும் பண்ண மாட்டோம். கிரகப்பிரவேசத்திற்கு முன்வாசல் வழியா கூட்டிட்டு போயி, வீட்டுக்குள்ள பூஜைரூமுக்குள்ள போயி ஒரு பூஜை பண்ணிட்டு, பின்வாசல் வழியா வெளியே வந்திரணும். ஒரு கால்மணி நேர வேலைதான்."

ஏதோ கொஞ்சம் புரிந்ததும், மாடத்திக்கு அப்பாடா என்றிருந்தது. "என் வீட்டாரு வந்ததும் எங்கன வந்து ஒங்கள பாக்க வரச் சொல்றது?"

"ரெண்டு தெரு தள்ளி வர்ற வழியிலே ஒரு வீடு. இப்பதான்





21a

முடிச்சிருக்கோம். இன்னும் மூணுநாள் தானிருக்கு கிரகப்பிரவேசத்துக்கு. பந்தல்கூட போட்டிருக்கும். அங்கதான் எப்பவும் இருப்போம். நீங்க அவரை வரச்சொல்லுங்க. மத்ததை நான் பேசிக்கிறேன்." வந்தவர்கள் போய்விட்டார்கள. அவர்கள் பேசிவிட்டு சென்றதுமட்டும் மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டே இருந்தது. சித்திரைத் தீர்த்தத்துக்கு செலவுப்பாட்டுக் கவலை ஒய்ஞ்சது. புருசனின் வரவுக்காக காத்திருக்கத் தொடங்கினாள் மாடத்தி.

விசயத்தைக் கேட்டவுடன் இராமசாமி சரியென்று தலையாட்டாதது மாடத்திக்கு எரிச்சலைக் கிளப்பியது. இந்தமனுஷன் எப்பவும் இப்படித்தான். வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டுனு பட்டுனு சொல்லமாட்டாரு... சும்மா வாய்க்குள்ளேயே முணுமுணுனு மொணங்கிக்கிட்டே இருப்பாரு'னு கோபமா வந்திச்சு.

"அதுக்கில்லே மாடத்தி, கண்கோளாறு ஏதாச்சும் விழுந்துட்டா...'

"அதெல்லாம் ஒரு கோளாறும் விழாது. போய்ட்டு வந்து அம்பது வத்தலை வாங்கிப்போட்டு தொழுவுக்கு முன்னால சுத்திப்போட்டா சரியாப்போகும். நீரு பேசாம வாரும். பேச வேண்டியதை ஒம்மருகிட்ட பேசிக்கிடுதோம்னு வந்த அய்யாமாருக சொல்லிட்டுப் போயிருக்காக. நானும் வாரேன். போய் என்ன ஏதுனு பேசிப்பாத்துட்டு வந்திருவோம்." இருவரும் கிளம்பிப்போனார்கள்.

அந்த வீட்டைப் பக்கத்துல போயி பார்த்ததுமே 'பக்'னு ஆகிப்போச்சு மாடத்திக்கு. வௌக்கி வெச்ச வெண்கலக் குத்துவிளக்கு மாதிரி கண்ணுல எடுத்து ஒத்திக்கிடலாம் போல இருந்திச்சு. இவர்கள் வந்த விசயத்தை வாட்ச்மேன் போய் சொல்லவும், காரில் வந்தவரே நேரில் வந்து கூட்டிப்போனார். தன்னோட உருவம் தரையில் கண்ணாடியில் தெரிவதுபோல் பளிச்சென்று தெரிவதைப் பார்த்து வாய்ப்பிளந்து நின்றாள் மாடத்தி.

"கொஞ்சம் முன்னாடியே பசுவை இங்கே கொண்டுவந்து, வேணுங்கிற தண்ணியை வெச்சு நல்லா கழுவி வெச்சிருங்க. ஒரு அரைமணிநேர வேலைதான் இருக்கும். மத்தத அப்ப பார்த்துக்கலாம். அட்வான்சு இப்ப வாங்கிக்கங்க. பெறகு, ஆயிரருபா தர்றேன்" என்றபடி நூறுரூபாயை எடுத்துக் கொடுத்தார். மாடத்தி பார்க்க, இராமசாமி தன்னிச்சையாக பணத்தை வாங்கிக் கொண்டான்.

குழந்தைகளை எல்லாம் கூட்டிக்கொண்டு வந்து திருப்தியா சாப்பிட்டுவிட்டு போகும்படி வாட்ச்மேனிடம் சொல்லி அனுப்பியிருந்தார் வீட்டுக்காரர். முதல்நாளே புதுவேட்டி, சட்டை கொடுத்தனுப்பி, மறுநாள் போட்டுவிடும்படி சொல்லியனுப்பி இருந்தார் வீட்டுக்காரர்.

"இப்படி காய்ஞ்சு போயி கெடக்கற டவுனுல, எத்தனை நல்ல மனசு அந்த எசமானுக்கு. என்னதான் கொள்ளையா குமிஞ்சு கெடந்தாலும் குடுக்கறதுக்கு மனசு வரணுமே. புண்ணியவான் நல்லா இருக்கணும் என்று சொல்லி சொல்லி வியந்தாள் மாடத்தி. வீடு வாடகைக்கு புடிச்சு இருக்கறாப்பல மாட்டையும் வாடகைக்கு விட்டு சம்பாதிக்கலாமோ என்று தோன்றியது மாடத்திக்கு. பால் காய்ச்சறவங்க எல்லாமே இப்படி பசுவை வாடகைக்கு எடுப்பாங்களானும் சந்தேகம் வந்துச்சு.

காலையிலேயே குழந்தைகளை எழுப்பி குளிக்கவிட்டு, நல்ல துணிமணிகளைப் போட்டுக்கொண்டு லெட்சுமித்தாயையும் கூட்டிக்கொண்டு போனார்கள். புண்ணியத்துக்கு லாட்டரிச்சீட்டு அடித்ததுமாதிரி சொளையா ஆயிரம்ரூபாய் கிடைத்ததை எண்ணி, லெட்சுமித் தாயை பெருமை பொங்கப் பார்த்தாள் மாடத்தி.

மனம்போல் தண்ணீரைக் குழாய்வழியே பீய்ச்சி, லெட்சுமித் தாயை குளிக்கவிட்டார்கள். இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் தலையை ஆட்டி ஆட்டி தன் சந்தோசத்தை வெளிப்படுத்தியது லெட்சுமித்தாய். ஒரு பெரிய மாலையும், சிவப்பு பட்டுத்துணியும் கொடுத்து கழுத்தில் கட்டச் சொன்னார் வீட்டுக்காரர். சிவப்புப்பட்டும், பூமாலையுமாக கம்பீரமாக நின்ற லெட்சுமித்தாயை பார்க்கப் பார்க்க மாடத்திக்கு சந்தோசம் பிய்த்துக்கொண்டு போனது.

லெட்சுமித்தாயை ஒரு ஆள்வந்து போட்டோ எடுத்துவிட்டுப் போனார். மாடத்திக்கு லெட்சுமித் தாயோட நின்னு ஒரு போட்டோ எடுக்கணும்போல இருந்திச்சு. அந்த ஆயிரம் ரூபாயில ஒரு நூறு செலவழிச்சு போட்டா புடிக்கலாநதான். ஆனா, லெட்சுமித் தாயை எப்படி போட்டோ புடிக்கிற கடைக்குள்ள கூட்டிட்டு போக முடியும்னு யோசனையா இருந்திச்சு. இராமசாமி காதுக்குள்ள இரகசியமாக சொன்னாள் மாடத்தி.

அந்தப் பக்கமாக வந்த வீட்டுக்காரம்மா ''என்ன இரகசியம் பேசுறீங்க?" என்று சிரித்தார். மாடத்திக்கு சொல்வதற்கு வெட்கமாக இருந்தது. வெட்கத்தைப் பார்த்தால் லெட்சுமித்தாயோட நின்று போட்டோ எடுக்க முடியுமானு நினைச்சு, தன்னோட ஆசையைச் சொல்லவும், இவ்ளோதானா?னு போட்டோ பிடிக்கறவரை கூப்பிட்டு ஒரு போட்டோ எடுக்கச் சொன்னார்.

தன் பிள்ளைகளை கூப்பிட்டு, லெட்சுமித்தாயின் முன்னால் உட்கார வைத்து, இரண்டு பக்கமும் இராமசாமியும், மாடத்தியும் நின்றுகொண்டு போட்டோ எடுத்தார்கள்.

சரியான நேரம் வரவும், தாம்பாளத்தில் சந்தனம், குங்குமத்துடன் வீட்டுக்காரம்மா வாசலில் வந்து நின்றார்கள். கேமராகாரர் கண்டபடி பளிச் பளிச்சென போட்டோ பிடித்துக் கொண்டிருந்தார். இன்னொரு பக்கம் மும்முரமாக வீடியோ எடுத்தார்கள். முதலில் சூழ்நிலையைப் பார்த்து மருண்டது லெட்சுமித்தாய்.

வீட்டுக்காரம்மா பயந்தவாறே சிரித்துக்கொண்டு சந்தனமும் குங்குமமும் வைத்தார்கள். முதலில் தலையை சிலுப்பி, மிரண்டாலும் மாடத்தியின் குரலுக்கும், இராமசாமியின் கைதடவலுக்கும் கட்டுப்பட்டு நின்றது. சந்தனம், குங்குமப்பொட்டில் சிவப்புப் பட்டும் பூமாலையுமாக கையெடுத்துக் கும்பிடலாம் போலிருந்தது லெட்சுமித் தாய். லெட்சுமித்தாய் வீட்டுக்குள் வரட்டும் என வீட்டுக்காரர் சிரித்தபடி சொல்ல, வீட்டுக்குள் மெதுவாக அழைத்துப் போனார்கள். வழுவழுவென்றிருந்த மொசைக் தரையில் தன்தலை தெரிவதைப் பார்த்து மிரண்ட லெட்சுமித்தாய், தன் எசமானின் கட்டளைக்கு கீழ்ப் பணிந்து, முன்னங்காலைத் தூக்கி மொசைக் தரையில் வைத்தது. தன் பின்னங்காலை எடுத்துவைக்க முயன்ற லெட்சுமித்தாய் முடியாமல் மிரண்டது. மீண்டும் மீண்டும் வற்புறுத்த, முன்னங்காலை ஊன்றி இன்னொரு காலைத் தூக்கி சர்ரென வழுக்கி நான்கு கால்களையும் திசைக் கொன்றாக பரப்பிக்கொண்டு கீழே விழுந்தது. மாடத்திக்கு தன் ஈரக்குலையை யாரோ பிடுங்கிப் போட்டது போலிருந்தது. இராமசாமி ஒன்றும் புரியாமல் விழித்தான். விழித்துப் பார்த்தபடி எழும்ப முயன்று, மீண்டும் மீண்டும் தோற்றுக் கொண்டிருந்தது லெட்சுமித்தாய். ●



73. கேமல் கெரோட்

*Best compliments*

***NALLAPERUMAL READYMADES & NALLAPERUMAL & SONS***

(PIECE - GOODS MERCHANTS)

Nallaperumal Towers, Veppamoodu Junction, Nagarkoil - 629 001.
Phone : 33110, 25288.

# தற்கால வெளிப்பாடு தமிழ் அழகியல்

**க**லை வெளிப்பாடு என்பது காற்றிலிருந்து பிறப்பது அல்ல. அசலான கவிதையின், சிற்பத்தின் ஓவியத்தின் ஊற்றுக் கண்ணாக இருப்பது வாழ்க்கைதான். தற்கால தமிழனின் வாழ்க்கையில் உயிர்த்துடிப்புடன் இருக்கிறயதார்த்தம், ஒரு கலை, கலைப் படைப்பாளியின் வெளிப்பாட்டுக்கு உதவி செய்ய முழுமனதுடன் காத்திருக்கிறது. இன்றைய தமிழனின் தற்கால யதார்த்தத்தில், அவனது பண்டையத் தமிழ்க் கலை மரபுகளும் – சங்ககாலம் தொட்டு இன்று வரை – உயிர்த்துடிப்புடன் கலந்து வாழ்ந்து வருகின்றன என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இவற்றை காய்தல், உவத்தல் அற்ற விமர்சனப்பார்வைகளுடன் அடையாளம் காண்பதும், அவற்றை மீள் கண்டுபிடிப்பு செய்து பயன் படுத்துதலும், இன்றைய கலைவெளிப்பாட்டை அசல் தன்மையுடைய ஒன்றாக உயர்த்தும். இவற்றைப் பற்றி சற்று சிந்திப்போமானால் தமிழனுக்கு என்று தனியான ஒரு அழகியலை நாம் கட்டி எழுப்ப முடியும்.

1. நவீன ஓவியங்கள் நிறைந்துள்ள ஒரு கலை அரங்கினுள் பார்வையாளன் ஒருவன் உள் நுழைகிறான். அவனது பார்வை ரீதியான அழகியல் அனுபவத்தின் பின்புலத்திற்கேற்ப அவன் அந்த ஓவியங்களுக்கு எதிர்வினையாற்றுகிறான். இன்றைய தமிழகத்தின் பரபல ஓவியர் கே.எம். ஆதிமூலத்தின் அரூப ஓவியம் ஒன்றை அவன் காண்கிறான். உடனே அவன் அந்த ஓவியத்தின் வண்ணங்களின் கலவை மனதிற்கு மகிழ்ச்சி அளிப்பதாக இருந்தாலும், அது தனக்கு புரியவில்லை என்று குறைபட்டுக் கொள்கிறான்.

இது எதனால் நிகழ்கிறது?

தனக்குப் புரியாத மொழியால் தெலுங்கு மொழியில் பாடப்படும் தியாகராஜ கீர்த்தனையை ரசித்து மகிழ்கிற தமிழர்களும் கூட, ஆதிமூலத்தின் ஓவியம் மட்டும் புரியவில்லை என்று குறை கூறுகிறார்கள். இது ஏன்?

இந்திரன்

ஓவியம் : கே.எம். கோபால்



"மரபு ரீதியான நமது கலை வெளிப்பாடுகளைப் புரிந்து கொள்ளாமல், நவீன கலை வெளிப்பாடுகளைப் புரிந்து கொள்வது கடினமாகும்."

தியாகராஜ கீர்த்தனையை ரசிப்பது எப்படி என்ற குறைந்தபட்ச பயிற்சியாவது அவன் பெற்றிருக்கிறான். ஆனால் நவீன ஓவியத்தை ரசிப்பது எப்படி என்கிற பயிற்சி அவனுக்கு கிடைக்கவில்லை. அதனை பார்வையாளருக்குக் கொடுக்க வேண்டும் என்கிற அக்கறை தமிழகத்து ஓவியர்களுக்கும் இல்லை; அது பற்றி பாராட்டிப் பேசுகிற விமர்சகர்களுக்கும் இல்லை.

அடுத்ததாக, நவீன ஓவியங்கள் புரியவில்லை என்று குறைபடுகிற எத்தனை தமிழர்கள் நமது சித்தன்ன வாசல், திருப்பருத்திக்குன்றம் போன்ற இடங்களிலுள்ள ஓவியங்களைச் சென்று பார்க்கும் முயற்சிகளில் ஈடுபட்டார்கள். தொன்மையான நமது கோயில் சிற்பத்தூண்களைச் சுற்றி (குறிப்பாக மதுரையின் மீனாட்சி அம்மன் கோயில்) கடைத்தெருக்களை அமைத்துள்ள நாம் எந்த அளவுக்கு அவற்றின் கலை அழகு குறித்து கவனம் எடுத்துக்கொண்டோம். அதுதான் இல்லை என்றால், அவற்றைப் பேணிக்காப்பதிலும், அவற்றைச் சிதைக்காமல் இருப்பதிலும் நாம் எந்த அளவுக்கு அக்கறை செலுத்தினோம். இவற்றை நாம் செய்யாமல் திடீரென்று நவீன ஓவியம் புரிவதில்லை என்று குறைபட்டுக் கொள்வதில் என்ன நியாயம் இருக்கிறது?

மேலும், மரபு ரீதியான நமது கலை வெளிப்பாடுகளைப் புரிந்து கொள்ளாமல், நவீன கலை வெளிப்பாடுகளைப் புரிந்து கொள்வதும் கடினமாகும். உதாரணமாக, சென்னை கலைத்தொழில் கல்லூரியின் இன்றைய முதல்வர் அல்போன்சோ அருள்தாஸ் படைக்கும் நவீன நடராஜ ஓவியங்களை எடுத்துக் கொள்வோம். தமிழன் உலகக்கலைச் செல்வத்திற்கு அளித்த ஒரு பரிசான ஆடல் வல்லானின் செப்புத் திருமேனியின் கலைத் தத்துவத்தை எந்த அளவுக்கு புரிந்து கொண்டுள்ளோமோ அந்த அளவுக்கு அல்போன்சோவின் நவீன ஓவியத்தையும் புரிந்து கொள்ளும் வல்லமை பெற்றுவிடுகிறோம். அல்போன்சோவின் தற்காலத் தன்மை கொண்டு நடராச ஓவியங்களில் தமிழனின் கலைமரபு மீள்கண்டு பிடிப்பு செய்யப்பட்டு புதிய வெளிப்பாடு அடைகிறது. இங்கே நான் சொல்லும் தமிழ் அழகியல் என்பது செயல்படுகிறது. தமிழ் அழகியல் நவீன வெளிப்பாட்டுக்கு மேலும் செழிப்பூட்டுவதாக அமைகிறது.

2. தற்கால கலைஞன் பல்வேறு காரணிகளால் பாதிக்கப்படுகிறான், பழங்காலம், நிகழ்காலம், உள்நாடு, வெளிநாடு, தனிமனித சில வெளிப்பாடு, சமூகத்தின் கூட்டுக்காரணங்கள் ஆகியவை அவனை அலைக்கழிக்கின்றன. தொழில்நுட்பத்தால் மாற்றமடையும் சமுதாயமும், பூமியியலும், பண்பாட்டு அமைப்பிற்கான பொருளாதாரமும், அவனுக்குப் பின்னால் நின்று அவனது பொம்மலாட்டக் கயிறுகளை அசைக்கின்றன.

இதனால், ஒரு இலக்கியப் படைப்பு என்பதை எடுத்துக் கொண்டால் அது தனித்துவமான தாகவும். தனித்துவமற்றதாகவும்

> தமிழனின் இன்றைய கலை வெளிப்பாடு தற்காலத்தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். தமிழ் அடையாளம் கொண்டதாக இருக்க வேண்டும்.

உள்ளது. மாறிவரும் உலகத்துடன் சேர்ந்து தமிழனின் கலைவெளிப்பாடும் மாற்றமடைகிறது. இந்த மாற்றம் தற்கால கலை, இலக்கியத்தின் மீது மட்டுமல்லாமல், பழங்கால இலக்கியம் பற்றிப் புரிந்து கொள்வதிலும் பல மாற்றங்களைக் கொண்டு வருகிறது. இதனை இந்தியாவின் முக்கிய சமூக விமர்சகரான ஆஷிஸ் நந்தி கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்.

நிகழ்காலத்துடன்
உறவுகொண்ட கடந்தகாலம்

முறிந்துபோன நிகழ்காலம்

(இது கடந்தகாலத்துடன்
போட்டியிடுவது)

நிகழ்காலத்தையும்
கடந்தகாலத்தையும் சீரமைப்பது

புதிய கடந்தகாலம்

இத்தகைய ஒரு இயக்கத்தைத் தான் தமிழ்க்கலை மரபை மீள்கண்டு பிடிப்பு செய்தல் என்று நான் குறிப்பிடுகிறேன். இதனால் கலை மரபு என்பது தற்கால வெளிப்பாட்டிற்கேற்ப புதிய வடிவமும், புதிய பொருளும் கொள்கின்றன.

ஆனால் தற்கால தமிழ்ச் சூழலில் இத்தகைய கடினமான முயற்சிகளை மேற்கொள்ளத் தயாராக இல்லாத படைப்பாளிகள், மேலைநாட்டுக் கவிதைகளையும், கலை, இலக்கியப் போக்குகளையும் வெறுமனே போலி செய்வதன் மூலமாக ஒரு அதிர்ச்சிப் பண்பை உருவாக்கி அதையே தங்களது கலைச் சாதனைகளாகக் காட்டி விடுகின்ற சோகம் இருக்கிறது. நமது பழந்தமிழ் மரபுகளானாலும் சரி, மேலை நாட்டு கலை இலக்கிய மரபுகளானாலும் சரி, அவை தற்காலத் தமிழனின் யதார்த்தத்திற்குப் புறம்பாயிருக்கிற அளவில் அவை கேவலமான போலிப் படைப்புகளே.

3. நவீனத்துவம், பின்-நவீனத்துவம், அதி-நவீனத்துவம் போன்ற சொற்கள் தற்கால தமிழ் விமர்சன உலகில் பரவலாகக் கையாளப் படுகின்றன. இவற்றைக் கையாள்கிற அளவில் தமிழ்க் கலை, இலக்கிய முயற்சிகள் சர்வதேசத் தன்மை கொண்டதாக வளர்ச்சியடைகின்றன என்று இங்கு நம்பப்படுகிறது.

நவீன கலை என்று சொல்கிறபோது அது முதல் உலகப் போருக்கும் பிறகு மேலை நாடுகளில் தோற்றம் கொண்டு, உலகம் முழுவதும் பரவிய ஒரு புதிய போக்கு என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால் இதன் பொருள் மேலை நாட்டுத்தனம் என்பது அல்ல. நவீன கலை என்பது மேலைநாட்டு நவீன ஓவியங்களைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவது என்ற முடிவுக்கு தமிழ்ப் படைப்பாளிகள் வருவார்களானால் உலகக் கலை அரங்கில், தமிழ்ப் படைப்பாளிகள் மேலை நாட்டு மேதைகளின் இரண்டாம் தரமான, மூன்றாம் தரமான போலிகள் என்கிற அவப்பெயர்தான் வந்து சேரும். இதன் உண்மையான பலனை நாம் அடைய வேண்டுமானால் தற்காலத் தமிழனின்

யதார்த்தத்தை, புதிய சிந்தனையின் வெளிச்சத்தில் மறுபரிசீலனை செய்ய முனையவேண்டும். இன்றைய சமூகத்தின் கீழ்த்தட்டு மனிதர்கள் என்று நம்மால் கருதப்படுபவர்களிடம்தான் மாசுபடுத்தப்படாத மூல சக்தி கொண்ட கலை, பண்பாட்டுக் கூறுகள் உள்ளவன் என்பதால் அவர்களிடம் கற்றுக்கொள்ள நமது நவீன படைப்பாளிகள் முன்வரவேண்டும். இதற்கான சிறந்த உதாரணங்களாக தமிழகத்தில் முக்கிய சிற்பியான மூக்கையாவைச் சிறந்த ஓவியரான பெருமாள் போன்றவர்களைச் சொல்லலாம்.

இவர்கள் தற்காலக் கலைமொழியில், தமிழர்களின் வாழ்க்கையின் எரிக்க முடியாத அனுபவங்களைப் பேசுகிறார்கள். மூக்கையாவின் பறை அறைபவன், ஜல்லிக்கட்டு, காவடி ஆட்டம் போன்ற சிற்பங்கள் உண்மையான தமிழ் அழகியலைப் பேசுபவை. ஓவியர் சந்துருவின் சித்திரங்களும், ஓவியங்களும் தற்காலத்தன்மையுடன் தத்துவார்த்தமான புரிதலுடன் கூடி இருப்பதை உணரலாம். இவர்கள் அனைவரும் இன்றைய தமிழ் மண்ணில் இன்றும் உயிர்த்துடிப்புடன் வாழ்ந்துவரும் தமிழ்க் கலை மரபுகளைப் பேசுகிறார்கள்.

4. தத்துவம் உண்மையைத் தேடுகிறது. கலை அழகைத் தேடுகிறது என்று சொல்வார்கள். இன்று கலையும் தத்துவத்தைப் போலவே உண்மையைத் தேடத்தொடங்கிவிட்டது. இன்றைய கலை எதிர்நோக்கும் பிரச்சினைகள் நேற்றைய கலை முடிவுகளினால் ஏற்படுத்தப்படுகின்றன. காலந்தோறும் வாழ்க்கை கலையின் மீது வைக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் அழகியல் தன்னை அன்றாடம் புதுப்பித்துக் கொள்கிறது. இதற்கேற்ப தறகால கலை வெளிப்பாடு மாற்றமடைந்து கொண்டே இருக் கிறது.

எனவேதான் தமிழ்ச் சூழலில் படைப்பாளி என்பவன் சதா கலை வெளிப்பாடு குறித்த அடிப்படை வினாக்களை எழுப்பிக்கொண்டே



ஓவியம் : கே.சி. முருகேசன்

இருக்க வேண்டியவனாகிறான்.

கலைபடைப்பு ஏன் நிகழ்கிறது?

கலை படைப்பு யாருக்காக செய்யப்படுகிறது?

கலைக்கும் வாழ்க்கைக்கும் உள்ள உறவு என்ன? இத்தகைய வினாக்கள் தீர்மானமான பதில்களைக் கொடுக்காமல் இருக்கலாம். ஆனால் இந்த வினாக்களுக்கான விடைகளைத் தேடுகிறபோது, கலைப்பற்றி இது வரை எழுப்பப்படாத நல்ல பல புதிய வினாக்கள் கிடைக்கலாம்.

அழகியல் எழுப்பும் அடிப்படை வினாக்கள், தமிழனின் அசலான உன்னத படைப்புகளைப் படைக்க உதவும். தமிழ்ப் பண்பாட்டு அடையாளங்களுடன் கூடிய உன்னதப் படைப்புகளுடன் உலக அரங்கில் நாம் நமக்கென ஒரு இடத்தைப் பிடிக்க முடியும்.

5.''உள்ளே உயிர் இருக்கிறது. நமக்குள் வலிமையிருக்கிறது. மேல் தோல்தான் காய்ந்து போயிருக்கிறது. அதைக் கழற்றியெறிந்துவிட்டு அதற்கு அப்பால் ஓடுகிற காலநதியிலே ஸ்தானத்தைப் பண்ணி எழவேண்டும். தற்காலத்துக்குப் பயந்து முற்காலத்துக்குத் தலையை நுழைத்துக் கொள்ளுவோன் செத்தவனுக்குச் ஸமானமே'' என்று பேசுவார் மகாகவி பாரதி.

எனவேதான் தமிழனின் இன்றைய கலைவெளிப்பாடு தற்காலத்தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். தமிழ் அடையாளம் கொண்டதாக இருக்க வேண்டும். இப்படி சொல்வது குறுகிய மொழி வெறிச்செயல் அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இது ஒரு கலை படைப்பின் நேர்மை குறித்து சொல்லப்படுவது ஆகும். பார்க்காத வெளிநாட்டு மலர், நுகராத மேல்நாட்டு நறுமணம், கண்டிராத மேல்நாட்டு ஓவியம், சிலை குறித்து நூல்களில் படித்துவிட்டு அந்தப் பெயர்களைத் தமது படைப்புகளில் வைத்து எழுவதாலேயே தமிழனின் படைப்பு உலகத் தரத்தை எட்டிப் பிடித்து விட்டதாக நினைக்கக் கூடாது.

நொய்யல், தாமிரபரணி, மணிமுத்தாறு, காவிரி என்று நமது ஆறுகளைப்பற்றி கவிதை எழுவது என்பது நேர்மையானது. மாறாக நேரில் கண்டிராத மிசிசிபி நதி பற்றியும், நயாகரா நீர்வீழ்ச்சிப் பற்றியும் வர்ணிப்பது தமிழனின் நேர்மையின்மைக்கு பாதகம் சொல்வது ஆகும். வேம்பு, அரசமரம், அரளிப்பூ, கற்றாழை என்று நமது மரங்களும், செடிகொடிகளும் நமது தற்கால தமிழ்வெளிப்பாட்டில் காணப்படாமல் போனது ஏன் என்று தெரியவில்லை.

இத்தகைய கலை நேர்மையுடன் நமது கலைப் படைப்பாளிகள் தங்கள் படைப்புகளைச் செய்யத்தொடங்கி விடுவார்களென்றால், நமது கலை படைப்புகள் தனக்கெனத் தனியான தமிழ் அடையாளத்துடன் பல தலைகள் கொண்ட ஒரு அசுரனைப் போல் உயிர் பெற்றெழுந்து, பல வாய்களினால் உண்மையான அனுபவங்களைப் பேசத் தொடங்கி விடும்.

*Best Compliments*

HOTEL ARYAAS

ARYAAS LPG SERVICE

ARYAAS INSTITUTE OF COMPUTER TECHNOLOGY

TIRUNELVELI

74. எட்வர்ட்





ஓவியம்: மருது

# பாலாஜிக்கு ஹரே ராம்

கேள்விப்பட்டேன் அவளைப் பற்றி
ஒருமுறை கூடப் பார்த்ததில்லை ஆனால்,
ரவிக்கை மட்டுமாம் மேலே, தாவணி
எதுவும் இராதாம். இடுப்பில்
முடிச்சுப் போட்ட ஈரிழைத்துண்டாம்.
நழுவாது. ஆனால் காற்றில் பறக்குமாம்.

வீட்டுக் கூடத்தில் ஏதோ வேலையாய்
இருந்தவன் வாசலில் நிழலாடத்
திரும்பிப் பார்த்தேன். இருந்தாள்.
பாலாஜிக்கு ஹரேராம் என்று
பெயரிடப்பட்ட பிச்சைக்காரி,
முன்னே சொன்ன வர்ணனைக்கேற்ப

உடம்பு கோதுமை வர்ணம். பிச்சை
அரிசியில் கிடந்த நெல்லை வாயிலிட்டுப்
பல்லால் கொறித்தாள். அவளைக் காற்று
சோதனை போட வெட்கித் திரும்பினேன்.
பழைய சேலை ஒன்றைத் தந்தேன்.
உடுத்தவில்லை. மடித்துக் கொண்டாள்.

மறுநாள் கேள்விப்பட்டேன். உள்ளூர்க்
குதிரை வண்டிக்காரன், மண்டபத்தில்
அவளிடம் அயோக்யனானான் என்று,
மனதைக் கொஞ்சம் அரித்தது. நான் தந்த
சேலையில் இருந்தாளா அவள் அப்போது?

**ஞானக்கூத்தன்**



75. டியுஸ்டவ் கெய்லி போட்

*நல்வாழ்த்துகள்*

**MKM ஜூவல்லர்ஸ் ஏ/சி**

21-டி, எஸ்.என். ஹைரோடு,
திருநெல்வேலி - 1
போன் : 339455 / 339466

**கோமதி அரசு**

**ச. சோமசுந்தரம் செட்டியார் சன், (ஏசி)**

தங்க நகை வெள்ளிப்பாத்திரங்கள்,
கொலுசு வியாபாரம்,
*39,40,* மேலரத வீதி,
திருநெல்வேலி. போன் : *333120, 339937*



76. வின்செண்ட் வான்காஃப்

*Best Compliments*
KOVILPATTI LAKSHMI
ROLLER FLOUR MILLS LIMITED
GANGAIKONDAN 627 352. TIRUNELVELI DISTRICT

ஓவியம்: **ஆர். வீரபாண்டியன்**

வாழ்க்கை இயற்கையைப் போலச் சிக்கலானது. அதுவும் பிற விலங்குகளின் வாழ்க்கையில் இல்லாத புதிய ஒரு பரிமாணத்தோடு கூடிய சிக்கல் வாய்ந்தது. இந்த மனித விலங்கு வாழ்க்கை; அதுதான் ஆண் / பெண் உறவு; மானுடப் பிரச்னை வரலாற்றின் அடிப்படை அலகாகச் கொள்ளத்தக்கது இந்த ஆண் / பெண் உறவுமுறைதான். மற்ற விலங்குகளின் வாழ்வில் இந்த ஆண் / பெண் உறவுமுறை, மறு உற்பத்திக்கான இயற்கையின் தேவையை நிறைவேற்றுவதாக மட்டுமே அமைந்திருக்கிறது. குறிப்பிட்ட பருவ எல்லைக்குள் இயங்குவதாக மட்டுமே அமைந்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், மனித வாழ்வில் அமைந்துள்ளது போல, இந்த அளவிற்கு, ஆண்/பெண் என்ற மனோபாவம் கூட அமைந்திருக்குமா என்பது சந்தேகமே. இவ்வாறு மனிதனின் ஆண் / பெண் உறவுமுறை சிக்கலாக அமைவதற்குக் காரணம், இவன் இயற்கையை எதிர்கொள்ள அமைத்துக் கொண்ட மொழிவழிப்பட்ட சமூகப் பண்பாடு என்கிற கட்டுமானமே ஆகும். இந்தச் சமூகப் பண்பாட்டை வடிவமைப்பதில் பொருளாதாரச் சூழல் எத்தகைய செல்வாக்குச் செலுத்துகிறது. குறிப்பாக ஆண் / பெண் உறவில் எவ்வாறு இயங்குகிறது என்பதை விளங்குவதற்கு இக்கட்டுரையில் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

மனிதனது அனைத்து முயற்சிகளுக்கும் முதன்மையான காரணம், அவனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதே ஆகும். ஆனால் மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் முதலியவை திரும்பத் திரும்ப ஏற்படக் கூடியவை! எல்லைக்குள் அடங்காதவை! ஆனால் இவனுடைய உழைப்புச் சக்தியும், உற்பத்திக்கான காரணிகளும் எல்லைக்கு உட்பட்டவை! மேலும் இக்காரணிகள் ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்களின் உற்பத்திக்கு பயன்படக்கூடியவை! அன்றியும், ஒரு காரணியை ஒரு பொருளின் உற்பத்திக்குப் பயன்படுத்தினால், வேறொன்றுக்கு அது பயன்படாமல் போய்விடும். இத்தகைய நெருக்கடியான சூழலில், மனிதன் பால் "தேர்ந்தெடுத்தல்" என்ற கடினமான பணிவந்து விழுகிறது! இவ்வாறு காரணிகள் குறைவாக இருப்பதால், (எல்லைக்கு உட்பட்டதாக இருப்பதால்) எந்தெந்த தேவைகளுக்கு முதலிடம் அளிப்பது, அதையும் எதுவரையில் பூர்த்தி செய்து கொள்ள முடியும்? காரணிகளின் தன்மை என்ன என்றெல்லாம் தீர்மானித்தே ஆகவேண்டிய நெருக்கடிக்குள் மனிதன் தள்ளப்படுகிறான். இத்தகைய சிக்கலான தேர்வுகளை மேற்கொள்ள மனிதன் எடுக்கின்ற நடவடிக்கையைப் பற்றிப் படிப்பதே "பொருளாதாரயியல்" எனப்படுகிறது!

மேற்கண்ட "தேர்வுகளை" நிர்ணயிப்பதில் 'பண்பாடு' எனப்படும் மனித வாழ்வின் மற்றொரு பரிணாம வளர்ச்சி பெரும்பங்கு வகிக்கிறது. ஒவ்வொரு பண்பாடும் பொதுவான சில கருத்தாக்கங்களை, மதிப்பீடுகளைக் கொண்டு விளங்குகின்றது! இந்த மதிப்பீடுகளின் அடிப்படையில்தான் ஒவ்வொரு மனிதனும் தன் தேவைகளைத் தீர்மானிக்கிறான்! எனவே, பண்பாடு என்பது

# பொருளாதாரப் பின்னணியில் பெண்...

“ இந்து மதப் புராணங்களும், சடங்குகளும் ஆணுக்கு பெண் அடிமை என்ற கருத்தைத் திரும்பத் திரும்ப வலியுறுத்துகின்றன. இந்தக் கருத்தைத்தான் இன்றும் இந்தியத் தகவல் தொடர்புக் கருவிகள் மின்னணுவின் உதவியால் பல கோடி மடங்கு பெருகி விதைத்துக் கொண்டிருக்கின்றன. ”



**இரா. சீனிவாசன்**

**க. பஞ்சாங்கம்**



மேற்கண்ட பொருளாதார நடவடிக்கையில் பெரும்பங்கு வகிக்கிறது எனபது தெரிகிறது! அதே நேரத்தில் இந்தப் பண்பாட்டை வடிவமைப்பதில் பெரிதும் ஆதிக்கம் செலுத்துவது, அடிப்படையில் ஆண் / பெண் உறவு முறையாக இருக்கிறது! ஆக, இறுதியில் அப்படியும் இப்படியுமாகப் பொருளாதாரக் காரணிகளில் செல்வாக்குக்கு உட்படுகிற ஒரு கூறாக ஆண் / பெண் உறவுமுறை வந்து சேர்கிறது! எனவேதான் சுதந்திர இந்தியாவில் ஏற்பட்டுள்ள சமூகப் பொருளாதார மாற்றங்கள், எந்த அளவிற்குப் பெண்களின் வாழ்நிலையில் மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளன. அவற்றின் தன்மை என்ன என்பதை விளக்குவதன் மூலம் ஒரு தந்தை வழிச் சமூகத்தில் பெண்ணின் நிலை என்ன என்பதை மேலும் ஆழமாக அறிந்து கொள்ளலாம் என நம்பப்படுகிறது!

**பொருளாதார வளர்ச்சியும் பெண்கள் மேம்பாடும்:**

ஒரு நாட்டின் வளர்ச்சி நிலையைக் கணிக்கும் போது, பொதுவாக அந்நாட்டின் தனிநபர் வருமானத்தின் அளவு ஒரு குறியீடாக எடுத்துக் கொள்ளப்படும்! மேலும், ஒரு சமூகத்தில் நிலவும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் கணிப்பதற்கும், பல புதிய விவர உத்திகள் பொருளாதார நிபுணர்களால் வெற்றிகரமாகக் கையாளப்பட்டு வருகின்றன; ஆனால் சமூகப் பண்பாட்டு மாற்றங்களையும் வளர்ச்சிகளையும், கணிப்பதற்குச் சரியான புள்ளிவிவர முறைகள் திருப்திகரமாக இதுவரை அமையவில்லை; என்றாலும், பண்பாட்டு மாற்றத்தின் குறியீடாகப் பெண்களின் சமூக நிலையை எடுத்துக் கொண்டு ஆராய்ந்தால், பொருளாதார மாற்றத்திற்கும், பண்பாட்டு மாற்றத்திற்கும் இருக்கும் நெருங்கிய உறவை நன்கு வெளிக் கொணர முடியும்.

கிருஷ்ணா அஹீஜா படேல் உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கும் பெண்களின் மேம்பாட்டுக்கும் உள்ள உறவை ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார். இவ்வாராய்ச்சிக்காகப் ''பெண்கள் முன்னேற்றக் குறியீடு'' என்றொரு புள்ளியியல் அட்டவணையைத் தயார் செய்துள்ளார். இப்புள்ளியில் குறியீடு (1) பிரசவத்தின் போது இறந்து போகும் தாய்மார்களின் விகிதம், (2) பெண் குழந்தைகளின் இறப்பு விகிதம், (3) பெண்களின் வாழ்நாள் விகிதம், (4) பெண்களின் உயர்கல்வி விகிதம். (5) பெண்களின் வேலைப் பங்கேற்பு விகிதம். (6) பெண்களின் அரசியல் பங்கேற்பு விகிதம் ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது; இவ்வாறு தயாரிக்கப் பட்டுள்ள இப்புள்ளியல் குறியீடு பெண்களின் உண்மை நிலையை முழுமையாகப் பிரதிபலிக்கவில்லைதான் என்று ஏற்றுக்கொள்ளும் படேல், மேலும் செம்மையாகக் கணக்கிட்டுத் தயாரிக்கப்படும் புள்ளியல் குறியீடு வரும்வரை தன்னுடைய இந்தக் குறியீட்டு அட்டவணையைத் தற்காலிகமாக ஏற்றுக்கொள்ளலாம் என்றார்.

இந்தப் புள்ளியல் ஆராய்ச்சியின்படி, இந்தியா பொருளாதார வளர்ச்சியில் உலக நாடுகளின் 63-வது நாடாகவும், பெண்களின் முன்னேற்றக் குறியீட்டின்படி 76-வது நாடாகவும் உள்ளது என்கிறார் படேல், மேலும் தன் ஆய்வில் கீழ்க்காணும் முடிவுகளையும் தருகிறார். அவற்றுள் குறிப்பிடத்தக்க சில வருமாறு:-

1. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் அந்நாட்டுப் பெண்களின் நிலைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை.

2. பெண்களின் வளர்ச்சிக்குத் தடையாய்ப் பல பண்பாட்டு மற்றும் சமூகக் காரணங்கள் உள்ளன.

3. பெண்களுக்கெனத் தனியாகச் சமூகப் பொருளாதாரத்

திட்டங்களை வகுத்துச் செம்மையாகச் செயல்படுத்தும் பின்தங்கிய நாடுகளில் முன்னேறிய நாடுகளின் நிலையை விடப் பெண்களின் நிலை மேம்பாடான முறையில் அமைந்துள்ளது.

பெண்களின் பின்தங்கிய நிலைக்கு முக்கியமான இரண்டு காரணங்களைப் படேல் முன் வைக்கிறார். (1) பொருளாதார வாழ்வில் பெண்கள் ஆண்களைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை. (2) இப்பொருளாதாரச்சார்பு அடிப் படையில் வடிவமைக்கப்பட்டுள்ள பண்பாட்டுச் சூழல்! மேலும், ஒரு கருத்தைப் படேல் வலியுறுத்துகிறார். பெண்களுக்குப் பொருளாதார சுதந்திரம் கிடைத்தாலும்கூட, பழைய பண்பாட்டுச் சூழல் உடனடியாக மாற்றங்களுக்கு உட்படுவதில்லை, இந்நிலையில் பெண்களின் வாழ் நிலையைத் தீர்மானிப்பதில், நேரடி யான பொருளாதாரக் காரணிகளை விட, அக்காரணிகளால் உருவாகிய பண்பாட்டுச் சூழல் பெரும்பங்கு வகிக்கிறது! எனவே பெண்கள் பொருளாதாரத்தில் சார்பற்ற நிலையை அடைவதுடன், ஆண் /பெண் சமத்துவத்திற்கு மனத்தைப் பக்குவப் படுத்தும் பண்பாட்டுச் சூழலையும் ஏற்படுத்த வேண்டும்! இதற்கு பெண்களுக்கான பண்பாட்டுச் சூழல் எவ்வாறு அமைந்திருந்தது என்பதைச் சரியாகக் கணித்துக் கொள்வது நலம் பயக்கும்!

**பெண்ணும் சமயமும்:**

இந்தியா மதச்சார்பற்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதால், இன்று உலகிலுள்ள பெரும்பாலான மதங்களும் இந்தியாவில் செழிப்புடன், - உரிமையுடன் - செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன! ஆனாலும் இந்திய மக்கள் தொகையில் 82% மக்கள் இந்துக்கள் ஆவர்! எனவே, பெரும்பான்மையான இந்திய மக்களின் மனோபாவத்தை வடிவமைப்பது இந்து சமயப் பண்புகளும் பழக்கவழக்கங்களுமே! பொதுவாகவே மானுடனின் மொழிக்குள் பெரும் பகுதியை மதக்கருத்துக்களே ஆக்ரமித் துள்ளதால், ஒவ்வொரு மனிதனும் மதத்தின் செல்வாக்கிற்கு அவனறி யாமலேயே உள்ளாகி ஒரு மதவாதி யாகவே வடிவமைக்கப்படுகிறான்! அதுவும் பெண்களைப் பொறுத்த வரை, அவர்களின் உளவியலை உருவாக்குவதில் மத நிறுவனங்களின் செல்வாக்கு அதிகமாவே இருந்து வந்திருக்கிறது.

இந்து மதத்தில் பெண் தெய்வங்கள் மிகவும் சக்தி வாய்ந்தவளாகக் காட்டப்படுகின்றன. 'சக்தி வழிபாடு' இந்து மதத்தின் பெரும்பிரிவாக விளங்குகிறது. துர்க்கை, ஆண் கடவுளால் அழிக்க முடியாத தீய சக்திகளை அழித்ததாகச் சமய நூல்கள் பலவாறு புனைந்து அவளைக் கொண்டாடுகின்றன. இவ்வாறு புராணங்களில் பெண் ஒருபக்கம் கொண்டாடப்பட்டாலும், மறுபக்கம், அவள் ஆணுக்கு அடங்கியிருக்கும் போதுதான் அவளது நற்குணங்களும் சக்தியும் அதிகரிப்பதாகவும் கூறப்படுகிறது. பெண், ஆணின் ஒரு பாதி என்கிறது இந்துமதத் தத்துவம்! அதே நேரத்தில் ஆண்-பெண் நிலைப்பாட்டை விளக்கும்போது, ஆண் 'விதை' என்றும், பெண் அதை ஏற்று விளைய வைக்கும் 'நிலம்' என்றும் அடையாளப் படுத்தப்படுகிறாள்! இத்தகைய அடையாளப் படுத்தல் மூலம், 'விதையே' விளைச்சலுக்கு மூலம் என்று ஆணாதிக்கத்தை நியாயப்படுத்த முயல்கிறது இந்து மதம்! மேலும், பல இந்து மதப் புராணங்களும், சடங்குகளும் ஆணுக்கு பெண் அடிமை என்ற கருத்தைத் திரும்பத் திரும்ப வலியுறுத்துகின்றன. (துபே, 1988) இந்தக் கருத்தைத்தான் இன்றும் இந்தியத் தகவல் தொடர்புக் கருவிகள் மின்னணுவின் உதவியால் பல கோடி மடங்கு பெருகி விதைத்துக் கொண்டிருக்கின்றன.

**பெண்ணும் சமூகமும்!**

இந்தியச் சமூகத்தில் பெண் என்பவள்; 'தாய்' (அ) மனைவி என்ற நிலையில்தான் பொரும்பாலும் அடையாளப் படுத்தப் படுகிறாள்; எனவே,

> **'வரப்போகிற ஒரு கணவனுக்காக வாழப் போகிற ஓர் அடிமை! அதற்காகத் தான் நாம் தயாரிக்கப்படுகிறோம்' என்ற மனோபாவத்தை பெண் சிறுமியாக இருக்கும்போதே அடையும்படியாகக் குடும்பத்தின் நிர்வாக அமைப்புக்கள் அமைந்துள்ளன.**

'குடும்பம்' என்ற நிறுவனத்திலிருந்து பிரித்தறிய முடியாத ஒரு நிலையில்தான் அவளது வாழ்வு வடிவமைக்கப்பட்டுள்ளது; மேற்கத்திய நாடுகளில் கடந்த சில நூற்றாண்டுகளாகப் பின்பற்றப்படும் முதலாளித்துவப் பொருளாதார அரசியல் காரணமாக, அங்கே பெண்ணைத் 'தனியாக' ஒரு நபராகப் பார்க்க கூடிய நிலை ஏற்பட்டுள்ளது: இன்று மேற்கத்திய நாடுகளில் பெண்களுக்கான விடுதலைக்குரல் ஓங்கி ஒலிப்பதற்கு இது ஓர் அடிப்படைக் காரணமாகும்!

இந்தியச் சமூகத்தில் 'பெண்' குழந்தை பிறந்த உடனேயே, 'வரப்போகிற ஒரு கணவனுக்காக வாழப் போகிற ஓர் அடிமை! அதற்காகத் தான் நாம் தயாரிக்கப்படுகிறோம்' என்ற மனோபாவத்தை அப்பெண் சிறுமியாக இருக்கும்போதே அடையும்படியாகக் குடும்பத்தின் நிர்வாக அமைப்புக்கள் அமைந்துள்ளன. எனவே, ஓர் இந்தியப் பெண் முன்பின் பழக்கமில்லா ஏதோ ஒரு ஆடவனுடன், திருமணத்தன்றே மனைவியாக, அடிமை வேலை செய்யத் தயாராகிவிடுகிறாள்! இந்த அடிமைப் பதவியும் அவளுக்குச் சாதாரணமாகக் கிடைத்துவிடுவதில்லை; 'வரதட்சணை' என்கிற கொடுமையை அவள் கடந்தது வர வேண்டியுள்ளது. வரதட்சனைக் கொடுமைக்கு ஆளாகும் இந்தியப் பெண்களின் நிலைபற்றி அதிகம் கூறத் தேவையில்லை.

அண்மைக் காலங்களில், சேலத்தை அடுத்துள்ள கிராமங்களில் நடந்த பெண் சிசுக்கொலைகளை போன்ற நெஞ்சைப்பிளக்கும் சம்பவங்கள், இதற்கு ஓர் முக்கிய உதாரணம்.

இந்திய சமூகத்தில், பெரும் பகுதிகளில் தந்தைவழிச் சமூக அமைப்பே பின்பற்றப்படுகிறது. இத்தகையக் குடும்ப அமைப்பில் பாலின வேறுபாட்டின் அடிப்படையில் வேலைப் பிரிவினைகள் அமைந்துள்ளன. வீட்டு வேலைக்குப்



எளிதில் மாற மறுக்கும் பண்பாட்டுச் சூழலினால், இச்சட்டங்கள் எதிர் பார்த்த பயனைத் தரவில்லை.

இந்நிலையில் பெண்களுக்கான விடுதலையை வழங்குவதற்கேற்ற பண்பாட்டு மாற்றங்களை ஏற்படுத்தச் சிறந்த வழிமுறைகள் என்ன? பெண் கல்வியும், பெண்ணின் பொருளாதார விடுதலையும்தான் என்று பலரும் ஒப்புக் கொள்கின்றனர். எனவே இவ் விரண்டிலும் சமகாலத்தில் ஏற்பட் டுள்ள மாற்றங்களை இனிக் காண லாம்.

**பெண்ணும் கல்வியும்**

கல்வி கண்ணைத் திறக்கும் என்பது உண்மை! ஆனால் இந்தியா வின் கல்வி முறையும் பெண்ணை அடிமைப்படுத்தும் தந்தை வழியிலான சமூகப் போக்கை முன்னிலும் பல மடங்கு வலியுறுத்திப் போதிப்பதாகவே அமைந்துள்ளது; இந்தியாவில் இது வரை கல்விக்காக அமைக்கப்பட்ட குழுக்கள் பலவும் இதே கருத்தை வலியுறுத்துகின்றன. சான்றாக, டாக்டர். இராதாகிருஷ்ணன் தலைமை யிலான கல்விக்குழு தயாரித்து அளித்த அறிக்கையில், பெண்கல்வி, பெண்கள் வீட்டு வேலை செய்வதற்கான திறமை களை வளர்க்கத் துணை செய்ய வேண்டும் என்று குறிப்பிடுகிறது: ஆனாலும் இத்தகைய இடர்ப்பாடு களுக்கிடையிலேயும் பெண்கல்வி இந்தியாவில் ஓரளவிற்கு ஒப்பீட்டள வில் உயர்ந்துள்ளது எனலாம். அதனால் கல்வி தொடர்பான தேர்வு களில் பெண்களின் தேர்வு விகிதம் அதிகரித்து வருவதைச் சான்றாகச் சொல்லலாம்: ஆனால் ஆண்களுடன் ஒப்பு நோக்கும் போது பெண் கல்வி போதுமானதாக் இல்லை. மக்கள் தொகையில் 46.5% ஆக இருக்கும் பெண்களின் படிப்பறிவு விகிதம் 39.42% ஆகவும், ஆண்களின் படிப் பறிவு விகிதம் 63.38 ஆகவும் இருப்ப தாக 1991-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு கூறுகிறது; பள்ளியில் இருந்து நின்றுவிடும் பெண்களின் விகிதம் 67.55% ஆகவும், ஆண்களின் விகிதம் 58.80% ஆகவும் இருப்பதாக 1987-88ஆம் ஆண்டு எடுத்த புள்ளிவிவரம் கூறுகிறது! கடந்த எண்பது ஆண்டுகளில் பெண்களின் கல்வி வளர்ச்சி 24% ஆகவும், ஆண் களின் கல்வி வளர்ச்சி 37% ஆகவும் இருக்கிறது.

பெண்களின் கல்வி வளர்ச்சி யில் இந்நிலை நிலவுவதற்குப் பல காரணங்கள் உள! அவற்றில் பெரும் பங்கு வகிப்பது பண்பாட்டுக்

பெண்; வெளியில் வேலை செய்து பொருளைத் தேடுபவன் ஆண்! இதன் மூலம் ஆண் குடும்பத் தலைவன் என்றும், பெண் அவனைச் சார்ந்து அடங்கி நடக்க வேண்டியவள் என்றும், சமூகச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

தாய்வழிக் குடும்ப அமைப்பு நிலவும் சமூகங்களில் (கேரளாவில் நாயர் முதலிய சில சாதிகள், வடகிழக்கு மாநிலங்களில் வாழும் சில மலைச் சாதியினர்) பெண்களின் நிலை உயர்ந்துள்ளது என்று பல ஆய்வுகள் நிரூபிக்கின்றன. (கணேஷ் கமலா லார்லா ரிசிவோவ், 1993) எனவே, குடும்பத்தின் அதிகார அமைப்பு முறைக்கும், பெண் விடுதலைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது தெரிகிறது: ஆகையால், பெண் விடுதலை என்பது குடும்பத்தலிருந்தே தொடங்கப்பட வேண்டிய ஒன்றாக நிலவுகிறது!

ஆண் - பெண் சமத்துவத்தை இந்திய அரசியல் சட்டம் வலியுறுத்துகிறது. பெண்களுக்கான உரிமையை வழங்க, பழைய பெண்ணடிமை முறையை ஒழிக்க, (1) சதி ஒழிப்புச் சட்டம் (2) சிசுக்கொலைத் தடுப்புச் சட்டம் (3) தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் (4) விவாகரத்துச் சட்டம். (5) வரதட்சணைக்கு எதிரான சட்டம், (6) கருக்கலைப்புச் சட்டம் (7) சொத்துரிமைச் சட்டம் (8) பாலியல் வன்முறைக்கு எதிரான சட்டம் (9) பால்ய விவாக ஒழிப்புச் சட்டம் எனப் பலவிதமான சட்டங்களை இந்திய அரசாங்கம் இயற்றியுள்ளது; ஆனால்

காரணிகளே ஆகும்! ஆண் படித்தால் போதும் என்ற மனப்பான்மை; இளமைத் திருமணம் முதலியவை பெண் கல்வியின் தேக்க நிலைக்கு முக்கிய காரணங்கள் ஆகும்! உண்மையில் உலக வங்கியின் ஓர் அறிக்கையின்படி, ஆண் கல்வியால் ஏற்படும் பொருளாதார விளைவுகளைவிடப் பெண் கல்வியினால் ஏற்படும் பொருளாதார விளைவு அதிகம் என்று தெரிய வருகிறது; ஒன்று, பெண்களின் வருவாய் ஈட்டும் திறன் அதிகரிக்கிறது; இரண்டு, கல்வியினால் ஏற்படும் சமூக நன்மைகள், சான்றாகப் படித்த பெண்களிடையே அதிகரிக்கும் திருமண வயது; கருத்தடை, சிறிய குடும்பம் பற்றிய அறிவு முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

எனவே பெண் விடுதலைக்கான பெண் கல்வியின் வளர்ச்சி அளவு சார்ந்ததாகவும், பண்பு சார்ந்ததாகவும் இருக்கவேண்டும்; மேலும் பாலின வேறுபாடு அற்ற, பொருளாதார மேம்பாட்டிற்கான கல்வித் திட்டம் வகுக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட வேண்டும்; இத்தகைய கல்வி முறையினால் பண்பாடு மாற்றங்களை எளிதாக நடத்திக்காட்ட முடியும்.

**பெண்ணும் பொருளாதார நிலையும்:**

பெண்ணின் சார்பு நிலையை விளக்க எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மிக முக்கியமான அடையாளக் குறியீடு அவளது பொருளாதார நிலையாகும்! பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு ஒன்று தயாரித்தளித்த அறிக்கை, உலகத் தொழிலாளர் தொகையில் மூன்றில் ஒரு பங்கு பெண்கள் என்றும், பெரும்பாலான சம்பளமில்லா வேலைகளைச் செய்பவர்கள் பெண்களே என்றும் கூறுகிறது. உலகில் இருபாலாரும் செய்யும் சம்பளமில்லா வேலையின் அளவு 16 ட்ரில்லியன் டாலர். இதில் 11 ட்ரில்லியன் டாலர் அளவு பெண்களினால் மட்டுமே செய்யப்படுகிறது. மேலும் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் பெண்களுக்கு உலக வருமானத்தில் 10% தான் போய்ச் சேர்கிறது; உலகச் சொத்தில் 1% தான் அவர்களுக்கு உரிமையாய் இருக்கிறது என்றும் கூறுகிறது. (படேல் 1993) அன்றியும் உலகில் வறுமையில் வாடும் 1.3 மில்லியன் மக்களில் 70% பேர் பெண்களே.

இந்தியா போன்ற ஓரத்து நாடுகளோடு ஒப்பிடும்போது, வளர்ச்சியடைந்த நாட்டிலுள்ள பெண்கள் உயர்ந்த நிலையில் விளங்கினாலும், தங்கள் நாட்டிலுள்ள ஆண்களோடு ஒப்பிடும்போது தாழ்ந்த நிலையில்தான் காணப்படுகிறார்கள்.

> **“இந்தியாவின் கல்வி முறை பெண்ணை அடிமைப்படுத்தும் தந்தை வழியிலான சமூகப்போக்கை முன்னிலும் பல மடங்கு வலியுறுத்திப் போதிப்பதாகவே அமைந்துள்ளது.”**

இந்திய மக்கள் தொகையில் 46.5% ஆக இருக்கும் பெண்கள், தொழிலாளர் தொகையில் 25%தான் உள்ளனர். இந்தப் பெண் தொழிலாளர்களின் பொருளாதார நிலையினை அறிந்துகொள்ளப் பயன்படும் முக்கியக் குறியீடு, அவர்களின் “வேலைப் பங்கேற்பு விகிதம்” ★ பற்றிய அட்டவணை ஆகும். இக்குறியீட்டில் ‘வேலை’ என்பது வெளிப்படையாக வருவாயைத்தரும் வேலையை மட்டும் குறிக்கும்; அதாவது பெண்களின் வருவாய் இல்லாத வீட்டு வேலை கணக்கில் சேராது! இந்த அடிப்படையில் வேலை பங்கேற்பு விகிதம் பற்றிய புள்ளிவிவர அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**இந்தியாவில் வேலைப்பங்கேற்பு விகிதம் (1971-91)**

| வருடம் | பிரிவு | நபர் | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|---|---|
| 1971 | மொத்தம் | 34.2 | 52.7 | 14.2 |
| | கிராமம் | 35.3 | 53.8 | 15.9 |
| | நகரம் | 29.6 | 48.9 | 7.2 |
| 1981 | மொத்தம் | 36.7 | 52.6 | 19.67 |
| | கிராமம் | 38.8 | 53.8 | 23.1 |
| | நகரம் | 30.0 | 49.1 | 8.3 |
| 1981 | மொத்தம் | 37.7 | 51.6 | 22.7 |
| | கிராமம் | 40.2 | 52.5 | 27.2 |
| | நகரம் | 30.4 | 49.0 | 9.7 |

மூலம்: டாத் ருட்தார் & கே.பி.எம். சுந்தரம் (1994)

இப்புள்ளி விவரப்படிப் பெண்களின் வேலைப் பங்கேற்பு விகிதம் 1971–இல் இருந்து அதிகரித்து வருகிறது; இது அண்மைக் காலத்தில் பெண்கள், ஆணாதிக்கத்தில் இருந்து வந்த தொழிலாளர் உலகில் தங்களுக்கான ஒரு இடத்தை ஏற்படுத்தி வருகின்றனர் என்பதைக் காட்டுகிறது. இவ்வட்டவணைப்படி, கிராமப்புறங்களில் பெண்களின் வேலைப்பங்கேற்பு விகிதம் அதிகரித்த அளவு, நகர்ப்புறங்களில் அதிகரிக்கவில்லை! காரணம், நவீன தொழில்நுட்பம் இயந்திரங்களைக் கொண்டு வேலை வாங்கிக் கொள்ளுகிறது; வேலைப் பங்கேற்பு விகிதம் கிராமங்களில் அதிகமாக இருந்தாலும், கிராமியப் பொருளாதாரம் சட்ட ஒழுங்குகளுக்கு உட்படாது இருப்பதால், பெண்

★ ‘வேலை பங்கேற்பு விகிதம்’ எனபது மொத்த மக்கள் தொகையில் வேலை செய்யும் பெரியவர்கள் (15-60 வயது) எவ்வளவு சதவிகிதம் உள்ளனர் என்பதைக் குறிக்கும்.

தொழிலாளர்கள் அதிகமான சுரண்டலுக்கு உள்ளாகின்றனர்; இத்தகைய தடைகளை எல்லாம் தாண்டி, இதற்கு முந்திய காலங்களில் பெண்களின் வேலைப் பங்கேற்பு விகிதம் அதிகரித்துள்ள அளவிற்கு, வருங்காலத்தில் அதிகரிக்குமா என்பது சந்தேகத்திற்குரியது;. ஏனெனில் 1985-ல் இருந்து இந்தியா பின்பற்றிவரும் தாராளமயப் பொருளாதாரம், தனியார் மயம், இந்தியப் பொருளாதாரத்தை உலகப் பொருளாதாரத்தோடு இணைத்தல் போன்ற கொள்கை களினால் வேலை வாய்ப்புகள் குறைந்துகொண்டே வருகின்றன. இவ்வாறு வேலை வாய்ப்புகள் குறையும் போது, பெரிதும் பாதிக்கப் படுபவர்கள் பெண்களே! ஏனென்றால், பெண்கள் பொருளாதார சுதந்திரம் அடைய வேண்டும் என்றால், நாட்டில் வேலை வாய்ப்புகள் குறையாமல் பெருகிக்கொண்டே இருக்கவேண்டும்; பெண்களுக்குச் சட்ட ரீதியாகச் சொத்துரிமை இருந்தாலும், அதைத் தன்னிச்சையாகப் பயன்படுத்தக்கூடிய உரிமையைப் பண்பாட்டுச் சூழல் இன்னும் அவர்களுக்கு வழங்கவில்லை; இந்நிலையில் பெண்களின் வேலை வாய்ப்புக் குறைந்தால், அவர்கள் விடுதலை அடைவதற்கு முக்கியமான ஒரு காரணி இல்லாமல் போய்விடும். மேலும் வேலை வாய்ப்புக் குறைவினால் வறுமை அதிகரிக்கும், வறுமையினால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகுபவர்கள் பெண்களே! மேலும் அரசின் புதிய பொருளாதாரக் கொள்கையினால், அரசு சமூக நலனுக்காகச் செலவிடும் தொகையின் அளவு குறைந்துகொண்டே வருகிறது. இதுவும் பெண்களைத்தான் அதிகமாகப் பாதிக்கும்.

மற்றொன்றையும் எண்ணிப் பார்க்கவேண்டும்; நகர்ப்புறங்களில் மேல்தட்டு மற்றும் நடுத்தர வர்க்கப் பெண்களின் பொருளாதார நிலையில் தான் சிறிது மாற்றம் ஏற்பட்டுள்ளது. கிராமப் புறங்களில் இன்றும் பெண்கள் குறைந்த பொருளாதார வாழ்வில் கிடந்து, தொடர்ச்சியான சுரண்டலுக்கும் கொடுமைகளுக்கும் ஆட்பட்டுக் கொண்டுதான் வாழ்ந்து வருகின்றனர்.

**பெண்ணும் வீட்டு வேலையும்:**

இந்தியாவில் கணவன் - மனைவி இருவரும் வெளியே வேலைக்குச் செல்லும் குடும்பங்களில் உள்ள 'குடும்ப வேலைகள்' பற்றியும் 'குடும்ப அதிகாரி அமைப்பு முறை' பற்றியும் நடந்த பல ஆராய்ச்சிகளின்படி, பெண்கள் ஆண்களுக்குச் சமமாக வெளியே வேலைக்குச் சென்று பொருள் திரட்டி வந்தாலும், தங்களுக்கான உரிமையைப் பெறுவதில் போதுமான அளவு வெற்றிபெறவில்லை என்றுதான் தெரியவருகிறது. இதற்கு முக்கியகாரணம் ஆண்கள், தங்களின் அதிகாரங்களை, இதுநாள்வரைத் தங்களுக்கு அடிமைப்பட்டிருந்த பெண்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்பவில்லை. பழைய பண்பாட்டுச் சூழல் இடந்தரவில்லை (இராமு, ஜி.என். 1989) பெண்களும் பாரம்பரியமாகக் காக்கப்பட்டுவரும் குடும்ப அமைப்புடன் ஒத்துப்போகவே விரும்புகின்றனர். மீறினால் குடும்பம் பிளவு படுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையில் பல பெண்கள் ஆணுக்குக் கட்டுப்பட்டே வாழப் பழகிக் கொள்கின்றனர், வேலைக்குப் போகும் பெண்களின் நிலையே இது என்றால், குடும்பத்தில் இருக்கும் வேலைகளை மட்டும் செய்து கொண்டு வரும் பெண்களின் நிலையைச் சொல்லவே தேவையில்லை.

ஆனால் அண்மைக் காலத்தில், பெண்கள் செய்யும் குடும்ப வேலைகளும் பொருளாதாரத்தைச் சார்ந்தவைதான் என்பதை நிரூபிக்க ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. உதாரணமாக சமையல், விறகு, தண்ணீர் முதலியவற்றைச் சேகரிப்பது, ஆகிய வீட்டு வேலைகளுக்குப் பொருளாதார மதிப்புப் போட்டுப் பார்த்தால், பெண்களின் 'வேலைப் பங்கேற்பு விகிதம் தற்போதைய நிலையை விடப் பன்மடங்கு அதிகமாகவே இருக்கும் என ஆராய்ந்து கூறுகின்றனர்.

இத்தகைய வீட்டு வேலைகள் மூலம், ஏற்படும் பொருளாதாரப் பங்களிப்பை மதிப்பிடவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அமெரிக்காவின் சிக்காக்கோ பல்கலைக்கழகத்தைச் சார்ந்த பெக்கர், ஷீல்ஸ் ஆகியோர் 'புதிய வீட்டுப் பொருளாதாரம்' என்ற பெயரில் ஒரு கோட்பாட்டை உருவாக்கியுள்ளனர். மரபான பழைய பொருளியலில் மனிதனின் நேரத்தை (செயலை) இரண்டு வகையாகப் பிரிப்பர். (1) உழைப்பு நேரம் (2) ஓய்வு நேரம். அதாவது நேரடியாக வருவாய் ஈட்டாத வேலைகள் யாவும் ஓய்வு நேரமாக எடுத்துக் கொள்ளப்படும். இப்பழைய கோட்பாட்டின்படி, வீட்டு வேலை செய்யும் பெண்களின் நேரம் யாயும் பொருளியல் ஓய்வு நேரமாக எடுத்துக்கொள்ளப்படும்: ஆனால் புதிய வீட்டுப் பொருளாதாரக் கோட்பாட்டின்படி, ஓய்வுநேரம் (குறிப்பாகப் .பெண்களின் ஓய்வு நேரம்) (1) வீட்டு உற்பத்தி வேலை (2) ஓய்வு நேரம் என்று இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டும். இக்கோட்பாட்டின்படி, பெண்களின் வீட்டு வேலைக்கான பொருளாதார மதிப்பைக் கணக்கிட முடியும். இந்தியாவிலும் ஆங்காங்கே இத்தகைய முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இம்முயற்சிகளின் பயனாக, பாலின அடிப்படையில் குடும்ப வேலைப் பிரிவினை இருந்தாலும், ஆண்களுக்கு நிகராகக் குடும்பப் பெண்களும் குடும்பப் பொருளாதாரச் சேகரிப்பில் ஈடுபடுகின்றனர் என்ற புதிய மனநிலையை ஆண்களிடம் உருவாக்க முடியும்; இதனால் ஆண் - பெண் சமத்துவத்திற்கு, ஆண்கள் செய்யும் அனைத்து வேலைகளையும் பெண்களும் செய்யவேண்டும் என்கிற பார்வையை மாற்றி அமைக்க முடியும்.

**முடிவுரை:**

பொருளாதார மாற்றத்திற்கும் பண்பாட்டு மாற்றத்திற்கும் இடையே உள்ள உறவு நிலைகளும், இவைகள் இரண்டும் எப்படிப் பெண்களின் வாழ்வு நிலையைத் தீர்மானிப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றன என்பதும் பல புள்ளி விவரங்களோடு இங்கே எடுத்துக்காட்டப்பட்டன. சுதந்திர இந்தியாவில் அரை நூற்றாண்டாகப் பெண் விடுதலைக்காக மேற்கொண்ட முயற்சிகள் யாவும் முழுமையான பயனை அளிக்கவில்லை. பெண்கள் மேல் இழைக்கப்படும் வன்முறைகளும் கொடுமைகளும் அதிகரித்துக்கொண்டே போவது மட்டுமல்லாமல், பலவிதமான வடிவங்களும் எடுத்துள்ளன. ஆனாலும் ஆணாதிக்கச் சமூக அமைப்பும், அதன் பண்பாட்டுக் குணமும், கல்வி மற்றும் பொருளாதாரத் துறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களால் பெரிதும் விசாரணைக்கு உள்ளாகிக் கொண்டு வருகின்றன. எனவே இவற்றின் தொடர்ச்சியாக ஆண்-பெண் சமத்துவம் எதிர்காலத்தில் உலகமெங்கும் உருவாக வாய்ப்பு இருக்கிறது என நம்பலாம்.

---

*1. இரா. சீனிவாசன், விரிவுரையாளர்,*
*பொருளாதாரத்துறை,*
*பாரதிதாசன் பெண்கள் கல்லூரி, புதுச்சேரி-3*

*2. டாக்டர் க. பஞ்சாங்கம், தமிழ்த்துறை,*
*காஞ்சி மாமுனிவர் உயர்கல்வி மையம், புதுச்சேரி-8.*

நல்வாழ்த்துகள்

# குழந்தை தொழிலாளர் நல்வாழ்வு இயக்கம்

வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம்

**பிரதீப் யாதவ்,** இ.ஆ.ப.,
கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி)

**ப.வி.ச. டேவிதார்,** இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் / தலைவர்

77. எட்வர்ட் மானே





78. எட்வர்ட் மானே

*Best compliments*

M. SALIM B.Sc., B.L.
Managing Director

**HOTEL NIRANJ & NIRANJAN TRAVELS**

Salim Towers, Tower Junction

Nagarkoil. Phone : 31266 (4 Lines), 32083, 31264. Res : 31385, Fax 04652-31295

# கொடும்பாவி

ஓவியம்: மனோகர்




நடக்க செரமமாயிருந்தது. கொல்லம் பட்டறையில ஊதற மாதிரி மேல்மூச்சி கீழ்மூச்சி வாங்குது. ஆணிக்கால் வேற, தார் ரோட்லக் கெடக்கற பட்டாணிக் கல்சிவுள மிறிக்கறப்ப உச்சி மயிர இழுத்தது குப்பனுக்கு. வழுக்கத் தலயில வேர்த்து வழிஞ்சி கொடவடஞ்சக் கண்ணுக்குள்ள எறங்கி முழியில பட்டதும் மொளகாத்தூள தூவன மாதிரி எரிஞ்சிது. இந்த வயசான காலத்துல நெல்ல நாளும் பெரிய நாளுமா "ஏண்டா இந்த வேலைக்கு வந்தம்"னு ஆயிப்போச்சி குப்பனுக்கு.

தார்ரோட்ல தரதரன்னு இழுத்தாந்தான். மோடு பள்ளத்துல அலங்கும்போது இவனப்பார்த்து பழச்சிக்காட்டற மாதிரி அது இருந்தது. எந்தப் பய வெளயாட்டுக்கு வச்சிருந்தானோ, "இந்தாடா இதுல போயி செய்ஞ்சி இழுத்தாடா"ன்னு சொன்னாரு கலியபெருமாளு. யாரு நாத்தறிக்க வச்சிருந்தாங்களோ, இல்ல வீடு கீடு போட வச்சிருந்தாங்களோ எனுமோ ரெண்டு மூணு தாளுக்கத்தய குடுத்து ''சீக்கிரம் ஆவுட்டும்''னு சொல்லிட்டாங்க. தாளபதமாக் கட்டி சேறு பூசி மொகம் கை கால் வைச்சி கிழிஞ்ச சட்ட ஒன்னு போட்டு கொடும்பாவி செய்ஞ்சான் குப்பன். ஊரச் சுத்தி ஒப்பாரி வச்சி சுடுகாடு வந்து சேர்றதுக்குள்ள மேற்க ஊருக்குள்ள

**கண்மணி குணசேகரன்**

பத்தர பஸ் சத்தம் கேட்டது.

தார் ரோட்டவுட்டு முந்திரி ஒட்டா எறங்கரை சுடுகாடு. ஆலமரம். மரத்தோரமாதான் பொணம் எரிக்கிற எடம். காலைபாலியே வந்து காடு அமிச்சிட்டும் போயிருக்காங்க போல் நிக்கு. பக்கத்துல கொறக்கொள்ளிக் கட்ட எரியாம அமிச்சி கெடந்தது. இப்பதான கொஞ்ச நேரத்துக்கு மின்னாடி பால் ஊத்திட்டு போயிருக் காங்க போல்ருக்கு. இன்னும் ஈரம் காயில. தலமாட்ல கொளுத்திவச்ச வத்தி பொகைஞ்சிக்கிட்டு இருந்தது. தலைக்கி நேரா ஊனிவச்சத் தென்னம் பாள நாளாபொறமும் பூச்சரமா கொடபுடிச்சிருந்தது.

தோள்மேலக் கெடந்த கம்பு முடிச்ச ஓரமா வச்சிட்டு மளமளன்னு வேலயப்பாத்தான். பொணத்துக்கு செய்ய வேண்டிய எல்லா சடங்கு களயயும் முடிச்சிட்டு பக்கத்து பொத மேடயில நரி நோண்டாம இருக் கறதுக்கு போட்டு வச்சிருந்த தோப்பு முள்ளுல நாலு எடுத்தாந்து செத்த கொஞ்சம் அரிச்சி வச்சிக் கொடும் பாவி மேலப் போட்டான். மடயில இருந்த வத்திப்புட்டிய எடுத்துக் கிழிச்சான். ஒண்ணும் பத்துல. என்னாத்த மயிரு வத்திப்புட்டியோ போடறானுவோ. மொழுக்குப் புட்டியாம், ரொம்பநேரம் எரியுமாம். பத்தனாதான ரொம்பநேரம் எரியும். இதாம்பத்தவே மாட்டங்குத. எந்த மயிரு வந்தாலும் ரெட்டக்கிளி வத்திப் புட்டிக்கு பெறகுதான்.

வேர்வையில் நனஞ்சி போயிருந் தது வத்திப்புட்டி. எரிச்சலாயிருந்தது குப்பனுக்கு. ஊரா இது அண்ட ஊட்ல போயி கரண்டியில நெருப்பு எடுத்தாந்து அடுப்புப் பத்த வைக் கிறதுக்கு ஏதாளங்கெட்ட மசானம். "எப்பிடி பத்தவைக்கிறது?" மனவுக் குள்ள நெனச்சிக்கிட்டு இருக்கும் போதே ரோட்ல பாட்டுச் சத்தம் கேட்டுது. கெழக்கேர்ந்து எவனோ அரிச்சந்திரன் மெட்ல பாடிக்கிட்டே வந்தான். "இவங்கிட்ட இருக்குமா..? எதுக்கும் கேட்டுப்பாக்கும்...?"

நெத்தியில நெழல் மறப்பாக் கைய வச்சிக்கிட்டு "ஓ.. சைக்கிள்காரச் சாமியோவ்... வத்திப்புட்டி வச்சிருக் கிங்களா?" கேட்டதோட நிக்காம ஓடனான.

"யார்ரா அவன்... ஏங்கிட்ட வத்திப்புட்டி கேக்குறது" மெரட்ட மாதிரிக் கேட்டான்.

"இல்லசாமி... பீடிகிடி பத்தவைப்பிங்களான்னு கேட்டுட் டங்க" குப்பன் கையை பேய்ஞ்சான்.

"எலேய் எவனப்பாத்துடா பீடிக்குடிக்கறவன்னு சொன்ன. என்னப் பாத்தா பீடிக்குடிக்கிறவம் மாதிரியாத் தெரியிது. இங்க பார்ரா. நாஞ் சிகரெட் புடிக்கிறவண்டா" சிகரெட்ட எடுத்துப் பத்த வச்சி இழுத்து பொகய இவம் மூஞ்சியில உட்டான். இவனுக்கு மயக்கம வர்ற மாதிரிப் பூட்டுது.

"இந்தா... ரெண்டுக்குச்சிய எடுத்துக்கிட்டு வந்திப்புட்டியக் குடு. காலயிலேர்ந்து ரெண்டு வத்திப் புட்டியத் தள்ளிக்கிட்டுப் பூட்டானுவோ" கெடாசாதா கொறயாப் போட்டான். பிச்ச எடுக்கற மாதிரி ரெண்டு கையையும் நீட்டிப் புடிச்சான். வத்திப்புட்டியத் தொறந்து ரெண்டுக்குச்சிய எடுத்துக்கிட்டு இருக்கறப்பவே மறுபடியும் அரிச்சந்திரனாய் ராகம் போட்டபடி சைக்கிளைத் தள்ளிக்கிட்டு தள்ளாடியபடிப் போனான்.

"இந்தாங்க சாமி வத்திப்புட்டி, ஏ... சாமியோவ்" கூட ஓடனான்... "போடா மயிரு அரிச்சந்திர பரம்பரயச் சேர்ந்தவங்கடா நாங்க. குடுத்து செவுந்தக்கரம் என்னது. வத்திப்புட்டி என்னாடா வெறும் பிசுக்கு" குப்பனுக்கு தல பிச்சிக்கிட்டுப் போற மாதிரிப் பூட்டுது. "இன்னக்கி எவம் மொகத்துல முழிச்சனே தெரியல. நாய் படாத பாடா இருக்கு."

புதுப்பொட்டி ஒரே ஒறசல்லப் பத்திக்கிச்சி. செத்தப்புடிச்சிது. சேறு பூசியிருந்ததால கருவி பொக எழுந்தது. போயி பக்கத்து முந்திரியில சருவு அறிச்சாந்து மேலப் போட்டான். புடிச்சிக்கிச்சி. ஆசுவாசமா எழுந்தான். பக்கத்துல உத்திமாக்கொளம். அவன் அப்பங்காலத்துல பண்ருட்டிச் செட்டியார் கட்னது. அவரு பொண்டாட்டிப் பேர்ல 'உத்தமிக்கொளங்கறது 'உத்திமாக்கொளம்'னு பேர் வெளங்கிப்போச்சி. கொளத்தப் பாத்தான். காட்டுத் தண்ணி செவப்பாக் கெடந்தது.

எடுத்து வந்தக் கம்பு முடிச்சயும், வெத்தலப் பாக்குப்பையையும் கரயல வச்சிட்டு எறங்கினான். நடுத்தண்ணியில மூணு மொழுவு மொழுவி, கோவணத்த அவுத்துப் புழிஞ்சி தலயில கட்டியிருந்த வேட்டியில, கெடச்ச நாளு கம்பயும் முடிச்சாச்சி.

வைகாசி மாசத்து வெயிலு பட்ட எடுத்தது. தண்ணி தலயிலேர்ந்து ஒழுவ ஒழுவ, ஆலமர நெழல்ல ஒக்காந்தான். கோவணத்திலேர்ந்து ஒட்டு



மூத்தரம் மாதிரி தண்ணிச் சொட்டிச்சி. ஒக்காந்தபடியா அவுத்து புழிஞ்சி மறுபடியும் கட்டிக்கிட்டான். "சரி எம்மாங்காசி கெடச்சிருக்கும். வெத்தலப் பாக்குப் பையை எடுத்து கொட்டிப் பார்த்தான். ஒரு அம்பது ரூபா நோட்டு. சில்லறைகளை எண்ணிப்பார்த்தான். பன்னண்டு ரூவா இருபது பைசா. அம்பது ரூபா நோட்டைப் பாக்க ஆசயா இருந்தது. எடுத்துக் கண்ணுல ஒத்திக்கிட்டு இருக்கும்போதே ஊருக்குள்ள வேட்டுச்சத்தம் கேட்டுது. வேட்டுச்சத்தம் கேட்டதும் ஓட்டுக்குள்ள சுருங்கற நத்தையாய் உடனே குப்பனின் மொகம் வாடிச் சுருங்கிச்சி.

"சாமி கெங்க மொள்ளப் போவுது போலருக்கு. ப்ச் உம் மாரியாத்தாவ பாக்கக் குடுத்து வைக்கில." மனம் சஞ்சலப்பட்டுது. நடுக்குப்பத்து ஏரியில கரவஞ்சோடிப் பாங்க. வீரசிங்கங்குப்பத்து வேலாயுதங்கரன் பம்ப அடிக்கிற அடியில சும்மா நிக்கிறவங்களுக்குக்கூட சாமிப் பிச்சிக்கிட்டுக் கௌம்பும். சட்டி, மோளம், பம்ப, கோயிலு மோளம் எல்லாம் அடிச்சிக்கிட்டு ஊரு சனமெல்லாம் செடலுப் போட்டுக்கிட்டு, பெராத்தனக்காரங்கல்லாம் தேர இழுத்துக்கிட்டு பாக்கறதுக்கு எனுமாத் தெரியுமா இருக்கும். குடுத்து வச்சிருக்கணும் பாக்க. "இந்த புள்ளாண்டான் இவுளுவு வேல குடுத்துட்டுது. இல்லன்னா..." மறுபடியும் வேட்டுச்சத்தம் கேட்டுது. சத்தம் கேக்கறப்ப ஒடம்பே சிலுத்தது. என்னாத்த பண்றது. இன்றைய பொழுது இந்த மசானந்தான்.

ஊர்ல அம்மனுக்கு சாக. ஆடி மாசந்தான் பொதுவாசாக ஊத்தனும். தப்புக் கொட்டப்பொறுக்கற நாறு, கையில காசு கெடைக்கும்னு இப்ப வச்சிட்டாங்க. ரொம்ப வருஷமா சாக ஊத்தாமக் கெடந்தது. பெரிய மனுஷன்னு நாட்டாமபட்டம் கட்டிக்கிட்டு தர்மகர்த்தா வேலப் பாத்தவங்க எல்லாம் அன்று, புள்ளி கணக்குக் காட்டனாங்க. "சகடமேல நாந்தான் ஏறனும், நீந்தான் ஏறனும்"னு சண்ட. ஏகப்பட்ட விரோதம் வந்து போச்சி ஊர்ல. "சாக ஊத்துலன்னாலும் பரவாயில்ல. சண்ட வேணாம் போ"ன்னு ரொம்ப காலமா நின்னுப்போச்சி. இந்த வருஷந்தான் எளவட்டமா சேந்து வரிபோட்டு கூழ் ஊத்துதுவோ.

"கொடிக்கரம் மூலையிலேர்ந்து வானச்சத்தம் கேட்டுது. கோயில் மோளமும் பம்பச் சத்தமும் கூட கேட்டிடிச்சி. சாமி கரவஞ்சோடிச்சிக்கிட்டு வருது போலிருக்கு" சுத்தும் முத்தும் திரும்பிப் பார்த்தான். பக்கத்துல முந்திரிக்காடு. தப்புக் கொட்டப்பொறுக்கக்கூட சனம் வர்ல. "சேச்சே"ன்னு கூட்டம் கூட்டமாய் குளிக்கவும் துணி தொவைக்கவும் இருக்கும். கொளம் வெறிச்சோடி கெடந்துது. மனசுக்குள்ள எனுமோ செய்யிது. எவனுப்பா "ஏண்டா இதுக்கு வந்தம்"னு ஆயிப்போச்சி. ஊருக்குள்ள சாமி வந்துட்டதின் அடையாளமா வேட்டுச் சத்தம் கேட்டுது.

நேத்து ராத்திரி நெல்ல ஆடம்பரம். வரஞ்சரம் சுப்ரமணிதான் பாரத ஆசிரயரு. விடிய விடிய பாரதம். விடிஞ்சதும் கழுவுமரம் ஏறனும். ஊரு சனமெல்லாம் வாயப்பொளந்துக்கிட்டு ஒக்காந்து கெடந்துதுவோ.

'அம்மா எனக்கு, மால ஒன்னு மால ஒன்னு
எனக்கு இப்ப வேணும் எம்மா வேணும் எம்மா'

ஆரியமாலயை மனசுல வச்சிக்கிட்டு காத்தவராயன் தன் அம்மாவிடம் கேக்கும்போது, ஊருக்கும் தெற்க எறச்சக்கேட்டுது. அதுக்குள்ள யாரோ ஓடியாந்து 'பாரத மும் வேணாம் ஒன்னும் வேணாம். எல்லாம் ஊத்திமூடுங்க. ராமலிங்க ரெட்டியாரு மொவன் மருந்து குடிச்சிட்டு செத்துட்டான்" கூட்டம் கல்லடிப்பட்ட தேன்கூடாய் செதறிப்போச்சி. "விடிஞ்சா இந்த கட்ட மாரியாயிக்க கண்ணு இல்லாமப் போச்ச பாவம் அறியாப் பசங்க செய்யிதுவோ கொற வச்சிட்டிய கொலகாரி!'' பூண்டியாங்குப்பத்துக் கெழுவி மாரியாத்தாளப்பாத்து கேள்வி கேட்டது.

"என்னா யோசன, விடிஞ்சாக் கூழ் ஊத்தனும், தூக்குங்கடா" சுப்ராயன் கரிபொதைக்கு வச்சிருந்த முந்திரிக்கட்டப் பதமாப் பூட்டுது. எல்லாம் முடிச்சிட்டு திரும்பறப்ப கெழக்கு வெளுத்திருந்தது.

"நடந்த கங்காட்சிப் போதும். நொளுவ வச்சிப்பயிறு ஊடு வந்து சேராதுங்கரது சரியாத்தான் பூட்டுது. இனியாச்சும் ஒழுங்காச் செய்யிங்க. தீட்டுல சாக ஊத்தக்கூடாது. சேரியல யாரையாச்சம் கொண்டாந்து 'கொடும்பாவி' கட்டி இழுக்க ஏற்பாடு செய்யிங்க" நொண்டி மாட்டுக்கு சறுக்கன வாட்டமாய் யோசனை சொன்னாரு பழைய நாட்டாம.

கொடும்பாவி கட்டி இழுக்க கூப்புட்டுப் பாத்தாங்க. யாரும் வர்ல.

"ஏதோ ஊர்ல சாகன்னு சேதிகெடச்சதும் கோளாவிலேர்ந்து பஸ் சார்ஜ்க்கூட பாக்காம வந்தா. கொடும்பாவி இழுக்கணுமாம் கொடும்பாவி"

"கண்ணு புரியலிங்க"

"ஆமம். எவண்டாப் போறது. கொடும்பாவி இழுக்கறவங்கத ஆறுமாசத்துக்குள்ளப் பூடுமாம்"

"கொடும்பாவி இழுக்கப் போறரை, ஒரு நாளு முழுசும் ஊட்டுப் பக்கமே வரக்கூடாதாண்டா. மறந்தாப்ல வந்துட்டா ஆள அடிச்சிடுமாம்"

"என்னாசாமி பசங்க சேந்து ஊத்துறிங்க. சாகல கண்ணாலப் பாத்துட்டு நாளு கையி கூழ வாங்கிக் குடிச்சிட்டு செத்துப் போவலாம்னு பாக்கறாங்க"

முனுசாமி, ஒலமூடி, புலிச்சான், காத்தமுத்து, செல்வராசு இப்படி ஆளாளுக்கு எதாவுது சொல்லி தலயக் கைட்டிக்கிறாங்க. கூட்டத்தோடுக் கூட்டமா நின்ன குப்பன் யோசனை செய்ஞ்சபடி தலய சொறிஞ்சான்.

கும்பனுக்கு நேத்துக் காலயில பட்டணத்தான் மெரட்டனது நெனவுக்கு வந்தது "நாளு பேருக்கு மத்தியில பெருசா நாளு கௌாசு ஊத்துன்னு சொலிட்ட. நாலு என்னா ஆச்சி. வயிசி ஆயிடிச்சே தவிர அறிவில்ல ஒனக்கு. ஆயிரம் ஐநூறா அம்பது ரூவாதான். சூடு சொரனை இருக்கணும். நானா என்னா தர்மமா பண்றன். அவனுவே வேற பொதங்கசெழம ஆச்சின்னா வேன எடுத்துக்கிட்டு வந்து பல்லப் புடுங்கறான். எனுமோ போ, ஏமாத்தலாமுன்னுமட்டும் பாக்காத நானு வாங்கற வழியில வாங்கிடுவன் வாணாம்."

என்னாத்த எழவெடுத்தச் சாதியோ. ஊட்டுக்கு வர்ற விருந்தாடிவோ சோறுக்குடும் வேணான்னுட்டு, "முந்திரியில காய்ச்சா சரக்கு நெல்லா இருக்குமாம். போவுமா?"ன்னு கொளம்பிடு றானுவோ இப்பிடித்தான் ஒரு தடவ, பக்கத்து ஊட்ல எழவு ஒண்ணு. வந்த விருந்தாடிவோகிட்டப் பல்ல இளிக்க வேண்டிதாப்பூட்டுது பட்ணத் தாங்கிட்ட மாசம் மூணாயிப் போச்சு. கெழுவிப் பாட்லதான் வவுறு கழுவுறது. களவெட்ட, தப்புக் கொட்டப் பொறுக்கன்னு அப்பிடிப் போவும். ஒன்னும் குடுக்க முடியில. நேத்துப் பல்லப் புடுங்காதக் கொறயா சூடு சொரண இருக்கான்னு...

குப்பன் தலய சொறியறத நிறுத்தினான். "நாம் போறஞ்சாமி"ன்னு பின்னாடி வந்து கும்புட்டான். கையில அம்பது ரூபா நோட்டு வுழுந்துது.

"நல்ல நாளும் பெரிய நாளும் நாலு கையிக் கூழு வாங்கிக் குடிக்காம இப்பிடியாப் போவனுவோ"

"இவனுவோ திருந்தமாட்டானு வோப்பா"

"போ. ஒம்பொழப்பு இன்னிக்கி சுடுகாட்லதான்"

''அம்பது ரூவான்னு தெரிஞ்சா நானே போயிருப்பன்'' - சரமாரியா வார்த்தைவோ வுழுந்தத இப்ப நெனச்சாலும் குப்பனுக்கு எனுமோ மாதிரி இருந்தது.

வெயில் உச்சிக்கு வந்துட்டுது. பசி வவுத்தைக் கிள்ளிச்சி. காலயில சாரதாக்கடயில நாலு இட்லி வாங்கி வாயிலப் போட்டது. அது மாத்தர மாதிரி ஒரு வாய்க்கிக்கூட காணுல. என்னாத்தத் தாங்கும்.

ஊருக்குள்ள சரவேட்டுச் சத்தம் கேட்டுது. சாக நடக்கு தொட்ருக்கு. போன தடவ ஊத்தறப்ப எம்மாங்கூழு எத்தினி அண்டாப்பான. பாரல்ல கொட்டி தண்ணிய ஊத்திகாலால ஏறி மிறிச்சி மாங்கா, வெங்காயம், மொளகாச்சீவல அள்ளிப் போட்டு கொடப்பி, பூக்கட வரைக்கும் ஈயக்குண்டானும் ஈயக்குண்டும் வேணும் வாணான்னு கூழு.

"என்னா குப்பாப் போதுமா. இன்னம் வேணுமா" "அய்யய் போதுஞ்சாமி. ஆத்தா புண்ணியத்துல நாலு கையி கூழும் வ்ாங்கிக் குடிச்சிட்டன். குண்டிலியும் நெறயா வாங்கி வச்சிக்கிட்டன்" இப்ப சொல்ற மாதிரி இருக்குது. குப்பனுக்கு மனசு ஆறுல. சப்புக் கொட்டினான்.

"சரி என்னாப் பண்றது. எப்பிடியும் கெழுவி வாங்கி குடிச்சிட்டு குண்டுல வாங்கி யாந்திருப்பா. ஆண்டைவுளும்.

குப்பங் கொடும்பாவி இழுத்துக் கிட்டுப் போயிருக்கான். அவம் பொண்டாட்டிகிட்டக் கொஞ்சம் கட்டியாப் பேத்துப் போடுங்கடா''ன்னு சொல்லி யிருப்பாங்க.

"ராத்திரிக்குப் போயி வவுறு ரொம்பக் குடிச்சிட்டு ஆட்டம் பாக்கலாம்" துண்ட விரிச்சிப் போட்டு நெழல்ல மொடங்கினான். மனசுல பட்டணத்தான் வந்தான். அவம் மூஞ்சியில அம்பது ரூவா நோட்டத் தூக்கிக் கெடாசினான்.

●



**வ**ரும்போது பார்க்கலாம் என
வந்தால்
போகும்போது உதிர்ந்து கிடந்த
பன்னீர்ப்
பூவையெல்லாம்
பெருக்கித் தள்ளியிருந்தார்கள்.

கால்வைக்க முடியாத
மழைச் சகதி
காலையில் இருந்ததுபோல்
மாலையில் இருக்காது என்று
திரும்பினால்
அப்படியே இருந்தது
அடுத்தநாள் வரையிலும்.
ஏறுக்கு மாறாகவே
இருக்கிற தெருவில்தான்
நடக்க வேண்டியது இருக்கிறது
நானும் என் கைகளால்.

**- கல்யாண்ஜி**

*Best compliments*

# HOTEL PARVATHI INTERNATIONAL

69, Court Road, Nagarkoil - 629 001
Phone : 33020, 33023, 32718

79. எட்வர்ட் மானே



எந்தக் 'கோட்டை'யில் நின்று கொண்டிருந்தாலும் புதன்கிழமை மதியக் கொடைக்குக் கோயிலுக்குமுன் 'டாண்' என்று வந்து ஆஜராகிக் கொள்வார் காத்தமுத்து. மாரியம்மன் ஆடும் வெள்ளையப்பனின் மஞ்சள் நீராட்டத்தைப் பார்க்க அவருக்குள் அத்தனை ஆசை. எல்லா அம்மன்களும் கொதிக்கும் மஞ்சள் நீருக்குள் வேப்பங் குழைகளும் தென்னம்பூக்களும் சேர்ந்த கொத்தை முக்கியும் முக்காமலும் பானை விளிம்புகளைத் தொட்டுக் கொண்டு ஆடும்போது, வெள்ளையப்பன் மட்டும் அதை பானைக்குள் ஆழமாய் முக்கி எடுத்து, ஆவிபறக்கும் சூட்டில் தலையில் தப்பித் தப்பி ஆவேசம் எடுத்து ஆடுவதைப் பார்க்க அவருக்குள் அலாதி ஆர்வமாயிருக்கும். புகை பறக்க நுரை கக்கிக் கொண்டு, தலையிலிருந்து முதுகு வழியே தாரை தாரையாய் வழிந்தோடும் அந்த மஞ்சள் நீரைப் பார்க்கவே தேகம் புல்லரித்துப் போகும் அவருக்கு. மனசு குதூகலித்துத் துள்ளும். அம்மன்கள் என்றால் இப்படித்தான் ஆட வேண்டும் என்று தனக்குத்தானே முடிவு கட்டிக்கொள்வார். ஒரு மத்தி வீட்டு முனியாண்டி ஆடுகிற மாதிரியோ, கோடி வீட்டு ராசையா ஆடுகிற மாதிரியோ, 'கொளகொளா சளசளா' என்றா ஆடவேண்டும் என்று மனசுக்குள் பரிகாசமாகச் சிரித்துக் கொள்வார்.



திங்கட்கிழமை, செவ்வாய்க் கிழமை - இரண்டு நாட்களும் காத்தமுத்துவை மறந்தும்கூட - மருந்துக்கும்கூட - கோயிலின் பக்கம் பார்த்துவிட முடியாது என்பது எல்லோருக்கும் தெரிந்திருந்த ஒன்று. இவ்வளவுக்கும் அவருக்கும் கொடைவிழாக் காரியங்களில் பங்கெடுத்துக் கொள்ளும் கடமையும் உரிமையும் இருந்திருந்தாலும் அதுபற்றிப் பெரிதாக அவர் அக்கறை எடுத்துக் கொண்டதில்லை. மொத்தம் முப்பது தலைக்கட்டுகள் இருந்திருந்த அந்தத் தெருவில் தலைக்கட்டுக்கு ஓர் ஆளாவது கொடைவிழாக் காரியங்களில் கோயிலுக்குள் நிற்கவேண்டும் என்பது ஊர்க் கட்டுப்பாடாயிருந்தது. அதை எல்லாம் காதில் போட்டுக் கொள்ளாமல் இரண்டு நாட்களும் எங்கெல்லமோ ஊர் சுற்றிவிட்டு மூன்றாவது நாள் புதன்கிழமை மதியம் மட்டும் காத்தமுத்து கம்பீரமாய் கோயிலுக்கு முன் தோன்றி விடுவார். வெள்ளையப்பனின் மஞ்சள் நீராட்டத்தைப் பார்க்கவென்றே அந்த அபூர்வ தரிசனம். கொடைவிழாவின் கடைசி நாளான புதன்கிழமைதான் அம்மன்களின் மஞ்சள் நீராட்டம் நடக்கும் என்பது அவருக்குத் தெரியாததல்ல. இரண்டு நாட்களும் ஆடிக் களைத்து அலுப்படைந்துப் போயிருக்கும் அம்மன்கள் மூன்றாம் நாள் முடிவில் குளித்துக் கரையேறுவதாய் அந்த மஞ்சள் நீராட்டு...

அதுவும் இப்போது மூன்று வருசங்களாகத்தான் காத்தமுத்து மஞ்சள் நீராட்டம் பார்ப்பதற்காகவாவது கோயிலுக்கு வந்து கொண்டிருக்கிறார். அதற்கு முந்திய வருசங்களில் எல்லாம் கோயில் பக்கமே அவர் தலை காட்டியது கிடையாது என்பதே நிஜமாயிருந்தது. மூன்று வருசங்களாகத்தான் வெள்ளையப்பனும் அருள்வந்து மாரியம்மன் ஆட ஆரம்பித்திருக்கிறான். அவனுக்கு முன்பு ஆடிய மாசாணம் திடீரென்று ஒருநாள் சாயந்தரம் பண்ணையின் வயலில் வைத்து நெஞ்சுவலி கண்டு இறந்துவிட, அவனின் மரணத்துக்கு அடுத்த கொடைவிழாவிலிருந்து வெள்ளையன் 'கோவணம்' பாய்க்கத் துவங்கியிருந்தான். மாசாணம்கூட இத்தனைத் துடியாய் ஆடியதில்லை என்பதைப் பெருமிதத்தோடு நினைத்துப் பார்த்தார். காத்தமுத்து வெள்ளையப்பனைத் தவிர வேறு யார்தான் ஒழுங்காகவும் உண்மையாகவும் அம்மன் சாமி ஆடுகிறார்கள் என்றிருந்தது அவருக்கு. 'தீப்பந்தம்' ஏந்தக்கூட மற்றவர்களுக்குப் பொருத்தமாக ஆடத் தெரியவில்லை. வில்லைக்கம்பும் சிவப்புப் பட்டும் பேருக்குத்தான் கையிலிருக்கின்றனவே தவிர, அதற்குரிய தோரணையும்

**அபிமானி**

ஓவியம்: **எம். கேப்ரியல்**

# சூடு

கச்சிதமும் கொஞ்சம்கூட அவர்களுக்கு இல்லாமலிருப்பதாகத் தோன்றியது. ஆற்றுக்குப் போய் கும்பம் ஏந்திக்கொண்டு வரும்போது கூட வெள்ளையப்பனைத் தவிர, வேறு யாருக்கும் தலைகளில் கும்பங்கள் தரிப்பதில்லை என்ற உண்மை தெரிந்திருந்தது அவருக்கு. மற்ற ஊர்க்காடுகளில் ஆடுபவர்களைப் போலவே நாங்களும் அம்மன்சாமி ஆடுகிறோம் பேமானி என்று மேளங்கொட்டிய கிறுகிறுப்பில் உடம்பைக் கிடம்பை ஆட்டிக்கொண்டால் போதுமா? அதற்கென்று ஒரு லச்சணம், பொருத்தம் வேண்டாமா? அதையெல்லாம் இப்போது எந்த அம்மன், சாமி கொண்டாடிகள் கவனித்துக் கொள்கிறார்கள் என்பதை நினைக்க, அவருக்குக் கெந்தளிப்பாயிருந்தது' எல்லாப் பயல்களும் கள்ளச்சாமி ஆடுகிறார்கள். சொந்தப்பந்தங்கள் கொண்டு வந்திடும் சூட்டும் எட்டுமுழ வேட்டிக்கும் துண்டுக்கும் பேராசைப் பட்டே உடம்பைக் குலுக்கிக் கொள்கிறார்கள். அந்தக் காலங்களைப் போல இப்போது யார் உண்மையாக விரதம் இருக்கிறார்கள்? கொடைக்கு ஒரு வாரத்துக்கு முன்பு கோயிலில் கொடிக்கம்பம் நாட்டிய உடனேயே மத்தியானம் ஒருவேளைப் பருப்புக் குழம்புச் சாப்பாட்டை மட்டும் விழுங்கிவிட்டு சிவனே என்று பட்டினி கிடக்க வேண்டும், மற்ற இரண்டு நேரங்களுக்கும், மீன், இறைச்சி வகைகள் அண்டி விடக்கூடாது. பொம்பளைச் சேர்க்கையோ, பொல்லாப்போ வந்துவிடக்கூடாது. சாராயத் தண்ணியை மறந்தும்கூடத் தொட்டுவிடக் கூடாது. இப்போது எவன் யோக்கியனாக இருக்கிறான் வெள்ளையப்பனைத் தவிர என்று அவனைப் பற்றியே பெரிதாய் சிலாகித்துக் கொண்டார் காத்தமுத்து. அம்மன், சாமி ஆடிக்கொண்டிருக்கும்போதே அவனவன் நைசாக உருவிக்கொண்டுபோய் மூக்குமுட்டச் சாராயத்தைப் போட்டுக்கொண்டு வந்துதான் ஆடுகிறார்கள் என்று வாய்க்குள்ளே பொருமிக் கொண்டார். பொண்டாட்டிமார்கள்கூடப் படுத்தெழுந்துவிட்டு வந்துதான் பயமில்லாமல் திருநீரை எடுத்துப் பூசிக் கொள்கிறார்கள். இந்த வெள்ளையப்பன் மட்டும் அவற்றிற்கெல்லாம் விதிவிலக்காக, யோக்கியவானாக விரதமிருப்பதால்தான் மாரியம்மன் அவன்மேல துடியாய் வருகிறது என்று அர்த்தப்படுத்திக் கொண்டார் காத்தமுத்து. அவரின் பக்கத்து வீட்டுக்காரனாய் அவன் இருந்தாலும், அவரோடவே காடுகரைகளுக்குக் கூலி வேலைக்குப் போய் அவனின் சிநேகிதம் கிடைத்திருந்தாலும் அவனைப் பற்றிச் சரியாக அறிந்துகொள்ள முடிந்திருந்தது அவருக்கு. அப்படி அவன் சுத்தபத்தமாய் இருப்பதால்தான் கொதிக்கும் மஞ்சள் நீரை ஆவேசமாய்க் கோரி எடுத்துத் தலைமேலே தப்பிக் கொண்டு வேகம் வேகமாய் துள்ளிக்குதித்து அவனால் ஆடமுடிகிறது என்றும் அவருக்கு நினைப்போடியது. மற்றெல்லோரும் பசையடித்துக் கொண்டல்லவா ஆடுகிறார்கள்.

“ஏலே... என்னலே பாத்துக்கிட்டு நிக்கதிய? ஓலய எடுத்து செழமா உள்ளத் தள்ளுங்கலே... தீ மதமதன்னு எரிஞ்சாத்தானலே பானைங்க சுருக்காப் பொங்கும்?”

முன்னே நின்றிருந்த இளவட்டங்களை நயமாய்க் கோபித்துக் கொண்டே காத்தமுத்து இரண்டு மூன்று கருக்கு ஓலைகளைக் கிழேயிருந்து எடுத்து வாகாய் அடுப்புக்குள் திணித்தார். திமுதிமுவென்று கொழுந்துவிட்டு எரிந்தன அடுப்புகள். அவரின் வயசுக்கும் தேகத்துக்கும், அவர் காட்டிய அவசரமும் சுறுசுறுப்பும் முரண்பாடுகளாய் இருந்தன. மெலிந்த தேகம். ஒட்டடைக் குச்சிகளாய் கால்களும் கைகளும். வளர்ந்த உருவம். அதற்குரிய தாட்டியமில்லை அவரிடம். எண்ணெய்ப் பிசுக்கோடு சடைத்திருந்த நரைமயிர்க்கற்றைகளை உள்ளடக்கிப் புதுத் துண்டு ஒன்றாய் கிரீடம் போலத் தலைப்பாகைக் கட்டியிருந்தார். மேனியில் முரட்டுக் காக்கிச் சட்டை. இடுப்பில் நாலுமுழ வேட்டி, எல்லாம் புதுசுதான். கொடைக்காக அவரின் மூத்த மகன் வாங்கித் தந்திருந்தான். சவரம் செய்யாதிருந்த ஒருவாரத் தாடி மயிர்கள், அவரின் கடாமீசையை சிறிதாக்கிக் காட்டின.

“ஆமா பெரிசா வந்திட்டாரு. வழக்குப் பேச ஆளில்லைன்னுக்கிட்டு, பெரிய வக்கீலுகெணக்கா... இவ்வளவு தேரமும் எங்கனப் போயித் தொலைஞ்சிருந்தாரோ?”

பக்கத்தில் நின்றிருந்த இளவட்டங்கள் அவரைப் பரிகாசப் படுத்திச் சிரித்துக் கொண்டன. பேச்சோடு பேச்சாக அவர்களும் கருக்கு ஓலைகளை எடுத்து அடுப்புக்குள் திணித்துக் கொண்டிருந்தனர். உடனே பானைகள் பொங்க வேண்டியதே அவர்களின் அவசரமும் அக்கறையாகவும் இருந்தன. காய்ந்திருந்த அந்த ஓலைகளை அறிபறியாய்க் கிளறி, எடுத்துக் கொண்ட சலனத்தில் அவை சரசரவென்று ஒலி எழுப்பின. அவருக்கு அது சங்கீதமாகவே தோன்றியது.

அம்மன் சந்நிதிக்கு முன்னே சரளைக் கற்கள் சிதறிக் கிடந்திருந்த மண்சாலையின் மத்தியில் இரண்டு பெரிய கல் அடுப்புகளில் மண்பானைகள் வீற்றிருந்தன. அகஸ்மாத்தாய் அந்தச் சாலை வழியே பயணித்து வந்த மாட்டு வண்டிகளும் மிதிவண்டிகளும் தற்சமயம் தங்கள் வழிகளை மாற்றிக் கொண்டு திரும்பின.

கொழுந்து விட்டெரிந்த தீநாக்குகள் பானைகளின் அடிவயிறுகளைத் தங்கள் உஷ்ணக் கரங்களால் ஆலிங்கனம் செய்து சூடேற்றிக் கொண்டிருந்தன. மதிய வெயிலின் உக்கிரம் தகித்தது. கோபம் பொங்கிச் சீறும் பாம்பின் படமெடுத்தலைப் போல அடிக்கடி வேகம் வேகமாய் வீசிவிட்டுத் தலையைச் சாய்த்துக் கொண்டது வெப்பக் காற்று. சில நேரங்களில் காற்றுக்கு ஈடுதர முடியாமல் அடுப்புச் சாம்பல் அந்தரத்தில் பறந்து போனது. தணல் கங்குகளில் சில அவ்வப்போது அடுப்புக்களை விட்டு வெளிவந்து ஓரங்களில் விழாமலில்லை. மேற்கிலிருந்து வீசும் மலைக்காற்றுக்கு இதுதான் ஆரம்ப காலம் என்பது எல்லோருக்கும் தெரிந்திருந்த ஒன்றுதான். இப்போதாவது பரவாயில்லை. அடுத்த மாதத்திலிருந்துதான் காற்றுக்கு அபாரக் கொண்டாட்டமாயிருக்கும் என்பதையும் அவர்கள் அறிந்திருந்தனர்.

“கங்குவள உள்ளத் தள்ளுங்கப்பா. வாலிபப் பசங்க... இந்த வயசில் எப்படித் துள்ளத் துடிப்பாப் பறக்கணும்”

இளவட்டங்களைக் கிண்டல் பண்ணியே வேலை வாங்கினார் காத்தமுத்து. அவருடையக் கிண்டல்கள் இளவட்டங்களைக் காயப்படுத்தி விடாது என்பது அவருக்குத் தெரியும். எல்லோரும் பேரன் வயசுப் பிள்ளைகள்... சிலர் பேரன் முறைக்காரர்களாகவும் இருந்திருந்தது அவருக்குச் சாதகமாயிருந்தது. அவர்களைப் போல அவரும் சளைக்காமல் தீத் தள்ளிக் கொடுத்தார். வேனல்

வெயிலில் சருகுகளாய் காய்ந்துக் கொண்டிருந்தவர்கள், அடுப்புத் தீ வெக்கையில் வேர்வை பொங்கி நசுத்துப் போனார்கள்.

கோயில் பிரகாரத்தின் முன்னே, சற்று கிழக்குத் தள்ளி நின்றிருந்த வேப்பமர நிழலுக்குள் பிதுங்கி நின்றிருந்தது கூட்டம். ஆண்கள், பெண்கள், குழந்தைகள், கிழடுகள் என்று கதம்பக் கலவையாய் விரவியிருந்தனர். சமூகரெங்கபுரம் கிருஷ்ண சாமியின் தப்புக் கட்டையில் பந்தலுக்குள் அம்மன், சாமிகளின் ஆக்ரோச ஆட்டங்கள். தப்புக் கட்டையைத் தொடர்ந்துத் தவில்கள் முழங்கின. பானைகள் பொங்கி வழியத் தயாராக நிற்கிற அவகாசத்தில்தான் அம்மன்கள் எல்லாம் வெளியோடிப் பாய்ந்து வரும். சாமிகளுக்கு மஞ்சள் நீராட்டம் கிடையாது என்பதால் அவைகள் உள்ளே நின்றுவிடும். வெளியோடிப் பாய்ந்து வரும் அம்மன்களின் கைகளில் வேப்பிலைக் கொத்தையும் தென்னம்பூங் குலையையும் சேர்த்துத் தருவார்கள். நுரையுடன் பானைகளின் விளிம்புகள் தொட்டுப்பொங்கி நிற்கும் மஞ்சள் நீரில் கொத்துக்களை முக்கி எடுத்துத் தலையில் தப்பிக்கொண்டுக் கும்மியடிப்பதுபோல அம்மன்கள் அடுப்புக்களைச் சுற்றிச் சுற்றி ஆடுவதும், ஆனந்த வெறியில் கூச்சலிடுவதும்...

சனங்கள் வெட்டவெறிக்க விழித்துக் கொண்டிருப்பார்கள். எச்சில் நீரைத் தொண்டைக்குள் இறக்கக்கூட மறந்துபோய் நின்றிருப்பார்கள். பக்தி, பக்தியோடு இழைந்தப் பரவசம், பயம், அவர்களின் விழிகளின் ஆழத்தில் எதையோ எதிர்ப்பார்க்கும் துழாவல் மறைந்திருக்கும். நல்லசாமி ஆடுவதும், கள்ளச்சாமி ஆடுவதும் இந்த நீராட்டத்தில் தெரிந்துப் போகும் பரிசோதிக்கும் ஆவல் மேலோங்கி நிற்கும். கள்ளச்சாமி ஆடினால் உலையின் சூடு தாளாமல் சுருண்டு போய்விடுவார்கள்; அம்மன் கொண்டாடிகள். தோல் வெந்து, கொப்புளங் கொப்புளங்களாய்ப் புடைத்து விடும்...

வெள்ளையப்பன் நல்லச்சாமி ஆடுவதால்தான் அவனிடம் அத்தனை ஆவேசமும் துடிப்பும் என்று தோன்றியது காத்தமுத்துவுக்கு. மற்றவர்களிடம் அந்த உற்சாகமில்லை. வெள்ளையப்பன் மீதுள்ள அவரது நம்பிக்கையைக்கூட சில இளவட்டங்கள் பரிகாசம் செய்ததுண்டு. அதுபற்றிக் கவலைப்பட்டிருக்கவில்லை அவர். போன வருடக் கொடைக்கு வந்திருந்த அவரது மருமகன் சொல்லியிருந்தானே 'இதெல்லாம் ஏமாத்து வேலை மாமா' என்று நெருடலாய் இப்போது நினைத்துப் பார்த்தார். திருநெல்வேலியில் 'இஞ்சி நீரோ அல்லது சுக்கு நீரோ' கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். மகன் பெஞ்சாதியின் தம்பி. கொடைக்குக் கூப்பிட்டிருந்தாள் மருமகள். அவனின் பரிகாசத்தைக் கேட்டதும் காத்தமுத்துவுக்கு உடம்பெல்லாம் எரிந்தது போலிருந்தது.

'அடக் கசவாளி பயலா ஒனக்கு என்ன, புத்திகித்திப் பேதலிச்சிப் போச்சா?'

'நா சொன்னா ஓங்களுக்கு அப்படித்தான் தோணும். வேப்பங்கொழையும் தென்னம்பூங்கொலையும் பச்சையாய், ஈரமாயிருக்கிறதால, உலைப்பானைக்குள்ள அதுகள முக்கினதும் கொதி நீரோடச் சூட்ட உறிஞ்சிக்கிரும்... நாம சாதாரணமா குளிக்கும் வெந்நீருக்குள்ள சூடுதான் இருக்கும்... ஈஸியா குளிக்கலாம்... இது ஒண்ணும் அம்மன் அருளோ, பக்தியோ இல்ல... தெரிஞ்சிக்கிருங்க..'

காத்தமுத்துவுக்குப் பதறிக் கொண்டு வந்தது.

'எல நாசமாப் போறவன நாலெழுத்துப் படிச்சிட்டேங்கிதக் கொழுப்புலப் பேசிராத... அம்மன் குத்தம் பொல்லாது.'

நொங்கும் நுரையுமாய் அவன்மேலும் தரையிலும் ஆவிபறக்க பிரவாகமெடுத்து ஓடியது கொதிநீர். ஒரே மஞ்சள் நிறம்.

மருமகன் கோபப்படவில்லை.

'உங்களுக்குச் சம்மதமின்னாச் சொல்லுங்க... நானே ஆடிக் காட்டுதன்'

'நீ ஆடியும் காட்ட வேணாம். பாடியும் காட்ட வேணாம்... வந்தச் சோலியப் பாத்துக்கிட்டு சும்மாயிரு போதும்.'

அதோ... விளிம்புகளை ஒட்டி மேல் நோக்கிப் பொங்கிய வண்ணம் வந்து கொண்டிருக்கின்றன உலைகள். காட்டாற்றில் நுரைகள் கக்கும் குமிழ்களைப் போல 'தப்பரத் தரத்தர'வென்று பானைகளின் மேல் விளிம்புகளைத் தொட்டுக் கொண்டு... 'இதோ வழிந்து' விழுந்துவிடப் போகிறோம்' என்பதால் பயங்காட்டிக் கொண்டு...

அடுப்புகள் மதமதப்பிட்டு எரிந்தன. சீக்கிரமாய்ப் பொங்கி வழிந்துவிடும் என்ற எதிர்ப்பார்ப்பில் வெறுமனே நின்றுவிடக் கூடாது. தொடர்ந்து தீ எரிந்தால்தான் பூரணமாய் உலை பொங்கி நிற்கும். யதார்த்த நிலையறிந்து முன்னைவிடச் சுறுசுறுப்பாய் ஓலைகளை எடுத்து அடுப்புக்குள் செருகி வைத்தார் காத்தமுத்து.

அம்மன்கள் மூன்றும் தாளலயத்தோடு வெளிவந்து அடுப்புகளைச் சுற்றி ஆடத்துவங்கின. தப்புக் கட்டையின் 'சண்டக் சண்டக்'கிலும் தவில்களின் 'சஞ்சஞ்சனக்னா'விலும் அவர்களின் ஆட்டம் அற்புதமாக இருந்தன. வெள்ளையப்பனின்... இல்லை, மாரியம்மனின் கையில் திருநீர்க் கொப்புரை இருந்தது. கொப்புரைக்குள் விரல் நுழைத்து திருநீர்ப் பொடியைக் கிள்ளியெடுத்து இரண்டு பானைகளுக்குள்ளும் போட்டது மாரியம்மன்.

மூவரின் கைகளிலும் வேப்பிலைக் கொத்தும் தென்னம்பூங் குலையும் சேர்த்துத் தரப்பட்டன.

உலைகள் பொங்கிக் குமிந்து கொண்டு நின்றன. மஞ்சள் நிறத்தை அமுக்கிவிட்டு வெள்ளை நுரைகள் வெளித் தெரிந்தன. மொய்த்துக் கொண்டு நின்றிருந்த பெண்களின் குலவைச் சத்தம் சூழ்நிலையை உணர்ச்சி வசப்படுத்தியது. முன்னைவிட ஆக்ரோசமாய் தாளங்கள் முழங்கின. மயிர்க் கூச்செறிய, மக்கள் கூட்டம் மெதுமெதுவாய் முன்னேறி, இடைவெளியைக் குறைத்துக் கொண்டு வந்தது. அவர்களுக்குள் கிளர்ந்து நின்றிருந்தப் பக்தி

ஆவேசத்தில் தங்கள் கால்கள் முன்னேறி வருவதைக் கூட அவர்கள் அறிந்துகொள்ளும் உணர்வில் இல்லை. காடுகரைகளில் அரும்பாடுபட்டுச் சம்பாதித்த கூலியில் கொண்டாடும் அம்மனின் அருள்மிகுந்த ஆட்டத்தைக் காண்பதே அவர்களின் பிறவிப் பெரும்பயனாய் தோன்றியது. அம்மனை மகிழ்விப்பதாலே தங்கள் வாழ்க்கை செழிக்காதா என்ற ஏக்கமிருந்தது.

வெள்ளையப்பனின் ஆட்டத்தையே அனைவரின் விழிகளும் படம் பிடித்துக் கொண்டிருந்தன என்பதைக் காத்தமுத்து உணர்ந்து கொண்டார். அவருக்குள்ளும் இனம் புரியாத பரபரப்பு. இன்னும் சில கணங்களில் வெள்ளையப்பன் தன் கையிலிருக்கும் கொத்துக்களை உலையில் முக்கி நீராடிக் கொள்வதைக் காணப்போகும் பரபரப்பு. நீருக்குள் இறங்கித் தலையைச் சிலுப்பிக் கொள்ளும் ஒரு குதிரையின் நளினமாய் அவனிடம் ஆட்டம் தோன்றும்.

அப்போதுதான் அது நடந்தது...

அடுப்புகளைச் சுற்றி ஆடிக் கொண்டிருந்த வெள்ளையப்பன் திடுமெனச் சரிந்து பானையின் மேல்விழ, அவனின் அழுத்தம் தாங்காமல் அடுப்பிலிருந்து நழுவியப் பானை அப்படியே அவனை மஞ்சள் நீரால் அபிசேகம் பண்ணிவிட்டது. நொங்கும் நுரையுமாய் அவன்மேலும் தரையிலும் ஆவிபறக்க பிரவாகமெடுத்து ஓடியது கொதிநீர் ஒரே மஞ்சள் நிறம்.

"அம்மனைப் பிடிங்கல, அம்மனைப் பிடிங்கல"

திடீரென்று கூட்டத்திலிருந்து இரண்டொரு குரல்கள் ஆவேசமாய் முழங்கிக் கொண்டு ஓடியதில் எல்லோரும் பொறி கலங்கிப் போனார்கள். சந்தடியும் சலசலப்புமாயிருந்தன.

காத்தமுத்துவுக்கு உயிர் முடிச்சே அற்றுப்போனதாய் ஆயிற்று. என்னவாயிற்று வெள்ளையப்பனுக்கு? கால் இடறி விழுந்துவிட்டானா? அல்லது அடுப்புக்கு முன் ஏதாவது கங்குகள் விழுந்து, அதன்மேல் அவனின் பாதங்கள்



பட்டு வலியெடுத்து விட்டதா?

"அய்யோ அம்மா" என்று கூச்சல் போடத் துவங்கியிருந்தான். வெள்ளையப்பன். வலியின் கொடூரம் தாளாமல் தரையில் கிடந்து புரண்டு கொண்டிருந்தான். அவனின் அரையில் இறுக்கிக் கட்டியிருந்த வேட்டி அவிழ்ந்து தரையில் கிடந்து புரளத் துவங்கியது. செம்மண்ணும் மஞ்சள் நீரும் கலந்த சக்தி.

மேளதாளங்கள் எல்லாம் நின்று, மயான அமைதி குடி கொண்டிருந்தது.

சட்டென்று இரண்டு இளைஞர்கள் அவனை நெருங்கித் தொட்டுத் தூக்கிக் கொண்டு வேகம் வேகமாய் பந்தலுக்குள்போய் படுக்க வைத்தார்கள். படுக்க முடியாமல் வேதனையால் உட்கார்ந்துகொள்ள எத்தனித்தான் வெள்ளையப்பன். உட்காரவும் முடியாமல் பிருஷ்டங்கள் வலித்தன. புண்ணாய் வலித்தன. அவனின் உதடுகளிலிருந்து இம்சையான பொருமல்கள்.

"தூரப் போங்கப்பா... செத்தம் ஒதுங்கி நில்லுங்க... காத்து வரட்டும்"

கைநீட்டியவாறு கூட்டத்தைச் சற்றுவிலக்கி விட்டவராய் முன்னே வந்தார் காத்தமுத்து. தன் பிரியமானவனின் மஞ்சள் நீராட்டத்தைப் பார்க்க முடியவில்லையே என்பது அவரின் கவலையாக இருந்தாலும் அந்தப் பிரியமானவனுக்கு ஏற்பட்டுவிட்ட துயரத்தை நினைத்து மிகவும் கவலையாக இருந்தது.

"ஒண்ணும் ஆவாது... எல்லாத்தயும் அம்மா பாத்துக்கிருவா"

கோயிலுக்குள் அலங்காரப் பூஷிதையாய் அமர்ந்திருந்த மாரியம்மனைப் பார்த்துப் பெருமைப் பட்டுக் கொண்டார். அவரைப் போலவே மற்றவர்களும் அம்மனைத் தங்கள் வாய்க்குள்ளே முணுமுணுத்து வேண்டிக் கொண்டதுத் தெரிந்தது

அவருக்கு.

"சுருக்கா எளநீர் கொண் டாங்கப்பா... அக்கினில குளிச்சிருக் கிறத அம்மாவுக்குத் தாகம் போக் காண்டாமா?"

மஞ்சள் நீராடியதும் அம்மன் களின், தலைகளில் இளநீர் ஊற்றுவது வழக்கமாதலால், காத்தமுத்துச் சொன் னதும் இரண்டொரு இளவட்டங்கள் ஒற்றைக்கால் பாய்ச்சலில் ஓடிப்போய் கைகளில் இரண்டு மூன்று இளநீர்க் காய்களுடன் வந்தனர்.

"ஊத்துங்கல அவம்மேல."

இளநீர்களை ஒவ்வொன்றாய் வெள்ளையப்பனின் தலைமேல் சிரித்து 'சொளசொள'வென்று ஊற்றத் தொடங்கினார்கள். அவனின் தேக மெங்கும் இறங்கிப் படர்ந்து போனது நீர்.

ஆனால் அவர்களின் நினைப் புக்கு மாறாக, சற்றைக்கெல்லாம் வலி தாளாமல் உச்சத்தில் அலறத் துவங்கி விட்டான் அவன். இப்போதுதான் எல்லோரும் கவனித்தார்கள். வெள்ளையப்பனின் தேகமெங்கும் குமிழ்குமிழாய்ப் பொத்துக்கொண்டு நின்றது தெரிந்தது. சரிதான். கொதிக்கும் வெந்நீரில் பொத்துப் போயிருந்த தோலில் இளநீர்ப்பட்டதும் வெடித்து விடுவதைப் போல வலி எடுக்கலாம். இப்போது என்ன செய்யலாம் என்று யோசனையிலிருந் தார் காத்தமுத்து.

அப்போதுதான் சத்தமாய் அந்தக் குரல் கேட்டது: "இன்னும் என்னப்பா பார்த்துக்கிட்டு நிக்கிதிய? வெள்ளையப்பனை ஆசுபத்திரிக்குத் தூக்குங்கப்பா"

முன்னே நின்றிருந்த மூப்பு ஒன்று முன்மொழிந்ததும் மற்றவர்கள் செயலில் காட்ட ஆரம்பித்தனர். குண்டுக்கட்டாய் வெள்ளையப்பனைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு எந்திரகதியாய் வெளியே ஓடினான் ஓர் இளைஞன். அவனின் பின்னே ஊரே திரண்டுப்போனது. அங்கிருந்து நடந்துபோய்ச் சேருகிற தூரத்தில்தான் மருத்துவமனை இருந்தது ஒருவகை யில் அவர்களுக்குச் சாதகமாக இருந்தது.

காத்தமுத்து மட்டும் மருத்து மனைக்குப் போகும் எண்ணமில் லாமல் கோயிலுக்குள் தனிமையாய் நின்றிருந்தார். அவருக்கு யோசனையா யிருந்தது.

□□□

# நான் கண்ட எழுத்தாளர்களில்

ஒரு நாள் நான்
காரியாலயத்துக்குப்
போனதும் அங்கு
எனக்காகக் காத்துக்
கொண்டிருந்த
தி.நா. சுப்பிரமணியம்,
'புதுமைப்பித்தனின்
படம் உங்களிடம்
இருக்கிறதா?' என்று
கேட்டார்.

"ஏன்? எதற்கு?' என்று
படபடப்போடு
கேட்டேன்.

"போய்விட்டார்" என்று
ஈனஸ்வரத்தில்
சொன்னார். தினசரி
ஆபீசுக்குச் செய்தி
வந்துவிட்டது என்று
தெரிவித்தார்.

கையிலிருந்த ஒரு
அரிய வஸ்துவைப்
பறிகொடுத்தது போல்
இருந்தது. சற்று
நேரங்கழித்து, என்
மேசையைப்
பார்க்கும்போது,
ரகுநாதனின் கடிதம்
வந்திருப்பதைப்
பார்த்தேன்.
புதுமைப்பித்தனைப்
பற்றி ஒரு
கட்டுரை எழுதுமாறு
தினசரி
பத்திரிகையிலிருந்து
கேட்டிருந்தனர்.
கட்டுரையை,
'ஆசிய ஜோதி
மறைந்தது' என்ற
தலைப்புடன்
எழுதினேன்.

1948-ல்
திருவனந்தபுரத்தில்
தன் மனைவியார்
வீட்டில் காலமானார்.

அவருடைய கதைகள்
சிறுகதை
இலக்கியத்துக்கு
வாழ்வு
உள்ளவரையில்,
பரம்பரை
பரம்பரையாக
நிலைத்து நிற்கும்
என்பதில்
சந்தேகமில்லை.
இருபதாம்
நூற்றாண்டின்
ஒப்புயர்வற்ற தமிழ்
இலக்கிய
பிரம்மாக்களாகக்
கூறத்தக்கவர்கள்
பாரதியும்
புதுமைப்பித்தனும்
ஆவர். அவருடைய
கதைகளிடத்தில்
நமக்கு எவ்வளவு
மதிப்பு உண்டோ,
அவ்வளவு மதிப்பு
அவருக்கும் உண்டு.

'என் கதைகள் என்
குழந்தைகள்' என்று
அவர் அடிக்கடி
சொல்லுவார்.

**கு. அழகிரிசாமி.**



80. காமில் இசரோ

*Best compliments*

**DR. S. KRISHNAKUMAR.** M.S. D. Ortho

Orthopaedic Surgeon

Krishna Kumar Orthopaedic Hospital

Over Bridge, Parvathipuram, Nagarkoil - 629 807. Phone : 31418, 31322.

# இந்த நகரத்தை தூங்க வைக்கவேண்டும்



இந்த நகரத்தை
தூங்க வைக்க வேண்டும்.

அதன் பைத்தியக் கண்களில்
செவ்வரி படர்கிறது

காலமும் அகாலமும்
குழம்பிய காலத்தில்
அது பிரமைகளில் நீந்துகிறது

மிகவும் களைப்படைந்து விட்டது,
எனினும் தூங்க மறுக்கிறது .

ஒரு போதும் அடையவியலா
தன்னுடலை
தானே தின்னும் பசியில்
சுற்றிச் சுற்றி வருகிறது.

நகரங்கள்
தூங்க மறந்து போனதால்
கனவு காணும் பழக்கத்தையும்
இழந்து விட்டன.

விசித்திர ஒலிகளை எழுப்பியபடி
புரண்டு புரண்டு படுக்கிறது.

வலி அதிகரிக்கும் போதெல்லாம்
நாய்களின் குரல் வழியே
நிலவை நோக்கி ஊளையிடுகிறது.

தூங்காத நகரங்கள்
விடிகிற பொழுதின்
ந்தப் பரவசத்தையும் காண்பதில்லை

அதற்கு தன் செயல்களை
எங்கே நிறுத்தி
எங்கே தொடங்க வேண்டுமென
புரிவதே இல்லை.

நான் சற்றைக்கு முன்
நிராதரவான நிலையில்
கழுத்தறுபட்ட ஒரு மனிதன்



என் கழுத்தை அறுத்தவனும்
நானும்
ஒரு கணம் முன்புவரை
குறுக்கிடும் உத்தேசம் கொண்டிருக்கவில்லை.

இவை நிகழ்கின்றன
யுத்தத்தின் நெறிமுறைகள்
ஏதுமில்லாத இந்த நகரம்
துரோகப் பெட்ரோல், குற்றங்களால்
தன் வழிமுறைகளை நிச்சயித்துக் கொண்டிருக்கிறது.

இன்றும் சில பெண்களும்
குழந்தைகளும் காணாமல் போயிருக்கிறார்கள்.
இந்த இரவின் வெப்பத்தில்
அவர்கள் ஆவியாகியிருக்கக் கூடும்.

பைத்தியங்களும்
தற்கொலை செய்து கொண்டவர்களும்
எப்படியோ இரகசியமாக
வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

நகரங்கள்
என்றிலிருந்து தூங்க மறந்தன என்பதற்கு
நம்மிடம் சாட்சியங்களில்லை.

ஒரே ஒரு இரவு மட்டும்
இந்த வாகனங்கள் அனைத்தையும்
பொம்மைக் கார்களாக்கி
குழந்தைகளிடம் கொடுத்துவிடலாம்.

பற்றி எரியும் மின் கம்பங்களை பிடுங்கி
கடல் நீரில் அமிழ்த்தி விடலாம்

தூக்க மாத்திரைகளின்றி
இந்த நகரத்தை தூங்க வைக்கவேண்டும்

புதையுண்ட நகரங்கள் போல.

# மனுஷ்ய புத்திரன்

நல்வாழ்த்துகள்

**பக்ஷி கே. இராமநாதம் செட்டியார் சன்**
**பக்ஷி ஆர். கோபாலன் செட்டியார் திருமண மண்டபம்**
**பக்ஷி பாம்பே டையிங்**

கடலூர்



81. கிளாட் மோனே

ஓவியம் : போஸ் மருதநாயகம்

# வெள்ளிப்பூண்

''சோசியம் பாக்கலியோ... சோசியம்...''

கமர்க்கட்டு, வேர்க்கடலை, வெள்ளரிக்காய் வகையறாக்களை விற்பது போலத்தான், மாரியம்மாவின் குரல் ஒலித்தது. போதாக்குறைக்கு இந்த நொறுக்குத் தீனிகளைச் சுமப்பது போன்ற ஒரு சணல்பை, அவளது இடதுகரத்தில் பிடிபட்டிருந்தது. வெறும் பை தான்... ஆனாலும் சுமக்க முடியாததுபோல் அவள் பிடித்த தோரனை அப்படி. சோசியத்தை விற்று அரிசி, பருப்பு, காய்கறிகளை வாங்கிப் போவதற்காக அந்தப் பையைக் கொண்டு வந்திருக்கிறாள்.

இந்தப் பையை ஒரு கையிலும், 'சக்கம்மா பிரம்பை இன்னொரு கையிலும் பிடித்தபடி, மாரியம்மா அந்தக் கடற்கரைப் பரப்பைத் தாண்டினாள். கடல் மண்ணுக்கு வரப்பைக் கட்டியதைப் போன்ற இருக்கைச்சுவரைக் கடந்து, அதற்கும் தார்சாலைக்கும் இடையேயுள்ள பிளாட்பாரத்தில் சாய்வாக நின்றபடி வாகனக் காரர்களையும், இருக்கைச் சுவரில் இருந்தவர்களையும் நோட்டமிட்டாள். வேக வேகமாக நடக்கப் போனாள். ஆனாலும் உடல், மனதிற்கு ஒத்துழைக்க மறுத்து, மூச்சு முட்டலாய் அல்லாடியது. கால்கள் தாறுமாறாக நின்றன. இந்தக் கடற்கரையின் உள்வளாகத்தை மும்முறை சுற்றி வந்து விட்டாள். இவளது அம்பது வயதிற்கு இது அதிகம்தான். குறுக்கும் நெடுக்குமாகச் சுற்றி, கும்பல், கும்பலாக இருந்தவர்களுக்கு முன்னாலும், 'ஒருடல் ஈருயிராய்' பின்னிப் பிணைந்தவர்களின் பின்னாலும் நின்றதில் கால்கள் வலி கொடுத்தன.... கண்கள் சொருகின... ஆனாலும் அவள் சோசியத்திற்கு உரியவர்கள் அகப்படவில்லை. கடலோர ஈர மண்ணில் உட்கார்ந்து ஆகாயத்தை அண்ணாந்து பார்க்கும் குறுந்தாடி இளைஞர்கள், வாழ்ந்த வாழ்க்கையை உருவகப்படுத்தி, அதை எதிரே முன்னிறுத்தி, அதைத் திட்டித் தீர்ப்பதுபோல் தனக்குத்தானே பேசிக் கொள்ளும் நடுத்தரங்கள், கைக்கடிகாரத்தில் ஒரு கண்ணும், பின்பக்கம் மறு கண்ணும் போடும் இளம் பெண்கள் - ஆகிய அத்தனை பேரும் ஏனோ சொல்லி வைத்ததுபோல் மாரியம்மாவை ஏறிட்டும் பார்க்கவில்லை... இதனால்தான் சாலைப் பக்கம் வந்து விட்டாள்.. நடக்க ரொம்பவும் கஷ்டமாகத்தான் இருக்கிறது... இருந்தாலும் நடந்துதான் ஆக வேண்டிய நிர்பந்த நிலை...

மாரியம்மாள், உடலும் நோவாமல், மனதும் தளராமல், இந்த இரண்டுக்கும் சமரசம் செய்வதுபோல் நடந்தாள். முக்கால் கிலோமீட்டர் தூரமுள்ள நீள, நெடிய, இருக்கைச் சுவற்றில் இருந்த சின்னஞ்சிறிய விடலிகளைக் குறிவைத்தாள் இவர்களில் பலர் ஆணும் - பெண்ணுமாய் 'வாடா - போடா' என்று பேசியபடியே சினிமா ஸ்டைலில் இடையையோ, உடையையோ யதார்த்தமாய்ப் பற்றியிருப்பவர்கள். இவர்கள், யார்வேணுமுன்னாலும் பார்க்கலாம்' என்பது மாதிரி காதலில் 'கன்பார்ம்' ஆனவர்கள்....... அல்லது காதலாவது, கத்திரிக்காயாவது என்ற மனோபாவத்தில், ஒருவருக்கொருவர் 'கம்பெனி' கொடுப்பவர்கள்; இந்த இரு சாராருமே சோசியத்தைச் சீண்டாதவர்கள்.

மாரியம்மா, கிட்டத்தட்ட ஓட ஆரம்பித்தாள். ஒரு மோட்டார் பைக்கிலிருந்து 'சின்னஞ்சிறுசுகள்' இறங்கின.... அவர்கள் முன்னால் போய் நின்றாள். ''சோசியம் பார்க்கிறீர்களா?'' என்றாள். அந்தப் பெண், ஆளைவிடு என்பதுமாதிரி அவளைப்பார்த்து, பாசாங்குத்தனமாய்க் கும்பிடுபோட்டாள்.... அவளைக் கூட்டிவந்த, அல்லது அவளால் கொண்டுவரப்பட்ட நவநாகரீக இளைஞன், மாரியம்மாவை அருவெறுப்பாய்ப் பார்த்தபடியே, கைகளைத் துடுப்புப்போல் அங்கு மிங்குமாய் ஆட்டி 'கோ.... கோ....' என்று ஆங்கிலத்தில் விரட்டினான்.

மாரியம்மாவிற்கு, என்னவோ போலிருந்தது. கடற்கரை வேலிச்சுவரில் பொத்தென்று உட்கார்ந்தாள். பக்கத்தில் இருந்த பளபளப்பு மனிதர், எழப்போனபோது இவளே எழுந்து ஒர் லுங்கிக்காரர் பக்கம்போய்

சு. சமுத்திரம்

உட்கார்ந்தாள். கால்களை மடித்துப் போட்டு செருப்பு யில்லாத பாதங்களில் கண்ணாடித் துகள்கள் போல் குத்திய கடல் மண் துகள்களைத் தட்டிவிட்டாள். சிறுவர்களின் கால்பந்து, கைப்பந்தாட்டங்களால், உடம்புக்குள் படிந்த மண் துகள்களின் அரிப்பைத் தாங்க முடியாமல், முந்தானையைத் தூக்கி, தலைக்குமேல் நிறுத்தி, அந்த 'மறைப்பில்' சட்டை மாதிரியான ஜாக்கெட்டைத் தளர்த்தி விட்டாள்.... தாரில் நெய்தது போன்ற முரட்டுச் சேலை.... கொண்டையற்ற தலை.... பாதி கழுத்தை மறைத்து உச்சியில் சிலிர்த்த முடி... அந்தக் காலத்து போலீஸ் சிகப்பு தொப்பியின் கருப்பு வடிவம் மாதிரியான மகுடத்தலை... காதுகளில் வெள்ளைச் சுண்ணாம்பு தடவியது போன்ற கம்மல்கள்...

மாரியம்மாவிற்கு, இன்னும் எழுந்திருக்கத் தெம்பில்லை.. தானும் ஒரு வகையில் பிச்சைக்காரிதானோ என்ற எண்ணம், மனதை வருத்தியது. கையில் உள்ள சக்கம்மா பிரம்பை வெறுமையாகப் பார்த்தாள்... ஒரு கோலாட்டுக் குச்சியின் பாதிக் கனபரிமாணம் கொண்ட உருண்ட கோல்.... இரு புறமும் வெள்ளிப் பூண்களால் கோல் அலங்கரிக்கப் பட்டிருந்தது. காலம் கொடுத்த மூப்பைக் காட்டும் சிராய்ப்புகள்....

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு கிராமத்து சக்கம்மா கோவிலில், ஈரப் புடவையோடும், இடுப்பில் வேப் பிலைக் கொத்துக்களோடும், கற்பூர, அக்னி சாட்சியாக, தாத்தா ஒப்படைத்த கோல்... இந்தக் கோல்தான், அவளை கோவில் திருவிழாக்களுக்கும், வாரச் சந்தைகளுக்கும், கோர்ட்டுவளாகங்களுக்கும் வெற்றி கரமாகக் கூட்டிச் சென்றது. அறுவடை காலத்தில் வயல் வரப்புகளில், அவலும், வெல்லமும், உளுந்தும், நெல்லுக்குப் பண்டம் மாற்றம் செய்யும் கூடைக்காரிகளோடு போட்டியிட்டு அவர்களுக்கு கிடைத்ததைவிட ஒரு படி நெல்லை அதிகமாக வாங்கிக் கொடுத்த பிரம்பு; வாலிப வளப்பில் இவள் சுடர்விட்ட போதும், வம்பர்களைக்கூட பயபக்தியோடு பார்க்கவைத்த சோசியக் கோல். வீடியோ - ஆடியோ திடீர்ப் படையெடுப்பில் கிராமங்களில் மயான புத்திரன் உள்ளிட்ட இருபத்தொரு தேவதைகளும் காணாமல் போன போது, இவளது சகாக்கள் சக்கம்மா பிரம்புகளையும் மூலையில் போட்டு விட்டு, மண்வெட்டி, கடப்பாறை



களை கைகளில் எடுத்தபோதுகூட, இந்தக் கைக்கோல் இவளைக் கைவிட வில்லை... இவளை சென்னைக்கு அழைத்து வந்து ஒரு குடிசையைச் சொந்தமாகப் போட வைத்தது. இறப்புச் சல்லடையில் எஞ்சி நிற்கும் இரண்டு பெண்களையும் ஒரு பையனையும் கௌரவமாக வாழ வைத்த பிரம்புதான்...

ஆனாலும் கடந்த ஒரு மாதமாய் இதுக்கு என்னமோ ஆயிடுச்சு... இல்ல ஜனங்களுக்கு என்னவோ ஆயிடுச்சு...

மாரியம்மாள் எழுந்தாள்... கண் காட்டும் தொலைவில் ஒரு மோட்டார் பைக்கில் மேலும், கீழுமாய் வியாபித்திருந்த இளவட்டங்களிடம் போய், பழக்கப்பட்ட அஸ்திரத்தை பிரயோகப் படுத்தலாமா என்று தன்னை மீறி நினைத்தாள்... அந்த அஸத்திரம் பணத்தைக் கொண்டு வரும். கூடவே தொழில் கௌரவத்தையும் குலைத்து விடும்.

போனவாரம், மெரினா கடற்கரையில் தனக்கு கிடைத்த கசப்பான அனுபவத்தை, பத்து படித்துக் கொண்டிருக்கும் தன் மகன் மருது விடம் சொன்னபோது

''எம்மா நீ சோசியம்... கீசியம்... பார்த்துக் கிழிச்சது போதும்... நான் கடலை வித்து உன்னைக் காப்பாத்துறேன்'' என்றான். ஆனாலும், இவள்தான் 'அடி செருப்பால; ஒப்பன மாதிரி முட்டாளா இருக்கப் போறியா' என்று அடக்கினாள். ஆனால் மறுவாரம், இவள் உடம்புக்கு முடியாமல் படுத்தபோது, மகன் மருது, கடலைப் பெட்டியோடு வந்து ஆசீர்வாதம் கேட்டான். இவளால் அழத்தான் முடிந்தது. அனுமதி கொடுக்காமல் இருக்க முடியவில்லை. சும்மா சொல்லப்படாது. மருது, தினமும் இருபது ரூபாய் கொண்டு வந்தான்.. வயது வந்த இரு மகள்களும் அரசு குடியிருப்பு வீடுகளில் பத்துப் பாத்திரம் தேய்த்தும், துணி துவைத்தும், பழைய சோற்றோடு வந்தார்கள்.. இவள் பழைய சகவாசத்தில் ஒரு நாள் இந்த மந்திரக் கோலை எடுத்தபோது, உழைப்பாளி மகன் பார்த்த பார்வையில் இந்தக் கோல் தானாய் விழுந்து தரைதட்டியது.

மாரியம்மாள், நினைவுகளை கலைத்தாள்; எழுந்து சுற்றும் முற்றும் பார்த்தாள். இரவு எட்டிப் பார்த்தது. தொலைவில் உள்ள கடலின் இமை போல் அதன் மேல்பக்கம் ஆகாயம் கருத்திருந்தது. அதற்கு மேல் கடலவனின் நெற்றி போன்ற செவ்வக செவ்வானம், நட்சத்திரங்களை மினிக்கி மினிக்கி காட்டியது. .. இவற்றிற்கு மேலே பறப்பது போன்ற பிரமையுடன் ஒரு விமானம் இரட்டை நட்சத்திர கண்களை மூடி மூடி திறந்தபடி பறந்தோடியது.

சோசியக்காரி யோசித்தாள். வீட்டுக்குத் திரும்பலாமா எப்படி முடியும்? கைநிறைய பணம் கொண்டு வந்த மருது முந்தா நாள் முதுகு வீங்கி வந்தான். இவளைக் கட்டிப் பிடித்து கூப்பாடு போட்டான். சுண்டல், வேர்க்கடலை முதலாளி, இவன் பாதி சரக்கை விற்காமல் வந்தான் என்று தலையில் ஓங்கி



குட்டியிருக்கிறான். இந்த மாதிரி சமயங்களில் மற்ற பயல்கள் பல்லை இளிப்பதுபோல் இளிக்காமல், இவன் பல்லைக் கடித்து, முதலாளியை முறைத்துப் பார்த் திருக்கிறான்... முதலாளி முன்னெச்சரிக்கைகாரன். இவனைப் போல், மற்ற பையன்களும் முறைத்துவிடக் கூடாதே என்ற பயத்தில் பயங்கர வாதியாகி, மருதுவை இரும்பு அகப்பையாலேயே செம சாத்து மாத்தி விட்டான். அவனைத் தேடிப்பிடித்து இவள் நியாயம் கேட்டால், உன்னால ஆனதைப் பார் என்கிறான். இப்போதெல்லாம் கார், பங்களா, தொழிற்சாலை, தோட்டம், துரவு வைத்திருப்பவங்க மட்டும் முதலாளி இல்லை.... நாலுபேரை கீழே வேலைக்கு வைத்திருப்பவன் எல்லாம் முதலாளிங்க. ஒரே அடாவடிதான். இந்த அடாவடியில் பிள்ளை படுத்த படுக்கையாகக் கிடக்கான். அடியின் வலியைவிட அம்மாவிடம் சவால் விட்டானே ஆனதைப்பார் என்று அந்தப்பயலை பரீட்சித்து பார்க்க முடியலயே என்ற இயலாமை.. இதுவும் போதாதென்று, மகள்கள் வேலைபார்த்த, குடியிருப்பு முதலாளிகள், வெளியில் விடுமுறையில் போய்விட்டார்கள். பொண்ணுகளை விவரம் தெரியாத வீடுகளுக்கு அனுப்ப முடியாது. சின்னவளை, ஒரு தடவை அப்படி அனுப்பி பட்டபாடு போதும். இப்போதைக்கு பழைய சோறும், ஊசிப்போன சாம்பாரும் கிடைக்காது. பிள்ளைகள் குலைப்பட்டினியாய் காத்திருப்பார்கள்... பேசாமல் இந்த வெள்ளிப் பூணை மார்வாடியிடம் அடகு வைக்கலாமா... அதவிட நம்மயே அடகு வைக்கலாம்... 'எம்மாடி' இந்த நினைப்பே வரக்கூடாது.

மாரியம்மாவுக்கு, நினைவுகள் நிகழ்வுகளை ஏற்படுத்தத் தூண்டின. யானை பலத்தோடு நடந்தாள். மூன்றாவது சுற்றாக, அந்தக் கடல் மண் பரப்பைக் குறுக்கும் நெடுக்குமாய்க் கால்களால் உழுதாள். மணல் திட்டில் உள்ள 'உங்கள் நண்பன்' கூண்டிற்கு கும்பிடு போட்டு, அங்கிருந்து தாவி, குடை ராட்டினம் பக்கம் கூவி, விளையாட்டு கிளிக்கூண்டிற்குப் பக்கம் தவமிருந்து, பலூன்களைச் சுடும் துப்பாக்கி ''வீரர்கள்'' பக்கம், அவர்களை வியப்பதுபோல் நின்று, பிறகு நடந்து நடந்து, படகுகளின் பக்கம் பாய்ந்து, மீண்டும் கடற்பக்கமிருந்து கரைப்பக்கம்

நோக்கி பெரு மூச்சோடு நடந்தாள். குறி சொல்வதற்காக நடந்தவள், இப்போது குறிக்கோளை மறந்து எதையோ ஒன்றை உதறப் போவதுபோல் திமிறித் திமிறி நடந்தாள். கிட்டத்தட்ட ஒரு உருவத்தை மிதிக்கப் போய்விட்டாள். எப்படியோ, கால்களை கடல் மண்ணில் நங்கூரம் ஊன்றி அந்த உருவத்தைப் பார்த்து விட்டாள். அது ஒரு இளம் பெண். அவளோ முன்பக்கம் இரு கரங்களாலும், மண்ணைத் தோண்டித் தோண்டி அங்குமிங்குமாய் வீசிக் கொண்டிருந்தாள். அவள் பறித்த குழியில் அவள் கண்களைப் போலவே நீர்க் கசிவு....

மாரியம்மாவுக்குப் புரிந்து விட்டது. இது காதல் தோல்வி... அல்லது கட்டியவன் கொடுமை... கழுத்தில் மஞ்சள் கயிறு இல்லை... மலங்க மலங்கப் பார்க்கும் கண்களைப் பார்த்தால் இது காதல் தோல்விதான்...

மாரியம்மா, அவளது 'மண் வாசனை' கவனத்தை திருப்புவதற்காக உரத்துக் குரலிட்டாள்.

'சோசியம் பாரு தாயி... நடந்தது நடக்கிறது நடக்கப்போகிறது.. உனக்கு வாற கணவன் நல்லவனா... கெட்டவனா.. பொறக்கப் போறது ஆணா.. பெண்ணா... இந்த வருசம் பரீட்சையில பாஸாயிடுவியா இல்லே பெயிலாயிடுவியா... சொத்து வாங்க யோகம் இருக்கா... இல்லையா... வெளிநாடு செல்ல வாய்ப்பு இருக்கா.. இல்லையா... காதல் கல்யாணமா... கட்டாய திருமணமா... ஆயுசுப்பத்திய சந்தேகமா.... கைரேகை எல்லாம் காட்டும் உன்னைத்தான் தாயி...''

> இவளது சகாக்கள் சக்கம்மா பிரம்புகளையும் மூலையில் போட்டு விட்டு, மண்வெட்டி, கடப்பாறை களை கைகளில் எடுத்தபோதுகூட, இந்தக் கைக்கோல் இவளைக் கைவிட வில்லை...

அந்தப் பெண் முதலில் மருண்டு பார்த்தாள்... சல்வார் கமீஷ்காரி... கழுத்தைச் சுற்றிய துப்பட்டா துணி சுடர் விட்டது... காது வளையங்கள் ஒளி விட்டன.... கைக்கடிகாரம் டாலடித்தது... இருபத்தி மூன்று வயது தேறலாம்.

''ஒன்னத்தான் தாயீ!''

''எனக்கு எந்த இழவும் வேண்டாம்... வேணுமுன்னா இந்தக் கையை வெட்டிப் போடு...''

''அபசகுனமா பேசாத தாயீ... உனக்கு நல்ல காலம் பொறக்கப் போறதாலதான் ''சக்கம்மா தேவி'' என்னை இங்கு அனுப்பி வச்சிருக்காள்...''

அந்தப் பெண், மாரியம்மாவைச் சிநேகிதமாய்ப் பார்த்தாள். கண்ணிமை இருட்டிலும் உருட்டிப் பார்த்தால் சின்னஞ்சிறு ஒளிக்கதிர் தென்படுமே, அதுபோன்ற ஒரு மெலிந்த புன்னகை. ஈரக் கைகளை பிட்டத்தில் துடைத்து விட்டு வலது கையை நீட்டினாள்.

''தட்சனை கொடு தாயீ! அப்போதுதான் தாட்சாயிணி பேசுவாள்....''

''எவ்வளவு?''

''இருபத்தொரு ரூபாய் முப்பது காசு தாயீ அதுக்கு மேலே உன் இஷ்டம் தாயீ''

அந்தப் பெண் கொடுத்த இருபது ரூபா நோட்டை உற்றுப் பார்த்தும், சில்லறை நாணயங்களை எண்ணாமலும் மாரியம்மாள் தன் சுருக்குப் பைக்குள் போட்டுக் கொண்டு இடுப்பில் சொருகிக் கொண்டாள். தட்சணையை இரு மடங்காகக் கூட்டியது வருத்தம்தான்... விலாவாரியாகச் சொன்னால் போச்சு....

அந்தப் பெண்ணின் உள்ளங்கையில் 'சக்கம்மா பிரம்பை' பட்டும் படாமலும் படர விட்டபடி, மாரியம்மா இசை நயத்தோடு இழுத்து இழுத்துப் பேசினாள்.

''சக்கம்மா தேவியே சடுதியில் வர வேணும்... கோட்டை மாரியம்மா குதூகலமாய் வர வேணும்.... மலையாள பகவதி மாறாமல் வர வேணும்... பொய் சொல்லக் கூடாது.. மெய் சொல்ல வேணும்...

''ஒன்னோட மனசு பொன்னான் மனசு - பிறரோட கஷ்டத்தப் பார்த்தால் கண்ணீர் சிந்துவே:. நஷ்டத்தப் பார்த்தால் ஈடு கட்டுவே. ஆனாலும் உன்னால உயர்ந்தவர்கள் இப்போதோ நன்றி மறந்தார்கள்... நம்பிக்கை துரோகிகள்... கலங்காதே! மலங்காதே! நீதான் ஜெயிப்பே... ஒரு மாத காலத்தில் உருண்டோடும் கஷ்டங்கள்... கிரகாதிகளில் விடுபட்டு கீர்த்தி அடைவே...

மாரியம்மா வழக்கம்போல் பொதுப்படையாக குறி சொன்னாலும், அந்தப் பெண்ணுக்கு, அவள் சொன்னது தனக்கு மட்டுமே சொல்வதுபோல் தோன்றியது. மாரியம்மா பேசி முடித்ததும், விளக்கம் கேட்டாள்.

''நம்பிக்கைத் துரோகம்னா?''

''நம்பிக்கைத் துரோகமுன்னா... நம்பிக்கைத் துரோகம்... காதல் வலையிலே சிக்கினே... அழகன் கண்பட்டு ஆகாயத்துல பறந்தே தொட்டவன் விட்டான்... துஷ்டன் போல் ஆனான்... ஆனாலும் கோளாறு அவன் பக்கம் இல்ல... திருஷ்டி பட்டதாலே தீயவன் போல் ஆகிவிட்டான்.... பரிகாரம் செய்தால் பறந்தோடி வருவான்...''

அந்தப் பெண் கடந்த கால நிகழ்வுகளை நினைவுகளாக்கினாள். 'அவனுடன் சேர்ந்ததில் மற்றவள்களுக்கு பொறாமை அதிகம்.... முந்திக்கிட்டாளே என்ற கோபம்... அவரு நல்லவரு... இந்தப் பிசாசுங்க கண்பட்டுதான் என்னை மறந்துட்டாரு.. இருங்கடி.. இருங்க.. ஒங்க கண்ணு முன்னாலேயே அவரோடு இணைந்து காட்டுவேன்....'

அந்தப் பெண் பெரு நம்பிக்கையோடு மாரியம்மாளிடம் கேட்டாள்...

''திருஷ்டிப் பரிகாரத்திற்கு எவ்வளவு செலவாகும்?'' ''உன்காதல் கதையை ஆதியோட அந்தமாகச் சொல்லு தாயீ... அப்போதான்

எப்படிப்பட்ட பரிகாரமுன்னு சொல்ல முடியும்...'

''நானும் ரவியும் உயிருக்கு யிராய் பழகினோம்....''

''ஒரு நொடி தாயீ... ரவின்னா எந்த ரவி.... ரவிக்குமாரா..... ரவிச்சந்திரனா.... ரவீந்திரனா...''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது சோசியரம்மா.... எல்லோரையும் போல நானும் அவரை ரவின்னுதான் கூப்புடுவேன்... நானும், அவர் தங்கையும் கல்லூரியில் கம்ப்யூட்டர் பாடம் ஒன்றாகப் படித்தோம். அதோட தொடர்ச்சியா ஒரு கம்பெனியில் ப்ராஜெக்ட் செஞ்சோம்... ரவி தங்கையை கூப்பிட தினமும் வருவார்

''அங்கேயே நில்லு தாயீ.. அவனுக்கு, அவள் நிசமான தங்கை தானா? அவன், உன்னைத் தன்னோட வீட்டுக்கு கூட்டிப்போனானா... எதுக்கு கேட்டேன்னா, தங்கை என்கிற வார்த்தையோட மகிமை தெரியாம, இப்போ பலர் புறப்பட்டிருக்காக...''

அந்தப் பெண் மாரியம்மாவை துணுக்குற்றுப் பார்த்தாள். இது ஒன் வேலை என்பது மாதிரி.. வெட்டு ஒன்று துண்டு இரண்டாய்க் கேட்டாள்.

''அவர் என்னை மறந்தாலும், என்னால அவரை மறக்க முடியாது... எனக்கு அவர் திரும்ப வேணும்... பரிகாரத்திற்கு எவ்வளவு பணம் செலவானாலும் பரவாயில்லை....''

மாரியம்மா, அந்தக் கம்ப்யூட்டர் பெண்ணையே மாறி மாறிப் பார்த்தாள். பிறகு கைகளை பின்பக்கமாய் ஊன்றி, உடம்பைச் சரித்தாள். போனமாதம் மெரினா கடற்கரையில் ஏற்பட்ட கசப்பான அனுபவம் கண்களை உறுத்த, அவள் இரண்டு கண்களையும் இறுக மூடினாள்...

மெரினா கடற்கரையில் கப்பிச் சாலைப் பக்கம் ஒரு மோட்டார் பைக்கில் நான்கைந்து பேர் மேலும் கீழுமாய்க் கிடந்தார்கள். இவள் அவர்கள் பக்கம் போய் 'சோசியம் பாக்கலியோ' என்றபோது, ஒருவன் கைதட்டிக் கூப்பிட்டான். இவள் கேட்ட பதினொரு ரூபாய்க்குப் பதிலாக இருபது ரூபாயைத் திணித்தான். இவளும் வழக்கம்போல் அந்தக் கைக்காரனை துதிபாடி விட்டு, ''இப்போதைய காதல் இடைஞ்சலான காதல்... இதுபோய் இன்னொரு காதல் வரும் .. அதுவே நிற்கும்.. நிலைக்கும் ஆனாலும் திருஷ்டி கழிக்கனும், என்றாள். உடனே சக பயல்கள் அடே மச்சி கரெக்டா சொல்லுடா... 'ஆப்' வாங்குடா என்றார்கள். மோட்டார் பைக்கில் இருந்த அந்தப் பையன் துள்ளிக் குதித்து, ஒக்காபோலா ஆட்டம் ஆடினான். பிறகு ''ஆயா ஒன் வாயிலே ஒரு குவார்ட்டர் ஊத்தனும். போன வாரமே அந்த ''போரைக்'' கழிச்சுக் கட்டிட்டேன். விட்டுட்டேன். இரண்டாவது புனிதக் காதலி எப்போ வருவா ஆயா? என் வருங்கால காதலி எப்படி இருப்பாள்'' என்றான். உடனே இன்னொருத்தன் ''ஆயா, பொண்ணு மாதிரி அழகா இருப்பாடா... ஆமாம் ஆயா... ஒனக்கு எத்தனை குட்டிங்க...'' என்றான். மாரியம்மாள் காசை வீசி எறிந்து விட்டு, திரும்பி நடந்தாள்.

அப்போது நடந்தது, இப் போதும் வலி கொடுத்தது... இதற்குள் சரிந்து கிடந்த மாரியம்மாவை அந்தப் பெண் உசுப்பினாள். மாரியம்மாள் இருபத்தொரு ரூபாய்க்காக யாசிக் காமல், அதையும் மீறி சிந்தித்தாள். அந்தப் பயல்கள் மாதிரிதான் இவள் பயலும் இருப்பான். எம் பொன்ன எப்படி நிமிர வச்சனோ.. அப்படி இவளையும் நிமிர வைக்கணும்...

மாரியம்மா பொரிந்து தள்ளினாள். ''பெத்த மக கிட்ட சொல்ற மாதிரிதான் சொல்றேன்... கோபப் படாம கேளு தாயீ... நீ படிச்ச பொண்ணு... கை நிறைய சம்பளம் வாங்குறே.. இல்ல வாங்கப் போறே... சொந்தக் காலுல நிக்கப் போற பொண்ணு... பெண்டாட்டிக்கு துரோகம் செஞ்சிட்டு ஆறஅமர திரும்பி வார புருசனைக்கூட, ஏத்துக் காதவள்தான் அசல் பொம்பளை... நீ நிசமான பொண்ணுன்னா அந்தப் பயல மனசுல இருந்து வீசி எறி... உன்னை இந்நேரம் வீட்டுக்கும், வாசலுக்குமாய் தேடிக்கிட்டிருக்கிற உங்கம்மா அந்தப் பயலவிட ஒசத்தி... ஒரு வேளை, ஒனக்காக பஸ் ஸ்டாப்புல காத்திருக் கிற அப்பாவும் அண்ணனும், தம்பியும் அவனை விட ஒசத்தி... கல்யாணத்துக்கு முன்னாடியே பீடை கழிஞ்சதேன்னு சந்தோஷப்படு தாயீ... சந்தோஷப்படு. கஷ்டத்தை விலை கொடுத்து வாங்காதே தாயீ... கஷ்டத்தை விலை கொடுத்து வாங்காதே தாயீ...''

**இந்தப்பணம் மனசுல தங்காது. மனசுல தங்காத எதுவும் வயித்துல தங்காது. இது வெள்ளிப்பூண் போட்ட பிரம்பு. என்னைக் கவனிச்சுக்கும்.**

அந்த கம்ப்யூட்டர் பெண்ணுக்கு மகிழ்ச்சி வராவிட்டாலும், துக்கம் தணிந்தது. அடிக்கடி தடம் புரண்ட இந்த முடிவை உறுதிப்படுத்திக் கொண்டாள்.. சுயவிளக்கம் கொடுத் தாள்...

''நீங்க திருஷ்டி, கிருஷ்டின்னு சொன்னதாலதான் எனக்குப் போன ஆசை, திரும்பி வந்தது. சக்கம்மாவே சொல்றதோ நினச்சு...''

''சக்கம்மா எங்கே இருக் காளோ.. எப்படி இருக்காளோ யாருக்குத் தெரியும்... கண்டவர் விண்டதில்லை.... விண்டவர் கண்ட தில்லை... நீயே ஒனக்குச் சக்கம்மா... இந்தா ஒன் ரூபா...

'வச்சிக்கோங்க சோசியரம்மா.''

'இல்லம்மா... இந்தப்பணம் மனசுல தங்காது... மனசுல தங்காத எதுவும் வயித்துல தங்காது... இது வெள்ளிப்பூண் போட்ட பிரம்பு... என்னைக் கவனிச்சுக்கும்... சரி... சரி... எழுந்திரு.... ஒருத்தருக்கு ஒருத்தர் துணையாய் நடப்போம்....''

அவர்கள் தாயும், சேயும் போல் எழுந்தார்கள்... கடலோரம் போனார்கள்.... அலைகள் வழக்கம் போல் ஆர்ப்பரித்தன... ஆனாலும் அவர்களுக்கு இப்போது அது புது முழக்கமாய்க் கேட்டது....

◆ ◆ ◆



82. கிளாட் மோனே

நல்வாழ்த்துகள்

தென்னாற்காடு வள்ளலார் மாவட்ட
பால் உரிமையாளர்கள் சங்கம்

கடலூர்



83. கிளாட் மோனே

நல்வாழ்த்துகள்

**வி.பி.எஸ். கணேசன், வி.பி.எஸ். ரவிசங்கர்**

# சுப வள்ளி விலாஸ் ஜுவல்லரி

# எம்.வி.பி. சுப்பராய செட்டியார் சன்ஸ்

**39, சுப்பராய செட்டி வீதி, திருப்பாதிரிபுலியூர், கடலூர் - 607 002**



84. பியர் அகஸ்டின் ரெனுவா

நல்வாழ்த்துகள்

**ஜோதி நிர்மலா**

திட்ட இயக்குநர்

**கார்ல் ஆஹெ ஹெங்க்**

தலைமை திட்ட ஆலோசகர்

**டேனிடா**

தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம்.



# இழந்தது

ஓவியம் : செழியன்

## செ. யோகநாதன்

மெல்லிய குளிராயினும் உடம்பு சூடாக இருந்தது. அழுதுவடியும் விடிகாலையில் மௌனம் இனந்தெரியாத அச்சத்தை உண்டாக்கிற்று. அதுவும் வீட்டுவாசலில் கட்டப்பட்டிருந்த வாழைமரங்கள் பளீரென்று நெஞ்சை உதைத்தன. நெஞ்சு படபட வென்று அடிக்கத் தொடங்கிற்று. சட்டென்று நாவறண்டது, வார்த்தைகளை இழந்து போனாற்போலச் சுருண்டது. கையில் லேசாயிருந்த சூட்கேஸ் இரும்புக் குண்டாகக் கனக்கத் தொடங்கிற்று. நெற்றியிலும், மார்பிலும் வேர்வைத் துளிகள் பொல பொலவென்று அரும்பின. தலை சுற்றுவது போல உணர்ந்தான்.

கண்ணன் வந்திட்டீங்களா?

அந்தக் குரல் அவனது தோளில் தொட்டது. தளர்ந்து சரியப்போன அவனைப் பிடித்து நிறுத்திற்று. விவேகானந்தன் பரிவோடு அவனது வலது கையைப் பற்றிக் கொண்டார்.

''உங்க மாமியார் நேற்றுச் சாயந்தரம் காலமாயிட்டாங்க. கடைசி மூச்சின் போதும் உங்களைத் தேடினாங்க...'' விவேகானந்தனின் குரலில் கவலை விம்மிற்று.

''அருமையான பிறவி.. இரவு முழுவதும் தூக்கமே வரேல்லை... வாருங்க..''

கண்ணனின் மனம் இப்போது லேசாவதை உணர்ந்தான். அதற்குள் ஏற்பட்ட அதிர்ச்சியில் எத்தனை நினைவுகள் மனதைக் கொதறிவிட்டன. நான்கு நாட்களின் முன்னர் வீட்டை விட்டுப் புறப்பட்டபோது, பவதாரிணிக்கு உடலைத்தூக்கி எறிந்து கொண்டிருந்த வினோதமான காய்ச்சல். டாக்டர் கூட நெற்றியைச் சுருக்கிக் கொண்டார். ''அப்பா அப்பா'' என்று வேதனையோடு முனகியவளை வாத்சல்யத்தோடு நெற்றியில் தடவி விட்டான். அவள் முனகியவாறே தூங்கிப்போனாள். வினோதன் எப்போதும் வேகமாகவே சைக்கிளில் செல்வான். நாலைந்து முறை கருணாகரனே வந்து சொல்லிவிட்டுப் போயிருக்கிறான். ''என் காருக்கு வெகு அருகே மூர்க்கமாகப் பறந்து வந்தான். சட்டென்று பிரேக் போட்டேன். ஆனால் இன்னொரு வாகனம் வந்திருந்தால் யாரும் காப்பாற்றி இருக்க முடியாது. வினோதனைக் கொஞ்சம் எச்சரிக்கை பண்ணிவை...'' நீலாவுக்கு சென்ற வாரம் நெஞ்சடைத்தது, டாக்டர் பரிசோதித்துவிட்டு இரத்த அழுத்தம் 110-171 என்று சொல்லி விட்டு கண்ணனை வெளியே கூட்டிச்சென்று, ''ஜாக்கிரதையாக உங்க மனைவியைக் கவனிக்க வேணும். கொஞ்சம் தவறி இருந்தால் சிவியர் ஹார்ட் அட்டாக் வந்திருக்கும்'' என்றார். அன்று இரவு முழுவதும் உறக்கம் வரவில்லை, விடிந்ததும் வீட்டு வேலைகள் செய்ய வேலைக்காரி கனகத்தை ஏற்பாடு செய்துவிட்டான். நீலாவுக்காக உப்பு, காரம், கொழுப்பு யாவையும் உணவில் விட்டு விடுவதற்கு அவனும் வினோதனும் பவதாரணியும் முடிவுசெய்தனர். வீட்டைவிட்டுப் புறப்பட்டபோது நீலாவை அத்யந்தமாக அவன் பார்த்தப்போது புன்னகையோடு, ''எனக்கு எண்பது வயதுவரை ஆயுள் பலம் இருக்குது, பயப்படாமல் போய்விட்டு வாருங்கள்'' என்றாள்.

தொலைவில் வாழைமரங்கள் வீட்டு வாசலில் கட்டப் பட்டிருந்ததைக் கண்டபோது, இந்தச் சம்பவங்கள்

அலைமோதி அவனைத் தடுமாறச் செய்தன. மாமியார் நினைவில் வரவேயில்லை. தன்னை அறியாமல் பெருமூச்சு விட்டான்.

''வாருங்க..'' என்றவாறு அவன் எதிரே கண்களைத் துடைத்தவாறு வந்தாள் நீலா. குரல் தளதளத்து உடைந்து விம்மியவளை மெல்லத் தோளில் தொட்டு ஆதரவான குரலில், ''நீலா... டென்சன் ஆகக்கூடாது. உடம்புக்கு நல்லதில்லை'' என்றான். அவள் அதைக்கேட்டதாகத் தெரியவில்லை. அழுகை சூழிக்க, ''அம்மா, கடைசிவரை உங்களைக் கேட்டுக்கொண்டேயிருந்தா... உயிர் போகிறபோது கூட சுவரில் மாட்டியிருந்த உங்க போட்டோவிலதான் கண்குத்திட்டு இருந்தது...'' என்றாள்.

சூட்கேசை சுவர் ஓரமாக வைத்துவிட்டு நடு ஹாலில் தூங்குவதுபோலக் கிடந்த மாமியாரை - லட்சுமி அம்மாவைப் பார்த்தான். தலைமாட்டிலிருந்த குத்துவிளக்கின் சுடர் ஒளியில் மூக்குத்தி மின்னிற்று. நம்ப முடியவில்லை இந்த மரணத்தை. அவன் வீட்டைவிட்டுப் புறப்பட்டபோது எந்த நோய் நொடியும் இருக்கவில்லை, வெளியே வந்து பார்த்துவிட்டு, ''நீலா, அவரைப் புறப்படச்சொல்லு... நல்ல சகுனம்'' என்றாள் கணீரென்ற குரலில் லட்சுமி அம்மாள். அவன் வெளியே புறப்படும்போது எப்போதும் இப்படித்தான். இந்த இருபத்திரெண்டு வருஷகாலத்திலும் அவர்களோடுதான் வாழ்ந்து வருகிறாள். ஆனால், ஒருநாள்கூட அவனோடு நாலைந்து வார்த்தைகளுக்கு மேல் பேசியதில்லை, அவனும்தான்.

பவதாரணியும் வினோதனும் அப்பாவைக் கண்டதும் அருகே வந்தனர். இருவரும் கண்கலங்கி அழுதனர். மௌனமாக அவர்களைப் பார்த்தன். கண்ணன். பிறகு நீலாவைப் பார்த்து, ''கதிரவனுக்கும் வித்தியாவுக்கும் செய்தி சொல்லியாகிவிட்டதா?'' என்றான்.

''எல்லோருக்கும் 'போன்' பண்ணினோம் அப்பா. விழுப்புரம் மாமாவுக்கும் கமலா அத்தைக்கும் 'டெலிகிராம்' கொடுத்தோம்; அனேகமாக எல்லோரும் காலையில் வந்திடுவாங்க..'' என்றான் வினோதன்.

பவதாரணி இயல்புக்கு வராமல் நேற்றைய நினைவிலேயே மனம் அழுந்தி நின்றாள், ''அப்பா, பாட்டி, உங்களைத்தான் கடைசிவரை கேட்டா.....'' விம்மினாள்.

''பாரம்மா, சும்மா அழக்கூடாது. அப்புறம் மீண்டும் ஜுரம் வந்துவிடும்...''

பவதாரணி சுவர் ஓரமாகக் உட்கார்ந்து கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

இரண்டு நாட்கள் கழிந்துபோய்விட்ட. இனந்தெரியாத சோகம் இன்னமும் அங்கே சூழ்ந்திருந்தது, வந்துபோனவர்களெல்லாம் லட்சுமி அம்மாவை வியந்து பேசிய வார்த்தைகள் கண்ணனின் மனதில் அழுத்தமாகப் பதிந்திருந்தன. நடு ஹாலில் மாட்டப்பட்டிருந்த தனியான போட்டோவைப் பார்த்தான், பத்து வருஷங்களின் முன்னே அவனது மாமனார் நடராசனே கட்டாயப்படுத்தி எடுத்த போட்டோ. கம்பீரமான தோற்றமுள்ள லட்சுமி அம்மா உயிரோடு புன்னகைசெய்வதுபோல அவனுக்குத் தெரிந்தாள். பெரிய, திட்சண்யமான கண்கள், வட்டமான முகம், எப்போதும் லேசான புன்னகை, கூர்மையான மூக்கு இந்திரா காந்தியை நினைவூட்டும் பிரகாசமான முகத்தில் அழகூட்டும் திலகம்.

முதல் நாளன்று, அந்தவீட்டுக்கு வந்தபோது லட்சுமி அம்மாதான் அவனைவரவேற்றாள், பளீரென்று இருந்தாள், எவரையும் வசீகரிக்கிற புன்னகை, நீலாவை உள்ளே போய்க்கூப்பிட்டாள். பின்னர் அவன் வீட்டுக்கு வரும்போதெல்லாம் அவனுக்குப் பிரியமான லட்டு, மெதுவடையை அவளே தயாரித்துக் கொடுத்தாள். நீலாவை அவன் காதலிக்கிற செய்தி தெரிந்தபோது முகத்தில் லேசான தயக்கம் பரவி அழிந்தது. சுகுமாரனுக்கு நீலாவை நினைத்துவைத்திருந்தாள். பிறகு தானாகவே, ''நீலாவின் விருப்பப்படியே நடக்கட்டும். அவர் மிகவும் நல்லவர்'' என்றாள். ''அம்மாவுக்கு என்ன சொக்குப்பொடி போட்டீங்க'' என்றாள் முகம் மலர்ந்த மகிழ்ச்சியோடு கண்ணனைப் பார்த்து நீலா.

இருபத்திரண்டு வருஷங்கள் அக்கவுண்டனாகி மேலே மேலே உயர்வுகள் பெற்றபோது அலைச்சல்கள் அதிகமாகிவிட்டன. 'ஆடிட்' அது இதென்று ஓயாத வேலைகள்.

நீலா பள்ளி ஆசிரியை. வீட்டு வேலைகள் யாவற்றையும் அக்கறையோடு செய்யும் தாயாரை வாஞ்சையோடு பார்ப்பாள் நீலா. சுத்தம், எதிலும் சுறுசுறுப்பு, களைப்பறியாத முகம், என்றாலும் இரண்டு வருஷங்களாக உடலில் தளர்வு தெரிந்தது. வைட்டமின் மாத்திரை சாப்பிட மறுத்துவிட்டாள், நீலா வலிந்து வேலைசெய்து அவளுக்கு ஒய்வுதந்தாள். ஆனால், கண்ணனுக்குப் பிரியமான பலகாரங்களை அடிக்கடி அவளே செய்து கொடுப்பாள்.

வெளியே ஏதோ சத்தம் கேட்டது. விவேகானந்தன் உள்ளே வந்தார். மௌனமாக அவனுக்கு அருகே உட்கார்ந்திருந்தார். எதையோ நினைத்தவரின் கண்களிர் கண்ணீர் பெருகிற்று. துண்டால் வாயை மூடிக்கொண்டார்.

கண்ணனுக்கு விவேகானந்தரின் போக்கு ஆச்சரியத்தை அளித்தது, அவனது மாமியார் இறந்துபோனதற்காக அவனது கண்களிலிருந்து ஒருசொட்டுக் கண்ணீர்கூட இதுவரை வரவில்லை, அறுபது வயதை எட்டிய லட்சுமி அம்மாவின் இழப்பு மனதை உறுத்தியதுதான், ஆனால் அவர்களோடு எந்தச் சொந்தமும் இல்லாத விவேகானந்தனுக்கு ஏன் இவ்வளவு கவலை? கண்ணீர் சொரிகின்ற சோகம்?

''பத்துவருஷமா இந்தக் கடையை நடத்தி வருகிறேன். ஒவ்வொரு நாளும் என் கடைக்கு வருவாங்க. அதுவல்ல விஷயம். உங்க மேல அந்த அம்மா வைத்திருந்த அன்பை இந்தக் கடையில் உட்கார்ந்து பார்த்துக் கொண்டே இருப்பேன். எனக்குப் பொறாமையே உண்டாகும். நீங்க காலையில் வெளியே புறப்படும்போது சகுனம் பார்ப்பாங்க. நீங்கவெளியே இறங்கிப் புறப்பட்டு மறையும் வரை பார்த்துக் கொண்டே நிற்பாங்க. சாயந்தரமும் அப்படித்தான். நீங்க வரும் வரை அதோ பாருங்க வாசற்படியில் அந்த இடத்தில் உட்கார்ந்திருப்பாங்க. ரோட்டிலேயே பார்வை இருக்கும். உங்களைக் கண்டதற்குப் பிறகுதான் உள்ளே போவாங்க... ஒரு நாளல்ல, பலதடவை இரவு பத்து, பதினொரு மணிவரை, நீங்க வரும் வரை அவங்க இந்த வாசற்படியில் உட்கார்ந்திருந்ததை நான் பார்த்திருக்கிறேன்..''

விவேகானந்தரின் வார்த்தைகள் அவனுக்கு ஆச்சரியத்தை விதைத்தன. எதேச்சையாக ஒன்றிரெண்டு தடவைகள்தான் லட்சுமி அம்மாவை அவன் வீட்டுவாசலில் கண்டிருக்கிறான். விவேகானந்தன் சொன்ன வார்த்தைகள் அவனையறியாமலே நெஞ்சை உலுப்பத் தொடங்கின.

நீலா அவனோடு பேசிக் கொண்டிருக்கிறபோது



அவனுக்கு விருப்பமானதென்னை என்று கேட்பாள். சொல்வான், தேனில் ஊறவைத்த பலாச்சுளை. லட்டு, போளி, மெதுவடை, கத்தரிக்காய் சட்னி. சொன்னதற்கு மறுநாளே அவனுக்கு அது கிடைக்கும். ஆச்சரியமாக நீலாவைப் பார்ப்பான். அவள், ''இதெல்லாம் உங்க மாமியார் உபயம்'' என்பாள். அப்போதெல்லாம் ருசித்துச் சாப்பிட்டுவிட்டு புன்னகை செய்வான். அவ்வளவுதான்.

நீலாவின் தங்கை வித்யா. அவள் கணவன் கதிரவன் விமானி. அடிக்கடி மாமியாரைப் பார்க்க வருவான். நிறையப் பொருட்கள் கொண்டு வருவான். வித்யா அவனைக் கேலி செய்வாள். ஆனாலும் முகத்திலே அளவுமீறிய பெருமையிருக்கும். இறந்து போன லட்சுமி அம்மாவைப் பார்த்து அவன் விம்மிவிம்மி அழுதான். அந்த அழுகை மனதை உலுப்பிற்று. கண்ணனுக்கு இது வினோதமாயிருந்தது.

தனியே உட்கார்ந்திருந்த கதிரவனை விவேகானந்தன் ஆறுதல்படுத்தினான். கதிரவன் தளதளத்த குரலிலே கூறினான்; ''அருமையானவங்க, என்னால் அவங்க மரணத்தை நம்பவே முடியவில்லை. இன்னும் பல வருஷங்கள் இருந்திருக்கலாம். அன்பானவங்க இறந்து போய்விடுகிறது பெரியதுயரம். அவங்க எத்தனை வயசானவங்களாக இருந்தாலும்கூட... அது தாங்க முடியாத இழப்புத்தான்....''

கண்ணனின் காதிலும் இந்தவார்த்தைகள் விழுந்தன.

கோயம்புத்தூருக்கு அவசரமாகப் புறப்பட்டுக் கொண்டிருந்த கண்ணன் நீலாவைப் பார்த்து, ''நான் புறப்படலாமா?'' என்றான். நீலாவும் பவதாரிணியும் மௌனமாக அவனைப் பார்த்தனர். நீலாவின் கண்கள் கலங்கின.

கண்ணன் ஹாலையும் வெளிப்புறத்தையும் நோட்டம்விட்டான். எல்லாம் வெறுமையாயிருப்பது போலத்தோன்றிற்று. எங்கும் மௌனம் வேதனையோடு முனகுகிறாப்போல் உணர்ந்தான். உற்சாகமின்றி வெளியே புறப்பட்டான்.

வெளியே இறங்கிக் கொஞ்சத் தூரம் நடந்தவன் தன்னையறியாமலே திரும்பிப் பார்த்தான். வாசற்படியில் யாருமில்லை. அந்த வெறுமை மனதை சட்டென்று அரக்கத்தனமாக உலுப்புவதுபோல உணர்ந்தான். வாசற்படிக்கு எதிரேயுள்ள கடையில் உட்கார்ந்து தன்னையே பரிதாபமாகப் பார்த்தக் கொண்டிருந்த விவேகானந்தன், ஏதோ சொல்வதாய் நினைத்தான்.

கண்ணனின் நெஞ்சுள் சட்டென்று விம்மல் முட்டிற்று, அவனால் தன்னைச் சமாளிக்க முடியவில்லை. வெறிச்சோடியிருந்த வீதியில் அவன் விம்மி விம்மி அழத் தொடங்கினான். ●



85. பியர் அகஸ்டின் ரெனுவா


நல்வாழ்த்துகள்

**சி.கே. ரெங்கநாதன்,** இயக்குநர்

**பியூட்டி காஸ்மெட்டிக்ஸ் லிட்.,**

கடலூர்

ஓவியம் : மருது

# கல்யாண்ஜி கவிதை



நான் தரையில் வாழ்கிறவன்.
கருப்பை சிசுப்போலக்
கால்மடக்கித் தூங்குகிறவன்.
இந்தக் கட்டில்களை,
நுரைமெத்தைகளை எல்லாம்
அப்புறப்படுத்தினால் நல்லது.
நசுங்கிய பல்லியை
மொய்க்கிற எறும்புகள்
கட்டில்கால் வழியான பாதையில்
வளர்கின்றன.
சிதறின தின்பண்டத் துண்டுகள்
தென்படுவதும் உண்டு.
மூட்டுவலித்தைல வாசனைதவிர
அதிகப்படி மணம் எதுவுமில்லை.
என்றோ இந்தப் படுக்கையில் படுத்துக்
கேட்ட ஒலிநாடாக்களின் இழை
அறுந்த சிக்கல்கள்
ஜன்னல்கள் வழியே எறியப்பட்டு
வாழைகளின் பக்கக் கன்றுகளில்
சுற்றி அலைக்கழிகின்றன.
விரியன் பாம்புகள்
மே மாத உச்சித் தீயில்
புடைநீங்கிக் கட்டிலுக்கு
விரைந்துவரும் சாத்தியமும் உண்டு
புற்றுகளுக்கு நடுவில் உள்ள
என் வீட்டில்.
நீங்கள் அதில் படுத்திருக்க
விருப்பமெனில்
ஆட்சேபமில்லை, நகர்த்திக் கொள்ளுங்கள்
உங்கள் இடத்திற்கு.
எனக்குக் கட்டில்களற்ற
விசாலத் தரை போதும்.
தரை
குளிர்ந்த தரை.



86. வின்சென்ட் வான்கோ


நல்வாழ்த்துகள்

ரெல் பிரான்ஸிஸ் எம். டொமினிக் ரொசாரியோ எம்.ஏ.எம்.ஏ., பி.எட்., பி.எல்.,

தலைமையாசிரியர் மற்றும் தாளாளர்

புனித ஜோசப் மேல்நிலைப்பள்ளி,

திருப்பாதிரிப்புலியூர்

# 'கத்தாளங் கருங்கப்'

**எஸ்.எஸ். போத்தையா**

ஓவியம்: மருது



போன தலைமுறையில் சிறுவர்கள் ஆடிய விளையாட்டுகளையும், பாடிய பாட்டுகளையும், பழக்க வழக்கங்களையும் இந்தத் தலை முறை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. வறண்ட குடிதண்ணீர்க் கம்மாய்க்கு நடுவில், இன்று 'கிரிக்கெட்' ஆட்டம் நடக்கிறது. உலகளாவிய கலாச்சாரம் என்ற ஒன்று, நம் விளையாட்டு முதல் ஒவ்வொன்றாய் எல்லாவற்றையும் கழுவித் துடைத்து காலி செய்து வருகிறது.

பொழுதோடு பொழுதாய் தொலைக்காட்சிப் பெட்டியின் முன் தவம் கிடக்கும் இக்காலச் சிறுவர், சிறுமியர்களுக்கு இந்த விளையாட்டுக்கள் தெரிந்திருக்க நியாயமில்லை. நம்முடைய குழந்தைகள், பிள்ளைப் பருவத்தை, ஏழைகளானால் தொழிற்சாலைகளிலும், வசதி படைத்தவர்களானால் தொலைக்காட்சிப் பெட்டியிலும் தொலைத்துக் கொண்டிருக்கின்றன. அவர்களுக்குப் பிள்ளை வயது உண்டு. பிள்ளைப் பருவம் இல்லை.

நாட்டுப்புற மக்களுக்கு வாழ்க்கை இசையாக இருக்கிறது. இசையிலிருந்து தொடங்குகிறது. ஏடறியா, எழுத்தறியா மக்களுக்கு அறிவு வளர்ச்சி, புதியன தேடும் வேட்கை, நினைவாற்றல் என்பவை இசை சேர்ந்த சொற்கள் மூலம் நிகழ்கிறது. (எ.கா.) சொலவடை, நாட்டுப்பாடல்.

நாட்டுப்பாடல் என்பது அவர்களின் ஏடு; ஞாபகசக்தி அவர்களின் கல்வி. அனுபவங்களின் வெடிப்பில் அந்த ஏட்டைத் திறந்து அவர்கள் படித்துக் கொள்கிறார்கள்.

ஒரு கிராமத்தில் நாட்டுப் பாடல்கள் தேடி அலைந்தபோது, தன் வீட்டு வழியே போன இன்னொரு பெண்ணைப் பார்த்து, ஒரு பெண் சொன்னாள் "இந்தா போறாளே, இவ ஒரு 'வண்டி' பாட்டு வச்சிருக்கா, இவளை உலுக்கினா பொல, பொலன்னு உதிரும்" என்று.

அவர்களுடைய கல்வி சிறு பிராயம் முதலே, பாடல் இசையில் தொடங்குகிறது. பழமொழி என்பதும் ஒரு இசைதான். அவர்கள் சொலவடை போடும்போது, அது மழையின் இசை: கடலின் ஆழம்.

ஒடி விளையாடும்போதுகூட ஒரு பிள்ளை சாணி, சகதி, கழிவு போன்றவற்றில் மிதித்துவிட்டால் அந்தப் பிள்ளை தங்களைத் தொட்டுத் தீட்டாக்கிவிடக்கூடாது என்ற உணர்வில் மற்றப் பிள்ளைகள்

*"என்பேர் மானம்*
*என்னையத் தொட்டா பாவம்"*

என்று கூவிக்கொண்டே எச்சிலைத் தொட்டுத் தொப்புளில் வைத்துக் கொள்வார்கள்.

("குமரி மாவட்டத்தில் ஒரு இலையைப் பறித்து வைத்துக் கொண்டால் தீட்டு ஏற்படாது என்பார்கள்" - பொன்னீலன்.) விளையாட்டின் போது ஆடை அவிழ்ந்துவிட்டாலோ, வேறு இடைஞ்சல்கள் ஏற்பட்டாலோ - தற்காலிகமாக விளையாட்டிலிருந்து விலகி நிற்க "தூச்சிய்யான்" என்பார்கள்.

மொட்டைத் தலையைப் பார்த்துவிட்டால் பிள்ளைகளுக்கு விளையாட்டாகவும், கேலியாகவும் இருக்கும்.

*"மொட்ட மண்டை மொளகு சாறு*
*கேப்ப ரொட்டி டமாஸ்"*

என்று பாடிக் கொண்டு மொட்டைத் தலைப்பையன்களைத் தொட்டும், தடவியும் கிண்டல் செய்வார்கள.

சிறுவயதில் பல்விழுந்து முளைப்பது இயற்கை. ஓட்டைப் பல்லைப் பார்த்துவிட்டால் ஒரே கும்மாளம், அதற்கென்று ஒரு பாட்டு

*"ஓட்டப்பல்லுச் சங்கரா*
*ஒருத்தரு வீட்டுக்கும் போகாதே*
*ஆப்பம் வாங்கித் திங்காதே*
*அடிவாங்கிச் சாகாதே"*

விதம் விதமான தட்டான்களைப் பிடிப்பதில் குழந்தைகளுக்கு உற்சாகம். வேலி முள்ளில் உட்கார்ந்திருக்கும் தட்டானை சப்தம் செய்யாமல் மெதுவாகச் சென்று பிடிக்க முயற்சிப்பார்கள். இதைப் பொறாமையோடு பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு பிள்ளை தட்டானைக் கலைப்பதற்காக இப்படிக் கத்தும்:

*"காத்தட்டான், கள்ளத்தட்டான்*
*கள்ளனுக்கு அம்புடாதே*
*உன்னை ஒருத்தன் பிடிக்க வாரான்*
*ஓடிப்போ, ஓடிப்போ"*

இதையே ஒளிந்து விளையாடும் விளையாட்டு விளையாடுகையில் ஒருவன் கண்ணைப் பொத்திவிட்டு, மற்ற பிள்ளைகள் ஒளிந்து கொள்ளச் சொல்லி விளையாடும் போதும் பாடுவார்கள். இன்றைக்கு இந்த விளையாட்டு *"Hide and seek"* என்று ஆங்கிலத்தில் சொன்னால்தான் புரியும் என்றால், கேவலம் தான்.

குதிரை வாலித்தானியத்தை அவித்துக் காயப் போட்டிருப்பார்கள். இது தினை மாதிரி அளவிலும், குதிரைவால் மாதிரி இந்தக் கதிர் விளைந்து இருக்கும் என்பதால் இந்தப் பெயர் வந்தது. "குதிரை வாலிச் சோறும் கோழிக்கறியும்" என்பது சொலவடை. அவ்வளவு ருசி.

காயப் போட்டிருக்கையில் காக்காய்கள் வந்து வாய் நிறைய அள்ளிச் செல்லும். காக்காயை விரட்டக் குழந்தைகளைக் காவல் வைத்து விடுவார்கள். கையில் சிறு தகரத்துடன் தட்டிக் கொண்டே சுற்றிச் சுற்றி வர வேண்டும். காக்காய்கள் பிள்ளைகளைப் பாடாய்ப் படுத்திவிடும். ஏமாற்றுக்காரக் காக்காயையே ஏமாற்ற நினைக்கிறது பிள்ளையின் பிஞ்சு மனம்.

*"காக்கா வீட்டுல தீ யெரியுது.*
*கள்ளப் பிராந்தே சொல்லாதே"*
– என்று பாடுவார்கள்.

கீழே சிதறிக்கிடக்கும் கடலை, பயறு போன்றவற்றைப் பொறுக்கித் தின்னும் ஒரு குழந்தையை மற்றக் குழந்தைகள்,

*"ஓட்டுப் பொறுக்கி*
*ஊரெல்லாம்*
*பீய்ப்பெருக்கி"*

என்று கேலிசெய்யும். இவர்களுக்கும் பொறுக்கித் திங்க ஆசை தான். அந்தக் குழந்தை முந்திக்கொண்டது. அவ்வளவுதான்!

வேண்டுமென்றே ஒருகுழந்தை மற்றோர் குழந்தையின் தலையில் அதற்குத் தெரியாமல் ஒரு துரும்பையோ, காகிதத் துண்டையோ போட்டுவிட்டு

*"ஒரு ஆளு தலையில*
*வெள்ளாடு மேயுதாம்"*

என்று மாறிச் மாறிச் சொல்லிச் சிரிக்கும். நம் தலையில்தான் ஏதோ கிடக்கிறதாக்கும் என்று எல்லாப் பிள்ளைகளும் தம் தம் தலையைத் தடவிப் பார்த்துப் பரக்க பரக்க முழிப்பது வேடிக்கையாய் இருக்கும்.

கைகள் இரண்டையும் பக்கவாட்டில் நீட்டிக்கொண்டு

*"கிறு கிறு மாம்பழம்*
*கிய்யா கிய்யா மாம்பழம்"*

என்று பலமுறை வேகமாய்ச் சுற்றிக் கீழே விழுந்து – வானமும், பூமியும் சுற்றுவது போலான உணர்வை, கிரக்கத்தை ரசிப்பது ஒரு விளையாட்டு.

இரண்டு பேர் எதிர் எதிர் நின்று கைகளைக் கோர்த்து – அப்படியே ஒரு கையை நீட்டியும், மறு கையை மடக்கியும், பிடறியில் போட்டுக்கொண்டு, கிறு கிறு மாம்பழம் சுற்றுவது போல, முடிந்த அளவு வேகத்துடன் சுற்றிக் கொண்டு

*"ராட்டு பூட்டு*
*ராவணன் சீட்டு"*

என்று பாடுவார்கள்.

இரண்டு சிறுவர்கள் ஒரே திசையைப் பார்த்து நின்று கொண்டு கையைக் கோர்த்துக் கொள்வார்கள். மூன்றாவது ஒருவன் இவர்களுக்குப் பின்னால் நின்று கோர்த்த கைகளில் தனது ஒரு காலை மடித்து வைத்து, இரு கைகளையும் நிற்பவர்களின் தோள்களில் ஆதரவாகப் போட்டுக் கொள்வான். இவனுக்குப் பின்னால் ஒருவன் தரையில் ஊன்றி நிற்கும் ஒரு காலை கரண்டைக்கால் பாதத்தோடு பிடித்துத் தூக்கிக் கொள்வான். குதிரைச் சாரட்டுப் போல சவாரி புறப்படும்.

> "நாட்டுப்புற மக்களுக்கு வாழ்க்கை இசையாக இருக்கிறது. இசையிலிருந்து தொடங்குகிறது."

*"கால் தூக்கிக் கணக்கப் பிள்ளைக்கு*
*மாதம் பத்து ரூபா"*

என்று சொல்லிக் கொண்டு ஓடுவார்கள். சவாரி செய்பவனுக்குப் படுகுஷியாக இருக்கும்.

மூன்று பேர் அஃபோல் வெளிப்புறமாக பார்த்து நெருங்கி நின்று கைகளைக் கோர்த்துக் கொள்வார்கள். ஒருவன் தனது ஒரு காலைப் பின்புறமாக வளைத்து மற்ற இரண்டு பேர் கோர்த்துக் கொண்டுள்ள கைகளில் வைப்பான். இரண்டாவது பையன் தனது ஒரு காலை அதே போல் தூக்கி மடக்கி முதல் பையன் கால்மேல் போட்டுக் கொள்வான். மூன்றாமவனும் தனது ஒரு காலைத் தூக்கி வளைத்து மற்ற இருவரது கால்களின் மேலாகவும், ஊடாகவும் நுழைத்துக் கொள்வான். இப்போது மூன்று பேர்களும் கோர்த்திருந்த கைகளை விலக்கிவிட்டு ஒரு காலில் நின்று நொண்டியடித்துக் கொண்டு கைகளைத் தட்டிக் கொண்டு வட்டமாய்ச் சுற்றி வந்து இப்படிப் பாடுவார்கள்.

*"தைத் தக்கா தை*
*ஒரு பக்கா நெய்*
*வாத்தியாரு சொன்னதெல்லாம்*
*பொய், பொய், பொய்"*

யதார்த்தம் என்ற ஒன்று இருக்கும்போது தான் கருத்தும் கற்பனையும் அதை ஒட்டிப் பிறக்கின்றன. கால் கற்பனை, அரைக் கற்பனை, முழுக் கற்பனை எதுவாக இருந்தாலும் யதார்த்தத்திலிருந்துதான் முளைக்கிறது. அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரை கற்றுக் கொடுப்பவர்கள், போதகர்கள், வாத்திமார்கள் வாக்கு ஒன்றும் சொல் ஒன்றுமாக இருப்பதைத்தான் இந்தப் பாட்டு தெரியப் படுத்துகிறது.

சில சிறு பிள்ளைகள் உடுப்பு இல்லாமல் அம்மணமாய்த் திரிவார்கள். அதைப் பார்க்கும் மற்றப் பிள்ளைகள்.

*"அம்மணக் குண்டி*
*ஆட்டாம் புளுக்கை*
*தென்ன மரத்துல*
*தேரோட்டம்"*

என்று பாடிக் கேலி செய்வார்கள். "தெற்குத் தெருவுல தேரோட்டம்" என்றும் சொல்வார்கள.

வெயில் அடிக்கும்போது மழையும் பெய்தால் "நாய்க்கும் பூனைக்கும் கல்யாணம்" என்று சொல்லிச் சிரிப்பார்கள்.

விளையாட்டில் – உதாரணமாக நொண்டியடித்து விளையாடுவதில்

நொண்டிக் கொண்டே மற்றப் பிள்ளைகளைத் தொட வேண்டும். நொண்டியடிப்பது கடினம். அகப் படாமல் ஓடுவது லேசு; இப்படியே ஒவ்வொரு விளையாட்டிலும் உண்டு. வெகு நேரம் அகப்படாமல் ஓடி விளையாடிய பிள்ளை அகப்பட்டுக் கொள்கிறது என்று வைத்துக் கொள்வோம். நொண்டியடிக்கும் சிரமத்திற்குப் பயந்து "நேரமாகிவிட்டது- எங்க அம்மா சத்தம் போடும் நான் வரவில்லை" என்று ஓடும். இதைப் பார்க்கும் மற்றப் பிள்ளைகள்.

*"என் ஆட்டைக்கு வராதவ*
*எண்ணைக்காரன் பெண்டாட்டி"*

என்று சொல்லித் திட்டுவார்கள்.

வீடு கட்டி சோறு பொங்கி பொண்ணு மாப்பிள்ளை வைத்து விளையாடுவதும் உண்டு. போன தலைமுறையில் பால்யவிவாகம் சர்வ சாதாரணம். கல்யாணமான சிறுமிகளை அவர்களது கணவர் பெயரைச் சொல்லிக் கேலி செய்வார்கள்.

கணவர் பெயரின் முதல் எழுத்தை எடுத்துக் கொண்டு அத்து டன் ''மூனாதண்டட்டி'' என்று சேர்த்து - பின் பெயரைச் சொல்லி பொண்டாட்டி - என்று சேர்த்துக் கொள்வார்கள்.

*சானாமூனா தண்டட்டி,*
*சண்முகராசு பொண்டாட்டி,*
*கானாமூனா தண்டட்டி,*
*கணபதி ராசு பொண்டாட்டி,*
*ரானா மூனா தண்டட்டி,*
*ராமுக் கொத்தன் பொண்டாட்டி.*

இப்படி எல்லாப் பெயர்களுக் கும் சொல்லலாம்.

நான்கு பேர் மூலைக்கு ஒருவ ராய் நின்று கொள்வார்கள். ஐந்தாவது குழந்தை இடது கையைத் தலையில் வைத்துக்கொண்டு வலது கையை நீட்டிய வண்ணம், உள்பக்கமாக

*"என் தலைக்கு எண்ண ஊத்து*
*எரும மாட்டுக்குப் புல் போடு"*

- என்று பாடிக்கொண்டே சுற்றிவருவாள். அப்போது நான்கு மூலையிலும் நிற்பவர்கள் வலதுபுற மாக இடம் மாறி ஓடி நிற்பார்கள். அப்படி இடம் மாறும்போது பாடி வருபவள் அவர்களைத் தொட வேண்டும். அப்படித் தொட்டுவிட் டால் தொடப்பட்டவள் பாடிவர வேண்டும்.

ஒரு சின்னக் குழந்தையைச் செல்லமாகப் பக்கத்தில் வைத்துக் கொண்டு கொஞ்சுவது போல் பாவனை காட்டி மற்றவர்களிடத்தில்



*"நான் வளர்த்த பூனைக்*
*குட்டியைத்*
*தொட்டுரு பார்ப்போம்"*

- என்பார் ஒருவர்.

ஒருவன் ''இந்தா நான் தொட்டுட்டேன்'' என்று அந்தக் குழந்தையைத் தொடுவான்.

முதல் ஆள் "அப்ப, எனக்கு சர்க்கரையா'' என்று சொல்லி குழந்தையைச் சற்றுப் பலமாக அடிப்பார். இப்படி மாறி மாறி நடக்கும். அகப்பட்டுக் கொண்ட குழந்தையின் பாடு திண்டாட்டமாய்ப் போய்விடும். முதலில் குழந்தை நம்மைக் கொஞ்சுகிறார்கள் என்று நம்பி, பின்பு அடி விழ, அடி விழ தப்பித்துக் கொண்டால் போதும் என்ற நிலைக்கு வந்துவிடும். மற்றவர்களுக்கு வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் இருக்கும்.

ஒரு பிள்ளை இரண்டு உள்ளங் கைகளையும் விரல்களையும் பிரித்த நிலையிலுள்ள கையில் ஒவ்வொரு குத் தாகக் குத்துவான். "பிடி கொளக்கட்ட" என்று சொல்லிக் குத்தும்போது, குத்துகிற கையைப் பிடிக்க வேண்டும். பாட்டைப் பார்ப்போம்.

*"மாக் கொளக்கட்ட*
*மஞ்சக் கொளக்கட்ட*
*பிள்ளையார் கோயில்ல*
*பிடி கொளக்கட்ட"*

**குன்னாங் குன்னாங் குர்**

மே காற்றுக் காலத்தில் குழந்தை கள் ஓலையில் முள்ளைக் குத்தி காற்றாடி செய்து விளையாடும். காற்றாடி சரியாகச் சுற்றாவிட்டால் ஓலையின் இரு ஓரங்களையும் பிடித்துத் திருகி - காதின் பக்கத்தில் வைத்துக் கொண்டு

*குன்னாங் குன்னாங் குர்ர்*
*கோழி முட்டை சர்ர்*
*ஒங்கப்பன் ஆட்டுக்கிடையில்*
*செத்துக் கிடக்கான்*
*பேட்ரிலைட்டுக் கொண்டா போய்"*

என்று ராகமாய்ச் சொல்லு வார்கள். இதைக் கேட்டு செத்துக் கிடக்கும் காற்று எழுந்துவந்து காற்றாடியைச் சுற்ற வைக்குமாம். அல்லது திடுக்கிட்டு காற்றாடி சுற்றலாம். உண்மையில் ஓலையின் இரு ஓரங்களையும் வளைத்துவிடுவதால் அதன் மீது காற்று பட்டு காற்றாடி சுற்றும். காற்றாடி போல் சுற்றிக் கொண்டிருக்கும் மண்ணின் குழந்தை களுக்கு அதுக்கும் ஒரு பாட்டு.

வெள்ளாமைக் காலத்தில் கம்பங் காட்டிற்குக் காவலுக்குப் போகவேண்டும். குருவிகள் படை படையாக வந்துவிடும். தகரத்தைத் தட்டி விரட்ட வேண்டும். பாதை மேல் பிஞ்சை என்றால் போகிறவர்கள் வருகிறவர்கள் கதிரை ஓடிக்காமல்

பார்த்துக் கொள்ளவேண்டும். இல்லை என்றால் போகிறதும் வர்றதும் ரெண்டு 'கருதை' நசுக்கி உமி ஊதி வாயில் போட்டுக் கொண்டு போய் விடும். விளைந்த பச்சை மாறாத கருது அவ்வளவு மணமாகவும் ருசியாகவும் இருக்கும்.

"கம்மங் கருதைக் கண்டால் கை சும்மா இருக்காது. மாமியா மகளைக் கண்டால் வாய் சும்மா இருக்காது" என்பது சொலவடை. ஆள் காவலுக்கு இருக்கிறது என்பதைக் காட்டிக் கொள்ள ஓயாமல் சத்தம் போட்டுக் கத்த வேண்டும்.

*"கருத ஒடியாத*
*கக்கத்துல வைக்காத*
*மானத்தப் பாராதே*
*வயிறூதிச் சாகாதே*
*கழுதேஏஏ.... கழுதே"*

என்று தகரத்தைத் தட்டிக் கொண்டே பாடுவார்கள்.

மெதுவான குரலில் சாடையாக ஒரு பிள்ளையின் பெயரைச் சொல்லிக் கூப்பிடுவது, அந்தப் பிள்ளை "என்னைக் கூப்பிட்டாயா" என்று கேட்கும். "நான் உன்னையா கூப் புட்டேன். காரவீட்டுக் கருத்த நாயைக் கூப்பிட்டேன்" என்று சொல்லிச் சிரிப்பது.

ஏதாவது ஒரு பொருளைக் கையில் மறைத்து வைத்துக் கொண்டு கையை உயர்த்தி "யாருக்கு வேட்டை" என்று ஒரு பிள்ளை கேட்கும். ஆசைப்பட்ட ஒரு பிள்ளை "எனக்கு வேட்டை" என்று கையை உயர்த்திக் கேட்கும். அதற்கு "ஓங்க மாமியா பல்லோட்டை" என்று பதில் வரும். மற்றப் பிள்ளைகள் ஏமாற்றமடைந்த பிள்ளையைப் பார்த்து "ஆசைப்பட்ட, ஊசிப் போச்சி" என்று சொல்லி சிரித்துக் கேலி செய்வார்கள்.

விளையாட்டில் அழிச்சாட்டங் காட்டுவதும் கண்ணிலடித்துப் பொய்ச் சத்தியம் செய்வதும் சர்வ சாதாரணம். கோட்டை மிதித்துவிட்டு – மிதிக்க வில்லை என்று வாயடியடித்து சில பிள்ளைகள் சாதித்து விடும். மறு தடவை மறுக்க முடியாத அளவுக்கும் மறைக்க முடியாத அளவுக்கும் அதே பிள்ளை ஒரு தவறு செய்து ஆட்டையை இழந்து விடும். முதலில் பாதிக்கப்பட்ட குழந்தை –

*"அழிச்சாங்க காட்டுனா சாமி*
*தொழிச்சாங் காட்டுது"*

என்று கூறிச் சந்தோசப்படும். தெய்வ தண்டனையில் குழந்தை களுக்கு அவ்வளவு நம்பிக்கை! தப்பு செய்தா சாமி தண்டிக்கும், பகவான் இருக்கிறான் பார்த்துக் கொள்வான். அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும் போன்ற சமுதாயத் தில் நடமாடும் கருத்தாக்கங்கள் சிறுவர் நம்பிக்கையிலும் நடப்பட்டிருக் கின்றன.

ஆடு மாடு மேய்க்கும் சிறுவர்கள் கோடைக் காலத்தில் மூன்று நான்கு மைல் தூரம் அலைந்து எங்கோ குளம், குட்டையில் கிடக்கும் – தண்ணீரை ஆடுமாடுகள் குடிக்கும் படி செய்வார்கள். அப்போது

*''நாளைக்கு இந்நேரம்*
*தண்ணி காட்டினாலும் காட்டுவேன்*
*காட்டாட்டாலும் இல்லை*
*கொம்புக்கு குருணித் தண்ணி*
*குடிச்சுக்கோ ஓஓ....''*

என்று கூவுவார்கள். பாவம் வாயில்லாச் சீவன்கள்.

> **கால் கற்பனை, அரைக் கற்பனை, முழுக் கற்பனை எதுவாக இருந்தாலும் யதார்த்தத்திலிருந்துதான் முளைக்கிறது.**

**குச்சுக் குச்சு ராக்கம்மா**

பெண் தேடிச் செல்லும் ஒரு விளையாட்டுத்தான் ''குச்சுகுச்சு ராக்கம்மா''

கிராமீய விளையாட்டில் பாடும் ஒரு வரியை சினிமாவில் எப்படியெல் லாமோ மாற்றிப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பெண்கள் இரண்டு சோடி களாக 30 அடி தூரத்தில் எதிர் எதிராக நின்று கொண்டு, முதலில் ஒரு சோடி இப்படி பாடிக் கொண்டு மற்றோர் சோடியைச் சுற்றி வரும் .

*"குச்சுக் குச்சு ராக்கம்மா*
*பொண்ணுன்டோ*
*கூசாலி ராக்கம்மா*
*பொண்ணுன்டோ*
*சாதி சனமெல்லாம்*
*பொண்ணுன்டோ –*
*உங்க சம்பந்த வழியெல்லாம்*
*பொண்ணுன்டோ"*

இதற்கு மறு தரப்பிலிருந்து சுற்றி வந்து இப்படி பதிலளிப்பார்கள்.

***"குச்சுக்குச்சு ராக்கம்மா***
***பொண்ணில்ல***
***கூசாலி ராக்கம்மா பொண்ணில்ல***
***சாதி சனமெல்லாம் பொண்ணில்ல***
***– எங்க சம்பந்த வழியெல்லாம்***
***பொண்ணில்ல"***

முதலில் சுற்றி வந்த சோடி மீண்டும் அந்தப் பாட்டில் "பொண்ணுண்டோ" என்ற சீருக்குப் பதில் 'பத்து ரூபா' என்ற சொல்லைச் சேர்த்து 'குச்சு குச்சு ராக்கம்மா பத்து ரூபா' என்று பாடி வரும்.

இதற்கு 2-வது சோடி 'பொண்ணில்ல' என்ற சீருக்கு பதில் 'அது வேண்டாம்' என்ற சீரைச் சேர்த்து, 'குச்சு குச்சு ராக்கம்மா, அது வேண்டாம்' என்று பாடிச் சுற்றிவரும்.

பத்து ரூபா, நூறு ரூபா, லட்ச ரூபா, பட்டுச்சேலை, ஒட்டியாணம், பதக்கம், சங்கிலியென்று கற்பனைக்கு எட்டு மட்டும் பரிசம் போடுவதாய்ச் சொல்லும். எதிர்தரப்பு கடைசி வரை "அது வேண்டாம்" என்றே சாதிக்கும். பெண்ணிற்கு அவ்வளவு கிராக்கி. அது ஒரு காலம்.

வரலாற்றின் தலைச் சக்தியாக பெண் இருந்தாள். இயக்கிச் செல்லும் 'சமுதாய சக்தியாக' அவள் இருந்தாள். ஆணாதிக்கம் மேல் கை எடுத்து பெண்ணை ஒரு பொருளாக மாற்றி விட்டபோது, பெண்ணுக்கு விலை பேசும் வில்லங்கம் மேலெழுந்தது. தாய் வழிச் சமுதாயமாக இருந்தது வரை பெண்ணுக்கு பொன் கொடுத்து மதிக்கப்பட்டாள். பெண்ணுக்கு பொன் கோட்பதெல்லாம் இப்போது 'வந்த கேவலம்!

விளையாட்டுப் பாடல்கள் வரலாற்றுச் சுழற்சியை விவரிக்கும் சாட்சியங்களாகவும் கலாச்சார மாறுதல்களைப் பதிவு செய்யும் ஏடுகளாகவும் திகழ்கின்றன.

மன்னர் ஆட்சிக் காலத்தில் குடியானவர்கள் பட்ட கஷ்டங்களை கோடிட்டுக் காட்டுவது இந்த விளையாட்டு. ராசா வீட்டில் விசேஷம் என்றால், அதற்கு வேண்டிய பொருட் களை குடியானவன் இனாமாகக் கொடுக்க வேண்டும். ஒரு சில வேலை செய்யவேண்டும்.

ராசா மாதிரி ஒருவன் உட்கார்ந்து கொள்வான். அவனுக்குப் பக்கத்தில் ஒருவன் சேவகன் போல் நின்று கொள்வான்.

சற்றுத் தள்ளி ஒருவர் பின் ஒருவராகக் காலை நீட்டி மடியில்

உட்காருவது போல் உட்கார்ந்து கொள்வார்கள். முன்னால் உட்கார்ந்திருப்பவர்களைப் பிடித்துக் கொள்வார்கள். முதலில் உட்கார்ந்திருக்கும் குழந்தை தான் தோட்டக்காரன்.

சேவகன் தோட்டக்காரனிடம் வந்து "ராசா மகளுக்குக் கல்யாணமாம் ஒரு பூசணிக்கா வேணுமாம்'' என்பான். அதற்குத் தோட்டக்காரன் "இப்பதான் விதை ஊனி இருக்கு" என்பான். இதை அப்படியே சேவகன் ராசாவிடம் சொல்வான். ராசா 'அதையும் வாங்கிட்டு வா' என்பான். சேவகன் தோட்டக்காரனிடம் வந்து 'அதையும் கொடுப்பியாம்' என்பான். 'இப்பத்தான் ஒரு இலை விட்டிருக்கு' என்பான். இதைச் சேவகன் ராசாவிடம் சொல்ல – 'ராசா' 'அதையும் வாங்கிட்டு வா' என்பான்.

இப்படியே பத்து இலை வரை சொல்லி, கொடி வீசியிருக்கு, பூப்பூத்திருக்கு; பிஞ்சு இறங்கியிருக்கு; காய் காச்சிருக்கு என்று தோட்டக்காரன் சொல்ல ராசா அதையும் வாங்கிட்டு வா என்று சொல்வான்.

முடிவாக தண்ணீர் பாய்ச்சி வேலியடைத்துவிட்டு, ஒரு காய் பிடுங்கிக் கொண்டு போ என்பான். சேவகன் தண்ணீர் பாய்ச்சுவது போல உட்கார்ந்திருக்கும் பிள்ளைகள்ளைத் தாண்டுவான். வேலியடைப்பது போல பிள்ளைகளைச் சுற்றி நொண்டியடிப்பான். பிள்ளைகள் அவனை விரட்டுவது போல் குரைப்பார்கள். ஒரு பிள்ளை சேவகனின் காலில் நறுக்கென்று கிள்ளிவிடும். தேள் கொட்டி விட்டதாய் சேவகன் அழுவான். ''ஓம்பீயையும், ராசா பீயையும் குழப்பிப் போடு. தாவலாய்ப் போகும்" என்று கூறி எல்லோரும் சிரிப்பார்கள்.

கடைசியில் உட்கார்ந்திருப்பவன் தான் பூசணிக்காய். அவனது இடுப்பைப் பிடித்து சேவகன் தூக்குவான். அவன் முன்னால் உட்கார்ந்திருப்பவனைப் பிடித்துக் கொண்டு விடமாட்டான். ஒரு வழியாக அவனை பூசணிக் காயாகாத் தூக்கி ராசாவிடம் கொண்டு போய்ச் சேர்ப்பான். இந்தக் காய் அழுகிப் போச்சு, இன்னொரு காய் வாங்கிட்டு வா என்பான் ராசா. இப்படி மாறி மாறி நடக்கும்.

**உத்தி கட்டிவருதல்:**

விளையாட்டில் இரண்டு குழுக்களாகப் பிரிப்பதற்கான வழிமுறையே மிகவும் சுவாரஸ்யமாய் இருக்கும். சோடி சோடியாய் உத்திகட்டி வருவார்கள். குழுத்தலைவர்களிடம் "உத்தி யார்? உரி யார்?" என்று கேட்பார்கள். தலைவர்களில் ஒருவன், "நான்தான் உத்தி, நீதான் உரி" என்பான். அதற்கு உத்தி கட்டி வந்தவர்களில் ஒருவன்,

"மானத்த வில்லா வளைச்சவன் வேணுமா?

மணலைக் கயிராத் திரிச்சவன் வேணுமா?'' என்று கேட்பான். தலைவன் ஏதாவதொன்றைக் கேட்க அந்தப் பெயருக்குரியவன் அந்தக் குழுவில் சேர்ந்து கொள்வான். மறு உத்திவரும் போது, கேட்கும் உரிமை இரண்டாவது குழுத் தலைவனிடம் போய்விடும். இப்படி மாறி மாறி வரும்.

உத்தி கட்டி வருபவகள்,

"வேலியத் தாண்டற வெள்ளக் குதுர வேணுமா?

மானத்தத் தாண்டற மயிலக் குதுர வேணுமா?" என்றும்,

''பனைமரத்து மேலிருந்து பாட்டுப் படிக்கிறவன் வேணுமா?

உடமரத்து மேலிருந்து உசு வடிக்கிறவன் வேணுமா?'' என்றும் பலவிதமாகக் கேட்பார்கள்.

சாவுச் சடங்கையும் சிறுமிகள் ஒரு விளையாட்டாக்கிக் கொள்வார்கள். ஆடி மாதம் 10,12 வயதுப் பெண்கள் துணியில் பொம்மை செய்து அது இறந்து விட்டதாய்ப் பாவித்து, தண்ணீர்க் கரையில் கொண்டு போய், ஒப்பு வைத்துக் கட்டி அழுவார்கள்.

*"வாயைக்கட்டி வயித்தைக்கட்டி வளர்த்தனடி பொம்மை – உன்னை வைப்பாத்துத் தண்ணியில விட்டனடி பொம்மை"*

(''வாய்க்காலுத் தண்ணியில விட்டனடி பொம்மை'' என்றும் கூறுவதுண்டு)

ஒப்பாரி வைத்து பொம்மையை எரித்து – சாம்பலை நீரில் கரைப்பார்கள்.

விளையாட்டுகளில் இன்னும் விவரிக்கப்பட வேண்டியவை ஏராளம். திரி திரி பொம்மக்கா, தெல்லு, கோலி, கிட்டிக்குச்சி, பேப்பந்து, பிள்ளையார் பந்து, குழிப்பந்து, ஒச்சியான், வண்ணான்பொதி, கிந்தான், மந்தி, தவிட்டுக்குஞ்சி, சடுகுடு, கிளித்தட்டு, எட்டாளந்தட்டு, நிலாப்பூச்சி, கண்ணாம்பூச்சி, தாயம், தட்டாங்கல், பன்னாங்குழி, பூச்சொல்லி விளையாடுவது, மாட்டுக்கால் விளையாட்டு, ஒத்தையா ரெட்டையா, பம்பரம், மதியம், சுண்டி, நீர் விளையாட்டுக்கள் இப்படி ஏராளம். ஏராளம். இவ்விளையாட்டுக்கள் ஒவ்வொன்றிலும் அவற்றிற்கேயுரிய சில சொற்கள் ஆராயப்படவேண்டியவை. சிலவற்றில் சமுதாய, வரலாற்றுச் செய்திகளுக்குச் சாட்சியங்களைக் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு குடம் தண்ணீ ஊத்தி, ஒரு பூப்பூத்தது என்று பத்து வரை சொல்லி – 'கடைசியில் வாரவனைக் கண்ணி போட்டுப் பிடிச்சுக்கோ" என்பான். ஒருவனைப் பிடித்துக் கொண்டபின் – பிடிபட்டவனின் கட்சித் தலைவன், "இம்புட்டுப் பணம் தாரேன், விடுடா துலுக்கா'', என்பான். பதிலுக்கு "விடமாட்டேன் மலுக்கா'', என்பான் எதிர்க்கட்சித் தலைவன்.

சடுகுடு விளையாட்டில் வெற்றி பெற்றதை 'எல்லை வைத்தோம்' என்றும், கிந்தான், தாயம் விளையாட்டுகளில் வெற்றி பெற்றதை 'பழம்' என்றும், தட்டாங்கல் விளையாட்டில் வெற்றியைக் ''கட்டைவைத்தேன்'' என்றும் கூறுவர். சுண்டி, ஒத்தையா ரெட்டையா, தெல்லு விளையாட்டுகளில் "மொத்தீட்டான்", "தோத்துட்டான்" என்றும் சொல்லுவார்கள்.

வெகுநேரம் விளையாடியாய் விட்டது. வீட்டிற்குப் போகும் நேரமாய் விட்டது. இருப்பதில் பெரிய பிள்ளை இப்படிக் கூறி விளையாட்டை முடித்து வைக்கும்.

*"அவுகவுக வீட்டுக்கு*
*அவரக்கஞ்சி குடிக்கப் போங்க*
*பிள்ளப் பெத்த வீட்டுக்குப்*
*புளியங் கஞ்சி குடிக்கப் போங்க"*

கல்யாணம், திருவிழா, பொங்கல் காலங்களில் சிறுவர், சிறுமியர் ஓரிடத்தில் இரவு நேரத்தில் தங்க நேரிடும். அப்போது உற்சாக மிகுதியில் பேசிச் சிரித்துக் கேலி செய்வதும், கதை சொல்லியும் கும்மாளம் போடுவார்கள. நேரம் ஆகஆகச் சில பிள்ளைகளுக்கு தூக்க உணர்வு மேலிடும். சில பிள்ளைகள் பலமாகச் சிரித்தும், பேசியும் தூங்கவிடாமல் தொந்தரவு செய்யும். இது அளவு மீறிப் போகும்போது, ஒரு பெரிய பிள்ளை தலையிட்டு, ''சரி, போதும். தூங்குவோம். யாரும் பேசக்கூடாது "கத்தாளங் கருங்கப்" என்று சொல்லும். இதற்கு மேல் யாரும் பேச மாட்டார்கள். பேசக்கூடாது.,

நாமும் இதற்கு மேல் கதையை வளர்த்தாமல் இத்துடன் நிறுத்திக் கொள்வோம்.

*"கத்தாளங் கருங்கப்"*

நல்வாழ்த்துகள்

**மஹாவீர் ஜுவல்லரி, ஜெய் மஹாவீர் ஜுவல்லரி,**
**ஸ்ரீ மஹாவீர் ஜுவல்லரி, பகவான் மஹாவீர் ஜுவல்லரி**

ரங்ரூப் மஹால் திருமண மண்டபம், கடலூர் - 2



87. பால் சிசன்



44. ஜார்ஜ் பிரேக்

*நல்வாழ்த்துகள்*

**சொ. பழனிச்சாமி**

ஒன்றிய பெருந்தலைவர்
பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம்
தென்னாற்காடு
வள்ளலார் மாவட்டம்

*நல்வாழ்த்துகள்*

**ஏ.எஸ். மதியழகன்**

ஒன்றிய பெருந்தலைவர்
மேல் புவனகிரி ஊராட்சி ஒன்றியம்
தென்னாற்காடு
வள்ளலார் மாவட்டம்

89. மார்ஷல் டுஷாம்ப்



நல்வாழ்த்துகள்

டாக்டர் ஹேமா சென்னி கிருஷ்ணன், நிர்வாகி

**பாபா மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி**

கடலூர்

**வாஸந்தி**

# காத்திருந்த வேளையில்

மொட்டை மாடியிலிருந்து உலகத்தைக் கீழ்நோக்கிப் பார்க்கும்போது காலை நேரம் நம்பிக்கை ஊட்டுவதாக இருந்தது. தப்பாமல் சூரியன் உதித்து தெருவிலும் கட்டிடங்களிலும் ஒளிபரப்பியிருந்தது - சத்தியத்துக்குக் கட்டுப்பட்டவை போல பறவையினமும் மனித இனமும் இயங்க ஆரம்பித்திருந்தது. - எதிலுமே பிசிறில்லாமல் தெரிந்த தொடர்ச்சி சக்திவேலுக்கு பிரமிப்பை ஏற்படுத்திற்று. இது ஒரு நிரந்தர இயக்கம் என்று அவனுக்குத் தெரியும். தினமும் காலை உதயத்தில் கீழ்வானம் வெளுக்கும். பிறகு சூரியன் உச்சிக்கு வரும். பிறகு இறங்கிக் களைத்து மலையடிவாரத்தில் தெரியும். மொட்டை மாடி கைப்பிடிச் சுவரில் ஒரு காலை வைத்து கீழே பார்த்தபோது சக்திக்கு லேசாகத் தலை சுற்றிற்று. இந்த நிரந்தரத்தன்மை என்பதே மாயை என்று தோன்றிற்று. எதிரே நிற்கும் கட்டிடங்கள் எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கும் வேளையிலேயே நொறுங்கி கீழே விழக்கூடும். பிரளயம் வரும். ஏரி மூழ்கிப் போகும். சூரியனை கிரகணம் விழுங்கும். 'ராகுவும் கேதுவும் உன் ஜாதகத்தில் நீசன்'. சக்திவேல் என்பவன் மட்டும்தான் அந்த நீசத்தனத்தை அனுபவிக்க வேண்டுமா என்ன?

இந்தத் தெருவில் இரண்டே இரண்டு அடுக்கு மாடிக் கட்டிடங்கள். சூழலோடு ஒட்டாமல், கட்டிடங்களுக்குப் பக்கவாட்டில் குடிசைப் பகுதி. சம்பந்தமில்லாமல் போன வாரம் எதிர்த்தாற்போலிருக்கும் அடுக்குமாடியின் மொட்டை மாடியிலிருந்து ஒருத்தன் விழுந்தான். அவனுடைய மனைவி பெரிய அலறலாய் பத்தாவது பால்கனியில் நின்று அலறியபோது, சக்தி தனது பால்கனிக்குச் சென்று பார்த்தான். ஒரு ஆள் இறக்கை விரித்து விழுந்த பட்சிபோல் கட்டாந்தரையில் விழுந்திருந்தான். சித்திரம் வரைந்தது போல் எப்படி இவன் விழுந்திருக்கிறான் என்று சக்தி நினைத்துக் கொண்டான். மனைவி பால்கனியில் நின்றபடி அலறிக் கொண்டிருந்தாள். பல பால்கனிகளில் பலர் வந்து நின்றார்கள். குடிசைப் பகுதியிலிருந்துதான் திமுதிமுவென்று கூட்டம் வந்து உடலைச் சுற்றி நின்றது.

சக்தி கைப்பிடிச்சுவர் மேல் இருந்த காலை மெல்ல கீழே இறக்கினான். உயிர் போகாமல் கால் மட்டும் முடமாகிப் போகலாம். விதியின் நீசத்தனத்திற்கு அளவு உண்டா என்ன?

அவன் வீட்டிற்குள் சத்தமில்லாமல் நுழைந்தபோது, ''எங்கேடா உன்னை ஆளையே காணும்?'' என்றாள் அம்மா. "சும்மா மொட்டை மாடிக்குப் போயிருந்தேன். காத்து வாங்க."

"காத்து வாங்க மொட்டை மாடிக்கு ஏன் போகணும்?" என்றாள் அம்மா சந்தேகத்துடன்.

"அங்கேதான் காத்து நிறைய இருக்கு" என்றான் அவன் சாதாரணமாய். அம்மா பதில் சொல்லவில்லை. எதிர்த்த கட்டிடத்துப் பெண் பத்து நிமிஷம் அலறின மாதிரி அம்மாவும் அலறியிருப்பாள். அவன் தன் அறைக்குச் சென்று தாழ்ப்பாள் போட்டுக்கொள்ளும் சமயத்தில் அம்மா சொன்னாள்:

"தாழ்ப்பாள் போட்டுக்காதே." அவனுக்கு சுறுசுறுவென்று கோபம் வந்தது. "என்னது இது, பச்சைக் குழந்தையை விரட்டற மாதிரி விரட்டறே?"

அம்மா சற்று திகைத்து, சுதாரித்துக் கொண்டாள்.

"இருக்கிற இரண்டு ரூமிலே ஒண்ணை நீ அடைச்சிக்கிட்டா இடம் பத்துமா சக்தி?"

அவன் பதில் ஏதும் சொல்லாமல் கோபத்துடன் கதவுகளைப்

ஓவியம்: **விஸ்வம்**

படாரென்று திறந்துவைத்துவிட்டு ஜன்னலுக்கு அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்தான். காரணம் புரியாமல் கண்களில் நீர் முட்டி இமைகளைக் குத்திற்று. சக்தி. சக்தி. அவனுக்கு அந்தப் பெயர் சூட்டியவர் களுக்கு மிக அபத்தமான ஹாஸ்ய உணர்வு இருந்திருக்க வேண்டும். அல்லது ஒரு எதிர்பார்ப்பின் கற்பனை யாகவும் இருந்திருக்கலாம். அந்தக் கற்பனையில் அவனே இதுவரை மிதந்திருக்கிறான். என்ன வந்தாலும் எதிர்கொள்வேன் என்ற இறுமாப்பு டன். ராகுவும் கேதுவும் நீசனாக இருந்தாலும். கீழே புல்வெளியில் வெயில் ஏறுவது நினைவில்லாமல் இரண்டு குழந்தைகள் 'ஸீஸா' ஆடிக் கொண்டிருந்தன. முதல் மாடியிலிருந்து பார்க்கும்போது மிகக் கிட்டத்தில் தெரிந்தன. மேலே போகும் போது பெண் குழந்தை கெக்கிலி பிக்கிலி என்று சிரித்தது. விளம்பரக் குழந்தைபோல முத்துப்பல் வரிசை மின்னிற்று. கீழே இறங்கும்போது இறுக்கமாய் முகத்தை வைத்துக் கொண்டது – கீழே விழாமல் தன்னைத் தற்காத்துக் கொள்வதுபோல. சக்தி சற்று நேரம் அந்தக் குழந்தையை தன்னை மறந்து சுவாரஸ்யத்துடன் பார்த்தான். இந்த முதல் மாடி ஃப்ளாட்டை வாங்கியதே அவன் செளகர்யத்துக்காக. மின்சாரம் தடைப்பட்டு லிஃப்ட் வேலை செய்யா விட்டாலும் கவலைப்படாமல் படி ஏறி விடலாம் என்பதற்காக. தீராத சில கடன்களில் ஃப்ளாட் வாங்கிய கடனும் சேர்த்தி. அப்பாவுக்குக் கடன் வாங்குவது கைவந்த கலையாகி விட்டது. அடுத்தாற்போல் சுந்தரிக்கு ஆகவேண்டிய கல்யாணத்துக்கு கடன்வேட்டை ஆயத்தங்களில் இருக் கிறார். அப்பா ஒருவேளை பத்தாவது மாடியில் இருந்திருந்தால் அந்த ஆள் போனவாரம் விழுந்தமாதிரி கீழே விழுந்திருப்பார். இறக்கை விரித்த பட்சி மாதிரி. பால்கனியிலிருந்து அம்மா அலறியிருப்பாள்.

"இந்தா காபி"

தூக்கிவாரிப் போட்டவனாய் அவன் திரும்பினான். சுந்தரி லேசான புன்னகையுடன் காபி டம்ளரை நீட்டினாள்.

"மேஜை மேல் வெச்சுடு" என்ற படி அவன் மீண்டும் புல்வெளியைப் பார்த்தான். "உள்ளே நுழையறதுக்கு முந்தி கதவைத் தட்டிட்டு வரக் கூடாது?"

"ஏன், நீ என்ன அன்னியனா? இது நம்ம வீடுதானே?" என்று அவள்



சிரித்தாள்.

இவளால் எப்படி இப்படி சிரிக்க முடிகிறது என்று அவனுக்கு எரிச்சல் வந்தது.

"நாகரீகம்னு பேரு அதுக்கு."

"ஓ. ஸாரி" என்றாள் அவள் நையாண்டிப் புன்னகையுடன். ஸீஸா மேலே ஏறிற்று. கெக்கிலி பிக்கிலி என்று பெண் சிரித்தது.

"எமன் மட்டும்தான் வரலாம் சொல்லாம கொள்ளாம."

சுந்தரி சடாரென்று திரும்பி அவனைச் சில வினாடிகள் பார்த்தாள். இன்னமும் மேஜைமேல் வைக்காத காபியை ஒரு ஆற்று ஆற்றி ஒரு பகுதியை அவனிடம் நீட்டினாள்.

"முதல்ல குடி."

குழந்தையைப் போல் அதை வாங்கிக்கொண்டு அவன் டம்ளரை வாய்க்கு நேராக உயர்த்திப் பருக ஆரம்பித்தான். காபியின் சூடு இதமாக நெஞ்சுக்குழியில் இறங்கியபோது சுந்தரியை நிமிர்ந்து பார்க்கக் கூச்சமாக இருந்தது. அவன் குடித்து முடித்ததும் அவள் மெல்லச் சொன்னாள்.

"சக்தி, உனக்கு நா ஒரு சின்ன அட்வைஸ் தரேன். ஏதாவது வெளியூர் போயிட்டு வா. ஏர்க்காடுக்கோ, கோவாவுக்கோ ஒரு வாரம் போயிட்டு வா. இந்த ரூமிலே அடைஞ்சு கிடக்காதே. கைச் செலவுக்கு நா வேணா பணம் தரேன்."

"நோ. தாங்க்யூ" என்றான். அவன் அடிக்குரலில் "என்னை தயவு செய்து தனியே விடறியா?"

அவள் மறுவார்த்தை பேசாமல் அகன்றாள். அவனுக்கு வருத்தமாக இருந்தது. கூடவே வீம்பு தோன்றிற்று. என்னைப் பத்தி நீங்கள்லாம் என்ன நினைச்சாலும் எனக்கு ஆகப்போறது ஒண்ணும் இல்லே. அவன் படுக்கையில் படுத்துக்கொண்டு கண்ணை மூடிக்கொண்டான். கண்ணை மூடுவதற்கு முன் காலண்டர் கண்ணில் பட்டது. மூடிய கண்களுக்குள் மார்ச் மாத பக்கம் படபடத்தது. அவன் செல்வதாக இருந்த யேல் பல்கலைக்கழகப் புகைப்படம். யு.எஸ்.ஐ.எஸ். வாசக சாலையில் இருக்கும் அவனது நண்பன் ஸ்ரீதர் கொடுத்த காலண்டர். அங்கு சீட்டும் உபகாரச் சம்பளமும் கிடைத்திருப்பதாக இவன் போய்ச் சொன்னதும் லைப்ரரியில் பதுக்கி வைத்திருந்த காலண்டரை ஸ்ரீதர் எடுத்துக் கொடுத்தான்.

"உன்னை மாதிரி புத்திசாலி ஆசிரியர்களை நம்பித்தான் அமெரிக்க அரசு இயங்கிக்கிட்டு இருக்கு" என்று ஐஸ் வைத்தான். "விசா கிடைச்சுடும். ஆனா உனக்கு ஹார்ட் ப்ராப்ளம் இருக்குன்னு தெரிவிச்சுடு. ஆபரேஷன் ஒரு தடவை ஆகியிருக்குன்னு தெரிவி. அங்கே ஏதாவது உடம்புக்கு வந்தா உடனடியா கவனிப்பாங்க."

சரி... சரி... சரி... தரையில் கால்பாவாத நாட்கள் அவை. கண்ணை மூடினால் யேல் பல்கலைக் கழகப் புல்வெளிதான். மனசை முழுவதும் பசுமையாக்கிற்று. புல்வெளியில் கால் பதியாத அங்குலம் இல்லை. அங்கு படிக்கப்போகும் படங்களிலும், அவன் காண்பிக்கப் போகும் திறமைகளிலும் ஒவ்வொரு வினாடியும் மனசு மிதந்தது.

சபிக்கப்பட்டவனின் சாபத்துக்குப் பலன் கிடையாது. நினைவற்ற நிலையில் இருப்பவர்களுக்கு தப்பிச் செல்ல மார்க்கமில்லாதது மாதிரி.

இத்தனை கெட்டிக்கார இளைஞனுக்கு இதயக் கோளாறா. நோ ப்ராப்ளம். எங்கள் மருத்துவ விஞ்ஞானம் மிக நவீனமானது. உன்னை சரி செய்து விடுவோம். செலவா? அதைப் பல்கலைக்கழகம் பார்த்துக் கொள்ளும். ஸ்ரீதர் தினமும் கற்பனைக்கு உரம் போட்டான். அதிகம் சிரித்துப் பேசாத அப்பாகூட தெம்பாக வளைய வந்தார். அப்பாவின் முகத்தில் சிரிப்பு வராததற்குதான் எந்த வகையிலோ காரணம் என்று அவன் நினைத்திருக்கிறான். பரீட்சைக்காக அவன் இரவு கண்விழித்துப் படிக்கும்போது "போறுண்டா படிச்சது, படு" என்பதில் கனிவுக்கு பதில் கடுப்பு இருப்பதாகத் தோன்றும். மூச்சு இறைக்க மைதானத்தில் கால்பந்து சுவாரஸ்யமாய் ஆடும்போது "வீட்டுக்கு வறியா இல்லையா?" என்று அவர் அங்கு வந்து முகம் சிக்கக் கத்தும்போது, இந்த அப்பாவுக்கு ஏன் பிறந்தோம் என்று நொந்திருக்கிறான். ஃபஸ்ட் வந்திருக்கேன்பா என்று ப்ராக்ரஸ் ரிப்போர்ட் நீட்டினால் புன்னகை மலராது. பெருமூச்சு வெடிக்கும். அன்று ஆபரேஷன் தியேட்டருக்குள் மறையு முன்பு மூலையில் நின்றபடி குலுங்கி அழும் அப்பாவின் உருவத்தை மட்டும் பார்த்திராவிட்டால், அவர் தனது அப்பாதானா என்று இன்று அவரை அவனுக்கு சந்தேகம் வந்திருக்கும். இப்போழுதெல்லாம் அப்பா அவனெதிரில் வருவதே இல்லை. பேயைக் கண்டு அரண்டிருப்பவர் போல் இருக்கிறார். ஆபரேஷன் மேஜையிலேயே அவன் இறந்திருந்தால் யாருக்கும் அதிர்ச்சி ஏற்பட்டிராது. இப்போது நடுக்கூடத்தில் இருக்கும் டைம்பாமை எப்படி அப்புறப்படுத்துவது என்று புரியாமல் விழிக்கிறார்கள்.

அவனுக்கு கடகடவென்று சிரிக்கவேண்டும் போலிருந்தது. பாட்டி முன்பு சொன்ன கதை ஒன்று நினைவுக்கு வந்தது. ஊரில் ஒரு கிழவி இருந்தாளாம். ஒருநாள் அவள் கட்டை மாதிரி கிடக்க எல்லாரும் இறந்து விட்டாள் என்று ஒப்பாரி வைத்து அழுது சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்ல ஆயத்தமானபோது கிழவி எழுந்து உட்கார்ந்து "எதுக்கு இத்தனை சனங்க வந்திருக்காங்க, எழவு வூட்டுக்கு வந்ததைப் போல" என்றாளாம். மறுபடியும் எல்லாரும் அழுதாங்க என்று சிரித்தாள் பாட்டி. ஆனால் ஆபரேஷன் முடிந்து ஒரு வருஷம் ராஜோபசாரம் நடந்தது. அவனே ஆகாயத்தில் பறந்தான். புதுப்பிறவி எடுத்து போல உடம்பில் உற்சாகம் இருந்தது. சிகிச்சை செய்த டாக்டரே கடவுளாகத் தோன்றினார். இப்போது அந்தக் கடவுளே அவனைப் பார்க்க மறுக்கிறார். எப்பொழுது டெலிபோன் செய்தாலும் "அவங்க ஆபரேஷன் தியேட்டர்லே இருக்காங்க" என்கிறார்கள். பல சமயங்களில் கோபத்தில் அசிங்கமாகத் திட்டியிருக்கிறான். ஒட்டுமொத்தமாக சபித்திருக்கிறான்.

தனது சாபத்துக்கு எந்தப் பலனும் இல்லை என்று அவனுக்குத் தெரியும். சபிக்கப்பட்டவனின் சாபத்துக்குப் பலன் கிடையாது. நினைவற்ற நிலையில் இருப்பவர்களுக்கு தப்பிச் செல்ல மார்க்கமில்லாதது மாதிரி. அவனுக்கு நினைவு இருக்கிறது. உடலைப் பற்றின பூரணபிரக்ஞை இருக்கிறது. அதை என்ன செய்வது என்றுதான் புரியவில்லை. எட்ட



நின்று தனது உடலை சுவரில் மாட்டியிருக்கும் காலண்டரில் மாட்டி கூறுபோட்டு ஆராய்ந்திருக்கிறான். தலையிலிருந்து கால்வரை அதன் உறுப்புகளை, அவற்றின் அழிவின் சாத்தியக்கூறுகளை, அனாடமி மாணவன்போல் ஆராய்ந்திருக்கிறான். கிடைத்த புத்தகங்களையெல்லாம் அறை முழுவதும் பரப்பிக் கரைத்துக் குடித்திருக்கிறான். உறுப்புகளை பூதக்கண்ணாடி கொண்டு பார்க்கும் போது உயிரணுக்களும் செல்களும் யார் கட்டுக்கும் அடங்காமல் போனது தெரிகிறது. சிவகாமியின் சபதத்தில் வரும் நாகநந்தி போல தன்னிடமிருந்து வெளிப்படும் மூச்சே விஷம் என்று அச்சமேற்பட்டது. சென்ற மாதம் அண்ணன் செந்தில் வந்திருந்தான். நளினமாய் மனைவி ராதா. கழுக் மழுக்கென்று பத்துமாதக் குழந்தை. உற்சாகமான பேச்சில் இருந்த கூடம் அவன் உள்ளே நுழைந்ததும் கப்சிப் பென்று அடங்கிப்போயிற்று. தரை யில் தவழ்ந்த குழந்தை அவனைக் கண்டதும் கிடுகிடுவென்று வந்து காலைக் கட்டிக்கொண்டது. தண் ணென்ற அதன் ஸ்பரிசம் பட்டதும் அவன் திக்குமுக்காடிப் போனான். குழநதையை வாரித் தூக்கி அணைக்கும் தருணத்தில் ராதா பாய்ந்து வந்து பிடுங்கிக் கொண்டாள். 'ஐயோ வேண்டாம்' என்று பதறி னாள். செந்திலின் முகத்தில் ஈயாட வில்லை.

சக்திக்கு அதிர்ச்சி நீங்க சற்று நேரம் பிடித்தது. 'என் மனைவி ஒண்ணும் தெரியாதவ. தப்பா நினைக் காதே' என்று செந்தில் சொல்ல வில்லை. 'அதுக்குத்தான் இங்க வர்றதுக்கே எனக்கு பயமாயிருக்கு' என்று முணுமுணுத்தான். அன்று சுந்தரி அங்கு இல்லை. இருந்திருந்தால் செந்திலை ஒருபிடி பிடித்திருப்பாள். அப்பாவும் அம்மாவும் வாயைத் திறக்கவில்லை. அவர்களே பயப்படு கிறார்கள். அன்று இரவு அவன் தோற்றுப் போனவனைப் போல தலையணைக்குள் முகத்தைப் புதைத்து நெஞ்சு வெடிக்க அழுதது நினைவு இருக்கிறது. இத்தனை அழுகைக்கும் அரைகுறையாகவே இயங்கும் இதயத்துக்கு ஒன்றும் ஆகவில்லை. பொட்டென்று மூச்சு நிற்கவில்லை. உயிரை மாய்த்துக்கொள்ள ஒருமுறை எடுத்த முயற்சி படுதோல்வி அடைந் தது. விழுங்கிய மாத்திரைகளின் குப்பியை சுந்தரி பார்த்துவிட்டாள். மூர்ச்சையாகும் தருணத்தில் ஆஸ்பத்திரிக்குத் தள்ளிக் கொண்டு போனார்கள். மொட்டை மாடி முயற்சி ஒவ்வொரு முறையும், 'கால்

மட்டும் முடமாகிப் போனால்' என்ற கேள்வியிலேயே முடங்கிப் போகிறது. முடங்குவதற்கு இன்னொரு காரணம் உண்டு. சாவதற்கு முன்பு ஒரு பயணம் செய்தாக வேண்டும்.

அறைக்குள் யாரோ சத்தமில்லா மல் நுழைந்திருந்த மாதிரி இருந்தது. எமனா? அதற்குள்ளாகவா? குப்பென்று அவனுக்கு வியர்த்தது. அவன் கண் திறந்தபோது அம்மா நின்றிருந்தாள். அவன் சோர்வுடன் எழுந்து உட்கார்ந்து குனிந்து சட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

"ஒண்ணு சொன்னா கோவப் பட மாட்டியே?" என்றாள்.

"என்ன, இடத்தைக் காலி பண்ணுங்கறியா?'' என்றான் சள்ளென்று. "நானும் காத்துக்கிட்டு தானே இருக்கேன்!"

"இதப்பார். பெத்தவகிட்ட நீ இப்படி பேசறது நியாயமேயில்லை. நா சொல்றதைக் கொஞ்சம் பொறுமையா கேளு. எனக்கு இதைச் சொல்ல எத்தனை வேதனையா இருக்கு தெரியுமா?"

அம்மாவுக்கு துக்கத்தில் குரல் தழுதழுத்தது. கண்ணீர் வந்துவிடும் போல் இருந்தது. இதெல்லாம் அவனுக்குப் பழக்கம். "சொல்லு" என்றான் ஆயாசத்துடன்.

"வர்ற வெள்ளிக்கிழமை சுந்தரியைப் பெண் பார்க்க வர்றாங்க."

அவன் பேசாமல் இருந்தான். சென்ற ஞாயிறன்று யாரோ வந்திருந் தார்கள்.

"அன்னிக்கு வந்தவங்க இஷ்ட மில்லேன்னுட்டாங்க."

என்ன காரணம் என்று அவன் கேட்கவில்லை.

"என்னை என்ன செய்யச் சொல்றே? போன வாரம் மொட்டை மாடியிலேந்து ஒரு ஆளு விழுந்தானே, அப்படி விழவா?" அம்மா அழ ஆரம்பித்தாள். அவனுக்கு மார்பு படபடத்துக் கொண்டு வந்தது. மூச்சு முட்டிற்று.

"உங்கிட்ட எதுவுமே பேச முடியல்லே.'' என்றாள் அம்மா கண்ணீரைத் துடைத்துக் கொண்டு. "எல்லாத்துக்கும் ஏடாகூடமாப் பேசற. என்னுடைய கஷ்டத்தை ஏன் புரிஞ்சுக்கமாட்டேங்கறே?"

அவன் பதில் பேசாமல் கட்டிலிலிருந்து இறங்கி ஜன்னலைப் பார்த்தபடி நாற்காலியில் அமர்ந்தான். புல்வெளியில் இப்போது யாருமே இல்லை. உச்சி வெயில் சூட்டில் பசுமை வெளிறிப் போயிருந்தது.

"நாலைஞ்சு நாள் சித்தி வீட்டிலே போய் இருக்கியா?"

அவன் சடக்கென்று அவளைத் திரும்பிப் பார்த்தான். அவள் முகத்தில் இருந்த பீதியைக் கண்டு மனசு மெல்ல அதிர்ந்தது.

"கோவிச்சுக்காதே சக்தி. என்ன செய்யறதுன்னு புரியாமத்தான் இப்படி யோசனை சொல்றேன்."

அவனுக்குப் படபடத்துக் கொண்டு வந்தது. நாபியிலிருந்து வெடித்த துக்கத்தில் தொண்டை அடைத்து வார்த்தைகள் புதையுண்டு

இத்தனை நாள் அடக்கி வைத்திருந்த கோபத்தை எல்லாம் அவன் முன் கொட்டும்போது அவன் அதில் மெழுகாய் உருகவேண்டும் அல்லது கருகிப்போக வேண்டும்.

போயின. சிதறல்களாகிப் போன எண்ணங்கள் வார்த்தைகளில் அடக் காமல் திமிறின. விரல்களில் ஏற்பட்ட நடுக்கத்தை அவள் பார்க்கக்கூடாது என்று நாற்காலியை அழுத்திப் பிடித்துக் கொண்டான்.

"விஷயத்தை மறைக்கப் போறீங்களா?"

"பிறகு சொல்லிக்கலாம். சுந்தரியைப் பிடிச்சுப் போச்சுன்னா, அப்புறம் பக்குவமா சொல்லிக்கலாம். புரிஞ்சுப்பாங்க."

காலையில் சுந்தரி அவனிடம் சொன்னது நினைவுக்கு வந்தது.

"கொஞ்ச நாள் எங்கேயாவது போயிட்டு வா. ஏர்க்காடுக்கோ, கோவாவுக்கோ?"

இதை மனசில் வைத்துத்தான் அவளும் சொல்லியிருக்க வேண்டும். இதை நம்புவது கஷ்டமாக இருந்தது. அடிமனத்தில் வலித்தது. அவன் சற்று நேரம் பேசாமல் இருந்தான். பிறகு மெல்லச் சொன்னான்.

"சரி போரேன். ஆனா சித்தி வீட்டுக்கு இல்லே."

"பின்னே எங்கே?"

"எங்கேயோ. அது உங்களுக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லே."

"என்னடா சக்தி. கோவத்திலே ஒண்ணுகிடக்க ஒண்ணு செஞ்சிடாதே. தலைவிதின்னு இருக்கிறதை நாம என்ன செய்ய முடியும்."

"சுந்தரி சொன்னா. கோவா வுக்கோ ஏர்க்காடுக்கோ போயிட்டு வாயேன்னு. அப்படித்தான் எங்கே யாவது போகப் போறேன்."

அவன் மறுநாளைக்குக் கிளம்பியபோது அம்மாவின் முகத்தில் நிம்மதி தெரிந்தது.,

"எதப்பத்தியும் யோசனை செய்யாதே. கொஞ்சம் ரிலாக்ஸ்டா இருந்துட்டு வா" என்று சுந்தரி சிரித்து வழியனுப்பினாள். குற்ற உணர்வில் அவன் சுறுங்கிப் போனான்.,

***

**இ**ரண்டு இரவுப்பொழுது பிராயணத்தின்போது கண் இமைக்க முடியாமல் மனசு கொந்தளித்தது. இத்தனை நாள் அடக்கி வைத்திருந்த கோபத்தை எல்லாம் அவன் முன் கொட்டும்போது அவன் அதில் மெழுகாய் உருகவேண்டும் அல்லது கருகிப்போக வேண்டும். மனத்துள் கனன்று கொண்டிருப்பது ஒரு எரிமலை. தீப்பிழம்பு. 'பார் உன்னால் எனக்கு நேர்ந்த கதியைப் பார்' என்று சாட்டையடியாய் காறி உமிழ வேண்டும். சேதி அறிந்ததும் கோழை யைப் போல் ஊரைவிட்டு ஓடினாயாமே? உன்னை என்றாவது பார்க்காமல என் உயிர் பிரியுமா? கடந்த நான்கு வருடங்களாக உன்னை சும்மா விடமாட்டேன் என்ற வெறி. பேயாய் அலைக்கழித்திருக்கிறது. நீ தெரிந்து செய்யவில்லைதான். ஆனால் அதன் விளைவு எப்படியிருக்கும் என்று பார்க்ககூடத் துணிவில்லாமல் ஓடி ஒளிந்தவன் நீ. எப்படியோ ஏதேச்சையாக விலாசம் கிடைத்தது.

அவன் அழைப்பு மணியை அழுத்தியதும் "கௌன்?" என்ற ஒரு பெண்ணின் குரலுடன் கதவு திறந்து கொண்டது. முதலில் பெண்ணின் குரலுடன் பளீரென்ற ஒரு முகம் தெரிந்தது. பிறகு அதில் இழையோடிய



சோகம் புலப்பட்டது. கழுத்துப் பட்டை எலும்பு துருத்தி நிற்கிற ஒல்லி தேகவாகு. "நடராஜனைப் பார்க்கணும். என் பெயர் சக்திவேல். மெட்ராஸி லேந்து வரேன்."

"ஓ" என்றாள் அந்தப் பெண் சட்டென்று புரிந்து கொண்டவளாக. சற்று கவலையுடன் உள்நோக்கிப் பார்த்தாள்.

"இங்கே உட்காருங்க" என்று வரவேற்பறையைக் காண்பித்தாள். சின்ன வரவேற்பறையில் பிரதான மாகத் தெரிந்தது சுவரில் இருந்த புகைப்படம். இந்தப் பெண் நடராஜனு டன். இவளாகத்தான் இருக்க வேண்டும். கன்னமும் கதுப்புமாக. அம்மாவும் அப்பாவும் கல்யாணத் துக்குப் போயிருந்தார்கள். இவனுக்கு ஆபரேஷன் முடிந்து நான்கு மாதத்தில். அவனது படபடப்பை கவனியாதவள் போல் அவள் புன்னகைத்தாள். "நான் தான் சரளா. மிஸஸ் நடராஜன். உட்காருங்க. நா காபி கொண்டு வரேன்."

"எந்தவித உபசரிப்புக்காகவும் நா வரலே. அவனைப் பார்த்து பேசிட்டு நா கிளம்பணும்" என்றான் சிரமத்துடன். அவள் முகத்தில் புன்னகை மறைந்தது. கவலைச் சுருக்கங்கள் தோன்றின. அவனுக்கு அம்மாவின் நினைவு வந்தது. ஆனால் இவள் முகத்தில் பீதி இல்லை. வேறு என்னவோ.

"சரி வாங்க. பார்க்கலாம்' ஆனா பேசமுடியாது.

"நீங்க அப்படிச் சொல்றது உங்களுக்கு சுலபம்" என்று படபடத்த படி அவளை அவன் பின்தொடர்ந்து அடுத்த அறைக்குச் சென்றான். கட்டிலில் அமர்ந்திருந்த அந்த உருவத்தைப் பார்த்து அவனுக்குத் தூக்கிவாரிப்போட்டது. அவள் சொல்வது சரி. இந்த உருவத்திடம் பேசமுடியாது. மூளையின் இயக்கத்தை இழந்த வெறும் மாமிசப் பிண்டம் இது. மிதமிஞ்சிய ஏமாற்றம் அவன் நெஞ்சை ஆழ்த்திற்று. அடேய், இப்பவும் தப்பிச்சுட்டே.

அவன் அமர்வதற்காக அவள் நாற்காலியை இழுத்துப் போட்டாள். கட்டிலுக்கு மேல் நடராஜனின் புகைப்படம். ஸ்மார்ட்டாக பைலட் உடையில் வரிசைப் பற்கள் தெரியும் புன்னகையுடன். வானம் என் வசம் என்ற புன்னகை. பத்து வருஷங்களுக்கு முன்பு பாகிஸ்தான் எல்லையில் இருந்தபோது பெரியப்பா சொன்னது நினைவுக்கு வந்தது. இளரத்தம்.,

தனியா இருந்தபோது தெரியாத்தனமா தப்பு தண்டா நடந்திருக்கலாம். இப்படியாகும்ன்னு யாரு கண்டது?

"எத்தனை நாளா இப்படி?"

"ஆறு மாதமா."

அவன் தலையைக் குனிந்து கொண்டான். இங்கு வந்ததற்கு அர்த்தமே இல்லாமல் போய்விட்டதாகத் தோன்றிற்று. பிறகு திடீரென்று நினைவு வந்தவன்போல்...

''நீங்க? நீங்க தப்பிச்சிட்டீங்களா?'' என்றான். அவள் மிக லேசாக் புன்னகைத்தாள்.

''இல்லே. எப்படி தப்பிக்க முடியும்?''

அவள் முகத்தில் இருந்த அசாதாரண அமைதி அவனுக்கு அச்சத்தை அளித்து.

"குழந்தை இருக்கா?"

"இருக்கு. ஆனா நல்லவேளை அதுக்கு இல்லே. எங்க அம்மா அப்பாகிட்டே வளருது ஊர்லே.

"கட்டிலில் இருந்து நடராஜனின் உடம்பிலிருந்து உருமுவது போல ஓசை கேட்டது. அழும் குழந்தையை சமாதானப்படுத்துவதுபோல் அவள் அவன் மார்பைத் தட்டினாள்.

''உங்களுக்கு இவன்மேல கோபம் இல்லே?''

அவள் சிறிது மௌனத்துக்குப் பிறகு "இல்லே" என்றாள் நிதானமாக. உங்களுக்காக இவங்க துடிச்ச துடிப்பு எனக்குத் தெரியும். எனக்காப் பதறிப்போனது எனக்குத் தெரியும். தனக்காக இவங்க பயப்படலேன்னு எனக்கு நிச்சயமா தெரியும்."

சக்தி குழப்பத்திலே துவண்டு போனவனைப் போல் உட்கார்ந்திருந்தான்.

"இல்லே, எனக்குக் கோபம் இல்லை" என்றாள் அவள் மீண்டும். "எனக்கு ரொம்ப நல்ல புருஷனா இருந்திருக்கார். திருமணத்துக்குப் பிறகு இவர் எனக்குத் துரோகம் செய்யலே. எனக்குத் தெரியும். நா தீர்மானிச்சுட்டேன். ரெண்டு பேரும் சாகப் போறோம். அப்ப கோபப்பட்டு நிலைமையை மோசமாக்கிக்கக்கூடாது. என் வாழ்க்கையைக் கெடுக்கணும்னு இவர் என்னைக் கல்யாணம் செய்துக்கலே. உங்களுக்கு ரத்தம் கொடுத்தபோது இவங்களுக்கு விஷயம் தெரியாது. உடனடியா ரத்தம் செலுத்தலேன்னா நீங்க செத்திருப்பீங்க சக்தி. இன்னிக்கு நீங்க உயிரோட இருக்கிறது இவருடைய ரத்தத்தினாலே."

அவன் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான். அவள் சிரித்தாள். அபத்தமான உண்மையை நினைத்து அவனுக்கும் சிரிப்பு வந்தது.

அவள் சிரித்துக் கொண்டே தொடர்ந்தாள். 'நீங்க இன்னும் கொஞ்ச வருஷம் உயிர் வாழணும்னு இருக்கு. யோசிச்சுப் பாருங்க. உங்க ஆபரேஷன் சமயத்திலே நடராஜன் லீவிலே ஊருக்கு வந்ததும், அவசர நிலையிலே ரத்தம் தேவைப்பட்டதும், பெரியப்பா பையன் நான், ஒரே க்ரூப் ரத்தம். நான் தரேன்'னு இவர் முன்வந்ததும் எதேச்சையாவா நடந்திருக்கும்?''

**என் வாழ்க்கையைக் கெடுக்கணும்னு இவர் என்னைக் கல்யாணம் செய்துக்கலே. உங்களுக்கு ரத்தம் கொடுத்தபோது இவங்களுக்கு விஷயம் தெரியாது.**

அவன் திகைப்புடன் எழுந்தான்.

நடராஜன் உடல்மேல் இருந்த போர்வையை அவள் சரிசெய்தபடி "காபி சாப்பிடறீங்களா?" என்றாள்.

"சரி. நா இங்கே இரண்டு நாள் தங்கிட்டுப் போனா உங்களுக்குத் தொந்தரவு இல்லையே?"

அவள் முகத்தில் தெரிந்த சந்தோஷத்தைக் கண்டு வெகுநாட்களுக்குப் பிறகு அவனுக்கு மனசு லேசாயிற்று. வரவேற்பறையில் அந்த புகைப்படத்தைப் பார்த்தபடி இருந்த சோபாவில் இரவு படுத்து வெகுநேரம் கழித்து வந்த தூக்கத்தில் சிதறல் சிதறலாகக் கனா வந்தது. யேல் பல்கலைக்கழக புல்வெளியில் நடக்கிறான். வானவில்லைக் கையில் ஏந்திய படி அமெரிக்கன் கான்ஸலின் விஸா கௌன்டருக்கு முன் நிற்கிறான். ஒரு வெள்ளைக்கரம் ஒரு காகிதத்தை நீட்டுகிறது.

"ஸாரி விசா மறுக்கப்படுகிறது."

''உங்களுடைய ரத்தப்பரிசோதனை முடிவைப் பாருங்கள்."

கண்களை இடுக்கிப் பார்க்கிறான். விழிகள் பிதுங்குகின்றன. எச்.ஐ.வி. பாஸிட்டிவ்...

சக்தி புரண்டு புரண்டு முனகினான். தூர்தர்ஷனில் எய்ட்ஸைப் பற்றி மன்மதனும் ரதியும் உபதேசம் செய்கிறார்கள். எனக்கும் அதற்கும் சம்பந்தமில்லை. இதுவரை எந்தப் பெண்ணுடனும் படுத்ததில்லை. எந்த ஆணுடனும் முட்டாளே – அறுவை சிகிச்சை எப்பவாவது நடந்ததா? நடந்தது. ரத்ததானம் பெற்றாயா? ஆமாம். என் அண்ணன் அவன். பெரியப்பா மகன். நல்லவன். நடராஜன் செத்துப்போனப் புறம் உங்களை யார் பார்த்துப்பாங்க? யாராவது, இவரை நான் பார்த்துக்கறமாதிரி, யாராவது – இந்த நாட்டிலே மனுஷங்களுக்கா பஞ்சம்? கடவுளே, இவளால் எப்படி இப்படி சிரிக்க முடிகிறது? சீஸாவில் மேலே செல்லும் போது சிரிக்கிற பெண் மாதிரி.

அவன் ஊர் திரும்பியபோது அவனைக் கண்டு எல்லார் முகத்திலும் நிம்மதி தோன்றியது போலிருந்தது.

''அவங்க கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டாங்களா?'' என்று சுந்தரியிடம் ரகசியமாகக் கேட்டாள்.

"இல்லே" என்று அவள் சிரித்தாள்.

"விஷயத்தை மறைச்சுமா?"

"ஏன் மறைக்கணும்?" என்றாள் கோபமாக.

''ஜனங்களுடைய மனசை முதல்லேயே தெரிஞ்சுக்கிறது நல்லது. இவங்க இல்லேன்னா என்ன, மனுஷத்தனம் கொண்டவங்க வேற இல்லாமயா போயிடுவாங்க. இத்தனை பெரிய ஜனத்தொகையிலே?''

அவளுடைய சிரிப்பு சரளாவை ஞாபகப்படுத்திற்று. ஜன்னல் வழியே அவன் பார்த்தபோது சூரியனின் ஒளிப்பிழம்புகள் நாலாபக்கமும் பரவியிருந்தன. சத்தியத்துக்குக் கட்டுப்பட்ட மாதிரி பறவையினமும் மனித இனமும் இயங்க ஆரம்பித்தன. 'எதுவுமே எதேச்சையாக நடப்பதில்லை என்று தோன்றிற்று.

90. காமில் இசரோ



நல்வாழ்த்துகள்

# V.V.S. நல்லெண்ணை

**V.V. சண்முக நாடார் & சன்ஸ்**

*103, மெயின் பஜார், விருதுநகர், போன் : 43088, 43566 பேக்ஸ் : 44958*

நல் வாழ்த்துகள்

# கேஸ்கேட் மினரல் வாட்டர்

தயாரிப்பாளர்கள் : **வர்ஷா அக்வா மினரல்ஸ்**

109 ஏ, கோவிலூர் ரோடு, காரைக்குடி - 1. போன் : 33052

91. ஹென்றி மாடிசே





ஓவியம்: **நெல்சன்**

## சரஸ்வதி ராம்நாத்

இலக்கியப் பரிமாற்றம் என்ற சொல், காதிற்கு இனிமையாக இருப்பது போல் தோன்றுகிறது. மொழிபெயர்ப்பு என்றதும் வாசகர்களின் முகத்தில் ஏற்படும் அலட்சியமான ஒரு பாவத்தை நான் பலமுறை கண்டிருக்கிறேன். அதுபோல் மொழிபெயர்ப்பாளரும் 'ஐயோ பாவம்' என்று இரண்டாம்தரப் பிரஜையாகவே கருதப்பட்டு வருகின்றார். இந்த உண்மையை மறைக்கவோ, மறுப்பதற்கோ இல்லை. எழுத்தாளர்களிடையே கூட இதே மனோபாவம்தான் நிலவுகிறது.

இன்று எனது 73வது வயதில் வாழ்க்கையின் கடைசித் திருப்புமுனையில் நின்று, நான் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்கும் போது எனக்கே வியப்பாகவும் உள்ளது. தமிழிலும் இந்தியிலுமாக கிட்டதட்ட 50க்கும் மேற்பட்ட நூல்களை என்னால் இத்தகைய எதிர்மறையான சூழலில் மொழிபெயர்ப்பு செய்ய முடிந்திருக்கிறது. நூலாக வெளிவராத சிறுகதைகளும் (இருமொழியிலும்) கட்டுரைகளும் உள்ளன.

இத்துறையில் எனக்கு ஆர்வம் ஏற்பட்டது எப்படி? கூடத்து தாழ்வாரத்துக் கம்பத்தில் சாய்ந்தவாறு மாலைவேளைகளில் வாசகசாலையிலிருந்து கொணர்ந்த பங்கிம் சந்தர் சட்டர்ஜி, சரத் சந்திரர், தாகூர், ரமேஷ் சந்திரதத், பிரேம்சந்த் போன்றவர்களின் நூல்களைச் சிறுமியான நான் ரசித்துப் படித்துக் கொண்டிருப்பேன். விளையாட்டுகளில் எனக்கு அதிக நாட்டம் இருந்ததில்லை. அக்காலத்தில் 1935-ம் ஆண்டின் துவக்கத்திலிருந்து ஆனந்தவிகடன், கலைமகள், போன்ற பத்திரிகைகளில் மொழி பெயர்ப்புக் கதைகள், நாவல்கள் தொடர்களாக வெளிவந்து கொண்டிருந்தன. பைரவி, குமுதினி, அமூல்யன் என்ற பல பாத்திரங்கள் இன்றும் நினைவில் பசுமையாக உள்ளனர். அந்நாளில் வெளிவந்த பல்வேறு மொழிகளின் மொழிபெயர்ப்பு நூல்கள், தமிழுக்கு வளமும், சுவையும் கூட்டின. சாளரங்கள் திறக்கப்பட்டு, நம் நாட்டின் பல்வேறு மொழிகள், பிரதேசங்களின் கலாசாரங்கள், பழக்க வழக்கங்கள், அவர்களது எண்ணங்களைப் பற்றி நாம் புரிந்துகொள்ள முடிந்தது மட்டுமல்ல, நமது கற்பனை வீச்சும், சிந்தனையின் பரந்தநோக்கும் படைப்பின் தளமும்கூட செழிப்புற்றன. காண்டேகரின் நூல்கள். திரு: கா.ஸ்ரீ.ஸ்ரீயின் மொழிபெயர்ப்பில் வாசர்களைப் பெரிதும் கவர்ந்தன. த.நா. குமாரசாமி, த.நா. சேனாதிபதி போன்றவர்கள் வங்க மொழியிலிருந்து தாகூரின் படைப்புகளையும் பல்வேறு வங்க எழுத்தாளர்களின் படைப்

# இலக்கியப் பரிமாற்றத்துறையில் எனது அனுபவங்கள்

பாற்றலையும் வாசர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தது மகத்தான புணியாகும். இத்துறையில், குமுதினி, தஞ்சம்மாள், அம்புஜம்மாள், பிஸ். கிருஷ்ணசாமி, ரா.வீழிநாதன், செளரி போன்ற பல சிறந்த மொழி பெயர்ப்பாளர்கள் தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்த்துள்ளனர். மொழி பெயர்ப்பு நூல்களினால், தமிழ் மொழிக்கோ, இலக்கிய வளர்ச்சிக்கோ – பாதிப்பு ஏற்பட்டது என நான் கருதவில்லை. மாறாக பல்வேறு மொழியினரின் படைப்பாற்றலும், கற்பனைத்திறனும் படைப்பாளிகளுக்கு நல்லதொரு வளமான தாக்கத்தையே ஏற்படுத்தின. க.நா.சு. மேலை நாட்டின் பல்வேறு மொழிகளிலிருந்து நாவலாசிரியர்களைத் த்மிழுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

நான் சிறுமியாக இருந்தபோது படித்த கார்க்கியின் "தாய்" என்ற நாவல் என்னுள்ளே ஆழமான பாதிப்பை ஏற்படுத்தியது. இத்தகைய அருமையான பல மொழிபெயர்ப்பு நூல்கள்தான் என்னை இத்துறைக்கு ஈர்த்தன என நினைக்கிறேன். மேலும் அந்நாளில் காந்தீய சிந்தனைகளும், சுதந்திரப் போர்ராட்டமும் என்னை வெகுவாகக் கவர்ந்தன. கல்கி எழுதிய மகாத்மா காந்தியின் சுயசரிதை, ஏட்டிக்குப் போட்டி, சாரதையின் தந்திரம் என பல நூல்கள் எனக்குக் கிடைத்தன. நான் இந்தி மொழி கற்கத் துவங்கியது எனது பதிமூன்றாம் வயதில். தேசீய உணர்வும் எழுத்தாற்றலும் மிக்க ஒரு பெண்மணிதான் (திருமதி சம்பூரணம் அம்மாள் கிருஷாங்கினியின் தாய்) எனக்கு இந்தி கற்பித்தார். என்னுள்ளே அம்மொழியின் நான் படித்த பாடங்களும் நூல்களும் தேசீய உணர்வைத் தூண்டிவிட்டன. இந்தியா நமது நாடு, மொழிகள் பல இருந்தாலும் நாம் யாவரும் ஒருநாட்டு மக்கள் என்ற உணர்வு தலைதூக்கியது. கவிபாரதியின் பாடல்கள் தேசிய விழிப்புணர்வை மேலும் தூண்டிவிட்டன. கற்பதற்கு எளிதான மொழியான இந்தியின் மூலம் காந்திய சிந்தனையின் அலைவீச்சின் தாக்கத்திற்குப்பட்டவளாக நான் சிறந்த எழுத்தாற்றல் மிக்க படைப்பாளிகள், கவிஞர்களின் படைப்புகளைப் படித்து ரசித்தேன்.

ராஜா, மகாராஜாக்கள் பற்றிய அசாதரணமான கற்பனையுடன்கூட கதைகளிலிருந்து சாதாரண மக்களின் இன்ப துன்பங்கள், கிராமத்து விவசாயிகள் ஏழை எளியோரின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் படைப்புகள் இந்தி மொழியில் தோன்றலாயின. தமிழ் மொழியிலும் பல்வேறு இந்திய மொழிகளில் இத்தகையப் படைப்புகளின் மொழிபெயர்ப்பாக வெளிவந்து கொண்டிருந்தன. நான் படித்து என்னுள் பாதிப்பை ஏற்படுத்திய படைப்புகளை எனது தாய் மொழியில் தரவேண்டும் என்ற உந்துதுல், என்னை மொழிபெயர்ப்பாளராக்கியது எனலாம். முதலில் 1940லிருந்து சிறுகதைகள், கட்டுரைகள் என நான் பல்வேறு சிறு இலக்கியப் பத்திரிகைகளில் எழுதிக் கொண்டிருந்தேன். இரண்டொரு மொழிபெயர்ப்பு கதைகளும் வெளிவந்தன. மெல்ல மெல்ல மொழிபெயர்ப்புகள் பத்திரிகைகளில் வெளிவருவது குறைந்து கொண்டு வந்தன. ஒருவிதமான தேக்க நிலை ஏற்பட்டுவிட்டது.

நம் நாட்டு மக்கள் தமது தாய்மொழியைத் தவிர நம் நாட்டுப் பிறமொழி இலக்கியங்கள், படைப்பாளிகள், கவிஞர்களைப் பற்றி அறிந்து கொள்வது மிகவும் அவசியம். நமது அண்டை மாநில எழுத்தாளர்கள், கவிகள், அவர்களது படைப்புகள் பற்றியே அறிந்துகொள்ள முயற்சிக்காது நாம் உலக இலக்கியங்களைத் தமிழில் கொணர வேண்டும் எனக் கூறுவது வருந்துவதற்குரியது. மொழிபெயர்ப்பை இரண்டாம் தரமான படைப்பு என்று கூறும் நாம் உலக இலக்கியத்தை ஆங்கில மொழி பெயர்ப்புகளின் மூலமாகவே பெரும்பாலும் படித்து வருகிறோம். அவற்றின் மேன்மையை, படைப்பாற்றலைக் கண்டு வியக்கின்றோம். இன்றைய சூழலில் இந்திய மக்களிடையே ஒருமைப்பாட்டுணர்வு, இன்றியமையாதது என்பதை நாம் உணரவேண்டும். இலக்கியப் பரிமாற்றத்தின் மூலம்தான் இது சாத்தியம். நான் இந்தி மொழி மூலம்தான் பல்வேறு மாநில மொழிகளிலிருந்து சிறந்த படைப்புகளைத் தமிழில் தந்துள்ளேன். நம்நாட்டு மக்களின் உடை, உணவு, மொழிகளில் வேற்றுமைகளிலிருந்தாலும் குமாவூளிலிருந்து, கன்னியாகுமரி



வரை, கலாச்சார பண்பாட்டுத்தளம் ஏறக்குறைய ஒன்றானது தான் என்பதை அந்த இலக்கியங்களைப் படிக்கும்போது உணர்ந்து நான் வியந்ததுண்டு.

இந்திய மொழிகளில் மராத்தி, குஜராத்தி, சிந்தி, உருது போன்ற மொழிகள் இந்தியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவை. வங்க மொழியைப் பொறுத்த வரையில் இந்திய மறுமலர்ச்சி இலக்கியத்தில் அதன் பாதிப்பு பெருமளவு உள்ளது. இந்தி மொழியில் உருது மொழிச் சொற்கள் மற்றும் வடமொழிச் சொற்கள் தாராளமாக இடம் பெறுவதால் அதன் மொழிவளம் ஆழமும், விசாலமும் கொண்டுள்ளது. பேச்சு மொழிகள் எல்லா மொழிகளிலுமே வேறுபடுகின்றன. தமிழ்மொழி ஒன்றைத் தவிர இந்திய மொழிகள் யாவுமே தேவநாகிரி லிபியை யொட்டியே அமைந்துள்ளன. மெய் எழுத்துக் களின் நான்கு வேறுபட்ட ஒலிகள், மற்றும் இலக்கணம், வாக்கிய அமைப்புகள் கூட்டெழுத்துக்களின் அமைப்பில் அதிக வேறுபாடுகளில்லை எனலாம். தமிழ்மொழியைப் பொறுத்த வரை அடிப்படையிலேயே மெய் எழுத்துக்கள் ஒன்றுதான். உச்சரிப்பில் வேறுபாடுகள் இயல்பாய் ஏற்படுகின்றன. தேவநாகிரிலிபியியல் தமிழ் கூட்டெழுத்துக் களை எழுதுவது சிரமம். குறிப்பாக ஏ, வு, ற், று போன்ற ஒலிக்குறிகளைக் கொண்ட எழுத்துக்களை (உதாரணமாக - போயிற்று) எழுத இயலுவதில்லை. இந்தியிலுள்ள வளமான பதச்சேர்க்கைகள் (சொலவடைகள்) பதப்பிர யோகங்கள், வாக்கிய அமைப்புகள் தமிழிலிருந்து முற்றும் வேறுபடுவதால் தமிழிலிருந்து இந்தியில் மொழிபெயர்க்கும் போது சிரமம் தருகின்றன. இதில் ஒரு விஷயம் என்னை வியக்கச் செய்கிறது. பழமொழிகள் இந்திய மொழிகள் யாவற்றிலும் கிட்டத்தட்ட ஒரேமாதிரிதான் உள்ளன. இலேசான வேறுபாடுகள்தான்.

தமிழ், இந்தி மொழிபெயர்ப்பாளர் என்ற முறையில் சில விஷயங்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்தியில், தாய்மொழி இந்தி அல்லாத எழுத்தாளர்கள் நிறையவே உள்ளனர். எனினும் அவர்கள் வடநாட்டி லேயே வாழ்வதால் பேச்சுமொழிகள், வட்டாரமொழிகளில் ஓரளவு பரிச்சியமுள்ளவர்களாக இருப்பதால் இந்தி இலக்கியத்தில் அவர்களது படைப்புகள் தாராளமாக ஏற்கப்படுகின்றன. அவர்களுக்குக் கிடைக்கும் ஆதரவும் வரவேற்பும் தென்னாட்டினருக்குக் குறிப்பாக தமிழ் மொழி பெயர்ப்பாளர்களுக்கு கிடைப்பதில்லை. மலையாளம், கன்னடம், தெலுங்கிலிருந்து நிறைய நூல்கள் இந்தியில் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளன. கன்னடத்தின் பிரபல எழுத்தாளர்கள், கவிஞர்கள், மலையாள மொழியின் படைப்புகள், கவிதைகள் இந்தி மொழியி னருக்கு அறிமுகமாகியுள்ளன. தமிழைப் பொறுத்த வரையில், இத்தகைய நிலையில்லை எனலாம். எனது முயற்சியில் மூன்று சிறுகதைத் தொகுதிகள், அகிலனின் 'பெண்' பெரியசாமித் தூரன் அவர்கள் தொகுத்த ''பாரதிய கட்டுரைகளின் சுருக்கமான 'கவிபாரதியின் வலிதறிபந்த்' என்ற தொகுப்பு, கு.சின்னப்பாரதி அவர்களின் 'சர்க்கரை' எனும் நாவல் மற்றும் தமிழின் சிறந்த சிறுகதை ஆசிரியர்களின் சிறுகதைகள், 'ஆதவனின் சிறுகதைகள்',

'கம்பராமாயணம்', இந்திய நதிகளைப் பற்றிய நூல்களான கங்கை, யமுனை, கோதாவரி, காவேரியின் கதைகள் ஆகியவை தமிழிலிருந்து நான் மொழிபெயர்த்து வெளிவந்துள்ள நூலகளாகும். இவையாவும் புத்தக வடிவில் வெளிவநதுள்ளன. சமீபத்தில் இளைய தலைமுறை கவிஞர்களின் கவிதைகளை மொழி பெயர்ப்புகள், 'சமகாவீன் பாரதிய சாகித்யா' என்னும் இரண்டு மாதத்திற்கொருமுறை சாகித்யஅகாதமி வெளியிடும் இலக்கியப் பத்திரிகைகளில் வெளி வந்துள்ளன. சமதாவீன் பாரதீய சாகித்திய மிகத்தரமான இலக்கியப் பத்திரிகை. இதில் இந்தியமொழிகளின் சிறுகதைகள், கவிதைகள், நூல் விமர்சனங்கள் ஆய்வுக்கட்டுரைகள் எனப்பலவும் வெளியாகி, நமக்கு இந்திய மொழி இலக்கியங்களை ஓரளவு பரிச்சியப் படுத்துக்கின்றன. இது மிகப் பாராட்டத்தக்க முயற்சி. இத்துறையில் இன்னும் நிறைய உற்சாகமும் ஆர்வமும் கொண்டவர்கள் பணியாற்ற முன்வரவேண்டும். அரசின் ஆதரவும் இதற்குத் தேவை. இந்தியில் மொழி பெயர்க்கப்படும் படைப்பு களுக்குத் தக்க ஆதரவும் வரவேற்பும் தரக்கூடிய சூழல் தமிழ்நாட்டிலோ வடநாட்டிலோ தற்சமயம் இல்லை என்பது வருந்தத்தக்கது. வெளியீட் டாளர்கள், பத்திரிகையாளர்களின் ஆதரவு இன்றியமையாதது. பஞ்சாபி, உருது, மராத்தி போன்ற மொழிகளின், இந்தி எழுத்தாளர்களின் படைப்பு களிலே அவரவர்களுடைய தாய் மொழியின் பாதிப்புகள், கொச்சை யான வார்த்தைகள், வசவுகள், மரபுச் சொற்கள் பரவலாகக் காணப்படு கின்றன. தமிழ் மொழி பெயர்ப்பாளர் களின் இந்தி மொழியாக்கம் என்று வரும்போது, வெளியீட்டாளர்கள். பத்திரிகை ஆசிரியர்களிடம் ஒருவித மாற்றாந்தாய் மனோபாவம் வந்துவிடு கிறது. இலக்கியத் துறையில் இலக்கியப் பரிமாற்றம் விரிவான. சகஜமான முறையில் நடைபெற்று ஒருமைப் பாட்டு உணர்வு மேலிடவேண்டு மெனில் தமிழ் - மற்றும் இந்தி இலக்கிய வளர்ச்சியில் அக்கரை கொண்டுள்ளவர்களின் மனோபாவத்தில் மாற்றம் ஏற்பட வேண்டும்.

◆◆

**மொழிபெயர்ப்பு நூல்களினால், பல்வேறு மொழியினரின் படைப்பாற்றலும், கற்பனைத்திறனும் படைப்பாளிகளுக்கு நல்லதொரு வளமான தாக்கத்தையே ஏற்படுத்தின.**

◆◆

மொழிபெயர்ப்புத்துறை விரிவானது, இத்துறையில் ஆற்றவேண்டிய பணி நிறையவேயுள்ளது. இராமயணத்தை எடுத்துக் கொண்டால் நம்நாட்டின் பல்வேறு மொழிகளிலும் இராமனின் கதையைக் கவிஞர்கள் தங்களது கற்பனைத் திறன், படைப்பாற்றலின் மூலம் அந்தந்த மாநிலம், மொழியின் இயல்பு, சூழல், கலாசாரம் பின்னணிக் கேற்ப மிக அற்புதமாகவே படைத்துள்ளன. இந்திய மொழிகளிலுள்ள இராமாயணக் கதைகளைத் தமிழுக்குத் தரவேண்டும் என்ற ஆவல் எனக்குண்டு. அதற்கான வசதிகளும் வாய்ப்பும் கிட்டவில்லை. தமிழிலிருந்து சிறந்த படைப்புகள் இந்தி மொழியில் வெளிவரவேண்டும். இதன் மூலம் பல்வேறு இந்திய மொழிகளிலும் அவைகள் வெளிவந்துவிடும். நேஷனல் புக்டிரஸ்ட், சாகித்திய அகாதமி, ஞானபீட பிரசுராலயம் ஆகியவை இத்துறையில் மிகச் சிறப்பான பணி ஆற்றிவருகின்றன. மொழி பெயர்ப்புத் துறையின் வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமாகப் பணியாற்றி வருகின்றன. மொழிபெயர்ப்பாளர்களுக்கும் ஆதரவும், உற்சாகமும் கிட்டுகின்றது. தரமான படைப்புகள் வெளிவருகின்றன. சிறந்த மொழிபெயர்ப்பாளர்களை உருவாக்க சாகித்திய அகாதமி அதற்கென தனியான அமைப்பை ஏற்படுத்தி பயிற்சி தருகின்றது என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

இந்தியில் வெளியாகும் மொழிபெயர்ப்புகளுக்கு நூலகங்களின் ஆதரவுதேவை. இல்லையெனில் பிரசுரகர்த்தர்கள், தமிழ் மொழிபெயர்ப்புகளை வெளியிடத் தயங்குகின்றனர். பிறமொழிகளில் இந்நிலை இல்லை. மொழியாக்கம் செய்யப்படும் நூல்கள் கல்லூரிப்பாடத் திட்டங்களில் இடம் பெறுகின்றன. நூலகங்களில் வாங்கப்படுகின்றன என்ற நிலையில் பிரசுரகர்த்தர்களும் உற்சாகமாக அந்நூல்களை வெளியிட முன் வருகின்றனர். தமிழைப் பொறுத்தவரையில் நாம் ஒதுங்கிப் போவதால் பின்தங்கிப்போய் விடுகிறோம். மொழிபெயர்ப்புகளின் மூலம்தான் தமிழ் இலக்கியம், படைப்பாளிகளின் சிறந்த படைப்புகள் இந்திய மக்களை அடைய முடியும். அறிமுகமும், பரிச்சயம் இன்றி நமது இலக்கியவளம் பற்றி பிறர் எவ்வாறு அறிந்துகொள்ள இயலும்?. இலக்கிய பறிமாற்றத்திற்கு மொழிபெயர்ப்பு ஒரு பாலமாகும். இதன்மூலம் புதிய பார்வை, புதிய கண்ணோட்டம், கற்பனைகளை வளரும் ஆக்கப்பூர்வமான இப்பணி யில் ஈடுபட்டுள்ள மொழிப்பெயர்ப் பாளர் என்ற முறையில் மொழி பெயர்ப்பு பற்றி எனது சில கருத்துக் களைச் சொல்ல விரும்புகிறேன்.

படைப்பிலக்கிய மொழி பெயர்ப்புகளைத்தான் நான் இதுவரை செய்துள்ளேன். மொழிபெயர்ப் பாளருக்கு இருமொழிகளின் புலமையும், எழுத்தாற்றலும், இருத்தல் அவசியம். ஏன் எனில் மொழி பெயர்ப் பும் ஒரு விதத்தில் படைப்பாக்கம் தான். பார்க்கப்போனால் ஓர் விதத்தில் மூல ஆசிரியராக மறுபிறவி எடுக்க வேண்டும். மூல ஆசிரியரின் நடை, மொழி, ஆற்றல், அங்கதம், ஆழ்ந்த கருத்துக்கள் எனப் பலவற்றையும் முதலில் புரிந்துகொள்ளவேண்டும். மூலநூல் எழுதப் பட்டுள்ள பின்னணி, அதன் கலாசாரம், பழக்க வழக்கங் களைப் பற்றியும், தெரிந்து கொள்ளவேண்டியது மிக அவசியம். மூல நூலிலிருந்து பிறழாமல் கவனத்துடன் அதன் முழு அழகையும், மொழி பெயர்ப்பு மூலம் வெளிப்படுத்தவேண்டும். நாமே சுதந்திரமாக செயல்பட்டு மூல ஆசிரியர் கருத்துகளை, வாசகங்களை மாற்றி எழுதிவிடுவது மிகவும் தவறு. மூல நூலை அடியொற்றிச் சொல்லவேண்டும். அதன் கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டு அதேநடையில் முடிந்தவரை அதேசொற்களில் தருவதுதான் மொழியாக்கத்தின் சிறப்பாகும். இசையில் ஒரு ரிதம் இருப்பதுபோல் ஒரு படைப்பிலும் அதன் சூழல், கட்டுக்கோப்பு, பாத்திர அமைப்பு ஆகியவற்றில் ஒரு தாளக்கட்டு இருக்கும். அது குலையாமலிருந்தால் தான் வாசர்களுக்கு மொழிபெயர்ப்பைப் படிக்கும்போது மூலநூலைப் படிப்பது போன்ற உணர்வு ஏற்படும். ரசிப்பும், சுவையும் கூடும்.

ஒருமொழிபெயர்ப்பாளர் தனது கற்பனைத் திறனையோ, சொல்லாற்றாலையோ, வெளிப்படுத்த மொழிபெயர்ப்பை ஒரு சாதாரணமாக நினைத்துவிடக்

கூடாது. கத்திமுனையில் நடப்பது போன்ற எச்சரிக்கை யுடன் மொழியாக்கம் செய்யவேண்டும். நம் விருப்பம் போல் ஃப்ரீ டிரான்ஸ்லேஷன் செய்ய முற்பட்டால் பாவம் மூல ஆசிரியர் காணாமல் போய்விடுவார். மொழி பெயர்ப்பாளர் தனது தனித்திறமையை வெளிப்படுத்தும் ஆர்வத்தைக் குறைத்துக் கொண்டு மூலப்படைப்பை யொட்டி தனது படைப்பாற்றலை வெளிப்படுத்தும் பொழுதுதான் நல்லதொரு வெற்றிகரமான மொழி பெயர்ப்பு உருவாகிறது. மொழியைப் பொறுத்தவரையில் எந்தமொழியில் மொழி பெயர்க்கிறோமோ, அம்மொழி யின் இலக்கணம், இயல்புக்கேற்ப நாம் எழுதலாம். ஒரு சொல்லுக்கு பல அர்த்தங்கள் உண்டு. குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் ஒரு வார்த்தை வெளிப்படுத்தும் உத்வேகம், அல்லது உணர்ச்சிக்கேற்ப அதன் அர்த்தமும், பாவமும் மாறும் என்பதையும் மனதிற் கொண்டு எளிமையான இயல்பான நடையில் மூலத்தின் கருத்துச் சிதைந்து விடாமல் மொழி பெயர்ப்பதில்தான்

◆ ◆

**மொழிபெயர்ப்பாளருக்கு இருமொழிகளின் புலமையும், எழுத்தாற்றலும், இருத்தல் அவசியம். ஏன் எனில் மொழிபெயர்ப்பும் ஒரு விதத்தில் படைப்பாக்கம் தான்.**

◆ ◆

ஒரு மொழி பெயர்ப்பாளரின் திறமை வெளிப்படும். கவிதைகளின் மொழிபெயர்ப்பில் பின்னும் ஆழ்ந்த திறமையும், கவித்துவம் நிறைந்த சொல்லாட்சியும் தேவைப்படுகிறது. தற்சமயம், உரையாடல்களைப் பேச்சு மொழியில், பொது மொழியில் தரலாம் என்றதொரு கருத்துப் பேசப்படுகிறது. இதில் எனக்கு அவ்வளவாக உடன் பாடில்லை. கடினமான இலக்கியநடை தேவையில்லை. எளிய சொற்களில் சாதாரணமான பேச்சு மொழி நடையை மூல ஆசிரியர் பயன் படுத்தி யிருந்தால் அதை அப்படியே மொழி பெயர்த்து தரலாம். எல்லா மொழி களிலுமே பேச்சு மொழி, வட்டாரத் திற்கு, வட்டாரம் மாறுபடும். மூல நூலின் உரையாடல்களை ஒரு மொழி பெயர்ப்பாளர் தனது வட்டார மொழியில் தரமுற்பட்டால் மூல நூலின் அமைப்பும் கட்டும் குலைந்து விடுவது மட்டுமல்ல. ஏனைய வட்டாரத்து மக்களுக்குப் புரியாமலும் போய் விடலாம். மூல ஆசிரியர் வட்டார மொழியில்



எழுதியிருந்தால் நாமும் அவ்வாறே மொழி பெயர்க்கலாமே தவிர பொதுவாக எல்லோருக்கும் படித்ததும் புரியக்கூடிய பழகு தமிழில் எழுதுவதுதான் சிறந்தது.

முடிவாக – இத்துறைக்கு எழுத்தாளர்கள் ஈர்க்கப் படாமல் போவதற்குரிய காரணங்களையும் உங்கள் முன் வைக்கிறேன். மொழி பெயர்ப்புக்கு இலக்கிய உலகில் அதற்குரிய இலக்கிய அந்தஸ்து இன்னமும் தரப்படாமலிருக்கிறது. மொழிபெயர்ப்பு நூல்களுக்கு அது எத்தனை சிறந்ததாக பயனுள்ளதாக இருந்தாலும், பரிசுகளோ பாராட்டுகளோ தரப்படுவதில்லை என்பதைக் குறிப்பிடவிரும்புகிறேன். அதுவும் தமிழில் மொழி பெயர்ப்பாளருக்கு கூலி தரப்படும் நிலை மாறவேண்டும். அவர்களது எழுத்தாற்றலுக்கு உரிய மரியாதையும் ஊதியமும், அளிக்கப்பட்டால்தான் இளம் மொழிபெயர்ப்பாளர்கள் ஆர்வத்துடன் இத்துறையில் ஈடுபடுவார்கள். என்னைப் பொறுத்தவரையில் எனக்கு இத்துறையில் ஆர்வமும், இலட்சிய நோக்கும், பிடிப்பும் இருந்ததால் நாற்பத்தைந்து வருடமாக இன்றும் ஆர்வத்துடன் செயல்பட்டுவருகிறேன். ஆனால் இந்நிலை மாறவேண்டும். மொழி பெயர்ப்புக்களுக்கு வளமான எதிர்காலம் அமையவேண்டும். தமிழுக்கு நான் ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களை பல்வேறு மொழிகளிலிருந்து தந்துள்ளேன். இவற்றில் சமீபத்தில் வெளியான 'இந்தியப் பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள்', 'இந்தியச் சிறுகதைகள்', 'இந்திய நாடகங்கள்', 'மகாபாரதத்தில் பெண்ணியம்' (நந்தகிஷோர் ஆச்சார்யாவின் இரு இந்தி நாடகங்களின் தொகுப்பு) அக்கேஞாவின் 'நமக்குநாமே அன்னியர்கள் – பிரேம்சந்தின்' கோதானம்' எனக்கு மிகுந்த மனநிறைவைத் தந்த நூல்களாகும்.

□□□

# முகங்களைத் தேடுகிறேன்





முகங்களைத் தேடுகிறேன்
வார்த்தைகளைவிடவும் உண்மையான
ரசிக்கத்தக்கதில்லையெனினும் சொரூபமான
வேஷங்களைக் கலைத்துவிடும் நிர்பந்தங்கொண்ட
மாறும்பாவங்களில் நேர்மை நிறைந்த
யதார்த்தங்களுடனான
அன்பின் குளுமையை உணர வைக்கிற
முகங்களைத் தேடுகிறேன்.
என் முகத்தையும் அவ்வப்போது
கண்ணாடியில் பார்த்துக் கொண்டே...

**ரவிசுப்பிரமணியன்**

ஓவியம்: **மருது**



92. மௌரிஸ் வ்லாமின்க்

நல் வாழ்த்துகள்

ஹோட்டல் ஆனந்த், ஹோட்டல் அன்னபூரணா,
ஹோட்டல் ஆரியபவன், ஸ்ரீ பாலாஜி நிவாஸ்,
சுப்பையா ஸ்டோர் மளிகை (கிட்டங்கி கடை) எஸ்.எஸ். மளிகை,
ஆர்.கே. அன்கோ, ஏ.ஜெ. பாத்திர வாடகை நிலையம், காரைக்குடி

# படைப்பின் தனிமை : புதுமைப்பித்தன் சிறுகதைகள் பற்றி சில குறிப்புகள்



ஓவியம் : **மருது**

## ரவிக்குமார்

தத்துவம் நம்மை சிந்திக்க வைக்கிறது. இலக்கியமோ நம்மை பற்றியெரியச் செய்கிறது. புதுமைப்பித்தனின் படைப்புகளை அணுகும் எவருக்கும் இதை விளக்கிச் சொல்லவேண்டிய தேவை இருக்காது. வாழ்வில் பிடிபடாத அதிசயத்தைப் பிரமிப்போடும் வேட்கை யோடும் பார்த்து அதன் சிடுக்குகளைத் தொடர்ந்து தொடர்ந்து சென்று, அந்த சாகசத்தில் சிலிர்த்தும், குழம்பி விரியும் அதன் அர்த்தமில்லாத் தன்மையில் சலித்தும் புதுமைப்பித்தன் கூறிச் சென்ற கதைகள் அவர் ஆசைப்படாத நித்தியத்துவத்தை சாத்தியப்படுத்துகின்றன.

ஒளிகொண்ட சொற்கள் தனிமையில் கிடக்கும்படி சபிக்கப் பட்டுள்ளன. எதிர்காலத்திலிருந்து நிகழ்காலத்தை நோக்கி எரிகற்களாய் பாயும் அவற்றைக் காணும்போது தர்க்கம் மறந்துபோகிறது. தனக்குப் பிரியமான ஒருவரைத் தவறவிட்டு ஒரு மனிதன், தான் எதிர்கொள்ளும் எல்லா முகங்களிலும் தவறவிட்ட அந்த முகத்தைத் தேடுவது போல, அதைக் கண்டு பிடித்துவிட்டதாகத் தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்வது போல ஒரு நிலையை உண்டு பண்ணுகின்றன அந்தச் சொற்கள். தனிமையான, தனித்துப்போன, ஒருமைக்குணம் கொண்ட படைப்பு கள்– இப்படியான ஒளிகொண்ட சொற்களின் சேர்க்கை ககளேயாகும்.

படைப்பின் தனிமையென்பது, சமூக அழுத்தத்தால் ஒரு மனிதனுக்கு உருவாக்கப்படும் தனிப்பட்ட அடையாளத்தைப் போன்றதல்ல. ஒரு மனிதன், அவன் செய்வதற்கும் சொல்வதற்கும் பொறுப்பேற்க வேண்டுமென்கிற சமூக நிர்ப்பந்

தத்தால் உருவாகிறது அந்த அடையாளம். சமூக நிர்ப்பந்தத்தால் உருவாக்கப்படும் இந்த அடையாளம், அடுத்து -பிறரிடமிருந்து தன்னை வேறுபடுத்திக்காட்டிக் கொள்ளும் இச்சையாக மாறும்போது தனி மனிதவாதமாக உருவெடுக்கிறது. ஆனால் ஒரு படைப்பின் தனிமை என்பது அப்படியானதல்ல.

படைப்பாளி அவரது படைப்பிலிருந்து இங்கே விடுவிக்கப்படுகிறார். அது அவர் அறியாமலேயே நிகழ்கிறது. தனது படைப்பு முற்றுப் பெற்றுவிட்டதா இல்லையா என்பதை அவர் உணர்வதே இல்லை. ''ஒரு கலைப் படைப்பு ஒருபோதும் முற்றுப்பெறுவதில்லை'' என பால் வலெரி என்ற கவிஞர் குறிப்பிட்டார். ஏனெனில், கலைஞன் அதற்கு முற்றுப்புள்ளி வைக்க முடிவதே இல்லை. வரையறுக்கப்பட்டதொரு வெளிக்குள் அந்த படைப்பு முடிந்துவிடுகின்றது. சூழல் தற்காலிக மாக ஒரு படைப்பை முடித்து வைக்கலாம். ஆனால், அங்கு விட்டதைக் கலைஞன் வேறொரு இடத்திலிருந்து தொடர்கிறான்.

ஒருவிதத்தில் படைப்புகள் என்பது புறவாழ்வுக் கெதிரான ஒரு செயல்பாடாக அமைகிறது. படைப்புக் குள் உருவாக்கப்படும் வெளி என்பது வெளியற்ற வெளியாகும். அது, யதார்த்த வெளியாகவும் இல்லாமல் கற்பித வெளியாகவுமில்லாமல் இருக்கிறது. ஒரு கண்ணாடிக்குள் பிரதிலிக்கப்பபடும் பிம்பத்தினுள் தெரியும் இடத்தைப் போல இடமற்ற இடமாக இருக்கிறது அது. கண்ணாடிக்குள் நாம், இல்லாத நம்மைப் பார்க்கிறோம். இங்கே நாமும் யதார்த்தத்தில் இருக்கிறோம். கண்ணாடியும் இருக்கிறது. ஆனால், கண்ணாடிக்குள் தெரியும் பிம்பம்மோ இல்லாது இருக்கிறது. வெளியற்ற வெளிக்குள் தெரியும் பிம்பத்திலிருந்து யதார்த்தத்தில் நிற்கும் நம்மை நாம் நோக்குகிறோம். வெளியற்ற வெளியில் பட்டுத்தெறிக்கும் பார்வை நம்மை வடிவமைக்கிறது.

நிர்ணயிக்கமுடியாத, முடிவற்ற இந்த நிலை மனத்தின் முடிவற்ற நிலையுடன் தொடர்பு கொண்டிருக் கிறது. இப்படிச் சொல்வது கலைப் படைப்பை சிதிலப்பட்டதாக அர்த்தம் கொள்வதாகாது. இத்தகைய ஒருமைத் தன்மைதான் ஒரு படைப்பை மற்ற எதுவொன்றாலும் மாற்றீடு செய்ய முடியாத நிலைமை உண்டாக்குகிறது.

யாருமே படிக்கமுடியாது, எவரும் புரிந்துகொள்ள முடியாது என்கிற அர்த்தத்தில் இந்த ஒருமைத் தன்மையை எடுத்துக்கொள்ளக் கூடாது. மாறாக, அந்தப் படைப்பு தன்னைத் திறந்து வைத்திருக்கும். அதை வாசிக்கும் ஒரு வாசகன் தானும் அப்படைப்பின் தனிமைக்குள் அமிழ்கிறான். அந்தப் படைப்பின் பலாபலன்களுக்கு படைப்பாளியைப் போல வாசகனும் தன்னை ஒப்புக் கொள்கிறான்.

ஒரு படைப்பாளி தனது பூரணமான படைப்பை ஒருபோதும் படிப்பதில்லை. படைப்பு என்பது இவ்வாறாக அவன் வாழவே முடியாத ஒரு இடமாக– இடமற்ற இடமாக தோற்றம் தருகிறது.

புதுமைப்பித்தன் படைப்புகள் பலவற்றிலும் இத்தகைய முற்றுப் பெறாது, நிர்ணயமற்ற தன்மை உருவாக்கும் தனிமையை நாம் உணரமுடியும். எங்கே துலங்கு கின்றன, எங்கே முடிகின்றன என்பதை அனுமானிக்க முடியாத வேகத்தோடு தத்திச்செல்கின்றன அவரது சொற்கள்.

''சிற்பியின் நரகம்'' முன் வைக்கும் காட்சிகள் அவை சடார் சடாரென்று மாறி விரியும்போது பின்னிச்செல்லும் தத்துவங்கள். சாத்தன் திடுக்கிட்டு விழிக்கிறான். என்ன பேய்க்கனவு! சீ என்று விபூதியை நெற்றியில் அணிந்துகொள்கிறான். பைலார்க்கஸின் நினைவு வருகிறது. சாத்தனின் மனம் சாந்தி பெறவில்லை. இப்படி கதை முடிகிறது. ஆனால் அங்கிருந்த இழைகளை எடுத்து மற்றவற்றோடு பிணைத்து கதையைத் தொடரும்படி நிர்ப்பந்திக்கப்படு கிறான் வாசகன்.

''கலியாணி'' என்கிற படைப்பும் இப்படித்தான். முடிவற்ற ஒரு முடிவை நம்மிடம் தந்துவிட்டு நகர்கிறது. அர்ச்சகருக்கு இரண்டாம் தாரமாய் வாழ்க்கைப்பட்டுவரும் கலியாணி, இயற்கையில் பரிபூரண சக்தியும் சோபையும் கொந்தளிக்கும் நிலையில் உள்ளவள். ஆனால் அர்ச்சகருக்கு அது புரியவில்லை. சுந்தரசர்மா என்கிற ஓவியர் அங்கு வந்து சேர்கிறார். அவளது உள்ளத்து உணர்வுகளைப் புரிந்துகொள்கிறார். மனித நாற்றமே அற்ற இடத்திற்குச் சென்றுவிடுவோம் என அவளை சர்மா அழைக்கிறார். ''ஐயோடி அது முடியாது'' என்கிறாள் கலியாணி. ''கலியாணியின் வாழ்க்கை அலையில் ஒரு குமிழி உடைந்துபோயிற்று'' என்ற வரியோடு முடியும் அந்தப் படைப்பு, அடுத்து தோன்றும் குமிழ்களைப் பற்றிய கற்பனையை வாசகனிடத்தில் விட்டுவிடுகிறது.

படைப்பாளி தான் விரும்புவது போல் தனது படைப்பை முன்வைக்க விரும்புகிறான். ஆனால் அந்த முயற்சியில் இறுதியில் அவனுக்குக் கிடைப்பது வார்த்தைகளின் கூட்டம் தான். மற்றொரு படைப்பில் தனது எண்ணத்தை ஈடேற்றிக்கொள்ள முடியுமென அவன் நம்புகிறான். ஆனால் படைப்போ அவனை ஒதுக்கி உதாசீனப்படுத்திவிட்டு தன் போக்கில் சென்றுவிடுகிறது. இப்படித்தொடரும் படைப்புச் செயல் ஒரு விநோதமான முரண்பாட்டை உண்டாக்குகிறது. மரணத்தை வெல்லும் நித்தியத்துவம் பற்றிய கற்பனையில் ஆசுவாசப் படுவதற்கு விழையும் படைப்பாளி அந்தப் படைப்புச்செயலின் இறுதியில் மரணத்தையே எதிர்கொள்கிறான். முற்றுப்பெற்ற தனது படைப்பைக் காண அவன் உயிரோடு இருப்ப தில்லை. இதையே வேறுவிதமாகக் கூறினால், ஒரு படைப்பாளி தனது பூரணமான படைப்பை ஒருபோதும் படிப்பதில்லை. படைப்பு என்பது இவ்வாறாக அவன் வாழவே முடியாத ஒரு இடமாக– இடமற்ற இடமாக தோற்றம் தருகிறது. இப்படி தனது படைப்பைத் தான் வாசிக்க முடியாத ஒரு நிலைதான் படைப்பாக்கம் உருவாக்கித்தரும் வினோத விதி. இங்கே, தான் வாழமுடியாத இடமற்ற இடத்தை எழுத்தின் மூலமாக எட்ட முயற்சிக்கும் படைப்பாளிக்கு

எழுதுவது தவிர வேறு மாற்றம் கிடையாது, எழுதும்போதே விலகிச் செல்லும் படைப்பு மீண்டும் அவனைத் தனிமையிலேயே கிடக்கும்படி சபிக்கிறது. இப்படியாக, தனது படைப்பாக்கச் செயல்பாட்டின் இறுதியில், மீண்டும் தொடக்க நிலைக்கே அவன் வந்து சேர்கிறான்.

தனது படைப்பை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாத ஒரு நிலைதான் அவனை மீண்டும் மீண்டும் எழுதத்தூண்டுகிறது. ''படைப்பாளனின் நோக்கம் அவனது வாழ்க்கையோடுதான் முடிகிறது என்று சொல்வது, அவனது நோக்கத்தினூடாக நித்தியத்துவம் என்னும் பேரழிவை நோக்கி அவனது வாழ்க்கை பாய்ந்து செல்கிறது, என்ற உண்மையை மறைத்துவிடுகிறது'' என்றார் மாரீஸ் ப்ளான்ஷொ. (Maurice Blanchot)

எழுதுதல் என்கிற வினை எழுத்தாளனின் தான் என்ற சுயத்துக்கும், வார்த்தைக்கும் இடையிலான பிணைப்பைத் துண்டித்துவிடுகின்றன. இதனால் எழுத்தாளன் மற்றவர்கள் பேசாத ஒரு மொழியைப் பேச வேண்டியதாகிறது. அந்த மொழி யாரையும் நோக்கியதல்ல, அது எதையும் வெளிப்படுத்திக் காட்டுவதுமில்லை. அது படைப்பாளியானவன் தன்னை, தனது அடையாளத்தைத் தொடர்ந்து அழித்துக்கொள்ளும் செயல்பாட்டின் விளைபொருளாகத் தோற்றம் கொள்வது. புதுமைப் பித்தனின் படைப்புகளை வாசிக்க மொழி பற்றிய இத்தகைய அணுகுமுறை அவசியமாகும்.

''நித்தியத்துவத்துக்கும் மரணப் பாதையின் சுழலுக்கும் மத்தியிலுள்ள பிளவுக்கோட்டின் எல்லை வெளியான இடைவெளியில் நின்று-அதாவது, ஆசையற்ற ஒரு குழந்தையின் மனநிலையில்'' புதுமைப்பித்தனின் படைப்புகளை அணுகுவது முக்கியம். மாறாக, ஒருமைத்தன்மை கொண்ட இத்தகைய படைப்புக்களைத் தத்தமது 'அரசியல் பரிவர்த்தனைக்குள், இழுத்துப்போடச் செய்யப்படும் முயற்சிகள், பிரம்மராட்சஸ் கதையின் முடிவில் எஞ்சும் எலும்புக் கூடுகளைப்போல வெறும் கோட்பாடுகளாகவே எஞ்சிக்கிடக்கும். ●

## கற்க வேண்டியது ஏராளம் ஏராளம்!

எல்லை சொல்ல முடியாத அனுபவங்கள், ஆழ்ந்த, மிக விரிந்த படிப்பு - இப்படி வாழ்நாள் முழுவதும் கற்றுத்தேர்ந்த கார்க்கி, ஒருபோதும் தன்னைக் கற்று முடித்தவர் என்று கருதிக் கொண்டதே இல்லை. தன்னைச் சுற்றியுள்ள மக்களிடமிருந்தும், படைப்பாளர்களிடமிருந்தும் மேலும் மேலும் கற்றுக்கொள்ள ஆசைப் பட்டார். தனது நாடகப் படைப்புக்கள் பற்றிக் குறிப்பிட்டார், ''நாடகங்கள் எழுத முயன்றேன், ஆனால் ஒன்றுகூட உருப்படியாய்த் தேறவில்லை... எனக்கு நாடகம் எழுதவரவில்லை என்பதுதான் உண்மை...'' கார்க்கி இவ்வாறு சொன்னதும் அருகில் இருந்த திறனாய்வாளர் அலெக்ஸாண்டர் வோரோன்ஸ்கி மறுத்தார்: ''இல்லை, நீங்கள் சொல்வது உண்மை இல்லை; உங்களின் 'அதல பாதாளம்' மிகச் சிறந்த நாடகம் அல்லவா?''

கார்க்கி ஏற்றுக்கொள்ளவில்லை; தொடர்ந்து சொன்னார், ''அதலபாதாளம் ஒரு நாடகமே இல்லை; சில காட்சிகளின் தொகுப்பு என்றுதான் அதைச் சொல்ல வேண்டும்... அதை நாடகமாக எழுத எவ்வளவு முயற்சி செய்தேன் தெரியுமா...? ஆனால் பலன்தான் இல்லை... எனது முயற்சியைப் பொறுத்தவரை, என் அறுபது வயதிலும் இன்னும் கற்றுக்கொள்ள வேண்டியவனாகவே இருக்கிறேன்... நன்றாக எழுதும் ஒரு படைப்பாளனாக என்னைக் கருத முடியாது... மைக்கேல் ப்ரிஷ்வின், நட்ஹாம்சன் ஆகியோரைப் பாருங்கள், அவர்கள் எல்லாம் எப்படி எழுதுகிறார்கள். அவர்களிடமிருந்து நான் இன்னும் கற்றுக்கொள்ள வேண்டியவை ஏராளம் இருக்கின்றன...''

– இராகுலதாசன்.



93. கீஸ் வான் டாங்கன்


*நல் வாழ்த்துகள்*

*முகவையின் மிகப் பிரமாண்டமான ஜவுளி மாளிகை...*

# அஸ்மாஸ்

*170, சாலை வீதி, இராமநாதபுரம்.*



94. ஹென்றி ஃபான்டின் லாடௌர்


நல்வாழ்த்துகள்

**எஸ். ஜெகநாதன்,** உரிமையாளர்

**ஜெகன் திரையரங்கம் / மினி ஜெகன் திரையரங்கம் ஏ/சி**

**ஜெகன் குரூப் ஆப் கம்பெனீஸ்**

இராமநாதபுரம் மற்றும் செயற்குழு உறுப்பினர்

மாநில திரைப்பட உரிமையாளர் சங்கம், சென்னை

95. பியர் அகஸ்டின் ரெனுவா



*நல்வாழ்த்துகள்*

# இந்தியா சில்க்ஹவுஸ்

*10-11*, காசுக்கடை பஜார், இராமநாதபுரம்

ஓவியம் : **தட்சணாமூர்த்தி**

# அந்தச் சின்ன பீப்பாய்







ஏப்ர்வீல் நகரத்து விடுதியின் சொந்தக்காரர் திருவாளர் ஷிகோ. அவர், தான் ஓட்டி வந்த குதிரை வண்டியை மக்லுவார் கிழவியின் பண்ணை வீட்டிற்கு முன் நிறுத்தினார். அவர் ஒரு உல்லாசப் பேர்வழி. வயது நாற்பதிருக்கும். சிவந்த நிறம். தொப்பை தள்ளிய உருவம். பொல்லா தவன் என்று பெயரெடுத்தவர்.

வேலிக்கொம்பில் குதிரையைக் கட்டிவிட்டு வீட்டினுள் நுழைந்தார். கிழவியின் வயல்களுக்குப் பக்கத்தில் அவருடைய சொந்த நிலமிருந்தது. கிழவியின் நிலத்தை அபகரிக்கும் எண்ணம் அவருக்கு நீண்ட நாட் களாகவே இருந்தது. அதை வாங்கிப் போட இருபது முறை முயன்றும் பயனில்லை. மக்லுவார் கிழவி கிஞ்சித்தும் மசியவில்லை ''இந்த மண்ணில் பொறந்தேன் இங்கதான் சாவேன்'', என்று சபதம் செய்தாள் கிழவி! உருளைக் கிழங்கின் தோலை உரித்துப் போடுவதில் அவள் மும்முரமாய் ஈடுபட்டிருந்ததைக் கவனித்தார் ஷிகோ. அருகில் ஒரு ஸ்டூலில் அமர்ந்தார்.

''என்னா கெழவி எப்படியிருக்க?

''ஏதோ இருக்கேன். நீ எப்படி இருக்க, புரோஸ்பேர்?''

''ம்... ம்... கொஞ்சம் பிரச்சனைகள். மற்றபடி எல்லாம் நல்லாத்தான் இருக்கு''.

''நல்லாயிருந்தா சரி''.

பிரஞ்சு மூலம்: **மோபசான்**

தமிழில்: **ஜெயராஜ் தனியேல்**



அவள் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை. ஷிகோ அவள் வேலை செய்து கொண்டிருப்பதைக் கவனித்தார். நண்டின் கால்களைப் போல வளைந்திருந்த கை விரல்கள் ஒரு இடுக்கியைப் போல் இயங்கின. மண்ணின் நிறத்தைக் கொண்ட அந்த வேர்க் கிழங்குகளை ஒரு கையால் கிடுக்கிப் பிடித்து லாவகமாய்த் திருப்பி, இன்னொரு கையால் கத்தியைப் பிடித்து, அதன் தோலை நீள் சுருள்களாக உரித்துக் கொண்டிருந்தாள். உருளைக் கிழங்கு மஞ்சள் நிறமானதும் பக்கத்தில் வைத்திருந்த தண்ணீர் நிறைந்த வாளியில் போட்டாள். சீவிப்போட்ட தோலைப் பொறுக்க மூன்று கோழிகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தைரியமாய் அவளருகில் வந்து கொத்திக் கொண்டு தப்பியோடின.

ஷிகோவுக்குப் போரடித்தது. தயக்கத்தோடும், கவலையோடும், வாயில் எதையோ வைத்து துப்ப முடியாதவன் போல் தவித்தார். முடிவில், ஒருவழியாய் வாயைத் திறந்தார்:

''வேற என்ன சேதி மக்லுவார்..''

''ஒனக்கு ஏதாவது காரியம் ஆக வேண்டுமா?''

''அந்த நெலங்கள எனக்கு விக்கறதுக்கு ஒனக்கு விருப்பமேயில்லயா?

''இல்லை. அது முடியாத காரியம். அதை மறந்து விடு. சொன்னா சொன்னதுதான். மேற்கொண்டு அதப்பத்தி பேசாத.''

-நம் ரெண்டு பேருக்குமே சாதகமான ஒரு திட்டம் வச்சிருக்கேன்.

- என்னா அது?

- அதாவது... நீ எனக்கு அதை வித்திடுற. ஆனா நீயே வச்சிக்கற, ஆண்டு அனுபவிக்கிற. புரிஞ்சுதா இல்லையா? நான் சொல்றதக் கொஞ்சம் கவனமாகக் கேளு.

கிழவி தோலுரிப்பதை நிறுத்தி விட்டு விடுதிக்காரரையே உற்றுப் பார்த்தாள் - புருவத்தை நெரித்துக் கொண்டு அவர் தொடர்ந்தார்.'

''வெளக்கமாச் சொல்றேன். ஒவ்வொரு மாசமும் ஒனக்கு 150 பிராங்குகள் கொடுக்கறேன்.. புரியுதா. ஒவ்வொரு மாசமும் நான் இங்கு வந்து ஒனக்கு சொளையா மூன்று ஐம்பது பிராங்க் நோட்டை எண்ணி வக்கிறேன். அப்புறம் ஒண்ணுமில்ல. நீ பாட்டுக்கு ஒம் பூமியில இருக்கலாம். நீ என்னைப் பத்தி எந்த வித பயமும் கொள்ளத் தேவையே இல்ல. நீ எனக்குக் கொடுக்க வேண்டியதும் ஒண்ணுமில்ல. நீ செய்யிற ஒரே காரியம் பணத்தை வாங்கிக்கிறதுதான். என்ன, சரியா?''

அவர் ஒருவித சந்தோஷத்தோடும், உறுதியோடும் அவளைப் பார்த்தார். கிழவி அவரை ஒருவித சந்தேகத்தோடு நோட்டம் விட்டாள், இதில் ஏதாவது சூது இருக்கிறதா என்று ஆராய்பவளைப் போல. பிறகு கேட்டாள்: ''எனக்குப் பணம் சரி. ஆனா, ஒனக்கு இந்தப் பண்ணை வீடா? அது ஒனக்கு வேண்டாமா?''

அவர் தொடர்ந்தார்: ''அதப் பத்தி நீ கவலப்படவேணாம். கடவுள் ஒன்ன எத்தன காலம் வச்சிருக்காரோ, அத்தன காலமும் நீ இங்கயே வாழலாம் - ஒன்னோட - பூமியில்! ஒரு சின்ன தாளில் பதிவாளர் முன்னிலையில், ஒனக்குப் பொறவு

இது எனக்குச் சொந்தம்னு எழுதித் தரணும். அவ்ளொதான். ஒனக் கென்ன புள்ளையா, குட்டியா? என்னா சொல்ற? சம்மதமா? ஒன்னோட நெலத்த நீ வச்சிகினு வாழப்போற. பதிலுக்கு, நான் ஒனக்கு 150 பிராங்குகள் ஒவ்வொரு மாசமும் கொடுக்கிறேன். ஒனக்குத் தான் இதில் நல்ல லாபம்'' ஆசை களால் அலைக்கழிக்கப்பட்ட கிழவி ஆச்சரியத்தோடு கலக்கமும் அடைந் தாள். ''வேண்டான்னு சொல்லல .... ஆனா எனக்குக் கொஞ்சம் யோசிக்க அவகாசம் கொடு. இதப்பத்தி அடுத்த வாரம் பேசுவோம். அப்ப என்னோட முடிவ ஒனக்குச் சொல்றேன்'', என்று சொன்னாள் கிழவி. திருவாளர் ஷிகோ மனநிறைவுடன் வீடு திரும்பி னார் - பேரரசைக் கைப் பற்றிய அரசனின் குதூகலத்தோடு! கிழவி மக்லுவார் கனவுலகில் ஆழ்ந்தாள். அன்று இரவு அவள் தூங்கவே யில்லை. தொடர்ந்து நாலு நாள் பிரமை பிடித்தவள் போல் இருந்தாள். இந்த விவகாரத்தில் ஏதோ நஷ்டம் இருப்பது போல் பட்டது. ஆனால் சுளையாக மாதாமாதம், எந்த வித கஷ்டமும் படாமல், அவளைத் தேடி வரும் பணம், அவளுடைய மனதில் ஆசைக் கனலை மூட்டி அலைக கழித்தது.

பிறகு, அவள் சான்று அலு வலரைத் தேடிச் சென்று அவரிடம் தன் நிலையை விளக்கமாகக் கூறி னாள். அவரும் ஷிகோவின் யோச னைக்குச் சம்மதம் தெரிவிக்கலாம் என்றார். ஆனால் 150 பிராங் குகளுக்குப் பதிலாக 500 பிராங்குகள் கேட்கும்படி சொன்னார்.

''ஒவ்வொரு மாதமும் அவர் 500 பிராங்குகள் கொடுப்பதாக வைத்துக் கொள்வோம். நீங்கள் இன்னும் பதினைந்து வருடங்கள் வாழ்வதாக இருந்தாலும், உங்களுக்கு அவர் 90,000 பிராங்குகள் தான் கொடுத்திருப்பார். ஆனால், உங்கள் சொத்தின் மதிப்பு சுமார் 100,000 பிராங்குகளுக்கு மேல் இருக்கும்'', என்று விவரமாய் கணக்குப்போட்டுச் சொன்னார்.

கிழவியின் நடுக்கம் அதிகரித் தது. அவளால் நம்பவும் முடிய வில்லை. நம்பாமல் இருக்கவும் முடியவில்லை, ஆயிரத்தெட்டு சந்தேகங்கள் அவள் மனதில் முளைத் தன. இதில் ஏதாவது விஷமம் இருக்குமோ என்று நினைத்தாள். கேள்விமேல் கேள்வி கேட்டு அலு வலரைத் துளைத்தெடுத்தாள். கடைசி யில், பத்திரம் எழுதும் படிக் கேட்டுக்கொண்டாள். நான்கு மொந்தை பழைய கள்ளைக் குடித்து விட்டவள் போல கிறக்கத்துடன் வீடு திரும்பினாள் மக்லுவார் கிழவி!

மறுநாள், ஷிகோ வந்த பொழுது ரொம்பவும் பிகு பண்ணிக் கொண்டாள். அவரை நீண்ட நேரம் மன்றாட வைத்தாள். பிறகு, எங்கே மனிதன் அந்த 500 பிராங்குகளுக்குச் சம்மதிக்காமல் போய்விடுவானோ, என்று பயந்து தன் நிலையை எடுத்துரைத்தாள். ஏமாற்றத்தால் திடுக்கிட்ட ஷிகோ முதலில் மறுத்தார். அவரைச் சம்மதிக்க வைப் பதற்காக, தான் வாழப்போகும் காலக்கணக்கை விவரமாகச்சொல்ல ஆரம்பித்தாள் கிழவி: ''நான் இன்னும் ஐந்து அல்லது ஆறு வருடங்கள் தான் உயிருடன் இரு பேன். இப்பொழுதே எனக்கு 73 வயசாகிறது. ஒரு வேலையையும் செய்ய முடிவதில்லை. நேற்று ராத்திரி செத்துப் பிழைத்தேன் என்று தான் சொல்ல வேண்டும். என் உடம்பில் உள்ள பலமனைத்தையும் யாரோ உருவிப் போட்டதுபோல் இருந்தது. படுக்கையில் கிடப்பதைத் தவிர வெறெதுவும் முடிவதில்லை.'' இதற்கெல்லாம் ஷிகோ மசிவதாக



“ சுளையாக மாதாமாதம், எந்த வித கஷ்டமும் படாமல், அவளைத் தேடி வரும் பணம், அவளுடைய மனதில் ஆசைக் கனலை மூட்டி அலைக்கழித்தது. ”



“

மக்லுவார் கிழவி குடிகாரியாகிவிட்டாள் என்று. பல சமயங்களில் அவள் வீட்டின் முற்றத்திலோ அடுக்களையிலோ, பக்கத்து தெருவோரங்களிலோ கிடந்தாள்!

”

இல்லை ''அட, போ கிழவி அம்மிக் கல்லு மாதிரி இருக்கிற உனக்கு என்ன கேடு? சொல்லப்போனால், 110 வயது வரை இருப்ப. போற போக்க பாத்தா என்ன அனுப்பி விட்டுத்தான் நீ போவ போலிருக்கு!''

, இருவரும் நாள் முழுவதும் இப்படிப் பேசியேக் கழித்தார்கள். கடைசியில், கிழவியின் பிடிவாத மான நிலையைக் கண்ட ஷிகோ மாதந்தோறும் 500 பிராங்குகள் தர சம்மதித்தார். மறுநாள், இருவரும் பத்திரத்தில் கையொப்பமிட்டார்கள். மக்லுவார் கிழவி ஒயின்குடிக்கும் செலவுக்கென பத்து பிராங்குகள் பிடுங்கிக் கொண்டாள்.

மூன்று வருடங்கள் கழிந்தன. கிழவி மண்டையைப் போட்ட பாடில்லை. அவளுடைய வயதில் ஒன்று குறைந்தது போலல்லவா இருக்கிறது! ஷிகோ கலக்க மடைந்தார். ஏதோ அரை நூற்றாண்டு காலமாகத் தான் கிழவிக்குக் கப்பம் கட்டுவதாக அவருக்குத் தோன்றியது. ஏமாற்றப்பட்டதைப் போலவும் வஞ்சிக்கப்பட்டதைப் போலவும் ஓர் உணர்வு அவருள் தலை தூக்கியது. அடிக்கடி கிழவியைப் போய் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். கதிர் விட்ட கோதுமையின் மணிகள் அறுவடைக்குத்தயாரா என்று சோதிப் பதைப் போல. கிழவியும் அவரை ஒருவித வஞ்சகப் பார்வையுடன் வரவேற்பதை வழக்கமாகக் கொண்டி ருந்தாள். அவரை ஏமாற்றி விட்டதை நினைத்துப் பெருமைப்படுபவள் போலிருந்தது அவள் செய்கை. அவளைச் சபித்த வேகத்தில் தன் குதிரை வண்டியில் ஏறிப் போனார் ஷிகோ. ''சவம் இப்போதைக்குத் தொலையாது போலிருக்கு'', அவருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. பார்த்தவுடன் அவள் கழுத்தை நெறித்துக் கொன்று விடலாம் போலிருந்தது. அப்படி யொரு துவேஷம் அவருள் - களவு கொடுத்த விவசாயியைப் போல. பலமாகச் சிந்தித்தார் ஷிகோ.

ஒரு நாள், கிழவியைப் பார்க்கச் சென்றவர் கைகளைத் தேய்த்துக் கொண்டே - முதன் முதலில் பத்திரம் எழுதிக் கொடுப்பது சம்பந்தமாக அவளைச் சென்று பார்த் ததைப் போல - சிறிது நேரம் கழித்து,'' ஏன் கிழவி, ஏப்ர்வீலுக்கு வரும் பொழுது ஏன் என் விடுதிக்கு வரக்கூடாது. வந்து ஒரு வாய் சாப்பிட்டுப் போகலாமே? உன்னிடம் நான் பணமா கேட்கப் போகிறேன்? நீயும் நானும் விரோதிகள் என்றல்லவா பேசிக் கொள்கிறார்கள். எனக்கு மனசு சங்கடமாயிருக்கு, உனக்கு ஒரு வேளை சாப்பாடு போடுவதால் நான் ஒன்றும் குறைந்துவிட மாட்டேன் உனக்கு எப்பப்பிடிக்குதோ, அப்ப வந்து சாப்டுட்டுப் போ. எனக்கு ரொம்ப மகிழ்ச்சியாயிருக்கும்'' என்று சொன்னார்.

கிழவி மக்லுவாருக்கும் சம்மதம் தான். அடுத்த இரண்டாவது நாள், சந்தைக்குச் சென்று திரும்பும் வழியில் ஷிகோவின் விடுதிக்குச் சென்றாள். வேலைக்காரன் செலஸ் தேன் குதிரை வண்டியை விடுதிக்கு முன் நிறுத்தி, குதிரைகளை அவிழ்த் துத் தொழுவத்தில் கட்டினான். சொன்னபடி விருந்து கொடுக்கும் படி ஷிகோவிடம் கேட்டாள்.

ஷிகோவும் அவளை மகிழ்ச் சியோடு, தடபுடலாக வரவேற்று ஒரு சீமாட்டியை உபசரிப்பது போல உபசரித்தார். கோழிக்கறி, பன்றிக்கறி, தொடைக்கறி, பன்றியின் கொழுப் பும் கோசும் கலந்த பண்டம் அனைத் தையும் அவளுக்குச் சாப்பிடக் கொடுத்தார். சிறுவயதிலிருந்தே நொறுக்குத் தீனி தின்று

பழக்கப்பட்ட கிழவி ஒன்றையும் தொடவில்லை. ஷிகோ எவ்வளவு வற்புறுத்தியும் பயனில்லை. ஏமாற்றம் தான் மிச்சம். கிழவி எதுவும் குடிக்கவுமில்லை, காப்பிகூட சாப்பிட வில்லை. அவர் கேட்டார்: ''சரி, ஒரு டம்ளர் சாராயத்தையாவது குடி''

- உம் சரி கொடு. அதை வேணான்னு சொல்ல மாட்டேன்''. உடனே, ஷிகோ உரத்த குரலில் தொண்டை கிழிய கத்தினார்: ''ரோசாலி! அந்த உயர்ந்த ரக சாராயத்தை எடுத்து வா''! வேலைக்காரி ஒரு நீண்ட புட்டியை எடுத்து வந்தாள். அதில் காகிதத்தில் செய்த திராட்சை இலையொன்று ஒட்டியிருந்தது. ஷிகோ இரண்டு டம்ளர்களை நிரப்பினார். ''இதைக் குடித்துப்பார், கிழவி, ரொம்பவும் புகழ் வாய்ந்தது.'' கிழவி மிகவும் பொறுமையுடன், ரசித்து, ருசித்து, அனுபவித்துக் கொண்டே பருகினாள். டம்ளரைக் காலி செய்துவிட்டு ஒரு ஏப்பம் விட்ட பிறகு சொன்னாள்: ''உண்மையிலேயே இது உயர்ந்த சரக்கு தான்''. அவள் பேசி முடிக்கவில்லை. அதற்குள் ஷிகோ டம்ளரை நிரப்பினார். அவள் மறுப்பதற்கு நேரமேயில்லை. அதனால் முதலில் குடித்தது போலவே இதையும் நீண்ட நேரம் கொஞ்சம் கொஞ்சமாக குடித்தாள். மூன்றாவது டம்ளர் குடிக்கும்படி வற்புறுத்தினார் ஷிகோ, ஆனால் கிழவி மறுத்துவிட்டாள், பிடிகொடுக்கவில்லை. ஷிகோவும் தொடர்ந்தார்: ''சும்மா பால் குடிப்பது போலத்தான். நான் பத்து அல்லது பனிரெண்டு டம்ளர் குடிப்பேன். எந்த விதத் தடங்கலும் இல்லாமல், சர்க்கரைப்பாகு உள்ளே இறங்குவது போல வயித்துக்கும் போகாமல் மண்டைக்கும் ஏறாமல், நாக்கிலேயே ஆவியாகிவிடும். உடல் நலத்திற்கு இதை விட உயர்ந்தது ஒன்றுமேயில்லை''

ஆவல் மிகுதியினால் கிழவியும் சம்மதித்தாள். ஆனால் பாதி டம்ளர் மட்டுமே குடித்தாள். ''சரி, சரி, இது உனக்கு மிகவும் பிடித்திருப்பதால், உனக்காக ஒரு சின்ன பீப்பாய் கொடுக்கிறேன். அது நம்முடைய நட்பிற்கு அடையாளமாக இருக்கட்டும்.'' கிழவி வேண்டாம் என்று சொல்லவில்லை. கொஞ்சம் தள்ளாடிக் கொண்டே வீடு திரும்பினாள்.

அடுத்த நாள், விடுதிக்காரர் மக்லுவார் கிழவியின் வீட்டுக்கு வந்தார். ஒரு சின்ன பீப்பாயைத் தன் வண்டியிலிருந்து இறக்கி வைத்தார். பிறகு, முதல் நாள் குடித்த அதே உயர்ந்த ரக சாராயம் தான் அது என்று காண்பிப்பதற்காக, அதிலிருந்து சிறிது ஊற்றிக் கிழவியிடம் கொடுத்தார். இருவரும் ஆளுக்கு மூன்று டம்ளர் குடித்து முடித்தவுடன், அவர் உளறினார். ''இது...இது...தீர்ந்து போச்னா கெவலப்படாத கெய்வி, நா.. அதெல்லாம் தப்பா நென்ச்சுக்கமாட்டேன். எவ்ளொ சீக்ரம் இத முடிக்றயோ அவ்ளொக்கு எனக்கு சந்தோசந்தேன். என்ன புறியுதா?'' பிறகு தள்ளாடியபடியே வண்டியில் ஏறி வீடு திரும்பினார்.

நான்கு நாள் கழித்து மறுபடியும் வருகிறார். கிழவி வாசலில் உட்கார்ந்திருக்கிறாள், ரொட்டி வெட்டிக் கொண்டு. அருகில் வந்து வணக்கம் சொல்லிவிட்டு அவள் முகத்தருகே பேசினார் - கிழவியின் மூச்சை மோப்பம் பிடித்துக் கொண்டு, சாராய வாடை மூக்கை வருடியது. உடனே அவர் முகம் பிரகாசமடைந்தது. ''எனக்கு ஒரு டம்ளர் சாராயம் தா, கிழவி,'' என்று கேட்டார். பிறகு இருவரும் சேர்ந்து, இரண்டு மூன்று தடவை குடித்தார்கள்.

வெகுவேகமாக செய்தி பரவியது: மக்லுவார் கிழவி குடிகாரியாகிவிட்டாள் என்று. பல சமயங்களில் அவள் வீட்டின் முற்றத்திலோ அடுக்களையிலோ, பக்கத்து தெருவோரங்களிலோ கிடந்தாள்! மரக்கட்டையைத் தூக்குவது போல் தூக்கிவந்து அவளை வீட்டில் சேர்த்தார்கள்.

இப்பொழுதெல்லாம் ஷிகோ கிழவியைப் பார்க்க வருவதில்லை. அக்கம்பக்கம் யாராவது கிழவியைப் பற்றிப் பேசினால் - ''இந்த வயசில் அவளுக்கு இந்தப் பழக்கம் ஏற்பட்டது துரதிர்ஷ்டம் தான் இல்லையா? பார்த்தீர்களா! வயதான காலத்தில் எவரிடமும் பணமிருப்பதில்லை. இப்படியே போனால் ஏதாவது விபரீதம் தான் ஏற்படும்!''

முடிவாக அந்த விபரீதம் நேர்ந்தது. அடுத்து வந்த குளிர்காலத்தில் - கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முன் கிழவி குடியில் மயங்கி பனிபடர்ந்த பூமியின் மேல் விழுந்து இறந்தாள்!

கிழவியின் நிலமெல்லாம் ஷிகோவுக்குச் சொந்தமானது. ஷிகோ சொன்னார்: ''இந்தக் கிழவி கடைசி காலத்தில் இப்படி குடிச்சிட்டு அழியலனா இன்னுமொரு பத்து வருடங்கள் வாழ்ந்திருப்பாள்.'' ●

புதுக்கவிதை மட்டுந்தான் புதுக்கவிதை என்பதில்லை, பழங்கவியும் இன்று நான் வாசித்து அனுபவிக்கும்போது புதுக்கவிதைத்தான். கவிதைக்கு, எல்லா நல்ல கவிதைக்குமே தன்னையே புதுப்பித்துக் கொள்ளும் சக்தி உண்டு என்பது எல்லா மொழி இலக்கியங்களிலுமே நிதரிசனமாகக் காணக்கிடைக்கிற உண்மை. சிலப்பதிகாரம் அதன் காலத்தில் மட்டுமல்ல, இன்றும் புதுக்கவிதை தான். அத்தோடு ஒப்பிடக்கூடிய கவிதை இன்று தோன்ற வேண்டுமானால் புதுக் கவிதை முயற்சிகள் மிக மிக அவசியம்.

**க.நா. சுப்பிரமணியம்**



96. பால் சிசன்


நல்வாழ்த்துகள்

**மா. ஆறுமுகத்தேவர்,**

என்ஜியனியரிங் காண்ட்ராக்டர்,

நகராட்சி குத்தகைதாரர்,

பரமக்குடி.

இராமநாதபுரம் மாவட்டம்

நல்வாழ்த்துகள்

**எம்.ஏ. முனிசாமி,**

உரிமையாளர்,

**எம்.ஏ.எம். பைனான்ஸ்.,**

**எம்.ஏ.எம். டிரான்ஸ்போர்ட்**

பரமக்குடி.



# சிநேகிதன்

ஓவியம்: **ஆர். ஜானகி இராமன்**

**விழி. பா. இதயவேந்தன்**

என்னிலிருந்து காணாமல்போன என் அன்பு சிநேகிதன் அன்பானந்தனுக்கு,

உன் இதயத்தின் எங்கோ ஓர் ஒற்றை மூலையில் ஒரு சிறு துரும்பைப் போல் ஒட்டிக் கொண்டிருக்கிற உனது முன்னாள் நண்பன் வணக்கமாய் எழுதிக்கொண்ட கடிதம். நான் நலமாய் இருக்கிறேனோ இல்லையோ நீ நலமாய் இருப்பாய் என நம்புகிறேன்.

எத்தனையோ பதவிகள் 'முன்னாள்' என்பதுபோல் முன்னாள் நண்பன் என்றுகூட நான் உச்சரிக்க எந்த அளவிற்கு உன்னிடம் அந்நியோந்நியமாய் பழகினேன் என்பதை இன்னமும் நினைத்துப் பார்க்கிறேன். நீ எங்கு இருக்கிறாய் எப்படி இருக்கிறாய் என்பதைக்கூட சரிவர அறியமுடியவில்லை.

நீ சதா என்னைப்பற்றி நினைக்கிறாயோ இல்லையோ நான் எப்போதும் உன்னைப்பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் காதலித்து வந்த அந்த இலக்கிய காதலர்கள் கூடிப்பேசி மகிழ்ந்து, சிரித்து, விளையாடி, போராடி.... கடைசியில் இந்த சராசரி வாழ்விலிருந்து பிரியும்போது கசப்பாக சொல்கிற வார்த்தையைப் போல் உனது அந்தக் கடைசி நேர வார்த்தைகள் என் ஞாபகத்தில் எப்போதும் அறைந்துகொண்டே இருக்கிறது.

"நீயும் நானும் இனி நண்பனாய் இருக்க முடியாது; இனிமேல் என்னைச் சந்திக்கவோ, சந்தித்துப்பேச நினைக்கவோ வேண்டாம். நமக்குள் இருக்கும் இடைவெளி அதிகம். முரண்பாடுகள் அதிகம், அதனால்..."

ஞாபகம் இருக்கிறதா. இது நாவினால் சுட்ட வடு

மட்டும் அல்ல. எனது வாழ்க்கையில் ஏற்பட்ட அடி. அடி பேரிடியாய் மாறி என்னை எப்படியெல்லாம் திசை மாற்றிவிட்டது என்பதை உன்னால் உணர முடியுமா?

நான் வேதனைப்படுகிற அளவிற்கு நீயும் வருத்தப்படுவாயோ அல்லது இல்லையா என்பதை நான் அறிதியிட்டுச் சொல்ல முடியாது. உனக்கும் எனக்குமுள்ள பந்த பாசங்களை எந்த அளவுகோல் வைத்து எப்படிச் சொல்வது. இந்த சொந்த பந்தங்கள், நண்பர்கள், உறவினர்கள் என்று கேட்கும் கேள்விகளுக்கு நான் என்ன சமாதானம் சொல்லி தொடர்ந்து அவர்களைத் திருப்திபடுத்தப் போகிறேன்.

நண்பர்கள் என்றால் எத்தனையோ விதமான நண்பர்கள் வாழ்வில் வந்து சந்தித்துவிட்டுப் போகிறார்கள். அறிந்தவர், தெரிந்தவர், புரிந்தவர், புரியாதவர்– சைக்கிளில் இடறி விழும்போது தூக்கி நிறுத்தி ஒரு ஆறுதலில் நண்பராகிறார்கள். சினிமா கொட்டகையில் டிக்கெட் எடுத்துக்கொடுத்து சிறு புன்னகையில், கத்திரிக்காயை அய்ம்பது காசு குறைத்து 'இவருக்கும் அதுபோல கொடு' என்றும் நண்பர் ஆகிறார்கள். வகுப்பறையில் தண்ணீர் கொடுத்து, பரீட்சையில் தெரியாததைக் காண்பிக்கச் சொல்லி ரேசன் கடையின் தொடர் வரிசையில் இடம் கொடுத்து... இப்படி எத்தனை இடத்தில் எத்தனை விதமாய் நண்பர்கள்.

முழுமையாய் உணர்ந்திருக்கமுடியும். உன் இதயத்தின் ஒவ்வொரு துடிப்பினையும் கேட்டுப்பார். இப்போதைய மனைவியான உன் முன்னாள் காதலிக்கு முன் நான்தான் அடிக்கடி வந்து போயிருப்பேன்.

சரி, அப்புறம் எப்படிதான் என்னைப் புறத் தள்ளுகிற அந்த மனப்பக்குவம். உனக்கு வந்தது. ஒன்றாய் படித்தது. ஒன்றாய் காதலித்தது. ஒன்றாய் இனம், மொழி, பண்பாடு அரசியல் என பேசி விவாதித்து அனுபவித்தது... என்று எத்தனை எத்தனை விதமான முகங்கள் நம்மில் பிரகாசித்தது.

இன்னமும் நினைவிருக்கிறது.

"டேய் அன்பா, தெருவுல படிக்க முடியலடா"

"ஏன்"

"வெளக்கு வெளிச்சம் பத்தல; தலவலிக்குது. அதுவும் இல்லாம தெருவுல எப்பவும் கூச்சலும் கலாட்டாத்தான்"

"நம்ம ஆளுங்களுக்கு வயித்துக்கு இல்லாட்டாக்கூட குடிச்சிட்டு ஆடுற சந்தோஷம் தாண்டா. இங்க மட்டும் இன்னாவாம். இதே மாதிரிதான்"

"சரி இப்ப பரீட்சை வருதில்ல"

நம்மில் ஏற்பட்ட முரண்பாடுகள் எப்படி சீனப்பெருஞ்சுவர் போல் விரிந்து விரிசல் கொடுக்க ஆரம்பித்து. கண நேரத்தில் ஆரம்பித்தா அல்லது கடைசி வரை சொல்லாமல் மனதில் இழை இழையாகக்கூடி ஒட்டு மொத்தமாய் வெடித்துச் சிதறியதா. உனக்குள் ஏதாவது காரணமிருக்கும்; அல்லது சிறு நியாயமாவது இருக்கும்.

எல்லாமே நண்பர்கள்தாமே? அவற்றில் நீயும் ஒன்றாக இருக்க முடியாது.

நீ என் உயிர்ச் சிநேகிதன் அல்லவா!

பத்தோடு பதினொன்றாய் புரட்டிப் போடுகிற சமூகத்தில் உயிர்த்தெழுந்த ஆத்மார்த்த நண்பர் அல்லவா.

உன்னையும் உன் ஞாபகங்களையும் தொலைத்து விட்டு இந்த உலகில் நான் எங்கே ஓடி மறைவேன். வாழ்வின் அதாள பாதாளத்திற்கு தள்ளிப் போடுகிற உணர்வினை உனக்கும் எனக்கும் யார் கற்றுக் கொடுத்தது. நம்மில் ஏற்பட்ட முரண்பாடுகள் எப்படி சீனப் பெருஞ்சுவர் போல் விரிந்து விரிசல் கொடுக்க ஆரம்பித்து. கண நேரத்தில் ஆரம்பித்தா அல்லது கடைசி வரை சொல்லாமல் மனதில் இழை இழையாகக்கூடி ஒட்டு மொத்தமாய் வெடித்துச் சிதறியதா. உனக்குள் ஏதாவது காரணமிருக்கும்; அல்லது சிறு நியாயமாவது இருக்கும்.

இன்று நேற்றல்ல. இருபது ஆண்டுக்கால நேசம். எப்படி கண் இமைக்கும் நேரத்தில் வீழ்ந்து சிதறியது. உன்னால் எப்போதேனும் நினைத்துப் பார்க்க முடிகிறதா.

நினைக்கலாம்; நினைக்காமலும் இருக்கலாம்.

உன் உடம்பின் ஒவ்வொரு செல்களையும் தோண்டி துருவிப்பார். எனது கூறுகள் உன்னில் ஆழப்பதிந்திருக்கும். உன் மூளையின் ஒவ்வொரு இரத்த நாளங்களையும் சும்மாவாகிலும் விசாரித்துப்பார், எனது நேசத்தை

"ஆமாம்"

"இன்னிலிருந்து நாம காலேஜில வாட்சுமேன்கிட்ட சொல்லிட்டு ராத்திரில போய் வெராண்டாவுல படிக்கலாம்டா..."

"சரிதான். நல்ல யோசன; சாப்டியா"

"...."

"இன்னாடா பேசுல"

"அம்மா கடன் வாங்க போச்சு. இன்னும் வரவேயில்ல; நான் கெளப்பி வந்துட்டேன்"

"சரி வா, மூனு தோசதான் இருக்கு. ரெண்டு பேரும் சாப்பிட்டு கெளம்பலாம்..."

"அன்னிக்கு கூட அன்பு, அம்மா சொன்னாங்கடா"

"இன்னான்ட்டு"

"சோறு தண்ணி இல்லன்னு கஷ்டப்படாதப்பா. இது நம்ம ஊரு மாதிரி கஞ்சியோ கூழோ நீ எப்ப வேணும்னாலும் வந்து, இருக்கிறத சாப்பிடுப்பா. யாரயும் கேக்க வேண்டியதில்ல..."

அப்போது நம் கண்களில் கண்ணீர் வழிந்ததே நினைவில்லையா?

அம்மாவின் வார்த்தைகள் எனது சொந்த தாயாரின் விசாரிப்பைவிட அதிக சிநேகமாய் இருந்ததை என்னால்



மறக்க முடியவில்லை. எத்தனையோ சந்தர்ப்பங்களில் எத்தனைமுறை பசியின் கொடூரமான அந்த தீக்கு ஆளாகாமல் நான் நம் அம்மா மூலம் வாழ்ந்திருப்பேன் தெரியுமா. உப்பிட்ட வரை உள்ளளவும் நினை என்றுதான் சொன்னார்கள். நான் நீ இந்த ஊர், இந்த உலகம் அழியும் மட்டும் என்னாவோ நான் வாழ்ந்த சமூகத்தாலோ எல்லாமே மறக்கப்படமுடியுமா?

முடியாது; முடியவே முடியாது.

சோறு கிடைக்காதபோது இருவரும் ஒவ்வொரு செம்பு தண்ணீர் குடித்துவிட்டு இரவை நகர்த்தியது, துணி இல்லாதபோது கிழிந்த, பட்டன்கள் அறுந்த துணிகளை மடக்கிப் பிடித்து தைத்துப் போட்டுக் கொண்டது. வாடகை வீடுகளில் அறுந்து குழியாக தொங்குகிற தேங்காய் நார்க்கட்டிலிலும் தரையிலுமாக உருண்டு தூங்கியது; எல்லாமே இப்போது நினைத்தாலே ஒவ்வொரு அனுபவங்களின் தொகுப்பு தான்.

புத்தகம் கிடைக்காமல் யார் யாரிடமோ வாங்கி ஆளுக்கொரு கேள்விப்பதிலாய் எழுதிக்கொண்டு படித்தோம். எழுத தாளில்லாமல் பேராசிரியர் லோகியா வீட்டிலும், கிருஷ்ணமூர்த்தி அண்ண னின் அலுவலகத்திலும் போய்ப் பார்த்து பேசி கேட்டு வாங்கி வந்ததும்கூட நினைவற்றுப் போகுமா.

காசு இல்லாமல் அறுபது பைசா டீயை இரண்டாக ஊற்றிக் குடித்ததும், காதல் என்றால் என்ன என்றே தெரியாமல் அந்தப் பருவத்தில் நம்மோடு படித்த வகுப்பு மாணவி சரோஜாவை நமக்குத் தெரியாமல் தனித்தனியாகவே காதலித்து, அப்புறம் மூவரும் உட்கார்ந்து பேசி நண்பர்களாகப் பழகிப் பிரிந்த அந்தக் கல்லூரி அனுபவங்கள்... இன்னும் எத்தனை நாள் கதை கதையாய் சொல்லிக் கொண்டு போக...

முதன்முதலில் உனக்கு வேலை கிடைத்து அந்த சந்தோசத்தை நான் எப்படியெல்லாம் பகிர்ந்து கொண்டிருப்பேன் தெற்கே போகும் அந்த இரயிலில் விடுமுறையில் நீ வந்து போகும் போதெல்லாம் உன்னை ஏற்ற, இரவு ஒரு மணிவரை பிளாட்பாரத்தில் உட்கார்ந்து எத்தனைவிதமான சந்தோசங்களை மகிழ்ச்சியை, துயரங்களை, சம்பவங்களைப் பேசி இருப்போம். சதா தண்டவாளத்தை இரயில் வண்டிகள் வந்து தேய்க்கிற ஜங்சனில் இன்ஜின் சத்தத்தையும், வருகிற போகிற பயணிகளின் நடைபாதை சத்தத்தை மீறியும் முழு இருட்டில் வானளாவ உயர்ந்து ஒளி செலுத்து கிற அந்த மெர்க்குரி விளக்கின் அடியில், பனி ஈரம்கூட தெரியாமல் புறப்படுகிறபோது மட்டுமே உணர்கிற அந்த ஈர சொத சொதப் பில், மழைக்காலங்களில், சில் லென்று வீசுகிற அந்த ஈரக்காற்றின் குளிர்கூட தெரியாமல் எத்தனை விஷயங்களை எப்படியெல்லாம் பரிமாறியபடி நாம்.

நமக்குள் சாதியோ, மதமோ, வர்க்கமோ வித்தியாசம் இருக்க முடியாது. அப்புறம் எப்படி அது நிகழ்ந்திருக்கும்? உனது காதல் அரும்பி - தொடர்ந்து கசந்து - பேசி மீண்டும் மலர்ந்து புது வாழ் வாக மாறியதற்கு அந்த நூற்றாண்டு கால சமாதான புறாவாக மாறியெல் லாம் நான் அலைந்து திரிந்திருப் பேன் என்பதைச் சற்று யோசிக்க முடிகிறதா?

கடிதத்திற்குள் கடிதம். நீ வேலை செய்யும் இடத்திலிருந்து எழுதி அனுப்புவாய். முதல் கடிதம் எனக்கு. அப்புறம் காதலிக்கு. உன் காதலியை சந்திக்க நான் கால்கடுக்க நின்றிருந்ததையும், சந்திக்க முடியாத சந்தர்ப்பங்களில் என் உயிரின் உறவான என் அன்பானவந்னுக்கு நான் என்ன சமாதானம் சொல்லப்போகிறேன் என்று என் மனம் குமுறி அழுததையும் தொடர்ந்து மறுநாள், அடுத்தநாள் உன் காதலியை வழி நெடுகத் தேடிப்பிடித்துக் கொடுத்துவிட்டு வந்து ஓய்கிறபோது ஏற்படுகிற அலாதியான அந்த சந்தோசத்தையும் உன்னால் ஒவ்வொன்றாய் பிரித்துப் பார்த்து நுகர்ந்து சந்தோசப்பட முடியுமா?

உன்னையும் என்னையும் எது பிரித்திருக்கும் என்பதுதான் இன்னும் எனக்குள் தீர்க்க முடியாத பிரச்னையாக உள்ளது. உன்னை நான் அண்டியோ என்னை நீ சுரண்டியோ வாழவில்லை. உனது பணி என்னை பாதிக்கவில்லை.

ஆனால் உனது திருமணம்?

ஆம் சற்று யோசிக்க வைக்கிறது.

திருமணம் அப்புறம் மனைவி மக்கள் என்றாகிவிட்டது. மென்று துப்பின சக்கையாய் கிடக்கிற நமது அடிமட்ட தெருவின் முகங்கழுவாத கண்ணில் பீலை தொங்குகிற அந்த குழந்தைகளிடமிருந்து, துணியைத் துவைத்து போட்டுக் கொள்ளாத /முடியாத, கந்தலை உடுத்துகிற வாலிப ஆண் பெண்களிடமிருந்து காய்ந்து போன பரட்டை தலைகளிடமிருந்து கோவணங்கட்டியும் துணியைச் சுற்றியும் கட்டிக்கொண்டிருக்கிற ஒடுங்கி மடிந்த கிழட்டு முகங்களிடமிருந்து திரும்பத் திரும்ப சோகமே அறைகிற அந்த மனிதர்களின் அகோர முகத்திடமிருந்து சற்று விடுதலையாய் ஊருக்கு வெளியே ஒற்றையில் சிறிய வீடு கட்டி இருந்தாய்.

அவற்றில் நானும் ஒருவனாக கருதி தள்ளிவிடப் பட்டிருப்பேனோ. இருக்காது. நிச்சயம் இருக்காது. நம்மின் பழக்கவழக்கம் இப்படி ஆரம்பிக்கப்பட்டதல்ல. உணர்வின் ஆழ்மட்டத்திலிருந்து குழாய்க் கிணறு தோண்டி எழுப்பதுபோல ஊற்றெடுத்து பிரவாகமிட்டது நமது அன்பு.

என்னையும் நம் மக்களையும் குறை கூற முடியாது. அவர்களுக்கு வாழ்வு இல்லை. வாழவும் வழி இல்லை. சமூக வளர்ச்சி அப்படி. உன் அளவுக்கு நானும் வளர இந்த சமூக அமைப்பில் முடியவில்லை. முயற்சிக்கிறேன். முடிந்தால் பார்க்கலாம்.

உன்னைப்போல் நான். என்னைப்போல் அதோ அந்த கேசவன்; கேசவனைப் போல் முனுசாமி, வள்ளி, சின்னக்கண்ணு, முத்துலட்சுமி, தங்கவேலு, தனபாக்கியம், பார்வதி... எல்லாரும் முன்னேற வேண்டும்... ஆசைதான். இப்போதைக்கு இந்த ஆராய்ச்சி வேண்டாம்.

பிறகு நான் தாய் தந்தை இழந்து தம்பி தங்கைகளை வைத்துக்கொண்டு கூலிக்கு வேலை செய்து கொண்டு குடும்பம் நடத்திய அந்தக் கருப்பு தினங்கள்கூட உன் மனதை புண்படுத்தியிருக்கலாம். அல்லது உனது உயிருக்கு, உடமைக்கு வாழ்வுக்கு. மரியாதைக்கு, தொல்லை தருகிற, தொண்டைக்குழியை அழுத்தி சோகம் தருகிற சம்பவங்கள் ஏதேனும் வாழ்வில் நிகழ்ந்திருக்கலாம்.

என்னை அறியாமல் உன்னை ஆழமாகப் புரியாமல் அல்லது நீ உன்னை அறியாமல் என்னை ஆழமாகப் புரியாமல் கூட அவசர அவசரமாய் முடி வெடுத்திருக்கலாம். வாழ்வின் எந்தச் சந்தர்ப்பத்தில் எந்த அரக்கத்தனமான நொடிப்பொழுதில் நான் தவறு செய்திருப்பேன் என்று நினைத்தால் இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு மனம் வேதனை கொள்ள வைக்கிறது.

நமது வாழ்வில் வறுமையில் ஆரம்பித்து இன்று மனிதனாய் சமூகத்தில் நடமாடுகிற சந்தர்ப்பம் வரை எத்தனையோ கட்டங்களில் இந்தச் சமூகத்தில் நமது பாதம் பதித்த சுவடுகள், நமது மண், நமது மக்கள், நமது மரபுகள் என்று எத்தனை விதமாய் பதிந்திருக்கிறது என்பதைக் கனவிலேனும் நினைத்துப் பார்த்ததுண்டா?

இன்று எங்கோ ஓர் கல் கட்டடங்கள் நிரம்பிய மாநகர நெரிசலில் பதவி உயர்வுப் பெற்று பணிபுரிகிறாய் என யாரோ சொல்லக் கேள்விப்பட்டு மனங்குளிர்ந்து எழுதுகிறேன்.

எனது எழுத்து உனக்கு பார்க்கவோ படிக்கவோ முடியாமல் இருக்கலாம். எனது குரல் உனக்கு ஒலிக்கவோ கேட்கவோ முடியாமல்கூட இருக்கலாம். எனது உணர்வினைத் தற்போது புரிந்து கொள்ளவோ அறிந்து கொள்ளவோ முடியாமல்கூடப் போகலாம்.

நீ அட்லாண்டிக் கடலின் ஆழ்ப்பகுதியில் இருந்தாலும் சரி, பனிபடர்ந்த குளிப்பிரதேசத்தில் போர்வைக்குள் பதுங்கி இருந்தாலும் சரி, சகாரா பாலைவனத்தில் ஓர் மூலையில் ஒற்றைச் சோலையில் ஒதுங்கி ஓய்வெடுத்துக் கொண்டிருந்தாலும் சரி, தொட்டபெட்டாவைப்போல் மிக உயர்ந்து பனியோடு மேகமும் தவழ்கிற அந்த இமயமலை சாரலில் குடி கொண்டிருந்தாலும் சரி... இன்னும் எங்கெல்லாம் உனது வாழ்க்கைப் பயணம் விரிந்து விசாலமாய் சிறகடித்துப் பறந்தாலும் சரி, என்னையும் என் மண்ணையும் மறந்துவிட்டு உன்னால் வாழமுடியாது என்பதை என்னால் உணர முடியும்.

ப்ரிய அன்பா!

நீ என்னோடு பேசாவிட்டாலும் நீ எனக்காய் மனம் நொந்து ஒரு வரியேனும் எழுதி ஆறுதல் படாவிட்டாலும் எனது துன்ப துயரங்களில், எனது கஷ்ட நஷ்டங்களில் எனது வாழ்வின் அத்தனை சோகங் களிலும் பங்கெடுக்காவிட்டாலும் சரி உனது சாட்சியாய் நான். உனது அடையாளமாய் நான். உனது முகமாய் நான். வாழ்விலும் தாழ்விலும் நான்.

அதேபோல் என்னுடையதாய் எல்லாம் நீ.

இப்படித்தான் நம் சனங்கள் பேசிக்கொள்கிறார்கள்!

வாழ்வின் கடைசி அத்தியாத்திற்குள் என்றேனும் ஓர்நாள் நாம் சந்திக்காமலா போய்விடுவோம். முடிந்தால் எல்லாவற்றையும் பேசுவோம்.

(பின்குறிப்பு: இப்போதேனும் மனம்விட்டு)

இப்போதைக்கு இவ்வளவுதான்

இன்னும் எழுதுவேன்.

அன்பானந்தனுக்கு மாறாத அன்புடன்,

அன்பு சிநேகிதன்

என்னையும் நம் மக்களையும் குறை கூற முடியாது.
அவர்களுக்கு வாழ்வு இல்லை. வாழவும் வழி இல்லை. சமூக வளர்ச்சி அப்படி.
உன் அளவுக்கு நானும் வளர இந்த சமூக அமைப்பில் முடியவில்லை.



97. பாப்லோ பிக்காஸோ


*நல்வாழ்த்துகள்*

மின் உப பொருட்கள், மோட்டார், பம்ப்செட், ஆயில் என்ஜின் மற்றும் ஜி.ஐ பைப் வாங்க சிறந்த இடம்

# ஹாஜரா ஸ்டோர்

*330, மெயின்ரோடு, இராமநாதபுரம்*

*நல்வாழ்த்துகள்*
**எஸ். மோகன்,**
உரிமையாளர்
**லெட்சுமி மெடிக்கல் ஏஜன்ஸிஸ்**
*3/843,* பாரதி நகர், பரமக்குடி
இராமநாதபுரம் மாவட்டம்.

நல்வாழ்த்துகள்
உரிமையாளர் **எம். அகமதுமீர் ஜவ்வாது,**
நகரமன்ற உறுப்பினர், பரமக்குடி.
**அகமது அண் கோ,**
''ரகுல் காம்ப்ளக்ஸ்''
*3/49,* க்யூ காந்திஜிரோடு,
பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம்.



98. ஜார்ஜஸ் பிரேக்

# அ.ச.ஞா-வுடன்

# ஒரு நேர்காணல்

கல்லூரி மொழிபெயர்ப்புத் துறை, அகில இந்திய வானொலி நிலையம் என்று பல்வேறு துறைகளிலும் பணியாற்றியவரும், கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழ் வளர்ச்சிப் பணிகளுக்குப் பணியாற்றிய வருமாகிய தமிழ்ச் சான்றோர் திரு. அ.ச.ஞா அவர்களைத் தமிழரசு இலக்கிய மலருக்கான நேர்காணலுக்காக அவரது இல்லத்தில் 'வித்தியாசம்' சிற்றிதழ் ஆசிரியர்களில் ஒருவரும், நவீன இலக்கியவாதியுமான திரு. எஸ். சண்முகம் அவர்கள் சந்தித்தார்.

***கேள்வி:*** *தமிழ் இலக்கியத்தைப்படித்துவிட்டு ஆங்கிலத் திறனாய்வு முறையைப் படித்தபோது இரண்டையும் பொருத்திப் பார்க்கத் தோன்றியதால் இலக்கியத் திறனாய்வு எழுதினீர்களா?*

***பதில்:*** *இந்த இரண்டுமே இல்லை. படிச்சது விஞ்ஞானம், அப்புறம் கடைசி 1½ வருடம் தமிழ். பச்சையப்பன் கல்லூரியிலே பேராசிரியர் பணிக்கு வந்தபோது ஒரு சிக்கல் ஏற்பட்டது. 1944-லிலே பி.ஓ.எல் (ஹானர்ஸ்) வகுப்பிலே 'லிட்டரெரி கிரிட்டிசிஸம்' என்ற ஒரு சப்ஜக்ட் வைச்சிருந்தாங்க. அதை யார் எடுக்கிறது என்று பார்த்து உடனே அதைக் கந்தசாமி முதலியார் ''நீங்க எடுத்து நடத்துங்க'' என்றார். தமிழ் இலக்கியம் படிக்கிறவங்களுக்கு திறனாய்வு என்கிற வார்த்தை இல்ல. அது கொடுக்கப்பட்ட காரணத்தினால அது சம்பந்தமா ஆங்கில நூல்களைப் படிக்க ஆரம்பிச்சேன். ரொம்ப தீவிரமா இரண்டு வருடம் ஆழ்ந்து படிச்சேன். முதல் வருசம் ஏறத்தாழ ஆங்கிலத்திலே இருக்கிறத அப்படியே தமிழ்ல சொல்லிக் கொண்டிருந்தேன்... அது எனக்கே புடிக்கல. அவங்க சொல்ற திறனாய்வு முறைகளுக்கும் அந்தத் தலைப்புகளுக்கும், அதிலே சொல்லப்பட்ட பொருட்களை அப்படியே தமிழ் இலக்கியத்தில ஏற்றுக்கொள்ள முடியாதுன்னு தோனிச்சு.*

*அவங்க ''யுனிவர்சல்''-னு சொன்னாங்க. அது சரியில்ல என்ற ஒரு எண்ணம் தோன்றிற்று. அதைப்பற்றி யார்கிட்டேயும் டிஸ்கஸ் பண்ணுவதற்கு வாய்ப்பில்லாமல் இருந்தது. அப்ப கி.வா. ஜெகநாதன் என்னுடைய நண்பர். அவர், இது மாதிரி புதுசா ஒண்ணு பண்றீங்களே, அதை கலைமகள்ல எழுதுங்க என்றார். 1943-44ல் எழுத ஆரம்பிச்சேன். 1947-48ல் அது ஒரு முழு வடிவம் பெற்று, நூலாகக் கொண்டு வர முடிந்தது. அப்படி கலைமகளில் புதுசா எழுதின போது, பலத்த எதிர்ப்புகள். ஆனந்த விகடன் ஒரு குட்டித் தலையங்கமே எழுதினாங்க. திறனாம்! ஆய்வாம்!! அருமையான விமர்சனம் என்கிற வார்த்தை இருக்கிற போது, ஏன் இந்த அ.ச. இப்படி புதுசா ஒரு வார்த்தையை உண்டாக்கி நம்ம பிராணனை வாங்குறாரு அப்படின்னு எழுதினாங்க.*

***கேள்வி:*** *இலக்கணத் திறனாய்வு, இலக்கிய விமர்சனம், தமிழ் மரபாக இருக்கக்கூடிய உரை எழுதுவது- இவை மூன்றுக்குமுள்ள வித்தியாசம், ஒருமைப்பாடுன்னு நீங்க எதைப் பாத்திங்க.*

***பதில்:*** *இப்ப உரை என்று சொல்வது, கமண்டரீ-னு சொல்றமே. வேற எந்த உலக இலக்கியத்திலேயும் இந்த மாதிரி கிடையாது. இப்ப எந்த நூலை எடுத்துக் கொண்டாலும் அதற்கு விளக்க உரை, கமண்ட்ரி எழுதுவது இந்த நாட்டிலேதான். ஹோமர் எழுத்துக்குக் கூட கமண்ட்ரி கிடையாது. தாண்டேக்குக்கூட கமண்ட்ரி கிடையாது. திறனாய்வாளர்கள் சில பகுதிகளை எடுத்துவைத்துக் கொண்டு இது எந்த வகையிலே சிறந்திருக்கிறது, காப்பியக் கட்டுக் கோப்புகளுக்கு எப்படி பொருத்தமாக இருக்கிறது, அப்படின்னு சொன்னாங்களே தவிர, வரிசையா பாடல்களை எடுத்து வைத்துக் கொண்டு அதற்கு விளக்க உரை எழுதிவருவது என்பது தமிழ் மரபுலதான் இருந்துவந்திருக்கு. வடமொழியிலே உண்டு, இல்லைனு சொல்றதற்கு இல்லை. இப்ப இந்த விளக்கஉரை என்று வருவதை எதுல கொண்டு போய் அடக்குறது என்ற ஒரு பிரச்சினை எழுந்தது எனக்கு. அப்ப திறனாய்வு முறையிலே 'அப்பிரிசியேடிவ் கிரிடிசிஸம்'-னு ஒன்னு உண்டு. இதெல்லாம் தொடக்ககாலம். 45-கள் வாக்குல 'அப்பிரிசியேடிவ் கிரிடிசிஸம்'-னு இருக்கிற பகுதிகளிலே சிறந்த பகுதிகளை எடுத்து வைத்துக்கொண்டு, அதைப் புகழ்ந்து அல்ல, அது எப்படி*

சிறப்புப் பெற்றிருக்கிறது என்று எழுதுவது. அதுதான் அவுங்க சொன்னது. மேலை நாட்டுல. அந்த ''அப்பிரிசியேடிவ் கிரிடிசிஸம்ங்கறது'' ஒரு வகையில நமக்கு ரொம்ப பொருத்தமாக இருந்தது.

**கேள்வி:** உரைகளிலே இலக்கணம் சார்ந்த சில குறிப்புகள் வருது. இப்ப மேலை நாடுகளிலே, அந்த மாதிரி இலக்கணக் குறிப்புகள் ..................?

**பதில்:** கிடையாது. கிடையாது. காரணம் ஒன்றை புரிஞ்சுக்கிடனும், இந்தத் தமிழ் மொழியை பொருத்தமட்டிலே ஒரு தனிச் சிறப்பு. தொல்காப்பியன் சொன்னான், 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்று சொன்னான். பொருள் குறித்தன என்றால் It Implies that என்று சொல்கிறோமே அது போல அந்தச் சொல்லுக்கு பொருள் கிடையாது. பொருளாக பெரியவங்க வைச்சாங்க. அதனால பொருள் குறித்தன என்ற சொல் இதைத்தான் குறிக்கும் என்று பெரியோர்களெல்லாம் முடிவுன்னு ஒத்துக் கிட்டாங்க.

**கேள்வி:** தொல்காப்பியத்திலே எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்று சொல்லப்படுகிற அந்தப் பொருள் என்பது அர்த்தத்தை குறித்தது என்று பலர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்கள். அதைப்பற்றி....

**பதில்:** பொருள் என்று சொல்ல முடியாது. குறித்தல் என்றும் சொல்ல முடியாது. ஆனால், Signifies என்று கொள்ளலாம்.

**கேள்வி:** மேற்கத்திய இலக்கியத் திறனாய்வு அளவுகோல்கள் தமிழைப் பிரத்யேகமாக புரிந்து கொள்ள எவ்வாறு உதவின?

**பதில்:** அது.... பேருதவி பண்ணியது. அதற்கு முன்னால தனிப்பாடலோ, காப்பியமோ அல்லது தொடர்நிலைச் செய்யுளோ, நாம பார்க்கிற பார்வை வேறா இருக்கும். சொல்லமைதி, கற்பனை வளம், இயற்கை என்பதைத்தான் பார்த்தோமே தவிர, அந்த ''ஸ்டரக்சர்'' இருக்கிறது அல்லவா, வடிவமைப்பு அந்த கம்பனுடைய காப்பிய அமைப்பை முதன் முதல்ல architectonics என்ற தலைப்பில் பண்ணியவர் வ.வே.சு அய்யர். அவர் ''சீரிஸியன்'' இலக்கியத்தைப் படித்துவிட்டு ஹோமரை யெல்லாம் படிச்ச காரணத்தினாலே, கம்பனுடைய காப்பியக் கட்டுக் கோப்பு எப்படியெல்லாம் நெளிவு சுளிவுகளோடு இருக்கிறது என்று எழுதியவரு அவர்தான். எனக்கு அந்த மேலை நாட்டுத் திறனாய்வு முறையிலே காப்பியத்தை முழுமையாக வைச்சுப் பாக்கிறது, அப்புறம் துண்டு துண்டாக பார்க்கிறது. ஆகியவை எனக்குப் பிடிச்சது.

**கேள்வி:** சங்க இலக்கியத்தைப்பற்றி...

**பதில்:** சங்க இலக்கியத்தைப்பற்றி, இப்ப ஒரு குறிப்பிட்ட துறை, கிளை இருக்கிறது. தனித்தனி கவிதையா எடுத்துப் பாத்தீங்கன்னா, ஒன்று குறிஞ்சி, முல்லை, மருதம்னு, அதற்குள்ளே முதல் கரு-உரி, இருக்குதான்னு பார்த்து பார்த்து அவ்வளவுதான் விட்டுட்டோம். அந்தக் கருவே என்ன சொல்லுது என்கிறதை மன்னிக்கனும் including your நச்சினார்க்கினியர் செய்யல. இந்தக் காரணத்தினாலே இதைச் சொல்றதுனாலே, அது இந்த திணையாச்சு, இந்த விளக்கத்தைச் சொல்லியிருக்கிறது. இந்த இயற்கை வர்ணனை இருக்கிறது என்று சொன்னானே தவிர, அந்தக் கவிதையை முழுவதுமா வச்சு என்ன சொல்லுச்சு என்று சொல்லலே. இந்தக் குறை நச்சினார்க்கினியர் கிட்ட ஆரம்பிக்கல. வியாக்யான கர்த்தார்கள்க்கு கிட்ட ஆரம்பிச்சாச்சு.

**கேள்வி:** நீங்க சிலப்பதிகாரம் பத்தியும் எழுதியிருக்கீங்க, சிலப்பதிகாரத்திலே கோவலனுடைய வீழ்ச்சி Tragedy எழுதியிருக்கீங்க?

**பதில்:** ஆமாம். Tragedy என்ற சொல்லுக்கு அவலம்ங்கிற சொல்லை நான்தான் உருவாக்கினேன். அது அவலம்-னா ஒரு மனிதன் (கோவலன்) வீழும்போது அவனோடு அத்தனைப் பண்புகளும் வீழ்ந்து விடுகின்றன. அப்படி ஒரு மனிதனுடன் அவனது நற்பண்புகள் வீழ்வதை காப்பிய அவலம் Epic-Tragedy என்று சொன்னேன்.

**கேள்வி:** சிலப்பதிகாரத்திலே கடைசியிலே கண்ணகி தனியாக நிற்கிறாளே அந்தத் தனி-நிலையை Soliliquy *(சாலிலிக்வி)* என்று சொல்லலாமா?

**பதில்:** இல்லை, இல்லை, அது பைத்தியக் காரத்தனம். அந்த மாதிரி ஒருவேளை வந்ததுனா (சாலிலிக்வி) அது implied communication. இங்கே அதுவே கிடையாது. தன்னுடைய உணர்ச்சியை மனம் போன போக்கில் பேசிக்கிட்டுப் போய் மலையிலே ஏறி நிற்கும்போது, 'ஒரு முலை இழந்த திருமாபத்தினி நீ - யார்னு கேட்குறாங்க, அந்தப் புலவர்கள் அதற்கு 'மதுரை யோடு, அரசு கேடுற வந்த தீவினை ஆட்சியே நான்-னு சொல்கிறாள். சாலிலிக்வினா எதிரே ஆள் இல்லாமல் இருக்கனும்.

**கேள்வி:** நீங்க பல இலக்கியக் கோட்பாடுகளை வைத்து தமிழ் இலக்கிய விமர்சனம் பண்ணிகிட்டு வந்தீங்க. இப்போ நவீன இலக்கிய விமர்சனக் கொள்கைகள் நிறைய வந்திருக்கு. அதுல Reader response theory மற்றும் முக்கியமாக பின் நவீனத்தும் (Post modernism) என்பதில் 'incommensurable' என்று சொல்கிறார்கள். அதுபோல தமிழ் இலக்கியத்திலே நீங்க பார்த்ததைச் சொல்லுங்களேன்?

**பதில்:** இலக்கியத்திலே சில உணர்ச்சிகளுக்குச் சொல்லினால் வடிவம் கொடுக்க முடியாது. சிலப்பதிகாரத்திலே ஒரு அற்புதமான இடம் இருக்கிறது. கோவலன் இறந்துவிட்டான் என்பதைச் சொல்ல வருகிறாள் ஒரு தோழி. அவளோ ''சொல்லாடாள் சொல்லாடா நின்றாள் அந் நங்கைக்குச் சொல்லாடும் சொல்லாடும் தான்'' அவளோ கடைவீதிக்கு போனவ இதை incommensurable பண்ணியிருக்கிறார் இளங்கோ.

**கேள்வி:** நவீன இலக்கிய விமர்சனப் போக்கிலே இப்ப மேலை நாட்டில் புதிய கோட்பாடுகள் வரும்பொழுது அவர்களுடைய பழைய மரபு

சார்ந்த மொழிக் கோட்பாடுகளோடு வளர்க்கிறார்கள். அதுபோல தமிழிலே இருக்கக்கூடிய நம் மரபான அகம் - புறம் என்ற வகைப்பாடுகளை பிரத்யேகமாக முன்னிறுத்தி ஒரு இலக்கியத் திறனாய்வு முறையை வளர்க்க இயலுமா?

**பதில்:** முடியும். பண்ணலாம். ஆனால் அது 12 ஆம் நூற்றாண்டோட செத்துப்போச்சு. அதுக்கு அப்புறம் யாரும் பண்ணல. இதைத் தொடர்ந்து வந்திருக்குமேயானால் அது நீங்க சொல்கிற ஆராய்ச்சிக்குப் பொருத்தமா இருக்கும். இப்ப சங்ககால இலக்கியத்திற்கு மட்டுமே வைத்து 'ஒரு தியரி ஆப் லிட்ரேச்சர்' (Theory of Literature) பண்ணனும்.

**கேள்வி:** விமர்சனம் அல்லது 'திறனாய்வு'ங்கிறதும் தியரி ஆப் லிட்ரேச்சர் என்பதும் ஒன்றுதான்னு சொல்லலாமா?

**பதில்:** திறனாய்வு வேற, தியரி ஆப் லிட்ரேச்சர் வேற...

**கேள்வி:** அகம் – புறம் கோட்பாடு என்பது

**பதில்:** இந்த மாதிரி வருகிறதும், கிரிடிசஸ்த்துல ஒரு பகுதிதான். திறனாய்வுலேயும் ஒரு பகுதிதான் அது. ஆனால் அதை ஏன் செய்யலேனா, அது என்னைக்கோ போயிடுச்சு. இப்ப அதை யாரு இழுத்துப் போட்டு செய்து கொண்டிருப்பார்கள்? அத இப்ப பசங்களுக்கு எளிதாக சொல்லித்தர வேண்டும். அதுக்குமேல வாத்தியாருக்குத் தெரியாது. இந்த மாதிரி பெரிய Broad structure ஆக அகம் - புறம் குறித்தும் இலக்கிய வாழ்வு முறையோடு தொடர்ந்து இருக்கிறது என்பது ஒரு பெரிய ஆராய்ச்சி. அதை யாரும் பண்ணல.

**கேள்வி:** அகம் என்பதை எவ்வாறு புரிந்து கொள்வது?

**பதில்:** இப்ப 'அகம்'னா புருஷன் - பொண்டாட்டினு அர்த்தத்துக்கு வந்துட்டோம், அது இல்லை. வள்ளுவன் எச்சரிக்கை (Warn) பண்ணிட்டான். கடைசியா வந்தவன் அவன். ' மலரினும் மெல்லிது காமம்' It is a Mental Status காமமென்பது சங்க காலத்திலேயே இருக்கு. காமம் ''காமமென்ப'' என்று சங்க இலக்கியத்திலே சொல்லியிருக்கான். அதையே திருநாவுக்கரசரும் விஸ்தாரமா பாடினார் 'முன்னம் அவனுடைய நாமம் கேட்டு, தன்னை மறந்தாள், தன் நாமம் கெட்டாள்' இதுதான் காதலின் கடைசி நிலைதான் என்பது அறவே அழிந்து போகிறது.' ஆகவேதான் இவுங்க பாடினது வெள்ளைக் காரங்களுக்குப் புரியல. அவன் என்ன பண்ணிட்டான். இத 'லவ் பொயட்ரி'னு சொல்லி, அது ரொம்ப கேவலம். திருவாசகத்திலும் கூட அம்பாளைப்பற்றி வந்த வரிகளைப் போப் மொழிபெயர்ப்பு பண்ணுணதுல அந்த வரிகளை அப்படியே 'பிளாங்கா' விடுவாரு.

**கேள்வி:** ஆண்டாள் பாட்டிலே வரும், தலைவி தலைவனுக்காக ஏங்குகிற தன்மை அது ஓரளவுக்கு அகத்துறை சம்பந்தப்பட்டதா இருக்குமல்லவா?

**பதில்:** ஓரளவுக்கு அல்ல. முழுவதும், அகத்துறைதான். இங்கே அவன் என்ன பண்ணிட்டான். புருஷோத்தமன் ஒரு ஆம்பிள்ளைதான் உண்டு. அவன்தான் இறைவன். மற்ற எல்லா உயிர்களும் பெண்கள். ஆகையினாலே அது அகத்துறை பாடல்தான்.

**கேள்வி:** இப்ப, மேற்கத்திய திறனாய்வுக் கோட்பாடுகளை நீங்க தமிழ்ல பொருத்திப் பார்த்தீங்க. இப்ப சமீபகாலமாக தமிழ்ல வந்திருக்கக்கூடிய அமைப்பியல் - பின் அமைப்பியல் - பின் நவீனத்துவம் போன்ற 'தியரிகளை' தமிழ்ல பொருத்தி செய்யும் திறனாய்வாளர்களுக்கு எதை மனதில் வைத்து பார்க்கணும்னு விரும்புறீங்க?

**பதில்:** முக்கியமா, இலக்கிய பேஸ் இருந்தாத்தான் இதைப் பண்ண முடியும். ஏன்னா, இந்த அமைப்பு முறையே வேற. It has nothing to do with even sanskrit. இந்த வளர்ச்சியே தனி. இங்கே உரை எழுதினவங்க என்ன பண்ணிட்டாங்க அதிலேயே ஈடுபட்டாங்க. அதனால் Objectiveவா பார்க்கிற பழக்கம் போயிடுச்சு. வெள்ளைக்காரனுடைய Critisim படிச்ச பிறகுதான் Objectiveவா பார்க்கிற பழக்கம் எனக்கு ஏற்பட்டது.

**கேள்வி:** தமிழில் மரபு வழியா வருகிற இலக்கியம் (Canon) பற்றிப் பேசும்போது. தமிழுக்கு என்று ஒரு தனி அறிதல்முறை Cognition இருக்கு என்று நினைக்கறீங்களா?

**பதில்:** கண்டிப்பாக இருக்கு...

**கேள்வி:** அதனுடைய பிரத்யேக தன்மை. என்னான்னு நினைக்கிறீங்க?

**பதில்:** அதாவது வாழ்க்கை முறையை இயற்கையோடும், பரம்பொருளோடும் இணைத்து கொண்டே இருந்தது. அதனால்தான் Pastoral Poetryனு தமிழ்ல தனியே கிடையாது. இயற்கையைத் தனியா அனுபவக்கிறது என்பது கிடையாது. இயற்கையே இறைவனுடைய வடிவம்.

**கேள்வி:** அறிதல் முறை பற்றி சொன்னீங்க. Pastoral Poetry தமிழ்ல ஒண்ணுமில்லே. வாழ்வையும் இயற்கையையும் மனிதனையும் பரம்பொருளையும் ஒண்ணா நினைச்சாங்க என்று சொன்னீர்கள். உதாரணத்திற்கு சங்க இலக்கியத்திலே தலைவன் - தலைவி – தோழி - இயற்கைக் குறிப்புவைச்சு மனோநிலையை சொல்றாப்ல வருகிறதே?

**பதில்:** கவிஞனுடைய சாமர்த்தியம் சொல்லுகின்ற முறையிலேயே அதிலே இறைச்சிப்பொருள், உள்ளுறை என்ற இரண்டும் உண்டு. உள்ளுறை இறைச்சி ஆக வந்து அதப் படிச்சிகிட்டுப் போறப்ப ஒரு அர்த்தம் இருக்கும். அந்த அர்த்தத்தை விட்டுட்டு பார்த்தீங்கன்னா இன்னொரு அர்த்தம் இருக்கும். இதுலே இரண்டு வகை உண்டு. முழுமையா வைச்சு பார்க்கிறது இறைச்சினு பேரு. வரிக்கு வரி பார்ப்பது உள்ளுறைனுபேரு. ஆக உள்ளுறை என்பது - வரிக்கு வரி இறைச்சி

என்பது - முழுமையாகக் கொள்வது.

**கேள்வி:** சைவ சமயத்தைப் பற்றி விரிவாக திறனாய்வு செய்து நெடிய பங்களிப்பைச் செய்திருக்கிறீங்க. அதுல சைவமதம் அல்லது சைவ இலக்கியம் என்பது தமிழர்களின் அறிவுத் தொகுப்பு Epistemology என்று நினைக்க இடமுண்டா?

**பதில்:** Epistemologyன்னு வார்த்தை சொல்லுறீங்க. அறிவுத் தொகுப்பா? அனுபவத் தொகுப்பா? வாழ்க்கைத் தொகுப்பா? இது அறிவினாலே சிலவற்றை அறிகிறார்கள். அது தனியே இருக்கும்போது Epistemology அதுதான் திருக்குறள் இருக்கிறதே.

**கேள்வி:** சமஸ்கிருத எதிர்ப்பு அல்லது சமஸ்கிருத தொடர்புடன் கூடிய மணிப்பிரவாளம். இந்த இரண்டு போக்கும் தமிழ்ல இருக்கு. தமிழ் - சமஸ்கிருதம் என்பதை மறுத்துவிட்டு 'ஒரு மொழி அல்லது கலாச்சாரம்', இன்னொரு மொழி, கலாச்சாரத்துடன் பரிவர்த்தனை அற்று இருக்க முடியுமா? தனித்துவம் தனித்தமிழ் ஆகியவை?

**பதில்:** தனித்துவம் என்பது Possibilityயே இல்லை. இன்னும் ஒன்று. நீங்க நினைக்கிற மாதிரி தொல்காப்பியன் காலத்திலே ஏதோ தனித்தமிழ் வந்தது என்கிறது ஏதோ படிக்காதவன் பேசுற பேச்சு. தொல்காப்பியத்துல கலந்திருக்கிறது மாதிரி வேறு எதிலேயும் கலப்படம் இல்லை.

ஒரு வடமொழிச் சொல்லை எடுத்துத் தமிழ்ல பயன்படுத்துன, தற்பவம், தற்சமம்னு எப்ப இலக்கணம் பண்ணிட்டானோ What does it indicates? அவ்வளவு கலந்து போச்சுனு அர்த்தம். வேற கதையெல்லாம் அடிக்க முடியாது.

இன்னொன்று வடமொழி யாருது? நீங்களாகவே கற்பனை பண்ணிட்டீங்க ஆரியன் - திராவிடன்னு சொல்லிட்டு. ஒரு மண்ணாங்கட்டியும் இல்ல. இன்றைக்கு வடமொழியில மிகச் சிறந்ததுனு போற்றக்கூடியது சங்கரருடைய ஃபிலாசபி. உண்டா? இல்லையா? அப்புறம் இராமனுஜர் ஃபிலாசபி, வசிஸ்டாத்வைதம். இந்த இரண்டையும் பண்ணுனவன் யாரு? தமிழன்தான் , தெரியுதா... இம்... ஒருத்தர் ஸ்ரீபெரும்புதூர் இன்னொருவர் காலடிங்கிறது. மலையாளமும் இல்ல, சங்கரன் காலத்துல 8 ஆம் நூற்றாண்டுல மலையாளம்னு ஒன்று தனியா இல்ல. கொடுந்தமிழ் நாடுன்னு பேரு. அப்புறம் என்ன கேடு.

**கேள்வி:** காடுவெல் சொல்ற திராவிடர் மொழி திராவிட இலக்கண இலக்கியம்.

**பதில்:** அது உண்மை, அத மறுக்க முடியாது. ஏன்னா இது வேற மொழி. அது வேற மொழி. அத மறுக்கவே முடியாது. ஆனால் இந்த இரண்டும் கலந்தது என்பது தொல்காப்பியன் காலத்துக்கு முன்னாலேயே வந்தாச்சு.

**கேள்வி:** தமிழுக்கும் வடமொழிக்கும் ஏற்பட்ட பரிவர்த்தனையிலே தமிழுக்கு நன்மை விளைந்திருக்கிறது என்று நினைக்கிறீர்களா?

**பதில்:** அதுல சந்தேகம் இல்ல. அதுமாதிரி நம்மளால வடமொழியும் வளந்திருக்கு. அது (Double Reflection Theory) இரட்டை பிரதிபலிப்பு தியரி என்று விமர்சனத்தில் உண்டு.

**கேள்வி:** இந்த இரட்டை பிரதிபலிப்புத் தன்மை வைத்து பார்க்கும்போது உதாரணத்திற்கு உமறுப் புலவருடைய சீறாப்புராணம், வீரமாமுனிவரின் தேம்பாவணியும் எப்படி?

**பதில்:** உமறுப்புலவர் திருநெல்வேலி சீமையை வைச்சுகிட்டுத்தான் அவரு அரேபியாவைப் பாடுறாரு. தேம்பாவணியிலேயும் அந்தத் தன்மை வரத்தான் செய்யும்.

**கேள்வி:** அது தமிழ்க் காப்பியம் தான்.

**பதில்:** ஆமாம், அதை யாரும் மறுக்க முடியாது. அரேபியாங்கிறது ஒரு கற்பனை நாடுன்று (Imaginary land) நினைச்சுகிட்டு போங்களேன்.

**கேள்வி:** ஒரு குறிப்பிட்ட மொழி பேசுகிற குழு மக்களுடைய வாழ்க்கையை தெரிஞ்சுக்க, அவர்களுடைய இலக்கியம் வழியாகத்தான் அறிஞ்சுக்கிடனும். அந்த இலக்கியம், மொழிவழியாகத்தான் வருகிறது. அப்படியானால் மொழி என்பது மிக முக்கியமானது. ஒரு இனத்துக்கு, அது Linguistive archive சொல்றது அதுதானே?

**பதில்:** ஆமாம் இலக்கியம் மொழிவழியாகத்தான் வரமுடியும். Each has its own linguistive archive.

**கேள்வி:** ஒரு இனத்திற்கு மொழி நினைவுன்னு ஒன்று உண்டுங்களா?

**பதில்:** கண்டிப்பா உண்டு. அத மறுக்க முடியாது. அதாவது Linguistive memoryனு சொல்றது எதோட அடிப்படைனா கொஞ்ச நாள் வரையில், ஒரு 8-வயது வரையிலே ஒரு இடத்துல வளர்ந்துவிட்டு அதுக்க அப்புறம் எங்க போனாலும் சரி இந்த Basic concept போகவே போகாது. அதுதான் மொழி நினைவு.

**கேள்வி:** நவீன இலக்கியத்திலே புதுமைப்பித்தன் சிறுகதையில் முக்கியமானது. அவருடைய படைப்புகள் பற்றி சொல்லுங்களேன்.

**பதில்:** கேளுங்க ... அது என்ன ஆயிப்போச்சு, என்ன தேடியும் இரண்டு கலைமகள் அம்புடாம போச்சு. சிறு கதையைப்பற்றி எழுதிக்கிட்டு இருக்கும்போது ஒரு தடவை 1 1/2 பக்கம் அது. கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும். டிஸ்கஸ் பண்ணியிருக்கேன். புதுமைப்பித்தன் எப்படிப்பட்டவர் என்கிறதையும் எழுதியிருக்கேன். கு.ப. ராஜகோபாலன் கூட எப்படியிருந்தாலும் புதுமைப்பித்தன் பக்கத்துல போக முடியாது. புதுமைப்பித்தன் கதையில இன்னொன்று பண்ணினேன். சாப-விமோசனம் ''அகலிகை மீண்டும் கல்லானாள்'' புதுமைப்பித்தன் நம்ம மரபோடு வாழ்ந்தவர்.

❑ ❑ ❑

நல்வாழ்த்துகள்

**திருச்சிராப்பள்ளி கூட்டுறவு**
**விற்பனை சங்கம் ஆர். 694. (வரை)**

பெரியார் மாளிகை, 5, வயலூர் ரோ,
திருச்சிராப்பள்ளி - 17.

99. ஜார்ஜஸ் பிரேக்



*Best Compliments*

**LIONESS COUNCIL DIST. 324 A-1**

Chennai

100. ஃபெர்னாண்ட் லெஜர்



# ஓவியங்கள் - குறிப்புகள்.

1. தமிழகத்தின் ஓவியர் ஏ.பி. சந்தான ராஜ் சென்னை ஓவியக் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றியவர்.
2. சென்னை ஓவியக்கல்லூரியின் முன்னாள் முதல்வர் சி.ஜே. அந்தோணி தாஸ்.
3. தமிழகத்தின் முக்கிய சிற்பி டி.ஆர்.பி. மூக்கையா மக்கள் கலைக்கூறுகளுடன் படைப்புகளைச் செய்பவர்
4. டி.ஆர்.பி. மூக்கையாவின் சிற்பம்
5. (1891-1973) லித்வேனியா கியூபிஸ் கலைஞர் ஜாக்வெல் லிப்சிட்ஸ்
6. 1513ல் ஓவியர் ரஃபேல் தீட்டிய மடோனோ ஓவியத்தைத் தழுவி பூசின் என்ற ஓவியர் (1594 - 1665) தன் சிறந்த ஓவியத்தைப் படைத்தார்.
7. அனிபால் கராசி வரைந்த ஓவியம்.
8. எட்வர்ட் மன்ச்சின் கைவண்ணம்.
9. (1632 - 1675) டச்சு ஓவியர் வெர்மீர். ஆலந்து நாட்டைச் சேர்ந்தவர்.
10. ஆன்ட்ரி டைனாய்ன் ஓவியம் - கியூபிசக் கூறுகள் கொண்டது.
11. சென்னை ஓவியக் கல்லூரியின் இன்றைய முதல்வர் எ. அல்போன்சா அருள்தாஸ் அகில இந்திய ரீதியில் தனக்கென தனி ஓவியபாணியை வகுத்துக் கொண்டவர்.
12. தனக்கென தனிபாணி கொண்ட ஓவியர் ஜி. ராமன் ஓவியக் கல்லூரியின் ஆசிரியர் பணி
13. 'கொலாஜ்' ஓவியபாணியில் தமிழ் அடையாளத்துடன் ஓவியங்கள் படைப்பவர் எம்.கே. முத்துசாமி. சென்னை ஓவியக் கல்லூரியின் ஓய்வு பெற்ற ஆசிரியர்.
14. சோழ மண்டல ஓவியர் கிராமத்தின் ஓவியர் என். ராகவன் தாந்த்ரீக பின்னணியில் கலைப் படைப்புகள்.
15. சென்னை ஓவியக் கல்லூரியின் ஆசிரியர் ஜி. சந்ரு. தமிழ்க்கலை மரபு அறிந்தவர்.
16. பாண்டிச்சேரியைச் சேர்ந்த ஓவியர் ராஜேந்திரன்.
17. சிற்பி டி. விஜயவேலு சென்னை லலித்கலா அகடமியில் பணிபுரிபவர்.
18. சுடுமண் சிற்பங்கள் செய்யும் இளம் சிற்பி கார்த்திக்.
19. பூம்புகாரில் வாழும் ஓவியர் எம். சூரியமூர்த்தி.
20. எம். சூரியமூர்த்தியின் ஓவியம்.
21. உலோகச் சிற்பங்களும், சுடுமண் சிற்பங்களும் செய்பவர் ஏ. கருப்பையா.
22. சோழ மண்டலத்து ஓவியக் கிராமத்து கலைஞர் எம். சேனாதிபதி.
23. சென்னை ஓவியக்கல்லூரியின் ஆசிரியர் எம். வேலாயுதம்.
24. பளிச்சிடும் வண்ணங்களில் விந்தை ஓவியங்கள் படைக்கும் இளைஞர் கே. முரளிதரன்.
25. சிற்பி வல்சன் கொலெரி கேரளத்தைச் சேர்ந்தவர்.
26. விஜயவாடாவில் இருக்கும் ஓவியர் கே.ஜி. நரேந்திர பாபு.
27. 'கிராஃபிக்' கலையில் தனிப்பெயர் பெற்ற ஆர்.பி. பாஸ்கரன் கும்பகோணம் ஓவியக் கல்லூரியின் முதல்வர்.
28. மூத்த ஓவியர் பி. பெருமாள் சென்னை ஓவியக்கல்லூரியில் இருந்து ஓய்வு பெற்றவர்.
29. அந்தமான் ஓவியர் நிரேஷ் போதார்.
30. ஃபிரான்சிஸ் பிகாபியா - ஓவியம் (1913)
31. சிறந்த தாந்த்ரீக ஓவியர் கே.வி. ஹரிதாசன்.
32. உத்திரபிரதேசத்தைச் சேர்ந்தவர் ஆனந்த குமார் அகர்வால். ஓவியத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர்.
33. ஹைதராபாத்தில் இருக்கும், ஆர். சுந்தர்ராஜ் அவர்களது ஓவியங்கள். தனிபாணி கொண்டவை.
34. மதுரையைச் சேர்ந்த பெண் ஓவியர் அற்புத ராணி சென் குப்தா. தற்போது டெல்லியில் இருக்கிறார்.
35. நவீன முறைகளில் ஓவியங்கள் படைக்கும் இளைஞர் எஸ். பவானி சங்கர்.
36. வீரசந்தானம் படைப்புகள் கோடுகள் ரீதியாக வரையறுக்கப்பட்டவை.
37. பதினெட்டாம் நூற்றாண்டின் ஓவியரான ஜார்ஜ்ஸ்டப்ஸ் விலங்குகளை வரைவதில் கைதேர்ந்தவர்.
38. பதினேழாம் நூற்றாண்டின் ஓவிய மேதை பால்ரூபன்ஸ். ஜெர்மனியில் பிறந்தவர்.
39. நியோ - கிளாஸிகல் காலத்தின் ஓவிய மேதை ஜாக்விஸ் லூயிஸ் டேவிட். பிரெஞ்சு புரட்சி அரசியலில் ஈடுபட்டவர். (1748-1825).
40. ஜாக்விஸ் லூயிஸ் டேவிட்டின் ஓவியம்.
41. அனிபால் கராசியின் ஓவியம்.

42. ஸ்பெயின் நாட்டு சிற்பி பெர்னினி.
43. ஸ்காண்டிநேவிய ஓவியர் அக்செலி கேலன் கல்லெலா.
44. (1863 - 1944) நார்வே நாட்டு ஓவிய மேதை எட்வர்ட் மன்ச் சிம்பலிஸம், எக்ஸ்பிரஷனிஸம் ஆகியவற்றின் முன்னோடி.
45. (1884 - 1920) இத்தாலி நாட்டு ஓவியர் மோடி கிளியானி. மரம், பாறைகளில் சிற்பம் செதுக்குபவர்.
46. குஜராத்தைச் சேர்ந்த ஓவியர் பி. அர்ஜுன் குமார் பி. கஜ்ஜான் பனாரஸ் இந்து பல்கலைக் கழகத்தில் பணிபுரிபவர்.
47. கும்பகோணம் ஓவியக் கல்லூரியின் முன்னாள் முதல்வர் பி.பி. சுரேந்திரநாத். கலவை புடைப்பு சிற்பம் செய்வதில் மிகச் சிறந்தவர்.
48. பாண்டிச்சேரியைச் சேர்ந்த குகன் மாணிக்கம் இளம் ஓவியர்.
49. சென்னை ஓவியக் கல்லூரியில் பணிபுரியும் ஓவியர் ஈஸ்டர் ராஜ்.
50. கே. கோவிந்தன் - நெய்வேலி ஓவியர்.
51. எம்.ஜி. ரஃபீக் அகமது - மதுரை ஓவியர்.
52. கே. பாலசுப்பிரமணியம் - சென்னை ஓவியர்.
53. எஸ். விஜய சுந்தரம் - பாண்டிச்சேரி ஓவியர்.
54. பொன் ரகுநாதன் - சேலத்து ஓவியர்.
55. கே. முருகேசன் - மதுரை ஓவியர்.
56. விக்டர் - சென்னை அருங்காட்சியகத்திலிருந்து ஓய்வுபெற்ற ஓவியர்.
57. தியோவேன் ரைசல்பர்க் தீட்டிய ஓவியம்.
58. இம்ப்ரஷனிச ஓவிய மேதை வின்சென்ட் வேன்கோவின் ஓவியம்.
59. ஹென்கி மான்குவின் ஓவியம் - ஜன்னலில் மங்கை.
60. பிகாசோவின் 'ஆலிக்னான் நங்கையர்' என்னும் ஓவியம் கியூபிச கூறுகள் கொண்டது.
61. பிகாசோ - 'மாண்டலின் இசைக்கும் பெண்'
62. பிகாசோ - 'அமர்ந்திருக்கும் நங்கை'
63. பிகாசோ - 'கவிஞன்'
64. பிகாசோ - 'நிலையான காட்சி'
65. ஜ்வான் கிரிஸ் - நிலையான காட்சி
66. பெர்னார்ட் லாகர் - நீல வண்ணத்தில் பெண்.
67. பிகாசோ - தலை கோட்டோவியம்.
68. எட்வர்ட் மானே - நவீன ப்ரெஞ்சு ஓவிய மேதை.
69. பெர்த் மாரிசோட் - 'சிறியபெண்'
70. மாரிகாசெட் - சகோதரிகள்.
71. பியர் அகஸ்டின் ரெனுவா - இம்பிரஷனிச ஓவியம்.
72. ப்ரோபிர் குப்தா - மரத்தின் மீது வண்ண ஓவியம்.
73. கேமல் கெரோட் - ஃப்ரென்ச் இம்ப்ரஷனிசம்.
74. எட்வர்ட் - கப்பல் போர்.
75. டியுஸ்டவ் கெய்லி போட் - 1876-ன் ஓவியம்.
76. வின்சென்ட் வான்காஃப் - ஓட்டலின் உள்காட்சி.
77. எட்வர்ட் மானே - 1877 ஆம் ஆண்டு ஓவியம்.
78. எட்வர்ட் மானே - 1877 ல் ஓவியம்.
79. எட்வர்ட் மானே - பூச்சாடியில் பூக்கள்.
80. காமில் இசரோ - பூத்த மரங்கள்.
81. கிளாட் மோனே - வயல்வெளி.
82. கிளாட் மோனே - பெண்.
83. கிளாட் மோனே - ஜப்பானியப் பெண்.
84. பியர் அகஸ்டின் ரெனுவா - பூச்சாடி.
85. பியர் அகஸ்டின் ரெனுவா - 1870 ன் ஓவியம்.
86. வின்சென்ட் வான்கோ - மூன்று ஜோடி செருப்புகள்.
87. பால் சிசன் - கறுப்பு கடிகாரம்.
88. ஜார்ஜ் பிரேக் - சாலை.
89. மார்ஷல் டுஷாம்ப் - படியிறங்கும் மங்கை.
90. காமில் இசரோ - நிலக்காட்சி.
91. ஹென்றி மாடிசே - இயற்கைக் காட்சி.
92. மௌரிஸ் வ்லாமின்க் - இயற்கைக் காட்சி சிகப்பு மரங்களுடன்.
93. கீஸ் வான் டாங்கன் - 'சிகப்புக் கோமாளி'.
94. ஹென்றி ஃபான்டின் லாடெளர் - நிலையான காட்சி.
95. பியர் அகஸ்டின் ரெனுவா - ஹென்றியா சீமாட்டியின் உருவப்படம்.
96. பால் சிசன் - பாறைகள் நிறைந்த காடு.
97. பாப்லோ பிக்காஸோ - 'விசிறியுடன் பெண்' - 1908
98. ஜார்ஜஸ் பிரேக் - 'பழக் கிண்ணம்' – 1908 - 09
99. ஜார்ஜஸ் பிரேக் - 'மேஜை' (1928)
100. ஃபெர்னான்ட் லெஜர் 'சிவப்பு பச்சையில் பெண்' (1914)



சென்னை - 2
- 5 FEB

*Best Compliments*

**RAMCO CEMENT**

**MADRAS CEMENTS LTD**

***Regd. Office :*** "Ramamandiram" Rajapalayam Pin. 626117. Kamarajar Dist.
***Corporate Office:*** 98-A, Dr. Radhakrishnan Salai, V Floor, Mylapore,
Post Box No.641, Chennai - 600 004.

